# இந்திய வரலாறு கி.பி. 1707 முதல் 1947 வரை

# முன்னுரை

இந்திய வரலாற்றில் கி.பி. 1707 முதல் 1947 வரையிலான இடைப்பட்ட காலம் மிகவும் முக்கியமானதாகும்.

பின்னர் வர்த்தகம் செய்த ஐரோப்பியர்களின் வருகை, இந்தியாவை நீண்ட காலமாக ஆட்சி செய்த ஆங்கிலேயர்களின் படையெடுப்புக்கு வழிவகுத்தது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், இந்தியா தனது பொருளாதார வளத்திற்காக பெரிதும் சுரண்டப்பட்டது.
எனினும், அவர்களின் ஆட்சி இந்தியாவில் சமூகம், கல்வி, வணிகம் மற்றும் நீதித்துறை சார்ந்த துறைகள் போன்ற பல்வேறு துறைகளில் சீர்திருதங்களுக்கு வழிவகுத்தது. இரண்டாம் உலகப்போரும் உலக யுத்தமும் மக்கள் மத்தியில் தேசியம் என்ற உணர்வை தூண்டியதில் முக்கிய பங்கு வகித்தது.

நாட்டின் விடுதலைக்காக பல்வேறு சுதந்திரப் போராளிகள் போராடினார்கள். இறுதியாக, 1947 ஆகஸ்டு 15 அன்று இந்தியா சுதந்திரம் பெற்றது. 1950 ஜனவரி 26 ஆம் நாள் இந்திய அரசியலமைப்புச் சட்டம் அமல்படுத்தப்பட்டபோது குடியரசாக மாறியது.

இந்திய வரலாறு (கி.பி. 1707 முதல் 1947 வரை) என்னும் இப்புத்தகம் தொலைதூர கற்றல் மாணவரை மனதில் கொண்டு எழுதப்பட்டுள்ளது. இது ஒரு தெளிவான, குழப்பமற்ற மொழியை பயன்படுத்தி ஒரு பயனர் - நட்பு வடிவத்தில் வழங்கப்படுகின்றது. ஒவ்வொரு அலகும் ஒரு முன்னுரையுடன் தொடங்குகிறது, அதன் பிறகு நோக்கங்களின் வெளிப்பாட்டை உணர்த்துகிறது. இதில் விரிவான உள்ளடக்கம் பின்னர் ஒரு எளிய மற்றும் கட்டமைக்கப்பட்ட முறையில் வழங்கப்படும், உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக, மாணவரின் புரிதலை சோதிக்க உதவுகிறது. சுருக்கம், முக்கிய கருத்துப்படிமங்கள், தற்சோதனை மற்றும் பயிற்சி வினாக்கள் அடங்கிய தொகுத்துரைத்தல் ஒவ்வொரு அலகின் இறுதியிலும் வழங்கப்படுகிறது.

# தொகுதி:1

# இந்தியாவில் ஆங்கிலேயர் குடியேற்றங்களை நிறுவுதல்

## அலகு – 1 ஐரோப்பியர்கள் வருகை


1.0 அறிமுகம்

1.1 நோக்கங்கள்

1.2 ஐரோப்பியர் குடியேற்றங்கள்

1.2.1 போர்ச்சுகீசியர்கள்

1.2.2 டச்சுக்காரர்கள்

1.2.3 பிரெஞ்சுகாரர்கள் (பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனி)

1.2.4 ஆங்கிலேயர்கள் (ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனி)

1.3 ஆங்கிலேயர் - பிரெஞ்சு ஆதிக்கப்போட்டி

1.4 கர்நாடகப் போர்கள்

1.4.1 முதல் கர்நாடகப் போர்

1.4.2 இரண்டாம் கர்நாடகப் போர்

1.4.3 மூன்றாம் கர்நாடகப் போர்

1.5 காரணங்கள் மற்றும் முடிவுகள்

1.6 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

1.7 சுருக்கவுரை

1.8 முக்கிய கருத்துப்படிமங்கள்

1.9 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்

1.10 மேலும் படிக்க


### 1.0 அறிமுகம்

இடைக்காலத்தின் கடைசிப் பகுதியில் இந்தியாவுக்கு புதியபாதை காண வேண்டும் என்ற ஆர்வம் ஐரோப்பியர்களுக்கு ஏற்பட்டது கி.பி 1453-ல் துருக்கியர்கள் கான்ஸ்டாண்டி நோபிளைக் கைப்பற்றிக் கொண்டார்கள். இதனால் மத்தியதரைக் கடல் வழியாகக் கீழ்த்திசை நோக்கி செல்லும் பழைய பாதை அடைபட்டது. எனவே, ஐரோப்பியர் வேறு வழிகளைத் தேட வேண்டியது இன்றியமையாததாயிற்று. ஐரோப்பியர்களில் முதன்முதலில் போர்ச்சுகீசியர் இந்தியாவிற்கு வரும் கடல் வழியை கண்டறிந்தனர். இவர்களைத் தொடர்ந்து டச்சுக்காரர்கள் ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர்கள் மற்றும் டேனியர்கள் என ஐரோப்பியர்களின் வருகை பெருகியது. ஆரம்பகால நோக்கம் வணிகம் செய்யவும், தங்கள் சமயத்தைப் பரப்பும் நோக்கத்தோடு வந்தனர். ஆனால் அவர்களுக்குள் நல்லதொரு வாய்ப்பு அளித்தது இங்குள்ள நிலைமை. நம்மிடையே காணப்பட்ட ஒற்றுமையின்மை, கருத்து மாறுபட்ட அரசுகள், கல்வியறிவற்ற பாமரர்கள் ஆகிய இந்நிலை அவர்களுக்கு இந்தியர்களை அடக்கி ஆளும் எண்ணத்தை வளர்த்தது.

### 1.1 நோக்கங்கள்

இந்த அலகை நீங்கள் படித்து முடித்த பின்பு உங்களால்,

- ஐரோப்பியர்கள் இந்தியாவிற்க்கு வந்ததர்கான காரணங்களை கூறமுடியும்

- இந்தியாவுடன் வணிகத்தை வளர்பதில் ஐரோப்பியரின் பங்கை பற்றி விவரிக்க முடியும்.
- ஆங்கிலேயர் பிரெஞ்சு ஆதிக்க போட்டியின் காரணங்களை விளக்க முடியும்.
- கர்நாடக போர்களுக்கு பிறகு ஆங்கிலேயரின் எழுச்சி பற்றி கூற முடியும்.

## 1.2 ஐரோப்பியர் குடியேற்றங்கள்

### 1.2.1 போர்ச்சுக்கீசியர்

**வாஸ்கோடகாமா**

நவீன காலத்தில் முதன் முதலில் கடல் வழியாக இந்தியாவுடன் வர்த்தகத் தொடர்பு கொண்டவர்கள் போர்ச்சுக்கீசியர்கள். 1487 ஆம் ஆண்டில் பார்த்தலோமியோ டயஸ் (Bartholomew Diaz) என்ற போர்ச்சுக்கீசிய மாலுமி நன்னம்பிக்கை முனையைக் கடந்து உலக சாதனை படைத்தார். அதன்பின் வாஸ்கோடகாமா (Vasco da Gama) 1498 மே 27 ஆம் தேதி கள்ளிக்கோட்டைத் துறைமுகத்தை அடைந்தார். அவரைக் கள்ளிக்கோட்டை சாமரின் (Zamarin) இருகரம் நீட்டி வரவேற்றார், உபசரித்தார். வந்த வர்த்தக விருந்தினருக்கு வேண்டிய உதவிகளைச் செய்தார். அதுமட்டுமல்ல. சாமரினுக்குச் சொந்தமான மேற்குக் கடற்கரைப் பகுதியில் போர்ச்சுக்கீசியர் குடியேறிப் பண்டகசாலையைக் கட்டிக் கொள்ளவும் அனுமதி அளித்தார்! வாஸ்கோடகாமா கப்பல்கள் நிறைய வாசனைத் திரவியங்களை நிரப்பிக் கொண்டு தாய்நாடு திரும்பினார். அதன்பின் அவர் இருமுறை (1502, 1524) கள்ளிக்கோட்டைக்கு வந்து வர்த்தகத் தொடர்பு கொண்டார்.

**அல்மேடா**

1505 ஆம் ஆண்டு அல்மேடா (Almeida) கிழக்காசியாவின் முதல் போர்ச்சுக்கீசிய வைசிராயாக நியமிக்கப்பட்டார். அவர் போர்ச்சுக்கீசியர் வாணிபம் செய்து வந்த கடல்வழியை அரேபியர், எகிப்தியர், துருக்கியர் ஆகியோரது தாக்குதல்களிலிருந்து பாதுகாத்தார். அவருக்குப்பின் வந்த அல்புகர்க் (Albuquerque) (1509 - 1515) இந்தியாவில் போர்ச்சுக்கீசியரது ஆட்சி அமைவதற்கான அடிப்படையை அமைத்துக் கொடுத்தார். 1510 நவம்பர் மாதம் அவர் பீஜப்பூர் சுல்தானுக்குச் சொந்தமான வளமும் வனப்புமிக்க கோவா துறைமுகத்தைக் கைப்பற்றிக் கோட்டைகளைக் கட்டினார். கோவா போர்ச்சுக்கீசியரின் குடியிருப்புக் கோட்டையாயிற்று.

**குடியிருப்புகள்**

அல்புகர்க்குப் பின் வந்த போர்ச்சுக்கீசியர் இந்தியாவில் கடலுக்கருகாமையில் பல முக்கிய குடியிருப்புகளைப் படிப்படியாக ஏற்படுத்தினர். இதன் விளைவாக 16 ஆம் நூற்றாண்டில் மேற்குக் கடற்கரைப் பகுதியில் கோவா, டையூ, டாமன், சால்செட், பஸ்ஸின், சவுல், பம்பாய், வங்காளக் கடற்கரையில் ஹுக்ளி, சென்னைக்கருகே சாந்தோம் ஆகிய பகுதிகளில் போர்ச்சுக்கீசியர் குடியேறினர்.

**வெளியேற்றம்**

ஒரு கால கட்டத்தில் வாணிபத்திலும், ஆட்சியிலும், ஆதிக்கத்திலும் இந்தியாவில் கொடிகட்டிப் பறந்த போர்ச்சுக்கீசியர் 18 ஆம் நூற்றாண்டில் செல்வமிழந்து, செல்வாக்கிழந்து, பிற நாடுகளின் வர்த்தகப் போட்டியை எதிர்கொள்ள முடியாமல் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டியதாயிற்று!

அவர்களுடைய இடத்தை டச்சுக்காரர்கள் பிடித்துக் கொண்டனர்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

1. இந்தியாவிற்கு கடல் வழியை கண்டுபிடித்தவர் யார்?
2. வாஸ்கோடகாமாவை வரவேற்ற இந்திய அரசர் பெயர் என்ன?
3. கிழக்காசியாவின் முதல் போர்ச்சுக்கீசிய வைசிராயாக நியமிக்கப்பட்டவர் யார்?

### 1.2.2 டச்சுக்காரர்கள்

#### டச்சுக் கம்பெனி

ஐரோப்பாவின் சிறிய நாடான ஹாலந்து (Holland) 15 கடற் பயணங்களை மேற்கொண்டு (1595-1601) இறுதியில் 1602 ஆம் ஆண்டு அரசாங்கத்தின் ஆதரவோடு டச்சு ஐக்கிய கிழக்கிந்திய கம்பெனி (Dutch United East India Company) யைத் துவங்கியது. கடற்படைப் பலமிக்க டச்சுக்காரர்கள் அம்பாய்னா (Amboina) என்ற ராணுவ முக்கியத்துவமிக்க இடத்தைப் போர்ச்சுக்கீசியரிடமிருந்து கைப்பற்றிய (1605) பின்னர் பிற இடங்களையும் பிடித்துக் கொண்டு, அங்கெல்லாம் குடியிறுப்புகளையும், பண்டகசாலைகளையும் ஏற்படுத்தி, வர்த்தகத்தை விரிவுபடுத்தினர். 17ஆம் நூற்றாண்டு முழுவதும் டச்சுக்காரர்கள் இந்திய வாணிபத்தின் முடிசூடா மன்னர்களாகத் திகழ்ந்தனர்.

#### குடியேற்றங்கள்

டச்சுக்காரர்கள் இந்தியாவில் கூர்ஜரம், கிழக்குக் கடற்கரை, வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய பகுதிகளிலும் கிழக்குகங்கைச் சமவெளியிலும் குடியேற்றங்களையும், பண்டகசாலைகளையும் தோற்றுவித்தனர். குறிப்பாக, மசூலிப்பட்டினம் (1605), புலிகாட் என்ற பழவேற்காடு (1610) சூரத் (1616), தரங்கம்பாடி (1620), காரைக்கால் (1645), சின்சுரா (1653), காசிம்பசார், பாட்னா , பாலசூர், நாகப்பட்டிணம் (1659), கொச்சி (1663) ஆகியவை டச்சுக்காரர்களின் புகழ்மிக்க குடியேற்றங்களாகும்.

#### வெளியேற்றம்

டச்சுக்காரர்கள் இந்திய வாணிபத்தைவிட தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் வர்த்தகம் செய்வதை விரும்பினர். அவர்கள் கிழக்காசியாவில் வாணிபப் பேரரசை ஏற்படுத்தினர். இந்தியாவைத் தெற்கு ஆசியாவுடன் தொடர்பு கொள்வதற்கேற்றப் பாலமாகப் பயன்படுத்தினர். யாவற்றுக்கும் மேலாக இந்தியாவில் டச்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயருக்குமிடையேயான வர்த்தகப் போட்டி சமாளிக்க முடியாத சவாலாக இருந்தது. இப்போட்டியை எதிர்கொள்ள முடியாத டச்சுக்காரர்களும் இந்தியாவைவிட்டு வெளியேறினர். இவர்கள் இடத்தைப் பிரஞ்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும் கைப்பற்றிக் கொண்டனர்.

### 1.2.3 பிரெஞ்சுக்காரர்கள்

#### பிரெஞ்சுக் கம்பெனி

பிற ஐரோப்பிய நாடுகளைப் போன்றே பிரான்சும் கீழை நாடுகளுடன் வாணிபத் தொடர்பு கொள்ள வேண்டியதன் இன்றியமையாமையை நன்கு அறிந்திருந்தது. 1664 ஆம் ஆண்டு பிரான்சின் மன்னர் பதினான்காம் லூயி (Louis XIV)யின் ஆசியோடும், அவரது நிதி அமைச்சர் கோல்பர்ட் (Colbert) டின் ஆதரவோடும் பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி தோற்றுவிக்கப்பட்டது.

**குடியேற்றங்கள்**

பிரெஞ்சுக்காரர்கள் கோல்கொண்டா சுல்தானின் அனுமதியைப் பெற்று மசூலிப்பட்டினத்தில் குடியேறி ஒரு பண்டகசாலையைக் கட்டினர் (1669). பின்னர் இவர்கள் சென்னைக்கு அருகாமையில் சாந்தோமைக் கைப்பற்றினர் (1672). பாண்டிச்சேரியிலும் சந்திரநாகூரிலும் குடியேறிப் பண்டகசாலைகளைக் கட்டினர். வாலிகண்டபுர முஸ்லீம் ஆளுநரிடமிருந்து ஒரு கிராமத்தைப் பெற்று (1673), ஒரு முக்கிய பிரெஞ்சுக் குடியேற்றமாக்கினர். வங்காளத்தில் ஹெயிஸ்டகான் என்ற நவாபிடமிருந்து ஒரு இடத்தைப் பெற்று அங்கு ஒரு குடியிறுப்பை அமைத்தனர் (1674). பின்னர் அங்கு அவர்கள் தோற்றுவித்த பண்டகசாலைதான் வரலாற்றுச் சிறப்புமிக்க சந்திரநாகூர் குடியேற்றமாகும் (1690-92).

**ஆதிக்கச் சரிவு**

ஐரோப்பாவில் டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகியோருக்கிடையேயான முக்கோண வாணிபப் போட்டி இந்தியாவிலிருந்த பிரெஞ்சுக் குடியேற்றங்களைப் பெரிதும் பாதித்தது. எனினும், பிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவில் வர்த்தகப் பெருக்கத்தில் அக்கறைகாட்டி, அவர்களது குடியேற்றப் பகுதிகளில் அமைந்திருந்த பண்டகசாலைகளைச் சுற்றிக் கோட்டைகளைக் கட்டி, ஆங்கிலேயர் ஆதிக்கத்திலிருந்துபாதுகாத்துக் கொண்டனர். அலெக்சாண்டர் டூமாஸ் (Alexander Dumas), டுப்ளே (Dupleix) ஆகியோர் பாண்டிச்சேரி ஆளுநர்களாக இருந்தபோது பிரெஞ்சுக்காரர்களின் கை மேலோங்கி இருந்தது.

பிரெஞ்சுக்காரர்கள் வர்த்தகத்தைவிட அரசியலில் அதிக ஆர்வம் காட்டியதால் ஆங்கிலேயர்களுடன் நேரடியாக மோதவேண்டியதாயிற்று. இம்மோதலின் வெளிப்பாடே கர்நாடகப் போர்கள் ஆகும். இப்போர்கள் பிரெஞ்சுக்காரர்களின் வர்த்தக முதுகெலும்பை முறித்துவிட்டன. இந்தியாவில் பிரெஞ்சுப் பேரரசை ஏற்படுத்த வேண்டும் என்ற அவர்களது ஆசை நிராசையாயிற்று. இந்தியத் துணைக் கண்டத்தில் பிரெஞ்சுப் பேரரசைத் தோற்றுவிக்க வேண்டும் என்று முதன் முதலில் எண்ணிச் செயல்பட்டவர்கள் பிரெஞ்சுக்காரர்கள்தான். கீழை நாடுகளுடன் வாணிகம் செய்யும் நோக்கம் பிரெஞ்சு மக்களிடையே காணப்பட்ட போதிலும், கிழக்கில் வாணிப இலாபத்திற்காக மற்ற ஐரோப்பியக் கம்பெனிகளுடன் போட்டியிட்ட கடைசி ஐரோப்பிய வல்லரசாகப் பிரான்சு தேசம் விளங்கியது.

**1.2.4 ஆங்கிலேயர்**

**கிழக்கிந்தியக் கம்பெனி**

1600 டிசம்பர் 31ஆம் தேதி இங்கிலாந்து அரசி முதலாம் எலிசபெத் ஒரு பட்டயத் (Charter) தின் மூலம் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு (Company of Merchants of London Trading into the East Indies) 15 ஆண்டுகளுக்கு வாணிபம் செய்ய அனுமதி வழங்கினார். இங்கிலாந்து அரசாங்கத்தின் அனுமதி பெற்ற இத் தனியார்துறை நிறுவனம் துவக்கத்தில் சுமத்திரா, ஜாவா, மெலுக்கஸ் ஆகிய நாடுகளுடன் வாசனைப் பொருள் வாணிபம் செய்தது. இக்கம்பெனி ஆரம்பிக்கப்பட்டு 7 ஆண்டுகளுக்குப் பிறகுதான் இந்தியாவில் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்கான முயற்சியை மேற்கொண்டது (1608).

**குடியேற்றங்கள்**

ஆங்கில தளபதி ஹாக்கின்ஸ் (Hawkins) முகலாயப் பேரரசர் ஜகாங்கீரை சந்தித்து சூரத்தில் குடியேற அனுமதி பெற்றார் (1609).

ஆனால் இந்த முயற்சி போர்ச்சுக்கீசியர் மற்றும் சூரத்து வணிகர்களால் எதிர்க்கப்பட்டதால் 1613இல் தான் ஆங்கிலேயரால் சூரத்தில் குடியேறி ஒரு பண்டகசாலையை அமைக்க முடிந்தது! அதன்பின் இங்கிலாந்தின் தூதுவராக இந்தியாவுக்கு வந்த சர் தாமஸ் ரோ (Sir Thomas Roe) முகலாயப் பேரரசரிடமிருந்து சில பகுதிகளில் பண்டகசாலைகளை அமைத்துக் கொள்வதற்கான சலுகைகளைப் பெற்றார் (1618). இச் சலுகைகளைப் பயன்படுத்திய ஆங்கிலேயர் சூரத், ஆக்ரா, அகமதாபாத், புரோச் ஆகிய பகுதிகளில் குடியேறி பண்டகசாலைகளை உருவாக்கிக் கொண்டனர். பின்னர் இங்கிலாந்து மன்னர் இரண்டாம் சார்லஸ் போர்ச்சுக்கீசிய இளவரசி காதரி (Catharine of Braganza) னைத் திருமணம் செய்து கொண்டதால் சீதனமாகப் பெற்ற பம்பாயை (Bombay) கம்பெனிக்கு வாடகைக்குக் கொடுத்துவிட்டார். பம்பாய் படிப்படியாக சூரத் பெற்றிருந்த சிறப்பிடத்தைப் பிடித்து விட்டது. மேற்குக் கடற்கரையில் பம்பாய் ஆங்கிலேயரசு முதன்மைக் குடியேற்றமாகக் காட்சியளித்துத.

**சென்னைப் பட்டினம்**

ஆங்கிலேயர் தென்கிழக்குக் கடற்கரையில் கோல்கொண்டாவின் முக்கிய துறைமுக நகரான மசூலிப்பட்டிணத்தில் குடியேறி ஒரு பண்டகசாலையைக் கட்டினர் (1611). அதன்பின் தமிழ்நாட்டில் புலிக்காட்டுக்கு வடக்கே ஆர்மகான் (Armagaon) என்ற இடத்தில் மற்றொரு பண்டகசாலையைத் தோற்றுவித்தனர். 1639ஆம் ஆண்டு பிரான்சிஸ் டே (Francis Day) என்ற ஆங்கிலேயர் விஜயநகரப் பேரரசின் பிரதிநிதியான சந்திரகிரி அரசிடமிருந்து சென்னை (Madras)யைக் குத்தகைக்கு எடுத்தார் (1639). பின்னர் அந்த இடத்தில் தான் வரலாற்றுச் சிறப்புமிக்க புனித ஜார்ஜ் கோட்டை (Fort St. George) கட்டப்பட்டது (1641). விரைவிலேயே ஆங்கிலேயரின் தலைமையிடம் மசூலிப்பட்டிணத்திலிருந்து சென்னைப்பட்டினத்துக்கு மாற்றப்பட்டது.

**பண்டகசாலைகள்**

ஆங்கிலேயர்கள் வடகிழக்குக் கடற்கரையில் தங்களது குடியேற்றங்களை விரிவுபடுத்தினர். மகாநதி கழிமுகத்தில் ஹரிஹர்பூர், பாலசூர் (1633), ஹுக்ளி , பாட்னா , காசிம்பசார், (1651) ஆகிய பகுதிகளில் பண்டகசாலைகள் கட்டப்பட்டன. 1658இல் வங்காளம், பீகார், ஒரிசா, வடகிழக்குக்கரைக் குடியேற்றங்கள் அனைத்தும் புனித ஜார்ஜ் கோட்டை அதிகாரத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்டன. இதற்கிடையே இங்கிலாந்தின் ஆலிவர் கிராம்வெல் (Oliver Cromwell) கொடுத்த பட்டயம் கம்பெனியின் வணிக வாய்ப்புகளை அதிகரிக்க உதவின. அதேபோன்று இங்கிலாந்து மன்னர்கள் இரண்டாம் சார்லஸ், இரண்டாம் ஜேம்ஸ் ஆகியோர் கம்பெனியின் பழைய உரிமங்களை உறுதிப்படுத்தினர்.

**வர்த்தக அரசியல்**

பிரிட்டிஷ் பேரரசின் ஆதரவுப் பின்னணியில் புது பலம் பெற்ற கிழக்கிந்திய கம்பெனி இந்தியாவில் நிலவிய குழப்பத்தை சாதகமாக்கிக்கொண்டு, இந்திய அரசர்களின் ஒற்றுமையின்மையும், பதவிப் போட்டிகளையும் பயன்படுத்திக்கொண்டு, வணிகத்தை அரசியலாக்கி அரசியலை வணிகமாக்கி வர்த்தக அரசியலால் ஆதாயமடைந்தனர். அரசியல் அதிகாரமே வளமான வாணிபத்தின் அடித்தளம் என்பதை அறிந்து கொண்ட கம்பெனி பிரெஞ்சுக்காரர்களின் போட்டியை எதிர்கொண்டு பிரெஞ்சுக்காரரை வர்த்தகப் போட்டியிலிருந்து விலக்கியதும், வங்காளத்தைக் கைப்பற்றியதும் கம்பெனி இந்தியாவில் விரிவடைவதற்கு வசதியாக இருந்தன. 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் வர்த்தகம் செய்ய

வந்த ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனி இந்தியாவில் அசைக்க முடியாத அரசாக நிலைப்பெற்றது.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

4. டச்சு கிழக்கிந்திய கம்பெனி எப்போது துவங்கியது?
5. பிரான்சின் மன்னர் பதினான்காம் லூயியின் நிதி அமைச்சர் யார்?
6. சென்னைக்கு அருகாமையில் உள்ள டச்சு குடியேற்றம் எது?

## 1.3 கர்நாடகத்தில் ஆங்கில - பிரெஞ்சு ஆதிக்கப் போட்டி

இந்தியாவில் தங்களது மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக ஆங்கிலேயரும் பிரஞ்சுக்காரரும் பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து போட்டியிடத் தொடங்கினர். இந்தியாவில் முகலாயப் பேரரசு வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து நிலவிய அரசியல் குழப்பத்தை பயன்படுத்திக் கொண்ட அவர்கள் இந்திய உள்நாட்டு அரசியலில் தலையிட்டனர். கர்நாடகப் பகுதியிலும் வங்காளத்திலும் ஆங்கிலேய - பிரஞ்சு ஆதிக்கப் போட்டி நன்கு வெளிப்பட்டது.

**தாவூத்கான்**

ஔரங்கசீப் முகலாயப் பேரரசாக விளங்கியபோது தாவூத்கான் ஆற்காட்டைத் தலைநகராக் கொண்டு கர்நாடகத்தை ஆண்டு வந்தார். தக்காண அரசின் மேலாதிக்கத்திற்குட்பட்டு கர்நாடகம் இருந்தது. இவருக்குப் பின் ஆட்சி செய்த சாத்த் உல்லாகானும், அவருக்குப் பின் வந்த தோசுத் அலியும் தென்னகத்தின் மீது படையெத்து வந்த மராத்தியரால் தோற்கடிக்கப்பட்டனர். தக்காண அரசர் ஆச்ப்'ா, தோசுத் அலி போரில் மாண்டதால் சாதாரண ஊழியரான அன்வர் உத்தீன் ஆற்காட்டு நவாபானார். ஔரங்கசீப் நியமித்த அன்வர் உத்தீனை தோசுத் அலியின் குடும்மத்தினர் வெறுத்து, அவருக்கு எதிராகச் சதி புரிந்தனர்.
கருநாடகத்தில் நிலவிய இந்த அரசியல் குழப்பத்தைத் தங்களுக்கு ஆதரவாகப் பிரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயோர்களும் பயன்படுத்த எண்ணினர். ஆங்கிலேயரால் புனித ஜார்ஜ் என்ற சென்னை வடபகுதியையும், புனித டேவிட் என்ற கடல்பகுதியையும் தங்கள் வசம் கொண்டிருந்தனர். புதுச்சேரி பிரெஞ்சுக்காரர்களின் வாணிபத்தலமாகக் கொண்டிருந்தனர்.

கி.பி. 1740 ல் ஐரோப்பாவில் நடைபெற்ற ஆஸ்திரிலிய வாரிசுரிமைப் போரில் பிரெஞ்சுகாரர்களும் ஆங்கிலேயரும் எதிரெதிராக நின்றனர். ஐரோப்பியப் போர் உலகம் முழுவதும் எதிரொலித்தது. வாரிசுரிமைப் போர் இந்தியாவில் தொடங்கியபோது மார்சு என்பவர் சென்னை ஆளுநராகவும், டியூப்ளே புதுச்சேரி ஆளுநராகவும் இருந்தனர்.

## 1.4 கர்நாடகப் போர்கள்

### 1.4.1 முதல் கர்நாடகப் போர், 1744-1748

**போர்க் காரணம்**

18ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஐரோப்பிய அரசியல் இந்திய அரசியலைத் தீர்மானித்தது ஐரோப்பாவுக்குச் சளி பிடித்தால் இந்தியாவில் இருந்த ஐரோப்பிய ஆட்சியாளர்கள் தும்மும் நிலை நிலவியது! 1740 ஆம் ஆண்டில் ஐரோப்பாவில் ஆஸ்திரியாவுக்கும் (Austria) பிரஷ்யா (Prussia) வுக்குமிடையே வாரிசுரிமைப் போர் (Austrian Succession War) நடைபெற்றது. இப்போரில் இங்கிலாந்து ஆஸ்திரியாவையும், பிரான்சு பிர்'யாவையும் ஆதரித்தன. எனவே,

இப்போரின்போது இந்தியாவில் வாணிபப் போட்டியில் தீவிரமாக ஈடுபட்டிருந்த பிரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் மோத வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அனைத்திற்கும் ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரே முதல் கர்நாடகப் போர்க்கான காரணமாகும்.

**போரின் போக்கு**

வாலாஜா குலத்தைச் சேர்ந்த அன்வாருதீன் ஆர்க்காடு நவாபாக இருந்தார். இந்தியாவில் பிரெஞ்சுப் பேரரசை ஏற்படுத்த வேண்டும் என்ற குறிக்கோளுடன் இருந்த பாண்டிச்சேரி ஆளுநர் டூப்ளே (Dupleix) அன்வாருதினுக்கு சென்னையைக் கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்து, அவரது ஆதரவுடன் ஆங்கிலேயரை சென்னையிலிருந்து அகற்றத் திட்டமிட்டார்! இத்திட்டத்தின்படி டூப்ளே சென்னைக் கோட்டையை கைப்பற்றினார் (1746). சென்னையில் ஆங்கிலேயருடைய வாணிபத்தை அடியோடு ஒழித்துவிட்டு இந்த வியாபாரத்தைப் பாண்டிச்சேரியில் நிலைபெறச் செய்ய வேண்டும் என்பதே டூப்ளேயின் நோக்கமாகும்.

சென்னையைக் கைப்பற்றிய டூப்ளே அதை வாக்களித்தபடி அன்வாருதீனுக்குக் கொடுக்க மறுத்து விட்டார் அதனால் ஆத்திரமடைந்த அன்வாருதீன் அவரது மகன் மகபூஸ்கான் தலைமையில் ஒரு படையை ஆர்க்காட்டிலிருந்து சென்னைக்கு அனுப்பினார். இதை அறிந்த டூப்ளே அனுப்பிய பிரெஞ்சுப் படை தெற்கு நோக்கிச் சென்று நவாபின் படையை அடையாற்றில் எதிர்கொண்டது. இந்த அடையாற்றுப் போரில் நவாபின் படை தோற்கடிக்கப்பட்டது. இப்போர் புனித சாந்தோம் சண்டை (Battle of St. Thome) என்றும் அழைக்கப்படுகிறது.

சென்னையை கைவசப்படுத்திக்கொண்ட டூப்ளே ஆங்கிலேயர் வசமிருந்த புனித டேவிட் கோட்டை (Fort St. David) யையும் கைப்பற்றத் திட்டமிட்டார் இதை அறிந்த ஆங்கில தளபதி பாஸ்கவான் (Admiral Boscawen) பாண்டிச்சேரியை முற்றுகையிட்டார். இந்த நெருக்கடியான நேரத்தில் டூப்ளே அவரது மனைவியின் துணையுடன் பாண்டிச்சேரியைக் காப்பாற்றினார். எனவே ஆங்கில தளபதி புனித டேவிட் கோட்டைக்குத் திரும்ப வேண்டியதாயிற்று. மீண்டும் பிரெஞ்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்குமிடையே போர் தொடங்குமுன் ஐரோப்பாவில் ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர் அயிலா சாப்பல் (Aax-la-Chapell) உடன்படிக்கையால் முடிவுற்றது. இந்த உடன்பாட்டின்படி பிரெஞ்சுகாரர் சென்னைக் கோட்டையை ஆங்கிலேயருக்குத் திருப்பித்தர வேண்டியதாயிற்று. எனவே, முதல் கர்நாடகப் போரின் துவக்கத்தையும் முடிவையும் ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர் தீர்மானித்தது

**1.4.2 இரண்டாவது கர்நாடகப் போர் 1749 - 1754**

முதல் கர்நாடகப் போரை ஐரோப்பாவில் நடைபெற்ற ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர் தீர்மானித்தது. இரண்டாம் கர்நாடகப் போரை இந்தியாவிலிருந்த பிரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் முடிவு செய்தனர்! முதல் போரில் பிரெஞ்சு ஆங்கில அரசுகள் நேரடியாகப் பங்கேற்றன. ஆனால் இரண்டாவது போரின்போது இவ்விரு அரசுகளும் ஐரோப்பாவில் சமாதானமாக இருந்த நிலையில் தென்னிந்தியாவில் இருந்த இந்நாடுகளின் கம்பெனிகள் போரிட்டுக் கொண்டன. அதற்குக் காரணம் தென்னிந்திய அரசுகளுக்கிடையே ஏற்பட்ட வாரிசுரிமைப் போட்டிகளேயாகும்

**போர்க் காரணம்**

ஐதராபாத்திலும், ஆர்க்காட்டிலும் ஒரே சமயத்தில் ஏற்பட்ட வாரிசுரிமைப் போட்டிகளே பிரெஞ்சுக் கம்பெனியும், பிரிட்டி' கம்பெனியும்

உள்நாட்டு விவகாரத்தில் நேரடியாகத் தலையிடுவதற்கான வாய்ப்பைக் கொடுத்தன. ஐதராபாத் நிஜாமுக்குப் பல மனைவியர், பல பிள்ளைகள் இருந்தனர் நிசாம் - உல் - முல்க் 1748 இல் இறந்தார். இவரது இரண்டாவது மகன் நாசிர் ஜங். நிஜாமின் மகள் வழிப் பேரன் முசாபர் ஜங். மகன் நாசிர் ஜங்குக்கும் பேரன் முசாபர் ஜங்குக்குமிடையே வாரிசுரிமைப் போட்டி ஏற்பட்டது. நாசிர் ஜங் ஆங்கிலேயரின் ஆதரவைக் கோர, முசாபர் ஜங் பிரெஞ்சுக்காரரின் உதவியை நாடினார் தங்களைத் தேடி வந்த வாய்ப்பை இரு போட்டியாளர்களும் நன்கு பயன்படுத்திக்கொண்டனர்.

ஆர்க்காடு வாரிசுரிமைப் போட்டி சற்று வித்தியாசமானது. மராத்தியரால் கைது செய்யப்பட்டு சாதாரா சிறையிலிருந்த சந்தாசாகிப் விடுதலை செய்யப்பட்டார் (1748). சிறையிலிருந்து திரும்பிய இவர் ஆர்க்காடு நவாப் அன்வாருதீனுக்கு பதில் நவாபாக வேண்டுமென்று உரிமை கோரினார் இதன் காரணாக அன்வாருதீனுக்கும் சந்தாசாகிப்புக்குமிடையே வாரிசுரிமைப் போட்டி ஏற்பட்டது. இப்போட்டியின் போது அன்வாருதீன் ஆங்கிலேயரின் ஆதரவை நாட சந்தாசாகிப் பிரெஞ்சுக்காரரின் உதவியைக் கோரினார் தங்களைத் தேடி வந்த வாய்ப்பை இரு எதிரிகளும் நன்கு பயன்படுத்திக் கொண்டனர். எனவே, ஐதராபாத் மற்றும் ஆர்க்காடு வாரிசுரிமைப் போட்டிகளே இரண்டாம் கர்நாடகப் போருக்கான காரணமாகும்.

**போரின் போக்கு**

ஆர்க்காடு நவாபாக வேண்டும் என்ற ஆசையால் உந்தப்பட்ட சந்தா சாகிப், ஐதராபாத் நிஜாமாக வேண்டும் என்று விரும்பிய முசாபர் ஜங்குடன் சேர்ந்து கொண்டு அன்வாருதீனுக்கு எதிராகச் சதி செய்தனர். இவர்கள் இருவரும் பிரெஞ்சுக்காரரின் உதவியுடன் வடஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள ஆம்பூரில் நவாப் அன்வாருதீனைத் தோற்கடித்தார் (1749). நவாப் போர்க்களத்திலேயே உயிரிழந்தார். ஆம்பூர் போரில் வெற்றிவாகை சூடிய சந்தாசாகிப் ஆர்க்காடு நவாபாகவும், முசாபர்ஜங் ஐதராபாத் நிஜாமாகவும் பிரகடனப்படுத்திக் கொண்டனர். இவர்கள் இருவரும் பாண்டிச்சேரி ஆளுநர் டூப்ளேயை சந்தித்து, பெருமைப் படுத்தி, நிலப் பகுதிகளையும் தாராளமாகத் தந்தனர் தென் தமிழ்நாட்டில் பிரெஞ்சுக்காரரின் கை மேலோங்கியது.

போர்க்களத்தில் இறந்துபோன அன்வாருதீனின் மகன் முகமது அலி திருச்சிக்குத் தப்பிச் சென்றுவிட்டார். அன்வாருதீனின் ஆதரவாளரான ஆங்கிலேயர் முகமது அலி பக்கம் உறுதியாக நின்றனர். திருச்சிக்குத் தப்பிச் சென்ற முகமது அலியைக் கைது செய்வதற்காக பிரெஞ்சு தளபதி லா (Jacques Law) ஆர்க்காடு நவாப் சந்தா சாகிபின் படையுடன் சென்று திருச்சியை முற்றுகையிட்டார். சந்தா சாகீப் பிரெஞ்சுக் கூட்டணியை புனித டேவிட் கோட்டை ஆளுநர் தாமஸ் சாண்டர்சும் (Thomas Saunders) தளபதி மேஜர் லாரன்சும் (Major Lawrance) எதிர்கொண்டனர். மேஜர் லாரன்சின் கீழ் பணிபுரிந்தார் ராபர்ட் கிளைவ் (Robert Clive).

திருச்சி முற்றுகையை முறியடிக்க ராபர்ட் கிளைவ் தளபதி சாண்டர்சிடம் ஒரு யோசனையைத் தெரிவித்தார். அதாவது, ஆர்க்காட்டை முற்றுகையிட்டால் திருச்சி முற்றுகை தளர்த்தப்படும் என்பதே அந்த ஆலோசனை. அதாவது, ஆர்க்காடு தாக்கப்பட்டால் அதைக் காப்பாற்றுவதற்காக நவாப் திருச்சியிலிருந்த அவரது படையில் பெரும்பகுதியை அவரது தலைநகர் ஆர்க்காட்டுக்கு அனுப்புவார் அல்லவா? எனவே, கிளைவின் கருத்தால் பெரிதும் கவரப்பட்ட மேஜர் சாண்டர்ஸ் ஆர்க்காட்டை முற்றுகையிடும் பொறுப்பைக் கிளைவிடமே ஒப்படைத்தார்.

வந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்ட ராபர்ட் கிளைவ் ஆர்க்காட்டை முற்றுகையிட்டார். அவர் எதிர்பார்த்தபடியே சந்தாசாகிப் திருச்சியிலிருந்த அவரது படையை ஆர்க்காட்டுக்கு அனுப்பினார். திருச்சி முற்றுகை தளர்த்தப்பட்டது. கிளைவ் ஆர்க்காட்டைக் கைப்பற்றினார் (1751). திருச்சியை முற்றுகையிட்ட பிரெஞ்சு தளபதி லா ஸ்ரீரங்கத்தில் அடைக்கலம் அடைந்தார் கிளைவின் உத்தரவின் பேரில் ஸ்ரீரங்கம் முற்றுகையிடப்பட்டது. பிரெஞ்சுப் படை ஆங்கிலேயரிடம் சரணடைந்தது (1752 ஜுன் 9). லாவும் அவரது வீரர்களும் கைது செய்யப்பட்டனர். சரணடைந்த சந்தாசாகிப் தஞ்சைத் தளபதியால் கொல்லப்பட்டார். ஆங்கிலேயரின் வெற்றி டூப்ளேயின் கனவைக் கலைத்துவிட்டது.

**போரின் விளைவு**

ஆர்க்காடு நவாப் சந்தாசகிப் - பிரெஞ்சு ஆளுநர் டூப்ளே ஆகியோருக்குச் சாதகமாக துவங்கிய இரண்டாம் கர்நாடகப் போர் ஆங்கிலேயருக்கு அனுகூலமாக முடிந்தது. ஆர்க்காட்டைக் கைப்பற்றியது அப்போரின் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒரு பெரிய சாதனையாகும். போரிடுவதில் ஆங்கிலேயர் திறமைமிக்கவர்கள் என்பது உறுதியாயிற்று. அவர்களது மதிப்பு உயர்ந்தது. கிளைவின் தீரச்செயல் பெரிதும் பாராட்டப்பட்டது. இவற்றின் விளைவாக ஆங்கிலேயர் சுதேச மன்னர்களின் ஆதரவைப் பெறுவது எளிதாயிற்று. ஆர்க்காட்டு நவாப் முகமது அலி ஆங்கிலேயருக்கு நன்றிக்கடன்பட்டு அவர்களது நிரந்தர ஆதரவாளரானார். பிரெஞ்சுத் தோல்வியின் மீது ஆங்கிலேயர் வெற்றிக் கொடியை உயர்த்திப் பிடித்தனர். மதிப்பிழந்த டூப்ளேயின் பதவி பறிக்கப்பட்டு, திரும்பப் பெறப்பட்டு, அவருக்கு பதில் கோதேகு (Godeheu) பாண்டிச்சேரி ஆளுநராக நியமிக்கப்பட்டார். புதிய ஆளுநர் டூப்ளேயின் ஆதிக்கக் கொள்கையை நிராகரித்தார். அவர் ஆங்கிலேயருடன் ஒரு உடன்பாட்டுக்கு வந்தார். அதன்படி முகமது அலி ஆர்க்காடு நவாபாக ஏற்றுக் கொள்ளப்பட்டார். பிரெஞ்சுக்காரரும் ஆங்கிலேயரும் தங்கள் வசமிருந்த இடங்களைத் தக்க வைத்துக் கொண்டனர். இருதரப்பினருமே சுதேச ஆட்சியாளர்களின் விவகாரங்களில் தலையிடுவதில்லை என்று ஒப்புக் கொண்டனர் சுருங்கக்கூறின், இரண்டாம் கர்நாடகப் போர் தமிழ்நாட்டில் ஆங்கில ஆதிக்க எழுச்சியின் அடையாளமாக அமைந்தது. பிரெஞ்சுக்காரர் மற்றும் ஆங்கிலேயரின் சந்தர்ப்பவாதமே அவர்கள் இப்போரில் பங்கேற்பதை முடிவு செய்தது. ஆங்கிலேயரின் கடலாதிக்கத்தின் செல்வாக்கே கர்நாடகத்தில் ஆங்கில- பிரெஞ்சுப் போராட்டத்தின் முதல் கட்டத்தை முடிவு செய்தது. எனினும், இரண்டாம் கர்நாடகப் போர் தென்னிந்தியாவில் பிரெஞ்சு ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததாகக் கூற இயலாது.

### 1.4.3 மூன்றாவது கர்நாடகப் போர், 1757 - 1763

**போர்க் காரணம்**

முதல் கர்நாடகப் போர் ஐரோப்பாவில் நடை மற்ற ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரின் எதிரொலியாகும். இரண்டாவது காநாடகப் போர் ஆர்க்காடு நவாப் மற்றும் ஐதராபாத் நிஜாம் ஆகியோருக்கிடையே நடைபெற்ற வாரிசுரிமைப் போராட்டங்களின் விளைவாகும். மூன்றாவது கர்நாடகப் போர் மீண்டும் ஐரோப்பாவில் நடைபெற்ற ஏழாண்டுப் போரின் (Seven Years War) (1756-1763) பிரதிபலிப்பாகும். ஆனால் இந்த ஐரோப்பியப் போரில் இங்கிலாந்து பிரஷ்யாவையும், பிரான்சு ஆஸ்திரியாவையும் ஆதரித்தன! சந்தர்ப்பவாதத்தின் மறுபெயர்தான் அரசியல் கூட்டணி

பாண்டிச்சேரியில் ஆறு மாத காலமே பதவியிலிருந்த கோதேகருக்குப் பதில் லேரிட் (Deleyrit) ஆளுநர் பொறுப்பேற்றார். தாமஸ்

ஆர்தர் (Thomas Arthur) என்ற லாலி (Count-de-Lally) பிரெஞ்சு அரசாங்கத்தின் அரசுப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். அவரது முக்கிய நோக்கங்கள் இரண்டு. 1) பாண்டிச்சேரி நிர்வாகத்தைச் சீரமைப்பது 2) ஆங்கிலேயரை இந்தியாவை விட்டு வெளியேற்றுவது ! இந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான அதிகாரங்களை அவர் பெற்றிருந்தார். எனவே இவர்கள் ஐரோப்பாவில் துவங்கிய ஏழாண்டுப் போரை வாய்ப்பாகக் கொண்டு மூன்றாவது கர்நாடகப் போரைத் துவக்கினர்

**போரின் போக்கு**

பிரெஞ்சு அரசாங்கப் பிரதிநிதி லாலியிடம் வீரமும், நேர்மையும், விரைந்து செயல்படும் ஆற்றலும் இருந்த அளவுக்கு விவேகமில்லை! பிறரையும் கலந்து முடிவெடுக்கக் கூடிய பொறுமையுமில்லை. யதேச்சாதிகாரியான லாலி ஆட்சிப் பொறுப்பேற்ற உடனேயே அதிரடி நடவடிக்கையாக ஆங்கிலேயர் வசமிருந்த புனித டேவிட் கோட்டையைக் கைப்பற்றினார் (1758). அதன்பின் தஞ்சாவூருக்கு விரைந்து சென்று கடன் பாக்கியை வசூலிக்கும் முயற்சியை மேற்கொண்டார். நாகூரைக் கைப்பற்றிச் சூரையாடினார். திருவள்ளூர் சென்ற லாலி அங்கு கைப்பற்ற எதுவுமின்மையால் கோயில் பூசாரிகள் ஆறுபேரைத் தூக்கிலிட்டார்

பாண்டிச்சேரி திரும்பிய லாலி சென்னை முற்றுகையில் தீவிரமாக இருந்தார். பிரெஞ்சு தளபதி புஸ்ஸியை (Bussy) ஐதராபாத்திலிருந்து சென்னைக்கு வருமாறு பணித்தார். பாண்டிச்சேரிக்கும் சென்னைக்கும் இடையே இருந்த பல இடங்களைக் கைப்பற்றிய பின்னர் லாலி 1758 டிசம்பர் 14 ஆம் தேதி சென்னையை முற்றுகையிட்டார். அடுத்த ஆண்டுத் துவக்கத்தில் பீரங்கித் தாக்குதலைத் துவக்கினார் (1759). ஆனால் ஆளுநர் ஜார்ஜ் பிகாட் (George Bigot) சென்னையை தீரத்துடன் பாதுகாத்தார். அவருக்கு உதவியாக திருச்சியிலிருந்து ஒரு படைப் பிரிவும், செங்கல்பட்டிலிருந்து மற்றொரு படைப் பிரிவும் சென்னைக்கு வந்து சேர்ந்தன. இவர்கள் புனித தாமஸ் குன்று (St. Thomas Mount) க்கு அருகாமையில் இருந்த பகுதியைக் கைப்பற்றினர். பிரெஞ்சுக்காரர்களுக்குப் பெருந்தொல்லைகள் கொடுத்தனர். இறுதியில் ஆங்கிலக் கடற்படை வந்ததும் லாலி வேறுவழியின்றி சென்னை முற்றுகையைக் கைவிட்டார் முற்றுகையை விலக்கிக் கொண்டார். இம்முற்றுபெறா முற்றுகை லாலியின் புகழுக்கும் பெருமைக்கும் கிடைத்த இரண்டாவது அடியாகும்.

மூன்றாவது கர்நாடகப் போர் தென்னிந்தியாவுக்கு வெளியேயும் விரிவடைந்தது. ஆங்கிலப்படை வங்காளத்தில் பிரெஞ்சுக் குடியிறுப்பான சந்திரநாகூரைக் கைப்பற்றியது (1757). வங்காளத்திலிருந்து தளபதி போர்டேயின் (Colonel Forde) தலைமையில் வந்த ஆங்கிலப் படை பிரெஞ்சுப் படையை ராஜமுந்திரியில் தோற்கடித்தது (1758). அடுத்த ஆண்டே அவர் மசூலிப்பட்டிணத்தைக் கைப்பற்றி குண்டூரைத் தவிர பிற வடசர்க்கார் பகுதிகளை (Northern Circars) - கஞ்சம், விசாகப்பட்டினம், கோதாவரி, கிருஷ்ணா - ஒரு உடன்படிக்கை மூலம் பெற்றுக் கொண்டார்

இதற்கிடையே ஆங்கிலப் படை காஞ்சீபுரத்தில் பிரெஞ்சுப் படையைத் தோற்கடித்தது ஆனால் ஆங்கிலேயர் இவ்வெற்றியைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டனர். பிரெஞ்சு தளபதி தே ஆக் (D'Ache) தோல்வி அடைந்து, காயமுற்று, சோழ மண்டலக் கடற்கரையை விட்டு வெளியேறினார். அதே சமயம் அயர் கூட் (Eyre Coote) ஒரு வலிமை மிக்க ஆங்கிலப் படையுடன் வந்து சேர்ந்தார் (1760, ஜனவரி 22). ஆங்கிலப் படையும் பிரெஞ்சுப் படையும் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள வந்தவாசியில் சந்தித்துப் போரிட்டன.

வந்தவாசிப் போரில் லாலி தோற்கடிக்கப்பட்டார். புஸ்ஸி கைது செய்யப்பட்டார்.

அயர்கூட் கர்நாடகத்திலிருந்த பிரெஞ்சுப் பகுதிகளைக் கையகப்படுத்தினார். செஞ்சியையும், பாண்டிச்சேரியையும் தவிர கர்நாடகத்தில் இருந்த அனைத்துப் பகுதிகளையும் பிரெஞ்சுக்காரர் இழந்தனர். இறுதியில் ஆங்கிலேயர் பாண்டிச்சேரியை முற்றுகையிட்டனர் (1760 மே). லாலி மைசூர் ஐதர் அலியுடன் செய்து கொண்ட உடன்படிக்கையும் அவருக்குக் கை கொடுக்கவில்லை. பாண்டிச்சேரி நிபந்தனையின்றி சரணடைந்தது (1761 ஜனவரி 16). வெற்றி பெற்ற ஆங்கிலேயர் பாண்டிக் கோட்டைகளை அழித்ததோடன்றி நகரத்தையும் நிர்மூலமாக்கினர். வளமோடு இருந்த பாண்டிச்சேரி வறுமையின் பிடியில் சிக்கியது. பாண்டிச்சேரியைத் தொடர்ந்து செஞ்சியும், மாகியும் ஆங்கிலேயர் வசம் வந்தன. இந்த நிலையில் ஐரோப்பாவில் பிரிட்டனும் பிரான்சும் செய்து கொண்ட பாரிஸ் உடன்படிக்கை (Treaty of Paris) 1763) மூன்றாவது கர்நாடகப் போரை முடிவுக்குக் கொண்டு வந்தது.

## 1.5 போரின் விளைவு

பாரிஸ் உடன்படிக்கையின் விளைவாக: 1) டூப்ளேயின் ஆக்கிரமிப்புக்கு முன்பு இருந்த நிலப் பகுதிகள் பிரெஞ்சுக்காரர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டன. 2) பிரெஞ்சுக்காரர்கள் தங்கள் நடவடிக்கைகளை வாணிபத்தோடு மட்டும் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டது. 3) ஆங்கிலேயர் வடசர்க்கார் பகுதிகளைத் தக்க வைத்துக் கொண்டனர். 4) தென்னிந்தியாவில் பிரெஞ்சு ஆதிக்கம் முடிவுக்கு வந்தது. 5) முகமது அலியின் ஆர்க்காட்டு நவாப் பதவி உறுதிசெய்யப்பட்டது. 6) மதிப்பிழந்து தாய்நாடு திரும்பிய லாலி பாஸ்டில் சிறையில் அடைக்கப்பட்டு சிரைச்சேதம் செய்யப்பட்டார் (1766).

### 1.5.1 ஆங்கிலேயர் பெற்ற படிப்பினைகள்

மூன்று கர்நாடகப் போர்கள் இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இடையேயான வர்த்தகப் போட்டியை முடிவுக்குக் கொண்டு வந்தன. இந்தியாவில் ஆங்கிலேயர் ஆதிக்கம் தடையின்றித் துவங்கி விரிவடைந்தது. கர்நாடகப் போர்களால் ஆங்கிலேயர் சில படிப்பினைகளைப் பெற்றனர்: 1) இந்திய அரசுகளின் ராணுவ பலவீனத்தைப் பற்றி நன்கு தெரிந்து கொண்டனர். 2) இந்தியரிடையே தேசிய உணர்வு இன்மையால் அவர்களிடையே பாரம்பரியமாக இருந்து வந்த சாதி, சமய, இன, நிற வேறுபாடுகளைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர். 3) இந்தியர்களுக்கு யார் ஊதியம் கொடுக்கிறார்களோ அவர்களுக்கு விசுவாசமாக இருப்பார்கள் என்ற யதார்த்த உண்மையை அறிந்து கொண்டனர். 4) போர்களால் மட்டுமே இந்திய அரசுகளைப் பணிய வைக்க முடியும் என்பதைப் புரிந்து கொண்ட ஆங்கிலேயர் போரைப் பேரரசுப் பெருக்கக் கருவியாகப் பயன்படுத்தினர். 5) கொடுத்த வாக்கை மீறக்கூடாது என்ற குணமுடைய இந்தியரை உடன்படிக்கைகள் மூலம் பணிய வைத்தனர். 6) கடற்கரை வசதியிருந்தும் கடற்படையைப் புறக்கணித்த இந்தியரைத் தங்களது கடலாதிக்கத்தால் எளிதில் புறம் காண முடியும் என்ற பேருண்மையைப் புரிந்து கொண்டனர்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

7. பிரெஞ்சுகாரர்கள் கோல்கொண்டா சுல்தானின் அனுமதி பெற்று

எங்கு குடியேறினர்?
8. ஆங்கிலேய கிழகிந்திய கம்பெனிக்கு வாணிபம் செய்ய அனுமதி வழங்கியவர் யார்?
9. முகலாய பேரரசர் ஜகாங்கீரை சந்தித்த ஆங்கிலேய தளபதி யார்?
10. சந்திரகிரி அரசரரிடமிருந்து சென்னையை குத்தகைக்கு எடுத்தவர்?

## 1.6 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

1. வாஸ்கோடகாமா என்னும் போர்ச்சுகீசிய மாலுமியே இந்தியாவிற்கான கடல் வழியை கண்டறிந்தார்
2. வாஸ்கோடகாமாவை வரவேற்ற இந்திய அரசர் சாமரின்அல்மேடா
3. 1602
4. கோல்பர்ட்
5. புலிகாட் என்ற பழவேற்காடு
6. மசூலிப்பட்டிணம்
7. முதலாம் எலிசபெத்
8. ஹாக்கின்ஸ்
9. பிரான்சிஸ் டே
10. டியூப்ளே

## 1.7 சுருக்கவுரை

- வாஸ்கோடகாமா 1498 மே 27 ஆம் தேதி கள்ளிக்கோட்டைத் துறைமுகத்தை அடைந்தார். அவரைக் கள்ளிக்கோட்டை அரசர் சாமரின் இருகரம் நீட்டி வரவேற்றார்.
- 1664 ஆம் ஆண்டு பிரான்சின் மன்னர் பதினான்காம் லூயி மற்றும் அவரது நிதி அமைச்சர் கோல்பர்ட்டின் ஆதரவோடு பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி தோற்றுவிக்கப்பட்டது.
- ஆங்கில தளபதி ஹாக்கின்ஸ் (Hawkins) முகலாயப் பேரரசர் ஜகாங்கீரை சந்தித்து சூரத்தில் குடியேற அனுமதி பெற்றார் (1609).
- கி.பி. 1740 ல் ஐரோப்பாவில் நடைபெற்ற ஆஸ்திரிலிய வாரிசுரிமைப் போரில் பிரெஞ்சுகாரர்களும் ஆங்கிலேயரும் எதிரெதிராக நின்றனர்.
- 1746 முதல் 1763 வரை ஆங்கில கிழக்கிந்திய நிறுவனம் மற்றும் பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனம் ஆகியவை இந்தியாவில் ஒன்றுகொன்று போரிட்டனர். இந்தப் போர்களே கர்நாடக போர்கள் என்றழைக்கப்படுகின்றன.

## 1.8 முக்கிய கருத்துப்படிமங்கள்

- தன்னாட்சி: அது சுதந்திரமாகச் செயல்படுவதைக் குறிக்கிறது.
- கப்பலோட்டி: மாலுமி
- சூழ்ச்சித் திட்டம்: ஒரு குறிப்பிட்ட இலக்கை அடைவதற்க்கு ஏதுவாக செயல்படுவது.
- நாணயம்: போர்ச்சுகல் நாட்டை சார்ந்த தங்க நாணயம்

## 1.9 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்

**குறு விடை வினாக்கள்**

1. பிரெஞ்சு குடியேற்றங்கள் யாவை?
2. ஆங்கிலேய கிழக்கிந்திய நிறுவனம் சிறுகுறிப்பு வரைக?
3. ஆங்கிலேய பிரெஞ்சு ஆதிக்கப்போட்டி சிறு குறிப்பெழுதுக?

**நெடு விடை வினாக்கள்**

4. இந்தியாவில் ஐரோப்பியரின் வருகைக்கான காரணங்கள் மற்றும் தாக்கங்கள் விளக்குக.
5. கர்நாடக போர்களின் காரணங்கள் மற்றும் விளைவுகள்

விளக்குக.

**1.10 மேலும் படிக்க**

சந்திரா, பிபின், 2009. நவீன இந்தியாவின் வரலாறு. ஹைத்தராபாத், ஓரியண்ட் பிளாக்வான்ஸ்.

டியூப்-பானர்ஜி, இஷிதா. நவீன இந்தியாவின் வரலாறு. கேம்பிரிட்ஜ், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக அச்சகம்

தாரிக், முகம்மது. 2007. நவீன இந்திய வரலாறு. புது தில்லி: டாடா மெக்ரா-ஹில் கல்வி.

பண்டியோபதியா, ஷெகரா. 2004. பிளாசி முதல் பார்ட்டி வரை: நவீன இந்திய வரலாறு. ஹைதராபாத்: ஓரியண்ட் பிளாக்வான்ஸ்.

சென், S.N. 2006. நவீன இந்திய வரலாறு. புது தில்லி: நியூ ஏஜ் இண்டர்நேஷனல்.

**அலகு – 2 வங்காளத்தில் ஆங்கிலேய ஆதிக்கம் நிறுவப்படுதல்**

குறிப்புகள்

2.0 அறிமுகம்
2.1 நோக்கங்கள்
2.2 வங்காளத்தில் ஆங்கிலேய ஆதிக்கம் நிறுவப்படுதல்
2.2.1 ஆங்கில-பிரெஞ்சு வர்த்தகப் போட்டி
2.3 பிளாசிப் போர்
2.4 பக்சார் போர்
2.5 இராபர்ட் கிளைவ்
2.6 இரட்டை ஆட்சி முறை
2.7 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்
2.8 சுருக்கவுரை
2.9 முக்கிய கருத்துப்படிமங்கள்
2.9 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்
2.10 மேலும் படிக்க

## 2.0 அறிமுகம்

18 ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் இந்திய அரசியல் குவிமையம் தக்காணத்திலிருந்து வங்காளத்துக்கு மாறியது. வங்காளத்திலும் பிரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் வர்த்தக விரோதிகளாகவே இருந்தனர். வங்காளத்தில் பிரெஞ்சுக்காரர்கள் ஆங்கிலேயரைவிட வலுவான நிலையில் இருந்தனர். டூப்ளே (Joseph Francois Dupleix) சந்திரநாகூரின் (Chandranagore) ஆட்சியாளராக இருந்த போது பிரெஞ்சுக் காலனி ஆதிக்கத்துக்கான விதைகளை விதைத்தார். ஆங்கிலேயரின் தாக்குதலை எதிர்கொள்ள அங்கு கோட்டையைக் கட்டினார். வங்காள நவாபுடன் நட்புறவு கொண்டார். டூப்ளே சென்னை ஆளுநராகச் செல்லும் வரை (1741) வங்காளத்தில் பிரெஞ்சுக்காரரின் கை மேலோங்கி இருந்தது.

## 2.1 நோக்கங்கள்

இந்த அலகை நீங்கள் படித்து முடித்த பின்பு உங்களால்,

- ஆங்கிலேய - பிரெஞ்சு போட்டியின் பல்வேறு அம்சங்களை விவாதிக்க முடியும்.
- பிளாசிப் போரை பற்றி தீவிரமாக ஆராய முடியும்.
- இரட்டை அரசு முறையை விளக்க முடியும்
- பக்சார் போருக்கு வழிவகுத்த நிகழ்வுகளை ஆராய முடியும்.

## 2.2 வங்காளத்தில் ஆங்கிலேய ஆதிக்கம் நிறுவப்படுதல்

### 2.2.1 ஆங்கில-பிரெஞ்சு வர்த்தகப் போட்டி

ஆங்கிலேயர் பொருளாதார வளமிக்க வங்காளத்தைத் தங்கள் வசம் கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். ஆங்கிலக் கம்பெனியின் வாணிபத்தின் 60 வங்காளப் பொருட்களாகும். முகலாயப் பேரரசர் அவுரங்கசீப் ஆங்கிலேயர் வங்காளத்தில் வரியற்ற வியாபாரம் செய்வதற்கான உரிமையை வழங்கினார் 1690 ஆம் ஆண்டு கல்கத்தாவைத் தோற்றுவித்து, நான்காண்டுகளில் கோட்டைக் காப்பரண் அமைத்துப் பின்னர் மூன்று கிராமங்களில் ஜமீன்தாரி உரிமைகளையும் பெற்றனர். (1696) ஆங்கிலேயர். பின்னர் முகலாய மன்னர் பரூக்ஷைர் (Farruksiyar) பிறப்பித்த கட்டளையின்படி வங்காளத்தில் ஆங்கிலேயர் தொடர்ந்து வரியற்ற வாணிபம் செய்யவும், கல்கத்தாவைச் சுற்றியுள்ள 38

கிராமங்களை வாடகைக்கு எடுத்துக் கொள்வதற்கும், நாணயச் சாலையை அமைத்துக் கொள்வதற்குமான சலுகைகளைப் பெற்றனர். இவையாவும் வங்காளத்தில் பிரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயரும் மோதிக்கொள்வதற்கான வழி வகுத்தன.

## 2.3 பிளாசிப் போர், 1757

### அலிவர்திகான்

வங்காளம் பெயரளவுக்கு முகலாயப் பேரரசரின் மேலாண்மையின் கீழ் இருந்தாலும், நடைமுறையில் இம்மாகாணம் சுபேதாரின்கீழ் சுதந்திரமாக இருந்தது. (1740 இல் வாரிசுரிமைப் போராட்டத்தில் வெற்றி பெற்று வங்காள நவாபான அலிவர்திகான்) (Alivardi Khan) முதியவராயினும் திறமையானவர். வங்காளத்தை மராட்டியப் படையெடுப்பாளர்களிடமிருந்து காப்பாற்றியவர். அவர் தனிப்பட்ட வாழ்க்கையில் நேர்மையாக இருந்த போதிலும் பொது வாழ்க்கையில் பல குற்றங்களைச் செய்தவர். உரிய காலத்தில் பதவியை அவரது வாரிசுக்கு விட்டுக் கொடுக்காதவர்! கிழத்துவம் அலிவர்திகானின் முடிவெடுக்கும் திறமையைக் குறைத்து விட்டது.

### சிராஜ்யுத்தௌளா

1756 ஆம் ஆண்டு அலிவர்திகரன் இயற்கை எய்தியதைத் தொடர்ந்து அவரது 23 வயது பேரன் சிராஜ்யுத்தௌளா (Sirajuddaula) வங்காள நவாபானார். அரசரின் அந்தப்புறத்தில் வளர்ந்த இவர் அரசியல் அனுபவமற்ற, நிர்வாகத் திறமையற்ற, பிறர் சொல் கேளாத தான்தோன்றி விவேகமற்ற வேகமுடையவர். சந்தேகப் பேர்வழி. இவருக்குத் தன் பலவீனமும் தெரியாது மாற்றான் பலமும் புரியாது! எனவே, நவாப் சிராஜ்யுதௌளாவுக்கும், முகலாயப் பேரரசரின் அனுமதியோடு கல்கத்தாவில் வாணிப விரிவாக்கத்தின் விளைவாக வளர்ந்து கொண்டிருந்த ஆங்கிலக் கம்பெனிக்குமிடையே மோதல் ஏற்பட்டதில் வியப்பில்லை. இம் மோதலின் விளைவே பிளாசிப் போர்.

### போர்க்கான காரணங்கள்

பிளாசிப் போருக்கான காரணங்கள் பல. அவற்றுள் முக்கியமானவை வருமாறு:

### கம்பெனி மீது கோபம்

வங்காள நவாப் சிராஜ்யுத்தௌளா தனது அதிகாரத்தைக் கொண்டு ஆங்கிலக் கம்பெனியை அடக்க முற்பட்டார் அண்மையில் ஆர்க்காட்டில் பிரெஞ்சுக்காரரைப் புறங்கண்ட ஆங்கிலக் கம்பெனி நவாபின் அதிகாரத்துக்கு அடங்க மறுத்தது. இதனால் ஆத்திரமடைந்த நவாப் தவறுக்கு மேல் தவற்றைச் செய்யலானார். எடுத்துக்காட்டாக, இவரது முடிசூட்டு விழாவின்போது ஆங்கிலேயர் விலையுயர்ந்த பொருட்களைப் பரிசாகக் கொடுக்கவில்லை என்பதைத் தனக்கு ஏற்பட்ட அவமரியாதையாகக் கருதினார்! அதேபோன்று ஆங்கிலேயர் தங்களது தொழிற்கூடத்தை நவாபின் அதிகாரிகள் பார்வையிடுவதற்கு அனுமதி மறுத்ததால் இவரது ஏமாற்றம் ஆத்திரமாக மாறியது!! அதுமட்டுமல்ல. ஆங்கிலேயரிடம் சரணடைந்த திவான் கிருஷ்ண பல்லாவை நவாபிடம் ஒப்படைக்க மறுத்துவிட்ட கம்பெனியின் செயலைத் தனக்கிட்ட சவாலாகக் கருதினார் சிராஜ்.

### பொருளாதார பாதிப்பு .

வங்காளத்தில் ஆங்கிலேயர் முகலாயப் பேரரசரின் அனுமதியோடு செய்து வந்த வரியற்ற வியாபாரத்தால் வங்காள வர்த்தகர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இச்சமனற்ற வாணிபப் போட்டியால் நவாபின் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டது. ஆங்கிலேயர் இவ்வரிச் சலுகையைத் தவறாகப் பயன்படுத்தியதால் நிலைமை மோசமாயிற்று. இவ்வரிச்சலுகை மோசடியால் ஆதாயம் பெற்ற வங்காள வியாபாரிகள் கம்பெனியின் அதரவாளர்களாயினர்! இவர்கள் தஸ்தக்கு (Dastaks) களைப் பயன்படுத்திக் கொள்ளை லாபம் கண்டனர். இப்பொருளாதாரப் பிரச்சனையைக் கம்பெனியுடன் பேசித்தீர்க்காமல் கம்பெனிக்கு ஆதரவாக இருந்த வங்காள வியாபாரிகள் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுத்தார் சிராஜ். சிராஜின் கட்டுப்பாட்டுக் கட்டளைகளால் பாதிக்கப்பட்ட வியாபாரிகளுக்கு ஆங்கிலேயர் அடைக்கலம் கொடுத்துப் பாதுகாப்பு அளித்தனர். இந்நடவடிக்கைகள் வங்காள நவாபுக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே இருந்த இடைவெளியை அதிகரித்துவிட்டன.

**கல்கத்தா கோட்டை**

சிராஜ்யுத்தௌளலாவுக்கும் கம்பெனிக்கும் இடையேயான அரசியல் விரிசல் பெரும் பிளவாகமாறியதற்கு ஆங்கிலேயர் தங்களது கல்கத்தா கோட்டையை பலப்படுத்தியதேயாகும். ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்குமிடையே நிலவிய வர்த்தகப் போட்டியின் விளைவாகப் பிரெஞ்சுத் தாக்குதலிலிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்வதற்காக ஆங்கிலேயர் வில்லியம் கோட்டையைச் சுற்றி அகழி தோண்டினர். இந்நடவடிக்கை தனக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட செயல் என்று சந்தேகித்த சிராஜ் அகழியை மூட ஆணையிட்டார். ஆனால் ஆங்கிலேயர் இந்த ஆணையை நிராகரித்து விட்டனர் இதனால் மேலும் ஆத்திரமடைந்த நவாப் ஆங்கிலேயரைத் தண்டிக்கத் தீர்மானித்தார்! இதன் விளைவே பிளாசிப் போர் ஆகும்.

**போரின் போக்கு**

**கல்கத்தா கைப்பற்றப்படல், 1756**

சிராஜ்யுத்தௌளலா ஆங்கிலேயரைத் தண்டிப்பதற்காக பெரும் படையுடன் கல்கத்தா நோக்கிச் சென்றார். அவர் நேராகக் காசிம் பசாரை (Cassim Bazaar) அடைந்து அதைக் கைப்பற்றினார் (ஜூன் 4). காசிம் பசார் கைப்பற்றப்பட்டபின் கல்கத்தாவின் வடபகுதி கடுமையாகத் தாக்கப்பட்டது (ஜூன் 16). நவாபின் படைத்தாக்குதலை எதிர்கொள்ள முடியாத வில்லியம் கோட்டை ஆளுநர் டிரேக் (Drake) அவருடன் இருந்த அதிகாரிகள், ஆலோசனை அவை உறுப்பினர்கள், பெண்கள், குழந்தைகள் ஆகியோர் ஹூக்ளி நதி வழியாகத் தப்பிச் சென்று புல்டா (Fulta) என்ற தீவை அடைந்தனர். எஞ்சியிருந்த சிலர் ஹால்வெல் (Holwell) என்ற மருத்துவரின் தலைமையில் கல்கத்தா கோட்டையைக் காக்க முற்பட்டு, முடியாமல் கடைசியில் சரணடைந்தனர்! கல்கத்தா கோட்டை கைப்பற்றப்பட்டது (ஜூன் 20). கோட்டைக்குள்ளிருந்த ஆங்கிலேயர் குடியிருப்புகள், கிடங்குகள், ஆலைகள் அனைத்தும் அழிக்கப்பட்டன. ஹால்வெலும் அவருடன் இருந்தோரும் கைது செய்யப்பட்டனர்.

**இருட்டறைப் படுகொலை**

கைது செய்யப்பட்ட 146 பேரும் 22 க்கு 14 சதுர அடி பரப்புள்ள ஒரு குறுகிய அறையில் அடைத்து வைக்கப்பட்டனர். மறுநாள் காலை அறைக் கதவைத் திறந்து பார்த்தபோது ஹால்வெல் உட்பட 22 பேர் மட்டுமே உயிர் பிழைத்திருந்தனர். அவர்களில் ஒருவர் திருமதி காரே

(Mrs. Carey). எஞ்சியிருந்த 124 பேரும் மூச்சுமுட்டி உயிரிழந்தனர்! இந்நிகழ்ச்சியே இருட்டறைப் படுகொலை (Black Hole Massacre) என்று சித்தரிக்கப்படுகிறது.

இருட்டறைப் படுகொலை வரலாற்று நிகழ்வா? இவ்வினாவுக்கான விடை சர்ச்சைக்குரியது. ஏனெனில் இருட்டறை நிகழ்ச்சி பற்றி அறிவதற்கான ஒரே சான்று அறையில் அடைக்கப்பட்டு உயிர்மீண்ட ஹால்வெல் 1757 பிப்ரவரி மாதம் தாய்நாடு திரும்பியபோது கொடுத்த விரிவான தகவலாகும். இச்சான்றை ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய சமகாலச் சான்று வேறு எதுவுமில்லை! இச்சம்பவம் பற்றி ராபர்ட் கிளைவ் தனது கடிதங்களில் குறிப்பிட்டுள்ளார். அதேபோன்று டச்சு ஆவணங்கள் சிலவற்றில் இந்நிகழ்வு பற்றிய குறிப்புகள் உள்ளன. எனினும் இவை பொதுவான தகவல்களாகவே உள்ளன.

இருட்டறைத் துயர நிகழ்ச்சி நடைபெற்றது என்பதில் ஐயமில்லை. ஆனால் அதை ஹால்வெலின் கட்டுக்கதை (Hoax of Holwell) என்று ஒதுக்கிவிட முடியாது. இருட்டறை நிகழ்ச்சி நடைபெற்றிருக்க முடியாது என்பதற்குக் கூறப்படும் காரணங்களாவன : 1) ஒரு சிறிய அறையில் 146 கைதிகளை அடைத்து வைத்திருக்க முடியாது. 2) வங்காள நவாப்மீது பழி போடுவதற்காக ஹால்வெல் கூறிய பொய். 3) இந்நிகழ்ச்சியைப் பற்றிய சமகாலச் சான்றுகள் எதுவுமில்லை. 4) இருட்டறைக்கும் வில்லியம் கோட்டைக்குமிடையேயான வேறுபாடு தெளிவாக்கப்படவில்லை. 5) இருட்டறையில் இறந்ததாகக் கூறப்படும் 124 பேரில் 56 பெயர்கள் மட்டுமே தெரிய வந்துள்ளது. 6) எத்தனை பேர் கைது செய்யப்பட்டார்கள் என்பது உறுதி செய்யப்படவில்லை.

கல்கத்தா வில்லியம் கோட்டைக்குள் நிகழ்ந்த துயர நிகழ்ச்சி மிகைப்படுத்திக் கூறப்பட்டாலும் இதை வெறும் கற்பனை என்று ஒதுக்கிவிட இயலாது. ஹால்வெல்லின் சமகால சாட்சியத்தைப் பொய் என்று புறம்தள்ளி விடவும் முடியாது. கிளைவின் குறிப்புகளும், டச்சுக்காரரின் தகவலும் இந்நிகழ்ச்சி நடைபெற்றதை உறுதிப்படுத்துகின்றன. வங்காள நவாப் சிராஜ்யுத்தௌலா ஆங்கிலேயரைத் தண்டிக்க விரும்பினாலும் இந்நிகழ்ச்சிக்கு நேரடியாகக் காரணமாக இருந்தாரா என்பது தெரியவில்லை. இந்நிகழ்ச்சியைப் பொறுத்தவரை அவர் குற்றமற்றவராகவே காணப்படுகிறார். சுருங்கக் கூறின் கல்கத்தா இருட்டறைத் துயரம் கற்பனை கலந்து கூறப்பட்ட வரலாற்று நிகழ்வாகும்.

**கல்கத்தா மீட்கப்படல், 1757**

புல்டா (Fulta) விலிருந்த ஆங்கில அகதிகள் மூலம் வங்காள நவாப் கல்கத்தாவைக் கைப்பற்றியது பற்றியும், அதனால் ஆங்கிலேயருக்கு ஏற்பட்ட அழிவு பற்றியும் அறிந்து சென்னை ஆளுநரும், அதிகாரிகளும் விரைந்து செயல்பட்டனர். கடல் வழியாகவும், தரைமார்க்கமாகவும் கூடுதல் படைகள் அனுப்பப்பட்டன. தளபதி வாட்சன் தலைமையில் ஒரு கடற்படை சென்றது. ராபர்ட் கிளைவின் தலைமையில் ஒரு பலமிக்க தரைப்படையும் அனுப்பி வைக்கப்பட்டது. 1756 ஆம் ஆண்டு இறுதியில் வாட்சனும், கிளைவும் புல்டாவை அடைந்தனர்.

புல்டாவை அடைந்த வாட்சனும், கிளைவும் ஹுக்ளி சென்று புல்டாவிலிருந்த ஆங்கில அகதிகளை மீட்டனர். பட்ஜ்-பட்ஜ் (Budge-Budge) என்ற இடத்தைப் பிடித்தனர். அதன்பின் அவர்கள் 1757 ஜனவரி 22ம் தேதி கல்கத்தாவை மீட்டனர்.

**அலிநகர் உடன்படிக்கை**

ஆங்கிலேயரின் இருமுனைத் தாக்குதலை எதிர்கொள்ள முடியாத வங்காள நவாப் சிராஜ்யுதௌலா அலிநகர் என்ற இடத்தில் அவர்களுடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார். இந்த அலிநகர் உடன்படிக்கையின்படி 1) நவாப் ஆங்கிலக் கம்பெனிக்கு இழப்பீடு தரவேண்டும். 2) முகலாயப் பேரரசர் வழங்கிய அனைத்துச் சலுகைகளையும் ஆங்கிலேயர் அனுபவித்துக் கொள்ளலாம். 3) ஆங்கிலேயரின் அனுமதி பெற்ற பொருள்களை வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய பகுதிகளுக்குத் தடையின்றி எடுத்துச் செல்லலாம். 4) கல்கத்தா தாக்கப்பட்டபோது நவாப் கைப்பற்றிய பொருட்களைத் திருப்பித் தரவேண்டும். 5) ஆங்கிலேயரின் விருப்பப்படி கல்கத்தா வில்லியம் கோட்டையை விரிவுபடுத்திப் பலப்படுத்திக் கொள்ளலாம். 6) ஆங்கிலேயர் நாணயம் அச்சடித்துக் கொள்ளலாம், சுருங்கக்கூறின், ஆங்கிலேயர் அலிநகர் உடன்படிக்கையால் தாங்கள் விரும்பியவற்றைப் பெற்றுக் கொண்டனர்.

**சந்திரநாகூர் கைப்பற்றப்படல், 1757**

வங்காள நவாப் சிராஜ்யுத்தௌலா ஆங்கிலேயருடன் வேண்டா விருப்பாக செய்து கொண்ட அலிநகர் உடன்படிக்கை அவரது உடலில் குத்திய முள்ளாக உறுத்திக் கொண்டிருந்தது. அதுமட்டுமல்ல. அவருக்கு உள்ளும் புறமும் எதிர்ப்புகளும், சதித்திட்டங்களும் உருவாகிக் கொண்டிருந்தன. எந்த நேரத்திலும் மேற்கிலிருந்து அகமது'ா அப்தாலி படையெடுக்கக்கூடிய ஆபத்து இருந்தது. எனவே ஆங்கிலேயரை நம்பாத நவாப் சந்திரநாகூரில் இருந்த பிரெஞ்சுக்காரரை நம்பினார். வடசர்க்காரிலிருந்த பிரெஞ்சு புஸ்ஸியை ஆங்கிலேயருக்கு எதிராகத் தனக்கு உதவும்படி கேட்டுக் கொண்டார். பிரெஞ்சு அதிகாரிக்கு அடைக்கலம் கொடுத்தார். நவாப் பிரெஞ்சுக்காரர்களுடன் சேர்ந்ததால் தங்களுடைய நிலை கேள்விக்குறியாகிவிடும் என்பதை அறிந்த ஆங்கிலேயர் சந்திர நாகூரைக் கைப்பற்றத் திட்டமிட்டனர். அவ்வாறே 1757 மார்ச் 23ஆம் தேதி சந்திரநாகூரைத் தாக்கிக் கைப்பற்றினர். இதனால் ஆங்கிலேயருக்கும் நவாப்புக்குமிடையேயான மோதல் தவிர்க்க முடியாததாயிற்று.

**கிளைவின் சூழ்ச்சி**

வங்காள நவாப் சிராஜ்யுத்தௌலாவின் தான்தோன்றித் தனத்தாலும், சமயப் பொறையின்மையாலும், அடக்குமுறையாலும் அவரது அதிகாரிகள் உட்பட பலரையும் பகைத்துக் கொண்டார். பகையாளிகள் நவாபுக்கெதிராக சூழ்ச்சி செய்தனர். சூழ்ச்சிக்காரர்களை ஒருங்கிணைத்தார் பிரபல பஞ்சாப் பணக்காரர் அமீசந்த் (Omichand). இச்சதிக்குத் தலைமை தாங்கினார். நவாபின் தளபதியாக இருந்தார் மீர் ஜாபர். சிராஜ்யுத்தௌலாவுக்கு பதில் மீர் ஜாபரை வங்காள நவாப்பாக்கிவிட வேண்டுமென்று சதிகாரர்கள் தீர்மானித்தனர். இந்த சதியைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டார் ராபர்ட் கிளைவ். கிளைவைப் போலவே இந்த சதியைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ள எண்ணிய அமீசந்த் 30 இலட்ச ரூபாய் லஞ்சமாகத் தராவிடில் இந்த சதியை அம்பலப்படுத்தப் போவதாக அச்சுறுத்தினார். இந்த அச்சுறுத்தலுக்கு அஞ்சாத கிளைவ் சதியை சதியால் முறியடித்தார்! இச்சூழ்ச்சியின் முடிவு பிளாசிப் போரின் தொடர்ச்சியாகும்.

**போரின் போக்கு**

1757 ஜுன் 23ஆம் நாள் சிராஜ்யுத்தௌலாவின் பெரிய படை தளபதி மீர் ஜாபரின் தலைமையில் சில பிரெஞ்சுக்காரர்களுடன் பாகீரதி நதிக்கரையில் வங்காளத்தில் நாடியா மாவட்டத்தில் மூர்ஷிதாபாத்துக்கு அருகேயுள்ள பிளாசி என்ற கிராமத்தை அடைந்தது. கட்டுப்பாடற்ற

நவாபின் படையும் நன்கு பயிற்சிபெற்ற நவீன கட்டுப்பாட்டுடன் கூடிய ஆங்கில ராணுவமும் மோதின. நவாபின் படை குன்று முட்டிய குருவி போலாயிற்று! பெருத்த நட்டத்தோடு தோல்வியடைந்தது. நவாபின் படை சதிகாரர் மீர் ஜாபரின் படைப் பிரிவு போரில் தீவிரமாகப் பங்கேற்கவில்லை! மற்றொரு தளபதி பீர்மஹின் கொல்லப் பட்டார். தளபதி மோகன்லாலும் பின் வாங்கினார். மழையில் நனைந்ததால் நவாப் படையின் பீரங்கிகள் இயங்கவில்லை! நவாப் சிராஜ்யுத்தௌலா தலைநகர் முர்ஜிதாபாத்துக்குத் தப்பிச் சென்றார் (ஜுன் 24)

பிளாசிப் போரிலிருந்து தப்பிச்சென்ற சிராஜ்யுத்தௌலா தனது ஆசை மனைவி லெட்டுன்னிசாவுடனும் ஆபரண சொத்துக்களுடனும் வழியில் பிடிபட்டார். அவரைப் பிடித்த மீர் ஜாபரின் சகோதரர் நவாபையும் அவருடன் இருந்தோரையும் முர்சிதாபாத்துக்கே திருப்பி அனுப்பி விட்டார். முர்சிதாபாத்தில் நவாப் மீர்ஜாபரின் மகன் மீரானின் தூண்டுதலால் கொலை செய்யப்பட்டார்! தாத்தா அலிவர்திகானின் ஆதரவோடு அரியணை ஏறிய சிராஜ்யுத்தௌலா ஆதரவற்ற அனாதையாகக் கொலையுண்டு மாண்டார். அத்துடன் பிளாசிப்போர் முடிவுற்றது. பிளாசிப் போரின் வெற்றிக்குக் கிளைவ் பெரிதும் காரணமாக இருந்தார்.

பிளாசிப் போரில் ஆங்கிலேயர் வெற்றி பெற்றமைக்குப் பல காரணங்கள் இருந்தன. 1) ராபர்ட் கிளைவின் தலைமை, திறமை, நிதானம். 2) ஆங்கில தளபதி அயர் கூட் (Eyre Coote) டின் தாக்குதல்கள். 3) ஆங்கிலப் படையின் கட்டுப்பாடும், துப்பாக்கிப் படையின் பலமும். 4) கடற் தளபதி வாட்சனின் உதவி. 5) நவாபின் அனுபவமின்மையும், அவரது கட்டுப்பாடற்ற இராணுவமும். 6) மீர் ஜாபர், மானிக்சந்த், ராஜா துர்லாபிராம் ஆகியோரின் துரோகம்.

**போரின் விளைவுகள்**

பிளாசிப் போர் சிறிதாயினும் அதன் வரலாற்றுச் சிறப்பு பெரிது. "பிளாசிப் போர் ஒரு சிறிய போர் ஆயினும், அதன் விளைவு உலகத்தில் உண்டான மாபெரும் போர்களின் விளைவுகளைக் காட்டிலும் அதிகமாய் இருந்தது". இதற்குக் காரணம் பிளாசிப் போரின் மூலமாக முதலில் வங்காளத்தையும், அதன்பின் படிப்படியாக இந்தியா முழுவதையும் கைப்பற்றுவதற்கு இது வழி வகுத்தது.

பிளாசிப் போரின் முக்கிய விளைவுகளாவன : 1) பழிபாவத்துக்கு அஞ்சாத வஞ்சகர் மீர் ஜாபர் வங்காள நாவாபானார். 2) ஆங்கிலக் கம்பெனி கல்கத்தாவுக்கு அருகே இருந்த 24 பர்கானாக்களின் (Parganas) ஜமீன்தாரி உரிமையைப் பெற்றது. 3) அதோடு இக் கம்பெனி பெங்கால், பிகார், ஒரிசாவில் தடையற்ற வாணிபம் செய்வதற்கான உரிமையைப் பெற்றது. 4) கம்பெனி மட்டுமின்றி கம்பெனி அதிகாரிகளும் அலுவலர்களும் தனியே நடத்தி வந்த வியாபாரத்துக்கு வரிவிலக்கும், பிற சலுகைகளையும் பெற்றனர். 5) போரால் பாதிக்கப்பட்டோருக்கு உரிய இழப்பீடு வழங்கப்பட்டது. கம்பெனி அதிகாரிகளுக்கு பெரிய தொகை அன்பளிப்பாக அளிக்கப்பட்டது. 6) கம்பெனி கல்கத்தாவில் அதன் நாணயச்சாலை அமைத்துக் கொள்ள அனுமதி பெற்றது.

**மதிப்பீடு**

பிளாசிப் போரின் மூர்த்தி சிறிதாயினும் அதன் கீர்த்தி பெரிது. இப்போர் போரேயல்ல, வெறும் சில்லரைச் சண்டை (Skirmish) தான் என்று கூறுவோரும் உண்டு. ஆங்கிலேயர் வங்காள நவாபின் வாரிசுரிமைச் சிக்கலைப் பயன்படுத்திக் கொண்டார்களேயன்றி உருவாக்கவில்லை. பிற வணிகர்களைப் போன்றே ஆங்கிலேயரும் மார்க்கத்தைவிட முடிவையே

பெரிதாகக் கருதினர். இவர்கள் இந்தியரின் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டு தங்களது பலத்தைப் பெருக்கிக் கொண்டனர். பிளாசிப் போரில் கம்பெனியின் படை முதன் முதலாக நவாபின் படையை வெற்றிகண்டது வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாகும். இப்போர் இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்துக்கு முடிவுகட்ட வழி வகுத்தது.

மீர் ஜாபர் கம்பெனியின் கைப்பாவையானதால் ஆங்கிலேயர் வங்காளத்தின் நடைமுறை (de facto) ஆட்சியாளராயினர். சென்னை பம்பாயைவிட கல்கத்தா முக்கியத்துவம் பெற்றது. ஆங்கிலேயரின் தலைமையகமாயிற்று. கம்பெனியின் வணிக விரிவாக்கமும், அரசியல் செல்வாக்கு ம் உயர்ந்தது. ஆங்கிலேயர் வங்காளத்திலிருந்து மேன்மேலும் முன்னேறி வடமேற்கில் சுலைமான், ஹாலா மலைகள் வரை விரிவடைய வழி வகுத்தது.

பிளாசிப் போர் இந்தியாவில் பிரிட்டிஷ் பேரரசு தோன்றியதன் துவக்கமாகக் கருதப்படுகிறது. பிளாசிப் போரிலிருந்துதான் ஆங்கிலேயரின் அரசியல் எழுச்சி துவங்குகிறது. இப்போருக்குப் பிறகுதான் வங்காளத்தில் சார்பாண்மை அரசுக்கு (Rule of Proxy) பதில் திவானி ஆட்சி (Rule of Diwani) ஏற்பட்டது. பிளாசிப் போருக்குப் பின் ராபர்ட் கிளைவின் பெருமையும், புகழும் பன்மடங்கு பெருகியது. எனினும் அவர்தான் இந்தியாவில் பணம் காய்க்கும் மரத்தைக் (Pagoda Tree) குலுக்கிப் பணம் பெறும் பழக்கத்தை அரசியல் கலையாக்கினார். பின்னர் வந்த இந்தியக் கிளைவ்களுக்கு இவர் முன்னுதாரணமாகத் திகழ்ந்தார்

**போருக்குப் பின்..... 1758-1763**

**ஆளுநர் கிளைவ், 1758-1760**

பிளாசிப் போரில் வெற்றிவாகை சூடிய ராபர்ட் கிளைவ் கல்கத்தா வில்லியம் கோட்டையின் ஆளுநராக நியமிக்கப்பட்டார் (1758 ஜுன்). கிளைவ் ஆளுநராக நியமிக்கப்படுவதற்கு முன்பே நவாப் மீர்ஜாபருக்கும் அவரது அதிகாரிகளுக்குமிடையேயான விவகாரங்களில் தலையிட்டு சுமுகமாகத் தீர்த்து வைத்தார். அதேபோன்று பிளாசிப் போரின் போது கிளைவுக்கு ஒத்துழைப்பு நல்கிய இந்துக்களுடன் நல்லுறவு கொண்டு அவர்களது ஆதரவையும் பெற்றிருந்தார். பொதுவாக வங்காள மக்களிடையே கிளைவுக்கு மிகுந்த மரியாதையும், மதிப்பும், செல்வாக்கும் இருந்தது. கிளைவ் ஆளுநரானவுடன் அவரது அதிகாரத்தையும், நவாபிடமிருந்து நெருக்கமான தொடர்பையும் மக்களிடையே இருந்த செல்வாக்கையும் தனது சுயநலப் பெருக்கத்துக்கும், கம்பெனியின் வளர்ச்சிக்கும் பயன்படுத்திக் கொண்டார்.

மீர்ஜாபர் பீகார், ஒரிசாவை உள்ளடக்கிய வங்காளத்தின் நவாபானபின் கருவூலம் காலியாக இருப்பதைக் கண்டார். பதவி ஆசையால் அளித்த வாக்குறுதிகளை அவரால் நிறைவேற்ற முடியவில்லை எனவே அவர் கம்பெனிக்கும், கிளைவுக்கும், பிற அதிகாரிகளுக்கும் கொடுப்பதாகக் கூறிய தொகைகளைத் தவணை முறையில் கொடுப்பதாக உறுதியளித்தார். நவாபின் இயலாமையை கிளைவும் பிற அதிகாரிகளும் நன்கு பயன்படுத்திக் கொண்டனர். பல்வேறு பிரச்னைகளால் சூழப்பட்ட நவாப் மீர்ஜாபர் ஆளுநர் கிளைவின் சூழ்நிலைக் கைதியானார். ஆட்சி அவரிடம் இருந்தபோதிலும் அதிகாரம் கிளைவிடம் இருந்தது.

**அலிகோரின் முற்றுகை, 1759**

முகலாயப் பேரரசர் ஆலம் கீரின் மூத்த மகன் அலிகோர். அவர் தன் தந்தையிடம் தகராறு செய்துகொண்டு ரோகில்கந்தில் (Rohilkhand)

வாழ்ந்து வந்தார். அவர் நவாப் மீர்ஜாபரின் பலவீனத்தைப் பயன்படுத்திக்கொண்டு வங்காளத்தைக் கைப்பற்றத் திட்டமிட்டார். இத்திட்டத்தை அதே நோக்கத்திலிருந்த அயோத்தி நவாப் ஹுஜா உத்தௌலாவும் ஊக்குவித்தார! எனவே அலிகோர் அயோத்தி நவாபின் ஆதரவோடும் பிற சிற்றரசர்களின் உதவியோடும் வந்து பாட்னாவை முற்றுகையிட்டார் (1759). இம்முற்றுகையே மிர்ஜாபரின் மகன் மீரான் எதிர்கொண்டார். மீர்ஜாபர் ஆங்கிலேயரின் உதவியை நாடினார். நவாபுக்கு ஆதரவாக ஆளுநர் கிளைவ் ஒரு பெரும் படையுடன் புறப்பட்டு வந்தார். கிளைவின் படை வருவதை அறிந்த அலிகோரின் கூட்டுப்படை பின் வாங்கிச் சென்று விட்டது. அலிகோரின் பீகார் முற்றுகை முறியடிக்கப்பட்டது. காலத்தால் செய்த உதவிக்காக நவாப் மீர்ஜாபர் கல்கத்தாவைச் சுற்றியுள்ள 24 பர்கானாக்களில் வரி வசூல் செய்து கொள்ளும் உரிமையைக் கம்பெனிக்குக் கொடுத்தார். கம்பெனி திவான் உரிமையைப் பெற்றது.

**பிடேராப் போர், 1759**

ஆங்கிலேயரின் கிடுக்கிப்பிடியிலிருந்து விடுபட விரும்பிய நவாப் மீர்ஜாபர் ஆங்கிலேயரின் வர்த்தக விரோதிகளான டச்சுக்காரர்களின் உதவியை நாடினார். சின்சுரா (Chinsura) வில் குடியேறியிருந்த டச்சுக்காரர்களைத் தொடர்பு கொண்டார். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு ஆங்கிலேயரை வங்காளத்திலிருந்து விரட்ட விரும்பினர் டச்சுக்காரர்கள்! எனவே அவர்கள் ஏழு கப்பல்களில் கங்கைக்கரைக்கு வந்தனர். இதை எதிர்பார்த்த ஆளுநர் கிளைவ் தக்க முன்னேற்பாடுகளைச் செய்திருந்தார்.

ஆங்கிலப் படை டச்சுப்படையை சந்திரநாகூருக்கும் சின்சுராவுக்குமிடையே பிடேரா (Biderra) என்ற இடத்தில் சந்தித்தன. தளபதிகள் வில்சனும் (Captain Wilson) போர்டும் (Colosal Forde) டச்சுப் படையைத் தோற்கடித்து அவர்களது கப்பல்களையும் கைப்பற்றினர். கிளைவின் சமயோசித முயற்சியால் டச்சுக்காரர்களின் திட்டம் முறியடிக்கப்பட்டது. தோல்விகண்ட டச்சுக்காரர்கள் ஆங்கிலேயருக்கு இழப்பீடு கொடுத்து, அவர்கள் வழியில் குறுக்கிடுவதில்லை என்று உறுதி கூறினர். இதன்மூலம் வங்காளத்தில் ஆங்கிலேயருக்கு இருந்த டச்சு ஆபத்து முற்றிலுமாக அகன்றது.

பிடேராப் போர் இந்தியாவின் முக்கிய போர்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இதன் மூலம் வங்காள நவாப் ஆங்கிலேயருக்கு அடங்கியிருக்க வேண்டும் என்பது உறுதி செய்யப்பட்டது. டச்சுக்காரர்களின் வர்த்தக விரோதம் முற்றிலுமாக முடிவுக்கு வந்தது. கிளைவின் பெயரும்கழும் புகழும் பன்மடங்கு உயர்ந்தது. கிளைவ் மூன்றாண்டுகளுக்குள் வங்காளத்தில் செயற்கரிய ராணுவ மற்றும் அரசியல் சாதனைகள் புரிந்து இந்தியாவில் ஆங்கிலேயரது ஆதிக்கம் நிலைபெறுவதற்கும் விரிவடைவதற்குமான முன்னேற்பாட்டைச் செய்து முடித்தார். பிடேரா வெற்றிக்குப்பின் கிளைவ் தாய்நாடு திரும்பினார் (1760),

**கிளைவுக்குப் பின், 1760-64**

ஆளுநர் கிளைவ் ஆட்சிப் பொறுப்பை ஹல்வெல் (ர்யடறநடட)லிடம் ஒப்படைத்துவிட்டு இங்கிலாந்து திரும்பினார் (1760 ஜூலை). கிளைவுக்குப் பின் வான்சிட்டர்ட் (ஏயளெவைவயசவ) ஆளுநராக நியமிக்கப்பட்டார். அடுத்த நான்கு ஆண்டுகளில் (1760-64) வங்காளம் குழப்பக்காடாகக் காட்சியளித்தது. வாக்குறுதிகளைக் காப்பாற்ற முடியாத மீர்ஜாபர் திவாலாகும் நிலைக்குத் தள்ளப்பட்டார். ராணுவத்தினருக்கு ஊதியம் வழங்கப்படாமையால் அவர்கள் கிளர்ச்சி செய்தனர். சேரவேண்டிய

தொகையைக் கொடுக்குமாறு கம்பெனி நவாபுக்கு நெருக்கடியைக் கொடுத்தது. அதுமட்டுமல்ல. கம்பெனி அதிகாரிகளும், அலுவலர்களும் சொந்த வியாபாரம் செய்து கொள்ளை லாபம் பெற்றனர். மேலும், வடமேற்கிலிருந்து முகலாயப் பேரரசர் ‘ா ஆலம் வங்காளத்தைக் கைப்பற்றத் திட்டமிட்டார். தென்மேற்கிலிருந்து மராத்தியர் ஊடுருவல் செய்தனர். துன்பங்கள் வந்தால் கூட்டமாகத்தானே வரும்? துன்ப வலைக்குள் சிக்கிய மீர்ஜாபர் ஆங்கிலேயரிடம் பாதுகாப்பு கேட்டு தஞ்சமடைந்தார

மீர்ஜாபரின் மகன் மீரான் அகால மரணமடைந்ததால் வங்காளத்தில் வாரிசுரிமைப் போட்டி ஏற்பட்டது. இப்போட்டிக்குக் காரணம் மீரான் மகனுக்கு எதிராக மீர்ஜாபரின் மருமகன் மீர்காசிம் (ஆசை முயளஅை) வாரிசுரிமை கோரியதுதான் மீர்ஜாபரின் இயலாமையையும் வாரிசுரிமைப் போட்டியையும் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டது கம்பெனி . மீர்ஜாபர் டச்சுக்காரர்களுடன் தொடர்பு கொண்டதன் மூலம் அவர் கம்பெனிக்கு விசுவாசமாகயில்லை என்பதைப் புரிந்து கொண்ட ஆளுநர் வான்சிட்டர்ட் மீர்ஜாபரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு அவரது மருமகன் மீர்காசிமை நவாப்பாக்கினார் (1760, அக். 20) மீர்ஜாபர் மிர்காசிமிடமிருந்து ஓய்வூதியம் பெற்றுக் கொண்டு ஆங்கிலேயரின் பாதுகாப்பின் கீழ் கல்கத்தாவில் தங்கியிருந்தார். பாதுகாப்பு கேட்டு வந்த மீர்ஜாபருக்கு ஆங்கிலேயர் தக்க பாதுகாப்பு அளித்தனர்

**நவாப் மீர் காசிம், 1760-63**

மீர்காசிம் பர்சிய மரபுவழி வந்தவர். வங்காள ஜாகிர்தாரின் மகன். நவாப் மிர்ஜாபரின் மகளை மணந்து கொண்டதால் அரசியல் செல்வாக்கு பெற்றார். மீர்காசிம் கற்றறிவாளர். கணிதத்திலும், ஜோதிடத்திலும் நன்கு தேர்ச்சி பெற்றவர். குறுக்கு வழியில் சென்று பொருள் சேர்க்கும் கலையைக் கற்றவர் மீர்காசிம் வங்காளத்திலிருந்த ரங்பூரின் பௌஜ்தாராக இருந்தார். இவர் ஆங்கிலேயருடன் ஒரு உடன்பாட்டுக்கு வந்து நவாப் பதவியைப் பெற்றார்.

வங்காள நவாப் என்ற முட்கிரீடம் அணிந்த மீர்காசிம் முனைப்புடன் செயல்பட்டார். அவர் வாக்களித்தபடி ஆங்கிலேயருக்கு பர்த்துவான், மிதுனபூர், சிட்டகாங் ஆகிய பகுதிகளைக் கொடுத்தார். கம்பெனி அதிகாரிகளுக்கு இரண்டு இலட்சம் பவுனைப் பரிசாக அளித்தார். படை வீரர்களுக்குக் கொடுக்க வேண்டிய சம்பள பாக்கியைத் தீர்த்தார். சிக்கன நடவடிக்கையாக பலதுறைகளிலும் பணிக்குறைப்பு செய்தார். தனது சொந்த செலவுகளையும் மட்டுப்படுத்திக் கொண்டார். ஜமீர்தார்களின் கொட்டத்தை அடக்கினார். சுருங்ககூறின், மீர்காசிம் தனது அதிகாரத்தை மீட்டு நிலைநாட்டிக் கொண்டார்.

மீர்காசிம் ஒரு வித்தியாசமான வங்காள நவாப். நவாப் ஆட்சிக்கு உட்பட்டதே ஆங்கிலக் கம்பெனி என்று கருதினார் மீர்காசிம். இவர் கம்பெனிக்குக் கட்டுப்படுவதை விரும்பவில்லை. சுதந்திரமாகச் செயல்படுவதையே விரும்பினார். இதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை எதிர்கொள்ள அவர் தன்னைத் தயார் படுத்திக் கொண்டார். வங்காளத்தின் தலைநகரை மூர்ஷிதாபாத்திலிருந்து கல்கத்தாவிலிருந்து வெகுதூரத்திலிருந்த மாங்கீருக்கு (Monghyr) மாற்றினார். அங்கு பலமிக்கக் கோட்டையைக் கட்டத் திட்டமிட்டார். மாங்கீரில் துப்பாகிகளையும், பீரங்கிகளையும், பிற ராணுவ தளவாடப் பொருட்களையும் சேமிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். படைவீரர்களுக்கு ஆங்கிலேயரைப் போன்றே நவீன போர்ப் பயிற்சி அளித்தார். சுருங்கக்கூறின் வங்காள உடலில் ஆழப் பதிந்திருந்த ஆங்கிலக் கத்தியை அகற்றத் திட்டமிட்டார் மீர்காசிம்.

மீர்காசிம் அடுத்தகட்ட நடவடிக்கையாக வங்காளத்தில் நிதிநிலையை மறுசீரமைக்க முற்பட்டார். ஆங்கிலேயர் அனுபவித்துவந்த தடையற்ற வணிக உரிமைகளுக்கும், கம்பெனி அதிகாரிகளின் வர்த்தக முறைகேடுகளுக்கும் முடிவுகட்டத் தீர்மானித்தார். எனவே, ஆங்கிலக் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டிருந்த வணிகச் சலுகைகளை சொந்த வியாபாரத்துக்காகத் தவறாகப் பயன்படுத்துவதைத் தடை செய்து உத்தரவு பிறப்பித்தார். அதுமட்டுமல்ல. ஆங்கிலேயர் ஆதரவு பெற்றிருந்த பாட்னாவின் துணையாளராக இருந்த ராம் நாராயணனை பணியிலிருந்து நீக்கிவிட்டார். நல்ல நோக்கத்தோடு மேற்கொள்ளப்பட்ட மீர்காசிமின் நடவடிக்கைகள் குளவிக்கூட்டில் கைவிட்ட கதையாயிற்று!

**பாட்னா போர், 1763**

மீர்காசிமின் நடவடிக்கைகளால் ஆத்திரமடைந்த ஆங்கிலேயர் நவாபைத் தண்டிக்கத் தீர்மானித்தனர். பாட்னாவில் இருந்த எல்லிஸ் (Ellis) நகரை எளிதில் கைப்பற்றினார் (மே 25). இதன் எதிர் நடவடிக்கையாக பாட்னாவிலிருந்து எல்லிசுக்குப் போர்த்தளவாடங்களைக் கொண்டு சென்ற சில படகுகளை மாங்கீர் அருகே நவாப் கைப்பற்றினார். இப்போரில் நவாபின் படை தோற்கடிக்கப்பட்டது (ஆகஸ்டு). இதனால் ஆத்திரமடைந்த மீர்காசிம் பாட்னா சென்று அங்கிருந்த ஆங்கிலேயரைக் கைது செய்து, ஆங்கிலேயருக்கு ஆதரவாக இருந்ததாக சந்தேகப்பட்ட இந்தியக் கைதிகளையும் கொன்று விட்டார். அதன்பின் ஆங்கிலேயரின் எதிர்ப்பை எதிர்கொள்ள முடியாத நவாப் மீர்காசிம் அயோத்தியில் அடைக்கலம் பெற்றார் (டிசம்பர்)

**மீண்டும் மீர்ஜாபர்**

பீகார் போர் நடந்து கொண்டிருக்கையில் ஆங்கிலேயரின் பாதுகாப்பில் கல்கத்தாவிலிருந்த மீர்ஜாபர் மீண்டும் வங்காள நவாப்பாக்கப்பட்டார் (ஜுலை 7)! அதற்கு விலையாக அவர் கம்பெனிக்கு 1) தடையற்ற வர்த்தகம் செய்யவும் 2) இழப்பீடு கொடுக்கவும் 3) ஆங்கில நிலையரை (Resident) நிரந்தரமாக ஏற்றுக்கொள்ளவும் இணங்கினார். அதன்படி நந்தகுமார் (Nandakumar) நிலையராக நியமிக்கப்பட்டார். ஊழலை வாழ்க்கையாகக் கொண்ட கம்பெனி அதிகாரிகளும் அலுவலர்களும் மீர்ஜாபர் இறந்தபின் நவாபான அவரது மகன் நிஜாமதுல்லா (Nijam-ud-daulah)விடமிருந்து ஏராளமான பரிசுகளைப் பெற்றுக் கொண்டனர். பணம் காய்க்கும் மரம் (Pagoda Tree) பலமாக உலுக்கப்பட்டது நவாப் நிஜாமதுல்லா அரசியல் பூஜ்யமானார்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

1. இந்தியாவில் ஆங்கில ஆதிகத்துக்கு அடிகல் நாட்டியவர் யார்?
2. அலிவர்திகரனை தொடர்ந்து வங்காள நவாபானவர் யார்?
3. அலிநகர் உடன்படிக்கை யாருக்கிடையில் நடைப்பெற்றது.
4. பிளாசிப்போர் நடைப்பெற்ற ஆண்டு?
5. சிராஜ்யுத்தெளலா என்பவர் யார்?

## 2.4 பக்சார் போர்

**பக்சார் போர், 1764**

**கூட்டமைப்புத் தோல்வி**

அயோத்திக்குத் தப்பிச்சென்ற மீர்காசிம் அயோத்தி நவாப் சூஜாஉத்தெளலா (Shuja-ud-daulah) முகலாயப் பேரரசர் ஷா ஆலம்

(Shah Alam II) ஆகியோருடன் ஒரு முத்தரப்புக் கூட்டமைப்பை (Confederacy) உருவாக்கினார். வங்காளத்தை ஆங்கிலேயரிடமிருந்து காப்பாற்றுவதே அவர்களது நோக்கமாகும். இக்கூட்டமைப்பு பாட்னாவைக் கைப்பற்ற மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்ததால் (1764 ஏப்ரல்) பீகார் சகாபத் மாவட்டத்தில் பனாரசுக்கும் பாட்னாவுக்கமிடையே கங்கைக் கரையில் அமைந்துள்ள பக்சாருக்கு (Buxar) பின் வாங்கிச் சென்றனர். பக்சாரில் நடைபெற்றக் கடுமையான போரில் தோல்வியடைந்த கூட்டமைப்புப் படை தளபதி ஹெக்டர் மன்றோ (ஆயதழச ா்நஉவழச ஆரசெழ) வின் தலைமையிலான ஆங்கிலப் படையிடம் தோற்றது (அக். 22). தோல்விடயைந்த அயோத்தி நவாப் ஷுஜாஉத்தௌலா ரோகில் கண்டுக்குத் தப்பிச் சென்றார். அனைத்தையும் இழந்த மீர்காசிம் வடமேற்கு நோக்கி ஓடி மறைந்தார். பக்சார் போர் முடிந்தவுடன் முகலாயப் பேரரசர் இரண்டாம் ஷா ஆலம் ஆங்கிலேயர் பக்கம் சேர்ந்து கொண்டார். ஆங்கிலேயர் சுனாரை (Chunar) யும், அலகாபாத்தையும் கைப்பற்றிக் கொண்டனர்.

**வரலாற்றுச் சிறப்பு**

பக்சார் போர் வரலாற்றுச் சிறப்புமிக்கது. சிறிய போராயினும் பல பெரிய படிப்பினைகளைக் கொடுத்தது. 1) கம்பெனிப்படை கூட்டுப்படையை வெற்றி கண்டது. முப்படைகளையும் வென்றதால் ஆங்கிலேயரின் ராணுவ பலம் ஐயத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டது. 2) பிளாசிப் போரில் ஆங்கிலேயரின் அதிகாரம் இந்தியாவில் நிலை பெறுவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது என்றால் பக்சார் போரில் அந்த அடிக்கல்லைக் கொண்டு அடித்தளமே அமைக்கப்பட்டது எனலாம். இரு போர்களுமே இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி உருவாகுவதற்குக் காரணமாய் இருந்தன. 3) ஆங்கிலேயருக்கு எதிரான ராணுவக் கூட்டமைப்பு சுயநல சந்தர்ப்பவாதக் கூட்டணி என்பது தெளிவாயிற்று. மீர்காசிம், அயோத்தி நவாப், முகலாயப் பேரரசர் ஆகிய மூவரும் தங்களது சொந்த லாபத்துக்காக இக்கூட்டமைப்பைப் பயன்படுத்திக் கொண்டனர். தனது பதவியைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்பிய மீர்காசிம், வங்காளத்திலிருந்து ஆங்கிலேயரை விரட்டிவிட்டு அந்த இடத்தைப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்ட அயோத்தி நவாப், அதிகாரமில்லாவிட்டாலும் ஆட்சிபீடத்தில் அமர்ந்திருந்த முகலாயப் பேரரசர் ஆகிய மூன்று பேராசைக்காரர்களின் கனவுகளையும் இப்போர் கலைத்துவிட்டது. 4) இந்த வெற்றியினால் பிரிட்டிஷ் அதிகாரமும் ஆட்சியும் வேரூன்றுவதற்குக் காரணமாக இருந்தமையால் பக்சார் போர் இந்திய வரலாற்றில் பிளாசிப் போரைவிட முக்கியமானதாகும் 5) பக்சார் போரின் விளைவாக அயோத்தி நவாபும், முகலாயப் பேரரசரும் ஆங்கிலேயருக்குப் பணிந்தனர். அயோத்தியில் அரசியலிலும், வருவாயிலும் ஆங்கிலேயருக்குப் பங்கு கிடைத்தது. 6) யாவற்றுக்கும் மேலாக, பிரிட்டிஷ் அதிகாரமும் ஆதிக்கமும் கல்கத்தாவிலிருந்து டெல்லிவரை விரிவடைய பக்சார் போர் வழி வகுத்தது.

**மீர்காசிம் : ஒரு மதிப்பீடு**

அலிவர்திகானுக்குப் பின்னர் வந்த திறமையான வங்காள நவாப் மீர்காசிம். இவரது தொலைநோக்கும், அரசியல் நுட்பமும், ஆட்சித்திறமையும் பாராட்டுக்குரியவை. வங்காள அரசியலில் கட்டுப்பாடும், அமைதியும், மக்கள் நல்வாழ்வும் நிலவ வேண்டும் என்று விரும்பியவர். அதேபோன்று ஆங்கிலேயரால் சீர்குலைந்து போயிருந்த பொருளாதாரத்தை மறுசீரமைக்க முனைந்தவர். காலியாக இருந்த கருவூலத்தை நிரப்பியவர். வங்காள வியாபாரிகளும், கம்பெனியின் வர்த்தகர்களும் சமநிலையில்

செயல்பட வேண்டும் என்பதற்காகக் கம்பெனி அதிகாரிகளும் அலுவலர்களும் அனுபவித்துவந்த முறைகேடான சலுகைகளைத் துணிவுடன் நீக்கியவர். நவாபின் ஆட்சிக்கு உட்பட்டவர்களே ஆங்கிலேயர் ஆங்கிலேயர் ஆதிக்கத்துக்கு அடங்கியவர் அல்ல நவாப் என்ற எண்ணத்தில் உறுதியாக இருந்தவர். வால் நாயை ஆட்டக் கூடாது என்ற கருத்தைக் கொண்டவர். வங்காளத்தின் சுயாட்சியை (Autonomy) மீட்கப் பாடுபட்டவர். அதற்காக ஆங்கிலயரைப் பகைத்துக் கொண்டவர். ஆங்கிலேயரைத் தனியாக எதிர்க்க முடியாது என்பதை அறிந்த மீர்காசிம் ராணுவக் கூட்டமைப்பை உருவாக்கினார். அவர் அமைத்த கூட்டமைப்பு அவர் காலத்துக்கும் மிஞ்சிய திறமையான ஓர் இராஜ தந்திரத்தையே காட்டுகிறது.

மீர்காசிம் வல்லவரேயன்றி நல்லவரல்லர். அவரிடம் பல தீய குணங்கள் குடி கொண்டிருந்தன. அவநம்பிக்கை அவரது உடன்பிறப்பு. அவர் தனது தளபதிகளையும், அதிகாரிகளையும் கூட நம்புவதில்லை! விரோதிகளைத் துன்புறுத்துவதிலும், தண்டிப்பதிலும் கொலை செய்வதிலும் இரக்கமற்ற அரக்கர். படையை நடத்தும் திறமை அவருக்கில்லை. ஆங்கிலேயரை அவர் வழிக்குக் கொண்டுவரும் ஆற்றலும் அவரிடம் காணப்படவில்லை. எனினும், மீர்காசிம் வங்காளக்தின் சுதந்திரத்துக்காகப் போராடிய போராளி என்பதில் ஐயமில்லை

**பிளாசிப் போர் - பக்சார் போர் : ஒரு ஒப்பீடு**

| பிளாசிப் போர் (1757) | பக்சார் போர் (1764) |
|---|---|
| வங்காள நவாபைக் கைப்பாவை யாக்கிக் கொள்ள சூழ்நிலை காரணமாக இருந்தது. | ஆங்கிலேயர் ஆட்சியை நிலைப்படுத்திக் கொள்வதற்கான சூழ்நிலை உருவாக்கப்பட்டது. |
| வங்காள நவாப் மட்டும் தோற்கடிக்கப்பட்டார் | முத்தரப்புக் கூட்டுப்படை தோற்கடிக்கப்பட்டது. |
| ஆங்கில ஆட்சி நிலைபெறு வதற்கான ஒத்திகை | அதற்கான முழு நாடகம் |
| அரசியல் சூழ்ச்சி, துரோகத்தின் வெற்றி | தலைமைப் போட்டிக்கான திட்டமிட்ட நேரடிப் போர் |
| நவாப் மட்டும் அதிகாரம் இழந்தார | நவாப், அயோத்தி அரசர், முகலாயப் பேரரசர் ஆகிய மூவரும் அதிகாரமிழந்தனர். |
| ஆங்கிலப் படை சிறிது | கூட்டுப்படை பெரியது. |

## 2.5 இராபர்ட் கிளைவின் ஆட்சி, 1765 - 67

**மீண்டும் கிளைவ், 1765**

பிளாசிப் போருக்குப்பின் 1760ல் இங்கிலாந்து திரும்பிய ராபர்ட் கிளைவ் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் கல்கத்தா கம்பெனியின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். கிளைவ் தாய்நாட்டிலிருந்து திரும்பிய பிறகு மீர்ஜாபருக்குக் கட்டாய ஓய்வு கொடுக்கப்பட்டு அவரது மருமகன் மீர்காசிம் வங்காள நவாபாக்கப்பட்டார் (1760-64). அவருக்கும் ஆங்கிலேயருக்குமிடையேயான சர்ச்சைகள் பக்சார் போரில் முடிந்தன (1764). திரும்பவும் மீர்ஜாபர் நவாபானார்! மீர்ஜாபர் இறந்தபின் அவருடைய மகன் நஜும்உத்தௌலா நவாப் பொறுப்பேற்றார் (1765). அவரது திறமையற்ற ஆட்சியின் கீழ் வங்காளம் குழப்பக் காடாயிற்று! இக்குழப்பத்துக்கு முடிவு கட்டுவதற்காக ராபர்ட் கிளைவ் மீண்டும் ஆளுநராக 1765 மே மாதம் ஆளுநர் பொறுப்பேற்று 21 மாதங்கள் (1765 மே யிலிருந்து 1767 ஜுன் 29 வரை) ஆட்சி செய்தார்.

**அலகாபாத் உடன்படிக்கைகள், 1765**

ராபர்ட் கிளைவ் ஆளுநர் பொறுப்பேற்றவுடன் அலகாபாத்துக்கு நேரில் சென்று (ஆகஸ்டு) முகலாயப் பேரரசர் இரண்டாம் ஷா ஆலத்தை சந்தித்து அவருடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார். அதேபோன்று அயோத்தி நவாப் ஷுஜாஉத்தௌலாவுடன் மற்றொரு உடன்படிக்கை செய்து கொண்டார். இந்த இரண்டு உடன்படிக்கைகளும் அலகாபாத் உடன்படிக்கைகள் (Treaties of Allahabad) என்று அழைக்கப்படுகின்றன.

முகலாயப் பேரரசருடன் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி வங்காளம், பீகார், ஒரிசாவின் பெரும் பகுதியில் கம்பெனி நிரந்தரமாக வரிவசூல் செய்துகொள்ளும் திவானி (Diwani) உரிமை வழங்கப்பட்டது. 2, வட சர்க்கார்களின்மீது கம்பெனிக்கு இருந்த உரிமை உறுதி செய்யப்பட்டது. 3) இதற்கு ஈடாக முகலாயப் பேரரசருக்கு ஆண்டு தோரும் 26 இலட்சம் ரூபாய் கொடுக்கப்படும். 4) கம்பெனிக்குக் கொடுக்கப்பட்ட திவானி மாநிலங்களின் நிர்வாகச் செலவுக்காக (Nizamat) 53 இலட்ச ரூபாய் வழங்கப்படும். 5) முகலாயப் பேரரசர் கம்பெனியின் பாதுகாப்பில் இருப்பார். 6) தமிழ்நாட்டில் ஆர்க்காட்டு நவாபின் சுதந்திரம் அங்கீகரிக்கப்பட்டது. அயோத்தி நவாபுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி 1) அயோத்தி நவாப் அலகாபாத்தையும் கோராவையும் முகலாயப் பேரரசர் ஷா ஆலமிடம் ஒப்படைக்க வேண்டும். 2) கம்பெனிக்குப் போர் இழப்பீட்டுத் தொகையாக 50 இலட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும். 3) பெனாரஸ் ஜமீன்தார் பல்வந்த்சிங் அவருடைய நிலத்துக்கு அதிபராக இருந்து கம்பெனிக்குத் தேவைப்படும்போது ராணுவ உதவி செய்ய வேண்டும். 4) அதற்கு பதில் அயோத்தி நவாப் அயோத்திக்கு அதிபராக நீடிப்பார். 5) அயோத்தியின் எல்லையை வெளியார் படையெடுப்பிலிருந்து காப்பாற்ற கம்பெனி ராணுவ உதவி செய்யும். 6) அயோத்தி கம்பெனிப் பகுதிகளோடு எக்காரணத்தைக் கொண்டும் இணைக்கப்பட மாட்டாது.

**வரலாற்றுச் சிறப்பு**

அலகாபாத் உடன்படிக்கைகள் வரலாற்றுச் சிறப்புமிக்கவை. நில ஆக்கிரமிப்புக்காகப் போரிடுவது ஆபத்தானது என்பதை உணர்ந்த கிளைவ் நடைமுறை சாத்தியமான புதிய பாணித் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார். படைபலம் இருந்தும் கிளைவ் பணிவோடு செயல்பட்டது அவரது முன்மாதிரிக்கான எடுத்துக்காட்டாகும். கிளைவின் போர் தவிற்புக் கொள்கையும், அண்டை நாடுகளுள் விவகாரத்தில் தலையிடாமையும், வங்காள நவாபியை மட்டும் தக்க வைத்துக் கொண்டதும் போன்றவை கிளைவின் அரசியல் விவேகத்துக்கான சான்றுகளாகும். அயோத்தியை இடைக்கிடை நாடா (Buffer State)க்கியது அவரது தூரப்பார்வைக்கு உதாரணமாகும். அதாவது கிளைவ் சூழ்நிலையைக் கைவசப்படுத்திக் கொண்டு, நிகழ்காலத்தைத் தன்வயப்படுத்திக் கொண்டு எதிர்காலத்தைப் பார்த்தார். இதன் மூலம் கிளைவ் பிரிட்டிஷ் ஆதிக்கம் இந்தியாவில் நிலைபெறுவதற்குக் காரணகர்த்தாவாக இருந்தார். கிளைவை சந்தர்ப்பவாத அரசியல்வாதி என்று கூறுவோரும் உண்டு. இருப்பினும் அவர் வங்காளத்தில் திவான் உரிமையைப் பெற்றது கம்பெனி இந்திய அரசியலமைப்பு வரலாற்றில் நிரந்தர இடத்தைப் பிடித்துவிட்டது. சுருங்கக் கூறின் 1765ஆம் ஆண்டு ஆங்கில இந்திய வரலாற்றில் சிறப்புமிக்க திருப்பு முனையாகும். அதற்குக் காரணமாக இருந்தவர் ராபர்ட் கிளைவ்.

**கிளைவின் சீர்திருத்தங்கள்**

ராபர்ட் கிளைவ் சீர்திருத்தவாதி அல்லர். ஆனால் அவர் வங்காளத்தில் சீர்திருத்தம் செய்வதற்காக இரண்டாவது முறையாக அதிக அதிகாரங்களுடன் ஆளுநராக நியமிக்கப்பட்டார். இவரது 21 மாத கால குறுகிய ஆட்சிக் காலத்தில் பல சீர்திருத்த நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தினார்.

**நிர்வாக சீர்திருத்தம்**

கிளைவ் முதலில் தன் நிர்வாக வீட்டைச் சுத்தப்படுத்தும் பணியில் முனைப்புடன் ஈடுபட்டார். இதற்காக அவர் மூன்று முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டார். 1) கம்பெனி அதிகாரிகளும், அலுவலர்களும் கம்பெனி வேலையை மட்டும் பார்க்க வேண்டும். சொந்த வியாபாரத்தில் பங்கேற்கக் கூடாது. இதன் மூலம் ஒருவர் ஒரு வேலையை மட்டும் பார்க்க வேண்டும் என்ற நிர்வாகக் கட்டுப்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டது. 2) நிர்வாகக் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டது. 3) கம்பெனிப் பணியாளர்கள் நவாபிடமிருந்தும், ஜமின்தார்களிடமிருந்தும், பொது மக்களிடமிருந்தும் இனாம், பரிசு என்ற பெயரில் கையூட்டு பெறக் கூடாது. எக்காரணத்தை முன்னிட்டும் பரிசுகள் பெறுவதில்லை என்று உறுதிமொழிப் பத்திரத்தில் கம்பெனி ஊழியர்களிடமிருந்து கையொப்பம் பெறப்பட்டது

**வர்த்தக சீர்திருத்தம்**

கம்பெனிப் பணியாளர்களின் ஊதியம் மிகக் குறைவாக இருந்தமையால் அவர்கள் சொந்த வியாபாரம் செய்து தங்களது வருவாயைப் பெருக்கிக் கொண்டனர். இதற்கு கிளைவ் தடை விதித்தார். கம்பெனி ஊழியர்களின் ஊதியத்தை உயர்த்த வேண்டும் என்று இயக்குநர்களுக்குப் பரிந்துரை செய்தார். கிளைவின் பரிந்துரையை மேலதிகாரிகள் ஏற்காமையால் மாற்று ஏற்பாடாக வர்த்தகக் கழகம் (ளுழஉநைவல ழக வுசயனந) ஒன்றைத் தோற்றுவித்தார் கிளைவ். இக்கழகத்திற்கு உப்பு வியாபாரம் செய்வதற்காக சிறப்புரிமை கொடுக்கப்பட்டது. இக்கழகத்தில் அரசுப் பணியாளர்களும், இராணுவ அலுவலர்களும் பங்கேற்க அனுமதிக்கப்பட்டனர். இத்திட்டத்தின் படி உப்பு வர்த்தகத்தால் கிடைத்த லாபத்தை அவரவர் சங்கப் பங்குக்கேற்பப் பங்கிட்டுக் கொள்வதற்கு வழி வகுக்கப்பட்டது. இதனால் வர்த்தகக் கழக உறுப்பினர்களுக்கு நல்ல வருமானம் கிடைத்தது.

**ராணுவ சீர்திருத்தம்**

ராபர்ட் கிளைவ் கம்பெனி ராணுவத்தை மறுசீரமைத்தார். ஐரோப்பியர்களையும், அவர்களது எண்ணிக்கைகேற்ற விகிதத்தில் இந்திய சிப்பாய்களையும் கொண்ட 3 படைப் பிரிவுகளை (Brigades) அமைத்தார். இவை முறையே மாங்கிர், அலகாபாத், பங்கீபூர் ஆகிய இடங்களில் நிறுத்தப்பட்டன. அடுத்து கிளைவ் படை வீரர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த இரட்டைப் படி (Double Batta)யில் ஒன்றைக் குறைத்தார்! போரில் பங்கேற்காதவர்களுக்கும், பண்டகசாலைகளில் பணி செய்தவர்களுக்கும் கொடுக்கப்பட்டு வந்த மானியம் நிறுத்தப்பட்ட்து. கிளைவின் இந்நடவடிக்கைகளை எதிர்த்து முப்படைப் பிரிவினரும் ராபர்ட் பிளெட்சர் (Sir Robert Fletcher) என்பவரது தலைமையில் கிளர்ச்சி செய்தார்! அனைவரும் பதவி விலகினர்! இவர்களது பதவி விலகல் கடிதங்களை ஏற்றுக் கொண்ட கிளைவ் சென்னையிலிருந்து அதிகாரிகளையும், அலுவலர்களையும் வரவழைத்து கிளர்ச்சியை முறியடித்தார். பிளெட்சரும் பிற முன்னணி கிளர்ச்சிக்காரர்களும் பதவி நீக்கம் செய்யப்பட்டனர். பிறர் மன்னிக்கப்பட்டனர். ஆளுநரை எதிர்ப்பது ஆபத்து என்பதைப் படைப்பிரிவினர் புரிந்துகொண்டனர்.

## 2.6 இரட்டை ஆட்சி முறை

பக்சார் போருக்குப்பின் ஆங்கிலேயர் வங்காளத்தில் நடைமுறை (de facto) ஆட்சியாளர்களாயினர். சட்டப்படியான (de jure) ஆட்சியாளரான நவாப் கம்பெனியின் கைப்பாவையானார். ஆளுநர் கிளைவ் ஆட்சி அதிகாரத்தை இரண்டாகப் பிரித்து ஒன்றைக் கம்பெனிக்கு வைத்துக்கொண்டு மற்றதை நவாபிடம் ஒப்படைத்தார். இந்த அதிகாரப் பிரிவுகளைத் திட்டப்படி திவானி (Diwani - வரி வசூல்) மற்றும் நிசாமத் (Nizamat காவல்துறை, நிதி) அதிகாரங்களைக் கம்பெனி மேற்கொண்டது. வங்காளத்தில் சட்டம், ஒழுங்கைப் பராமரிக்கும் அதிகாரம் நவாபுக்கு அளிக்கப்பட்டது. கம்பெனி கொடுக்கும் நிதி மற்றும் ராணுவ உதவியுடன் நவாப் அவரது அதிகாரத்தை செலுத்த வேண்டும். அதாவது உண்மையான ஆட்சி அதிகாரம் கம்பெனியின் கையிலும், ஆட்சி நடத்தும் பொறுப்பு நவாபிடமும் இருந்தன. இந்த ஏற்பாடே இரட்டை ஆட்சி (னுயைசஉால ழச னுழரடிடந புழஎநசஅநவெ) என்று அழைக்கப்படுகிறது.

### நன்மை, தீமைகள்

கிளைவ் அறிமுகப்படுத்திய இரட்டை ஆட்சியால் சில நன்மைகள் கிடைத்தன. 1) ஆங்கிலேயர் பொறுப்புடன் நடந்து கொள்வதற்கான சூழல் உருவாக்கப்பட்டது. 2) ஆங்கிலேயர் மேற்கொண்ட முறைகேடுகளும், மோசடிகளும் குறைந்தன. 3) ஆங்கிலேயருக்கும் நவாபுக்குமிடையேயான சச்சரவுகளும் சண்டைகளும் மட்டுப்படுத்தப்பட்டன. 4) வங்காளத்தில் நிலவி வந்த குழப்பத்துக்குத் தீர்வு காணப்பட்டது. 5) வங்காள ஆட்சிப் பரிசோதனை பிற மாகாணங்களுக்கும் விரிவடைவதற்கு வழிவகுத்தது. 6) வரி நிர்வாகமும், நீதி நிர்வாகமும் மறுசீரமைக்கப்பட்டன.

இரட்டை ஆட்சியால் கிடைத்த நன்மைகளைப் போன்று அதன் தீமைகளும் வெளிப்பட்டன. 1) ஆங்கிலயரிடம் அதிகாரம் இருந்தது் பொறுப்பில்லை. இதேபோன்று நவாபிடம் பொறுப்பு இருந்தது் அதிகாரம் இல்லை. எனவே ஆங்கிலேயரின் பொறுப்பற்ற அதிகாரம் மோசமான முன்மாதிரியை ஏற்படுத்தியது. 2) வரி வசூலிக்கும் பொறுப்பைக் கம்பெனி இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைத்ததால் ஜமீன்தார்களும், பிற அதிகாரிகளும் மக்களைத் துன்புறுத்தி பெரும் பொருள் பெற்றனர். 3) வருமானத்தைப் பெருக்குவதற்காக மேன்மேலும் வரிகள் கூட்டப்பட்டதால் மக்களின் வரிச்சுமை அதிகரித்தது. 4) பொருள் உற்பத்தியும், பொருட்களின் விலையும் கட்டுப்படுத்தப்பட்டதால் நெசவாளர் போன்றோர் பெரிதும் பாதிக்கப்பட்டனர். வங்காள வாணிபம் வாடியது் விவசாயம் தேக்கமடைந்தது. 5) வருவாயை மையமாகக் கொண்ட கம்பெனியின் கொள்ளை லஞ்சத்துக்கும், நோய்க்கும் வழி வகுத்தது. 6) இங்கிலாந்து அரசாங்கம் வங்காளக் கம்பெனியின் வருவாயின் கணிசமான தொகையைப் பெற்றுக் கொண்டதால் இந்தியக் கம்பெனியின் செலவு பன்மடங்கு அதிகரித்தது. இதனால் ஏற்பட்ட நிதி நெருக்கடியால் மக்கள் நலன் புறக்கணிக்கப்பட்டது. வழிப்பறி, களவு, கொள்ளை, கொலைகள் அதிகரித்தன.

### திறனாய்வு

ராபர்ட் கிளைவ் கொண்டு வந்த இரட்டை ஆட்சி முறை மிகுந்த சர்ச்சைக்குள்ளாகியது. ஆளுநர் கிளைவ் வங்காளம், பீகார், ஒரிசா ஆகியவற்றின் முழு நிர்வாகப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளாமையால் நடைமுறைச் சிக்கல்கள் பல ஏற்பட்டன. அதற்குக் காரணம் கிளைவ் ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்வதற்கும், ஆட்சியை நடத்துவதற்குமிடையே ஒரு புதிய பரிசோதனையைச் செய்ததேயாகும். இதை நடைமுறை

சாத்தியமான ஆட்சிக்கலை (Practical State Craft) என்று கூறுவோரும் உண்டு

திவானி அதிகாரத்தைத் தங்கள் வசம் வைத்துக் கொண்டு நவாபை ஆட்சி செய்யச் சொன்னது கால்களைக் கட்டிவிட்டுக் கடலில் நீந்தச் செய்தது போலாயிற்று! நவாப் வரிவசூல் செய்வதற்கு உதவியாக பீகாரில் ராஜா சிட்டாப் ராயும் (Raja Shitab Ray) வங்களாத்தில் முகமது ராசாகாணும் (Muhammad Raza Khan) துணை திவான்களாக நியமிக்கப்பட்டதைத் தவிர கம்பெனி வரி வசூல் செய்வதற்கு வேண்டிய அதிகாரத்தை அளிக்கவில்லை! அதிகாரமற்ற ஆட்சியை நவாபுக்கும், பொறுப்பற்ற பயனைக் கம்பெனியும் பகிர்ந்து கொண்ட இந்த விசித்திரமான இரட்டைத்தலை நிர்வாகம் 1772 வரை நீடித்தது.

**குற்றவாளிக் கூண்டில் கிளைவ்**

**குற்றச்சாட்டுகள்**

இரண்டாவது முறையாக வங்காள ஆளுநராயிருந்து ஓய்வு பெற்று தாய்நாடு திரும்பிய ராபர்ட் கிளைவ் (1767 ஜூலை) பிரான்சில் சில மாதங்கள் பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பாராளுமன்ற உறுப்பினர் . கிளைவ் மீது பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. அவற்றுள் முக்கியமானவை மூன்று : 1) முறைகேடாக கீ 234,000 பெற்றார் 2) அமீன்சந்தை ஏமாற்றுவதற்காக் கள்ளக் கையெழுத்து வாங்கியது 3) இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்குக் கொண்டு வந்த செல்வத்தில் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்தது. இக்குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்காக தளபதி பர்காயின் (Colonel Burgoyne) தலைமையில் 31 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு பொதுக்குழு (Select Committe) அமைக்கப்பட்டதுகிளைவ் மீது சுமத்தப்பட்டக் குற்ற விசாரணையின் போது பாராளுமன்றம் குற்றவாளிக் கூண்டைப் போல் காட்சியளித்தது.

**கிளைவின் பதில்**

ராபர்ட் கிளைவ் தன்மீது சுமத்தப்பட்ட குற்றங்களை மறுத்து கேட்டோர் பிணிக்கும் பதிலுரை நிகழ்த்தினார். அப்போது அவர் வாட்சன் கையெழுத்துக்கு பதில் தான் கையொப்பமிடவில்லை என்றும், அந்த சூழ்நிலையில் தான் நடந்து கொண்டது சரியே என்றும் நியாயப்படுத்தினார். அமீன்சந்த் என்ற வஞ்சகனை வஞ்சகத்தால் வென்றதாகக் கூறினார். அதுபோன்ற சூழ்நிலை ஏற்பட்டால் மீண்டும் அவ்வாறே நடந்து கொள்வேன் என்றார். பரிசுகள் பெறுவதற்கு எதிராக எந்த சட்டமும் இல்லை என்பதை எடுத்துக் காட்டினார். பிளாசிப் போருக்குப் பின் வங்காள நவாபும், ஜமீன்தார்களும், செல்வந்தர்களும், வர்த்தகர்களும் தங்களது செல்வங்கள் அனைத்தையும் தன் காலடியில் சமர்ப்பிக்கத் தயாராக இருந்ததாகவும், அவற்றுள் ஒரு சிறு பகுதியை மட்டும் பரிசாகப் பெற்றுக் கொண்டதாகவும், அப்போது தனது தன்னடக்கத்தைப் பற்றித் தானே வியந்து நின்றதாகவும் குறிப்பிட்டார். பிரிட்டி‘ பேரரசுக்காகப் பாடுபட்ட ஒருவரை ஆடு திருடிய கள்வனைப் போன்று விசாரிக்கிரீர்களே என்று மனம் நொந்து பேசினார்.

**விசாரணை முடிவு**

கிளைவுக்கு எதிரான விசாரணை முடிந்தவுடன் 1772 மே மாதம் விசாரணைக் குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டது. அந்த அறிக்கை பற்றிய தீர்மானத்தை குழுத்தலைவர் தளபதி பர்காயின் முன்மொழிந்தார். அத்தீர்மானத்தில் கிளைவ் வங்காள நவாபிடமிருந்து கீ 2,34,000 இனாமாகப் பெற்றுக் கொண்டார் தனக்கிருந்த அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தியதோடு, அவரிடமிருந்த பிற கம்பெனிப்

பணியாளர்களையும் கையூட்டு பெறும் வழக்கத்துக்கு வழிவகுத்தார் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இத்தீர்மானத்தின் முற்பகுதி ஏற்றுக் கொள்ளப்பட்டு, பிற்பகுதி நிராகரிக்கப்பட்டது. கிளைவின்மீது சுமத்தப்பட்ட ஆதாரமற்ற அபாண்டமான குற்றச்சாட்டுகள் விலக்கிக் கொள்ளப்பட்டன. கிளைவ் நவாபிடமிருந்து பெற்ற பொருளைவிட அவர் தாய் நாட்டுக்குச் செய்த சேவையும், பிரிட்டி' பேரரசு இந்தியாவில் நிலைபெறச் செய்வதற்கு மேற்கொண்ட முயற்சியும் பெரிது என்று பதிவு செய்யப்பட்டது. எனினும், தனது நடத்தைமீது கற்பிக்கப்பட்ட களங்கத்தைப் பொறுத்துக்கொள்ள முடியாத ராபர்ட் கிளைவ் உடல்நலமும், மனநலமும் குன்றி 1774 நவம்பர் மாதம் தற்கொலை செய்து கொண்டார்

**மதிப்பீடு**

ராபர்ட் கிளைவ் வரலாற்று மாமனிதர்களில் ஒருவர். செயற்கரிய சாதனையாளர். அவரது எழுச்சியும், வீழ்ச்சியும் அவருக்குப்பின் வந்த ஆட்சியாளர்களுக்குப் பல படிப்பினைகளைத் தரக் கூடியவை. ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியில் சென்னையில் எழுத்தராகத் தன் பணியை துவங்கி, ராணுவத் தளபதியாகப் பல சாதனைகள் புரிந்து, இருமுறை வங்காள ஆளுநராகப் பணியாற்றி தற்கால இந்திய வரலாற்றில் தன் காலடிகளைப் பதித்துச் சென்றவர் கிளைவ். தலைமைத் திறன் கிளைவ் மாவீரர். அவரது ராணுவ தலைமைத்திறன் வியப்புக்குரியது. அவர் சொர்க்கத்தில் பிறந்த தளபதி என்று பாராட்டப்பட்டார். கிளைவ் ஆர்க்காட்டை சந்தா சாகிபிடமிருந்து கைப்பற்றியதும் (1757), கல்கத்தாவை மீட்டதும், பிளாசிப் போரில் வெற்றி பெற்றதும், மீர்ஜாபரை மீண்டும் நவாபாக்கியதும் அவரது ராணுவ ராஜதந்திரத்துக்கும், மாக்கியவில்லியத் தலைமைக்குமான எடுத்துக்காட்டுகளாகும். கிளைவின் ராணுவத் தலைமைத் திறமை கர்நாடகப் போர்களிலும், வங்காளத்தில் மேற்கொண்ட ராணுவச் சீரமைப்பு நடவடிக்கைகளிலும் தெளிவாக வெளிப்பட்டது. கிளைவின் ராணுவ நடவடிக்கைகளைப் பற்றி ஆராய்ந்தவர்கள் அவற்றில் சிறப்பான போர் உத்திகள் எதுவுமில்லை என்று கூறினர். எனினும் கிளைவின் போர்க்குணம், போரை முன் கொண்டு செல்லும் ஆளுமைத்திறன், தோல்விகண்டு துவளாமை, நெருக்கடி நேரத்தில் நிதானம், பின்வாங்கி முன்செல்லும் உத்தி, வெற்றி வெறி, தடைகள் தாண்டி முயற்சித்தல், போரின் பயன்களை முழுமையாக அடைதல் போன்ற கிளைவுடைய குணங்கள் பாராட்டுக்கும், போற்றுதலுக்கும் உரியவை. மெக்காலேயின் வார்த்தைகளில் கூற வேண்டுமாயின் ராபர்ட் கிளைவின் தளபதி திறமை பிர'ய மாமன்னர் பிரெடெரிக்கின் பாராட்டுதலைப் பெறத்தக்கது.

**அரசியல் ஆளுமை**

ராபர்ட் கிளைவிடம் வங்காளத்தைப் பற்றிய தெளிவான தொலைநோக்கு இருந்தது. பிரிட்டிஷ் முடியாட்சியின்கீழ் இந்தியாவில் நிலப்பகுதிகள் இருக்க வேண்டியது இன்றியமையாதது என்று பிரிட்டிஷ் அரசுக்கும் பரிந்துரை செய்தார் (1759, 1772), இந்த இலட்சியத்தை அடைவதற்காக அவர் பல நடைமுறை சாத்தியமான குறுகிய காலத் திட்டங்களை நடைமுறைப்படுத்தினார் பல குறுக்கு வழிகளில் சென்றார். மார்க்கத்தைவிட முடிவே முக்கியம் என்று கருதினார். இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சியை மையமாகக் கொண்டு சிந்தித்துச் செயல்பட்டார். பொது வாழ்க்கையில் அவசியமானவை எவை, அவசியமற்றவை எவை என்று பகுத்தறியக்கூடிய அரசியல் விவேகம் கிளைவுக்கு இருந்தது. எடுத்துக் கொண்ட பிரச்னையின் மையப் பகுதிக்குச் சென்று தீர்வு கண்டார். அதனால்தான் அவர் பிரெஞ்சு அரசியல் மேதையான டூப்ளேயைப் புறம் காண முடிந்தது. பிளாசிப் போரில் வெற்றி பெறுவது சாத்தியமாயிற்று. வங்காளத்தின் முதல் ஆளுநராக இருந்த போது பணப் பித்தராக இருந்த

கிளைவ் இரண்டாவது ஆளுநர் ஆட்சிக் காலத்தில் தன் சொந்தப் பணத்தை 6,000 பொதுக் காரியங்களுக்குச் செலவிட்ட பெருந்தன்மையான பரோபகாரியாகத் திகழ்ந்தார்.

**குணக்கேடு**

ஒரு அரசியல் தலைவருக்கு வீரமும், விவேகமும், வேகமும் இருந்த போதிலும் அவரது குணக்கேடுகள் கரைக்க முடியாத களங்கத்தை ஏற்படுத்திவிடும். நடத்தைக் கேடுகளின் காரணமாகத்தான் கிளைவ் ஒழுக்கத் தொழுநோயாளி (Moral Leper) என்று வர்ணிக்கப்பட்டார்! குதிரை ஒட்டுண்ணி என்று கண்டிக்கப்பட்டார். கிளைவ் அரசியல் ஆதாயம் பற்றி அறிந்த அளவுக்கு அரசியல் அறம் பற்றி அறியாதவர். கிளைவின் ஒழுக்க ஓட்டைகள், நடத்தைக் கேடுகள் அவரது சாதனைகளைத் திரையிட்டு மறைத்துவிட்டன. ஊழல்வாதி நேர்மையான நிர்வாகத்தை நடத்த முடியாது என்பதற்கு கிளைவின் இரட்டை ஆட்சியே எடுத்துக்காட்டாகும்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

6. பக்சார் போர் யாருக்கும் யாருக்கும் இடையே எந்த ஆண்டு நடைபெற்றது?
7. பக்சார் போரில் ஆங்கிலேய படையின் தலைமை தளபதியாக பணியாற்றியவர் யார்?
8. வங்காளத்தில் இரட்டை ஆட்சி முறையை அறிமுகப்படுத்தியவர் யார்?
9. ஆங்கிலேயர்கள் திவானி உரிமையைப் பெற்ற ஆண்டு என்ன?
10. பக்சார் போரின் போது இருந்த முகலாய பேரரசர் யார்?

## 2.7 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

11. இராபர்ட் கிளைவ்
12. 1756 ஆம் ஆண்டு அலுவர்திகரன் இயற்கை ந்ய்தியதைத் தொடர்ந்து அவரது பேரன் சிராஜ்யுத்தௌலா வங்காள நாவபானர்.
13. ஆங்கிலேயரின் இருமுனைத் தாக்குதலை எதிர்கொள்ள முடியாத வங்காள நவாப் சிராஜ்யுதௌலா அலிநகர் என்ற இடத்தில் அவர்களுடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார்.
14. 1757
15. வங்காள நவாப்
16. ஆங்கிலேயருக்கும் மீர்காசிக்கும் இடையில் பக்சார் போர் நடைப்பெற்றது.
17. மேஜர் ஹெக்டர்மன்றோ தலைமை தளபதியாக பணியாற்றினார்.
18. இரட்டையாட்சியை அறிமுகப்படுதியவர் இராபர்ட் கிளைவ்
19. 1765 முதல் 1769 வரை
20. இரண்டாம் ஷா ஆலம்

## 2.8 சுருக்கவுரை

- புகழ்பெற்ற வரலாற்றாளரான சர் ஜகத்நாத் சர்க்கார் கூற்றுப்படி 23 ஜீன் 1757, இந்தியாவில் இடைகாலத்தின் இறுதியையும் நவீன காலத்தின் தொடக்கத்தையும் குறிக்கிறது.

- ஆங்கிலேயரின் இருமுனைத் தாக்குதலை எதிர்கொள்ள முடியாத வங்காள நவாப் சிராஜ்யுதௌலா அலிநகர் என்ற இடத்தில் அவர்களுடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார்.
- வங்காள வரலாற்றில், அலகாபாத் உடன்படிக்கை இந்தியாவில் பிரிட்டி' நிர்வாக முறைக்கு அடித்தளமாக அமைக்கப்பட்ட ஒரு புதிய நிர்வாக முறைக்கு இது முக்கியத்துவம் வாய்ந்தது.
- பிளாசிப் போர் ஒரு சிறிய போர் ஆயினும், அதன் விளைவு உலகத்தில் உண்டான மாபெரும் போர்களின் விளைவுகளைக் காட்டிலும் அதிகமாய் இருந்தது.

**2.9 முக்கிய கருத்துப்படிமங்கள்**

- இரட்டை ஆட்சி: வங்காளத்தின் இரட்டை அரசாங்கம், இராபர்ட் கிளைவ் அறிமுகப்படுத்திய இரட்டை ஆட்சி முறை ஆகும்.
- சிப்பாய்: அது பிரிட்டி' கட்டளைகளின் கீழ் பணியாற்றும் ஒரு இந்திய சிப்பாயைக் குறிக்கிறது.

**2.10 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள**

**குறு விடை வினாக்கள்**

1. பக்சார் போருக்கு வழிவகுத்த காரணங்கள் யாவை?
2. அலகாபாத் உடன்படிக்கை பற்றி குறிப்பெழுதுக.
3. இரட்டை அரசாங்கத்தின் இயல்புகள் யாவை?

**நெடு விடை வினாக்கள்**

4. பிளாசிப் போர் மற்றும் அதன் விளைவுகள் பற்றி விளக்குக.
5. பக்சார் போர், அதன் அரசியல் தாக்கங்கள் மற்றும் விளைவுகள் பற்றி விளக்கமாக தருக.

**2.11 மேலும் படிக்க**

சந்திரா, பிபின், 2009. நவீன இந்தியாவின் வரலாறு. ஹைத்தராபாத், ஓரியண்ட் பிளாக்வான்ஸ்.

டியூப்-பானர்ஜி, இஷிதா. நவீன இந்தியாவின் வரலாறு. கேம்பிரிட்ஜ், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக அச்சகம்

தாரிக், முகம்மது. 2007. நவீன இந்திய வரலாறு. புது தில்லி: டாடா மெக்ரா-ஹில் கல்வி.

பண்டியோபதியா, ெ'கரா. 2004. பிளாசி முதல் பார்ட்டி வரை: நவீன இந்திய வரலாறு. ஹைதராபாத்: ஓரியண்ட் பிளாக்வான்ஸ்.

சென், S.N. 2006. நவீன இந்திய வரலாறு. புது தில்லி: நியூ ஏஜ் இண்டர்நேஷ்னல்.

## அலகு – 3 கிழக்கிந்திய நிறுவனத்தின் சட்டங்கள்

3.0 அறிமுகம்

3.1 நோக்கங்கள்

3.2 ஒழுங்குமுறைச் சட்டம்

3.3 பிட் இந்தியச் சட்டம்

3.4 பட்டய சட்டம்

3.4.1 1813 பட்டய சட்டம்

3.4.2 1833 பட்டய சட்டம்

3.4.3 1853 பட்டய சட்டம்

3.5 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

3.6 சுருக்கவுரை

3.7 முக்கிய வார்த்தைகள்

3.8 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்

3.9 மேலும் படிக்க

## 3.0 அறிமுகம்

இந்தியாவில் வாணிபம் புரிய வந்த ஆங்கிலேயக் கிழக்கிந்திய வணிகக்குழு இந்தியாவில் ஆட்சி புரியத் தலைப்பட்டது. இங்கிலாந்து நாடாளுமன்றம் 1773 ஆம் ஆண்டு இந்தியாவின் பொருட்டு இயற்றிய சட்டம் ஒழுங்குமுறைச்சட்டம் ஆகும் இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் நிருவாகம் வர முதற்படியாக அமைந்தது ஒழுங்குமுறைச்சட்டம் ஆகும். இந்திய அரசியல் சட்ட வளர்ச்சிய்ல் முதலாவது சட்டம் இதுவாகும். அடுத்தது பிட் இந்திய சட்ட்ம இங்கிலாந்து நாட்டு நாடாளுமன்றம் இந்திய நிருவாகத்திற்கு இயற்றிய மூன்றாவது சட்டம் ஆகும். கிழகிந்திய வணிகக் குழுவின் நிருவாகத்தில், கூடாரத்தில் ஒட்டகம் தன் தலையை நுழைத்த சட்டம் 1773 ஆம் ஆண்டு ஒழுங்குமுறைச் சட்டமெனில் அது உடலில் பாதியை நுழைத்த சட்டம் என்று பிட் இந்தியச் சட்டத்தை குறிப்பிடலாம். மேற்கூறிய இருசட்டங்களும் நிருவாக சீர்திருத்தத்தின் பொருட்டு உருவானவை. ஆனால் பட்டயச் சட்டம் என்பது வாணிப நிலையமாக இங்கிலாந்தில் பதிவு செய்யப் பெற்ற வாணிகக் குழுவிற்கு இந்தியாவில் வாணிபம் செய்யும் உரிமையினை இங்கிலாந்து அரசு பட்டயம் ஒன்றின் வாயிலாக வழங்கிற்று அந்தப் பட்டம் இங்கிலாந்துப் பாராளுமன்றத்தினால் புதுபிக்க வேண்டும். இச்சட்டங்களை பற்றியும் அதன் விதிமுறைகளைப் பற்றியும் இப்பாடதில் தெளிவாக காணலாம்.

## 3.1 நோக்கங்கள்

இந்த அலகை நீங்கள் படித்து முடித்த பின்பு உங்களால்,

- ஒழுங்கு முறைச் சட்டத்தின் விதிகளையும் முக்கிய அம்சங்களையும் விவரிக்க முடியும்
- பிட் இந்தியச் சட்ட முன் வரைவு பற்றி ஆராய முடியும்
- பட்டய சட்டத்தின் விதிமுறைகளைப் பற்றி ஆராய முடியும்.

## 3.2 ஒழுங்குமுறைச் சட்டம் 1773

ஆங்கில கிழக்கிந்திய வாணிகம் வங்காளத்திலும் இந்தியாவின் பிற பாகங்களிலும் சுதேச அரசுகளின் ஆதரவைப் பெற்று வியாபா ரத்தை வளர்த்து வந்தது. சில இடங்களில் சுதேச அரசர்களை வென்று அப்பகுதிகளில் ஆட்சி முறையையும் கவனித்து வந்தது. பதினேழாம் நூற்றாண்டின் இறுதிவரை கம்பனியின் அதிகார வளர்ச்சி மன்னரின் விருப்பத்தைப் பொருத்ததாகவே இருந்தது. ஆனால் பதினெட்டாம்

நூற்றாண்டில் இங்கிலாந்து பாராளுமன்றம் கம்பெனியின் விவகாரங்களில் மன்னரின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தி தனது அதிகாரத்தை நிலை நாட்டியது. அப்படி கம்பெனியின் விவகாரங்களைக் கட்டுப்படுத்துவதற்கு இங்கிலாந்து பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட முதலாவது சட்டமே ஒழுங்குபடுத்தும் சட்டம் ஆகும்.

1770-ம் ஆண்டு முதல் கம்பெனியின் செயல்கள் பாராளுமன்றத் தின் கவனத்தை வெகுவாகக் கவர்ந்தது. அதன் விளைவாக 1773-ம் ஆண்டு ஒழுங்குபடுத்தும் சட்டம் இங்கிலாந்து பாராளுமன்றத்தினால் நிறைவேற் றப்பட்டது. இச்சட்டத்தின்படி பாராளுமன்றம் கம்பெனியை கண்காணிக்கும் உரிமை பெற்றது. கம்பெனி நிர்வாகத்தில் காணப்பட்ட பல குறைபாடுகள் நீக்கப்பட்டன. மேலும் இச்சட்டமே இந்திய ஆட்சி முறையின் வளர்ச்சியில் முதல் படியாகும். இந்திய அரசியலமைப்பின் வளர்ச்சிக்கான அடிக்கல் ஆகும்.

**ஒழுங்குமுறைச் சட்டம் இயற்றப்படுவதற்கான காரணங்கள் :**

**1. கம்பெனி ஊழியர்களின் ஆடம்பர வாழ்க்கை :**

கிழக்கிந்தியக் கம்பெனியில் பணியாற்றிவிட்டு இங்கிலாந்து திரும்பிய ஊழியர்களின் ஆடம்பர வாழ்க்கை இங்கிலாந்தில் வாழ்ந்து வந்த ஆங்கில மக்களை ஆச்சரியப்பட வைத்தது. ராபர்ட் கிளைவ் இங்கிலாந்து திரும்பிய சமயத்தில் அவருடைய ஆடம்பர வாழ்க்கையையும், ஆடைக ளையும் கண்ட மக்கள் அவரை, நவாப்ராபர்ட்கிளைவ் என்று அழைத்தனர்.

மேலும் பல கம்பெனி ஊழியர்கள் தாய் நாட்டிற்குத் திரும்பும் போது அதிகமான செல்வத்தைக் கொண்டு சென்றனர். அவர்கள் தங்களது புதிய செல்வத்தின் காரணமாக ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்தனர். இவர்கள் நசித்துப்போனபரோக்கள் (Rotton boroughs) என்ற தேர்தல் தொகுதிகளை விலைக்கு வாங்கி பாராளுமன்ற உறுப்பினர் ஆயினர். எனவே ஆங்கில மக்கள், இந்த கம்பெனி ஊழியர்கள் ஆதரவற்ற இந்திய மக்களை ஏமாற்றியே பொருள் சேர்த்திருக்க வேண்டும் என்று எண்ணினர். மேலும் இது அவர்களிடம் பொறாமையையும் ஏற்படுத்தியது. இதனால் கம்பெனி நிர்வாகத்தில் பாராளுமன்றம் தலையிட வேண்டும் என்பது பொது மக்கள் கருத்தாக அமைந்தது.

**2. இங்கிலாந்து பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்து:**

ராபர்ட் கிளைவின் வெற்றிகளால் கம்பெனியின் அரசியல் அதிகாரத்திலும் வாணிப வளர்ச்சியிலும் மிகுந்த முன்னேற்றம் ஏற்பட்டது. எனவே கம்பெனியின் லாபத்தையும் லாபப் பங்கீட்டையுமே பெரிதாகக் கொண்டு, கம்பெனியின் முன்னேற்றத்திற்கான காரியங்களிலேயே அக்கரையோடு பாடுபடும் அலுவலர்களிடம் லட்சக்கணக்கான இந்திய மக்களை ஆட்சி புரியும் பொறுப்பை ஒப்படைப்பது சரியல்ல என்று பாராளுமன்ற உறுப்பினர் கருதினர். மேலும் வங்காளம் போன்ற பகுதிகளை ஆளும் பொறுப்பை இங்கிலாந்து அரசு ஏற்றால் அச்செயல் அரசுக்கு நற்பெயரைத் தேடித்தந்து குடியேற்ற நாடுகளை அதிகப்படுத்துவ தற்கு அநுகூலமாக அமையும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் கருதினர்.

**3. தடையிலா வாணிபக் கொள்கை (Policy of Free Trade):**

பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் தடையிலா வாணிபக் கொள்கை (Laissez-faire) பற்றி தேசிய அளவில் விவாதங்கள் நடைபெற்று வந்தன. இதன் விளைவாக இந்தியாவுடன் வியாபாரம் செய்ய ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி மட்டும் பெற்றிருந்த முற்றுரிமை (அழழெிழடளைவதை சபைாவ)க்கு எதிராக குரல் எழுந்தது. கம்பெனி

விவகாரத்தில் பாராளுமன்றம் தலையிட இதுவும் காரணமாகும்.

**4. வங்காள மக்களின் மிக மோசமான நிலை :**

வங்காளத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இரட்டை ஆட்சியின் விளைவாக பல சீர்கேடுகள் காணப்பட்டது. மக்களின் நலன்களைக் கவனிப்பார் யாரும் இல்லை. நவாபிடம் முறையிட்டால் உண்மையான அதிகாரம் கம்பெனியிடமே உள்ளது என்று கூறினார். கம்பெனியிடம் முறையிட்டால் நிர்வாக அதிகாரம் நவாபிடமே உள்ளது என்றனர். எனவே தான் 1770-ல் வங்காளத்தில் தோன்றிய பெரும் பஞ்சத்தின் விளைவாக மக்களுக்கு ஏற்பட்ட துயரங்களைப் போக்க யாரும் முன்வரவில்லை ஐந்தில் ஒரு பகுதி மக்கள் இறந்தனர். மேலும் கம்பெனி ஊழியர்களே இந்த பஞ்சத்தைப் பயன்படுத்தி பொருட்களின் விலைகளை உயர்த்தி கொள்ளை லாபம் சம்பாதித்தனர். இந்த நிலை இங்கிலாந்து மக்களை இந்தியர்கள் மீது இரக்கப்பட வைத்தது. கம்பெனி நடவடிக்கைகளைப் பற்றி விசாரிக்க வேண்டும் என்ற கருத்து வலுவடைந்தது.

**5. கம்பெனியின் தோல்வி :**

1764-ல் நடைபெற்ற மைசூர் போரில் கம்பெனியின் படைகள் ஹைதர் அலியிடம் படுதோல்வியடைந்தன. இந்த செய்தி இங்கிலாந்து சென்றடைந்த போது அரசாங்கமும், மக்களும் அதிர்ச்சியடைந்தனர். இத்தோல்வி இங்கிலாந்தின் புகழுக்கு களங்கம் ஏற்படுத்துவதாக அமையவே கம்பெனி விவகாரத்தில் அரசாங்கம் தலையிட முற்பட்டது.

**6. கம்பெனியின் மோசமான நிதிநிலைமை :**

1765-ம் ஆண்டு வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய பிரதேசங்களில் திவானி உரிமையை கம்பெனி பெற்ற போது, கம்பெனிக்கு வருடத்திற்கு 16 லட்சம் பவுன்ட் நிகர லாபம் கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. எனவே கம்பெனியின் பங்கு தொகையின் மதிப்பு உயர்ந்தது. பங்குதாரர் களுக்கு கொடுக்கப்பட்ட லாப பங்கீடு 10சதவீதத்திலிருந்து 12.5 சதவீதமாக உயர்ந்தது. ஆனால் 1772-ல் கம்பெனியின் நிதிநிலை மோசமாகி திவாலா ஆகப்போகிறது என்ற வதந்தி பரவியது. இதனால் பங்குகளின் விலை சரிந்தது. எனவே கம்பெனி பங்குதாரர்கள் தங்களின் நலன்கள் காக்கப்பட பாராளுமன்றம் உடனடியாக கம்பெனி விவகாரத்தில் தலையிட வேண்டும் என்ற கோரிக்கை விடுத்தனர்.

**7. கம்பெனி இங்கிலாந்து அரசாங்கத்திடம் கேட்ட கடன் :**

கம்பெனியின் வாணிபம் செழிப்பாக நடந்து வந்தபோது அரசாங் கத்திற்கு தனக்கு வழங்கப்பட்ட முற்றுரிமைக்காக வருடத்திற்கு நான்கு லட்சம் பவுன்ட் ஒழுங்காக செலுத்தி வந்தது. 1767 முதல் 1772 வரை ஒழுங் காகச் செலுத்தி வந்த கம்பெனி , நிதி நெருக்கடியின் காரணமாக நான்கு லட்சம் பவுன்டை தொடர்ந்து செலுத்த முடியவில்லை. அதுமட்டுமல்லாது பாராளுமன்றம் கடன் கொடுத்தாலன்றி கம்பெனி தொடர்ந்து நடைபெற முடியாத நிலை ஏற்பட்டது. கம்பெனி நிர்வாகக் குழுவினர் பத்து லட்சம் பவுன்ட் கடன் கேட்டு பாராளுமன்றத்தை அணுகினர். எனவேதான் கம்பெனியை ஒழுங்குபடுத்த பாராளுமன்றம் இந்த வாய்ப்பை பயன் படுத்திக் கொண்டது.

**8. நார்த் பிரவுவின் மசோதா: 1773 மே 18ம் தேதி :**

கம்பெனியின் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்த பாராளுமன்றம் பொறுக்கு குழு ஒன்றையும், ரகசியக் குழு (ளுநடநஉவ ஊழஅஅவைவநந யனெ ளுநஉசநவ ஊழஅஅவைவநந) ஒன்றையும் நியமித்தது. இந்த குழுக்களின் விசாரணையில் 1757-லிருந்து 1766-க்குள் கம்பெனி ஊழியர்கள் இருபது

லட்சம் பவுன்ட்டிற்கு மேல் நன்கொடையாகப் பெற்றது நிரூபிக்கப் பட்டது. மேலும் இந்த குழுவின் அறிக்கை கம்பெனியின் மோசமான நிர்வாகத்தைக் கடுமையாக கண்டித்தது.

இந்த குழுக்களின் அறிக்கையின் அடிப்படையிலே நார்த் பிரபு 1773 மே 18-ம் தேதி பாராளுமன்றத்தில் ஒழுங்கு படுத்தும் மசோதா" ஒன்றை அறிமுகப்படுத்தினார். மசோதா பற்றிய விவாதம் நடைபெற்றது. மசோதா வுக்கு எதிராக கம்பெனி நிர்வாகம் அனுப்பிய எல்லா விண்ணப்பங்களை யும் தள்ளுபடி செய்து, மசோதா நிறைவேற்றப்பட்டது. இதுவே ஒழுங்கு படுத்தும் சட்டம் என்ற பெயரை பெற்றது.

**ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் ஷரத்துக்கள்:**

ஒழுங்குபடுத்தும் சட்டம் கம்பெனியின் வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியது. இந்தியாவிலும் இங்கிலாந்திலும் கம்பெனி யின் நடவடிக்கைகளை கண்காணிக்கும் உரிமையைப் பெற்றது பாராளுமன்றம். கம்பெனியின் அமைப்பு முறையில் பல மாறுதல்களை ஏற்படுத் தியது. இதனால் கம்பெனிக்கு ஒரு புதிய அரசியலமைப்பு உருவானது.

**1. கம்பெனி நிர்வாக அமைப்பில் செய்யப்பட்ட மாற்றங்கள்:**

ஒழுங்குபடுத்தும் சட்டம் இயற்றப்படும் முன்பாக கம்பெனி 24 இயக்குநர்களைக் கொண்ட ஒரு நிர்வாக சபையால் (Board of Directors) நிர்வகிக்கப்பட்டு வந்தது. இந்த இயக்குநர்களைகம்பெனியில் பைவுண்ட் (Pound Sterling) முதலீடு செய்த பங்குதாரர்கள் தேர்ந்தெடுத்தார்கள். இந்த பங்குதாரர்களைக் கொண்ட உரிமையாளர் மன்றமும் (Court of proprie tors) செயல்பட்டு வந்தது.

ஒழுங்குபடுத்தும் சட்டத்தின்படி இனிமேல் 1000 பவுன்ட் முதலீடு செய்துள்ள பங்குதாரர்களுக்கே இயக்குநர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை கொடுக்கப்பட்டது. ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த இயக்கு நர்கள் இனி நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். அவர்களில் நான்கில் ஒரு பகுதியினர் (அதாவது 6 பேர்) ஆண்டு தோறும் பதவி விலக வேண்டும். புதிய இயக்குநர்கள் அவர்களுக்குப் பதிலாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

**2. கம்பெனி நிர்வாகத்தின் மீது பாராளுமன்றத்தின் கட்டுப்பாடு :**

ஒழுங்குபடுத்தும் சட்டத்தின்படி கம்பெனி நிர்வாகத்தின் மீது பாராளுமன்றம் பல கட்டுப்பாடுகளை ஏற்படுத்தியது. கம்பெனியின் வரவு செலவு கணக்குகள் இங்கிலாந்து அமைச்சரவை முன் வைக்கப்பட வேண்டும். மேலும் நிலவரி சம்பந்தமாக இந்தியாவிலிருந்து வரும் எல்லா கடிதங்களும் கருவூலத் துறையிலும், சிவில் ராணுவ கடிதப்போக்கு வரத்துக்களை இங்கிலாந்தில் வெளி உறவுச் செயலரிடமும் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு கம்பெனியின் சிவில் வாணிப நடவடிக்கைகளில் தலையிடும் உரிமை பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டது.

அது மட்டுமல்லாமல் இருபது ஆண்டிற்கு ஒருமுறை கிழக் கிந்தியக் கம்பெனி தொடர்ந்து இயங்க வேண்டுமா, வேண்டாமா? என்பதை நிர்ணயிக்கும் உரிமையை பாராளுமன்றத்திற்கு இச்சட்டம் வழங்கியது. எனவே இருபது ஆண்டுகளுக்கு ஒருமுறை கம்பெனியில் காணப்படும் குறைபாடுகளை நீக்க பாராளுமன்றத்திற்கு வாய்ப்புக் கிடைத்தது. இதன் காரணமாகத்தான் 1793, 1813, 1833, 1853 - ம் வருட பட்டய சட்டங்கள் இயற்றப்பட்டன.

**3. கவர்னர் ஜெனரல் :**

வங்காளத்தின் கவர்னர் ஒழுங்குபடுத்தும் சட்டத்தின்படி வில்லியம் கோட்டையின் கவர்னர் ஜெனரல் என்று அழைக்கப்பட்டார். அவரது வருட சம்பளம் 25,000பவுன்ட் ஆகும். இவரது பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும். இவர் சென்னை , பம்பாய் கவர்னர்களைவிட அதிக அதிகாரம் படைத்தவர். இவரை கலந்து ஆலோசித்த பின்பே இதர மாநில கவர்னர்கள் சுதேச அரசர்களுடன் போர் புரிதலோ, சமாதான உடன் படிக்கை செய்து கொள்ளவோ வேண்டும்.

**4. கவர்னர் ஜெனரலின் ஆலோசனை சபை:**

நிர்வாகத்தில் கவர்னர் ஜெனரலுக்கு ஆலோசனை கூற நான்கு உறுப்பினர்களைக் கொண்ட ஓர் ஆலோசனை சபை அமைக்கப்பட்டது. இந்த நான்கு உறுப்பினர்களின் பெயர்கள் வருமாறு: கிளாவரிங், பிரான்சிஸ், மான்சன், பார்வல் (Major Clavering, Dhilip Francis. Yeorge Monson, Richard Barwell) இவர்களும் ஐந்து ஆண்டுகள் பதவி வகிப்பர். இந்த சபையின் பெரும்பான்மை வாக்குப்படியே (Majority Vote) கவர்னர் ஜெனரல் ஆட்சி நடத்த வேண்டும். வாக்குகள் சம நிலையாக இருக்கும் போது முடிவு செய்யும் வாக்கு" (Casting Vote) கவர்னர் ஜெனரலுக்கு வழங்கப்பட்டது. கவர்னர் ஜெனரலும் ஆலோசனைக் குழுவினரும் இந்தியாவின் நிர்வாகத் திற்குத் தேவையான சட்டங்களை இயற்றிக் கொள்ளலாம்.

**5. தலைமை நீதிமன்றம்:**

ஒழுங்குபடுத்தும் சட்டத்தின்படி ஒரு தலைமை நீதிபதியும், மூன்று நீதிபதிகளும் அடங்கிய ஒரு தலைமை நீதிமன்றம் கல்கத்தாவில் அமைக்கப்பட்டது. இது கவர்னர் ஜெனரலுக்கு கட்டுப்படாதது. தலைமை நீதிபதி மற்றும் பிற நீதிபதிகள் அரசராலேயே நியமிக்கப்பட வேண்டும். தலைமை நீதிமன்றம் சிவில், கிரிமினல் அலுவல்களையும், கடற்படை மற்றும் மதசம்பந்தமான வழக்குகளையும் விசாரிக்கும் உரிமை பெற்றி ருந்தது. இந்த நீதிமன்றத்தின் அதிகாரம் வங்காளம், பீகார், ஒரிசா, மாகாணங்களில் ஆங்கில ஆட்சிக்கு உட்பட்ட குடிகள் மீது பரவியிருந்தது. தலைமை நீதிபதியாக சர் எலிஜா இம்பே (ளுசை நுடதையா ஐஅிநல) என்பவரும், சேம்பர்ஸ், லெமாய்சர், ஹைட் (Chambers, Lamaistre, Hyde) ஆகியோர் பிற நீதிபதிகளாகவும் நியமிக்கப்பட்டனர். தலைமை நீதிபதி வருடத்திற்கு 8000 பவுண்டு, பிற நீதிபதிகள் 6000 பவுண்டும் ஊதியமாக பெற்றார்கள்.

**ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் நன்மைகள்:**

1. ஒழுங்குபடுத்தும் சட்டமே இந்தியாவை ஆங்கிலப் பாராளுமன் றத்தின் அதிகாரத்துக்குள் கொண்டு வந்த முதல் சட்டமாகும். கம்பெனி ஊழியர்கள் தங்கள் நாட்டு அரசாங்கத்தின் கட்டுப்பாடு இல்லாமல் இருந்ததால் இந்திய மக்களை தங்கள் மனம் போனபடி கொள்ளையடித்து வந்தனர். ஆனால் ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் மூலமாகவே கம்பெனி யின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டு இங்கிலாந்துக்கு ஏற்பட்ட அவப்பெயர் நீங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.
2. கம்பெனி அலுவலர்களிடம் காணப்பட்ட ஊழல்களையும் ஒழுங்கீனங்களையும் அதிகார துஷ்பிரயோகத்தை அகற்றவும் இச்சட்டம் உதவியது. இச்சட்டத்தின்படிதான் கவர்னர் ஜெனரலாக பணிபுரிந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் பின்னர் பாராளுமன்றத்தால் துரோக குற்ற விசாரணை செய்யப்பட்டார்.

3. வங்காளத்தில் ஏற்படுத்தப்பட்டிருந்த இரட்டை ஆட்சிமுறை யின் சீர்கேடான நிலை மாறுவதற்கு இச்சட்டம் உதவி செய்தது. இந்திய மக்களும் நன்மை பெற்றனர்.
4. கம்பெனி ஊழியர்கள் சுயநலனுக்காக செய்து வந்த தனி வாணிபம் அகற்றப்பட்டதால் கம்பெனிக்கு அதிக லாபம் கிடைத்தது. இந்திய வாணிபம் வளர்ந்தது
5. ஐநூறு பவுன்ட் முதலீடு செய்தவர்களின் வாக்குரிமை ரத்து செய்யப்பட்டதால், வசதி படைத்தவர்களும் இயல்பாகவே தகுதி வாய்ந்த வர்களுமே பங்குதாரர் சபையில் இடம் பெற்றனர். இதனால் தகுதி வாய்ந்த இயக்குநர்களே தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
6. இயக்குநர்களின் பதவிக்காலம் ஒரு ஆண்டாக இருந்தபோது அவர்களால் உருப்படியாக எந்த காரியமும் செய்ய இயலவில்லை. இச்சட்டப்படி பதவிக்காலம் நான்கு ஆண்டுகள் ஆக்கப்பட்டதால் இயக்குநர்களால் முழுமையாக பணிகளை ஆற்ற முடிந்தது.
7. கவர்னர் ஜெனரலின் நியமனம் இந்தியாவில் மைய ஆட்சிமுறை ஏற்பட முதல்படியாக அமைந்தது.

**ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் குறைபாடுகள் :**

''ஒழுங்குபடுத்தும் சட்டம் கம்பெனி பதிவுச்சட்டத்திற்கு விரோத மானதும் தனிநபர் உரிமையைப் பறிப்பதும் ஆகும்'' என்று எட்மண்ட்பர்க் கூறுகிறார்.

"ஒழுங்குபடுத்தும் சட்டம் தெளிவற்ற ஓர் அறைகுறையான சட்டம்'' என்று நு. ராபர்ட்ஸ் என்பவர் குறிப்பிடுகிறார்.

ஒழுங்குபடுத்தும் சட்டம் நடைமுறைக்கு வந்தவுடனேயே அதன் குறைபாடுகள் தெரிய ஆரம்பித்தன. இச்சட்டத்தால் கம்பெனியில் ஒழுங்கு ஏற்படுவதற்குப் பதிலாக ஒழுங்கீனங்களே ஏற்பட்டன.

**1. கவர்னர் ஜெனரலுக்கும் ஆலோசனைக் குழுவினருக்கும் பகைமை :**

ஒழுங்குபடுத்தும் சட்டம் கவர்னர் ஜெனரலுக்கும் ஆலோசனைக் குழுவினருக்குமிடையே பகைமை ஏற்படக்காரணமானது. கவர்னர் ஜெனரல் ஆலோசனை சபையின் பெரும்பான்மை வாக்கிற்குக் கட்டுப் பட்டு நடக்க வேண்டும் என்ற நிலையிருந்ததால் அரசியல் குழப்பம் ஏற்பட்டது. ஆலோசனைக் குழுவினரில் பார்வெல் தவிர மற்றவர்களுக்கு இந்தியா புதியது. இந்திய நிர்வாகமும் புதியது. பழக்கவழக்கங்களும் புதியது.

மேலும் பார்வல் தவிர மற்ற மூன்று பேரும் கவர்னர் ஜெனரலாக பதவியேற்ற வாரன் ஹேஸ்டிங்கிற்கு அதிக தொந்தவு கொடுத்தனர். பிலிப் பிரான்ஸிஸ் என்பவர் கவர்னர் ஜெனரலின் பதவியைக் கைப்பற்ற முனைந்தார். இவர் இங்கிலாந்தில் போர் சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் தலைமை எழுத்தாளராக இருந்தவர். இவர் எப்படி நியமனம் செய்யப்பட்டார் என்பது புரியவில்லை LeTes of Junius என்ற பெயரில் இங்கிலாந்து அரசர் மூன்றாம் ஜார்ஜ் மன்னருக்கு எதிராக மொட்டைக் கடிதங்கள் எழுதி வந்ததாகவும், எனக்கு இவரை அமைதிப்படுத்துவதற்காகவே ஆலோசனைக் குழு உறுப்பினர் பதவி கொடுக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. எப்படியென்றாலும் பிரான்சிஸ் இந்தியாவுக்கு வந்ததிலிருந்தே தொல்லை கொடுத்து வந்தார். அரசாங்க ரகசியங்களை வாரன் ஹேஸ் டிங்சின் எதிரிகளுக்கு அளித்து வந்தார். கவர்னர் ஜெனரல் பதவியின் மீது ஆசை கொண்டே இக்காரியங்களைச் செய்தார். ஆகவே வாரன் ஹேஸ்டிங்ஸ் செயலற்ற நிலையில் இருந்தார். மேலும் ஒழுங்குபடுத்தும் சட்டத்தில் ஆலோசனைக் குழுவினரின் அதிகாரங்களும் கவர்னர் ஜெனரலின்

அதிகாரங்களும் தனித்தனியே பிரித்துக் கூறப்படவில்லை .

**2. மாநிலங்களின் மீது கவர்னர் ஜெனரல் முழுமையாக அதிகாரம் செலுத்த முடியவில்லை :**

ஒழுங்குபடுத்தும் சட்டப்படி வங்காள அரசு சென்னை, பம்பாய் ஆகிய மாநில அரசுகள் மீது அதிகாரம் செலுத்த வேண்டும். இந்த மாநில அரசுகள் வங்க அரசுக்கு கட்டுப்பட வேண்டும். ஆனால் அவசரகாலத்தில் சுதந்திரமாக இயங்கிக் கொள்ளலாம் என்ற ஒரு விதி காணப்பட்டதால், அதைப்பயன்படுத்திக் கொண்டு மாநில அரசுகள் கவர்னர் ஜெனரலுக்கு கட்டுப்படாமல் இயங்கின. பம்பாய் கவர்னர் மராட்டியப் போரிலும், சென்னை கவர்னர் கர்நாடக நவாபுடனும் தங்கள் விருப்பப்படி நடந்து கொண்டனர். மேலும் கவர்னர் ஜெனரலின் அதிகாரங்களும், பிற கவர்னர் களின் அதிகாரங்களும் பிரித்துக் கூறப்படவில்லை .

**3. நீதித்துறையில் காணப்பட்ட குறைகள் :**

a) ஆலோசனைக் குழுவினருக்கும் தலைமை நீதிமன்றத்திற்கும் இடையே உள்ள தொடர்பும், சபையினரின் அதிகாரங்களும் நீதித்துறை யினரின் அதிகாரங்களும் வரையறுத்துக் கூறப்படாததால் அடிக்கடி சச்சரவுகள் ஏற்பட்டன.

b) நீதிபதிகள் நேரடியாக இங்கிலாந்து அரசர்களால் நியமிக்கப் பட்டவர்கள். ஆதலால் அவர்கள் கவர்னர் ஜெனரலுக்குக் கீழ்படிய மறுத்தனர். இந்தியாவில் யாருக்கும் தாங்கள் கட்டுப்பட வேண்டியதில்லை என்று கருதினர்.

c) சென்னை, பம்பாய் மாநில நீதிமன்றங்களுக்கும் கல்கத்தா உயர் நீதிமன்றத்திற்கும் எத்தகைய தொடர்பு இருக்க வேண்டும் என்பதும் விளக்கப்படவில்லை .

d) மேலும் தலைமை நீதிமன்றம் இந்தியக்குடி மக்கள் அனைவர் மீதும் அதிகாரம் செலுத்துவதா அல்லது கம்பெனியின் கீழ் பணியிலமர்ந்த இந்தியர்கள் மீது மட்டும் அதிகாரம் செலுத்துவதா என்ற செய்தி தெளிவாகக் கூறப்படவில்லை . மேலும் யார் யார் பிரிட்டி' குடிகள், யார் யார்கம்பெனியின் பணியாட்கள் என்பதும் தெளிவாகக் கூறப்படவில்லை.

e) ஒழுங்குபடுத்தும் சட்டம் உயர்நீதி மன்றத்தில் எந்தச் சட்டம் பின்பற்றப்பட வேண்டும் என்றும் கூறவில்லை. அப்போது இந்தியாவில் இந்து சட்டம், முஸ்லீம் சட்டம், ஆங்கிலச்சட்டம் ஆகியவை நடைமுறையிலிருந்தன. ஆங்கிலச் சட்டங்கள் இங்கிலாந்து நாட்டின் சூழ்நிலைக் கேற்ப உருவானவை. எனவே அடிப்படை வேறுபாடுகள் கொண்ட இந்தியாவில் இந்த சட்ட பிரச்சனை குழப்பத்தை ஏற்படுத்தியது.

f) கம்பெனி அதிகாரிகளை தலைமை நீதிமன்றம் கட்டுப்படுத்த முடியும் என்று கூறப்பட்டதால் இருசாராருக்குமிடையே போராட்டம் ஏற்பட்டது.

g) ஆங்கில மொழியில் தான் நீதிமன்றம் செயலாற்ற வேண்டி யிருந்ததால் இந்தியர்களுக்கு நன்மை ஏற்படவில்லை.

**4. கம்பெனியின் மீது பாராளுமன்றம் முழுமையான கட்டுப் பாட்டை ஏற்படுத்த முடியவில்லை :**

ஒழுங்குபடுத்தும் கட்டத்தின்படி கம்பெனியின் கடிதப் போக்கு வரத்துக்கள் அனைத்தும் இங்கிலாந்தின் வெளி உறவுச் செயலரிடம் சமர்ப் பிக்கப்பட வேண்டும். ஆனால் அந்த கடிதங்களை ஆராயவும் நடவடிக்கை களை மேற்கொள்ளவும் இந்திய விவகாரங்களில் திறமை பெற்றிருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் இல்லை. எனவேகம்பெனியின் மீது பாராளு மன்றம் முழுமையான கட்டுப்பாட்டை ஏற்படுத்த முடியவில்லை.

**5. நிர்வாகக் குழப்பம் :**

நாட்டில் பலவகையான நிர்வாகம் நடைபெற்றதால் யாருக்குக் கட்டுப்படுவது என்று புரியாமல் மக்கள் குழம்பினர். ஒரு ஆட்சியாளர் என்ற நிலை இல்லாமல் நவாபுகள் ஆட்சி, கவர்னர் ஜெனரலின் ஆட்சி, இயக்குநர்கள் குழு, உரிமையாளர் குழு, தலைமை நீதிமன்றம், மாநில கவர்னர் ஆட்சி என்ற பல வகையான ஆட்சியில் மக்கள் சிக்கித் தவித்தனர்.

**6. இயக்குநர் குழுவின் அதிகாரம் வரையரைக்கப்பட வில்லை :**

கம்பெனி இயக்குநர் குழுவும், உரிமையாளர் குழுவும் ஒன்றுக் கொன்று கட்டுப்படாமல் இயங்கியது. எனவே கம்பெனி பணியாளர்கள் யாருக்கும் கட்டுப்படவில்லை. அப்படி கட்டுப்படாதவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதும் கூறப்படவில்லை. கம்பெனிக்கு ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டால் அவர்கள் இங்கிலாந்துக்கே தொடர்பு கொள்ள வேண்டிய நிலை இருந்தது.

மொத்தத்தில் கம்பெனியின் மீது அரசாங்கத்திற்காவது, ஊழியர் களின் மீது மேலதிகாரிகளுக்காவது, ஆலோசனை சபையின் மீது கவர்னர் ஜெனரலுக்காவது, சென்னை பம்பாய் மாநிலங்கள் மீது கல்கத்தா மாநிலத் திற்காவது தெளிவான அதிகாரத்தை ஒழுங்குபடுத்தும் சட்டம் கொடுக்க வில்லை .

மேற்கண்ட பல குறைபாடுகள் இருந்தாலும் இந்திய அரசிய லமைப்பு வரலாற்றில் ஒழுங்குபடுத்தும் சட்டம் ஒரு முக்கிய மைல்கல் என்றே சொல்ல வேண்டும். இந்திய ஆட்சி படிப்படியாக சீர்திருத்தப்பட இச்சட்டம் வழிவகுத்தது. ஒழுங்குபடுத்தும் சட்டத்தில் காணப்பட்ட குறைபாடுகள் படிப்படியாக நிவர்த்தி செய்யப்பட்டன.

1781-ம் ஆண்டு இயற்றப்பட்ட வங்காள நீதித்துறைச் சட்டத்தின் மூலமும், 1784-ல் இயற்றப்பட்ட பிட் இந்தியச் சட்டத்தின் மூலமும், 1786 - ல் இயற்றப்பட்ட பாராளுமன்றச் சட்டத்தின் மூலமும் ஒழுங்கு படுத்தும் சட்டத்தின் குறைபாடுகள் நீக்கப்பட்டன.

## 3.3 பிட் இந்தியச் சட்டம், 1784

**ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் குறைபாடுகள் நிவர்த்திக்கப்படல்**

ஒழுங்குபடுத்தும் சட்டம் நடைமுறைக்கு வந்த போது அதன் குறை பாடுகள் வெளிப்படையாகத் தெரியலாயின. எனவே அந்த குறைபாடு களை நீக்குவதற்கான புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. அதன் விளைவாக கம்பெனியின் செயல்களைச் சீர்திருத்த பாராளுமன்றம் பல சட்டங்களை இயற்றியது. அவைகள் ஒழுங்குபடுத்தும் சட்டத்தில் காணப் பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்தன. அந்த சட்டங்கள் பின்வருமாறு:

**1. வங்காள நீதிபரிபாலன சட்டம் (Bengal Judicature Act) 1781:**

1781 -ல் பாராளுமன்றம் இரண்டு குழுக்களை நியமித்தது. எட்மண்ட் பர்க் என்பவரின் தலைமையில் நியமிக்கப்பட்ட குழு இந்தியாவில் உள்ள நீதிபரிபாலனத்தை பரிசீலனை செய்தது. ஹென்றி டண்டாஸ் என்பவர் தலைமையில் அமைக்கப்பட்ட ரகசியகுழு மைசூர் போர் உட்பட இந்திய விவகாரங்களைப் பற்றி பரிசீலனை செய்தது. இந்த இரண்டு குழுவினரின் அறிக்கையின் அடிப்படையில் 1781-ல் வங்காள நீதிபரிபாலன சட்டம் இயற்றப்பட்டது. இந்த சட்டம் ஒழுங்குபடுத்தும் சட்டத்தில் நீதித்துறை சம்பந்தப்பட்ட குறைபாடுகளை நீக்கியது. முக்கியமாக கல்கத்தாதலைமை

நீதிமன்றத்திற்கும் கவர்னர் ஜெனரலின் ஆலோசனைக் குழுவிற்கும் இடையே ஏற்பட்ட சச்சரவுகளை நீக்கியது.

**முக்கிய ஷரத்துக்கள்:**

1. கவர்னர் ஜெனரலும் அவரது ஆலோசனைக் குழு உறுப்பினர் களும் வங்காளதலைமை நீதிமன்றத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டவர்கள் அல்ல.
2. கம்பெனியின் வரிவசூல் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிக் கும் அதிகாரம் இந்த நீதிமன்றத்திற்குக் கிடையாது.
3. ஆங்கிலேயர்கள் சம்பந்தப்பட்ட எல்லா வழக்குகளும் இந்த நீதிமன்றத்தில் தான் விசாரிக்கப்பட வேண்டும்.
4. கல்கத்தாவில் வசிக்கும் மக்கள் யாவரும் தலைமை நீதிமன்ற அதிகாரத்திற்கு உட்பட்டவர் ஆவர். ஆனால் இந்துக்களும், முஸ்லீம்களும் வாரிசுரிமை முதலிய செய்திகளில் அவரவர் சட்டங்களின் படியே தீர்ப்பு கூறப்படுவர்.
5. நிலச் சுவான்தார்கள் என்ற காரணத்திற்காக எந்த இந்தியனும் இந்த நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட வேண்டியதில்லை.

இந்த சட்டத்தின் மூலம் 1773-ம் வருட ஒழுங்குபடுத்தும் சட்டத் தின் குறைபாடுகளில் ஒரு பகுதி நிவர்த்தி செய்யப்பட்டது. ஆனால் இச்சட்டப்படி தலைமை நீதிமன்றம் ஓரளவு தனது அதிகாரத்தை இழக்க வேண்டியதாயிற்று. இது ஆலோசனை சபை அங்கத்தினர்களுக்கு கிடைத்த வெற்றியாக கருதப்படுகிறது.

**2. டண்டாஸ் மற்றும் பாக்ஸ் இந்திய வரைவு : (னுரனெய’ள யனெ குழஒ ஐனெயை டீடைட) .**

பாராளுமன்றத்தின் எதிர்கட்சித் தலைவரான ஹென்றி டண்டாஸ் என்பவர் 1782- ல் ஆங்கில இந்திய ஆட்சி முறையைக் கண்டிக்கும் 45 தீர்மானங்களைக் கொண்டு வந்தார். முக்கியமாக கவர்னர் ஜெனரலின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் விதமாகவும், வாரன் ஹேஸ்டிங்ஸ் ஆட்சி முறையில் அல்லல்பட்ட ஜமீன்தார்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்ற விதமுமாக அத்தீர்மானங்கள் அமைந்தன. ஆனால் அந்த தீர்மானங்களுக்கு சபையில் போதிய ஆதரவு கிடைக்காமல் போய் விட்டதால் அந்த தீர்மானங்கள் தோல்வியடைந்தன.

1783-ல் நிதி உதவிக்காக மறுபடியும் கம்பெனி பாராளுமன்றத்தை அணுகியபோது மீண்டும் ஒழுங்குபடுத்தும் சட்டத்தைத் திருத்த ஒரு வாய்ப்புக் கிடைத்தது. அப்போது ∴பாக்ஸ், நார்த் பிரபு ஆகியோரின் கூட்டு மந்திரிசபை 1783 - நவம்பர் 18-ல் ஒரு மசோதாவை பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தியது. அதுவே ∴பாக்ஸ் இந்திய வரைவு எனப்படுகிறது. இந்த மசோதாவின்படி,

1. இயக்குநர்கள் குழுவும் உரிமையாளர்கள் குழுவும் நீக்கப்பட வேண்டும்.
2. அவைகளுக்குப் பதிலாக ஆணையர்கள் அடங்கிய இரண்டு சபைகள் அமைக்கப்படவேண்டும்.
3. முதல் சபை ஏழு ஆணையர்களைக் கொண்டது. அது அரசியல் பணிகளை மட்டும் கவனிக்க வேண்டும். இரண்டாவது சபை ஒன்பது ஆணையர்களைக் கொண்டது.இது கம்பெனியின் வணிகப் பணிகளை கவனிக்க வேண்டும்.
4. வணிகக் கம்பெனி மீது ஆணை பிறப்பிக்க பாராளுமன்றத்திற்கு அதிகாரம் உண்டு. புதிய ஆணையர்களை நியமனம் செய்யவும் அதிகாரம் உண்டு .

இந்த ∴பாக்ஸ் இந்திய வரைவு கம்பெனியின் மீது அரசாங்கத்தின் அதிகாரத்தை உறுதிப்படுத்தியது. இந்த மசோதாவை பொதுமக்கள் சபை நிறைவேற்றினாலும் மூன்றாம் ஜார்ஜ் மன்னர் எதிர்ப்புத் தெரிவித்ததின் விளைவாக மேல்சபையான பிரபுக்கள் சபை நிறைவேற்றவில்லை. அத்துடன் அரசர் ∴பாக்ஸ், நார்த் பிரபு ஆகியோர்களின் மந்திரிசபை கலைத்தும், பாராளுமன்றத்தைக் கலைத்தும் உத்தரவிட்டார். புதிதாக தேர்தல் நடைபெற்றது : அதன்பின் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் வில்லியம் பிட் (Pitt) என்பவர் பிரதமரானார். சிறந்த ராஜதந்திரியும், பிரதம மந்திரியுமான இவர் பாராளுமன்றத்தில் இந்திய நிர்வாகத்தை திருத்தியமைக்க ஒரு சட்டத்தை அறிமுகப்படுத்தி நிறைவேற்றினார். எனவே இச்சட்டம் பிட் இந்திய சட்டம் எனப் பெயர் பெற்றது.

### பிட் இந்தியச் சட்ட (Pitt's India Act 1784):

இங்கிலாந்து பிரதமர் வில்லியம் பிட் என்பவர் 1784, ஜனவரியில் பாராளுமன்றத்தில் ஒரு மசோதாவை அறிமுகப்படுத்தினார். அது ஆகஸ்டு 1781 - ல் நிறைவேறப்பட்டு பிட் இந்தியச் சட்டம் என்ற பெயர் பெற்றது. பிட் இந்தியச் சட்டம் ஒழுங்குபடுத்தும் சட்டத்திலுள்ள மேலும் பல குறைபாடுகளை நீக்கியது. அது மட்டுமல்லாமல் கம்பெனியின் மீது இங்கிலாந்து பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டினை அதிகரித்தது.

**முக்கிய ஷரத்துக்கள்:**

### 1. கட்டுப்பாட்டு வாரியம் : (Board of control)

பிட் இந்தியச் சட்டப்படி இந்தியா சம்பந்தப்பட்ட அரசியல் நிர்வாக காரியங்களைக் கவனிப்பதற்கு புதிய சபை ஒன்று அமைக்கப் பட்டது. அதற்கு கட்டுப்பாட்டு வாரியம் என்று பெயர். இதில் அரசரால் நியமிக்கப்பட்ட ஆறு ஆணையர்கள் இடம் பெறுவர். அவர்கள் கருவூலத் தலைவர், அரசாங்க செயலர் ஒருவர் மற்றும் பிரிவி கவுன்சில் உறுப்பினர் கள் நான்கு பேர் ஆவர். இந்த வாரியம் கம்பெனி இயக்குநர் குழு, உரிமை யாளர் மன்றம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் பெற்றது. இவர்களுக்கு தனியாக ஊதியம் கிடையாது. அரசர் விரும்பும் வரை இவர்கள் பதவியிலிருப்பார்கள்.

### 2. கட்டுப்பாட்டு வாரியத்தின் அதிகாரங்கள் :

கட்பாட்டு வாரியமே இந்தியாவிற்கான ஆங்கிலக் கொள்கையை வகுக்கும் அதிகாரம் கொண்டது. எல்லா சிவில், ராணுவ, வருமான அதிகாரங்களை இந்த வாரியமே மேற்பார்வையிடும். இந்த வாரியத்தின் அனுமதி இன்றி கம்பெனி இயக்குநர் குழுவினர் எந்த உத்தரவையும் பிறப்பித்தல் கூடாது. இந்தியாவிலிருந்து வரும் எல்லாக் கடிதங்களையும் கட்டுப்பாட்டு வாரியத்திடம் சமர்ப்பிக்கப்படவேண்டும். இயக்குநர்கள் இந்தியாவுக்கு அனுப்பும் பதிலையும் திருத்த கட்டுப்பாட்டு வாரியத்திற்கு அதிகாரம் உண்டு.

மேலும் இச்சட்டத்தின் மூலம் உரிமையாளர்கள் மன்றத்தின் அதிகாரம் பெரிதும் குறைக்கப்பட்டது. ஏனெனில் கட்டுப்பாட்டு வாரியத் தின் ஒப்புதலைப் பெற்று வெளியிடப்பட்ட இயக்குநர்களின் முடிவை உரிமையாளர் மன்றம் நீக்கவோ மாற்றவோ முடியாது.

### 3. ரகசியக் குழு ஒன்று அமைப்பு: (Committee of Secracy)

பிட் இந்தியச் சட்டத்தின்படி கம்பெனியின் இயக்குநர் குழுவிலுள்ள 24 உறுப்பினர்களிலிருந்து தேர்ந் தெடுக்கப்பட்ட மூன்று உறுப்பினர்களைக்

கொண்ட ரகசியக்குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. கட்டுப்பாட்டு வாரியத்திலிருந்து இந்தியாவிற்கு அனுப்பப்படும் ரகசிய ஆணைகள் இந்த ரகசியக்குழு மூலமாகவே செல்லும். இந்த ரகசியக் குழு உறுப்பினர்கள் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு துணை நிற்பார்கள். இதன் விளைவாக கம்பெனி நிர்வாகம் பற்றி எடுக்கும் முக்கிய முடிவுகளின் மீது 21 இயக்குநர்கள் விலக்கப்பட்டனர்.

**4. கவர்னர் ஜெனரலின் ஆலோசனைக்குழு உறுப்பினர் எண்ணிக்கை குறைப்பு:**

இந்தியாவில் கவர்னர் ஜெனரலின் ஆலோசனைக்குழு உறுப்பினர் களின் எண்ணிக்கை நான்கிலிருந்து மூன்றாக குறைக்கப்பட்டது. இதன்படி கவர்னர் ஜெனரல் ஒரு உறுப்பினர் ஆதரவுடன் தனது முடிவு செய்யும் வாக்கையும் பயன்படுத்தி தனது விருப்பங்களையும் கொள்கைகளையும் நிறைவேற்ற முடியும்.

**5. மாகாண கவர்னர்களின் ஆலோசனைக் குழு அமைப்பு:**

பிட் இந்தியச் சட்டம் இந்திய மாகாணங்களில் கவர்னரின் ஆலோச னைக்குழு அமைக்கப்பட வழி செய்தது. இந்த ஆலோசனைக்குழுகவர்னர் உட்பட நான்கு உறுப்பினர்களைக் கொண்டது. இவர்களில் ஒருவர்படைத் தலைவராக இருக்க வேண்டும். இந்த ஆலோசனை சபை உறுப்பினர்களை கம்பெனி இயக்குநர் குழுவே நியமனம் செய்யும். ஆனால் அவர்களை திரும்ப அழைக்கும் உரிமை இயக்குநர் குழுவிற்கும் அரசருக்கும் மட்டுமே உண்டு .

**6. கவர்னர் ஜெனரலின் அதிகாரம் தெளிவாக்கப்பட்டது:**

பிட் இந்தியச் சட்டத்தின்படி சென்னை, பம்பாய் மாநிலங்கள் மீதான கவர்னர் ஜெனரலின் மேலதிகாரம் உறுதிப்படுத்தப்பட்டது. அதாவது, கவர்னர் ஜெனரலின் மேற்பார்வை செய்யும், வழிநடத்தும், கட்டுப்படுத்தும் அதிகாரம் ஆகியவை தெளிவாக வரையறுக்கப்பட்டது.

**7. புதிய நிலப்பகுதிகளை வெற்றி கொள்ளத்தடை :**

இந்த பிட் இந்திய சட்டப்படிதான் முதன் முதலாக இந்தியாவில் இருந்த கம்பெனியின் நிலப்பகுதிகள் இந்தியாவிலுள்ள பிரிட்டி‘ பகுதிகள்“ (British possessions in India) என்று அழைக்கப்பட்டது. மேலும், இந்தியாவில் பிரிட்டி‘ பேரரசை பரப்ப முயல்வது இங்கிலாந்தின் பெருமைக்கும் கொள்கைகளுக்கும் விரோதமானது என்று கூறப்பட்டது.

**8. இந்தியாவில் தவறு செய்யும் கம்பெனி ஊழியர்கள் மீது நீதி விசாரனை:**

பிட் இந்தியச் சட்டப்படி இந்தியாவில் கம்பெனி ஊழியர்கள் பரிசுகள் வாங்குவதும், லஞ்சம் வாங்குவதும் தண்டனைக்குரிய தவறுகள் ஆகும் என்றும் வலியுறுத்திக் கூறப்பட்டது. ஒவ்வொரு அலுவலரும் தாங்கள் இங்கிலாந்து திரும்பும் போது சொத்துக் கணக்கு காண்பிக்க வேண்டும். இந்தியாவில் தவறு செய்யும் அலுவலர்களை விசாரணை செய்ய சிறப்பு நீதி மன்றம் நிறுவப்பட பிட் இந்தியச் சட்டம் வழி வகுத்துக் கொடுத்தது.

**9. இயக்குநர் குழுவின் அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பட்டன :**

பிட் இந்தியச் சட்டப்படிகம்பெனி இயக்குநர்கள் இனி வாணிபம் சம்பந்தப்பட்ட அலுவல்களை மட்டுமே கவனிப்பார். அரசியல் அலுவல் களை கட்டுப்பாட்டு வாரியமே எடுத்துக்கொண்டது. தங்கள் பணியாளர்

களை நியமிப்பது அல்லது நீக்குவது மட்டுமே இயக்குநர் குழுவின் அதிகாரங்களாக இருந்தது.

**பிட் இந்தியச் சட்டம் - 1784 பிட் இந்தியச் சட்டத்தின் சிறப்பு:**

பிட் இந்தியச்சட்டத்தால் ஆங்கிலக் கம்பெனி பிரிட்டி' அதிகாரத் திற்கு உட்பட்ட அரசாங்க இலாக்காக்களில் ஒன்று போல் ஆகிவிட்டது எனலாம். இதுவரை தனது அலுவல்களில் அனுபவித்து வந்த எதேச்சதிகா ரத்தை கம்பெனி இழந்து விட்டது. இந்தியாவில் கம்பெனிக்குச் சொந்த மான பிரதேசங்கள் இங்கிலாந்து பாராளுமன்றத்தின் பொறுப்பாயிற்று.

வில்லியம் பிட் இயன்ற அளவிற்கு கம்பெனியின் பழைய அமைப்பை மாற்றாதிருக்க முயன்றார். இதனால் இயக்குநர்களும் கம்பெனி அதிகாரிகளும் மகிழ்ச்சியடைந்தனர்.

ஆனால் பிட் இந்தியச் சட்டம் மற்றொரு இரட்டை ஆட்சி முறை யைத் தோற்றுவித்தது. அதாவது கட்டுப்பாட்டு வாரியமும், இயக்குநர் குழுவும் ஒரே நேரத்தில் இந்திய அலுவல்களைக் கவனித்தன. கட்டுப் பாட்டு வாரியம் கம்பெனியின் இயக்குநர்களை அரசியலில் ஈடுபடாமல் தடுத்து, அரசியல் செய்திகளைத் தானே பார்த்துக் கொண்டது. அதாவது ஆங்கில இந்திய ஆட்சியில் அரசியல் பகுதியானது கட்டுப்பாட்டு வாரியத் தின்கீழும், வாணிப, சமூக, பொருளாதாரப் பிரிவுகள் இயக்குநர் குழுவின் கீழும் இயங்கிவந்தபடியால் இதை ஓர் இரட்டை ஆட்சி எனலாம்.

ஒழுங்குபடுத்தும் சட்டத்திலிருந்த குறைபாடுகள் நீக்கப்பட்டு கம்பெனியின் கையிலிருந்த அதிகாரங்கள் கவர்னர் ஜெனரலின் கைக்கு மாறியது. இந்தியாவின் அரசியல் இங்கிலாந்து அரசரின் கண்காணிப்பின் கீழ் வந்தது. இச்சட்டத்தில் நாடு கவரும் நோக்கமில்லை " என்று கூறப் பட்டிருந்தது. ஆனால் நடைமுறையில் அத்தகைய கொள்கை பின்பற்றப் படவில்லை, பின்பற்ற முடியவில்லை.

இவ்வாறு பிட் இந்தியச் சட்டம் இந்திய அரசியலமைப்பு வரலாற்றில் ஒரு சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது.

**1786-ம் வருடச் சட்டம் :**

பிட் இந்தியச் சட்டத்தின்படி ஆலோசனைக் குழுவினரின் எண்ணிக்கை நான்கிலிருந்து மூன்றாக குறைக்கப்பட்டாலும் ஆலோச னைக் குழுவினரின் பெரும்பான்மையோரின் அரசியலே நடைபெற்று வந்தது. அதைப் புறக்கணிக்கும் அதிகாரத்தை 1786-ம் வருடச் சட்டப்படி கவர்னர் ஜெனரல் பெற்றார். 1786 - ம் வருடச் சட்டப்படி,

1. கவர்னர் ஜெனரலுக்கு தனது ஆலோசனைக் குழுவின் பெரும் பான்மையோரின் முடிவைப் புறக்கணிக்கும் அதிகாரம் கொடுக்கப் பட்டது.
2. கவர்னர் ஜெனரலே இந்தியாவிலுள்ள பிரிட்டி' படைத் தளபதியாகவும் நியமிக்கப்பட்டார்.
3. ஆனால் கம்பனி இயக்குநர்கள் குழுவின் அனுமதியின்றி கவர்னர் ஜெனரல் இந்தியாவில் போர் பிரகடனம் செய்யக்கூடாது.

இவ்வாறு மேற்கண்ட பல சட்டங்களின்படி ஒழுங்குபடுத்தும் சட்டத்தில் காணப்பட்ட பல குறைபாடுகள் நீக்கப்பட்டன. அத்துடன் கம்பெனிக்கு மேலாக கட்டுப்பாட்டு வாரியத்தின் அதிகாரம் வளர்ந்தது. இந்தியாவில் 1858- ல் கம்பெனியின் ஆட்சி முடியும் வரையில் பிட் இந்தியச் சட்டம் ஏற்படுத்திய அரசியல் அமைப்பு எவ்வித அடிப்படையான மாறுதல்களும் இல்லாமல் பின்பற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது ஆகும்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

1. எந்த ஆண்டு ஒழுங்குமுறைச் சட்டம் இயற்றப்பட்டது?
2. ஒழுங்குமுறை சட்டம் யாருடைய காலத்தில் இயற்றப்பட்டது?
3. 1765 ஆம் ஆண்டு எந்தெந்த பகுதிகளில் தீவானி உரிமையை கம்பெனி பெற்றது?
4. ஒழுங்குபடுத்தும் சட்டத்தின்படி வங்காளத்தின் கவர்னர் இவ்வாறு அழைக்கப்பட்டார்?
5. பிட் இந்திய சட்டம் எந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டது

## 3.4 பட்டய சட்டம்

### 3.4.1 1813-ம் வருட பட்டயச் சட்டம் (Charter Act of 1813)

1793-ம் வருட பட்டய சட்டப்படி கம்பெனிக்கு இருபது வருட காலத்திற்கு வழங்கப்பட்ட வியாபார முற்றுரிமைக் காலம் முடிவடையவே கம்பெனி நிர்வாகத்தினர் அந்த சாசனத்தைப் புதுப்பிப்பதற்காக பாராளுமன்றத்திடம் விண்ணப்பித்தனர். எனவே பாராளுமன்றம் கம்பெனியின் விவகாரங்களை அலசி ஆராய முற்பட்டது. பல பாராளு மன்ற உறுப்பினர்கள் கம்பெனியின் முற்றுரிமையை ஒழித்துக்கட்ட விரும்பினர். நீண்ட விவாதத்திற்குப் பிறகு பாராளுமன்றம் 1813-ல் பதிமூன்று தீர்மானங்களை நிறைவேற்றியது. அந்த தீர்மானங்களின் அடிப்படையிலேயே 1813-ம் வருட பட்டய சட்டம் இயற்றப்பட்டது. இந்தச் சட்டமானது கம்பெனிக்கு இந்திய வாணிபத்தில் இருந்த முற்றுரிமை (monopoly)யை நீக்கிவிட்டது. மேலும் கம்பெனியின் உடமை களின் மீது சந்தேகத்திற்கு இடமில்லாமல் மன்னரின் ஆதிபத்திய உரிமையை இச்சட்டம் உறுதிப்படுத்தியது.

**1813-ம் வருட பட்டய சட்டம் இயற்றப்பட்ட சூழ்நிலை :**

1. கம்பெனியின் நிதிநிலை மிக மோசமடைந்தது. அதன் பொதுக் கடன் அதிகரித்தது. வெல்லஸ்லி பிரபுவின் கொள்கைகளின் காரணமா கவேகம்பெனிக்கு புல இடையூறுகள் ஏற்பட்டன. எனவே பாராளுமன்றத் திடம் கடன் கேட்டு கம்பெனி விண்ணப்பித்தது.
2. கம்பெனிக்கு வழங்கப்படும் சாசனத்தைப்பற்றி விவாதம் பாராளுமன்றத்தில் வந்தபோது, இங்கிலாந்திலுள்ள பெரிய வாணிபர்கள், உற்பத்தியாளர்கள், கப்பற் சொந்தக்காரர்கள் கம்பெனியின் முற்றுரிமை யை மேலும் நீட்டிக்கக் கூடாது என்று விண்ணப்பம் அளித்தனர். இந்தியா மற்றும் சீனாவுடனான வியாபாரம் செய்யும் உரிமை எல்லா ஆங்கில மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.
3. புரட்டஸ்தாந்து மீனரிமார்கள் தாங்கள் இந்தியாவிற்குச் சென்று மதப்பிரச்சாரம் செய்ய அனுமதியளிக்க வேண்டும் என்றும் அரசாங்கத்திடம் முறையிட்டனர்.

மேற்கண்ட சூழ்நிலையில் கம்பெனியின் சாசனம் பற்றிய விவாதம் நடைபெற்றது. வியாபார முற்றுரிமையை நீட்டிக்க வேண்டும் என்றும், கிறிஸ்துவ மதப்பிரச்சாரர்களுக்கு அனுமதி வழங்க கூடாது என்றும் கம்பெனி நிர்வாகத்தினர் வாதிட்டனர். இதனால் காமன்ஸ் சபை இந்திய செய்திகளைப்பற்றி விசாரிப்பதற்கு ஒரு பொறுக்கு (ளுயடநஉவ ஊழஅஅவைவநந) குழுவை அமைத்தது. அக்குழு சமர்பித்த அறிக்கையின் அடிப்படையில் 1813-ம் வருட பட்டய சட்டம் இயற்றப்பட்டது.

**1813-ம் வருடப் பட்டயச் சட்டத்தின் ஷரத்துக்கள்:**

**1. கம்பெனியின் வாணிப முற்றுரிமை ஒழிக்கப்பட்டது:**

1813-ம் வருட பட்டய சட்டம் இந்தியாவுடன் வியாபாரம் செய்யும் உரிமையை மேலும் இருபது ஆண்டுகளுக்கு நீட்டித்தது. ஆனால் இந்திய வாணிபத்தில் கம்பெனிக்கு இருந்த முற்றுரிமை நீக்கப்பட்டது. இங்கிலாந்து மக்கள் அனைவருக்கும் இந்தியாவுடன் வாணிபம் செய்யும் உரிமை வழங்கப்பட்டது. ஆனால் தேயிலை, கஞ்சா முதலிய பொருட் களை சீனாவுக்கு விற்பதில் கம்பெனி பெற்றிருந்த முற்றுரிமை மேலும் இருபது ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டது. இந்தியாவுடன் வியாபாரம் செய்ய லைசென்ஸ் வழங்குவதில் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

**2. கிறிஸ்தவ மிஷினரிமார்களுக்கு இந்தியா செல்ல அனுமதி:**

சட்டப்படி கிறிஸ்தவ மிஷினரிமார்கள் இந்தியாவுக்கு சென்று கிறிஸ்துவ மதத்தைப் பரப்ப அனுமதிக்கப்பட்டது. இது இந்தப் பட்டய சட்டத்தின் சிறப்பு அம்சமாகும். சமய நிர்வாகத்தைக் கவனிக்க தனியாக துறை ஒன்று அமைக்குமாறுகம்பெனி கேட்டுக் கொள்ளப்பட்டது. இந்திய மக்களுக்கு சமய வழிபாட்டுரிமை வழங்கவே இவ்வாறு மத பிரசாரம் செய்ய அனுமதியளிப்பதாக சட்டத்தில் கூறப்பட்டது.

**3. மேற்கத்திய கல்வி முறையைப் பரப்ப பண ஒதுக்கீடு:**

இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் பகுதிகளில் வாழும் மக்களின் கல்வி, பண்பாட்டு, அறிவியல் வளர்ச்சிக்கு கம்பெனியின் லாபத்திலிருந்து ஆண்டுக்கு ஒரு லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்று கூறப் பட்டது. இவ்வாறு இச்சட்டப்படி முதன் முதலாக இந்தியக் கல்வி வளர்ச்சிக்கான பொறுப்பை கம்பெனி ஏற்கும்படி நேர்ந்தது. இது 1813-ம் வருட பட்டய சட்டத்தின் முக்கியப்பகுதியாகும்.

**4. கம்பெனியின் நிதி நிர்வாக சீரமைப்பு :**

இச்சட்டப்படி கம்பெனி தனது வாணிபம் சம்பந்தப்பட்ட வரவு செலவுகளைத் தனியாகவும், நிர்வாகம் சம்பந்தப்பட்ட வரவு செலவுக ளைத் தனியாகவும் வைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. மேலும் செலவீனங்களுக்கு முக்கியத்துவத்தின் அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

**5. கட்டுப்பாட்டு வாரியத்தின் அதிகார விரிவாக்கம் :**

இச்சட்டப்படி இந்தியாவில் கம்பெனியின் ஆட்சிக்குரிய பகுதி களில் மன்னரின் ஆதிக்கம் உறுதிப்படுத்தப்பட்டது. மேலும் கட்டுப்பாட்டு வாரியத்தின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டன. கம்பெனி இயக்கு நர்களுக்கு இனிமேல் கவர்னர் ஜெனரல், கவர்னர்கள், படைத்தளபதிகள் ஆகியோரை மட்டுமே நியமனம் செய்ய உரிமை உண்டு. ஆனால் இந்த நியமனங்களுக்கும் கட்டுப்பாட்டு வாரியத்தின் ஒப்புதல் பெற வேண்டும்.

**6. சிவில், ராணுவ ஊழியர்களுக்கு பயிற்சி நிலையங்கள் அமைப்பு :**

இந்தியாவில் கம்பெனி சிவில், மற்றும் ராணுவத் துறையில் நியமனம் செய்யப்படும் ஊழியர்களுக்கு தக்க பயிற்சி அளிக்க வேண்டும் என்று இச்சட்டம் கூறியது. அதற்காக சிவில் ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்க ஹெயிலிபரி (Hailey bury)யில் ஒரு பயிற்சி நிலையமும், ராணுவ ஊழியர்களுக்கு அடிஸ்கோம்ப் (Adis comb) என்ற இடத்தில் ஒரு பயிற்சி நிலையமும் அமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

**7.ஸ்தலசுயாட்சி நிறுவனங்களுக்கு அதிக அதிகாரம்:**

இச்சட்டப்படி தலசுயாட்சி நிறுவனங்களுக்கு மேலும் சில அதிகாரங்கள் வழங்கப்பட்டன. மக்கள் மீது வரி விதிக்கவும், வரி செலுத்

தாதவர்களைத் தண்டிக்கவும் உரிமை வழங்கப்பட்டது.

**8. இந்தியாவில் ஆங்கிலப்படை:**

கம்பெனி ஆட்சிப் பகுதியில் மன்னருக்குட்பட்டவை ஆகிவிட்ட தால் அப்பகுதிகளின் பாதுகாப்பிற்காக இருபதாயிரம் பிரிட்டி' ராயல் படைகளை அங்கு நிறுத்தி வைக்க அனுமதிக்கப்பட்டது. அந்த படைக ளுக்கான பராமரிப்புச் செலவுகளை கம்பெனியே ஏற்றுக் கொள்ள வேண்டும். இது தவிர கம்பெனி இந்திய படை ஒன்றையும் அமைத்துக் கொள்ளலாம்.

**9. பிஷப் நியமனம்:**

இச்சட்டப்படி கல்கத்தாவில் உள்ள ஐரோப்பியர்களின் நலன்களுக் காக ஒரு பிஷப்பும் அவருக்கு உதவி செய்வதற்காக மூன்று துணை அலுவலர்களும் நியமிக்கப்பட்டார்கள் இந்த பிஷப்பின் நியமனம் இந்தியாவில் திருச்சபை வரலாற்றின் தொடக்கமாக அமைகிறது.

**1813-ம் வருடப் பட்டயச் சட்டத்தின் முக்கியத்துவம்:**

1813-ம் வருடப் பட்டயச் சட்டமானது கீழ்க்கண்ட பல காரியங்களில் முக்கியத்துவம் பெருகிறது.

1. முதலாவதாக, இச்சட்டமானது தடையில்லா வாணிபக் கொள்கை க்குக் கிடைத்த வெற்றியாகக் கருதப்படுகிறது. காரணம் கம்பெனியின் வியாபார முற்றுரிமை ஒழிக்கப்பட்டு இந்திய வியாபாரம் பொதுவாக்கப்பட்டது. ஆனால் வணிக முற்றுரிமை நீக்கப்பட்டதால் ஐரோப்பியப் பொருட்கள் இந்தியாவில் வந்து குவிந்தன. இதனால் இந்தியத் தொழில்கள் பாதிக்கப்பட்டு கடைசியில் அழிந்தே போயின என்ற - குற்றச் சாட்டிற்கும் இச்சட்டம் இடம் தருகிறது.
2. இரண்டாவதாக, இச்சட்டத்தின்படி கல்வி வளர்ச்சிக்கு ஒரு லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்திய வரலாற்றில் பல மாற்றங் களை ஏற்படுத்தியது. இந்தியர்கள் ஆங்கிலக்கல்வியை படிக்க ஆரம்பித்த தால் கம்பெனி நிர்வாகத்தில் வேலைக்கு குறைந்த சம்பளத்தில் அதிக இந்தியர்கள் கிடைத்தார்கள். மேற்கத்தியக் கல்வி முறை இந்தியாவில் வேகமாக வளர்ச்சியடைந்தது.
3. மூன்றாவதாக, இச்சட்டத்தின்படி இந்தியாவிற்கு வந்த கிறிஸ்தவ சமய பரப்பாளர்கள் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்ப முழு மூச்சுடன் ஈடுபட்டனர். இதற்காக பல தேவாலயங்கள் கட்டப்பட்டன. மருத்துவ மனைகள், மி'னரி பள்ளிக்கூடங்களை நிறுவினர். இதனால் ஆயிரக்கணக் கான இந்தியர்கள் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினர். இது இந்திய வரலாற்றில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

   இவ்வாறு பலவகைகளில் 1813-ம் வருடப்பட்டயச்சட்டம் இந்திய அரசியலமைப்பு வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ளது.

### 3.4.2 1833-ம் வருட பட்டயச் சட்டம் (Charter Act of 1833)

1813-ம் வருட பட்டய சட்டப்படி கம்பெனிக்கு மேலும் இருபது வருட காலத்திற்கு வழங்கப்பட்ட சாசனம் முடிவடையும் நேரத்தில் கம்பெனி நிர்வாகக் குழுவினர் சாசனத்தைப் புதுப்பிக்கும்படியாக பாராளுமன்றத்திடம் விண்ணப்பித்தனர். பாராளுமன்றம் உடனே இந்திய நிர்வாகம் பற்றி ஆராய ஒரு பொறுக்கு குழுவை (Select Committee) அமைத்தது. அந்த குழு சமர்பித்த அறிக்கையின் அடிப்படையில் 1833-ம் வருட பட்டயச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் இங்கிலாந்தில் 1830 முதல் 1834- ம் வருடம் வரை பிரதமராக இருந்த கிரேகோகமன் (Earl Grey) காலத்தில் இயற்றப்பட்டது. அப்போது இந்தியாவில் கவர்னர் ஜெனரலாக இருந்தவர்

வில்லியம் பென்டிங் பிரபு ஆவார். இந்த சட்டத்தில் விக் கட்சியினரின் தாராள கொள்கைகளின் பிரதிபலிப்பையும், சிறந்த கற்றறிவாளரான மெக்காலே பிரபு, பொருளாதார மேதை ஜேம்ஸ் மில் ஆகியோரின் கருத்துக்களையும் நாம் காணமுடிகிறது.

**1833-ம் வருட பட்டய சட்டத்தின் ஷரத்துக்கள் :**

**1. கம்பெனியின் வியாபார நடவடிக்கைகளின் முடிவு:**

இச்சட்டப்படி கம்பெனியின் வியாபார நடவடிக்கைகள் அனைத்தும் முடிவுக்கு வந்தன. இனிமேல் கம்பெனி இங்கிலாந்து அரசரின் சார்பாக நிர்வாகத்தை மட்டுமே நடத்தி வரவேண்டும். கம்பெனியின் வியாபார நடவடிக்கைகளை நிறுத்திவிட்டதற்கு இழப்பீடாக 90 மில்லியன் பவுன்ட்கள் இந்திய வருமானத்திலிருந்து கொடுக்கப்பட முடிவு செய்யப் பட்டது. மேலும் இச்சட்டம் சீனாவுடன் கம்பெனிக்கு இருந்த முற்றுரிமை யையும் நீக்கிவிட்டது. எனவே கம்பெனி தனது வாணிய உரிமைகளை யெல்லாம் இழந்து விட்டது.

**2. கவர்னர் ஜெனரலின் அதிகார விரிவாக்கம் :**

1833 - ம் வருட பட்டயச் சட்டம் மாகாண அரசாங்கங்களின் மீது மைய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டை உறுதிப்படுத்தியது. வில்லியம் கோட்டையின் கவர்னர் ஜெனரல்“ என்பது இனிமேல் இந்தியாவின் கவர்னர் ஜெனரல என்று அழைக்கப்பட வேண்டும். இவரே வங்காளத்தின் கவர்னராகவும் இருப்பார். கவர்னர் ஜெனரலும் அவரது ஆலோசனை சபையும் தங்கள் ஆட்சியின் கீழ் இருக்கும் மாகாணங்கள் மீது மேற்பார்வை யிடுதல், கட்டளையிடுதல், கட்டுப்பாடு செய்தல் போன்ற அதிகாரங் களைப் பெற்றார்கள்.

இச்சட்டம் இந்தியாவில் ஒரு மைய ஆட்சிமுறை அமைய வேண்டியதின் அவசியத்தை உணர்ந்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. மாகாணகவர்னர்கள் கவர்னர் ஜெனரலின் கட்டளைக்குக் கீழ்படிய வேண்டும். கவர்னர் ஜெனரலின் அனுமதியின் பேரிலேயே வருமானத்தைப் பெருக்கவும், செலவு செய்யவும் வேண்டும். இந்தியா முழுமைக்குமான ஒரே வரவு செலவு திட்டம் கவர்னர் ஜெனரலினால் தயாரிக்கப்பட வேண்டும் என்று இச்சட்டம் கூறியது.

**3. மைய அரசின் சட்டம் இயற்றும் அதிகாரம்:**

1833-ம் வருடப் பட்டயச் சட்டத்தின் மூலம் ஒருமுகப்படுத்தப் பட்ட சட்டம் இயற்றும் அதிகாரம் உருவாக்கப்பட்டது. இதற்கு முன்பு ஒரே மாதிரியான சட்டம் இயற்றும் முறை இல்லை. நடைமுறையில் பட்டய சட்டங்கள், பாராளுமன்றச் சட்டங்கள், கவர்னர் ஜெனரலின் ஆணைகள், நீதிமன்ற தீர்ப்புகள் போன்ற பலவகையான சட்டங்கள் காணப்பட்டன. எனவே 1833 - ம் வருடச்சட்டமானது இந்தியர்கள் அல்லது ஆங்கிலேயர்கள் ஆகிய எல்லோருக்கும் அரசரின் பட்டயப் படியோ அல்லது வேறுவகை யிலோ உருவாக்கப்பட்ட எல்லாவித நீதிமன்றங்களுக்கும் உரிய சட்டங் களையும், ஒழுங்குமுறைகளையும், கவர்னர் ஜெனரலும் அவரது ஆலோசனை சபையும் இயற்றும் அதிகாரம் கொடுக்கப்பட்டது.

**4. கவர்னர் மற்றும் கவர்னர் ஜெனரலின் ரத்து ஆணை அதிகாரம்**:

இச்சட்டம் கவர்னர், மற்றும் கவர்னர் ஜெனரலின் ரத்து ஆணை அதிகாரம் பற்றிய தெளிவான விளக்கத்தை கூறியது. தங்கள் ஆலோசனை - சபை நிறைவேற்றிய முடிவுகளை நிறுத்தி வைக்க ரத்து ஆணையை (ஏநவழ ிழறநச) உபயோகிக்கும் போது அதற்கான காரணத்தை தெளிவுபட

கூற வேண்டும். மேலும் இந்த ரத்து ஆணை அதிகாரத்தை அடிக்கடி உபயோகிக்க வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

**5. ஆலோசனை சபையில் சட்ட உறுப்பினர் சேர்க்கப்படுதல்:**

கவர்னர் ஜெனரலின் ஆலோசனை சபை சட்டம் இயற்றும் செயல் களைத் திறமையாகச் செய்யும் பொருட்டு சட்ட வல்லுநர் ஒருவர் நான்காவது உறுப்பினராக ஆலோசனை சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். இந்தச் சட்ட உறுப்பினர் கம்பெனியின் பணியாளராக இருக்கக்கூடாது. ஆலோசனைசபை சட்டம் சம்பந்தப்பட்ட செயலில் ஈடுபடும் போது மட்டுமே இந்த சட்ட உறுப்பினர் அதன் விவாதங்களில் பங்குகொண்டு தம் வாக்கை அளிக்கும் உரிமை பெற்றிருந்தார். மெக்காலே பிரபு முதல் சட்ட உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

**6. இந்தியர்களுக்கு எதிரான வேற்றுமை ஒழிக்கப்பட்டது:**

இச்சட்டம் இந்தியர்களுக்கு எதிரான வேற்றுமையை ஒழித்தது. எந்த இந்தியனும் சமயம், சாதி, நிற வேறுபாட்டால் வேலை பெறும் வாய்ப்பை இழக்கக்கூடாது என்று இச்சட்டம் கூறியது. திறமை மட்டுமே அரசாங்க வேலையில் சேர தகுதியாகும் என்று கூறப்பட்டது. இதனால் இந்தியர் கம்பெனியின் குடிமக்கள் என்ற உரிமை முதன்முதலாக ஏட்டளவிலாவது ஒப்புக் கொள்ளப்பட்டது எனலாம்.

**7. ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு வர இருந்த தடை நீக்கம் :**

இச்சட்டப்படி ஆங்கில பிரஜைகள் தங்கள் வியாபாரம், மத சம்பந்தப் பட்ட வேலை மற்றும் சட்டப்படியான பிற காரியங்களுக்கு இந்தியாவிற்கு வருவதற்கு இருந்த தடைகள் அனைத்தும் நீக்கப்பட்டுவிட்டன. ஆங்கிலேயர்கள் இனி இந்தியாவிற்கு வந்து நிலம் வாங்கி எந்த இடத்திலும் குடியேறலாம். ஆனால் ஆங்கிலேயர்கள் மூலம் இந்தியர்களுக்கு அவமரியாதை ஏற்படாதவாறு அரசாங்கம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

**8. இந்தியர்கள் நலன்கள் காக்கப்படுதல்:**

இச்சட்டமானது இந்திய மக்களின் நலன்களைப் பேணுவதற்கான சட்டங்களை இயற்ற கவர்னர் ஜெனரலுக்கு அதிகாரம் வழங்கியது. இதன் அடிப்படையில் தான் இந்தியாவில் அடிமை முறை ஒழிக்கப்பட்டது. பல சமுதாய சீர்திருத்தச் சட்டங்கள் இயற்றப்பட்டன.

**9. கம்பெனிக்கு இழப்பீடு:**

கம்பெனியின் வியாபார உரிமைகள் முற்றிலும் ஒழிக்கப்பட்டு விட்டதால் கம்பெனி கொடுக்க வேண்டிய கடன் முழுவதும் இந்திய வருமானத்திலிருந்து கொடுக்க வேண்டும் என்று இச்சட்டம் கூறியது. கம்பெனி பங்குதாரர்களுக்கு வருடத்திற்கு 10.30 சதவீதம் லாபப் பங்கீட்டை ஐம்பது ஆண்டுகளுக்கு கொடுக்க உறுதியளிக்கப்பட்டது.

**10. கட்டுப்பாட்டு வாரியத்தில் செய்யப்பட்ட மாற்றம்:**

கட்டுப்பாட்டு வாரியத்தின் அமைப்புமுறை இச்சட்டப்படி மாற்றப்பட்டது. கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவர் இனி இந்தியாவிற் கான அமைச்சர் (Minister for indian affairs) என்று அழைக்கப்படுவார். அவருக்கு உதவி செய்வதற்காக இரண்டு ஆணையர்களும், ஒரு செயலரும் நியமிக்கப்பட வேண்டும். இச்சட்டம் கம்பெனி இயக்குநர்களின் அதிகாரங் களை மேலும் குறைத்து அவர்களை கட்டுப்பாட்டு வாரியத்தலைவருக்கு ஆலோசனை கூறுபவர்களாக மட்டுமே இருக்கும்படி மாற்றியது.

**1833-ம் வருடச் சட்டத்தின் முக்கியத்துவம்:**

1. இச்சட்டத்தின்படி இந்தியாவின் முதலாவது கவர்னர் ஜெனரலாக பொறுப்பேற்றவர் வில்லியம் பெண்டிங் பிரபு என்பவராவார். இவர் அச்சட்டம் தனக்கு அளித்த அதிகாரங்களின்படி பல சமுதாயச் சீர்திருத்தங்களை இந்தியாவில் புகுத்தினார். அவைகளில் முக்கியமானது சதி“ (Sati) சட்டப்படி ஒழிக்கப்பட்டதேயாகும்.
2. கவர்னர் ஜெனரலின் ஆலோசனை சபையில் சட்ட உறுப்பின ராகச் சேர்ந்த பெரியார் மெக்காலே பிரபு இந்தியாவில் கல்வி, சட்டம், நீதிமுறை ஆகியவற்றின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டார்.
3. 1833- ம் வருடச் சட்டம் இந்தியாவில் மைய ஆட்சி முறை தோன்றுவதற்கு அடிகோலியது என்று கூறலாம். இந்தியா முழுமைக்கு மான சட்டம் இயற்றும் உரிமை மைய அரசுக்கு அளிக்கப்பட்டது. இதனால் மாநிலங்களின் சட்டம் இயற்றும் உரிமையானது பறிக்கப்பட்டது. இவ்வாறு இந்திய சட்டசபை“ (Indian legislature) தோன்ற இச்சட்டம் அடிகோலியது.
4. ஆதிக்க நிலையிலுள்ள அரசியலார் தாமது மக்களின் நலன்களில் அக்கரை கொள்ள வேண்டும் என்ற குறிப்பு வரலாற்றில் இணையற்ற புகழ் பெற்றதாகும். ஆனால் 19-ம் நூற்றாண்டில் அது பெயரளவிலேயே இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.
5. இச்சட்டத்தின்படி கம்பெனியின் தோற்றம் மாற்றப்பட்டது. வாணிகக் கம்பெனி“ என்ற நிலையிலிருந்து மாறி ஒரு ஆட்சி செய்யும் அமைப்பு“ என்ற நிலையடைந்தது. லாப நோக்கில் செயல்படுவது நிறுத்தப் பட்டு, மக்களின் நலன்நாடும் செயல்களில் ஈடுபடும் நிர்வாக அமைப்பாக கம்பெனி மாறியது.

### 3.4.3 1853-ம் வருட பட்டய சட்டம் (Charter Act of 1853)

1853 - ம் வருட பட்டய சட்டம் இங்கிலாந்து பாராளுமன்றம் இயற்றிய பட்டய சட்டங்களில் இறுதியானது ஆகும். 1833- ம் வருட சட்டப் படி கம்பெனிக்கு கொடுக்கப்பட்ட இருபது வருட கால சாசனம் 1853-ல் முடிவடையவே, சாசனத்தை மேலும் இருபது ஆண்டுகளுக்கு புதுப்பிக்கு மாறு பாராளுமன்றத்திடம் கம்பெனி நிர்வாகத்தினர் விண்ணப்பித்தனர். அப்போது பம்பாய் , சென்னை, வங்காள மக்கள் இங்கிலாந்து அரசாங்கத்திடம் பல விண்ணப்பங்களை அளித்தனர். அதில் தற்போது நடைமுறையிலுள்ள இரட்டை நிர்வாக முறையை ஒழிக்க வேண்டும் என்றும், அரசாங்க உயர் பதவிகளில் இந்தியர்களையும் நியமிக்க வேண்டும் என்றும், பிரதிநிதித்துவ ஆட்சிமுறை அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது. இவை பற்றி ஆராய பாராளுமன்றம் குழு ஒன்றை அமைத்தது. அக்குழு சமர்பித்த அறிக்கையின் அடிப்படையில் 1853-ம் வருட பட்டய சட்டம் இயற்றப் பட்டது. இந்த பட்டய சட்டம் அரசியலமைப்பில் மேலும் பல மாறுதல் களை ஏற்படுத்தியது.

**1853-ம் வருடச் சட்டத்தின் ஷரத்துக்கள்:**

**1. கம்பெனியின் சாசனம் புதுப்பிக்கப்படவில்லை :**

இச்சட்டத்தின்படி கம்பெனியின் சாசனம் மேலும் இருபது ஆண்டு களுக்கு நீட்டிக்கப்படவில்லை. ஆனால் பாராளுமன்றம் விரும்பும் வரை இங்கிலாந்து அரசரின் சார்பாக இந்தியாவிலுள்ள பிரிட்டி‘ பகுதிகளை கம்பெனி ஆட்சி செய்து கொள்ளலாம்“ என்று கூறப்பட்டது. இதனால் எப்பொழுது வேண்டுமானாலும் கம்பெனியிடமிருந்து ஆட்சி செய்யும் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள பாராளுமன்றம் உரிமை பெற்றது. 2.

இயக்குநர் குழுவின் அதிகாரம் குறைக்கப்பட்டது:

இச்சட்டப்படி கம்பெனி இயக்குநர்களின் அதிகாரம் மேலும் குறைக்கப்பட்டது. இயக்குநர்களின் எண்ணிக்கை இருபத்திநான்கிலிருந்து பதினெட்டாகக் குறைக்கப்பட்டது. இந்த பதினெட்டு பேரில் ஆறு பேர் மன்னரால் நியமிக்கப்படுவர். இதன்படி தேர்தல் இல்லாமல் இயக்குநர் குழுவின் உறுப்பினர்கள் நியமிக்கப்படும் முறை புகுத்தப்பட்டது. இயக்குநர் குழு கூட்டம் கூட்டுவதற்கு தேவையான குறைந்தபட்ச உறுப்பினர் எண்ணிக்கை பத்தாக ஆக்கப்பட்டது.

**3. ஆட்சிப் பணிக்கு தேர்வு போட்டி மூலம் நியமனம்:**

நிர்வாகக் குழுவிடம் எஞ்சியிருந்த நியமனம் செய்யும் அதிகாரங்களும் இச்சட்டப்படி முடிவுக்கு வந்தன. அதாவது இச்சட்டப்படி, இனிமேல் கம்பெனி ஆட்சிப் பணித்துறைக்கு தேர்வுப்போட்டி நடத்தி அதன் மூலம் திறமை பெற்றவர்களையே நியமிக்க வேண்டும் என்று இச்சட்டம் வலியுறுத்தியது.

**4. கவர்னர் ஜெனரலின் சட்டமியற்றும் சபையின் விரிவாக்கம் :**

1853-ம் வருடச் சட்டத்தின்படி சட்டமியற்றும் சபையில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. கவர்னர் ஜெனரலின் ஆலோசனைக்குழுவிலிருந்த சட்ட உறுப்பினர் நிரந்தரமாக்கப்பட்டார். இப்போது ஆலோசனை சபை உறுப்பினர் எண்ணிக்கை மீண்டும் நான்கானது. சட்ட உறுப்பினர் மற்ற உறுப்பினர்களைப் போலவே எல்லாவிவாதங்களில் பங்கு பெறவும் ஓட்டளிக்கவும் உரிமை பெற்றார்.

இந்திய நிர்வாகச் சட்டங்களை இயற்றுவதற்காக கவர்னர் ஜெனரலின் சபை மேலும் விரிவாக்கப்பட்டது. ஆறு புதிய அங்கத்தினர்கள் புதிதாக ஆலோசனை சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அவர்கள் வங்காளத்தின் தலைமை நீதிபதி, தலைமை நீதிமன்றத்தின் மற்றுமொரு நீதிபதி, வங்காளம், பம்பாய், சென்னை , வடமேற்கு மாநிலம் ஆகியவைகளிலிருந்து ஒவ்வொரு உறுப்பினர் ஆகிய மொத்தம் ஆறுபேர் ஆவர்.

கட்க்கால் களியா

இவ்வாறு மையச் சட்ட சபைக்கு மாநிலப் பிரதிநிதிகளை அனுப்பும் முறையை 1853-ம் வருடப் பட்டய சட்டம் செயல்படுத்தியது. இவ்வாறு மைய சட்ட சபையின்“ (Central legislative council) தொடக்கம் இந்திய அரசியலமைப்பில் முதன் முதலாகப் புகுத்தப்பட்டது எனலாம். மேலும் மிக முக்கியமான மாற்றம் என்னவென்றால் கவர்னர் ஜெனரலில் ஆலோசனைக்குழுவானது நிர்வாகக்குழு“ (Executive) வாக மாறியது.

**5. சட்டமியற்றும் சபையின் நடைமுறை :**

கவர்னர் ஜெனரலின் புதிதாக சேர்க்கப்பட்ட ஆறு உறுப்பினர்களைக் கொண்ட சட்டசபையில் இங்கிலாந்து பாராளுமன்றத்தின் நடைமுறைகள் பின்பற்றப்பட்டன. சபையில் அறிமுகப்படுத்தப்படும் ஒவ்வொரு மசோதாவும் முதலில் ஒரு குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப் பட வேண்டும். அதன் பிறகு சபையில் விவாதம் நடைபெற்று நிறை வேற்றப்பட வேண்டும்.

சபையில் நிறைவேற்றப்பட்ட ஒவ்வொரு மசோதாவும் கவர்னர் ஜெனரலின் கையெழுத்து பெற்ற பின்னரே சட்டமாகும். இயற்றப்பட்ட மசோதாக்களை தள்ளுபடி செய்யும் “மறுப்பாணை அதிகாரம்“ (Veto Power) கவர்னர் ஜெனரலுக்குக் கொடுக்கப்பட்டது. தற்போது சட்டசபையில் உள்ள மொத்தம் 12 உறுப்பினர்களில் (கவர்னர் ஜெனரல், படைத்தளபதி,

ஆலோசனை சபை உறுப்பினர் 4 பேர், புதிதாக சேர்க்கப் பட்ட 6 பேர்) 7 பேர் வந்திருந்தால் தான் சபை நடவடிக்கையை ஆரம்பிக்க முடியும். இந்த உறுப்பினர்களின் வருடச் சம்பளம் 500 பவுன் என்று நிர்ணயிக்கப்பட்டது.

**6. இந்தியச் சட்டங்களின் தொகுப்பு :**

இந்தியச் சட்டங்களைத் தொகுப்பதற்கு லண்டனில் ஒரு சட்டக் குழு ஏற்படுத்தவும் இச்சட்டம் வழிவகுத்தது. ஏற்கனவே மெக்காலே பிரபுவின் தலைமையில் இந்திய சட்டங்களைத் தொகுக்கும் பணி 1833 லிருந்தே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. இதன் விளைவாக தண்டனை விதி தொகுப்பு, குற்றவியல் நடைமுறைத் தொகுப்பு ஆகியவை தொகுக்கப் பட்டு வெளியிடப்பட்டது.

**7. புதிய மாநிலங்களை உருவாக்கும் அதிகாரம்:**

1853-ம் வருட சட்டப்படி புதிய மாநிலங்களை உருவாக்கவும் ஏற்கனவே உள்ள மாநிலங்களின் எல்லைகளில் மாற்றம் செய்யவும் கவர்னர் ஜெனரலுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. ஆனால் இந்த மாற்றங்கள் கட்டுப்பாட்டு வாரியத்தின் ஒப்புதலைப் பெற வேண்டும். இதன்படிதான், அஸ்ஸாம், மத்திய மாகாணம், ஆக்ரா, பர்மா, டெல்லி போன்ற புதிய பல மாநிலங்கள் அமைக்கப்பட்டன.

**8. வங்காளத்திற்கு தனியாக கவர்னர் நியமனம்:**

இதுவரை இந்தியாவின் கவர்னர் ஜெனரலே வங்காளத்தின் கவர்னருமாக செயல்பட்டு வந்தார். இதனால் நிர்வாகப் பழுவும் பல குழப்பங்களும் ஏற்பட்டது. இதனை நிவர்த்தி செய்ய இச்சட்டப்படி வங்காளத்திற்கு தனியாக ஒரு கவர்னர் நியமிக்கப்பட்டார். மேலும் பஞ்சாப் மாநிலத்திற்கும் தனியாக ஒரு துணைகவர்னர் நியமிக்கப்பட்டார்.

**1853-ம் வருட பட்டய சட்டத்தின் முக்கியத்தும் :**

1853 வருட பட்டய சட்டமானது இந்திய அரசியலமைப்பு வளர்ச்சி யில் சிறப்பிடம் பெறுகிறது. கவர்னர் ஜெனரலின் ஆலோசனை சபை சட்டமியற்றுவதற்காக விரிவாக்கம் செய்யப்பட்டது. இந்தியாவில் ஒரு மைய சட்டசபை தொடங்கப்படுவதற்கு ஆரம்பம் என்று கூறலாம். அது ஒரு மினி பாராளுமன்றமாகவே செயல்பட ஆரம்பித்தது.

அடுத்து, கம்பெனியின் ஆட்சி உரிமை மேலும் இருபது ஆண்டு களுக்கு நீட்டிக்கப்படவில்லை. அதாவது ஒழுங்குமுறைச்சட்டத்திலிருந்து கம்பெனியின் ஆதிக்கம் சிறிது சிறிதாகக் குறைக்கப்பட்டு கடைசியில் பாராளுமன்றமே இந்திய ஆட்சியை எடுத்துக்கொள்ளக் கூடிய நிலை உருவாகிவிட்டது. ஆம் கம்பெனியின் முடிவு நெருங்கி விட்டது.

கம்பெனி நிர்வாக இயக்குநர்களின் அதிகாரங்கள் மேலும் குறைக்கப்பட்டதும், கவர்னர் ஜெனரலின் வேலைப் பளுவைக் குறைப்ப தற்காக வங்காளத்திற்கென்று தனியாக கவர்னர் நியமனம் செய்யப்பட்ட தும் இச்சட்டத்தின் முக்கிய அம்சங்களாகக் கருதலாம். எல்லாவற்றிற்கும் மேலாக, மாநிலங்களுக்கு மத்திய சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டதும், ஆட்சித் துறைப் பணிகளுக்கு போட்டித் தேர்வுகள் மூலமாக நிறம், இனம், மதம் ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபாடு இல்லாமல் திறமையின் அடிப்படையில் பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட முடிவு செய்யப்பட்டதும் 1853-ம் வருட பட்டய சட்டத்தின் முக்கிய அம்சங்களாகும்.

ஆனாலும் இச்சட்டமானது இந்தியர்களின் தேவைகளை நிறை வேற்றவில்லை. இந்திய ஆட்சி முறையில் காணப்பட்ட குறைபாடான

இரட்டை ஆட்சி முறை ஒழிக்கப்படவில்லை. இந்தியர்கள் கேட்டுக் கொண்ட பிரதிநிதித்துவ நிறுவனங்கள் அமைப்பது பற்றி இச்சட்டம் எதுவும் சொல்லவில்லை. மேலும் புதிதாக உருவாக்கப்பட்ட மைய சட்டமன்றத்தில் இந்தியர்கள் யாரும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

6. 1813 ஆம் வருட பட்டய சட்டம் இந்தியாவுடன் வியாபாரம் செய்யும் உரிமையை எத்தனை ஆண்டுகளுக்கு நீடித்தது?
7. 1833 ஆம் வருட பட்டயச் சட்டம் யாருடைய காலத்தில் இயற்றப்பட்டது?
8. பாராளுமன்ற இந்திய நிர்வாகம் பற்றி ஆராய அமைக்கப்பட்ட குழுவின் பெயர் என்ன?
9. பட்டைய சட்டங்களில் இறுதியாக ஏற்றப்பட்ட பட்டயச்சட்டம் எது?
10. 1888 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டம் எதற்காக?

## 3.5 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

21. 1773
22. வாரன் ஹேஸ்டிங்ஸ்
23. பீகார், ஒரிசா, வங்காளம்.
24. கவர்னர் ஜெனரல்
25. 1781.
26. 20 ஆண்டுகளுக்கு.
27. 1830 முதல் 1834 வரை பிரதமராக இருந்த கிரே கோமகன் காலத்தில் இயற்றப்பட்டது.
28. பொறுப்புக் குழு.
29. 1853 வருட பட்டயச்சட்டம்.
30. சிப்பாய் கலகத்தின் விளைவாகவே இச்சட்டம் இயற்றப்பட்டது.

## 3.6 சுருக்கவுரை

- இங்கிலாந்து நாடாளுமன்றம் 1773 ஆம் ஆண்டு இந்தியாவின் பொருட்டு இயற்றிய சட்டம் ஒழுங்குமுறைச்சட்டம் ஆகும்
- பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் தடையிலா வாணிபக் கொள்கை (Laissez-faire) பற்றி தேசிய அளவில் விவாதங்கள் நடைபெற்று வந்தன.
- பாராளுமன்றத்தின் எதிர்கட்சித் தலைவரான ஹென்றி டண்டாஸ் என்பவர் 1782- ல் ஆங்கில இந்திய ஆட்சி முறையைக் கண்டிக்கும் 45 தீர்மானங்களைக் கொண்டு வந்தார்.
- 1781 -ல் பாராளுமன்றம் இரண்டு குழுக்களை நியமித்தது. எட்மண்ட் பர்க் என்பவரின் தலைமையில் நியமிக்கப்பட்ட குழு இந்தியாவில் உள்ள நீதிபரிபாலனத்தை பரிசீலனை செய்தது.
- 1813-ம் வருட பட்டய சட்டமானது கம்பெனிக்கு இந்திய வாணிபத்தில் இருந்த முற்றுரிமையை நீக்கிவிட்டது.

## 3.7 முக்கிய கருத்துப்படிமங்கள்

- திவானி உரிமை: அவைகள் பிரித்தானிய கிழக்கிந்திய நிறுவனத்திற்கு வருவாயைச் சேகரித்து சிவில் வழக்குகளை முடிவு செய்ய வழக்குகளை முடிவு செய்ய வழங்கப்ட்ட உரிமைகள் ஆகும்.

- சிப்பாய்: அது பிரிட்டிஷ் அல்லது மற்ற ஐரோப்பிய கட்டளைகளின் கீழ் பணியாற்றும் ஒரு இந்திய சிப்பாயைக் குறிக்கிறது.

- சுபேதார்: நேபாள ராணுவம், இந்திய இராணும் மற்றும் பாகிஸ்தான் இராணுவம், பிரிட்டனைச் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் அதற்கு மேல் செயல்படாத அதிகாரிகளைக் கீழே உள்ள ஒரு வரலாற்று தரவரிசை ஆகும்.

## 3.8 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்

**குறு விடை வினாக்கள்**

6. ஒழுங்குமுறை சட்டம் ஏற்படுவதற்கான காரணங்களை வரைக
7. ஒழுங்குமுறை சட்டத்தின் நன்மைகளை கூறுக
8. பிட் இந்திய சட்டத்தில் ஷரத்துக்கள் யாவை

**நெடு விடை வினாக்கள்**

9. ஒழுங்குமுறை சட்டம் ஏற்படுவதற்கான காரணங்கள் மற்றும் அதன் தாக்கங்களை தெளிவாக விளக்குக
10. 1813,1833 மற்றும் 1853 ஆம் ஆண்டு பட்டய சட்டங்களைப் பற்றி விளக்குக

## 3.9 மேலும் படிக்க

சந்திரா, பிபின், 2009. நவீன இந்தியாவின் வரலாறு. ஹைத்தராபாத், ஓரியண்ட் பிளாக்வான்ஸ்.

டியூப்-பானர்ஜி, இஷிதா. நவீன இந்தியாவின் வரலாறு. கேம்பிரிட்ஜ், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக அச்சகம்

தாரிக், முகம்மது. 2007. நவீன இந்திய வரலாறு. புது தில்லி: டாடா மெக்ரா-ஹில் கல்வி.

பண்டியோபதியா, கெரா. 2004. பிளாசி முதல் பார்ட்டி வரை: நவீன இந்திய வரலாறு. ஹைதராபாத்: ஓரியண்ட் பிளாக்வான்ஸ்.

சென், S.N. 2006. நவீன இந்திய வரலாறு. புது தில்லி: நியூ ஏஜ் இண்டர்நேஷ்னல்.

## அலகு – 4 காலனி ஆதிகத்தில் இந்தியா

4.0 அறிமுகம்
4.1 நோக்கங்கள்
4.2 தலைமை ஆளுனர்கள் மற்றும் அவர்களின் கொள்கைகள்
நிரந்தர நிலவரி திட்டம்

4.3 துணைபடை திட்டம்
4.4 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்
4.5 சுருக்கவுரை
4.6 முக்கிய கருத்துப்படிமங்கள்
4.7 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்
4.8 மேலும் படிக்க

## 4.0 அறிமுகம்

ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி வணிகம் மற்றும் வணிக வியாபார நிறுவனத்திடமிருந்து இந்தியாவில் ஒரு பெரும் சக்தியாக விளங்குகிறது. நிறுவனத்தின் ஆட்சிப் பகுதிகள், கிழக்கே வங்காளத்திலிருந்து இந்தியாவின் எல்லா பகுதிகளுக்கும் பரவியதோடு, பிரிட்டிஷ் இந்தியப் பேரரசு என்று அழைக்கப்படுகிறது. தொடக்கத்தில் வங்காள ஆளுநராக இருந்த அந்த நிர்வாகி, பின்னர் ஆட்சி பகுதிகள் விரிவடைந்தபோது, அந்த நிர்வாகி இந்திய தலைமை ஆளுநராக பொறுப்பேற்றார். அப்போது, அதே அளவு வியாபாரமும், இலாபங்களும் நிறுவனத்தில் கூடியிருந்தது. நிறுவனத்தின் வணிக நலன்களை பாதுகாப்பது மற்றும் ஊக்குவிப்பதன் மூலம், இவை அனைத்தும் ஒன்றாக சேர்ந்து உள்ளன என்பதை உறுதி செய்யும் வகையில் கொள்கைகளை உருவாக்கும் போது, அவை எச்சரிக்கையாக இருந்தன. 1757 முதல் 1857 வரை இந்தியாவின் உள்ள தலைமை ஆளுநர்களை பற்றியும் அவர்களது கொள்கைகளைப் பற்றியும் இந்த அலகில் விவாதிப்போம்.

## 4.1 நோக்கங்கள்

இந்த அலகை நீங்கள் படித்து முடித்த பின்பு உங்களால்,

- காரன்வாலிஸின் சீர்திருந்தங்களை பற்றி அறிந்துக்கொள்ள முடியும்
- நிரந்தர நிலவரி திட்டம் பற்றியும் அதன் தாக்கத்தை பற்றி தெரிந்துக் கொள்ள முடியும்
- வெல்லெஸ்லியின் துணைப்படைத் திட்டத்தை விளக்க முடியும்.

## 4.2 தலைமை ஆளுனர்கள் மற்றும் அவர்களின் கொள்கைகள்

### 4.2.1 காரன்வாலிஸ் 1786-1793

உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவரும் அமெரிக்க சுதந்திரப் போரில் இங்கிலாந்தின் படைத் தலைவராக பணிபுரிந்தவருமான காரன்வாலிஸ் பிரபுலை கம்பளி நிர்வாகக் குழுவின் வில்லியம் கோட்டையின் கவர்னர் ஜெனரலாக நியமித்தனர். 1785 செப்டம்பர் மாதம் இந்தியா வந்து சேர்ந்த காரன்வாலிஸ் இந்தியாவிலிருந்த பிரிட்டிஷ் படைகளின் தளபதியாகவும் நியமிக்கப்பட்டார். இவர் இந்தியாவில் ஆட்சி புரிந்த ஏழு ஆண்டு காலத்தில் சிறந்த சீர்திருத்தங்களை செய்தார். அவர் ஏற்படுத்திய நிர்வாக அமைப்புகளும் நிலவரித் திட்டங்களும் 1858-ம் ஆண்டு வரை அப்படி பின்பற்றப்பட்டன. இவரது காலத்தில் தான் மூன்றாவது மைசூர் போர் நடைபெற்றது.

**காரன்வாலிஸ் வாழ்க்கை வரலாறு:**

சார்லஸ் காரன்வாலிஸ் 1738 டிசம்பர் 31- ம் தேதி எர்ல்கோமகள் கார்ன்வாலிசு க்கு மகனாகப் பிறந்தார். இளமையில் ஒரு போர்வீரர் ஆவதற்கான தகுதியைப் பெற்றார். 1760-ல் பொதுமக்கள் சபை பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1762-ல் தனது தந்தை இறந்த பின் வாரிசுரிமைப் படி பிரபுக்கள் சபை உறுப்பினர் ஆனார்.காரன்வாலிஸ் பிரபுக்கள் சபையில் அமெரிக்காவில் இங்கிலாந்தின் வரிக்கொள்கையை விமர்சித்தார். ஆனாலும் அமெரிக்க சுதந்திரப் போரில் ஆங்கிலப்படைகளின்

தளபதியாக நியமிக்கப்பட்டு போரிட்டார். 1781-ல் யார் கடவுள் அமெரிக்கப்படை முன்பு சரணடைந்தார். ஆனாலும் இவரது புகழ் குறையவில்லை.

கம்பெனி நிர்வாகத்தினர் காரன்வாலிஸ்க்கு ஆதரவு காட்டினார்கள். பேராற்றலும் நுண்ணறிவும் அவரிடம் இருந்ததால் 1782-ல் வில்லியம் கோட்டையின் கவர்னர் ஜெனரல் பதவி அளிக்க முன்வந்தனர். அதனை காரன்வாலிஸ் ஏற்கமறுத்து விட்டார். 1875-ல் இரண்டாம் முறையாக மறுத்து விட்டார். 1768-ல் மூன்றாம் முறையாக சில நிபந்தனைகளின் பேரில் அந்தப் பதவியை ஏற்று இந்தியா வந்தார். காரன்வாலிஸ் இந்தியாவில் தனது ஆட்சிக்காலத்தில் பல சீர்திருத்தங்களை செய்ய புகழ் பெற்றார். இவரது நிரந்தர நிலவரித் திட்டம் மிகவும் சிறப்பு வாய்ந்தது ஆகும்.

### 4.2.2 காரன்வாலிஸின் சீர்திருத்தங்கள்:

**நீதித்துறை சீர்திருத்தங்கள்**

ஆட்சி முறையில் சிக்கனத்தை கடைபிடித்த, சிக்கல்களை நீக்கி தூய்மைப்படுத்துவதே காரன்வாலிஸ் மேற்கொண்ட சீர்திருத்தங்களின் நோக்கமாக்கும். காரன்வாலிஸ் பிரபு வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய மாநிலங்களில் ஏற்படுத்திய நீதித்துறை சீர்திருத்தங்களுக்குப்பின் அந்த நீதி மன்றங்கள் சென்னை , பம்பாய் ஆகிய மாநிலங்களிலுள்ள நீதிமன்றம் களுக்கு முன் மாதிரியாக விளங்கின. அவர் எல்லா சீர்திருத்தங்களையும் ஏக காலத்தில் செய்யாமல் மூன்று கட்டங்களாக செய்தார். இவை அனைத்தும் சிக்கனத்தை அடிப்படையாகக் கொண்டவை. இந்த நீதித்துறை சீர்திருத்தங்களைச் செய்ய காரன்வாலிக்கு உதவி செய்தவர் சர். வில்லியம் ஜோன்ஸ் என்ற நீதிபதி ஆவார்.

**1787-ம் வருட சீர்திருத்தங்கள்**:

வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய மாநிலங்களிலிருந்து மொத்தம் 36 மாவட்டங்களை 23 ஆக குறைத்தார். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு ஆங்கிலக் கலக்டரை நியமித்தார். அவர் அந்த மாவட்டத்தின் நிர்வாக தைக் கவனிப்பவராக மட்டும் இல்லாமல் வழக்கை விசாரிப்பவராகவும், நீதிபதியாகவும் பணியாற்றினார். வரி சம்பந்தப்பட்ட வழக்குகளை (Revenue Cases) விசாரிக்கும் போது கலக்டராகவும், குற்றப்பதிவு வழக்கு களை விசாரிக்கும் போது அவர் மாஜிஸ்டிரேட்டாகவும் நீதிபதியாகவும் பணியாற்றினார். வரி சம்பந்தப்பட்ட வழக்குகளின் மேல் வழக்குகள் ரெவின்யூ போர்டின் உறுப்பினர்களால் விசாரிக்கப்பட்டது. அதற்கு மிஞ்சிய மேல் வழக்குகள் கவர்னர் ஜெனாவின் ஆலோசனைக் குழுவிற்கு விடப்பட்டன. ’

**சிவில் வழக்குகள்:**

சிவில் வழக்குகளை விவாரிக்கும் போது கலக்டர் மாஜிஸ்டிரேட் டாகப் பணியாற்றினார். ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட சிவில் வழக்குகளும், மாவட்ட மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் இருந்து வரும் மேல் வழக்குகளும் சடாச்திவாளி அடலட்டுக்கு அனுப்பப்பட்டன. ஐயாயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட வழக்குகள் பாபலாசனை சபைக்கம் எடுத்துச் செல்லப்பட்டன. இந்த ஏற்பாட்டின்படி மாவட்ட கலக்டரின் பொறுப்பு அதிகமாயிற்று. அனால் நீதிமன்றங்கள் நிர்வாகத்துறையின் பிடியிலிருந்து விலகி தனித்து செயல்பட முடியாமல் போய்விட்டது

**1790-ம் வருட சீர்திருத்தங்கள்:**

குற்றப்பதிவு வழக்குகளை விசாரிக்கும் முறையிலும் காரன்வாலிஸ் பிரபு பல சீர்திருத்தங்களை செய்தார். அதன்படி இதுவரை இஸ்லாமிய நீதிபதிகளின் தலைமையில் செயல்பட்டு வந்த சடர்நிசாமத் என்ற நீதிமன்றம் மூர்ீதாபாத்திலிருந்து கொல்கத்தாவிற்கு மாற்றப்பட்டது. கவர்னர் ஜெனரல் அவரது ஆலோசனைக் குழு உறுப்பினர்களும் அங்கு நீதிபதிகளாகப் பணியாற்றினர். அவர்களுக்கு உதலியாகத் தலைமைக்

கல்வியும், ஒரு மாட்டின் என்ற அதிகாரிகளும் நியமிக்கப்பட்டனர்.
இவை தவிரவங்காளம், பீகார், ஒரிசா ஆகிய மாநிலங்களை நான்கு பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு சுழல் நீதிமன்றமாக நான்கு நீதிமன்றங்களை அமைத்தார். இவை கவர்னரின் தலைமையில் செயல்பட்டன. ஆரம்ப விசாரணைகளை நடத்தி குற்றவாளிகளைக் கண்டுபிடித்து சிறிய குற்றங்களுக்குத் தண்டனை கொடுக்கவும், விசாரணை முடியும் வரை சிறையில் வைக்க உத்தரவிடவும், ஜாமீனில் விடவும் கவர்னருக்கு அதிகாரம் உண்டு. ஆனால் கொள்ளைக் கூட்டத்தினரையும், கொலை குற்றம் செய்தவர்களையும் அவர் ஜாமீனில் விட முடியாது

**1793-ம் வருட சீர்திருத்தம்:**

மாவட்டக் கலக்டர் நிர்வாக அதிகாரியாகவும், வரிவசூலைக் கண்காணிக்கிறவராகவும், மாவட்ட நீதிபதியாகவும் செயல்பட வேண்டியதிருந்தால் நேர்மையான தீர்ப்பு கூறப்பட வழியில்லை. ஒரு வேலையையும் திறமையாக அவர் செய்ய முடியாமல் போனதை அனுபவத்தில் அறிந்த காரன்வாலிஸ் பிரபு மாண்டஸ்கியுவின் அதிகாரப் பிரிவினைத் தத்துவக்கோட்பாட்டைக் கையாண்டார். இதன்படி கலக்டர் மாவட்டத்தின் நிர்வாகதை மட்டும் கவனிக்கும் அதிகாரியானார். வரிவழக்குகளை விசாரித்து வந்த ரெவின்யூ நீதி மன்றங்களை ஒழித்து அத்த அதிகாரத்தை திவானி அடலட் என்ற சிலில் நீதிமன்றத்திடம் ஒப்படைத்தார். அந்த நீதிமன்றத்தில் இத்து, இஸ்லாமிய சட்டங்கள் பின்பற்றப்பட்டது.

நீதி மன்றங்கள் கீழ்க்கண்டவாறு தரவாரியாகப் பிசிக்கப்பட்டு அவற்றின் நீதி விசாரணை எல்லைகளும் குறிப்பிடப்பட்டது.

சிவில் நீதிமன்றங்களில் அடிப்படையாக முன்சீப் கோர்ட் அமைத்தது. அதில் இந்தியர்கள் முன் சீப்களாகப் பணியாற்றினார். ஐம்பது ரூபாய் வரை மதிப்புள்ள வழக்குகள் இதில் விசாரிக்கப்பட்டன.
இதற்கு அடுத்ததாக பதிவு தார் நீதி மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. இதில் ஐரோப்பிய அதிகாரிகளே பணியாற்றினர். இரு நூறு ரூபாய் வரை மதிப்புள்ள வழக்குகள் இதில் விசாரிக்கப்பட்டன.

மேற்கூறப்பட்ட நீதிமன்றங்களிலிருந்து வரும் மேல் வழக்குகளை விசாரிக்க மாவட்ட நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. திறமை வாய்ந்த இந்திய வழக்கறிஞர்களின் உதவியால் மாவட்ட நீதிபதிகள் செயலாற்றினார்.

மாவட்ட நீதிமன்றங்களுக்கு மேலாக கல்கத்தா, மூர்ரிதாபாத், டாக்கா, பாட்னா ஆகிய இடங்களில் மாநில நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டன. அவை ஆயிரம் ரூபாய் வரை மதிப்புள்ள வழக்குகளை விசாரித்து வந்தன.

இதற்கு மேலாக சடர்திவானி அடலட் என்ற நீதிமன்றம் கல்கத்தாவில் அமைக்கப்பட்டது. அது 13000 ரூபாய் வரை மதிப்புள்ள வழக்குகளை விசாரித்தது. இதற்கு மிஞ்சிய வழக்குகள் அரச சபைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

**காரன்வாலிஸ் பிரபுவின் சட்டத் தொகுப்பு:**

1793-ல் காரன்வாலிஸ் சட்டத் தொகுப்பு ஒன்றை வெளியிட்டார். இந்த காரன்வாலிஸ் சட்டத் தொகுப்பு நாட்டின் நிர்வாகம், நீதி, காவல் துறை, நிதி, வரிகள் ஆகிய பல்வேறு நிலைகளை உள்ளடக்கியதாக இருந்தது. இம்பேயின் சட்டத் தொகுப்பை அடிப்படையாகக் கொண்டு இதனை தயாரித்தவர் ஜார்ஜ் பர்லோ (புநழசபந டீரசடழற) என்பவர் ஆவார். இதன்படிதான் வருவாய் துறையிலிருந்து நீதித்துறை அதிகாரம் பிரிக்கப்பட்டது. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதும் உறுதி செய்யப்பட்டது. இந்த சட்டத் தொகுப்பின் படி,

1. கம்பெனி ஆட்கள் குற்றம் செய்தாலும் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கோட்பாட்டின்படி, அவர்கள் நீதிமன்றங்களில் முறைப்படி விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.
2. இந்துக்களுக்கு இந்து சட்டங்களும், முஸ்லீம்களுக்கு முஸ்லீம் சட்டங்களும் பின்பற்றப்பட வேண்டும்.
3. அரசாங்க வழக்குகளும் சாதாரணமான நீதிமன்றங்களிலேயே விசாரணை செய்யப்பட வேண்டும்.
4. மாவட்ட கலக்டர்களிடமிருந்து நீதி செலுத்தும் அதிகாரம் பெறப்பட்டது. மேலும் நீதிமன்றங்களுக்கு செலுத்தப்பட்டு வந்த கட்டணத்தொகை இனி கட்டப்பட வேண்டியதில்லை, வழக்கறிஞர்களுக்கு கொடுக்கப்படவேண்டிய ஊதிய தொகை வாங்கிய வழக்கறிஞர்கள் நீதிமன்றகளுக்கு வருவதற்க்கு சட்டபடி தடுக்கப்பட்டனர்.
5. சட்ட நடவடிக்கைகள் அச்சிடப்பட்டு பத்திரப்படுத்தப்பட வேண்டும்.
6. நேர்மையும் திறமையும் உடைய நீதிபதிகளை நியமித்து அவர்களுக்கு சம்பளம் அதிகமாகக் கொடுத்து லஞ்ச ஊழலைத்தடுக்கவ்வேண்டும்.
7. குற்றப் பதிவு வழக்கு நீதிமன்றங்களிலும் பலதரப்பட்ட நீதி மன்றங்கள் அமைக்கப்பட வேண்டும்.

**இந்த தொகுப்பின் குறைபாடுகள்:**

காரன்வாலிஸ் நீதித்துறை சீர்திருத்தங்கள் சட்டத்தின் முன் யாவரும் சமம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்திருந்தன. இந்திய மக்கள் கம்பெனி ஆட்கள் கொடுமைகளிலிருந்து விடுவிக்கப்பட்டனர். ஆனால் இந்தியர்கள் யாவரும் நீதிபதிகளாக நியமிக்கப்பட்ட வில்லை. பல்வேறு நீதிமன்றங்கள் முக்கிய நகரங்களில் மட்டும் அமைக்கப்பட்டதால் மக்களுக்கு அதிக செலவு ஏற்பட்டது. மேலும் கல்வி அறிவற்ற எளிய மக்கள் காரன் வாலிஸ் சட்ட தொகுப்பை அறிந்து நன்மை பெற முடியவில்லை . இந்தியப் பழக்கவழக்கங்களை அறியாத ஆங்கிலேயர்கள் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டதால் நேர்மையற்ற தீர்ப்புகள் கூறப்பட்டன. பொய்வழக்குகள் பெருகின. பொய்சாட்சிகள் மலிந்தன.

**2) காவல்துறை சீர்திருத்தங்கள்:**

தாம் அமைத்த நீதிமன்றங்கள் திறமையுடன் செயல்பட காவல் துறையின் புனரமைப்பு அவசியம் என்று உணர்ந்த காரன்வாலிஸ் 1791-ல் காவல்துறை ஒழுங்குச் சட்டம் பிறப்பித்தார். நேர்மையாகவும், விரைவாகவும் பணியாற்றும்படி காவல் துறையினரின் சம்பளத்தை உயர்த்தினார். கொலைகாரர்களளையும் கொள்ளைக்காரர்களையும் கண்டுபிடித்துக் கைது செய்தவர்களை பாராட்டி பரிசுகள் வழங்கினார். நாடு முழுவதிலுமிருந்து ஜமீன்தார்களிடம் கொடுக்கப்பட்டிருந்த போலீஸ் நிர்வாகப் பொறுப்பை எடுத்து விட்டார். ஒவ்வொரு மாவட்டமும் தானா (Thanas) என்று காவல் துறை வட்டங்களாகப் பிரிக்கப்பட்டன. அவை ஒவ்வொன்றும் 20 சதுர மைல் பரப்பளவைக் கொண்டதாகும். இவற்றின் தலைவர் எனப்பட்ட இந்தியராவார். இந்த தரோகாவிடம் வரம்பு மீறிய அதிகாரம் இருந்ததால் மக்களுக்குத் துன்பம் ஏற்பட்டது. நாடு முழுவதும் பல போலிஸ் நிலையங்கள் அமைக்கப்பட்டன. ஆங்கில மாவட்ட நீதிபதியே போலீஸ் படையைக் கண்காணித்தார்.

இவ்வாறு காரன்வாலிஸ் சட்டத்தையும் அமைதியையும் பாதுகாப்பற்கான ஏற்பாடுகளை செய்தார். போலீஸ் துறையிலிருந்த பல சீர்கேடுகள் அகற்றப்பட்டன. குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டதால் குற்றம் செய்வோரின் தொகை குறைந்தது.

**3) வாணிபத்துறை சீர்திருத்தங்கள்:**

கம்பெனியின் வியாபாரத்துறை முழுவதுமே ஊழல் நிறைந்ததாக இருந்ததை அறிந்த காரன்வாலிஸ் பிரபு பல சீர்திருத்தகளைச் செய்தார்.

கம்பெனியின் வாணிப வாரியத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை பதினொன்றிலிருந்து ஐந்தாக குறைத்தார். 1787-ல் சார்லஸ் கிராண்ட் என்பவரின் உதவியுடன் வியாபாரத்துறையில் காணப்பட்ட சீர்கேடுகளை நீக்கினார். ஒப்பந்தக்காரர்கள் மூலம் சரக்கு வாங்குவதை விட்டுவிட்டார். பிரதிநிதிகள் மூலமும், முகவர்கள் மூலமும் சரக்கு வாங்க ஆரம்பித்தார். இவர்கள் உற்பத்தியாளர்களுக்கு முன்பணம் கொடுத்து குறைந்த விலையில் சரக்குகளை வாங்கி கம்பனிக்குக் கொடுத்தனர். இதனால் கம்பெனிக்கு அதிக லாபம் கிடைத்தது. இந்த முறையே கிழக்கத்தியக் கம்பனி வியாபாரம் செய்த காலம் முழுவதும் இந்தியாவில் பின்பற்றப்பட்டது.

**4) நிர்வாகத்தை ஐரோப்பிய மயமாக்கல்:**

இந்திய மக்களைப்பற்றி சரியாக அறிந்து கொள்ளவில்லை காரன்வாலிஸ். அவர் இந்துஸ்தானத்தின் ஒவ்வொரு குடிமகனும் கைக்கூலி வாங்கும் ஊழல் மிக்கவனாக இருக்கிறான் என்று கூறினார். எனவே இந்தியர்களை மரம் வெட்டுதல், தண்ணீர் இறைத்தல் போன்ற தாழ்வான வேலைகளை மட்டும் செய்யத்தகுதியானவர்களே என்று கருதினார். படையில் கபேதார் அல்லது ஐமேதார் பதவிக்கு மேல் இந்தியர்கள் போக முடியாது. திறமையான இந்தியர்கள் கூட உதவி கலெக்டர்களுக்கு மேற்பட்ட பதவிகளை அடைய முடியாது. அதைக் குறித்து சர்ஜான்ஷோர் என்பவர் மதிப்பும், மரியாதையும், பெருந்தன்மையும் வாய்த்த ஒவ்வொரு பதவியிலிருந்தும் இந்தியர்கள் விலக்கப்பட்டு, கீழ்த்தரமான ஆங்கிலேயர்கள் அந்த பதவிகளை வகிக்க கட்டாயப்படுத்தப்பட்டனர் என்று எழுதியுள்ளார்.

**5) கம்பெனியில் செய்த இதர சீர்திருத்தங்கள் :**

காரன்வாலிஸ் பிரபு பொருள் சேர்க்க வேண்டுமென்ற பணப்பித்தனாக வாழவில்லை. இதனால் தான் தனது அதிகாரிகளும், பணியாட்களும், லஞ்சம் வாங்காமல் உண்மையோடு உழைக்க வேண்டும் என்று கட்டளைப் பிறப்பித்தார். ஒவ்வொரு ஆங்கிலேய அலுவலரும் இந்தியாவை விட்டு போகும் முன்பு தனது சொத்துக்களின் மதிப்பைக் குறித்து உறுதிமொழி. அளிக்க வேண்டும் என்றார். கம்பனி ஊழியர்கள் லஞ்சம் வாங்காமல் இருப்பதற்காக அவர்களின் ஊதியத்தை உயர்த்தினார். அந்தந்த பதவிக்கும் பொறுப்புக்கும் தக்கவாறு ஊதியத்தை அதிகரித்தார். ஒரு மாவட்டக் கலக்டருக்கு ஆயிரத்து ஐநூறு ரூபாய் மாதச் சம்பளம் மொத்த வரிவருமானத்தில் ஒரு சதவீதம் படியும் கொடுக்கப்பட்டது. நியமனங்களும் நேர்மையான முறையில் தான் செய்யப்பட்டது. இங்கிலாந்து இளவரசரின் சிபாரிசைக்கூட ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார் காரன்வாலிஸ்.

## 4.3 வங்காள நிரந்தர நிலவரித் திட்டம் (சாசுவத நிலவரித் திட்டம், 1793)

காரன்வாலிஸ் பிரபு வருவாய் துறையிலும் சீர்திருத்தங்களைச் செய்தார். இந்திய வரலாற்றில் நிலவரித் திட்டத்தை மாற்றியமைத்து, நிரந் தரமான ஒரு வருமானத்தை அரசுக்குக் கொடுத்த பெருமை காரன்வாலிஸ் பிரபுவையே சாரும். இவரது திட்டத்திற்கு நிரந்தர நிலவரித் திட்டம் அல்லது சாசுவத நிலவரித்திட்டம் என்று பெயர். இந்த நிரந்தர நிலவரித் திட்டத்தை ஏற்படுத்த காரன்வாலிசுக்கு உறுதுணையாகவும், உதவியாகவும் இருந்தவர்கள் ஜேம்ஸ்கிராண்ட், ஜொனாதன்டன்கன், ஷோர் (James Grant, Jonathan Duncan, Shore) ஆகியோர் ஆவர்.

**நிலவரியின் வரலாறு :**

இந்திய அரசர்கள் நிலவரியை அரசாங்கத்தின் அடிப்படை வருமா னமாகக் கொண்டிருந்தனர். முகலாய அரசர்களும் தங்கள் பேரரசை சிறிய பகுதிகளாகப் பிரித்து அதிக நிலவரியை வசூலித்து வந்தனர். நாளடைவில் அவர்கள் வரி வசூலிக்கும் திவானி உரிமையை இந்திய ஜமீன்தார்களிடம்

ஒப்படைத்துவிட்டு பேரரசுக்குக் குறிப்பிட்ட தொகையைக்குத்தகையாகப் பெற்றனர். ஆனால் விவசாயிகள் இதனை எதிர்த்தனர்.

ஆங்கிலேயர்கள் வங்காளத்தில் வரிவசூலிக்கும் திவானி உரிமையை முகலாயர்களிடமிருந்து 1772- ம் ஆண்டுவரை நிலவருவாய் இரண்டு துணை திவான்களால் வசூலிக்கப்பட்டது. 1772- ல் துணை திவான்கள் பதவி ஒழிக்கப்பட்டது. கவர்னர் ஜெனரலின் ஆலோசனை மன்றத்தின் நேரிடையான கட்டுப்பாட்டின் கீழ் வருவாய் நிர்வாகம் கொண்டுவரப்பட்டது. இவ்விதம் வருவாய் வாரியம் (டீழயசன ழக சுநஎநரெந) உருவாக்கப்பட்டது.

1772 - ல் வாரன் ஹேஸ்டிங்ஸ் ஐந்தாண்டு நிலவரித் திட்டம் (Quin - quennial settlement) ஒன்றை ஏற்படுத்தினார். இதன்படி நிலங்களின் தரம், வருவாய், வரிவீதம் முதலியவற்றை ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை தீர்மானித்தார். இவ்வாறு தீர்மானிக்கப்பட்ட நிலங்கள் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை ஏலம் விடப்பட்டன. அதிக தொகைக்கு கேட்பவருக்கு நிலம் குத்தகைக்கு விடப்பட்டது. ஏலம் எடுத்தவர் ஏலத் தொகையை தவறாமல் கட்ட வேண்டும். ஐந்தாம் ஆண்டின் முடிவில் மீண்டும் அந்த நிலம் ஏலம் விடப்படும்.

இந்த திட்டத்தினால் ஜமின்தார்கள் தங்கள் பழைய உரிமைகளை இழந்தனர். பலத்த போட்டியின் காரணமாக அதிக பணம் செலுத்துவதற்கு குத்தகை எடுத்த ஜமீன்தார்கள் ஏழைவிவசாயிகளைத் துன்புறுத்தி, விளைந்தாலும், விளையாவிட்டாலும் வரிப்பணம் வசூலித்து வந்தனர். இதனால் விவசாயிகள், கடுந்துன்பம் அடைந்தனர். பல ஜமீன்தார்கள் ஒப்புக் கொண்ட தொகையை அரசுக்கு செலுத்த முடியவில்லை. எனவே 1777- ல் ஐந்தாண்டு காலம் முடிவடைந்ததும் ஆண்டுதோறும் நிலவரி நிர்ணயம் செய்யப்பழைய முறையையே மீண்டும் கொண்டு வந்தார் வாரன் ஹேஸ்டிங்ஸ்.

ஆண்டுதோறும் ஏலம் விடப்பட்டதால் ஏலத்தொகை குறைந்தும் கூடியும் மாறி மாறி வந்தது. கம்பெனியின் வருமானம் நிரந்தரமானதாக இல்லாததால் அது தனது பணியாளர்களுக்கும் செலவாகும் தொகையை நிர்ணயித்து காரியங்களை செயல்படுத்த முடியாமல் போய்விட்டது. அடுத்த ஆண்டில் ஒருவேளை அந்த நிலம் தன்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டுவிடுமோ என்ற பயத்தில் நிலங்களுக்கு சரியாக உரமிட் வில்லை எனவே வருமானம் குறைந்து போனது. 1790 - ம் ஆண்டுவரை ஆண்டுதோறும் நிலவரி மதிப்பிடுகிற திட்டம்தான் தொடர்ந்து இருந்து வந்தது.

**நிர்வாகக் குழுவினரின் கட்டளை :**

கம்பெனியின் வருமானம் வர வர குறைந்து வந்ததைக் கண்ட நிர்வாகக் குழுவினர் நிலக்குத்தகையை மாற்றி நிரந்தரமான வருமானத்திற்கு ஒரு வழி செய்ய வேண்டுமெனத் தீர்மானித்தனர். நிரந்தரமான திட்டத்தை செய்வதற்கு முன் அதற்கு வேண்டிய தகவல்கள் சேகரிக்கப்பட்டன. ே'ார் என்பவர் ஜமின்தார்களே நிலத்தின் உரிமையாளர்கள். ஆகையால் வழக்கமாகக் கொடுக்கும் நிலவரியையே அவர்கள் அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டும்" என்றார். ஜேம்ஸ் கிராண்ட் என்பவர் ஜமீன்தார் களுக்கு நிரந்தரமாக நில உரிமை ஏற்பட்டுவிடக்கூடாது என்று வாதிட்டார்.

கம்பெனியாரின் கட்டளையை நிறைவேற்றுவதற்காக வருவாய் வாரியத்தின் (சுநஎநரெந டீழயசன) தலைவராக ே'ார் என்பவரை நியமித்தார் காரன் வாலிஸ் நிலையான ஏற்பாடு என்ற எண்ணத்துடன் முதலில் பத்து ஆண்டுகளுக்கு மட்டும் தற்காலிக உடன்பாடு செய்து கொள்வதற்குப்

பதிலாக, ஆரம்பத்திலேயே அதை நிரந்தர ஏற்பாடாக செய்வதற்கு முடிவு செய்தார் காரன்வாலிஸ். தங்களுடைய நிலங்களை அபிவிருத்தி செய்வதற்கும், தரிசுநிலங்களை நல்ல நிலங்களாக மாற்றுவதற்கும், ஜமின்தார் களை ஊக்கப்படுத்துவதற்கும் இந்த ஏற்பாடு உதவும் என்று கூறினார் காரன்வாலிஸ்.

இந்த நிலவரித் திட்டம் பத்து ஆண்டுகள் வரையில் இருக்கும் என்று 1790 - பிப்ரவரி பத்தாம் தேதி அறிவித்தார். இதனை கம்பனி நிர்வாக குழுவினர் அங்கீகரித்தால் நிலையான ஏற்பாடாகும் என்று அறிவித்தார் காரன்வாலிஸ். நிர்வாகக் குழுவினரின் அங்கீகாரம் கிடைத்த பின்பு 1793 மார்ச் 22-ம் தேதி பத்தாண்டுகால நிலவரித்திட்டம் நிரந்தர நிலவரித் திட்டமாக செய்யப்பட்டது என்று அறிவித்தார் காரன்வாலிஸ். இதுவே நிரந்தர நிலவரித்திட்டமாகும். இத்திட்டம் வங்காளத்தில் அறிமுகப் படுத்தப்பட்டது.

**நிரந்தர நிலவரித்திட்டத்தின் ஷரத்துக்கள் :**

1. ஜமீன்தார்கள் அவரவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலப்பரப் பின் உரிமையாளர்கள் ஆனார்கள். அவர்கள் ஆண்டுதோறும் 89 சதவீத வருமானத்தை நிரந்தரமாக குத்தகையாக கம்பனிக்கு செலுத்த வேண்டும்.

2. அப்பகுதியிலுள்ள குடியானவர்களிடமிருந்து அவர்களே வரி வசூலித்துக்கொள்ள வேண்டும்.

ஆரம்பத்தில் ஜமின்தார்கள் சிறிது கஷ்டத்தை அனுபவித்து வந்த போதிலும் நிலத்தின் மதிப்பு கூடியதாலும் விவசாயத்தை விருத்தி செய்த தாலும் அவர்கள் அதிகலாபம் அடைந்தனர்.

**நிரந்தர நிலவரித்திட்டத்தின் நன்மைகள்:**

1. நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தினால் அல்லல் பட்டு அழிந்து போகும் நிலையிலிருந்த ஜமீன்தார்கள் செழிப்பும், நல்ல ஒரு நிலையும் அடைவதற்கு இத்திட்டம் உதவியது. நிரந்தர உரிமைதாரர்களாக ஜமீன்தார் கள் கருதப்பட்டதால் நிலத்தை வளப்படுத்தி உற்பத்தியைப் பெருக்க வாய்ப்பு ஏற்பட்டது. பல இடங்களில் தரிசு நிலங்கள் விளைநிலங்களாக மாற்றப்பட்டன.
2. கம்பெனியாருக்கு இந்த பெரு நிலக்கிழார்கள் விசுவாசமாக மாறினர். உழைக்காமலே ஊதியம் பெற்ற அவர்கள் ஆங்கிலேயர்களுக்கு ஆதரவளித்தனர். போர்க்காலங்களிலும் ஆதரவளித்தனர்.
3. வரிவசூலிப்பதில் ஏற்பட்ட இடையூறுகள் இதற்குப்பின் ஆங்கிலேயர்களுக்கு இல்லை. இத்திட்டத்தால் அரசாங்கத்திற்கு ஒரு குறிப் பிட்ட வருவாய் ஆண்டு தோறும் கிடைத்து வந்ததால் பொருளாதர சிக்கல் கள் ஏற்படவில்லை . மேலும் திட்டமிட்டும் செலவிடமுடிந்தது.
4. இடைக்காலங்களில் நிலத்தை அளந்து அதற்கு வரி மதிப்பீடு செய்வதற்காக செலவிடப்பட்ட செலவு மிச்சமாயிற்று. மேலும் வரி இலாக் காவில் ஆங்கில அலுவலர்களின் சேவை தேவைப்படாததால் நீதித் துறைக்கு திறமையான ஆங்கிலேயர் கிடைத்தனர்.
5. தங்கள் எல்லைக்குட்பட்ட பகுதிகள் கல்வி, சமூக முன்னேற் றம், கலை இலக்கிய வளர்ச்சி ஆகியவற்றை ஜமின்தார்களே கவனித்துக் கொண்டனர்.

நிரந்தர நிலவரித்திட்டத்தை சர்ஜாண்மால்காம், மார்'மேன் போன்றோர் புகழ்கின்றனர். டாக்டர்தத் (னுரவவ) என்பவர். ஆங்கிலேய அரசு இந்திய மக்களுக்குச் செய்த நன்மைகளில் நிரந்தர நிலவரித்திட்டம்

மிகச் சிறப்பான ஒன்றாகும். இது இந்தியாவில் காணப்பட்ட பொருளாதார சீர்கேடுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்த திட்டம். இதனை இந்தியா முழுவ தற்கும் ஏற்படுத்தவேண்டும் என்று புகழ்கிறார்.

**நிரந்தர நிலவரித்திட்டத்தின் தீமைகள் :**

1. இந்த திட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் உழவர்களே. காரன் வாலிஸ் உழவர்களின் நலன்களைக் கவனிக்கவில்லை . அவர்கள் பெரு நிலக்கிழார்களின் தயவில் விடப்பட்டனர்.
2. ஜமீன்தார்களே அதிகலாபம் அடைந்தனர். ஜமீன்தார்களால் அதிக அளவில் வரிவிதிக்கப்பட்டது. அவர்கள் செல்வந்தர்களாயினர்.
3. நிலவரி நிரந்தரமாக நிர்ணயிக்கப்பட்டதால் படிப்படியாக வரக் கூடிய அதிக வருமானத்தை அரசு இழந்தது. தேவைக்கேற்ப வரியை உயர்த்த முடியவில்லை. நிலத்தின் மதிப்பு உயர்ந்து கொண்டே வந்து பொருட்களின் விலை ஏறியது.
4. உழவர்கள் ஜமீன்தார்களிடமே நேரடித் தொடர்பு கொண்டிருந் தனர். உழவர்களுக்கும் அரசாங்கத்திற்கும் நேரடி தொடர்பு இல்லை . சுருக்கமாகக் கூறினால் இந்த திட்டம் ஜமீன்தார்களுக்கு நன்மையளித்தது. உழவர்களின் உரிமையை தற்காலிகமாக நிறுத்தி வைத்தது. அரசியலாரின் வருமானத்தை நிலையாகக் குறைந்தது
5. சாகுபடிக்கு கொண்டுவரப்பட்ட நிலங்களின் பரப்புக்குத் தகுந்த வாறு அரசாங்க வருமானம் உயரவில்லை .
6. ஜமீன்தார்களுக்கும் மக்களுக்கும் பகைமை தோன்றி பல ஜமின்தார்கள் கொல்லப்பட்டனர். பஞ்சம், கொள்ளை நோய்களால் பாதிக் கப்பட்ட கிராம மக்கள் ஆதரிப்பார் அற்று கலங்கினர்.
7. ஜமின்தார்கள் குறிப்பிட்ட நாளில் சூரியன் அமையும் முன்பு (ளுரெ ளநவ டுயற) அரசாங்கக் கருவூலங்களில் பணத்தைக் கட்டாவிடில் அவர்களின் நிலங்கள் பறிக்கப்பட்டு மறு ஏலம் விடப்படும் என்று சட்டம் பிறப் பிக்கப்பட்டிருந்ததால் அவர்கள் குடியானவர்களைக் கசக்கிப் பிழிந்து வரி வசூலித்தனர்.

**காரன்வாலிஸைப் பற்றிய மதிப்பீடு :**

காரன்வாலிஸ் பிரபு பல சீர்திருத்தங்களைச் செய்தபோதிலும் அவைகள் வாரன் ஹேஸ்டிங்ஸ் ஏற்படுத்திய சீர்திருத்தங்களின் அடிப்படை யிலேயே செய்யப்பட்டன. தன்னுடைய குணநலன்களினாலும் பிறர் ஒத்துழைப்பினாலும், தாய்நாட்டினரின் ஆதரவினாலும் நிரந்தரமான ஒரு ஆட்சி முறைக்கு அடிகோலினார் காரன்வாலிஸ். திறமையும், தூய்மையும் பொருந்திய ஆட்சிமுறையைத் தோற்றுவித்தார். இவர் நாட்டுப்பற்று மிக்க ஓர் சிறந்த ஆங்கிலேயர் என்பதில் ஐயமில்லை. நல்லொழுக்கம் நிறைந்த வாழ்க்கையையே விரும்பினார். புறப்பகட்டை அவர் விரும்பவில்லை தன்னலத்தை தியாகம் செய்து கடமையாற்றினார். பகட்டான ஆரவாரங் களை அவர் நாடவில்லை .

காரன்வாலிஸ் போற்றற்குரிய ஆற்றல் படைத்த ஒரு போர் வீரரும் ஆவார். இவரது காலத்தில் தான் மூன்றாம் மைசூர் போர் நடைபெற்றது. காரன்வாலிஸ் பிரபுவின் நிரந்தர நிலவரித்திட்டம் குறைபாடுகள் கொண்ட தாலும் சிறந்ததொரு திட்டமாகும். இவரது காலத்தில் ஆட்சிப்பணியாளர் தொகுதி (Covenented Civil Service) ஒன்று தொடங்கப்பட்டது. இதுவே இந்திய ஆட்சிப்பணியாளர் தொகுதி (ஐ.ஊ.ளு.) ஏற்படக்காரணமாகும். எனவே தான் காரன்வாலிஸ் இந்திய ஆட்சிப் பணித்துறையின் தந்தை" என்று அழைக்கப்படுகிறார்.

காரன்வாலிஸ் இந்திய நிர்வாகத்தை ஆங்கில மயமாக்குவதில் ஆர்வம் கொண்டார். இவரது நீதித்துறை சீர்திருத்தங்கள் புகழ் பெற்றவை

ஆகும்.

காரன்வாலிஸ் மற்றவர்கள் மீது நம்பிக்கை வைக்கும் மனதைக் கொண்டிருந்தார். அவரது கடமை உணர்ச்சியும், நிதானமான போக்கும், மற்றவர்களுடன் கலந்து ஆலோசிக்கும் தன்மையும், தன்னைவிட அனுபவத்திலும் அறிவிலும் சிறந்தவர்களின் ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ளும் தன்மையுமே அவரைச் சிறப்புறச் செய்தது - என்று ஏஸ்பைனர் (Asfinar) என்பவர் கூறுகிறார்.

சீக்கிரத்தில் பணக்காரராக வேண்டுமென்ற கம்பனியாட்களின் கொள்கைகளை ஒழித்து ஊழல்களை நீக்கிய பெருமை காரன்வாலிஸையே சாரும். இயற்கை அமைப்பாலோ அல்ல தட்ப வெப்பநிலையாலோ அல்லது மக்களின் பழக்க வழக்கங்களாலோ சிறிதளவு கூட இங்கிலாந் தோடு பொருந்தாத இந்தியாவை முழுவதுமாக ஆங்கிலமயமாக்கியது காரன்வாலிஸ் செய்த விசித்திர வேலை" - என்று கிளக் (புடரப) என்பவர் கூறுகிறார்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

1. நிரந்தர நிலவரி திட்டத்தை ஏற்படுத்தியவர் யார்?
2. காரன்வாலிஸ் சடர்நிசாமத் நீதிமன்றத்தை மூர்ஷிதாபாத்திலிருந்து எந்த ஊருக்கு மாற்றினர்?
3. சடார்திவானி அடலட் நீதிமன்றம் எங்கு அமைக்கப்பட்டுள்ளது?
4. காரன்வாலிஸ் சட்டத்தொகுப்பை தயாரித்தவர் யார்?
5. வருவாய் வாரியத்தின் தலைவராக காரன்வாலிஸ் யாரை நியமித்தார்?

## 4.4 துணைப்படைத் திட்டம், 1798

### வெல்லஸ்லி பிரபு, 1798-1805

சிறந்த ராஜதந்திரியான வெல்லஸ்லி பிரபு சர்ஜான் ேஷார் என்பவருக்குப் பிறகு இந்தியாவின் கவர்னர் ஜெனரலாகப் பதவி ஏற்றார். இவரது முழுப்பெயர் ரிச்சர்ட் கோலி வெல்லஸ்லி (Richerd Colley waliesty) என்பதாகும். இவர் கவர்னர் ஜெனரல்கள் சிறப்பு வாய்ந்தவராகக் கருதப்படுகிறார். இவர் இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை வலிமை படுத்தியதில் முக்கிய பங்காற்றினார். ஆங்கில ஆட்சி இந்திய ஆட்சியை விட சிறந்தது என்பதில் டல்ஹௌசி பிரபுவையும், நேர்மையிலும், உணர்ச்சியிலும் காரன்வாலிஸ் பிரபு வையும் ஒத்திருந்தார் என்று கூறலாம். இவர் இந்திய சிற்றரசர்களின் நாடுகளைக் கைப்பற்றுவதற்கு உருவாக்கிய திட்டமே துணைப்படைத் திட்டமாகும். இந்த திட்டமே "இந்தியாவில் பிரிட்டிஷ் பேரரசு" என்று இருந்ததை பிரிட்ஷ் இந்தியப் பேரரசு என்று மாற்றியது.

### வெல்லஸ்லி பதவி ஏற்கும் போது இந்தியாவின் நிலை:

கவர்னர் ஜெனரலாக நியமனம் செய்யப்பட்ட வெல்லஸ்லி 1798 மே மாதம் கொல்கத்தா வந்து சேர்ந்தார். அப்போது அவர் 37 வயதே நிரம்பிய இளைஞராக இருந்தார். ஆனால் கவர்னர் ஜெனரல் ஆவதற்கு முன்பே இந்தியாவைப் பற்றி நன்கு அறிந்து வைத்திருந்தார்.

வெல்லஸ்லி பதவி ஏற்ற போது பிரிட்ஷ் இந்தியா மிகச்சீர்கேடான நிலையிலிருந்தது. வெல்லெஸ்லி க்கு முன்பு இருந்த சர்ஜாண்ேஷார் பின்பற்றிய தலையிடாக் கொள்கையினால் ஆங்கிலேயரின் மதிப்பும் அதிகாரமும் குறைந்திருந்தது. வடமேற்கு இந்தியாவில் சாமன்ஷாவின்

ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் அபாயகரமானதாக இருந்தது. உஜ்ஜயினி, குவாலியரை சேர்ந்த தௌலத்ராவ் சிந்தியா ராஜபுத்திரர்கள் மீதும் முகலாயப் பேரரசர் மீதும் ஆதிக்கம் செலுத்தி வலிமையான அரசராக விளங்கினார். ஹைதராபாத் நிசாம் ஆங்கிலேயர்களுடன் விரோதம் கொண்டிருந்தார். 1795-ல் கர்நாடக நவாபாக பதவி ஏற்ற உம்தத்-உல்-உம்ராவும் (Umdatul-ul-umara) ஆங்கிலேயருக்கு எதிராகவே இருந்தார்.

மேலும் ஐரோப்பாவில் இங்கிலாந்து பிரான்ஸ் நாட்டின் போரிட்டடுக் கொண்டிருந்த காலம் இது. பிரெஞ்சு பேரரசர் நெப்போலியன் போன பார்ட் தனது ஆதிக்கத்தை ஆசியாவிலும் பரப்ப எண்ணினார். தனது தந்திரத்தால் இந்திய மன்னர்களிடையே பிரான்ஸ் நாட்டின் செல்வாக்கை ஏற்படுத்தினார். திப்பு சுல்தான் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை இந்தியாவிலிருந்து ஒழிக்க நெப்போலியனின் உதவியை நாடினார். கம்பெனியின் நட்பு நாட்டு அரசர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள சக்தியற்றவர்களாக இருந்தார்கள். ஆப்கானிய அரசரான அமிர் இந்தியாவின் வடபகுதியைத் தாக்க சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்தார். இச்சூழ்நிலையில் வெல்லஸ்லியின் பொறுப்பு அதிகமானது.

**வெல்லஸ்லியின் நோக்கம்:**

இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை பெருக்க திட்டமிட்டார் வெல்லெஸ்லி, ஆங்கில ஆட்சி இந்தியா மன்னர்களின் ஆட்சியைக் காட்டிலும் சிறந்தது என்றும் இந்திய மன்னர்களின் பகுதிகளை ஆங்கிலேய ஆட்சியின் கீழ் கொண்டுவருவதால் இந்திய மக்களுக்கு நன்மையே தவிர தீங்கு இல்லை என்றும் நினைத்தார். தலையிடாக் கொள்கையையும், சக்தி சமநிலைக் கொள்கையையும் நீக்கிவிட்டு இந்தியாவில் ஆங்கிலேயரின் பேராதிக்கத்தை நிலை நாட்ட தலையிடும் கொள்கையே சிறந்தவழி என்று உணர்ந்தார்.

இந்தியாவில் பிரஞ்சுக்காரர்களை அடியோடு அகற்றிவிட வேண்டும் என்பது வெல்லஸ்லியின் நோக்கமாகும். மேலும் பலவீனமான இந்திய சிற்றரசர்களை பிரிட்டி' பேராதிக்கத்திற்குள் கொண்டுவர நினைத்தார். இவ்வாறு ஆங்கிலேயரின் பேராதிக்கத்தை இந்தியாவில் நிலைநாட்ட வெல்லஸ்லி வகுத்த திட்ட துணைப்படைத் திட்டமாகும்

**இந்திய அரசுகளை இணைத்தல்**

ரிச்சர்டு வெல்லஸ்லியின் குறிக்கோள் இந்தியாவில் பிரிட்டிஷ் பேராதிக்கத்தை நிலைப்படுத்துவதாகும். அக்குறிக்கோளை நிறைவேற்றுவதற்கான கொள்கையே இந்திய அரசுகளை பிரிட்டிஷ் பேராதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதாகும். தலைமை ஆளுநர் வெல்லஸ்லிக்கு முன் வாரன் ஹேஸ்டிங்சும், காரன்வாலிசும் இந்திய அரசர்களுடன் இத்தகைய உடன்படிக்கைகளைச் செய்து கொண்டனர் என்பது உண்மையே. எனினும் அவர்கள் செய்து கொண்ட உடன்படிக்கைகளுக்கும் வெல்லஸ்லி செய்து கொண்ட ஒப்பந்தங்களுக்குமிடையே அடிப்படை வேறுபாடுகள் இருந்தன.

இந்தியாவில் ஒவ்வொரு அரசரும் நாட்டுப் பாதுகாப்புக்காகத் தனிப்படை வைத்திருந்தனர். ஆனால் வெளியார் படையெடுப்புகளிலிருந்து நாட்டைப் பாதுகாக்க இப்படை போதுமானதாயும், பலமிக்கதாகவும், நவீனமயமாக்கப்பட்டதாகவும் இல்லை. எனவே அவர்கள் ஆங்கிலேயரின் துணைப் படைத் திட்டத்தை ஏற்றுக் கொண்டனர். வெல்லஸ்லி வருவதற்கு முன் 1) ஆங்கிலயரது ராணுவ உதவிக்கே ஒரு குறிப்பிட்ட தொகையை மானியமாகக் கொடுத்தனர். 2) ஆங்கிலேயரின் துணைப்படை இந்திய அரசரின் நாட்டு எல்லைக்கு வெளியே நிறுத்தப்பட்டது. 3) ஆண்டு முடிவில்

அல்லது மாதந்தோறும் மானியத் தொகை வழங்குவது வழக்கத்தில் இருந்தது. 4) மானியத்தைப் பணமாகக் கொடுக்க முடியாத போது அதற்கு பதில் நிலப்பகுதி கொடுக்கப்பட்டது. 5) ஒப்புக்கொண்ட தொகையையோ அல்லது நிலத்தையோ கொடுக்காதபோது இந்திய அரசுகளுக்கும் ஆங்கிலேயருக்குமிடையே மனமுரண்பாடுகளும் மோதல்களும் ஏற்பட்டன. இக்குறைகளைக் களைவதற்காக வெல்லஸ்லி துணைப் படை முறையை மறுசீரமைத்து முறைப்படுத்தினார்.

**முறைப்படுத்தப்பட்ட முறை**

தலைமை ஆளுநர் ரிச்சர்டு வெல்லஸ்லியால் மறு சீரமைக்கப்பட்டு, முறைப்படுத்தப்பட்ட துணைப்படைமுறையின் சிறப்புக் கூறுகளாவன : 1) கம்பெனியுடன் உடன்படிக்கை செய்து கொள்ளும் அரசுகள் ஆங்கிலேயர் தவிர, குறிப்பாக பிரெஞ்சுக்காரருடன், எவ்வித அரசியல் ஒட்டுறவும் வைத்துக் கொள்ளக்கூடாது, 2) உடன்பாட்டுக்கு உட்பட்ட ஒவ்வொரு அரசும் ஒரு ஆங்கிலத் துணைப் படையையும், பிரிட்டிஷ் நிலையரையும் அதன் பகுதிக்குள்ளேயே வைத்துக் கொள்ள வேண்டும். 3) இப்படைப் பராமரிப்புக்காகும் செலவுக்கு ஈடாக நிலப்பகுதியைக் கொடுக்க வேண்டும். 4) ஆங்கில அரசின் முன் அனுமதியின்றி எந்த ஐரோப்பியரையும் அரசுப் பணிகளில் அமர்த்தக் கூடாது . 5) அதே போன்று ஆங்கிலேயரின் அனுமதியின்றி பிற இந்திய அரசுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தக் கூடாது. 6) ஆங்கில அரசு இந்திய அரசின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாது.

மேற்கண்ட நிபந்தனைகளின் விளைவாக இந்திய அரசுகளுக்கு ஆங்கிலேயரின் ராணுவப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. அதாவது இந்திய அரசுகள் வெளிநாட்டுப் படையெடுப்பிலிருந்தும், உள்நாட்டு எதிர்ப்பிலிருந்தும் பாதுகாக்கப்பட்டன. அதேபோன்று ஆங்கிலக் கம்பெனியின் ஆதிக்கம் துணைப்படை மற்றும் நிலையர் மூலம் உறுதி செய்யப்பட்டது. பிரெஞ்சுக்காரரின் குறுக்கீடு நிறுத்தப்பட்டது. இவற்றின் கூட்டு விளைவாக இந்திய அரசுகள் சுதந்திரத்தை இழந்து பிரிட்டிஷ் ஆரசின் சார்பு நாடுகளாயின. அதாவது உடன்பாடுக்குள்ளான இந்திய அரசுகள் பிரிட்டிஷ் பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டன. அதுமட்டுமல்ல. இந்திய அரசுகளின் ஆங்கில அரசின் அதிகாரமும், ஆதிக்கமும் அதிகரித்தன! இம்முறையின் மூலம் ஆங்கிலேயர் இந்திய அரசுகளின் நிலப்பகுதிகளைக் கையகப்படுத்திக் கொள்வது எளிதாயிற்று. மக்கள் நலனைக் காப்பதற்கு இந்திய அரசுகளைப் பொறுப்பாக்கிவிட்டு அதன் பிற உள்நாட்டு, வெளியுறவு சம்மந்தமான அதிகாரங்களை ஆங்கிலக் கம்பெனி தன்வயமாக்கிக் கொண்டது. கம்பெனியின் ராணுவ எல்லைகளும், அரசியல் எல்லைகளும் ஒரே நேர்கோட்டில் இருந்தன. இதன் காரணமாகக் கம்பெனியின் நிலப் பகுதிகள் போர்காலப் பாதுகாப்புப் பெற்றன. துணைப் படைமுறை என்ற போர்வையில் இந்திய அரசுப் பகுதிகளை ஆங்கில அரசு இணைத்துக் கொண்டது் இது இயல்பான இணைப்பாகத் தோற்றமளித்தது, பாதுகாக்கப்பட்ட அரசுகளின் பெயரில் பிரிட்டிஷ் அரசு நிர்வாகப் பொறுப்பேற்காமல் அதன் ஆதிக்கத்தை இந்தியாவில் விரிவுபடுத்திக் கொள்ள முடிந்தது. சுருங்கக்கூறின் துணைப்படை முறை இந்தியாவில் பிரிட்டிஷ் பேராதிக்கத்தை நிலைபெறச் செய்தது. இந்த விளைவு ரிச்சர்டு வெல்லஸ்லியின் அரசியல் குறிக்கோளுக்கும் கொள்கைக்கும்

**நிறை குறைகள் நிறைகள்**

துணைப்படை முறையால் பல நன்மைகள் ஏற்பட்டன: 1) பாதுகாக்கப்பட்ட நாடுகளுக்கு ராணுவச் செலவு குறைந்தமையால் இத்தொகையை நிர்வாகச் சீர்திருத்தத்துகோ அல்லது மக்கள் நலத் திட்டங்களுக்கோ செலவிடக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. 2) இந்திய அரசுகள்

தங்களையும், தங்கள் வம்சத்தினரையும், நாட்டையும் பாதுகாத்துக் கொள்ள முடிந்தது. 3) பிற இந்திய அரசுகளின் ஆக்கிரமிப்பு அச்சத்திலிருந்து விடுபட்டன. உதாரணமாக, அயோத்தியும் ஐதராபாத்தும் மராத்தியர்களின் ஆக்கிரமிப்பிலிருந்து காப்பாற்றப்பட்டன. 4) பாதுகாப்பு வளையத்துக்குள் வந்த அரசுகளின் செலவில் கம்பெனியின் அதிகாரமும், ஆதிக்கமும் பிற இடங்களுக்குப் பரவி நாட்டொற்றுமைக்கும், பொது அமைதிக்கும் வழி வகுத்தது. 5) ஆங்கிலக் கம்பெனியின் வணிகத் திறமையும், ராணுவப்பலமும் அதிகரித்தன. 6) தலைமைக் கம்பெனியும், பிற ஐரோப்பிய நாடுகளும் குறை கூறாதபடி இந்தியாவில் பிரிட்டிஷ் பேரரசு பரவியது.

**குறைகள்**

துணைப்படை முறையால் பல கேடுகள் தோன்றின : 1) ஆங்கிலப் படைப் பாதுகாப்பின் காரணமாகக் கலைக்கப்பட்ட ராணுவ வீரர்கள் வேலையிழந்து கொள்ளைக் கூட்டத்தில் சேர்ந்தனர் 2) பாதுகாப்பு அரசுகள் தங்களுக்குச் சொந்தமான நிலப் பகுதிகளை இழந்தன. 3) சுதேசி அரசர்கள் தங்கள் விருப்பப்படி ஆட்சி செய்தமையால் பொதுமக்கள் நலன் புறக்கணிக்கப்பட்டது . 4) கம்பெனியை எதிர்க்க முடியாத அரசுகள் மற்ற இந்திய அரசர்களுடன் இரகசிய உடன்படிக்கைகள் செய்து கொண்டன 5) இத்திட்டம் திறமையான அரசர்கள் தோன்றுவதற்குத் தடையாக இருந்தது. 6) பாதுகாக்கப்பட்ட அரசுகள் அனைத்தும் ஆங்கிலேயரை நிரந்தரமாக சார்ந்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

**தனித்தன்மை**

வெல்லஸ்லியின் துணைப்படை முறை தனித்தன்மை கொண்டது. இவரது திட்டம் பிற தலைமை ஆளுநர்களின் திட்டங்களிலிருந்து வேறுபட்டது. எடுத்துக்காட்டாக வாரன் ஹேஸ்டிங்ஸ் அயோத்தி அரசர் ரோகில்லர்களைத் தாக்குவதற்கு ராணுவ உதவி செய்தார். கர்நாடகப் போர்களின் போது கம்பெனி சுதேசி மன்னர்களுக்கு உதவியதோடு ராணுவ நடவடிக்கைகளிலும் பங்கேற்றது. சர்ஜான் ஷோர் அயோத்தி அரசருடன் செய்து கொண்ட உடன்பாட்டின்படி அயோத்தியின் பாதுகாப்புக்காகக் கம்பெனிப்படை அனுப்பப்பட்டது. அதேபோன்று, மானியத்தொகையை முறையாகச் செலுத்தாமையால் மீர் காசிமிடமிருந்து பர்த்துவானையும், மூரஷிதாபாத்தையும் கம்பெனி பெற்றுக் கொண்டது.

வெல்லஸ்லியின் துணைப்படை முறையைக் கூர்ந்து கவனிப்போருக்கு இவர் இவருக்கு முன்னிருந்த தலைமை ஆளுநர்களின் கொள்கைகளிலிருந்து நிறைகளை எடுத்து இவரது புதிய கொள்கைக்கு உரமாக்கி, திட்டத்துக்குத் தெளிவான உருவம் கொடுத்து நடைமுறைப் படுத்தியது தெரிய வரும். இதுவே உள்ளது சிறத்தல் ஆகும். வெல்லஸ்லியின் திட்டம் இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சிக்குத் தொடர்ச்சியையும், வளர்ச்சியையும், நிலைத்தன்மையையும் உறுதி செய்தது. இதுவே இத்திட்டத்தின் தனித்தன்மையாகும்.

**இந்திய அரசுகளை இணைத்தல்**

**இணைக்கப்பட்ட நாடுகள்**

ரிச்சர்டு வெல்லஸ்லி ஒரு விரிவாக்கவாதி. ஏகாதிபத்தியமும் (Imperialism) விரிவாக்கமும் (Expansionism) அவரது வெளியுறவுக் கொள்கை நாணயத்தின் இரு பக்கங்களாகும். வெல்லஸ்லி துணைப்படை முறையைப் பயன்படுத்தி தஞ்சை , ஐதராபாத், கர்நாடகம், அயோத்தி, பரூக்காபாத் ஆகியவற்றுடன் உடன்படிக்கைகள் செய்து கொண்டு சமரசம் பேசி அந்த நாடுகளை இணைத்துக் கொண்டன. இவை

சமரசத்துக்குள்ளான நாடுகள் (Mediatised) என்று அழைக்கப்பட்டன.

**தஞ்சாவூர் இணைப்பு, 1799**

சர் ஜான் ஷோர் தலைமை ஆளுநராக இருந்தபோது அமர்சிங் தஞ்சையின் மன்னரானார். அவரது ஆட்சிக் காலத்தில் நிர்வாகம் சீர்குலைந்தது. எனவே, அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு சரபோஜி தஞ்சை அரசராக்கப்பட்டார். அவருக்கு நிர்வாகத்தைவிட பிற துறைகளில் நாட்டம் அதிகம் இருந்தது. எனவே, வெல்லஸ்லி தஞ்சையின் நிர்வாகத்தை நெறிப்படுத்துவதற்காக சரபோஜி மன்னருடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார் (1779 ஆகஸ்டு). அதன்படி : 1) சரபோஜியின் வாழ்க்கைச் செலவுக்காகக் கம்பெனி ஆண்டு தோறும் 4 இலட்சம் ரூபாய் ஓய்வூதியமாகத் தர வேண்டும் 2) இதேபோன்று அமர்சிங்குக்கும் ஒரு இலட்ச ரூபாய் ஆண்டுத் தொகையாக வழங்க வேண்டும். இவ்வித வாக்குறுதிகளோடு தஞ்சை கம்பெனியின் கட்டுப்பாட்டிலிருந்த சென்னை மாகாணத்தோடு இணைக்கப்பட்டது. அமர்சிங்கின் நிர்வாகத் திறமையின்மையும், சரபோஜியில் நிர்வாக அக்கறையின்மையும் தஞ்சை சென்னையோடு இணைக்கப்பட வழி வகுத்தன.

**ஐதராபாத் இணைப்பு, 1800**

சர் ஜான் ஷோர் தலைமை ஆளுநராக இருந்தபோது ஐதராபாத் பிரெஞ்சுக்காரரின் ஆதிக்கத்துக்கும், மராத்தியரின் ஆக்கிரமிப்புக்கும் ஆளாகக்கூடிய நிலை ஏற்பட்டது. எனவே ஐதராபாத் நிசாம் ஆங்கிலேயரின் ஆதரவை நாடினார். ஆனால் ஜான் ஷோர் தலையிடாக் கொள்கையை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருந்தமையால் நிசாமுக்கு உதவ மறுத்துவிட்டார். எனவே, நிசாம் பிரெஞ்சுக்காரருடனும், திப்பு சுல்தானுடனும் தொடர்பு கொள்ள வேண்டியதாயிற்று.

வெல்லஸ்லி தலைமை ஆளுநரானபின் ஐதராபாத் நிசாமை சமாதானப்படுத்தி, அவருடன் சமரசம் பேசித் தன் வழிக்குக் கொண்டு வருவதற்கான முயற்சியை மேற்கொண்டார். அதன் விளைவாக வெல்லஸ்லி நிசாமுடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார் (1798). அதன்படி 1) 6000 ஆங்கிலப் படைவீரர்களை நிசாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். 2) அவரிடமிருந்த பிரெஞ்சுப் படையினரையும், அதிகாரிகளையும் வெளியேற்ற வேண்டும். 3) ஆங்கிலேயரின் அனுமதியின்றி பிரெஞ்சுக்காரர்களையோ, பிற ஐரோப்பியரையோ வேலைக்கு வைத்துக் கொள்ளக்கூடாது. 4) ஒரு ஆங்கில நிலையரை ஐதராபாத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். 5) ஆங்கிலேயர் கொடுக்கும் ராணுவப் பாதுகாப்புக்காக நவாப் ஆண்டுதோறும் மானியம் கொடுக்க வேண்டும்.

இந்த நிர்ப்பந்த உடன்படிக்கையின்படி நவாபால் கம்பெனிக்கு கொடுக்க வேண்டிய மானியத் தொகையைக் கொடுக்க முடியவில்லை. எனவே, 1800 ஆம் ஆண்டு வெல்லெஸ்லி நிசாமுடன் மற்றொரு ஒப்பந்தம் செய்து கொண்டார். இந்த இரண்டாவது உடன்படிக்கையின்படி நிசாம் மானிய பாக்கிக்குப் பதிலாக ஆங்கிலேயருக்கு பெல்லாரி, கடப்பை, அனந்தப்பூர் ஆகிய மாவட்டங்களை விட்டுக் கொடுக்க வேண்டும் என்று முடிவாயிற்று. இம்முடிவின்படி இம்மாவட்டங்கள் ஆங்கிலேயர் வசமாயின. இக்கொடுக்கப்பட்ட மாவட்டங்கள் கொடை மாவட்டங்கள் (Ceded Districts) என்று அழைக்கப் படுகின்றன.

**சூரத் இணைப்பு, 1800**

1759 ஆம் ஆண்டிலிருந்து சூரத் கம்பெனியின் பாதுகாப்பில் இருந்து வந்தது. 1799 இல் சூரத் நவாப் இறந்தார். அவரது தம்பி நவாபானார். வெல்லஸ்லி புதிய நவாபைப் பெயரளவுக்கு ஆட்சியில் வைத்துக்

கொண்டு, அவருக்கு ஆண்டுக்கு ஒரு இலட்ச ரூபாயை உதவித் தொகையாகக் கொடுத்துவிட்டு, சூரத்தைப் பம்பாய் ராஜதானியுடன் இணைத்து விட்டார்! பின்னர் அரசாங்க உதவித் தொகை ஒன்றரை இலட்ச ரூபாயாக உயர்த்தப்பட்டது (1817).

**கர்நாடகம் இணைப்பு, 1801**

ஆர்க்காடு நவாப் உம்தத் உத்தெளலா கர்நாடகத்தை ஆட்சி செய்து வந்தார். கடன் வாங்குவதைக் கலையாகக் கொண்ட அவர் கடன் கடலில் மூழ்கிக் கொண்டிருந்தார். நவாபைக் கரை சேர்க்க முற்பட்ட வெல்லஸ்லி அவருடன் பேச்சுவார்த்தை நடத்த முன் வந்தார். ஆனால் நவாப் அதற்கு உடன்படவில்லை! எனவே நவாப் திப்புசுல்தானுக்கு எழுதிய கடிதங்களில் ஆர்க்காடு நவாபும் திப்புவும் சேர்ந்து ஆங்கிலேயருக்கு எதிராக சூழ்ச்சி செய்தது தெரிய வந்தது. இக்கடிதங்களைத் துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தி நவாபைப் பணியவைக்கத் திட்டமிட்டார் வெல்லஸ்லி .

1801 ஆம் ஆண்டு நவாப் இறந்த பின் அவரது மகன் அலி உசேன் வாரிசுப் பொறுப்பேற்றார். அவரும் வெல்லஸ்லியின் சமரசப் பேச்சுவார்த்தைக்கு உடன்படவில்லை! எனவே வெல்லஸ்லி நவாபின் குடும்பத்தைச் சேர்ந்த அசீம் உத்தெளலா என்பவரைக் கர்நாடக நவாபாக அங்கீகரித்து அவரை மூன்றாவது வாலாஜா என்ற பட்டத்துடன் பதவியில் அமர்த்தினார் (1801-1802). வெல்லஸ்லிக்குப் பணிய மறுத்த அசீம் பதிவியிழந்தார்

வெல்லஸ்லி புதிதாக நவாப்பாக்கப்பட்ட அசீம் உத்தெளலாவுடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார். அதன்படி 1) பாதுகாப்புப் படையின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. 2) கர்நாடகத்தின் எல்லை வரையறுக்கப்பட்டது. 3) கர்நாடகத்தில் வசூலாகும் நிலவரியில் செலவு போக ஐந்தில் ஒரு பகுதியை நவாப் பெற்றுக் கொள்ள வேண்டும். 4) கர்நாடக நவாப் என்ற பட்டப் பெயரை மட்டும் பயன்படுத்திக் கொண்டு வேறு எந்த அரசியல் நடவடிக்கைகளிலும் பங்கேற்காமல் இருத்தல். 5) நாட்டின் சிவில், ராணுவ நிர்வாகத்தைத் தலைமை ஆளுநரிடம் ஒப்படைத்தல். இந்த உடன்படிக்கையின் விளைவாக கர்நாடகம் முழுவதும் கம்பெனியின் ஆட்சியோடு இணைந்தது.

**அயோத்தி, 1801**

அயோத்தி ஆங்கிலயருக்குப் பல வகையிலும் பயனுடைய இடை கிடை நாடாக (Buffer State) இருந்து வந்தது. 1798இல் தலைமை ஆளுநர் சர் ஜான் ஷோர் அயோத்தியுடன் துணைப் படை பற்றி செய்து கொண்ட ஒப்பந்தம் பயனளிக்கவில்லை. வெல்லஸ்லியின் ஆட்சிக்காலத்தில் ஆப்கானிய அரசர் ஜாமன் ஷா அயோத்தியைத் தாக்கக்கூடிய சூழ்நிலை உருவாயிற்று. இந்நிலையில் வெல்லஸ்லி அயோத்தியிலிருந்த ஆங்கிலப் படையை அதிகரிக்கவும், அப்படைக்கு ஆகும் செலவை 76 இலட்ச ரூபாயிலிருந்து 126 இலட்ச ரூபாயாக உயர்த்தவும் முடிவு செய்தார். இத்திட்டத்துக்கு இணங்காத அயோத்தி நவாப் பதவி விலகத் தயாராக இருப்பதாகக் கூறினார் ! ஆனால் அப்பதவிக்கு யார் வாரிசாவது என்பது பற்றிய சிக்கல் ஏற்பட்டபோது மனதை மாற்றிக் கொண்டு பதவி விலக மறுத்துவிட்டார்.

மனம்மாறிப் பதவி விலக மறுத்ததை நவாபின் நாணயமின்மை, நேர்மையின்மை, ஏமாற்றுவேலை என்று கருதிய வெல்லஸ்லி ஒரு வலிமைமிக்க படையை அனுப்பினார். படைக்குப் பயந்த அயோத்தி நவாப் வெல்லஸ்லியுடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார். அதன்படி 1)

ரோகில் கண்டும், கங்கை - யமுனை நதிகளுக்கு இடைப்பட்ட பகுதியும் கம்பெனியின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தன. 2) அயோத்தி நவாப் கம்பெனியின் வழிகாட்டலின்படி ஆட்சி செய்ய உடன்பட்டார். இதன் விளைவாக அயோத்தி நவாபின் ஆள் நிலப்பகுதி பாதியாகக் குறைந்தது. நவாப் கம்பெனியின் கைப்பாவையானார்.

**பருகாபாத் இணைப்பு, 1802**

வெல்லஸ்லி அயோத்தியுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி பருகாபாத் (Fharukhabad) ஆங்கிலேயரின் அதிகாரத்தின் கீழ் வந்தது. அப்பகுதியின் நவாப் இளைஞராக இருந்தமையால் நவாபுக்கு ஆண்டுக்கு 10 இலட்ச ரூபாய் உதவித் தொகையாகக் கொடுத்து விட்டு பருகாபாத்தைக் கம்பெனியின் நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்தார.

**வெல்லஸ்லியைப் பற்றிய மதிப்பீடு:**

வெல்லெஸ்லி தான் பதிவிவகித்த ஏழாண்டு காலத்தில் இந்தியாவில் ஆங்கில ஆதிக்கத்தை வலிமையடையச் செய்ததில் வெற்றியடைந்தார். இவரது காலத்தில்தான் நான்காம் மைசூர் போர், இரண்டாம் மராட்டியப் போரும் நடைபெற்றது. அதில் வெற்றி பெற்று அந்த நாடுகளை ஆங்கிலஆதிக்கத்திற்கு உட்படுத்தினார். மொரிீயப் பகுதியைக் கைப்பற்றத் திட்டமிட்டு ஒரு படையை அனுப்பினார். சர்ஜன் மால்கம் தலைமையில் ஒரு தூதுக்குழுவை பாரசீகத்திற்கு அனுப்பி பாரசீக மன்னருடன் பிரான்சுக்கு எதிராக ஓர் ஒப்பந்தமும் செய்து கொண்டார். இவ்விதம் போரின் மூலமும், துணைப்படைத் திட்டத்தின் மூலமும் ஆங்கில ஏகாதிபத்தியத்தை இந்தியாவில் ஏற்படுத்திய பொருமை இவரையே சாரும். இவ்வாறு "இந்தியாவில் ஆங்கில ஆதிக்கம் என்ற நிலையை மாற்றி இந்தியாவின் ஆங்கிலப் பேரரசு என்று வழங்க செய்த பெருமை வெல்லெஸ்லி பிரபுவையே சாரும்.

வெல்லஸ்லியின் செயல்முறைகள் ஆங்கிலேயருக்கு ஊக்கம் அளிப்பனவாக இருந்தன. ஆனால் லட்சியங்களை அடைவதற்கான வழி நேர்மையானதா என்பதைப் பற்றிக் கவலைப்படாதவர் வெல்லஸ்லி இவரது செயல்களின் விளைவாகவே பிண்டாரிகளின் கலகம் தோன்றியது. இவரது நாடு பிடிக்கும் பேராசையின் காரணமாக படை ஆற்றலுக்கு முக்கியத்துவம் அளித்தாரே தவிர ஆட்சித்துறை சீரமைப்பில் எவ்வித கவனமும் செலுத்தவில்லை. முதலில் இவரது ஆதிக்கக் கொள்கைகளுக்கு ஆதரவளித்த கம்பெனி நிர்வாகத்தினர் இவரது செலவுமிக்க போர்களினால் வெறுப்புற்று 1805-ல் இவரை திரும்ப அழைத்துக் கொண்டனர்.

ஆனாலும், "இந்தியாவில் ஆங்கில ஆதிக்கத்திற்கு வித்திட்டவர் ராபர்ட் கிளைவ்ஷூ அதைப் பாதுகாத்து உறுதிப்படுத்தியவர் வாரன் ஹேஸ்டிங்ஸ். அதைத் தன்னிகரற்ற பேரரசாக்கிய பெருமைக்கு உரியவர் வெல்லஸ்லி பிரபுவே ஆவார். வெல்லெஸ்லி காலத்துக்குப்பின்பு ஆங்கிலப் ஆதிக்கத்தை இந்திய அரசுகள் அச்சுறுத்தும் நிலை அடியோடு அழித்து என்று கூறலாம்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

6. யாருக்கு பிறகு வெல்லெஸ்லி பிரபு கவர்னர் ஜெனரலாகப் பதவி ஏற்றார்?
7. வெல்லெஸ்லி அறிமுகப்படுத்திய திட்டத்திற்கு என்ன பெயர்?
8. துணைப்படைத்திட்டத்தில் சேர்ந்த மைசூர் அரசர் பெயர் என்ன?
9. சூரத் எந்த ஆண்டு பிரிட்டி' பேரரசுடன் இணைக்கப்பட்டது?
10. வெல்லெஸ்லி பிரபு எந்த ஆண்டு கம்பெனியரால் திருப்பி

அழைத்துக் கொள்ளப்பட்டார்?

## 4.5 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

1. காரன்வாலிஸ்
2. கல்கத்தா
3. கல்கத்தா
4. ஜார்ஜ் பர்லோ
5. ஷோர்
6. சர்ஜான்ஷோர்
7. துணைப்படைதிட்டம்
8. கிருஷ்ணராஜ உடையார்
9. 1800
10. 1805

## 4.6 சுருக்கவுரை

- காரன்வாலிஸ் பேராற்றலும் நுண்ணறிவும் அவரிடம் இருந்ததால் 1782-ல் வில்லியம் கோட்டையின் கவர்னர் ஜெனரல் ஆனார்.
- காரன்வாலிஸ் இந்திய ஆட்சிப் பணித்துறையின் தந்தை" என்று அழைக்கப்படுகிறார
- ஆங்கில ஆட்சி இந்தியா மன்னர்களின் ஆட்சியைக் காட்டிலும் சிறந்தது என்றும் இந்திய மன்னர்களின் பகுதிகளை ஆங்கிலேய ஆட்சியின் கீழ் கொண்டுவருவதால் இந்திய மக்களுக்கு நன்மையே தவிர தீங்கு இல்லை என்றும் நினைத்தார் வெல்லஸ்லி பிரபு.
- வெல்லஸ்லி அயோத்தியுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி பருகாபாத் ஆங்கிலேயரின் அதிகாரத்தின் கீழ் வந்தது.

## 4.7 முக்கிய கருத்துப்படிமங்கள்

- உழவர்: இது ஒரு இந்திய விவசாயி
- கோர்கா: இந்திய தேசிய இனத்தின் நேபாளி
- துணை கூட்டணி: இந்திய ஆட்சியாளருடன் துணை கூட்டனியாக நுழையும் போது பிரிட்டிஃ படைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், தங்கள் பராமரிப்புக்கு பணம் கொடுக்கவும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

## 4.8 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள

**குறு விடை வினாக்கள்**

1. காரன்வாலிஸ் பற்றி சிறுகுறிப்பெழுதுக.
2. காரன்வாலிஸ் காவல் துறை சீர்திருத்தங்கள் பற்றி எழுதுக.
3. வெல்லஸ்லி பிரபுவின் பதவி ஏற்க்கும் போது இந்தியாவின் நிலை பற்றி எழுதுக.

**நெடு விடை வினாக்கள்**

4. நிரந்தர நிலவரி திட்டத்தினை பற்றி விரிவாக எழுதுக

5. துணைப்படை திட்டதின் மூலம் இணைந்த அரசுகளைப் பற்றி விளக்குக

**4.10 மேலும் படிக்க**


சந்திரா, பிபின், 2009. நவீன இந்தியாவின் வரலாறு. ஹைத்தராபாத், ஓரியண்ட் பிளாக்வான்ஸ்.

டியூப்-பானர்ஜி, இஷிதா. நவீன இந்தியாவின் வரலாறு. கேம்பிரிட்ஜ், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக அச்சகம்

தாரிக், முகம்மது. 2007. நவீன இந்திய வரலாறு. புது தில்லி: டாடா மெக்ரா-ஹில் கல்வி.

பண்டியோபதியா, ெ'கரா. 2004. பிளாசி முதல் பார்ட்டி வரை: நவீன இந்திய வரலாறு. ஹைதராபாத்: ஓரியண்ட் பிளாக்வான்ஸ்.

சென், S.N. 2006. நவீன இந்திய வரலாறு. புது தில்லி: நியூ ஏஜ் இண்டர்நேஷ்னல்.


## அலகு – 5 வில்லியம் பெண்டிங் பிரபு, மைசூர் போர்களும்

5.0 அறிமுகம்

5.1 நோக்கங்கள்

5.2 பெண்டிங் பிரபுவின் சீர்திருத்தங்கள்

5.3 நாடிழக்கும் கொள்கை மற்றும்தாக்கங்கள்

5.4 மைசூர் போர்கள்

5.5 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

5.6 சுருக்கவுரை
5.7 முக்கிய வார்த்தைகள்
5.8 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்
5.9 மேலும் படிக்க

## 5.0 அறிமுகம்

அமர்ஸ்ட் பிரபுவுக்குப்பின் கவர்னர் ஜெனரலாகப் பொறுப்பேற்றவர் வில்லியம் பெண்டிங்பிரபு ஆவார். 1828 ஜூலை மாதம் கவர்னர் ஜெனரலாகப் பதவி ஏற்றார். சிறந்த போர் வீரராகத் திகழ்ந்த பெண்டிங் 1803 முதல் 1806 வரை சென்னையில் கவர்னராகப் பணியாற்றினார். இவர் ஏற்கனவே பெற்றிருந்த அனுபவம் நிர்வாகத்தை மிகத்திறமையாக நடத்தி இந்தியர்களுக்கு நன்மை செய்ய உதவியது. இவர் காலத்தில் போர்கள் பல புரிந்து வெற்றிமுரசு கொட்டினார் என்ற பெருமையில்லாமல் போனாலும் மக்களின் நலன் கருதி உழைத்தார்.

பெண்டிங்பிரபுதான் செய்த ஏராளமான சீர்திருத்தங்களால் இந்திய வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ளார். இந்திய மக்களிடையே காணப்பட்ட கொடூர சடங்குகளை ஒழித்து விடுதலையே மக்களின் மகிழ்ச்சிக்கு அடிப்படை என்பதையும், அரசின் முக்கியக்கடமை மக்களது நல்வாழ்வுக்கு வழிவகுப்பது என்பதையும் மக்களுக்கும் இங்கிலாந்து பாராளுமன்றத்துக்கும் உணர்த்தினார். மேலும் நிர்வாகத்தில் சிக்கனம், செலவுசுருக்கம், வருவாய் அதிகரிப்பு ஆகிய கொள்கைகளின் அடிப்படையில் செயல் திட்டங்களை அமைத்து வெற்றி கண்டார் பெண்டிங்பிரபு. 1833-ம் ஆண்டு இயற்றப்பட்ட பட்டய சட்டத்தின்படி வில்லியம் கோட்டையின் கவர்னர் ஜெனரல் என்ற பதவி இந்தியாவின் கவர்னர் ஜெனரல என்று மாற்றப்பட்டது. இதன்படி இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் ஆனவர் வில்லியம் பெண்டிங்பிரபு ஆவார்.

## 5.1 நோக்கங்கள்

இந்த அலகை நீங்கள் படித்து முடித்த பின்பு உங்களால்,

- பெண்டிங் பிரபுவின் சீர்திருத்தங்களை பற்றி அறிந்துக்கொள்ள முடியும்.
- பெண்டிங் பிரபுவும் இந்திய சுதேச அரசுகளையும் பற்றி விவாதிக்க முடியும்.
- நாடிழக்கும் கொள்கையின் நன்மைகள் மற்றும் தீமைகளைப் பற்றி விளக்க முடியும்
- மைசூர் போர்களின் தாக்கங்கள் மற்றும் விளைவுகளை ஆராய முடியும்.

## 5.2 பெண்டிங் பிரபுவின் சீர்திருத்தங்கள்

**வில்லியம் பெண்டிங் பிரபு பெண்டிங் பதவி ஏற்கும் போது இந்தியாவின் நிலை:**

இவருக்கு முன்னதாகப் பணியாற்றிய ஹேஸ்டிங்ஸ் பிரபுவும் அமர்ஸ்ட் பிரபுவும் நேபாளப் போர், மூன்றாம் மராட்டியப் போர் முதலாம் பர்மியப் போர் ஆகிய போர்களில் ஈடுபட்டு கம்பனியின் கருவூலத்தை காலியாக வைத்திருந்தனர். பிண்டாரிகளை ஒழிப்பதிலும் ஏராளமான பணம் செலவானது. இவ்வாறு பற்றாக்குறையிருக்கும் போது பதவியேற்ற இவரை கம்பனி நிர்வாகக் குழுவினர் பாராளுமன்றத்தில் சாதகமான அறிக்கை

சமர்ப்பிக்க வேண்டுமென்று கேட்டனர்.

மேலும் பெண்டிங் பதவியேற்ற போது இந்திய சமுதாயத்தில் சதி, குழந்தைகளைக் கொல்லுதல் போன்ற கொடூரமான பழக்கங்கள் காணப் பட்டன. மக்கள் போதிய கல்வியறிவற்று இருந்தனர். நீதிமன்றங்கள் அநீதி நிறைந்தனவாகவும், அதிக செலவு உள்ளவைகளாகவும், வழக்குகளை விசாரிப்பதில் தாமதமாகவும் இருந்தன. இந்தியர்களுக்கு அரசாங்கம் வேலை வாய்ப்பு கொடுக்கவில்லை. இந்த சீர்கேடுகளை நீக்க பெண்டிங் பெரிதும் பாடுபட்டார். மெக்காலே பிரபு பெண்டிங்கின் செயல்களைப் பெரிதும் பாராட்டுகிறார். ஆனால் ராபர்ட்லீ என்பவர் ஏகாதிபத்திய ஆட்சியை விரும்பிய பிரிட்டி' ஆட்சியில் ஒரு நிரந்தரமான மாற்றத்தை பெண்டிங் ஏற்படுத்த முடியாமல் போயிற்று என்று குறை கூறுகிறார்.

**பெண்டிங் பிரபுவின் சீர்திருத்தங்கள்:**

**பொருளாதார சீர்திருத்தங்கள்:**

கம்பெனியின் நிதிநிலை மோசமாக இருந்ததால் சிக்கனம், செலவு சுருக்கம், வருவாய் அதிகரிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் பெண்டிங் பொருளாதாரச் சீர்திருத்தங்களை மேற்கொண்டார். கம்பெனியின் நிர்வாகச் செலவையும் படைத்துறை செலவுகளையும் எவ்வகையில் குறைக்கலாம் என்பதை அறிந்து அறிக்கை அளித்திட இரண்டு குழுக்கள் நியமிக்கப் பட்டன. இந்த குழுக்களின் ஆலோசனையின் பேரில் நிர்வாகத்துறையில் ஆட்குறைப்பு செய்தார் அதிக சம்பளத்திற்கு ஐரோப்பியர் செய்து வந்த பல அலுவல்களுக்கு இந்தியர்களை நியமித்து குறைந்த சம்பளத்தைக் கொடுத்தார். இதனால் பணம் மிச்சமானது.

போர் வீரர்கள் போர்க்காலப்படியை (Batta) பாதியாகக் குறைத்து 1828 நவம்பரில் உத்தரவிட்டார். கல்கத்தாவைச் சுற்றி 400 மைல் எல்லைகளில் இருந்த எல்லா படைகளுக்கும் இச்சட்டம் அமுல்படுத்தப் பட்டது. அதன் மூலம் ஆண்டொன்றுக்கு 20,000 பவுன் மிச்சமானது. படைத்துறையில் பணியாற்றியவர்களின் எதிர்ப்பு பலமாக இருந்தாலும் பெண்டிங் தனது முடிவில் உறுதியாக நின்றார்.

அபினி வியாபாரத்தில் கம்பெனிக்கிருந்த ஏகபோக உரிமையைப் பயன்படுத்தினார் பெண்டிங். மாளவத்திலிருந்து பம்பாய்க்கு அபினைக் கொண்டு செல்ல கம்பனியின் அனுமதியைப் பெற வேண்டும் என்று கூறி அதற்கு அனுமதிக் கட்டணத்தையும் நிர்ணயித்தார். இதனால் கம்பனியின் வருமானம் அதிகரித்தது.

செலவைக் குறைப்பதற்காக காரன்வாலிஸ் பிரபுவால் ஏற்படுத்தப் பட்ட மாநில மேல் வழக்கு நீதிமன்றங்களை ஒழித்தார். சுழல் நீதிமன்றங் களையும் ஒழித்தார். வேறு பொறுப்பு வாய்ந்த அலுவல்களுக்கு லாயக் கற்ற நீதிபதிகளின் ஓய்விடங்களாக இந்த நீதிமன்றங்கள் செயல்பட்டன" என்பது பெண்டிங் பிரபுவின் கருத்து. இதனால் நீதித்துறையின் செலவு குறைந்தது.

தனியார்களுக்கும், பல தனி ஸ்தாபனங்களுக்கும் கம்பனியார்வரி இல்லாமல் அனுபவிக்கும்படி நிலங்களைக் கொடுத்து வைத்திருந்தனர். அந்த நிலங்களைப் பற்றி பரிசீலிப்பதற்கு 1793, மற்றும் 1819-ம் ஆண்டுச் சட்டங்கள் கலக்டருக்கு அதிகாரம் கொடுத்திருந்தன. கலக்டர்களின் செயல் பாடுகளைப் பற்றி சந்தேகம் கொண்ட பெண்டிங்பிரபு 1828- ல் ஒரு சட்டத் தைப் பிறப்பித்து அந்த நிலங்கள் சட்டபூர்வமாகக் கொடுக்கப்பட்டுள்ள னவா என்றும் சட்டபூர்வமான சந்ததியாரின் அனுபவத்தில் இருக்கிறதா என்றும் பரிசீலிக்கும்படி கலக்டர்களைக் கேட்டுக்கொண்டார். கலக்டர் களின் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவதற் கென்று ஒரு

சிறப்புக் குழுவை அமைத்தார். இதன்படி சரியான ஆதாரங்கள் இல்லாத நிலங்களைப் பறிமுதல் செய்தார். இதனால் அரசுக்கு அதிக வருமானம் கிடைத்தது.

வடமேற்கு மாநிலங்களில் நிலவரித்திட்டத்தை பெண்டிங் மாற்றி யமைத்தார். தானே நேரடியாக அந்த மாநிலத்திற்குச் சென்று நிபுணர்களைக் கொண்டு அவைகளின் பரப்பை அளந்து அவற்றின் படங்களை வரைந்து, மண்ணின் தன்மையைப் பரிசீலித்து நிலத்துக்கேற்ற தீர்வையை விதித்தார். அது முப்பது ஆண்டுகளுக்கு மாறாதது என்று அறிவித்தார். இதனால் கம்பெனிக்கு நிரந்தர வருமானம் கிடைத்தது. நிலவளமும் அதிகரித்தது.

இவ்வாறு பல முயற்சிகள் செய்து பற்றாக்குறையாக இருந்த கம்பனியின் நிதிநிலையை உபரி நிலைக்கு கொண்டு வந்தார் பெண்டிங். பத்துலட்சம் பவுன்ட் ஸ்டெர்லிங் நஷ்டத்துடன் இருந்து வந்த அரசநிதி பெண்டிங்காலத்தில் இருபது லட்சம் பவுன்ட் ஸ்டெர்லிங் உபரி வருமான மாக மாறியது.

**நீதித்துறை சீர்திருத்தங்கள்:**

கம்பனியின் நீதித்துறை உறுதியற்றதாகவும், தாமதமுள்ளதாகவும், செலவுமிக்கதாகவும் காணப்பட்டது. புதிதாகச் சேர்க்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்கள் கல்கத்தாவில் இருந்த உயர்நீதி மன்றங்களுக்கு வருவது கடினமானதாக இருந்தது. இதனால் பென்டிங்பிரபு நீதித்துறையில் பல மாற்றங்களைச் செய்தார். இவரது நீதித்துறை சீர்திருத்தங்களுக்கு சர் சார்லஸ் மெட்கால்ஃப், பட்டர்வொர்த், பெய்லே, மெக்கன்சி முதலியோர் பெரிதும் உதவினர்.

1829-ம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டத்தின்படி பெண்டிங் மாநில மேல்வழக்கு நீதிமன்றங்களையும், சுழல் நீதிமன்றங்களையும் நீக்கிவிட்டு அவற்றின் பணிகளைச் செய்வதற்கு ஆணையர்களை நியமித்தார். வங்காளத்தில்-20 பிரிவுகளாகப் பிரித்து பிரிவுக்கு ஒரு ஆணையரை நியமித்தார். அவர்கள் மேல் வழக்கு நீதிமன்றங்களின் நீதிபதிகள் செய்த வேலையைச் செய்து கொண்டு, தங்கள் பிரிவுக்கு உட்பட்ட கலெக்டர் களையும், காவல் துறையினரையும் கண்காணிக்க வேண்டும். இந்த ஆணையர்களை வருவாய்க்குழுவும், சடர் நிஜாமத் அடலட் என்ற நீதிமன்றமும் கண்காணித்தது.

1829-ல் இயற்றப்பட்ட மற்றொரு சட்டப்படி இரண்டு வருடம் வரை தண்டனை கொடுக்கும் அதிகாரம் மாஜிஸ்டிரேட்டுகளுக்கு கொடுக்கப்பட்டது. ஆனால் அவர்களின் தீர்ப்பை எதிர்த்து ஆணையர் களுக்கு அப்பீல் செய்து கொள்ளலாம். 1831 - ல் பிறப்பிக்கப்பட்ட சட்டம் குத்தகை வாரம் முதலியவை பற்றிய வழக்குகளை கலக்டரே விசாரித்து தீர்ப்புக் கூற வேண்டும் என்றும், அவரது தீர்ப்பை எதிர்த்து இதர நீதி மன்றங்களுக்கு செல்ல முடியாது என்றும் கூறியது. மேலும் இச்சட்டத்தின் படி மாவட்ட நீதிமன்றங்களிலும் நகர நீதிமன்றங்களிலும் முன்சீப்கள் என்ற இந்திய நீதிபதிகள் நியமிக்கப்பட்டனர். ஆனால் அவர்களுக்கு அமெரிக்கர் களையும் ஆங்கிலேயர்களையும் விசாரிக்கும் உரிமை கிடையாது.

அலகாபாத்தில் 1832-ல் ஒரு சடர் திவானி அடலட்டும், சடர் நிசாமத் அடலட்டும் அமைக்கப்பட்டது. ஜூரி முறையும் ஏற்படுத்தப்பட்டது. ஜூரிகளாக இந்தியர்கள் நியமிக்கப்பட்டனர். மாநிலங்களில் விசாரணை களும், குறுக்கு விசாரணைகளும் பாரசீக மொழியிலேயே நடைபெற்று வந்ததை மாற்றி, அந்தந்த மாநிலங்களின் பிரதேச மொழியிலேயே வழக்குகளை விசாரிக்கும் படி செய்தார். இதனால் இந்தியர்கள் தங்கள்

தாய் மொழியில் தங்களுடைய குறைகளைக்கூறிக் கொள்ள முடிந்தது. மேலும் இந்தியர்களுக்கு உயர்ந்த பதவிகள் கொடுக்கப்படாமல் இருந்த நிலையை மாற்றி அவர்களுக்கு உயர்ந்த பதவிகள் அளித்தார். ஆங்கில அதிகாரிகளுக்கு கொடுக்கப்பட்டு வந்தது போலவே ஊதியமும் வழங்கப்பட்டது.

**நிர்வாக சீர்திருத்தங்கள் :**

காரன்வாலிஸ் பிரபு இந்தியர்களைப் பற்றிக் கொண்டிருந்த அபிப் பிராயத்தை நீக்கி தகுதி வாய்ந்த இந்தியர்களை எல்லாத் துறைகளிலும் வேலைக்கு அமர்த்தினார் பெண்டிங். ஆங்கில மொழியை அநேக மக்கள் விரும்பிக்கற்றதால் எழுத்தர் பதவிக்கு ஏராளமான இந்தியர் கிடைத்தனர். இந்திய நீதிபதிகளையும் நியமித்தார். தான் பின்பற்றிய கொள்கையில் இந்தியர்களின் அன்பும் ஆதரவும் கிடைத்ததைக் கண்ட பெண்டிங் இந்தியர்களின் நலனுக்கென 1833-ம் பட்டயச்சட்டத்தில் சில முக்கியமான கருத்துக்களைச் சேர்க்க பாடுபட்டார். இச்சட்டத்தின்படி இந்தியாவில் பிறந்த எவருக்கும் நிற, மத, இன அடிப்படையில் பதவிகளும் வேலை வாய்ப்பு களும் மறுக்கப்படக் கூடாது என்று கூறப்பட்டது. ராம்சேமூர் என்பவர் கூற்றுப்படி இந்தியர்களின் மகிழ்ச்சியிலே தான் ஆங்கிலேயர் பெருமை உள்ளது (British Greatness upon indian Happiness) என்ற கொள்கைப்படியே பெண்டிங் தனது ஆட்சிக்காலம் முழுவதும் செயல் பட்டார்.

**பொது மராமத்து சீர்திருத்தங்கள்:**

மிண்டோ பிரபு ஆரம்பித்து வைத்த நீர்பாசனத் திட்டங்களை பெண்டிங்பிரபு மேற்கொண்டார். வடமேற்கு மாநிலங்களில் நீர்ப்பாசனக் கால்வாய்களையும் குளங்களையும் வெட்டி சிந்துநதி நீரை பயன்படுத்தி னார். மேலும் போக்குவரத்து வசதிகளைப் பெருக்கினார். கல்கத்தாவி லிருந்து டில்லிக்கு புசயனெ வுசரமெ சுழயன என்ற பெருவழிச் சாலை ஒன்றை அமைத்தார். அதேபோல் பம்பாயிலிருந்து ஆக்ராவிற்கு ஒரு பெருவழிச் சாலை அமைக்கும் வேலையை அவர்காலத்தில் ஆரம்பித்தார். நீராவிப் படகு, கப்பல் போக்குவரத்தையும் தொடங்கிவைத்தார். 1835-ல் பொருள்களை ஓரிடத்திலிருந்தது மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்வதற்கு செலுத்த வேண்டிய வரியை (Transit duties) ஒழித்தார்.

**கல்வி சீர்திருத்தங்கள்**

இந்தியாவில் ஆங்கிலக் கல்வி வரலாற்றில் பெண்டிங்கின் பெயர் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டும். ஆங்கிலமொழி இந்தியாவில் பயிற்சி மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் வளர வித்திடப்பட்டது பெண்டிங்பிரபு ஆட்சிக்காலத்தில் தான். இந்திய மக்களின் கல்வி வளர்ச்சிக்காக 1813-ம் வருட பட்டயச் சட்டப்படி இங்கிலாந்து பாராளுமன்றம் ஒருலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்தது. பிரிட்டனின் ஆதிக்கத் திற்குள் அமைந்த பகுதிகளில் வாழும் மக்களின் விஞ்ஞான அறிவை வளர்ப்பதற்கும், அதற்கு புத்துயிர் அளிப்பதற்கும் என அந்த தொகை ஒதுக்கப்பட்டது. இதற்காக பத்து உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கல்வி வாரியமும் (Board of education) அமைக்கப்பட்டது.

ஆனால் இந்தப் பணத்தை எப்படி செலவு செய்வது என்பதில் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் அந்த தொகை செலவு செய்யப்படா மலேயே இருந்தது. ஆனால் கவர்னர் ஜெனரலின் ஆலோசனைக் குழுவின் சட்ட உறுப்பினரும், கல்வி வாரியத்தின் தலைவராக நியமிக்கப்பட்ட வருமான மெக்காலே பிரபுவின் ஆலோசனையின் பேரில் அந்தப் பணம் இந்தியாவில் ஆங்கிலக் கல்வி வளர்ச்சிக்காகச் செலவு செய்யப்பட

வேண்டும் என்று பெண்டிங் தெரிவித்தார். 1835 மார்ச் 7-ம் தேதி ஒரு அரச தீர்மானத்தின்படி ஆங்கிலமொழி இந்தியாவின் பயிற்சி மொழியாகவும் ஆட்சிமொழியாகவும் ஆக்கப்பட்டது.

பெண்டிங் பிரபுவின் இந்த முயற்சியின் விளைவாக நாடு முழுவதும் பல ஆங்கிலப் பள்ளிகளும், கல்லூரிகளும் தோன்றின. அவற்றை அரசு நேரடியாகக் கண்காணித்து வந்தது. தனியார் நிறுவனங்கள் மூலமும் கல்வி நிலையங்கள் நிறுவப்பட்டன. கிறிஸ்தவ சமயப் பணியாளர்களும் இவர் காலத்தில் கல்வி மற்றும் மருத்துவப்பணிகளில் ஈடுபட்டனர். 1830-ல் ஸ்காட்டி'திருச்சபை கல்கத்தாவில் ஒரு கல்லூரியை ஆரம்பித்தது. 1835 - மார்ச்மாதம் கல்கத்தாவில் வைத்தியக்கல்லூரி (Medical college) ஒன்றை நிறுவி மேல்நாட்டு வைத்தியக்கல்வி இந்தியாவில் பரவ வழி செய்தார். இவ்வாறு பெண்டிங் பிரபு ஆரம்பித்து வைத்த ஆங்கிலக் கல்வி இந்திய சுதந்திரத்திற்கு அடிகோலியதோடு நாட்டின் பல்வேறு மொழியினரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளவும், ஒருவரை ஒருவர் அன்பினால் ஈர்க்கவும் பெரிதும் உதவியது என்பதை மறுக்கமுடியாது.

**சமூக சீர்திருத்தங்கள் (Social reforms):**

சமூகச் சீர்திருத்தங்களின் வாயிலாக இந்திய மக்களின் உள்ளத்தில் அழியா இடம் பெற்றிருப்பவர் பெண்டிங். இவர்தான் இந்திய சமுதாயத்தில் காணப்பட்ட பல கொடிய பழக்கங்களை ஒழித்துக்கட்டினார்.

**a) உடன்கட்டை ஏறுதலை ஒழித்தல் (abolition of sati):**

கணவன் இறந்தவுடன் மனைவியும் கணவனை எரியூட்டும் தீயில் உடன்கட்டை ஏறி உயிரைவிட்டுவிடும் வழக்கத்திற்கு சதி என்று பெயர் இந்த கொடிய பழக்கம் இந்தியாவில் புனிதச் சடங்காகக் கருதப்பட்டு வந்தது. சதி என்பதற்கு சுத்தமும் கற்பும் உள்ள பெண் என்று பொருள்படும். இந்த கொடிய வழக்கம் முகலாயர்களால் தடை செய்யப்பட்டது. இது பெரும் பாலும் உயர் ஜாதி மக்களிடமே காணப்பட்டது. உடன்கட்டை ஏறுதல் ஒரு பெருமையும், புனிதமுமான செயலாகக் கருதப்பட்டது. இச்செயலை அக்பர் கண்டித்தார். ஆனால் அவரால் அக்கொடிய வழக்கத்தை நிறுத்த முடியாமல் போனது.

ராஜாராம் மோகன்ராய் என்பவர் கல்வியில் சிறந்த ஓர் இந்தியர். சதி என்ற வழக்கத்தின்படி தனது மனைவியின் சகோதரியை இழந்த குடும்பத்தின் நிலை கண்டு கலங்கி சதி என்ற பழக்கத்தை ஒழிக்க விரும்பி னார். இதற்காக பலதுண்டு பிரசுரங்களை வெளியிட்டார். சதிக்கு எதிராக பத்திரிகைகளில் எழுதினார். இவரது கருத்துக்களை பத்திரிகைகளும், கல்வி அறிவு பெற்ற மக்களும் வரவேற்றனர். இவர் சதியை ஒழிக்குமாறு ஒரு சட்டம் இயற்ற பெண்டிங் பிரபுவைத் தூண்டினார். மேலும் சீர்திருத்த வாதியான துவாரக நாத்தாகூர், செராம்பூர் கிறிஸ்தவ மிீனரி வில்லியம் கேரி ஆகியோரும் பெண்டிங்கை வற்புறுத்தினர்.

எனவே 1829 - டிசம்பர் 4-ம் தேதி, 27 - ம் எண் ஒழுங்குமுறையின்படி சதியை சட்டவிரோதம் என்று அறிவித்தார். இதன்படி "உடன்கட்டை ஏறுதலுக்கு உதவியளிப்பவர்களும், பலவந்தப்படுத்துபவர்களும் கொலைக் குற்றம் செய்வதற்கு உடந்தையானவர்களாகக் கருதப்பட்டு மரண தண்டனை விதிக்கப்படுவார்கள் என்று அறிவித்தார். இச்சட்டம் முதலா வது வங்காளத்தில் செயல்படுத்தப்பட்டது. 1830-ல் சென்னை , பம்பாய் மாநிலங்களில் இச்சட்டம் பின்பற்றப்பட்டது. பின்னர் படிப்படியாக பல மாநிலங்களில் இச்சட்டம் பின்பற்றப்பட்டு சதிசட்டபூர்வமாக ஒழிக்கப்பட்டது.

**b) பெண் குழந்தைகளைக் கொல்லுதலை ஒழித்தல் :**

பெண்டிங்பிரபு காலத்தில் ராஜபுதனம், பஞ்சாப், மாளவம், கட்ச்பகுதி, கத்தியவார் ஆகிய பகுதிகளில் மற்றொரு கொடிய பழக்கம் நிலவி வந்தது. பெண்குழந்தைகளை கடலில் வீசி எறிந்தோ அல்லது பட்டினி போட்டோ, அல்லது பெண்கள் தங்கள் மார்பகங்களில் அபினி என்ற போதைப் பொருளைத் தடவியோ கொன்றுவிடும் பழக்கமே அந்த கொடிய பழக்கம் ஆகும். இப்படி பெண்குழந்தைகள் கொல்லப்பட்டதற்கு பலகாரணங்கள் சொல்லப்படுகிறது. இந்த பழக்கத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்த டோட் (Tod) என்பவர் பின்வரும் காரணங்களைக் கூறுகிறார். ஒரே இனத்தில் (Same clan) திருமணம் செய்து கொள்ள இருந்ததடை, பருவம் அடைந்து அதிக காலமாக திருமணமாகாமல் இருத்தல், திருமணத்திற்கு ஆகும் செலவுகள் ஆகியவைகளே பெண் குழந்தைகளைக் கொல்வதற்கு முக்கிய காரணமாக அமைந்தது. 1802-ம் ஆண்டு பெண்குழந்தைகளைக் கொல்வது சட்டப்படி குற்றமாகும்" என்று ஆணை வெளியிட்டார் பெண்டிங்பிரபு. இதனால் இந்த மனிதத் தன்மையற்ற நடவடிக்கை சிறிது சிறிதாகக் குறைந்தது .

**c) தக்கர்கள் அடக்கப்படுதல்:**

பரம்பரையாக வழிப்பறி கொள்ளைகளில் ஈடுபட்டு வந்த தக்கர் கள் என்ற கொள்ளைக்கூட்டத்தினரை அடக்கிய பெருமை பெண்டிங் பிரபு வையே சாரும். இந்த தக்கர்கள் இந்து மற்றும் முஸ்லீம் சமூகத்தைச் சேர்ந்த வர்களானாலும் காளி அல்லது துர்கையை தெய்வமாக வழிபட்டனர். இவர்களுடைய ரகசிய நிறுவனங்கள் நாடு முழுவதும் இருந்தன. அவர்கள் வர்த்தகர்கள் அல்லது யாத்ரீகர்கள் போல் பிரயாணம் செய்து சாலைகளில் சந்திக்கும் வழிப்போக்கர்களின் உடமைகளைக் கொள்ளையிட்டு, கொடூர மாகக் கொன்றும் வந்தனர். தாங்கள் கொன்ற மனிதர்களின் தலைகளை தேவதைகளுக்கு பலியாகப் படைத்தனர். இவர்கள் கூட்டத்தில் கொலை செய்தல், கொள்ளையடித்தல், பொருட்களைக் கடத்துதல், கொல்லப் பட்டவர்களை அப்புறப்படுத்துதல், துப்பறிதல், மாறுவேடம் போடுதல் போன்ற பல வேலைகளில் தனித்தனிதிறமை பெற்றவர்கள் உண்டு. தக்கர்கள் தங்களுக்கென குளூவுக்குறி (gesture language - Jargon) வைத்திருந்தார்கள்.

இப்படிப்பட்ட கொடியவர்களை அழிக்க முடிவு செய்தார் பெண்டிங். அந்தப் பொறுப்பை சர் வில்லியம் சிலிமேன் (Sir. William Sleeman) என்பவரிடம் ஒப்படைத்தார் பெண்டிங். அவர் இந்து சுதேச அரசர் களின் ஆதரவுடன் மிகக் குறுகிய காலத்தில் சுமார் 2000 தக்கர்களைக் கைது செய்தார். அவர்களில் பாதிக்கு மேலானோர் கொல்லப்பட்டனர். அநேக இருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. இந்த குற்றவாளிகளின் குழந்தை களின் நலன்கருதி ஜபல்பூரில் ஒரு தொழிற்பள்ளியை ஆரம்பித்தார் பெண்டிங்.

**d) இந்து மத வாரிசுரிமைச் சட்டத்திருத்தம் (Hindu law of inheritance):**

நிறம், மதம் ஆகியவற்றின் காரணமாக இந்தியர்களுக்கு பதவி கொடுக்காமல் இருக்கக்கூடாது என்ற சட்டம் இயற்றிய பெண்டிங் இன்னொரு சட்டத்தின் மூலம் ஒரு சமூகச் சீர்திருத்தம் செய்தார். அதுவரை இந்துக்களில் யாராவது பிற மதத்தில் சேர்ந்தால் அவர்களுக்கு குடும்ப சொத்துரிமை கிடைக்கும்படியாக இந்து மரபுவழி உரிமைச் சட்டத்தில் திருத்தம் செய்தார். இதன்படி சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்றானது. மதம் மாறினாலும் சொத்துரிமை பிள்ளைகளுக்கு உறுதி செய்யப்பட்டது.

**பெண்டிங் பிரபுவும் இந்திய சுதேச அரசர்களும் :**

இந்திய சுதேச அரசர்களின் விவகாரங்களில் தலையிடா கொள்கை யைப் பின்பற்றினார் என்றாலும் சில சமயங்களில் தலையிட்டு பிரிட்டி' பேரரசின் ஆதிக்கத்தை அதிகப்படுத்தினார். பொதுவாக இவரது வெளி உறவுக் கொள்கை பெரிதாக மதிக்கப்படும் அளவிற்கு சிறந்து விளங்க வில்லை.

**மைசூர்** : மைசூரின் மன்னர் மூன்றாம் கிரு'ணராஜரின் அமைச்சர் 1811-ல் பதவி விலகிய பின் அங்கு குழப்பம் ஏற்பட்டது. அரசரே எல்லா பொறுப்பையும் ஏற்றுக்கொண்டார். நாட்டில் ஏற்பட்ட கிளர்ச்சிகளை அடக்கும் திறன் அவரிடம் இல்லை . 1825-ல் சென்னை கவர்னர் மன்றோ மைசூருக்கு நேரில் சென்றும் பிரச்சனை தீரவில்லை . 1830 -ல் நாகர் (யேபநச) பகுதியில் பயங்கர குடியானவர் கலகம் ஒன்று தோன்றியது. சென்னை யிலிருந்து சென்ற ஆங்கிலப் படை அக்கலகத்தை அடக்கியது. 1831- ல் மைசூர் மன்னரைப் பதவி நீக்கம் செய்து அவருக்கு ஓய்வூதியம் கொடுத் தார் பெண்டிங். மைசூர் ஆங்கில அரசுடன் இணைத்துக் கொள்ளப்பட்டது. 1831 முதல் 1881 வரை ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் இருந்து வந்தது மைசூர். 1881-ல் ரிப்பன் பிரபு காலத்தில் மைசூர் மீண்டும் அரச குடும்பத் திற்கே திருப்பிக் கொடுக்கப்பட்டது.

**கூர்க்** : **(Coorg)** கூர்க் நாட்டை பெண்டிங் பிரபு போர் செய்தே ஆங்கில ஆதிக்கத்தினுள் கொண்டுவந்தார். 1820-ல் கூர்க் அரசராக ஆன வீர ராஜா (Vira Raja ) என்பவர் ஆட்சியில் மக்கள் துன்படைந்தனர். ஆங்கி லேயருடன் விரோதம் கொண்டு பெங்களூரை கைப்பற்ற நினைத்தார் வீர ராஜா. எனவே 1834 - மார்ச்சில் கூர்க் நாட்டின் மீது பெண்டிங் படையெடுத் தார். வீரராஜா கைது செய்யப்பட்டார். கூர்க் நாடு ஆங்கில அரசுடன் இணைக்கப்பட்டது.

**கச்சார்** : **(Cacher)** இது வங்காளத்திற்கு வடகிழக்குப் பகுதியிலுள்ள நாடாகும்.1832- ல் இதன் அரசர் கொலை செய்யப்பட்ட பின்னர் இங்கு குழப்பம் ஏற்பட்டது. அங்குள்ள மக்கள் பெண்டிங் பிரபுவைத் தலையிடு மாறு வேண்டினார். எனவே பெண்டிங் கச்சாரை பிரிட்டி' பேரரசுடன் இணைத்துக்கொண்டார். இது ஒரு சிறிய பகுதியாக விளங்கினாலும் தேயிலைப் பயிருக்கு ஏற்ற இடமாக இருந்ததால் ஆங்கிலேயரின் தேயிலை வாணிபம் பெருகியது. அதே வருடம் சைந்தியா (துயவைெயை) என்ற பகுதியை யும் இணைத்துக் கொண்டார் பெண்டிங்.

**ரஷ்யப்பயம்** : **(Russophobia)** ர'யா இந்தியாமீது தாக்குதல் தொடுக்கும் என்ற பயம் பெண்டிங் பிரபுவின் வெளிநாட்டுக் கொள்கை யை ஒழுங்கமைத்தது. ர'யத்தாக்குதலிலிருந்து நாட்டைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் வடமேற்கு எல்லையிலுள்ள சிந்து, பஞ்சாப் ஆகிய நாடு களுடன் நேச உறவு கொண்டார் பெண்டிங். சீக்கியத் தலைவர் ரஞ்சித்சிங் குடன் 1832- ல் ரூபர் என்ற இடத்தில் சந்தித்து சிந்து நதிப் போக்குவரத்து உடன்படிக்கை (Indus Navigation Treaty) ஒன்றைச் செய்து கொண்டார். ஆப்கானிய அரசுக்கும் இந்திய அரசாங்கத்துக்குமிடையில் சிந்துவும் பஞ்சாபும் இடைப்படு நாடுகளாக மாறியதால் ஆப்கானியர்களின் படையெடுப்பை பெண்டிங் பிரபுவால் தடுக்க முடிந்தது.

**பெண்டிங் பிரபுவைப் பற்றிய மதிப்பீடு:**

இந்தியாவை ஆட்சி செய்த கவர்னர் ஜெனரல்களில் பெண்டிங் பிரபுவே எல்லா வரலாற்றாசிரியர்களாலும் புகழப்படுகிறார். ஆங்கிலே யர்களின் முக்கிய கடமை அவர்களால் ஆளப்படுகின்ற இந்தியர்களுக்கு கல்வியறிவையும் சுதந்திர உரிமையையும் தரவேண்டியதே" என்பதை

உணர்ந்து அதை செயலளவில் செய்து காட்டிய பெருமை பெண்டிங் பிரபுவையே சாரும். பெண்டிங் பிரபு இந்திய மக்களின் நலன்களுக்கான பல சீர்திருத்தங்களைச் செய்து புகழ்பெற்றார். அவரது சமுதாயச் சீர்திருத்தங்கள் மிகவும் புகழ்பெற்றவை. கம்பெனியின் நிதிநிலையை பற்றாக்குறையிலிருந்து உபரிநிலைக்குக் கொண்டுவந்தவர் பெண்டிங்பிரபு ஆவார்.

ஆனால் டார்டன் (Thorton) போன்ற வரலாற்றாசிரியர்கள் பெண்டிங் பிரபுவின் காலம் சாதனைகளில்லாத வெற்றுக்காலம்“ (Blank achievements) என்று கூறுகின்றனர். வெல்லிங்டன் பிரபு என்பவர் பெண்டிங் பிரபுவின் போர்த்திறமையையும் நிர்வாகத்திறமையையும் குறைவாகவே மதிப்பிடுகிறார். ஆனால் மெக்காலே பிரபு பெண்டிங் பிரபுவின் சீர்திருத் தங்களையும், கல்வி முறையையும், இந்திய சுதேச அரசர்களுடன் அவர் கொண்டிருந்த தொடர்பையும் அவருடைய நூல்கள் மூலம் பாராட்டு கிறார். சீர்திருத்த செம்மலான பெண்டிங்பிரபு 1835-ல் சுகவீனம் காரணமாக இங்கிலாந்து திரும்பினார். அவருக்குப்பின் சார்லஸ் மெட்கால்.ீ.ப் என்பவர் கவர்னர் ஜெனரல் ஆனார்.

## 5.3 நாடிழக்கும் கொள்கை (Doctrine of Lapse)

### டல்ஹௌசி பிரபு

ஹார்டிஞ்ச் பிரபுவுக்குப் பிறகு இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக டல்ஹௌசி பிரபு 1848 ஜனவரியில் நியமிக்கப்பட்டார். அப்போதுஅவருக்கு வயது 35. இந்தியாவின் கவர்னர் ஜெனரல்களில் மிகவும் வயதில் குறைந்தவர் இவரே ஆவார். ஸ்காட்லாந்தை சேர்ந்த டல்ஹௌசி மிக்க திறமையும் சாமர்த்தியமும் கொண்டவர். செயலாற்றும் திறனும், ஆதிக்கம் செலுத்தும் மனப்பான்மையும் உடையவர்., கவர்னர் ஜெனரலாகப் பதவி ஏற்பதற்கு முன்பு பலதுறைகளிலும் பணியாற்றி நல்ல அனுபவம் பெற்றிருந்தார். நெப்போலியனை எதிர்த்து வாட்டர்லூ போர்க்களத்தில் போர் புரிந்து புகழ்பெற்றார். பின்னர் கனடாவின் கவர்னராகவும் 1829 முதல் 1832 வரை இந்தியாவில் படைத்தலைவராகவும், 1837ல் பாராளுமன்ற உறுப்பினராகவும், 1845ல் கம்பெனி வணிக வாரியத்தின் தலைவராகவும் பணியாற்றினார்.

டல்ஹௌசி பிரபு இந்தியாவின் கவர்னர் ஜெனரலாகப்பதவி ஏற்றது இந்தியாவின் வரலாற்றில் புதியதொரு சகாப்தத்தைத் தொடங்கி வைத்தது என்று வின்ஸ்டன் ஸ்மித் கூறுகிறார். இவரது எட்டு ஆண்டுகால ஆட்சி ஒவ்வொரு துறையிலும் சிறப்பு வாய்ந்ததாகவே இருந்தது. இந்தியாவில் பிரிட்டி‘ பேரரசின் பரப்பை அதிகப்படுத்திய பெருமை டல்ஹௌசி பிரபுவையேசாரும். ஆங்கில அரசின் ஆட்சி சுதேச அரசர்களின் ஆட்சியைவிட மேன்மையானது என்ற கருத்தைக்கொண்டவர் டல்ஹௌசிபிரபு. இந்தியப் பகுதிகளை ஆங்கில ஆட்சியின் கீழ் கொண்டுவருவதால் அந்தப்பகுதி மக்களுக்கு நன்மையே பயக்கும் என்று நினைத்தார். எனவேதான் போர்களில் வெற்றிபெற்றும், புதிய கொள்கைகளை வகுத்தும் சமாதான அடிப்படையிலும், நல்லாட்சியற்ற நாடுகள் என்று குற்றம் சாட்டியும் பல சுதேச அரசுகளை பிரிட்டி‘ பேரரசுடன் சேர்த்துக் கொண்டார் டல்ஹௌசி.

### கொள்கை விளக்கம்

இந்து குடும்பங்களில், குறிப்பாக இந்து அரச குடும்பங்களில் தந்தை இறந்தால் அவரது மூத்த மகன் வாரிசாவது நடைமுறையாகவும், சட்டப்படியும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பழக்கமாக இருந்தது. ஆண் வாரிசு இல்லாதபோது இறந்தவருக்கு நெருங்கிய உறவினர் வாரிசாக ஏற்றுக்

கொள்ளப்படுவார். இந்தியாவில் பிரிட்டிஷ் பேராதிக்கம் (British Paramountcy) ஏற்பட்டபின் சுதேசி அரசுகள் சில கம்பெனியின் பாதுகாப்பின் கீழ் வந்தன. இப்பாதுகாக்கப்பட்ட நாடுகளின் (Protected States) வாரிசுரிமையை யார் தீர்மானிப்பது என்ற பிரச்னை எழுந்தது. இப்பிரச்சனைக்குத் தெளிவான ஒரு தீர்வைக் கொடுத்தார் டல்ஹௌசி. அதாவது கம்பெனியால் பாதுகாக்கப்பட்ட நாடு இங்கிலாந்தின் சார்பு நாடாகி, திறை செலுத்துவதால் அதன் வாரிசைத் தீர்மானிக்கும் உரிமை கம்பெனிக்கு உண்டு. அதாவது பாதுகாக்கப்பட்ட சார்பு நாடுகள் அவற்றின் வாரிசுரிமையை பிரிட்டிஷ் பேராதிக்கத்திடம் இழந்து விடுகிறது. அதனால் வாரிசை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ தலைமை ஆளுநருக்கு அதிகாரம் உண்டு. இக்கொள்கையே நாடிழக்கும் கொள்கை அல்லது அவகாசியிலிக் கொள்கை (Doctrine of Lapse) என்று அழைக்கப்படுகிறது. டல்ஹௌசியின் இக்கொள்கையின்படி பல பாதுகாக்கப்பட்ட அரசுகள் இணைக்கப்பட்டன.

**இணைக்கப்பட்ட நாடுகள் சதாரா, 1848**

சதாரா மராத்திய நாடு. 1819 இல் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின்படி பிரதாப்சிங் சதாராவின் மன்னரானார். அவர் கொடுங்கோலர். ஒழுக்கக்கேடர். சதாரா நிர்வாகம் சீரழிந்தது. மக்களிடையே செல்வாக்கு இழந்த பிரதாப் சிங் இறக்குமுன் (1848) அவருடைய உறவினரை சுவீகாரம் எடுத்துக் கொண்டார் . ஆனால் அதை பம்பாய் அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே, டல்ஹௌசி பம்பாய் அரசின் முடிவை ஏற்றுக் கொண்டு, அரசியல் அவசியம் கருதி சதாராவை பிரிட்டி' அரசுடன் இணைத்துவிட்டார் நடைமுறையையோ, பாரம்பரிய வழக்கத்தையோ, இந்து சட்டத்தைப் பற்றியோ கவலைப்படாமல் மேற்கொள்ளப்பட்ட சதாரா இணைப்பைக் கம்பெனியின் இயக்குநர்களும் ஏற்றுக் கொண்டனர்

**ஜான்சி, 1853**

ஜான்சி மத்திய இந்தியாவில் இருந்த மற்றொரு மராத்திய நாடு. அது கம்பெனியின் மேலாதிக்கத்தின்கீழ் வந்தது (1817). ஜான்சி அரசர் ராவ் ராமச்சந்திரா வுக்கு ஆண் வாரிசு இல்லாததால் சுவீகாரம் எடுத்துக் கொண்ட வாரிசை கம்பெனி ஏற்கவில்லை (1836). மாறாக, அரச குடும்பத்தைச் சேர்ந்த ரகுநாத ராவுக்கு அரசுரிமை அளிக்கப்பட்டது. அவர் இறந்தபின் கங்காதர ராவ் ஜான்சி மன்னரானார். அவருக்கு ஆண் வாரிசு இல்லாததால் இறக்குமுன் அனந்தராவை சுவீகாரம் எடுத்துக் கொண்டார் (1853). ஆனால் சுவீகாரம் எடுப்பதற்கு முன் கம்பெனியின் அனுமதியைப் பெறவில்லை என்றும், ஜான்சி குழப்பத்தில் இருப்பதாகவும் கூறி டல்ஹௌசி அந்த வாரிசை நிராகரித்தார். சுவீகாரப் புதல்வனின் தாயாகிய ஜான்சி ராணி லட்சுமிபாய் தன் மகனை ஜான்சி மன்னராக அங்கீகரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். ஆனால் டல்ஹௌசி கங்காதர ராவின் விதவை மனைவியின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளாமல் அவருக்கு உதவித் தொகை கொடுத்து விட்டு ஜான்சியை இணைத்துவிட்டார் ! அடிபட்ட பெண் புலியானார் லட்சுமிபாய்.

**நாக்பூர், 1854**

நாக்பூர் மத்திய மாகாணங்களிலேயே பெரிய மராத்திய நாடாகும். அதன் அரசர் மூன்றாம் ரகூஜி பான்ஸ்லே சிற்றின்ப வாழ்க்கையில் திளைத்திருந்தார். அவர் எவரையும் தத்தெடுத்துக் கொள்ளாமல் இறந்தார் (1853). 1854 ஜனவரி மாதம் டல்ஹௌசி நேர் வாரிசின்மையால் நாக்பூரை பிரிட்டி' அரசுடன் இணைத்து விட்டதாக அறிவித்தார். ரகூஜி நாட்டை நன்கு

நிர்வகிக்கவில்லை என்றும், மக்களின் நலன் கருதியே நாக்பூரை இணைப்பதாகவும் விளக்கமளித்தார் டல்ஹெளசி அதுமட்டுமல்ல. இணைக்கப்பட்ட நாக்பூர் அரண்மனையில் இருந்த நகைகளையும், தளவாட சாமான்களையும் 2,00,000 பவுனுக்குப் பகிரங்கமாக ஏலத்தில் விற்றார்! இணைக்கப்பட்ட நாடுகளில் நாக்பூர் தான் வளமிக்க பெரிய நாடாகும்.

**அயோத்தி, 1856**

நாடிழக்கும் கொள்கையின் கீழ் சம்பல்பூர், ஜெய்ப்பூர் (1849), பாகத், சிக்கிம் (1850), ஆர்க்காடு (1855) ஆகியவையும் இணைக்கப்பட்டன. இவற்றுள்ள அயோத்தி இணைப்பு (1856) தான் குறிப்பிடத் தக்கது. 1847 ஆம் ஆண்டு வாஜித் அலி (றுயதனை யுடை) அயோத்தி அரசரானார். பல்திறன் கொண்ட அவர் உல்லாச வாழ்க்கையில் காலம் கழித்து நிர்வாகத்தைக் கவனிக்கவில்லை.

டல்ஹெளசி அயோத்தி நிர்வாகத்தை நேர்ப்படுத்த 1848 ஆம் ஆண்டு வில்லியம் ஸ்லீமன் (William Sleeman) என்பவரை அயோத்தி நிலையராக (Resident) நியமித்தார். அவர் அயோத்தி பற்றி அளித்த அறிக்கையில் (1851) வாஜித் அலியின் உல்லாச வாழ்க்கை, நிர்வாகச் சீர்கேடுகள், மக்களின் மனக்குமுறல்கள் பற்றி விவரித்திருந்தார். அந்த அறிக்கையின் அடிப்படையில் டல்ஹெளசி 1856 பிப்ரவரி மாதம் பிறப்பித்த பிரகடனத்தின்படி அயோத்தி இணைக்கப்பட்டது. வாஜித் அலிக்கு ஆண்டு ஓய்வூதியம் கொடுக்கப்பட்டது. இணைக்கப்பட்ட அயோத்திக்கு தலைமை கமி‘னர் (Chief Commissioner) நியமிக்கப்பட்டார். அயோத்தியை ஆட்சி செய்த வாஜித் அலி‘ா (Wajid Ali shah) ஒரு நல்ல கலைஞர், கவிஞர், புரவலர். அவரது ஆட்சிக் காலத்தில் அயோத்தி டெல்லியை விட கலை, கலாச்சார சிறப்புற்றிருந்தது. எனினும் அயோத்தி காலத்தின் மாற்றங்களுக்கேற்ப மாறவில்லை! எனவே கலாச்சாரப் பெருமை மட்டும் ஒரு நாட்டைக் காப்பாற்றாது என்பதற்கு அயோத்தி ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்.

**முறைப்படுத்தப்படாத் திட்டம் (Non-Regulation System)**

டல்ஹெளசியின் ஆட்சிக் காலத்தில் போர்கள் மூலமாகவும், நாடிழக்கும் கொள்கை வழியாகவும் நாடுகள் இணைக்கப்பட்டன. இணைக்கப்பட்ட நாடுகள் ஒருங்கிணைக்கப்பட்டன. இந்த ஒருங்கிணைப்பு முறையே முறைப்படுத்தப்படாத் திட்டம் என்று அழைக்கப்படுகிறது. இத்திட்டதின் கீழ் ராணுவ வலிமை, நீதி நெறி, நிர்வாக விழிப்புணர்வு ஆகிய மூன்றும் ஒன்று சேர்க்கப்பட்டன. மக்களுக்கு நன்கு அறிமுகமாகியிருந்த நில வருவாய், நீதி நிர்வாகம் ஆகியவை எளிமைப்படுத்தப்பட்டன. இணைக்கப்பட்ட நாடு ஒவ்வொன்றும் சிறு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒரு தனி அதிகாரி நியமிக்கப்பட்டார். அவரிடம் நிதி, நீதி, காவல்துறை, ராணுவம் சம்மந்தப்பட்ட அனைத்து அதிகாரங்களும் கொடுக்கப்பட்டன. தல மரபுகள், பழக்க வழக்கங்களுக்கேற்ப சட்ட திட்டங்கள் வகுக்கப்பட்டன. சுருங்கக் கூறின் அதிகாரக் குவிப்பே முறைப்படுத்தப்படா திட்டத்தின் சாரமாகும்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

1. இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் என்று அழைக்கப்பட்டவர் யார்?
2. எந்த ஆண்டு சதி சட்ட விரோதம் என்று பெண்டிங்பிரபு அறிவித்தார்?
3. தக்கர்களை அடக்கும் பொறுப்பை யாரிடம் ஒப்படைத்தார் பெண்டிங்பிரபு?

4. ஆங்கில மொழி இந்தியாவின் ஆட்சி மொழியாக ஆக்கப்பட்டது எந்த ஆண்டு?
5. பெண்டிங்பிரபுக்கு பிறகு பதவி ஏற்ற கவர்னர் ஜெனரல் யார்?

## 5.4 மைசூர் போர்கள்

### ஹைதர் அலியும் ஆங்கிலேயர்களும்

மைசூர் விஜயநகர இந்து பேரரசின் ஒரு பகுதியாகும். கி.பி. 1565-ல் நடைபெற்ற தலைக்கோட்டைப் போருக்குப்பிறகு விஜய நகரப் பேரரசு வீழ்ச்சியடைந்தது. அதன்பிறகு உடையார் வம்சத்தின் இந்து ராஜாவின் கீழ் மைசூர் சுதந்திரமடைந்தது. அந்த வம்சத்தினர் பதினெட்டாம் நூற்றாண்டின் மத்திய காலம் வரைமைசூரை ஆண்டுவந்தனர். அவர்களில் நஞ்சராஜ் என்ற அரசரின்கீழ் துணிச்சல் வீரராய் விளங்கிய ஹைதர் அலி என்ற முகமதியர் தன்னுடைய திறமையாலும் தந்திரத்தாலும் நஞ்சராஜை விரட்டிவிட்டு மைசூரின் அரசரானார்.

### ஹைதர் அலியின் வாழ்க்கை வரலாறு:

ஹைதர் அலி இஸ்லாம் மதத்தைத் தோற்றுவித்த நபிகள் நாயகம் தோன்றிய குலத்தைச் சேர்ந்தவர் என்று சொல்லப்படுகிறது. இவர் 1722-ல் கோலார் மாவட்டத்தில் புதிக்கோட் (Budikote) என்ற இடத்தில் பிறந்தார்.) 1749-ல் பெங்களூருக்கு அருகில் உள்ள தேவஹல்லி Davanhalin முற்றுகையின் போது ஹைதர் அலியின் போர்த்திறமைகவெளியானது. இதனால் அப்போது மைசூரின் நிதி அமைச்சர் நஞ்சராஜின் நன்மதிப்பைப் பெற்றார். இதனால் ஐம்பது குதிரைப்படை வீரர்கள் 200 காலாட்படை வீரர்களைக் கொண்ட ஒரு பகுதிக்குத் தலைவராக ஆனார். 1751 - 54-ல் திருச்சிராப்பள்ளிக்குச் சென்ற மைசூர் படையில் ஹைதர் அலி குதிரைப் படைத் தலைவரானார். அப்போது பின்பற்றிய கொள்கைகள் மூலம் தமது நிலையை வலிமைப்படுத்திக் கொண்டார். 1765-ல் இவர் திண்டுக்கல் பௌஜ்தார் (Faujdar) ஆக நியமிக்கப்பட்டார். திண்டுக்கல்லில் ஹைதர் தனது ராணுவவலிமையைப் பலப்படுத்திக் கொண்டார். படைச்சாலையை யும் ஆய்வுக்கூடத்தையும் அமைத்தார். தனது பீரங்கிப்படையை பெருக்கிக் கொண்டார்.

### ஆட்சியைக் கைப்பற்றுதல்:

1758-ல் ஹைதர் செரிங்கப்பட்டம் திரும்பினார். அப்போது ராணு வத்தில் ஏற்பட்ட ஒரு கிளர்ச்சியை நஞ்சராஜின் வேண்டுகோளின் பேரில் அடக்கினார். 1759-ல் அரசரின் ஆதரவுடன் படை வீரர்களுக்கு கொடுக்க வேண்டிய சம்பள பாக்கியைக் கட்டினார். இதனால் மைசூரின் பெரும் பகுதியைப் பெற்றுக்கொண்டார். அதன்பிறகு நஞ்சராஜை செரிங்கப் பட்டத்திலிருந்து விரட்டினார். 1760 -ல் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் பிரெஞ்சுக்காரர்களுடன் கூட்டுச் சேர்ந்தார். அதன்பிறகு தலைநகர் சென்று அரசர் சிக்க கிருஷ்ணராஜாவை தனது கைப்பாவையாக்கிக் கொண்டார். 1761-ல் மைசூர் முழுவதும் ஹைதர் அலி வசம் வந்துவிட்டது.

### ஹைதர் அலியின் வெற்றிகள் :

ஹைதர் அலிகான் பகதூர் ஷ என்ற பட்டத்துடன் ஆட்சி புரிய ஆரம் பித்தார் ஹைதர் அலி. பெட்னூர் (Bednur) என்ற இடத்தைக் கைப்பற்றியது ஹைதர் அலியின் சாதனையாகக் கருதப்படுகிறது. பெட்னூர் ராணி வீரம்மாஜி (ஏசையஅஅயதை நாட்டைவிட்டு ஓடிவிட்டார். அங்கிருந்த 120லட்சம் பொற்காசுகள் ஹைதர் அலிக்குக் கிடைத்தன. பெட்னூர், ஐதர்

நகர் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. விரைவில் மைசூரைச் சுற்றியுள்ள இடங் கள் ஹைதர் அலி வசமானது. 1764-6-ல் மராட்டியர்களிடமிருந்து வந்த ஆபத்தை, ஏராளமாகப் பணம் கொடுத்து சமாளித்தார். 1767-ல் தன்னை மைசூரின் ஏகோபித்த தலைவர் ஆக்கிக்கொண்டார் ஹைதர் அலி.

**முதல் மைசூர் போர் (1767-69)**

**காரணங்கள் :**

கல்வி அறிவு அற்றவரான ஹைதர் அலி புத்திக்கூர்மையுடனும் காரியங்களைச் சரியாக ஊகித்து உறுதியான தீர்மானங்களை எடுத்தும் தனது ராஜ்யத்தை விரிவாக்கிப் பலப்படுத்தினார். இவரது வெற்றிகளையும் வளர்ச்சியையும் கண்ட மராட்டியர்களும், ஹைதராபாத் நிஜாமான நிஜாம் அலியும் பொறாமைக் கொண்டனர். தங்களுக்குள் ஒரு கூட்டணியை ஏற்படுத்திக் கொண்டனர். ஹைதர் அலிக்கு விரோதமான ஆங்கிலேயர் களும் நிசாமுடன் சேர்ந்து கொள்ளும் ஆபத்து இருந்தது.

இப்படி மூன்று பேரும் கூட்டுச் சேர்ந்துவிட்டால் ஹைதர் அலியால் எதிர்க்க முடியாது. எனவே சூழ்ச்சி செய்தார்ஹைதர் அலி. மராட் டியர்களுக்குப் பணம் கொடுத்து தந்திரமாகத் தன் வசப்படுத்திக் கொண் டார். 1767-ல் நிஜாம் அலி ஜெனரல் ஜோசப்ஸ்மித் என்ற ஆங்கிலப் படைத்தளபதியுடன் சேர்ந்து மைசூரைத் தாக்கினார். அவரையும் மாபுஸ்கான் என்பவரின் உதவியால் தன்வசப்படுத்திக் கொண்டார். இது ஹைதர் அலியின் சூழ்ச்சித் திறனைக் காட்டுகிறது. இதுவே முதல் மைசூர் போரின் காரணமாகும்.

**போரின் போக்கு :**

ஹைதர் அலி நிஜாம் அலியின் படைகளின் உதவியுடன் ஆங்கிலே யர்களைத் தாக்கினார். ஆனால் ஆங்கிலத்தளபதி கர்னல் ஜோசப் ஸ்மித் வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள சங்கமா (Changama) என்ற இடத்திலும், பின்னர் திருவண்ணாமலையிலும் ஹைதர் அலியின் படைகளைத் தோற் கடித்தார். ஒரு குதிரைப்படையுடன் சென்னைக்கு சென்றஹைதர் அலியின் மகன் திப்பு இந்த தோல்வியைக் கேள்விப்பட்டவுடன் திரும்பிவிட்டார். பின்னர் ஆம்பூரில் நடைபெற்ற போரிலும் ஹைதர் தோற்கடிக்கப்பட்டார்.

இதற்கிடையில் வங்காளத்திலிருந்து வந்த ஒரு ஆங்கிலப்படை நிஜாம் அலியின் ராஜியத்தினுள் நுழைந்தது. நடுக்கமடைந்த நிஜாம் 1768-ல் ஹைதர் அலியிடமிருந்து பிரிந்து ஆங்கிலேயர்களுடன் உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்டார். ஆனால் பகைவர்களை உறுதியுடன் எதிர்த்தார் ஹைதர். கேப்டன் நிக்சன் என்பவரைத் தோற்கடித்து ஈரோட்டைக் கைப்

பற்றினார். மேலும் அவரது படை தஞ்சாவூர் மற்றும் கரூர் வரை சென்றது. ஆனால் அதே சமயத்தில் மராட்டியர்கள் மைசூரைத்தாக்க திட்டமிடவே ஹைதர் அலிதனது படையில் பாதியை அனுப்பினர்.

**போரின் முடிவு :**

ஆங்கிலேயர் ஹைதர் அலியுடன் சமாதான உடன்பாட்டுக்கு உட்பட்டனர். கேப்டன் புரூக் (Brooke) என்பவர் பேச்சுவார்த்தைக்கு அனுப்பப்பட்டார். ஹைதர் அலி பல நிபந்தனைகளை விதித்தார். 1769 ஏப்ரல் 4-ம் தேதி உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது.

இந்த உடன்படிக்கைப்படி இருசாராரும் அவரவர் கைப்பற்றி யிருந்த இடங்களைத் திரும்பக் கொடுக்க உடன்பட்டனர். கரூரை மட்டும் ஹைதர்

அலி திருப்பிக் கொடுக்கவில்லை. மேலும் பாதுகாப்புப் போரில் ஈடுபடும் போது ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. இவ்வாறு மராட்டியருக்கெதிராக ஆங்கிலேயரின் உதவி தனக்குக் கிடைக்கும்படி செய்தார் ஹைதர் அலி. இந்த முதலாம் மைசூர் போரில் ஆங்கிலேயர் வெற்றியடைய முடியாமல் போனதற்கு அவர்களி டம் போதுமான குதிரைப்படை இல்லாமையே காரணம் ஆகும். மேலும் ஆங்கிலத் தளபதிகளான ஸ்மித், வுட் ஆகியோர்களுக்கிடையே ஒற்றுமை இல்லை. மேலும் இப்போர் ஹைதர் அலியின் போர்த்தந்திர முறைகளை யும் வீரத்தையும் காட்டுகிறது.

**இரண்டாம் மைசூர் போர் (1780-1784)**

**காரணங்கள் :**

a) 1772-ல் மராட்டியர்கள் தாக்கியபோது, ஆங்கிலேயர்களிடம் உதவிக்காக முறையிட்டார் ஹைதர் அலி. ஆனால் அது பயனற்றதாகி விட்டது. இதனால் ஆங்கிலேயர்களின் கொடிய பகைவரானார் ஹைதர் அலி. ஆங்கிலேயர்களுடன் 1769-ல் தான் செய்து கொண்ட உடன்படிக்கை யைப் புதுப்பிக்க முயன்றார். அதுவும் பலனளிக்கவில்லை .

b) 1778-ல் ஐரோப்பாவில் பிரான்சுக்கும் இங்கிலாந்துக்குமிடையே ஏற்பட்ட போரின் எதிரொலி இந்தியாவிலும் காணப்பட்டது. பிரான்ஸ் இந்தியாவிலிருந்த ஆங்கிலப் பகுதிகளை அழிக்க எண்ணியது. அதன் விளைவாக இந்தியாவில் ஏற்பட்ட போரில் பிரான்சுக்குச் சொந்தமான சந்திரநாகூர், பாண்டிச்சேரி ஆகிய பகுதிகளை இங்கிலாந்து பிடித்துக் கொண்டது. மேலும் மேற்குக் கடற்கரையில் ஹைதரின் கட்டுப்பாட்டிலி ருந்த மாஹியையும் ஆங்கிலேயர் பிடித்துக் கொண்டனர்.

c) ஹைதர் அலிக்கு ஐரோப்பியப் போர்தளவாடங்கள் மாஹி வழியேதான் வந்து கொண்டிருந்தன. எனவே இதை பிடித்துகொண்ட ஆங்கிலேயர் மீது கடும் கோபம் கொண்டார்ஹைதர் அலி. இதனால் பிரெஞ் சுக்காரர்களுடன் ஆங்கிலேயர்களுக்கெதிராக உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டார்.

d) ஏற்கனவே ஆங்கிலக் கம்பெனியின் படை வட சர்க்கார் பகுதிக்குப் போகும் போது மைசூரின் எல்லை வழியாகச் சென்றது. இதற்கு அவர்கள் ஹைதர் அலியிடம் அனுமதி பெறவில்லை இதனாலும் ஹைதர் அலி கோபம் கொண்டிருந்தார்.

e) ஹைதர் அலியுடன் பேச்சுவார்த்தை நடத்த அப்போது தரங்கம் பாடியிலிருந்த ஜெர்மானிய மிஷினரி ஸ்வார்ட்ஸ் என்பவரை கவர்னர் ரம் போல்ட் அனுப்பினார். ஸ்வார்ட்சை அன்புடன் நடத்திய ஹைதர் அலி ஆங்கிலேயர்கள் மீதான வெறுப்பைக்காட்டிக் குறித்துக்கொள்ளவில்லை. 1769 - ம் வருட உடன்படிக்கையை மீறியது. அமைதிக்கான முயற்சிகளை தேர்ந் தெடுத்தது, தனக்கு எதிரான ஆங்கிலேயரின் விரோதம் ஆகியவைப்பற்றி சென்னை அரசாங்கத்திற்குக் கடிதம் ஒன்று எழுதினார் ஹைதர் அலி .

f) இதற்கிடையில் 1779-ல் ஆங்கிலேயர்களுக்கெதிராக மராட்டி யர்களுடனும், நிஜாம் அலியுடனும் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார் ஹைதர் அலி. இந்தக்கூட்டுப்படையின் மீது ஹைதர் அலி சென்னையைக் கடல் வழியாகவும் நிலவழியாகவும் தாக்க முற்பட்டார். போர் ஆரம்ப மானது .

**போரின் போக்கு :**

போர் ஆரம்பித்தபோது ஆங்கிலேயர்களுக்கு பொதுவாக ஒரு

நெருக்கடி காலமாகும். 1777-ல் அமெரிக்க சுதந்திரப் போரில் ஆங்கிலேயர் தோல்வியடைந்து வந்தனர். இங்கிலாந்துக்கெதிராக 1778- ல் பிரான்சும், 1779-ல் ஸ்பெயினும், 1780-ல் ஹாலந்தும் போர் தொடுத்திருந்தன. அதே சமயம் சென்னையில் ஒரு ஊழல் மிகுந்த கம்பெனி ஆட்சியே இருந்தது. இந்த சூழ்நிலையில் தான் ஹைதர் அலி 1780-ல் கர்நாடகத்தின் மீது படை யெடுத்தார். பேரழிவை ஏற்படுத்தி ஆர்காட்டைக் கைப்பற்றினார்.

ஆங்கிலத்தளபதி ஹெக்டர்மன்றோ பாண்டிச்சேரியைப் பிடித்த பின்பு காஞ்சிபுரம் நோக்கி முன்னேறினார். ஆனால் பெய்லி என்ற ஆங்கிலத் தளபதியின் படைகளை ஹைதர் அலி பொளிலூரில் (Polilur) தோற்கடித்தார். எனவே சென்னை அரசாங்கம் கல்கத்தாவிலிருந்து உதவியை நாடியது. இதனால் கவர்னர் ஜெனரல் வாரன் ஹேஸ்டிங்ஸ் சர் அயர்கூட் (Eyre coote) என்பவரின் தலைமையில் ஒரு படையை அனுப்பினார். அந்தப் படை ஹைதர் அலியை 1781 ஜுலையில் போர்டோ நோவா ീழசவழ ழேஎய) என்ற இடத்தில் தோற்கடித்து ஆங்கிலேயரின் கௌரவத்தைக் காப்பாற்றியது. மேலும் டச்சுக்காரர்களுக்குச் சொந்தமான நாகப்பட்டம், திரிகோண மலை ஆகிய இடங்களையும் பிடித்தார். அத்துடன் ஹைதர் அலியை ோலிங்கர் (Sholinghur) என்ற இடத்தில் தோற்கடித்தார் அயர்கூட் ஹைதரின் படைக்கு பெருத்த ந'டம் ஏற்பட்டது.

இதற்கிடையில் கர்னல் பிரெய்த் வையிட் (Braith waite) என்பவர் 1781 நவம்பரில் நாகப்பட்டத்தைக் கைப்பற்றினார். எட்வர்ட் ஹுக்ஸ் என்பவர் 1782 ஜனவரியில் திரிகோண மலையைக் கைப்பற்றினார். திரிகோணமலையை திரும்பப் பெறுவதற்காக ஹைதர் அலியின் மகன் திப்பு போரிட்டார். ஆனால் 1782 பிப்ரவரியில் திப்பு கர்னல் பிரெய்த் வெயிட்டால் முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டார். இச்சூழ்நிலையில் வாரன் ஹேஸ்டிங்சின் ராஜதந்திரத்தினால் நிசாமும், மராட்டியர்களும் ஹைதர் அலியை விட்டு விலகி ஆங்கிலேயர் பக்கம் சேர்ந்து கொண்டனர்.

இச்சமயத்தில் தான் பிரஞ்சுக்கப்பற்படை ஒன்று அட்மிரல் சப்ரன் (Suffren) என்பவர் தலைமையில் கிழக்குக் கடற்கரை வந்து சேர்ந்தது. சிறந்த ஆற்றல் வாய்ந்த அவருக்கு நிலப்பகுதியில் அடிப்படைத்தளம் ஏதும் இல்லை . அவர் ஆங்கிலக் கப்பற்படைத் தளபதி ஹுக்சுடன் பல போர்களில் ஈடுபட்டார். அவர் பெற்ற சில வெற்றிகள் ஹைதர் அலிக்கு ஆறுதலைத் தந்தது. ஆனால் 1782 அக்டோபர் மாதம் ரிச்சர்ட் பிக்கர்டன் என்பவர் தலைமையில் ஒரு ஆங்கிலகப்பற்படை வந்து சேர்ந்தது. இதனால் ஆங்கிலேயரின் வலிமைகூடியது.

இதற்கிடையில் குடகிலும், மலையாளம் முழுவதிலும் ஹைதர் அலியை எதிர்த்து ஆர்ப்பாட்டம் ஏற்பட்டது. ஹம்பர்ஸ்டோன் (ர்ரஅடிநச ளவழநெ) என்ற ஆங்கிலத்தளபதி ஹைதர் அலியின் தளபதியான மக்டம் அலியைத் தோற்கடித்தார். திப்புவும் பொன்னாணி (Ponnani) என்ற இடத் தில் தோல்வியடைந்தார். அச்சமயம் ஆர்க்காட்டின் வடபகுதியில் தங்கியி ருந்த ஹைதர் அலி முதுகில் ஏற்பட்டிருந்த புற்று நோயினால் 1782 டிசம்பர் மாதம் இறந்து போனார். அவருக்குப்பின் திப்பு மைசூரின் அரசரானார்.

அரசரானவுடன் ஆங்கிலேயர் வசமிருந்த மங்களூரை 1783 - மே மாதம் முற்றுகையிட்டார். முற்றுகையை ஆங்கிலத்தளபதி கேம்பல் (Campbell) வெற்றிகரமாகச் சமாளித்து வந்தார். ஆனால் திடீரென ஐரோப்பியப்போர் முடிவடையவே ஆங்கிலேயர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்குமிடையே உடன்பாடு ஏற்பட்டது. இதனால் பலமடைந்த ஆங்கிலேயர்கள் திப்புவுக் கெதிராக முழுப்பலத்தையும் உபயோகித்தனர். ஆனாலும் மங்களூர் 1784 ஜனவரியில் திப்புவிடம்

வீழ்ந்தது. ஆனால் சென்னைகவர்னராக இருந்து மக்கார்தனே பிரபு (ஆயஉயசவநெல) சமாதானத்தை விரும்பியதால் மங்களூரில் திப்புவுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார்.

**மங்களூர் உடன்படிக்கை 1784**

மங்களூர் உடன்படிக்கைப்படி இருசாராரும் தாங்கள் கைப்பற்றிய இடங்களையும், பிடித்து வைத்துள்ள கைதிகளையும் திரும்பிக் கொடுக்க ஒப்புக்கொண்டனர். ஆனால் கவர்னர் ஜெனரல் வாரன் ஹேஸ்டிங்ஸ் இந்த உடன்படிக்கையைக் கண்டு மனம் வருந்தினார். மக்கார்தனே பிரபு என்ன மனிதர்? சமாதானம் செய்து கொண்ட போதிலும் கர்நாடகத்தை இழந்து விடுவார் என்று இன்னும் நம்புகிறேன் என்றார் வாரன் ஹேஸ்டிங்ஸ்.

**ஹைதர் அலி தோல்வியடையக் காரணங்கள்:**

1. ஹைதர் அலியுடன் நட்புக் கொண்டிருந்த பிரெஞ்சுக்காரர்களோ ஹைதராபாத் நிஜாமோ சரியான நேரத்தில் சரியான ஆதரவு அளிக்க வில்லை காரணம் பிரெஞ்சுக்காரர்கள் கவனம் முழுவதும் அமெரிக்கா விலேயே இருந்தது. இந்தியாவில் அதிக கவனம் செலுத்தவில்லை . மேலும் எண்ணிக்கையில் அதிகமான மராட்டியப் படையின் முழு ஆதர வையும் ஹைதர் அலியால் பெறமுடியவில்லை. இவ்வாறு ஆங்கிலேயருக் கெதிரான கூட்டணி பலமற்றதாகக் காணப்பட்டது.
2. திறமை வாய்ந்த போர்த்தளபதிகள் ஹைதர் அலியிடம் இல்லை அவரது தளபதிகளான மீரஷாகிப், ராஜா'ாகிப் ஆகியோர் ஆங்கிலப் படைத்தளபதிகளான கர்னல் ஸ்மித், அயர்கூட், ஹெக்டர் மன்றோ , பிரைத்வெய்ட் ஆகியோர்களுக்கு நிகரானவர்கள் அல்ல.
3. மைசூரில் வாழ்ந்த இந்துக்களின் முழு ஆதரவும் ஐதர் அலிக்குக் கிடைக்கவில்லை.
4. பிரிட்டிஷ் கப்பற்படைக்கு முன் பிரெஞ்சுக் கப்பற்படை நிற்க முடியவில்லை. பிரிட்டிஷ் கப்பற்படைத் தளபதி ஹுகிஸ் மிகத்திறமை வாய்ந்தவர். மேலும் ஆங்கிலக் கடற்படைத் தளபதிகளான ரோட்னே (Rodney) ரிச்சர்ட் பிக்கர்டன் ஆகியோர் திறமை வாய்ந்தவர்கள்.
5. கவர்னர் ஜெனரல் வாரன் ஹேஸ்டிங்சின் ஆலோசனையும், அரசின் தந்திரமும் ஆங்கிலப்படையைப் பலப்படுத்தின. ஆங்கியேர் வெற்றிக்கு வழிவகுத்தன.

**ஹைதர் அலியைப் பற்றிய மதிப்பீடு :**

வீரமும் அரசியல் தந்திரமுமே ஒருங்கே அமையப் பெற்ற ஹைதர் அலி தோல்வியுற்றது ஆங்கிலேயர்களுக்கு நல்லகாலமாகவும் இந்திய வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகவும் அமைந்தது என்றால் அது மிகை யாகாது. ஹைதர் இந்துஸ்தானி, கன்னடம், மராத்தி, தெலுங்கு, தமிழ் ஆகிய மொழிகளில் சரளமாகப் பேசுவார். இவர் ஒரு முதல் தரமான போர் வீரர். சிறந்த குதிரை வீரர். வாள்வீச்சில் வல்லவர். பீரங்கியைப் பயன் படுத்துவதில் திறமைசாலி. ஆனால் அவரிடம் இரக்கமற்ற பண்பு காணப் பட்டது. தான் வெற்றியடைந்த இடங்களை நாசமாக்கினார். அங்கு வாழ்ந்து வந்த மக்களின் துன்பங்களைப் பொருட்படுத்தவில்லை. மத சகிப்புத் தன்மையற்றவர். பிறர் சித்திரவதை செய்யப்படும் போது அதனை ரசிப்பார் ஹைதர் அலி.

ஹைதர் அலி வெளியிட்ட நாணயங்களில் அவரது பெயரின் முதல் எழுத்துக்களும் மற்றும் சிவன், பார்வதி, விஷ்ணு ஆகியோர்களின் உருவங் களும் பொறிக்கப்பட்டன. நல்ல ஞாபக சக்தி கொண்டவர் ஹைதர் அலி. சிற்றின்பத்தில் அதிக நாட்டம் கொண்டவர் ஹைதர் அலி. தனது அந்தப்

புரத்தில் (harem) 600 அழகான பெண்களை வைத்திருந்தார். அதே நேரம் இந்த சிற்றின்ப நடவடிக்கைகளால் அரசியலுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாமல் பார்த்துக்கொண்டார்.

சிறந்த தளபதியான ஹைதர் போரினால் ஏற்படும் சோர்வைப் பொறுத்துக் கொள்ளும் வன்மையைப் பெற்றிருந்தார். ஐரோப்பிய பாணி யில் தனது படையினருக்குப் போர் பயிற்சி கொடுத்திருந்தார். ஆட்சி முறை யில் தகுதியை ஆராய்ந்து தக்கவர்களை பணியில் அமர்த்தும் ஆற்றல் கொண்டவர். தாம் கொண்ட கர்மமே கண்ணாகயிருந்தார். ஒளிவு மறைவு இல்லாத கொள்கையைப் பின்பற்றி ஆங்கிலேயரை அழிக்க முயன்றார் அவரது திறமைக் கூறுகள் ஆக்க சார்பானவை அழிவு சார்பானவை அல்ல (Haider's talents were contructive rather than destructive).

**திப்பு சுல்தானும் ஆங்கிலேயர்களும்**

1784 - ம் ஆண்டு ஏற்பட்ட மங்களூர் உடன்படிக்கை திப்புவின் செல்வாக்கைப் பெருக்கியது. அதை ஓர் உண்மையான உடன்படிக்கையாக திப்பு சுல்தானும், ஆங்கிலேயர்களும் கருதவில்லை . இச்சமயத்தில் 1786-ல் காரன்வாலிஸ் பிரபு கவர்னர் ஜெனரலாகப் பதவி ஏற்றார். அவர் இந்திய அரசர்களின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டு பிரிட்டனின் மதிப் பைப் பாதுகாத்து அதன் நிலையை இந்தியாவில் வளர்க்க வேண்டுமென விரும்பினார். திப்புசுல்தானைத் தீர்த்துக் கட்டவும் முடிவு செய்தார். இதன் விளைவாக மூன்றாம், நான்காம் மைசூர் போர்கள் நடைபெற்றன.

**1784-க்குப் பிறகு திப்புசுல்தானின் நடவடிக்கைகள் :**

மங்களூர் உடன்படிக்கைக்குப் பிறகு திப்பு மிகத் தீவிரமான நட வடிக்கைகளில் ஈடுபட்டார். 1786-ல் சுல்தான் என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டார். இவர் நிசாமுடனும், மராட்டியர்களுடனும் சேர்ந்து கொண்டு ஆங்கிலேயரை விரட்ட திட்டம் தீட்டினார். 1786-ல் கூர்க் (Coorg) பிரதேசத் தைக் கைப்பற்றினார். தனது நாட்டின் எல்லைக்கு அருகில் இருந்த நர்குந்த் (Nargund) பகுதியிலிருந்து தனக்கு கிடைத்த கப்பத் தொகையை அதிகப் படுத்தினார். இதனை எதிர்த்த நர்குந்த் தலைவரையும், அவரது குடும்பத்தி னரையும் கைது செய்து துன்புறுத்தினார். பெல்காம் மாவட்டத்திலுள்ள கிட்டூர் (Kittur) என்ற இடத்தையும் பிடித்து அதிலுள்ள மக்களைக் கட்டாய மாக இஸ்லாமியர்களாக்கினார். மேலும் சாவனூர் என்ற இடத்தையும் கைப்பற்றினார்.

1788 - ல் தன்னை ஒரு இஸ்லாமிய மதத்தலைவர் என்றும், அதைப் பரப்பும் தூதுவர் என்றும் சொல்லிக் கொண்டு மலபாரிலிருந்த இந்துக் கோவில்களை அழிக்க முற்பட்டார். பலரைக் கட்டாயமாக முஸ்லீமாக்கி னார். ஆங்கிலேயர்களுக்கெதிராகத் தனது நிலையினைப் பலப்படுத்திக் கொள்ளும் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டார் திப்பு சுல்தான். இதனால் மூன்றாம் மைசூர் போர் ஏற்பட்டது.

**மூன்றாம் மைசூர் போர் (1790 - 92)**

**காரணங்கள் :**

1. மங்களூர் உடன்படிக்கையில் நம்பிக்கையில்லாத திப்பு ஆங்கிலேயரை இந்தியாவிலிருந்தே விரட்டத் திட்டமிட்டார். இதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டார். ஆனால் மலபார், கூர்க் ஆகிய பகுதிகளில் அதிக மதப்பற்று கொண்டவராக நடந்து கொண்டதால் மலையாள அரசரை திப்பு பகைத்துக் கொண்டார்.

2. பாண்டிச்சேரியிலிருந்த பிரெஞ்சு அதிகாரிக்கு திப்பு எழுதி யிருந்த கடிதத்தில் நானே இங்கிலாந்துக்கு விரோதமாகப் போர்ப்பிர கடனம் செய்யும் முதல் நபர் என்று குறிப்பிட்டிருந்தார்.
3. திருவாங்கூர் மன்னர் டச்சுக்காரர்களிடமிருந்து வாங்கிய கரங்கனூர், அயர்கோட்டை ஆகிய இடங்களையும் திப்பு சுல்தான் தனக் குரியது என்று சொந்தம் கொண்டாடினார். டச்சுக்காரர்களிடமிருந்து அவர் விலைக்கு வாங்கியது செல்லத்தக்கது அல்ல என்றும் கூறினார்.
4. ஆங்கிலேயருடன் போரிடுவதற்கு ஐரோப்பிய நாடுகளின் உதவி கிடைத்தால் நல்லது என்று கருதினார் திப்புசுல்தான். எனவே 1785-ல் கான்ஸ்டாண்டிநோபிளுக்கும் 1787-ல் பிரான்ஸ் நாட்டிற்கும் தூதுவர்களை அனுப்பி உதவி கேட்டார். ஆனால் அந்த நாடுகளிலிருந்து எதிர்கால உதவி யைப் பற்றிய உறுதி மொழி தவிர நிகழ்காலத்தில் எவ்வித உதவியும் கிடைக் கவில்லை. இதனைப் பற்றி அறிந்து கொண்ட காரன்வாலிஸ் திப்புவை ஒழித்துக்கட்ட நினைத்தார்.
5. 1789-ல் கவர்னர் ஜெனரல் காரன்வாலிஸ்பிரபு ஐதராபாத் நிஜா முடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார். அதன்படி நிஜாமுக்கு வேண் டிய ஆங்கிலப்படையை தாம் கொடுத்து உதவி செய்வதாகக் கூறினார். ஆனால் அந்தப் படையை நிஜாம் ஆங்கிலேயரின் நட்பு நாடுகளுக்கு விரோ தமாகப் பயன்படுத்தக்கூடாது என்றும் முடிவு செய்யப்பட்டது. நட்பு நாடுகள் என்ற வரிசையில் மைசூர் அரசரான திப்புசுல்தான் பெயர் குறிக்கப்படவில்லை. இதைக் கேள்விபட்ட சுல்தான் கோபம் கொண்டு ஆங்கிலேயருக்கு விரோதமாகச் சதித்திட்டம் தீட்டினார்.
6. காரன் வாலிஸ் பிரபுவும் திப்புசுல்தானை தீர்த்துக்கட்ட எண்ணி 1788-ல் புனேயில் தூதுவராக நியமிக்கப்பட்டிருந்த மாலட் என்பவருக்கு கடிதம் எழுதி மராட்டியரின் ஆதரவைப் பெற முயற்சித்தார்.
7. திப்புசுல்தான் 1789 டிசம்பர் 29-ல் திருவாங்கூரைத் தாக்கினார். மங்களூர் உடன்படிக்கையின்படி திருவாங்கூர் அரசர் சென்னை கவர்னர் ஜாண்ஹாலந்தின் (துழாெ ர்ழடடயனெ) உதவியை நாடினார். கவர்னர் ஜெனரலான காரன்வாலிஸ் திப்புவின் இந்த நடவடிக்கைகள் கம்பனியின் மீது திப்புவின் போர்ப்பிரகடனம் என்றே கருதினார். எனவே மராட்டியர்களுடனும், நிஜா முடனும் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார். போர் ஆரம்பமானது.

**போரின் போக்கு :**

மூன்றாம் மைசூர் போர் இரண்டு ஆண்டு காலம் நீடித்தது. 1790-ல் பிப்ரவரியில் சென்னைகவர்னராக வில்லியம் மெடோஸ் (றுடைடயைஅ ஆநனழறள) என்பவர் நியமிக்கப்பட்டார். இவருடைய தலைமையில் ஆங்கிலப்படை கள் போரிட்டன. மெடோஸ் திண்டுக்கல், கோயம்புத்தூர், பாலக்காடு ஆகிய இடங்களைக் கைப்பற்றினார். பம்பாயிலிருந்து வந்த ஒரு ஆங்கிலப் படை கண்ணனூரைக் கைப்பற்றியது. மராட்டியப்படை தார்வார் என்ற பகுதியைப் பிடித்தது. ஆனாலும் திப்பு தீரத்துடன் போரிட்டார். கிராங்க னூர்திப்புவிடம் வீழ்ந்தது. கர்நாடகத்தில் படையெடுத்து 1791 -ல் திருவண் ணாமலையைப் பிடித்துக்கொண்டார். ஆங்கிலேயர்களுக்குத் தோல்வியே ஏற்பட்டது.

எனவே காரன்வாலிஸ் திப்புவைப் பதவியிலிருந்து நீக்கி பழைய இந்து வம்சத்தின் வாரிசுக்கு பட்டத்தைக் கொடுக்க முடிவு செய்தார். இதனால் தானே நேரில் தலைமை தாங்கி படையை நடத்தி 1791-ல் இரண்டாவது கட்ட போரை ஆரம்பித்தார். அவர் வேலூர், ஆம்பூர் வழியாக

சென்று 1791 - மார்ச் 21- ல் பெங்களூரைக் கைப்பற்றினார். அங்கிருந்து திப்புவின் தலைநகரான செரிங்கப்பட்டணத்திற்கு எண்பது கல் தொலைவி லுள்ள அரிகோரா என்ற இடத்தை அடைந்தார். அதிக மழையினால் படைக்குத் தேவையான உணவுப்பொருட்கள் வந்து சேராமல் போயின. இதனால் சற்று பின்வாங்கி படையை மங்களூரில் வைத்துக் கொண்டார்.

மழைக்காலம் முடிந்த பின்னர் மறுபடியும் போரை ஆரம்பித்தார் திப்பு. 1791 நவம்பர் 3-ல் கோயம்புத்தூரைப் பிடித்துக் கொண்டார். அப் போது மங்களூரிலிருந்த காரன்வாலிஸ், பம்பாயிலிருந்து அனுப்பப்பட்ட படை உதவியுடன் திப்புவின் தலைநகருக்கு செல்லும் வழியிலுள்ள பாரா மகால் என்ற மலைக் கோட்டையைக் கைப்பற்றினார். பின்னர் 1792 பிப்ரவரி 5-ல் செரிங்கப்பட்டணத்தை முற்றுகையிட்டார். தனது வலிமை யற்ற நிலையைக் கண்ட திப்பு 1792- மார்ச் மாதம் ஆங்கிலேயருடன் உடன் படிக்கை செய்து கொண்டார்.

**ஸ்ரீரங்கப்பட்டணம் உடன்படிக்கை : 1792**

1. 1792- மார்ச்மாதம் ஸ்ரீரங்கப்பட்டணத்தில் ஆங்கிலேயர்களுக்கும் திப்புசுல்தானுக்குமிடையே ஒரு சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது. அந்த உடன்படிக்கையின் படி,
2. திப்புசுல்தானின் ராஜ்யத்தின் பாதிப்பகுதிகள் ஆங்கிலேயர் களுக்கு கொடுக்கப்படவேண்டும். போரிழப்புத் தொகையாக மூன்று கோடி ரூபாயை திப்பு கொடுக்க வேண்டும். அந்தத் தொகையைக் கொடுக்கும் வரை அதற்கு ஈடாக திப்பு சுல்தான் தனது இரு மைந்தர்களை காரன் வாலிசுடன் அனுப்பவேண்டும்.
3. திப்புசுல்தானிடமிருந்து பெற்ற பகுதிகளை சரிசமமாக ஆங்கிலேயர், நிசாம் மற்றும் மராட்டியர்கள் பிரித்துக் கொண்டனர்.
4. கிருஷ்ணா நதியிலிருந்து வடபெண்ணை நதிக்கு அப்பாலும் பரவியுள்ள ஒரு பரந்த பிரதேசம் ஹைதராபாத் நிஜாமுக்கு கொடுக்கப்பட்டது.
5. துங்கபத்திரா நதிக்கரைவரையுள்ள பகுதிகள் மராட்டியர்களுக் குக் கொடுக்கப்பட்டது.
6. திண்டுக்கல், கோயம்பத்தூர், தர்மபுரி முதலிய மாவட்டங்கள் ஆங்கிலேயர்களுக்குக் கிடைத்தது. மேலும் மலபார், குடகு ஆகிய நாட்டுச் சிற்றரசர்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் உரிமை ஆங்கிலேயர்களுக்கு கொடுக்கப்பட்டது.

சுலபமாக அழித்துவிடக் கூடிய மைசூர் அரசர் திப்புசுல்தானை அழிக்காமல் அவருடன் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டது காரன்வாலிஸ் செய்த பெரும் தவறு என்று குறை கூறப்படுகிறது. ஆனால் நடைமுறையில் அப்படி செய்வது ஆங்கிலேயர் பற்றிய பயத்தை உண்டு பண்ணும் என்று நினைத்தார் காரன்வாலிஸ். மேலும் அப்போது பிரான்சு டன் இங்கிலாந்து செய்து கொண்டிருந்த போரும், திப்பு பிரெஞ்சுக்காரர் களுடன் செய்து கொண்ட உறவும் அச்சம் தரத்தக்கதாகவே இருந்தது. மேலும் கம்பெனி நிர்வாகக் குழுவினரும் சமாதானத்தையே விரும்பினர். கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு மைசூர்ராஜ்யம் முழுவ தையும் கைப்பற்றியிருந்ததால் நட்புறவு நாடுகளுடன் அனுபவபூர்வமான உடன்படிக்கைகளைச் செய்வது கடினமாக இருக்கும் என்று காரன்வாலிஸ் எண்ணினார். எங்கள் பகைவர்களை உறுதியாக நாங்கள் முடமாக்கினா லும் எங்கள் நண்பர்களைப் பலமுள்ளவர்களாக்கவில்லை“ என்று கூறினார் காரன்வாலிஸ்.

**நான்காம் மைசூர் போர் (1799)**

**காரணங்கள்** :

1. மூன்றாம் மைசூர் போரில் முடிவில் ஏற்பட்ட அவமானத்தை திப்புசுல்தான் போன்ற வீரர்களால் சகித்துக் கொண்டிருக்க முடியாது. இரண்டு வருடங்களுக்குள்ளாக தான் கொடுக்க வேண்டிய போர் இழப் பீட்டுத் தொகையை செலுத்திவிட்டு பிணையக் கைதிகளாக இருந்த தனது பிள்ளைகளை திரும்ப அழைத்துக் கொண்டார் திப்பு . தான் இழந்த நிலப் பரப்புகளை மீண்டும் பெற தன்னை ராணுவரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பலப்படுத்திக் கொள்ள முற்பட்டார்.
2. போரினால் அழிக்கப்பட்ட நகரங்கள் பழுதுபார்க்கப்பட்டன. தலைநகர் கோட்டையின் பலத்தை அதிகப்படுத்தினார். குதிரைப்படையின் எண்ணிக்கையைப் பெருக்கினார். புதிய காலாட் படையினரைச் சேர்த்து நல்ல பயிற்சி அளித்தார்.
3. 1796-ல் மைசூர் அரசர் ஒன்பதாம் சாம்ராஜ் இறந்துவிடவே அவருக்குப் பதிலாக புதிய அரசரை நியமிக்கவில்லை அத்துடன் அரண்மனையை முழுவதுமாக கொள்ளையிட்டு தனது பொருளாதார நிலையை வளப்படுத்திக் கொண்டார்.
4. அப்போது ஐரோப்பாவில் பிரான்ஸ் இங்கிலாந்துடன் கடுமை யான போரில் ஈடுபட்டிருந்தது. அதைப் பயன்படுத்தி திப்பு சுல்தான் ஆங்கி லேயர்களுக்கெதிராக பிரான்சின் நட்பை நாடினார். பிரான்சிலுள்ள ஜேக்க பியக் கழகத்தில் உறுப்பினராகச் சேர்ந்தார். செரிங்கப்பட்டணத்தில் ஒரு ஜேக்கபியக்கழகத்தின் கிளை ஆரம்பிக்கப்பட்டது. அங்கு பிரெஞ்சுக் கொடி ஏற்றப்பட்டது. பிரெஞ்சு கடற்படை அதிகாரியான பிரான்சிஸ் ரிபாட் (Francis Ripaud) என்பவர் திப்புவுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.
5. ஆங்கிலேயர்களுக்கு விரோதமாகப் போரிட மொரிீயசுக்கு ரிபாட் என்பவரைத் தூதுவராக அனுப்பினார். அவர் 1798 ஜனவரியில் மொரிீயஸ் கவர்னர் ஜெனரல் மாலர்டிக் (General Malartic) என்பவரைச் சந்தித்து ஆதரவு திரட்டினார். மொரிீயர்கவர்னர் இந்தியாவில் ஆங்கிலே யர்களுக்கு எதிராகப் போரிட ஒரு தொண்டர் படையை அமைத்து 1798 ஏப்ரல் மாதம் மங்களூர்க்கு அனுப்பிவைத்தார்.
6. திப்புவின் இத்தனை திட்டங்களையும் அறிந்து கொண்ட அப்போதைய கவர்னர் ஜெனரல் வெல்லஸ்லிபிரபு பழைய உடன்படிக்கை யைப் புதுப்பித்து நிஜாமுடன் ஒரு துணைப்படை உடன்படிக்கையை 1798 செப்டம்பரில் செய்து கொண்டார். ஆனால் மராட்டியர்கள் தயங்கினர். வெல்லெஸ்லி பிரபு போரின் இறுதியில் கைப்பற்றப்படும் இடங்களில் ஒரு பகுதியைத் தருவதாக பீஷ்வாவுக்கு வாக்கு கொடுத்து அவரை வசப் படுத்தினார்.
7. நிஜாமின் ஆதரவையும் பீஷ்வாவின் ஒத்துழைப்பையும் பெற்ற வுடன் வெல்லெஸ்லி பிரபுதிப்புசுல்தானுக்கு ஓர் கடிதம் எழுதினார். அதில் பின் வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. a) ஆங்கிலேயர்களுக்கு கீழ்ப்படிந் திருக்குமாறு திப்புசுல்தான் உறுதியளிக்க வேண்டும் b)பிரெஞ்சுக் காரர்களுடன் கொண்டிருந்த உறவை விட்டுவிட வேண்டும். c)பிரெஞ்சு அதிகாரிகளையும் படையையும் தன் நாட்டைவிட்டு வெளியேற்றிவிட வேண்டும் ஆகியவையாகும். இந்த கோரிக்கைகளை திப்புசுல்தான் ஏற்க மறுத்ததால் போர் வெடித்தது.

**போரின் போக்கு :**

திப்புசுல்தானைத் தோற்கடித்து செரிங்கப்பட்டணத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் வெல்லெஸ்லிபிரபு பலதிசை களிலிருந்தும் படையை அனுப்பினார்.

ஜெனரல் ஹாரிஸ் (Harris) என்பவரின் தலைமையில் முக்கியப் படை ஒன்று மைசூரை நோக்கி சென்றது . b) வெல்லெஸ்லி பிரபுவின் இளைய சகோதரர் ஆர்தர் வெல்லெஸ்லி நிஜாமின் படைக்குத் தலைமை தாங்கி மைசூர் அரசரின் வடகிழக்கு எல்லைகளைத்தாக்கினார். c)பம்பாயி லிருந்து ஒருபடை ஜெனரல் ஸ்டுவர்ட் (Stuart) என்பவரின் தலைமையில் மைசூரை நோக்கி வந்தது . d) ஜான் மால்கம் என்பவரின் தலைமையில் மராட்டியப்படை ஒன்றும் அனுப்பப்பட்டது.

பம்பாயிலிருந்து வந்த படைத்தலைவர் ஸ்டுவர்ட்திப்புசுல்தானை தலைநகர் ஸ்ரீரங்கப்பட்டணத்திற்கு 45 மைலுக்கு மேற்கிலுள்ள செதாசிர் (Sadasher) என்ற இடத்தில் 1799 மார்ச் 5-ம் தேதி தோற்கடித்தார். 1799 மார்ச் 27-ல் ஜெனரல் ஹாரிஸ் தலைநகருக்கு 35மைல் கிழக்கிலுள்ள மாலவல்லி (Malavalli) என்ற இடத்தில் சுல்தானின் படைகளை முழுவதுமாகத் தோற்கடித்தார். இருமுனைகளிலும் தோற்கடிக்கப்பட்ட திப்பு தலைநக ரைக் காப்பதற்காக செரிங்கப்பட்டணத்திற்கு ஓடிவந்தார். ஆங்கிலேயர்களு டன் சமாதானம் செய்துகொள்ள பேச்சு வார்த்தை நடத்த முன்வந்தார் ஆனால் ராஜ்யத்தில் பாதியையும் இரண்டு கோடி ரூபாயும் ஆங்கிலேயர் கேட்டனர். எனவே திப்பு ஒருவீரராக போரிட்டு மடிவதே மேல் என்று முடிவு செய்தார்.

எல்லாப் படைகளும் ஒன்று சேர்ந்து ஜெனரல் டேவிட் பயர்ட் (|David Baird) என்பவரின் தலைமையில் தலைநகரைத் தாக்கின. தீவிரமாகப் போரிட்ட திப்பு சுட்டு வீழ்த்தப்பட்டார். போர் 1799 மே மாதமே முடிந்து விட்டது. போர் ஆரம்பித்த இரண்டு மாதத்திலேயே முடிவடைந்தது குறிப் பிடத்தக்கது ஆகும்.

**போரின் விளைவுகள்:**

a) போரின் விளைவாக ஆங்கிலேயர்களுக்கு கன்னடம், வளநாடு , தாராபுரம், கோயம்பத்தூர், செரிங்கப்பட்டணம் ஆகிய பகுதிகள் கிடைத்தன.

b) ஹைதராபாத் நிஜாமுக்கு அவரது நாட்டின் வடகிழக்குப் பகுதி யிலிருந்து குத்தி, குர்ரம், கொண்டா , சித்தல், துர்க்கம் ஆகிய பகுதிகள் கிடைத்தன.

c) மைசூரின் வடமேற்கிலிருந்த சூர்தர், கார்பொநல்லி ஆகிய மாவட்டங்கள் மராட்டியர்களுக்குக் கொடுக்கப்பட்டன. ஆனால் அவை களைப் பெற்றுக் கொள்ள மறுத்து விட்டனர்.

d) எஞ்சிய பகுதிகளை மட்டும் பண்டைய இந்து அரசவம்சத்தைச் சேர்ந்த கிரு'ணராஜ் உடையார் என்ற இளவரசருக்குக் கொடுத்து அவரை மைசூரின் அரசராக்கினார் வெல்லெஸ்லி, புதிய அரசரான கிருஷ்ணராஜ் உடையார் வெல்லெஸ்லியின் துணைப்படைத் திட்டத்தை ஏற்றுக் கொண்டார். அதன்படி ஒரு ஆங்கிலப்படையை பராமரிக்க ஒப்புக்கொண் டார். திருப்தியற்ற முறையில் நடந்து கொண்டால் அவரது ராஜ்யத்தை கவர்னர் ஜெனரல் எடுத்துக் கொள்ளலாம் எனவும் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது.

e) கம்பனி தனது எல்லைகளை விரிவு படுத்திக்கொள்ளவும், பொருளாதரம், வாணிபம், ராணுவம் ஆகியவற்றில் பலப்படுத்திக் கொள்ள வும் இப்போர் உதவியது. இந்திய தீபகற்பத்தில் கிழக்கு கடற்கரை முதல் மேற்கு கடற்கரை வரை ஆங்கிலேயரின் ஆதிக்கம் பரவ இப்போர் உதவியது.

f) வெல்லெஸ்லியின் சேவையைப் பாராட்டிய இங்கிலாந்து அரசு அவரை அயர்லாந்தின் பிரபுவாக உயர்த்தி மார்குயஸ் (Marquess)

என்ற பட்டத்தைக் கொடுத்து கௌரவித்தது. மைசூர் போரின் முடிவே வெல் லஸ்லியின் புகழுக்குக் காரணமானது. ஜெனரல் ஹாரிஸ் என்ற தளபதிக் கும் பெருமகனார் என்ற பட்டம் கொடுக்கப்பட்டது.

**திப்பு சுல்தானைப் பற்றிய மதிப்பீடு :**

திப்பு சுல்தான் ஹைதர் அலிக்கும் பக்கிர் உன்னிஷா பேகம் என்ற மனைவிக்கும் பிறந்தவர் ஆவார். உயரம் குறைவாக இருந்தாலும் கம்பீர மாகக் காட்சியளிப்பார். அதிக மதப்பற்றும், கடவுள் பக்தியும் உள்ளவர். தனது தாயிடத்தில் அதிக அன்பும் மரியாதையும் உள்ளவர். சிறந்த கல்வி அறிவு படைத்தவர் திப்பு. பாரசீகம், கன்னடம், உருது ஆகிய மொழிகளில் நன்கு பேசக்கூடியவர். உடல்திடத்துடன் மனத்திடமும் உள்ளவர். மேல் நாட்டு கல்வி முறையை விரும்பிய அவர் பெரிய நூலகம் ஒன்றைப் பராம ரித்து வந்தார். ஆங்கிலேயரை வெறுத்த திப்பு பிரெஞ்சுக்காரர்களுடன் அதிகமாகப் பழகினார். அயல் நாட்டினருடன் அவர் கொண்ட கடிதத் தொடர்பு அவரது ராஜதந்திரத்தைக் காட்டுகிறது. ஆனால் திப்புவின் மததுவே'மே அவரது வீழ்ச்சிக்கு காரணமானது. மலபாரிலும், கூச்பீகாரிலும் திப்பு நடந்து கொண்ட செயல்கள் அவரது புகழைக்குறைத்தது. கொடூரத்தன்மையுடை யவராக விளங்கியதிப்பு குற்றவாளிகளைக் கடுமையாகத் தண்டித்தார்.

புதுமையைப் புகுத்த நினைக்கும் அமைதியற்ற மனப்பான்மை யும், தன்னிடமிருந்தே எல்லாம் வெளிவரவேண்டும் என்ற நினைப்புமே அவரது குணத்தின் சிறப்பு அம்சம் என்று மன்றோபிரபு கூறுகிறார். ஹைதர் அலி அப்போது நிலவிய சூழ்நிலைகளின் காரணமாகத் தோல்வி யடைந்தார். ஆனால் திப்புவின் வீழ்ச்சிக்கு அவரே காரணம் ஆவார். வில்க்ஸ் என்பவர் கூறுவது போல் ஹைதர் ஒரு பேரரசை அமைக்கப் பிறந்தவர் ஆனால் அதை இழக்கப் பிறந்தவர்திப்பு

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

6. முதலாம் மைசூர் போரின் போது ஹைதராபாத் நிஜாமாக இருந்தவர் யார்?
7. இரண்டாம் மைசூர் போரின் இறுதியில் செய்துக்கொள்ளப்பட்ட உடன்படிக்கை எது?
8. இரண்டாம் மைசூர் போரின் போது சென்னை கவர்னராக இருந்தவர் யார்?
9. மூன்றாம் மைசூரி போரின் போது கவர்னர் ஜெனரலாக இருந்தவர் யார்?
10. நான்காம் மைசூர் போர் நடைப்பெற்ற ஆண்டு?

## 5.5 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

1. வில்லியம் பெண்டிங் பிரபு
2. 1829
3. வில்லியம் சிலிமென்
4. 1835
5. சார்லஸ் மெட்கால்ப்
6. நிஜாம் அலி
7. மங்களூர் உடன்படிக்கை
8. மக்கார்தனே
9. வில்லியம் மெடோஸ்
10. 1799

**5.6 சுருக்கவுரை**

- பெண்டிங் பதவியேற்ற போது இந்திய சமுதாயத்தில் சதி, குழந்தைகளைக் கொல்லுதல் போன்ற கொடூரமான பழக்கங்கள் காணப் பட்டன. மக்கள் போதிய கல்வியறிவற்று இருந்தனர்.
- ஹைதர் அலிகான் பகதூர்" என்ற பட்டத்துடன் ஆட்சி புரிய ஆரம் பித்தார் ஹைதர் அலி. பெட்னூர் என்ற இடத்தைக் கைப்பற்றியது ஹைதர் அலியின் சாதனையாகக் கருதப்படுகிறது.
- ஹைதர் அலி வெளியிட்ட நாணயங்களில் அவரது பெயரின் முதல் எழுத்துக்களும் மற்றும் சிவன், பார்வதி, வி'ணு ஆகியோர்களின் உருவங் களும் பொறிக்கப்பட்டன.
- 1799 மார்ச் 5-ம் தேதி தோற்கடித்தார். 1799 மார்ச் 27-ல் ஜெனரல் ஹாரிஸ் தலைநகருக்கு 35மைல் கிழக்கிலுள்ள மாலவல்லி என்ற இடத்தில் சுல்தானின் படைகளை முழுவதுமாகத் தோற்கடித்தார்.

**5.7 முக்கிய கருத்துப்படிமங்கள்**

- துணை கூட்டணி: இது ஒரு சொந்த மாநிலம் மற்றும் பிரெஞ்சு இந்தியா, அல்லது பின்னர் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி, அதாவது இந்திய ஆட்சியாளருடன் துணை கூட்டணியாக நுழையும் போது பிரிட்டிஷ் படைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும், தங்கள் பராமரிப்புக்கு பணம் கொடுக்கவும் ஒப்புக்கொள்ளப்பட்டது.
- சதி: இந்தியாவில் ஒரு பழைய நடைமுறையை இது குறிக்கிறது இது ஒரு விதவை அவளது கணவனின் இறுதி சடங்கில் வீசி எறியப்படுவதை குறிக்கிறது.

**5.8 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்**

**குறு விடை வினாக்கள்**

1. உடன்கட்டை ஏறுதலை ஒலித்தலைப் பற்றி சிறுகுறிப்பெழுதுக.
2. நாடிழக்கும் கொள்கையினை விளக்குக
3. திப்புசுல்தான் வெற்றிகள் பற்றி எழுதுக

**நெடு விடை வினாக்கள்**

4. வில்லியம் பெண்டிங் பிரபுவின் சமூக பொருளாதார சீர்திருத்தங்களை பற்றி விரிவாக எழுதுக.
5. மைசூர் போர்களின் காரணங்கள் மற்றும் விளைவுகள;

**5.9 மேலும் படிக்க**

சந்திரா, பிபின், 2009. நவீன இந்தியாவின் வரலாறு. ஹைத்தராபாத், ஓரியண்ட் பிளாக்வான்ஸ்.

டியூப்-பானர்ஜி, இஷிதா. நவீன இந்தியாவின் வரலாறு. கேம்பிரிட்ஜ், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக அச்சகம்

தாரிக், முகம்மது. 2007. நவீன இந்திய வரலாறு. புது தில்லி: டாடா மெக்ரா-ஹில் கல்வி.

பண்டியோபதியா, ேகரா. 2004. பிளாசி முதல் பார்ட்டி வரை: நவீன இந்திய வரலாறு. ஹைதராபாத்: ஓரியண்ட் பிளாக்வான்ஸ்.

சென், S.N. 2006. நவீன இந்திய வரலாறு. புது தில்லி: நியூ ஏஜ் இண்டர்நேஷனல்.

## அலகு-6 ஆங்கிலேய ஆதிக்க போர்கள்

6.0 அறிமுகம்
6.1 நோக்கங்கள்
6.2 மராட்டிய போர்கள்
6.3 பர்மிய போர்கள்
6.4 சீக்கிய போர்கள்
6.5 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்களுக்கான

விடைகள்

6.6 சுருக்கவுரை

6.7 முக்கிய கருத்துப்படிமங்கள்

6.8 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்

6.9 மேலும் படிக்க

**6.0 அறிமுகம்.**

ஆங்கிலேய-மராட்டியப் போர்கள், ஆங்கில-பர்மீய போர்கள் மற்றும் ஆங்கில-சீக்கிய போர்கள் என்பது 17ஆம், 18ஆம் நூற்றாண்டுகளில் பிரித்தானியக் கிழக்கிந்திய நிறுவனத்துக்கும் மராட்டியப் பேரரசுக்கும் மற்ற அரசுகளுக்கும் இடையே நடைபெற்ற போர்களைக் குறிக்கின்றது.இப்போர்களின் விளைவாக மராட்டியப் பேரரசு சிதைந்து, வடமேற்கு, மேற்கு மற்றும் நடு இந்தியாவின் பெரும் பகுதிகள் ஆங்கிலேயர்களின் கட்டுப்பாட்டில் வந்தது. இந்த அலகில் இப்போர்களுக்கான காரணங்கள் மற்றும் போரின் போக்கு மேலும் இப்போகளின் விளைவுகள் மூலம் இந்திய வரலாற்றில் ஆங்கிலேயரின் ஆட்சி எவ்வாறு விரிவடைந்தது போன்றவற்றை தெளிவாக காணலாம்.

**6.1 நோக்கங்கள்**

இந்த அலகை நீங்கள் படித்து முடித்த பின்பு உங்களால்,

- மராட்டிய போருக்கான காரணங்கள் மற்றும் விளைவுகளைப் பற்றி அறிந்துக்கொள்ள முடியும்
- பர்மீய போரின் தாக்கங்களைப் பற்றி விவாதிக்க முடியும்
- சீக்கிய போருக்கான காரணங்களை பற்றி விளக்க முடியும்

**6.2 ஆங்கில மராட்டியப் போர்கள்**

1761-ல் நடைபெற்ற மூன்றாம் பானிபட் போரில் மராட்டியர்கள் தோற்கடிக்கப்பட்டாலும் அவர்களது ஆற்றலும் ஆதிக்கமும் அழியவேயில்லை. தாங்கள் இழந்த பலத்தை மீண்டும் பெற்றுவந்தார்கள். 1771-ல் முகலாயப் பேரரசர் இரண்டாம் ‘ஷா ஆலத்தை தங்கள் பாதுகாப்பின்கீழ் கொண்டுவந்தார்கள். மீண்டும் பல உரிமைகளை எழுப்பி கிளர்ந்தெழுந்தார்கள். இந்த சூழ்நிலையில் 1772-ல் மராட்டிய பீ‘வாவான மாதவராவ் இறந்தார். எதிர்பாராத இந்த சம்பவத்தினால் மராட்டியர்கள் மிகவும் வருந்தினர். காரணம் மாதவ்ராவுக்குப்பின் மராட்டிய அரசியலில் போட்டியும், பொறாமையும் குழப்பங்களும் நிலவின. இதனால் மராட்டியத்தலைவர்களுக்கிடையே உள்நாட்டுப் பூசல்கள் ஏற்பட்டது. இந்த பூசல்களில் ஆங்கிலேயர் தலையிட சந்தர்ப்பம் கிடைத்தது. அதன் விளைவாக மூன்று ஆங்கில மராட்டியப் போர்கள் நடைபெற்றன. இந்தப் போர்களின் முடிவில் மராட்டியர்களின் அதிகாரமனைத்தும் ஒடுக்கப்பட்டது.

**முதலாவது ஆங்கில-மராட்டியப் போர் (1775-82)**

**காரணங்கள் :**

1. மராட்டியப் பீ‘வாவான முதலாம் மாதவ்ராவ் 1772-ல் இறந்தார். இவருக்குப்பின் வாரிசுரிமைப் போட்டி ஏற்பட்டு நாட்டில் குழப்பம் ஏற்பட்டது. மாதவ்ராவின் சகோதரர் பீஷ்வா ஆனார். ஆனால் இவர் சிறுவனாக இருந்ததாலும், திறமையற்றவராக இருந்ததாலும் குழப்பம் ஏற்பட்டது.
2. நாராயணராவின் சித்தப்பாரகுநாதராவ் என்பவர் போர், ஆட்சித் துறை ஆகிய இரண்டிலும் திறமை உள்ளவர். ஆனால் பதவி

மோகம் அதிகம் உள்ளவர். தனது மனைவி ஆனந்தி பாயின் தூண்டுதலால், பீஸ்வாபதவியை அடைவதற்கு சதித்திட்டம் தீட்டினார். இதன் விளைவாக 1773 ஆகஸ்ட் 30-ல் நாராயணராவ் படுகொலை செய்யப்பட்டார். இதன் பின்னர் ரகுநாதராவ் பீ'வா ஆனார்.

3. ஒரு சில மாதங்களுக்குள்ளாக ரகுநாதராவுக்கு கடுமையான எதிர்ப்பு கிளம்பியது. மூன்றாம் பானிபட் போரில் தப்பி பிழைத்த நானா பட்னவிஸ் (Nana Fadnavis) என்ற அந்தண இளைஞரின் தலைமையில் பூனா விலிருந்து கடும் எதிர்ப்பு ஏற்பட்டது. மற்ற மராட்டியத் தலைவர்களும் ரகுநாதராவை எதிர்த்தனர்.
4. இச்சூழ்நிலையில் கொலை செய்யப்பட்ட நாராயணராவின் மனைவிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. பிறந்த 40 நாட்களுக்குள் அந்த கைக்குழந்தையை இரண்டாம் மாதவ்ராவ் என்று பெயரிட்டு பீஷ்வா என்று அங்கீகரித்து அவன் பெயரில் அரசபிரதி நிதி ஆட்சி (Council of Regency) ஒன்றை நானாபட்னாவிசின் கூட்டத்தினர் அமைத்தார்கள்.
5. ரகுநாதராவ் தனது மகாணங்களை விட்டு விரட்டப்பட்டார். எனவே மராட்டியத் தலைவர்களான சிந்தியா ஹோல்க்கார் போன்றவர் களின் ஆதரவை நாடினார். ஆனால் அவர்கள் ரகுநாதராவுக்கு உதவ மறுக்கவே வேறு வழியின்றி பம்பாயிலிருந்த ஆங்கிலேயர்களின் உதவியை நாடினார்.
6. பம்பாயிலிருந்த ஆங்கிலேயர்கள் பூனாவிலிருந்த மராட்டிய அரசுடன் நல்லுறவுடன் இருந்தாலும் பம்பாயைச் சார்ந்துள்ள சில கடற்கரைப் பிரதேசங்களைப் பெற்று தங்கள் நிலையை உறுதிப்படுத்திக் கொள்ளும் எண்ணத்துடன் ரகுநாதராவை ஆதரித்தனர்.
7. **சூரத் உடன்படிக்கை** : ரகுநாதராவுக்கும் ஆங்கிலேயருக்கு மிடையே 1775 - மார்ச் 7-ம் தேதி சூரத் உடன்படிக்கை ஏற்பட்டது. இந்த உடன்படிக்கையின் படி (ய) ஆங்கிலேயர்கள் 2,500 போர் வீரர்களை ரகுநாத ராவுக்குக் கொடுத்து ஆதரிக்க வேண்டும், டி ) அந்தப் படைக்கான செலவை ஈடுசெய்ய ஆங்கிலேயர்களுக்கு பஸ்ஸின், சால்செட் (Bassion, Salsette) ஆகிய இடங்களைக் கொடுக்க வேண்டும். உ) மேலும் புரோச், சூரத் மாவட் டங்களில் வசூலாகும் வரியில் ஒரு பகுதியையும் ஆங்கிலேயர்களுக்குக் கொடுக்க வேண்டும் ன) புனாவில் ஆட்சி செய்பவர்களுடன் ஏதேனும் உடன்பாடு செய்தால் அதில் ஆங்கிலேயரையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். ந)கம்பனியின் பகைவர்களிடத்தில் ரகுநாதராவ் எந்த உறவும் வைத்துக் கொள்ளக் கூடாது.
8. இந்த உடன்படிக்கையை கவர்னர் ஜெனரல் வாரன் ஹேஸ்டிங்ஸ் மகிழ்ச்சியுடன் வரவேற்றார். இந்த உடன்படிக்கைப்படி ஆங்கிலப்படை ஒன்று கர்னல் கீட்டிங் (Colonel Keating) என்பவரின் தலைமையில் மராட்டிய நகரான புனாவை நோக்கிப் புறப்பட்டது. ரகுநாதராவின் படையுடன் சேர்ந்து அரஸ் (Aras) என்ற சமவெளியில் நானாவின் படைகளைத் தோற்கடித்தது.
9. ஆனால் இந்த நடவடிக்கைகள் அனைத்தும் கம்பெனியின் கல்கத்தா தலைமை ஆலோசனைக் குழுவின் அனுமதியின்றி எடுக்கப் பட்டதாகும். நிர்வாகக் குழுவினர் சூரத் உடன்படிக்கையைக் கண்டித்தனர். இவ்வாறு கண்டித்ததுடன் படைகளை வாபஸ் பெறுமாறும் உத்தரவிட்டது. இதனால் ஆங்கிலேயரின் வெற்றி, சூரத் உடன்படிக்கை ஆகியவை பயனற்றுப் போய்விட்டன.
10. **புரந்தர் உடன்படிக்கை (1776)** : சில மாதங்களுக்குள் கல்கத்தா ஆலோசனைக்குழு கர்னல் உப்டன் (Colone upton) என்பவரை மராட்டிய தலைநகர் புனாவிற்கு அனுப்பி அங்கிருந்த

தலைவர்களான சக்ராம்பாபு, நானாபட்னாவிஸ் ஆகியோருடன் 1776 மார்ச் 1-ல் புரந்தர் உடன்படிக் கையை செய்து கொண்டது. புரந்தர் உடன்படிக்கையின்படி ய) சூரத் உடன்படிக்கை செல்லாது என்று கூறப்பட்டது. 5) ஆங்கிலேயர் பெற்ற சால்செட்டும், புரோச்சிலிருந்து பெற்ற வரியும் உறுதி செய்யப்பட்டன. உ) புனாவில் இருந்த ஆட்சியாளர் தங்களுக்கு ஆதரவாக வரும் ஆங்கிலப் படைகளுக்காக 12 லட்சம் ரூபாய் ஆங்கிலேயருக்கு கொடுக்க வேண்டும். ன) ரகுநாதராவ் பதவி விலகி மாதம் 25,000 ரூபாய் ஓய்வூதியம் பெற்று கோபர்கான் என்ற இடத்தில் வாழ்ந்து வரவேண்டும். அவர் இரண்டாம் மாதவ் ராவை பீ'வாவாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

11. கவர்னர் ஜெனரல் வாரன் ஹேஸ்டிங்ஸ் சூரத் உடன்படிக் கையை ஆதரித்தார். ஆனால் ஆலோசனைக்குழு உறுப்பினர்களோபுரந்தர் உடன்படிக்கையை ஆதரித்தனர். எனவே இரண்டு உடன்படிக்கைகளும் கம்பனியின் நிர்வாக இயக்குநர்களின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. ஆனால் இயக்குநர்களோ சூரத் உடன்படிக்கையை ஆதரித்தனர். மேலும் மராட்டியர்களும் புரந்தர் உடன்படிக்கையை மதிக்கவில்லை. இதற்கிடை யில் நானாபட்னாவிஸ்லூபின் (Lubin) என்ற பிரஞ்சு அதிகாரியுடன் தொடர்பு கொள்ள ஆரம்பித்தார். இதனை பம்பாய் அரசு எதிர்க்கவே போர் ஆரம்பமானது.

**போரின் போக்கு :**

முதலாவது மராட்டியப்போர் 1778-ல் தொடங்கியது. போர் ஆரம்பமான போது ஆங்கிலேயரின் படை மோசமான நிலையிலிருந்தது. அப்போது அமெரிக்க சுதந்திரப் போரில் ஆங்கிலேயருக்கெதிராக போரைத் தொடங்கியிருந்தனர். மேலும் மராட்டியப்படையும் வலிமையுடன் காணப்பட்டது. பம்பாயிலிருந்த ஆங்கிலப்படை ஒன்று கர்னல் ஈகர்டன் (Colonal Egerton) தலைமையில் புறப்பட்டது. அவரது உடல் நிலை குன்றவே கர்னல் காக் பர்ன் (Cock burn) என்பவர் தலைமை தாங்கினார். இந்த படை டெலிகான் (Telegon) என்ற இடத்தில் நடைபெற்ற போரில் மராட்டியப்படையால் தோற்கடிக்கப்பட்டது. எனவே வாட்கன் (Wadgon) என்ற இடத்தில் ஆங்கி லேயர்களுக்கு அவமானகாரமான ஒரு உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இந்த உடன்படிக்கை மகதாஜிசிந்தியா (Mahadaji Sindia)வின் முயற்சியினால் செய்யப்பட்டது.

**வாட்கன் உடன்படிக்கை:1779**

வாட்கன் உடன்படிக்கைப்படி, a) 1773-க்குப் பிறகு ஆங்கிலேயர் கைப்பற்றிய எல்லா இடங்களையும் திருப்பித்தர வேண்டும் . b) வங்காளத் திலிருந்து வந்த படையை மராட்டியரின் எல்லையிலிருந்து வாபஸ் பெற வேண்டும். c) புரோச்மாவட்டத்திலிருந்து கிடைக்கும் வரியில் ஒரு பகுதி யை ஆங்கிலேயர்கள் மராட்டிய சிந்தியாவுக்குக் கொடுக்க வேண்டும்.

**மீண்டும் போர்:**

வாட்கன் உடன்படிக்கையை கவர்னர் ஜெனரல் வாரன் ஹேஸ் டிங்ஸ் ஏற்க மறுத்துவிட்டார். மேலும் கம்பெனி நிர்வாக இயக்குநர்களுக்கு நம் நாட்டின் புகழுக்கு ஏற்பட்ட அவமானத்தை எல்லோரும் விரும்பும் வகையில் சுலபமாக நீக்குவோம் ' என்று கடிதம் எழுதினார். எனவே கம்பெனியின் புகழை மீண்டும் பெற திட்டமிட்டார். வங்காளத்திலிருந்து வலிமை மிக்க ஒரு படையை தளபதி கோடர்டு (Goddard) என்பவரின் தலைமையில் அனுப்பினார். அப்படை மத்திய இந்தியாவில் பல வெற்றி

களைப் பெற்று புனாவை நோக்கி முன்னேறியது. குவாலியர் கைப்பற்றப் பட்டது. சிந்தியா ''சிப்ரி'' என்ற இடத்தில் தோற்கடிக்கப்பட்டார். எனவே நிலைமையைப்புரிந்துகொண்ட மகதாஜிசிந்தியாபுனா அரசாங்கத்திற்கும் ஆங்கிலேயருக்குமிடையே உடன்படிக்கை ஏற்பட முயற்சித்தார். அதன் படி 1782 - மே 17-ல் சால்பை உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. அதன்படி முதல் மராட்டியப் போர் முடிவுக்கு வந்தது.

**சால்பை உடன்படிக்கை :1782**

இந்த உடன்படிக்கையின் படி,

a) புரந்தர் உடன்படிக்கைக்குப் பின்னர் கைப்பற்றிய எல்லாப் பகுதிகளும் ஆங்கிலேயர் மராட்டியர்களுக்கு கொடுக்க வேண்டும்.
b) சால்செட் ஆங்கிலேயர்களுக்கு கொடுக்கப்படவேண்டும்.
c) இரண்டாம் மாதவராவ் பீஷ்வாவாக ஆங்கிலேயர்களால் அங்கீகரிக்கப்பட்டார்.
d) ரகுநாதராவுக்கு மாதம் 25,000 கொடுக்கவும், அவருக்கு இ‘ட மான இடத்தில் தங்கிக் கொள்ளவும் அனுமதிக்கப்பட்டது. ஆங்கிலேயர் இனி ரகுநாதராவை ஆதரிக்கக்கூடாது.
e) யமுனை நதிக்கு மேற்கிலுள்ள எல்லாப் பகுதிகளையும் சிந்தியா பெற்றுக் கொண்டார்.

**முதல் மராட்டியப் போரின் முக்கியத்துவம் :**

சால்பை உடன்படிக்கை முதல் மராட்டியப் போருக்கு முன்னிருந்த நிலைமையையே ஏற்படுத்தியது. இப்போரினால் ஆங்கிலேயருக்கு அதிக பணநெருக்கடி ஏற்பட்டது. ஆனாலும் இந்த போர் இந்தியாவில் ஆங்கிலே யரின் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும். ஏனெனில் இந்த முதலாவது மராட்டியப் போருக்குப்பின் இருபது ஆண்டுகள் வட இந்திய அரசியலில் அமைதி ஏற்பட்டது. மராட்டியர்களுடன் போர் செய்ய வேண்டிய அவசிய மில்லாமல் போனது. எனவேதான் ஆங்கிலேயர்களால் மைசூர் போரில் திப்பு சுல்தானை எதிர்த்து போரிட்டு வெற்றி பெற முடிந்தது. நிஜாமையும், அயோத்தி நவாபையும் தங்கள் அதிகாரத்தின் கீழ் கொண்டுவர முடிந்தது. இவ்வாறு ஆங்கிலேயர் தங்கள் விரோதிகளை அழித்து தங்களை பலப் படுத்திக்கொள்ள முதல் மராட்டியப் போர்காரணமாக அமைந்தது. எனவே சால்பை உடன்படிக்கைக்குப் பின்னர் ஆங்கிலேயர் இந்திய அரசியலைக் கட்டுப்பாடு செய்யக்கூடிய சக்தி வாய்ந்தவர்களாக ஆனார்கள்.

**இரண்டாம் மராட்டியப் போர் (1803-1805)**

**போருக்கான காரணங்கள் :**

1. 1795-ம் வருடம் பஷ்வா இரண்டாம் மாதவராவ் தற்கொலை செய்து இறந்தார். எனவே ரகுநாதராவின் (ரகோபா) மகனான இரண்டாம் பாஜிவ்ராவ் பீஸ்வாவாக 1796 -ல் பதவி ஏற்றார். அவரது முதல் அமைச்சராக நானாபட்னாவிஸ் ஏற்றுக்கொள்ளப்பட்டார். மராட்டியத்தலைவர்களான சிந்தியா, ஹோல்கார், பான்ஸ்லே ஆகியோர்களுக்கிடையே போட்டியை அதிகப்படுத்தி மோதலை ஏற்படுத்தினார் இரண்டாம் பாஜிராவ்.
2. இதற்கிடையில் 1798-ல் கவர்னர் ஜெனரலாகப் பொறுப்பேற்ற வெல்லஸ்லி கம்பனியின் நிலைமையைப் பாதுகாப்பதற்காக துணைப் படைத்திட்டத்தைப் பின்பற்றி வலுவற்ற இந்திய அரசுகளை கம்பனியின் கட்டுப்பாட்டில் வைக்க நடவடிக்கைகளை மேற்கொண்டார். நிஜாம் உட்பட பல இந்திய அரசர்கள் துணைப்படைத் திட்டத்தில் கையெழுத்திட்டு ஆங்கிலேயரின்

பாதுகாப்பை பெற்றார்கள். ஆனால் மராட்டியர்கள் துணைப்படை ஒப்பந்தத்தில் சேரவில்லை.

3. மராட்டியக் கூட்டரசை இதுவரை கட்டிக்காத்தவரும், மராட்டிய விவகாரத்தில் ஆங்கிலேயரின் தலையீட்டை எதிர்த்து வந்தவருமான நானா பட்னாவிஸ் 1800 - மார்ச்12-ல் புனாவில் இறந்தார். இதனால் நாட்டில் குழப் பம் ஏற்பட்டது. மராட்டியத்தலைவர்களுக்கிடையே பிளவு வலுப்பட ஆரம்பித்தது. புனாவில் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்த தவுலத்ராவ் சிந்தியாவும், ஜஸ்வந்த்ராவ் ஹோல்காரும் தங்களுக்குள் கடுமையாகப்போரிட்டார்கள்.

**பஸ்ஸின் உடன்படிக்கை : 1802**

இப்படிப்பட்ட சூழ்நிலையில் பீஷ்வா இரண்டாம் பாஜிராவ் துணைப்படைத்திட்ட ஒப்பந்தம் செய்து கொள்ள முன்வந்தார். இதன்படி 1802 டிசம்பர் 31ல் பஸ்ஸின் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இந்த உடன்படிக்கையின்படி,

a) 6,000க்கும் குறையாத காலாட்படையும் அதற்குரிய பீரங்கிகளும், ஐரோப்பியப் பீரங்கிப் படையினரும் கொண்ட ஒரு பாதுகாப்புப்படை பீஷ்வாவின் நாட்டில் நிலையாகத் தங்கியிருக்கும்.

b) இந்தப் படையின் செலவுக்காக 26லட்ச ரூபாய் வருமானம் தரத்தக்க பகுதிகளை ஆங்கிலேயர்களுக்கு பீஷ்வா கொடுக்க வேண்டும்.

c) ஆங்கிலேயருடைய ஐரோப்பியப் பகைவர்களை பீஷ்வா வைத்துக் கொள்ளக்கூடாது. மேலும் ஆங்கிலேயர்களின் உத்தரவில்லாமல் மற்ற இந்திய அரசர்களுடன் உறவு வைத்துக்கொள்ளக்கூடாது.

d) இந்த பஸ்ஸின் உடன்படிக்கையின்படி ஆங்கிலப் படை ஒன்று ஆர்தர் வெல்லஸ்லி என்பவரின் தலைமையில் சென்று பீஷ்வாவை 1803 மே 13-ல் அவரது தலைநகரான புனாவில் அமர்த்தியது. ஆங்கிலேயருடன் பீஷ்வா செய்து கொண்ட துணைப்படைத் திட்டத்தை மற்ற மராட்டியத் தலைவர்கள் எதிர்த்தார்கள். தங்கள் தேசிய சுதந்திரம் பறிபோனதைக் கண்டு தங்களுக்கிடையே இருந்த பொறாமைகளை மறந்து ஆங்கிலேயர் களுக்கெதிராக ஒன்று சேர முற்பட்டனர். 1802- ஆகஸ்ட் மாதம் இரண்டாம் மராட்டிய போர் ஆரம்பமானது.

**போரின் போக்கு :**

மராட்டியர்களின் படையில் இரண்டு லட்சத்துக்கும் மேல் எண்ணிக்கையுள்ள போர் வீரர்கள் இருந்தனர். மேலும் பிரெஞ்சுக்காரர் களால் பயிற்சி அளிக்கப்பட்ட 40,000 வீரர்களும் இருந்தனர். எனவே மராட் டியர்களை எல்லாப்பகுதிகளிலிருந்தும் தாக்க முற்பட்டனர் ஆங்கிலேயர். ஆர்தர் வெல்லஸ்லி அகமதாபாத்தைக் கைப்பற்றினார். சிந்தியாவின் படைகளை நர்மதை ஆற்றுக்குத் தெற்கே உள்ள அஸ்ஸே (Assaya) என்ற இடத்தில் தோற்கடித்தார். மேலும் பான்ஸ்லேயின் படைகளை ஆர்கான் யுசபயழெ) என்ற இடத்தில் தோற்கடித்து பர்கான்பூர், அஸ்ஸீர்கார் ஆகிய இடங்களைக் கைப்பற்றினார். வட இந்தியாவில் ஜெனரல் லேக் (Lake) சிந்தியாவிடமிருந்து அலிகாரைக் கைப்பற்றினார். தோல்வியடைந்த சிந்தியா 1804-ல் ஆங்கிலேயருடன் சுர்ஜி அர்ஜன்கான் (Surji Arjangaon) என்ற உடன்படிக்கையை செய்து கொண்டு போரிலிருந்து விலகினார். பான்ஸ்லே தியோகான் (Deogaon) என்ற உடன்படிக்கையை ஆங்கிலேயர் களுடன் செய்து கொண்டார்.

இவ்வாறு ஆங்கிலேயர்களின் போர்தந்திரங்களும் மராட்டியரின் ஒற்றுமையின்மையும் மராட்டியரின் தோல்விக்குக் காரணமாயின. மராட்

டியக் கூட்டரசிற்கு இதனால் சாவுமணி அடிக்கப்பட்டது. பான்ஸ்லேயும், சிந்தியாவும் உடன்படிக்கை செய்து கொண்டு போரிலிருந்து விலகிய பிறகு 1804-ல் ஹோல்கார் ஆங்கிலேயர் மீது போர்தொடுத்தார்.

ஜஸ்வந்த்ராவ் ஹோல்கார் தம்மிடம் ஆங்கிலேயர்களுக்கு எப்போ தும் அச்சம் உண்டு என்று நினைத்தார். எனவே ரஜபுத்திர நாடுகளிடமிருந்து கப்பம் வாங்கும் உரிமை கொண்டாடினார். தோஆப் பிரதேசத்தின் பல பகுதிகள் தமக்கே உரியது என்று கூறினார். எனவே ஆங்கிலேயர்களுக்கு வேண்டுகோள் ஒன்று விடுத்தார். ”ஆங்கிலேயர் அவருடைய நட்புறவை விரும்பினால் தாம் விரும்பிய அனைத்தையும் தமக்கே அளிக்க வேண்டும்““ என்றார். ஆனால் ஆங்கிலேயர்கள் இதனை ஏற்காமல் அவர் மீது போர்தொடுத்தனர். முதலில் சில வெற்றிகளை ஹோல்கார் பெற்றார். ஆனால் தளபதி லேக் பருக்காபாத் என்ற இடத்தில் ஹோல் காரைத் தோற் கடித்தார். ஆனால் கொரிலா போர் முறையால் ஆங்கிலேயரிடம் குழப் பத்தை ஏற்படுத்தினார் ஹோல்கார். இச்சமயத்தில் பான்ஸ்லேயும் மறுபடி போரில் கலந்து கொண்டார். ஹோல்காரால் ஆங்கிலப்படைக்கு இழுக்கு ஏற்பட்டதால் வெல்லஸ்லியை திரும்ப வருமாறு ஆங்கில அரசு அழைக் கும் கட்டாய நிலை ஏற்பட்டது. 1806-ல் ஆங்கிலேயர்களுடன் ஹோல்கார் சமாதானம் செய்து கொண்டார் ரஜபுதனப்பகுதிகளில் சுதந்திரமாக செயல் படும் உரிமை பெற்றார்.

**இரண்டாம் மராட்டியப் போரின் முக்கியத்துவம்:**

இரண்டாம் மராட்டியப் போரில் ஆங்கிலேயர் முக்கியச் சலுகை களை பல்வேறு முறைகளில் பெற்றனர். மராட்டிய அரசரான பான்ஸ்லே பாலசூரைச் சேர்ந்த கட்டாக் மாகாணத்தையும் வார்தா நதியின் மேற்கில் அவருக்கிருந்த எல்லா இடங்களையும் ஆங்கிலேயருக்குக் கொடுத்துவிட்டார். நாகபுரிக்கு பிரிட்டி‘ ரெசிடெண்ட்டாக எல்பின்ஸ்டன் என்பவர் அனுப்பப்பட்டார். சிந்தியாகங்கைக்கும் யமுனைக்கும் இடையில் இருந்த அவருடைய இடங்களையும் கோட்டைகளையும் ஆங்கிலேயர்களுக்கு கொடுத்தார். மேற்கில் அகமது நகரம், புரோச்சு , அஜந்தா மலை களுக்கு மேற்கே இருந்த தமக்குரிய எல்லா இடங்களையும் விட்டுக் கொடுத்தார். பெயரளவுக்கு மட்டும் முகலாயப் பேரரசராக இருந்த ‘ா ஆலம் ஆங்கிலேயரின் பாதுகாப்பின் கீழ் வந்தார். ஜோத்பூர், ஜெய்பூர், மாசேரி, புந்தி, பரத்பூரின் ஜாட் அரசு ஆகியவற்றுடன் நட்புறவு உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டன. இவ்வாறு மராட்டியர்களிடமிருந்து ஆங்கிலேயர் பல பகுதிகளைப் பெற்றனர். சென்னையிலும் வங்காளத் திலும் கூட ஆங்கிலேயரின் உடமைகள் மற்ற வழிகளில் விரிவாக்கப் பட்டன. “இப்போது நாம் இந்தியாவை அடக்கி ஆள்பவர்களாக இருக்கிறோம். நம்முடைய ஆட்சியை எவராலும் அசைக்க முடியாது என்று எழுதினார் மன்றோ பிரபு ஆனால் ஹோல்காரிடம் ஆங்கிலேயர் அடைந்த தோல்வி வெல்லஸ்லி பதவி விலகுவதற்கு காரணமாக அமைந்து விட்டது.

**மூன்றாவது மராட்டியப் போர் (1817-1819)**

**காரணங்கள் :**

1. பிண்டாரி என்ற கொள்ளைக் கூட்டத்தினருக்கும் மராட்டியர் களுக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது. மராட்டியர்கள் பிண்டாரிகளை கூலிப்படை வீரர்களாக அவ்வப்போது பயன்படுத்தி வந்தனர். எனவே கவர்னர் ஜெனரல் ஹேஸ்டிங்ஸ் பிரபு பிண்டாரிகளை ஒழிப்பதில் தீவிரமாக ஈடுபட்டார். இதனால் மராட்டியர்களுடன் மோதல் ஏற்படும் என்பதையும் உணர்ந்தார்.
2. பீஷ்வா இரண்டாம் பாஜிராவ் தன்னுடைய தலைமையின் கீழ் மராட்டியக் கூட்டமைப்பை திரும்பவும் நிலைப்படுத்தி ஆங்கிலேயரின்

ஆட்சியை ஒழித்துவிட வேண்டுமென்று கனவு கண்டார். இதனால் ஆங்கிலேயரைவிட்டு பிரிந்து உரிமை பெறுவதற்கு தக்க சந்தர்ப்பத்தை எதிர் நோக்கியிருந்தார்.

3. இச்சமயத்தில் பீஷ்வாவிற்கும் கெய்க்வாருக்கும் இடையில் ஏற்பட்ட ஒருதகராரைத் தீர்ப்பதற்காக தனது அமைச்சரும், ஆங்கிலேயரி டம் நட்புடன் இருந்தவருமான கங்காதர சாஸ்திரி (புயபெயனாயச ளுயளவசை) என்பவரை 1814-ல் புனாவுக்கு அனுப்பினார். அவருக்கு புனாவிலிருந்த ஆங்கில பிரதிநிதி எல்பின்ஸ்ட ன் பாதுகாப்பு அளிப்பதாக வாக்குறுதி யளித்தார். அப்படியிருந்தும் பீஷ்வா தனது நண்பர் திரிம்பக்ஜி டாங்லியா (Trimbakji Danglia) என்பவரின் தூண்டுதலின் பேரில் வஞ்சமாக கங்காதர சாஸ்திரியைக் கொன்று விட்டார்.
4. ஆனால் எல்பின்ஸ்ட னின் கட்டாயத்தின் போர் திரிம்பக்ஜி சிறைப்பிடிக்கப்பட்டார். தானாவிலிருந்த ஒரு கோட்டையில் சிறைவைக் கப்பட்ட அவர் ஒரு ஆண்டுக்கு பிறகு தப்பி ஓடிவிட்டார். இதற்கு பீஷ்வா தான் காரணமாயிருக்க வேண்டும் என்ற சந்தேகம் ஏற்பட்டது.
5. 1817-ல் மராட்டியத் தலைவர்களைக் கொண்டு ஒரு கூட்டரசை ஏற்படுத்துவதற்கு பட்டாணியத்தலைவன் அமிர்கானுடனும், ஆங்கிலயர் களுக்குப் பகைவர்களாக இருந்த சிந்தியா, பான்ஸ்லே ஆகியோரிடமே பேச்சுவார்த்தைகளைத் தொடங்கினார் பீஷ்வா. தனது படையின் வலிமை யை அதிகரிப்பதற்கும் முயன்றார். எனவே ஆங்கிலேயரும் பீஷ்வா வின் சதித்திட்டங்களை முறியடிக்க தகுந்த நடவடிக்கைகளை எடுத்தனர்.
6. புனா உடன்படிக்கை : 1817, ஜுன் 13 புனாவிலிருந்த ஆங்கிலப் பிரதிநிதி எல்பின்ஸ்டன் பாஜிராவை புனா உடன்படிக்கை ஏற்றுக்கொள் ளும்படி செய்தார். இந்த உடன்படிக்கைப்படி, ய)மராட்டியக் கூட்டரசின் தலைமையை பீஷ்வா கைவிட்டார். டி) கெய்க்வார் மீதிருந்த உரிமையை நான்குலட்சம் ரூபாய் பெற்றுக் கொண்டு கைவிட்டார் உ) மறுபடியும் அவரிடம் பணம் கேட்பதில்லை என்று உறுதியளித்தார். இவ்வாறு பீஷ்வா வின் அதிகாரங்களை ஆங்கி லேயர் பறித்தனர். ஆங்கிலேயரின் உத்தரவின்றி பீஷ்வா எதுவும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.
7. இதனால் ஆத்திரமடைந்த பீஷ்வா ஆங்கிலேயருக்கெதிராகப் போரில் இறங்கினார். புனாவிலிருந்த ஆங்கிலப் பிரதிநிதி தங்குமிடத்தை தீவைத்துக் கொளுத்தினார். இதனால் 1817-ல் மூன்றாம் மராட்டியப் போர் ஆரம்பமானது.

**போரின் போக்கு :**

திடீரென்று பீஷ்வா தாக்கியதால் ஆங்கிலப் படைகள் பின்வாங் கின. ஆனால் தளபதி புர் (Colonal Burr) என்பவரால் பீஷ்வா கிர்க்கி என்ற இடத்தில் தோற்கடிக்கப்பட்டார். அதன்பிறகு 1818 ஜனவரி 1-ம் தேதி கோரிகான் (Koregaon) என்ற இடத்தில் தோற்கடிக்கப்பட்டார். பிப்ரவரி 20-ல் ஆஷ்டி (Ashti) என்ற இடத்தில் நடைபெற்ற போரிலும் தோற்கடிக்கப் பட்டார். போரில் பீ'வாவின் தளபதி கோகலே கொல்லப்பட்டார். இறுதி யில் பீஷ்வா ஆங்கிலத் தளபதி ஜாண்மால்காம் என்பவரிடம் சரணடைந்தார்.

இந்த தோல்வியினால் பீஷ்வா என்ற பதவி ஒழிக்கப்பட்டது. பீஷ்வா கான்பூருக்கு அருகிலுள்ள பித்தூர் (Bithur) என்ற இடத்தில் ஆண்டுக்கு எட்டு லட்சம் ரூபாய் ஓய்வூதியத்துடன் ஓய்வெடுக்க அனுமதிக்கப் பட்டார். அவரது நாடு முழுவதும் ஆங்கிலேயர் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. பீஷ்வா வின் நாட்டிலிருந்து பிரிக்கப்பட்ட சிறிய நாடான

சதாரா சிவாஜியின் வழித்தோன்றலான பிரதாபசிம்மன் என்பவருக்குக் கொடுக்கப்பட்டது.

1816-ல் ராகூஜி பான்ஸ்லே இறந்த பிறகு பதவியேற்ற யர்சோஜி என்ற அரசருக்கு அப்பாசாகிப் (Appasahib) என்பவர் ரீஜெண்டாக நியமிக்கப்பட்டார். இவர் பீஷ்வாவுக்கு ஆதரவாக போரில் இறங்கினார். போரில் அப்பாசாகிப்பின் படைகள் சீத்தபல்டி (Sitabaldi) என்ற இடத்தில் 1817 நவம்பரில் தோற்கடிக்கப்பட்டது. ஹோல்காரும் பீஷ்வாவுக்கு ஆதர வாகப் போரில் இறங்கினார். அவரது படைகள் மகித்பூர் (Mahidpur) என்ற இடத்தில் 1817 டிசம்பர் 21-ல் தோற்கடிக்கப்பட்டது. ஹோல்கார் 1818 ஜனவரியில் ஆங்கிலேயருடன் மண்ட சோர் (Mandasor) என்ற உடன் படிக்கை செய்து கொண்டு நர்மதை நதிக்குத் தெற்கே உள்ள இடங்களையும் ஆங்கிலேயர்களிடம் கொடுத்து விட்டார். அவரது நாட்டில் ஒரு ஆங்கிலப் படை வைக்கப்பட்டது. சிந்தியா ஒருவருக்குத்தான் ஒரு தனிப்படை வைத்துக்கொள்ள உரிமை கொடுக்கப்பட்டது. இவ்விதம் மராட்டியர்களின் அரசியல் வாழ்க்கை ஒடுங்கிப் போனது.

**மராட்டியர்களின் தோல்விக்கான காரணங்கள்**

## (Causes for Maratha failure)

இவ்விதம் முகலாயப் பேரரசின் அழிவின் மீது இந்தியாவில் தங்கள் அரசியல் தலைமையை நிலை பெறுவதற்கு மராட்டியர் செய்த கடைசி முயற்சியும் தோல்வியடைந்தது. மராட்டியர்கள் முகமதியர்களை விட வல்லவர்களாகக் காணப்பட்டாலும் ஆங்கிலேயர்களுக்கு அவர்கள் ஈடாக மாட்டார்கள். ராஜதந்திரத்திலும், படைவலிமையிலும், தலைமைத் தன்மையிலும் ஆங்கிலேயர்களைவிடக் குறைந்தவர்களே. மராட்டியர் களின் இறுதி வீழ்ச்சிக்கான காரணங்கள் பின்வருமாறு:

**1. ஆற்றலற்ற தலைமை :**

மராட்டியர்களிடம் காணப்பட்ட ஆற்றலற்ற தலைமை அவர்கள் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாகும். சிவாஜி, முதலாம் பாஜிராவ், மல்ஹர் ராவ் ஹோல்கார், மகதாஜி சிந்தியா, நானாபட்னாவிஸ் ஆகியோர்களைத் தவிர பிற தலைவர்கள் ஆற்றலற்று காணப்பட்டார்கள். அவர்களிடம் ராஜதந்திரம் இல்லை. தந்திரங்கள் செய்வதிலும் சதித்திட்டங்கள் தீட்டுவதி லேயுமே தங்கள் ஆற்றலைச் செலவிட்டார்கள். எனவே போர்களை திட்ட மிட்டு சிறப்பாக நடத்த சிறந்த தலைவர்கள் இல்லாமல் போய்விட்டார்கள்.

**2. ஒற்றுமையில்லாத தலைமை :**

மராட்டியர்களிடம் ஒற்றுமையில்லை. மராட்டியத்தலைவர் ஹோல்கார், சிந்தியா, பான்ஸ்லே போன்றவர்களிடம் ஒற்றுமையில்லை. போட்டியும் பொறாமையும் காணப்பட்டது. தங்கள் நலன்களை மட்டுமே கவனித்து தேசிய நலன்களை பாழ்படுத்திவிட்டார்கள். இரண்டாம், மராட்டியப் போர் தொடக்கத்தில் ஜஸ்வந்த்ராவ் ஹோல்கார் தனித்தே நின்றார். சிந்தியாவும், பான்ஸ்லேயும் தோற்றபிறகே ஆங்கிலேயர்களை எதிர்த்தார். மூன்றாம் மராட்டியப் போரில் சிந்தியா மற்ற மராட்டியத்தலை வர்களுடன் சேரவில்லை. இவ்வாறு ஒற்றுமையில்லாத தலைவர்களால் மராட்டியர்கள் வீழ்ச்சியடைந்தனர்.

**3. மராட்டியத்தலைவர்களின் பொறுப்பின்மை :**

மராட்டியர்களின் வீழ்ச்சிக்கு பீஷ்வா இரண்டாம் பாஜிராவ், தௌலத்ராவ் சிந்தியா என்ற இன்பநாட்டமுடைய இளைஞர்களின் பொறுப்பின்மையே காரணம் ஆகும். இவர்கள் தங்கள் அட்டூழியத்தால்

மக்கள் வாழ்க்கையைக் கெடுத்தனர். முக்கியமாக தௌலத்ராவ் சிந்தியா ஏகபோக வாழ்க்கை வாழ்கிறவராக காணப்பட்டார். இவர்களது கோடுங் கோன்மையால் துயருற்ற மக்கள் அவர்கள் ஆட்சி முறையை வெறுத்து ஆங்கிலேயரின் பாதுகாப்பை நாடினர்.

**4. மராட்டியரின் வலிமையற்ற இராணுவ அமைப்பு :**

மராட்டியரின் ராணுவம் ஆங்கில ராணுவத்தைவிட வலிமை குறைந்து காணப்பட்டது. மராட்டியர்கள் தங்கள் பழமையான கொரிலா போர் முறையைக் கைவிட்டார்கள். அதே நேரம் மேலை நாட்டினரைப் போல விஞ்ஞான ரீதியில் தங்கள் ராணுவத்தை அமைத்துக் கொள்ள வில்லை. மேலும் அவர்களிடம் பீரங்கிப்படையில்லை. ஆனால் ஆங்கி லேயர் வலிமையான பயிற்சி பெற்ற, பீரங்கிப்படையுடன் கூடிய ராணு வத்தை வைத்திருந்தனர். எனவே ஆங்கிலப்படையிடம் மராட்டியப்படை தோற்றுப்போனது.

**5. ஆங்கிலேயரின் ஒற்றர் முறை:**

ஆங்கிலேயர்களிடம் திறமை மிக்க ஒற்றர் படை இருந்தது. அதன் மூலம் மராட்டியர்களின் சதியையும், செயல்பாட்டையும் மிக எளிதில் அறிந்து கொண்டனர். இந்திய அரசர்களின் அவையிலிருந்த ஆங்கிலப்பிரதி களின் பணி பாராட்டப்படக் கூடியது. எதிரிகளின் பலம் பற்றியும், பலவீனம் பற்றியும் அவ்வப்போது தகவல்களைப் பெற்று அதற்கேற்ற பல திட்டங்களை வகுத்தனர்.

**6. சமுதாய ஒற்றுமையும், தேசிய உணர்வும் இல்லை :**

மராட்டிய நாட்டில் சிறப்பும் ஒழுங்கும் வாய்ந்த சமுதாய வளர்ச்சி, கல்வியைப் பரப்புதல் அல்லது மக்களை ஒன்றுபடுத்துதல் ஆகியவை களுக்கான எவ்வித முயற்சியும் சிவாஜி காலத்திலாவது, பீஷ்வாக்களின் காலத்திலாவது செய்யப்படவில்லை. நாடு சிறக்க வேண்டுமானால் ஒற்றுமை இன்றியமையாதது. இந்த உண்மையை வேறு பல இந்தியர் களைப் போலவே மராட்டியர்களும் உணரவில்லை. நாட்டிற்கு பேரிடை யூறு ஏற்படும் போது தேசிய உணர்ச்சியால் உந்தப்பட்டு மக்களும், தலைவர்களும் ஒற்றுமையுடனும் தேசிய உணர்வுடனும் செயல்படா விட்டால் அது அந்த நாட்டின் வீழ்ச்சிக்கு வழிவகுக்கும் என்பதற்கு மராட்டியர்கள் ஒரு சிறந்த உதாரணமாகும்.

**7. நிலையற்ற பொருளாதாரக் கொள்கை :**

மராட்டியர்கள் தங்கள் நாட்டில் சரியான பொருளாதாரக் கொள்கை யைப் பின்பற்றவில்லை. சிறந்த பொருளாதரக் கொள்கையும் திருப்தி கரமான நிதி ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை. தங்களுக்கிடையே அதிகாரப் போட்டியிருந்ததால் வேளாண்மை வளர்ச்சிக்கோ, வாணிபத்தை பெருக்குவதற்கோ எந்த நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. எனவே பலமற்ற பொருளாதார நிலை அவர்களது வீழ்ச்சிக்கு வழி வகுத்தது.

**8. ரஜபுத்திரர்களிடம் கொண்ட பகைமை :**

சூழ்நிலைக்கேற்பவும், தேவைக்கேற்பவும் தங்கள் கொள்கை களை மராட்டியர்கள் வகுத்துக் கொள்ளவில்லை. இந்து பேரரசை அமைக்க விரும்பிய மராட்டியர்கள் இராஜபுத்திரர்களின் நட்பைப்பெற முயலவில்லை . ராஜபுத்திரர்களுக்கெதிராக அவர்கள் நாட்டின் மீது அடிக் கடி படையெடுத்து அவர்களின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொண்டனர். இது மராட்டியர்களின் வலிமையைக் குறைத்தது.

இவ்வாறு சுமார் நாற்பது ஆண்டுகாலம் ஆங்கிலேயர்களுடன்

ஏற்பட்ட போட்டியில் மராட்டியப் பேரரசு என்ற கட்டிடம் மிகவும் அவமானகரமான முறையில் இடிந்துவிட்டது. மராட்டியர்களின் வீழ்ச்சி யால் ஆங்கிலேயர்கள் முன் எப்போதும் இல்லாத அளவில் வலிமை பெற்று விளங்கினர்.

## 6.3 பர்மியப் போர்கள்

ஆங்கிலேயர்களுக்கும் பர்மியர்களுக்கும் இடையே மூன்று போர் கள் ஏற்பட்டது. முதலாவது ஆங்கில பர்மியப் போர் அமர்ஸ்ட் பிரபு காலத் திலும், இரண்டாவது ஆங்கில பர்மியப்போர்டல்ஹௌசி பிரபு காலத்தி லும் நடைபெற்றது. இந்த இரண்டு போர்களில் ஆங்கிலேயர் வெற்றி பெற்றனர். அதன் விளைவாக கீழ் பர்மா ஆங்கில அரசுடன் இணைக்கப் பட்டது.

**முதலாவது ஆங்கில - பர்மியப் போர் (1824- 26)**

**காரணங்கள் :**

1. பர்மாவில் 1735-ல் ஆலம்பரா (Alompra) என்பவர் ஆவா (Ava) வில் ஓர் ஆட்சியை ஏற்படுத்தினார். அவருக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த போதாவ் பயாவும், பின்னர் வந்த பாகதா (ரியபலனைழய) என்பவரும் எல்லா திசைகளிலும் தங்கள் ஆட்சியை விரிவுபடுத்தினார்கள். 1787 அரகான் என்ற நாடும் அடிமைப்படுத்தப்பட்டது. இவ்வாறு சரியாக வரையறுக்கப் படாதலும் அடிக்கடி மாறிக் கொண்டு வந்ததுமான கம்பனி டொமினி யனின் கிழக்கு எல்லையை நோக்கி பர்மியர்கள் முன்னேறியது ஆங்கில - பர்மிய போர் ஏற்படக் காரணமானது.
2. ஆனால் கம்பெனி இந்தியாவின் மற்ற பகுதிகளில் போரில் ஈடுபட்டிருந்ததால், பர்மியர்களுடன் போர் ஏற்படாமல் தடுப்பதற்காக பர்மாவுக்கும் பல தூதுவர்களை அனுப்பியது. கேப்டன் சிம்ஸ், கேப்டன் காக்ஸ், கேப்டன்கானிங், ஆகியோர் தூதுவர்களாக அனுப்பப்பட்டனர். இந்த தூதுவர்கள் சரியாக நடத்தப்படவில்லை . மேலும் பர்மாவிலிருந்து தப்பி ஓடியவர்களை கம்பெனி திரும்ப ஒப்படைக்க மறுத்ததாலும் இரு நாடுகளுக்கிடையே உறவு மோசமாகியது.
3. பர்மியர்களால் கைப்பற்றப்பட்ட இடங்களிலிருந்து தப்பி ஓடியவர்கள் ஆங்கிலேயர் எல்லையில் தஞ்சமடைந்ததால் கோபமடைந்த பர்மிய அரசு ஆங்கிலேயர்களுக்கு உரிமையான அரசைக் கைப்பற்றியது. பின்னர் சிட்டகாங்கிற்கு அருகிலுள்ள ஷாபுரித்தீவை (Shapuri) 1823 செப்டம்பரில் கைப்பற்றியது. மேலும் பர்மிய அரசர் தனது தளபதி மகாபந்துலா என்பவரை, ஆங்கில கவர்னர் ஜெனரலைத் தோற்கடித்து தங்கச்சங்கிலியால் கட்டி தன் தலைநகரான ஆவாவிற்கு இழுத்து வருமாறு கட்டளையிட்டார். இதனை அறிந்த கவர்னர் ஜெனரல் அமர்ஸ்ட்பிரபு 1824 - பிப்ரவரி 24-ல் பர்மா மீது போர் தொடுத்தார்.

**போரின் போக்கு :**

ஆங்கிலேயர்கள் பர்மாவைக் கடல் வழியாகத் தாக்கத்திட்டம் தீட்டினர். தளபதிகள் கேம்பல், மாரியட் ஆகியோரின் தலைமையில் கப்பல்படை அனுப்பப்பட்டது. முதலில் அசாமிலிருந்து பர்மியர்கள் விரட்டப்பட்டனர். ஆனால் பர்மியத் தளபதி பந்துலா ஆங்கிலப்படை ஒன்றை ராமு (Ramu) என்ற இடத்தில் தோற்கடித்தார். ஆங்கிலேயர்கள் ரங்கூனைத்தாக்கினார்கள். ரங்கூன் வீழ்ந்தது. பின்னர், கேம்ப்பல் கீழ் பர்மாவின் தலைநகரான புரோமை (Prome)க் கைப்பற்றினார். அதன்பிறகு பர்மாதலைநகருக்கு அறுபது மைல் தொலைவிலுள்ள யாண்டபூ என்ற

இடத்தை நோக்கி முன்னேறின ஆங்கிலப் படைகள். ஆனால் பர்மியர்கள் ஆங்கிலேயர்ளுடன் 1826 - பிப்ரவரி 26-ல் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டார்கள். இவ்வாறு முதலாவது பர்மியப் போர் யாண்டபூ உடன்படிக்கைப்படி முடிவடைந்தது.

**யாண்ட உடன்படிக்கை : Treaty of Yandaboo 1826.**

இந்த உடன்படிக்கையின்படி,

a) ஆங்கிலேயர்களுக்கு ஆவா அரசினர் போர் இழப்புத் தொகை யாக ஒரு கோடி ரூபாய் கொடுக்க வேண்டும்.
b) அரகான், டேனாசரிப் நிலப்பகுதிகளை பர்மியர்கள் ஆங்கிலே யர்களுக்கு விட்டுக் கொடுக்க வேண்டும். மேலும் அசாம், சச்சார், ஜெயின்டியர் ஆகிய இடங்களில் தலையிடமாட்டோம் என்று பர்மியர்கள் உறுதி கூறினார்கள். மணிப்பூரை சுதந்திரநாடாக பர்மியர் ஒப்புக் கொண்டனர்.
c) ஒருவருக்கொருவர் உதவி செய்யும் கொள்கையின் மீது ஓர் வணிக உடன்பாடு ஏற்பட்டது. ஆவாவில் பிரிட்டி‘ தூதுவர் வைக்கப்பட வேண்டும்.

இந்த முதலாவது ஆங்கிலப் பர்மியப் போரில் ஆங்கிலேயர்கள் முக்கிய அனுகூலங்களைப் பெற்றனர். பர்மியக் கடற்கரைப் பகுதிகளில் ஆங்கிலேயர் ஆதிக்கம் கொண்டனர். மேலும் அஸ்ஸாம், கச்சார், மணிப்பூர் ஆகிய பகுதிகள் மீது தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்தினர். கீழ் பர்மாவின் பெரும்பகுதி ஆங்கிலேயர் வசம் வந்தது. ஆனால் போரில் உடனடி நடவடிக்கைகளைத் தக்க சமயத்தில் எடுக்கத் தவறியதால் ஆங்கிலேயர் ஏராளமான போர்வீரர்களையும், அதிக அளவில் பணத்தையும் இழந்தனர். ஆனால் இப்போரில் அடைந்த தோல்வியால் பர்மியர் கலக்கமடைய வில்லை. தொடர்ந்து தொல்லை கொடுத்துக் கொண்டே இருந்தனர்.

**இரண்டாவது ஆங்கில பர்மியப் போர் (1852) காரணங்கள்:**

1. தாராவட்டி (Tharrawaddy) என்பவர் பர்மாவின் புதிய அரசராக 1837- ல் பதவி ஏற்றார். பர்மிய அரசியல் மரபின்படி புதிய அரசருக்கு முன்பு செய்யப்பட்ட உடன்படிக்கை எதுவும் மறுபடியும் உறுதிப்படுத்தினால் அன்றி புதிய அரசரைக் கட்டுப்படுத்தாது. இதன்படி ஆங்கிலேயர் ஏற்கனவே செய்து கொண்டிருந்த அரசியல், வாணிக உடன்படிக்கைகள் செயலற்றுப் போயின. இதனால் ஆங்கில வாணிபம் பெரிதும் பாதிக்கப்பட்டது.
2. இதற்கிடையில் ஆவாவில் இருந்த பிரிட்டி‘தூதுவர்கள் பர்மிய அரசால் இழிவாக நடத்தப்பட்டனர். 1840 - ல் ஆங்கில பிரதிநிதி ஆவாவை விட்டு வெளியேறினார். இதனை ஆங்கிலேயர்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை .
3. 1826-ம் வருட உடன்படிக்கைப்படி பர்மாவின் தெற்குக் கடற் கரைப் பகுதியில் குடியேறிய பிரிட்டிஷ் வணிகர்கள் ரங்கூன் கவர்னர் தங்களைக் கொடுமைப்படுத்துவதாகக் கூறினார்கள். கல்கத்தா அரசாங்கம் இப்பிரச்சனையில் தலையிட்டு தங்கள் ந‘டத்திற்கு ஈடுகிடைக்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.
4. இச்சூழ்நிலையில் 1848- ல் கவர்னர் ஜெனரலாகப் பொறுப் பேற்ற டல்ஹௌசி பிரபு பர்மாவை ஆங்கிலேயர் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர முடிவு செய்தார். அதற்கான சந்தர்ப்பமும் வந்தது.

1845-ல் பர்மிய அரசர் தாரவட்டி இறந்துவிடவே அவரது மகன் பாகன் (Pagan) என்பவர் 1845-ல் அரசரானார். இவர் தனது தந்தையின் கொள்கைகளையே பின்பற்றினார். பாகனுடன் சமரசப் பேச்சுவார்த்தை நடத்த லம்பார்ட் (Lambert) என்பவரை அனுப்பினார் டல்ஹௌசி.

லம்பார்டின் கோரிக்கைகளுக்கு பாகன் மரியாதையான முறையில் பதிலை அனுப்பினாலும் பாகனின் அதிகாரிகள் லம்பார்ட்டுடன் சென்ற அதிகாரி களை அவமானமாக நடத்தினர் என்று ஆங்கிலேயர் குற்றம் சாட்டினர். இதனால் ரங்கூன் துறைமுகம் ஆங்கிலேயர்களால் முற்றுகையிடப்பட்டது. இரண்டாம் ஆங்கில பர்மியப் போர் 1852 ஏப்ரல் மாதம் ஆரம்பமானது.

**போரின் போக்கு :**

டல்ஹௌசி பிரபுவின் தலைமையில் பர்மியப்போருக்கான ஏற்பாடுகள் மிக்க ஊக்கத்துடனும், திறமையுடனும் செய்யப்பட்டன. ஜெனரல் காட்வின் (Godwin), அட்மிரல் ஆஸ்டின் (Austin) ஆகியோரின் தலைமையில் ஒரு ஆங்கிலப்படை ரங்கூனை அடைந்தது. சீக்கிரமே மார்ட்ட பன் என்ற இடம் வீழ்ந்தது. பஸ்ஸின் என்ற இடமும் பிடிபட்டது. 1852 அக்டோபரில் புரோம் என்ற நகரமும், நவம்பரில் பெகு (ேநபர) என்ற நகரமும் கைப்பற்றப்பட்டன.

போரின் இறுதியில் 1852 டிசம்பர் 20-ல் ஒரு பிரகடனம் மூலம் பெகு அல்லது கீழ் பர்மாவை ஆங்கில அரசுடன் இணைத்துக்கொண்டார் டல்ஹௌசி. இதனால் ஆங்கில பேரரசு சால்வீன் (Salween) நதிக்கரை வரையிலும் பரவியது. வங்காள விரிகுடாவின் கிழக்குக் கடற்கரை முழுவதிலும் பிரிட்டி‘ ஆதிக்கம் ஏற்பட்டது. பர்மிய அரசு கடலுடன் தொடர்பு கொள்ள முடியாதவாறு வழி அடைக்கப்பட்டது. தங்களுக் குட்பட்ட பர்மியப் பகுதிகளில் பல சீர்திருத்தங்களை மேற்கொண்டனர் ஆங்கிலேயர்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

11. முதலாவது மராட்டியப்போரின் போது 1779 ல் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை என்ன?
12. 1798ல் கவர்னர் ஜெனரலாக பொறுப்பேற்றவர் யார்?
13. 1817 ல் பீஷ்வாவுடன் புனே உடன்படிக்கை செய்து கொண்ட ஆங்கில பிரதிநிதி யார்?
14. முதலாவது பர்மிய போர் எந்த கவர்னர் ஜெனரல் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது.
15. இரண்டாவது பர்மிய போர் எந்த ஆண்டு நடைப்பெற்றது?

## 6.4 சீக்கியப் போர்கள்

ரஞ்சித்சிங்கின் மனறவுக்குப்பின் சீக்கிய அரசு வலுவிழக்க ஆரம்பித்தது. நாட்டில் டுதாஈன்றிய கலகங்ளும், நடைபெற்ற கொலைகளும் சீக்கிய அரசை சீர்குலைத்தன. நட்டில் ஆட்சி அமைப்புமுறையே இல்லாமல் போய்விட்டது. மத்திய சிவில் ஆட்சி வலுவற்றுப் போனது. நாடு கால்சா படையின் ஆதிக்கத்திற்குட்பட்டது. ரஞ்சித்சிங்கிற்குப் பிறகு அவரது மகன் கரக்சிங் 1839-ல் சீக்கிய மகாராஜாவாக்கப்பட்டார். அவர் அதே ஆண்டு அக்டோபர் மாதம் கொல்லப்பட்டார். அதன் பிரகு 1840-ல் பதவியேற்ற மற்றொரு மகனான ெ’ர்சிங்கும் 1843ல் கொல்லப்பட்டார். எனவே இப்படி நாட்டுக்குள் எழுந்த குழப்பம் ஆட்சிமுறை இல்லாத நிலை ஆகியவை ஒன்று சேர்ந்து இறுதியில் ஆங்கிலேயர்களுடன் போர் ஏர்படுவதற்கு வழிவகுத்தது. இரண்டு ஆங்கில-சீக்கியப் போர்கள்

நடைப்பெற்றன. அந்தப் போர்களின் இறுதியில் சீக்கிய அரசு அடிபணிந்தது ஆங்கில பேரரசுடன் இணைக்கப்பட்டது.

**முதலாவது ஆங்கில சீக்கியப் - போர்கள் (1845-1846)**

**காரணங்கள் :**

1. ரஞ்சித்சிங் இறந்த பிறகு பதவிக்கு வந்தவர்கள் ஒருவர் பின் ஒருவராகக் கொல்லப்பட்டனர். ராணுவத்தின் ஆதிக்கம் அதிகரிக்க 1843-ல் தலிப்சிங் (Dhulip Singh) என்ற ஐந்து வயது சிறுவன் அரசா அறிவிக்கப்பட்டார். இவர் வயதில் மிகவும் இளையவராக இருந்ததால் அவரது தாய் ஜிண்டான் (Jindan) என்பவர் அவருக்குப் பாதுகாவலராக இருந்து ஆட்சி செய்து வந்தார். ஆனால் ஜிண்டானாவினால் ஆட்சியை ஒழுங்குப்படுத்த முடியவில்லை. கால்சாப் படையின் தளபதிகளே உண்மையான அதிகாரத்தை வைத்திருந்தனர் .

2. கால்சாப்படையின் தளபதியான தேஜ்சிங் (Tej Singh) என்பவர் பஞ்சாயத்துக்களின் பிரதிநிதிகள் அல்லது ஐவர் குழுக்கள் மூலமாக நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றினார். வலிமையான ஆட்சியினால் கட்டுப்பாட்டில் வைக்கப்படாத கால்சா படை அடக்க முடியாததாகவும், மூர்க்கத்தனமாகவும் வளர்ந்து நாட்டின் சர்வாதிகாரியாக மாறியது.

3. கால்சா படையின் போக்கைக் கண்டு ஐயங்கொண்ட கவர்னர் ஜெனரல் ஹார்டிஞ்ச் பிரபு சில பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார். சட்லஜ் நதியை நோக்கி ஆங்கிலப் படை வீரர்களை அனுப்பினார். 1844, 1845 ஆகிய ஆண்டுகளில் சட்லஜ் நதியில் பாலம் கட்டும் குறிக்கோளுடன் பம்பாயில் படகுகள் கட்டப்பட ஆரம்பித்தனர். மூல்தானை தாக்கும் நோக்கத்துடன் சிந்து மாகாணத்தில் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் இருந்த படைவீரர்களுக்கு ஆயுதங்கள் அளிக்கப்பட்டன. வடமேற்கு மாவட்டங் களில் இருந்த கோட்டைகள் பலப்படுத்தப்பட்டன. இதனைக் கண்ட சீக்கியப்படையினர் ஆத்திரம் அடைந்தனர். தங்கள் நாட்டின் சுதந்திரத்தைக் காக்க போரிட்டே ஆகவேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர்.

4. ஹார்டிஞ்ச் பிரபுவும் சீக்கியர்களுக்குள் இருந்த கலகத்தையும் தலைவர்களுக்குள் இருந்த மனக்கசப்பையும் பயன்படுத்தி பஞ்சா ஆங்கிலேயரின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரவேண்டும் என்ற உளகத்துடனேயே செயல்பட்டார். திட்டமிட்டு நடவடிக்கைகளை கொண்டார்.

5. அதே நேரம் கால்சாபடையினரின் ஆதிக்கத்தையும் அட்டுழியங்களையும் ஒடுக்க நினைத்த ராணி ஜிண்டான் சீக்கியரின் ஆவேசம் ஆங்கிலேயர்களுக்கெதிராக தூண்டிவிட்டாள். ஆங்கிலேயர் பஞ்சாபை கைப்பற்ற முயற்சிக்கிறார்கள் என்ற வதந்தியைப் பரப்பினார். ஏனெனில் ஆங்கிலேயருடன் ஏற்படும் போரில் கால்சாபடை முழுவதும் அழிக்கப் எட்டுவிடலாம் அல்லது அதன் சக்தி அளிக்கப்படும் என்று நினைத்து செயல்பட்டார். தேஜ்சிங், லால்சிங் ஆகியோரின் தலைமையில் சீக்கியப் படை 1845 டிசம்பர் 11ல் சட்லஜ் நதியைக் கடந்தது. போர் ஆரம்பமானது.

**போரின்போக்கு:**

எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் சட்லஜ் நதியைக் கடந்தது சீக்கியப் படை. 1845 டிசம்பர் 13ல் ஹார்டிஞ்ச் பிரபு போர் பிரகடனம் செய்தார். சீக்கியப்படையுடன் பெரோஸ்பூருக்கு இருபது மைல் தென்கிழக்கே இருந்த முட்கி (Mudki) என்ற இடத்தில் ஆங்கிலப்படை சந்தித்தது. கடுமையாக

நடைபெற்ற போரில் ஆங்கிலத்தளபதி ஹியுஹு.்.ப் (Hugh Gough) என்பவர் வெற்றியடைந்தார். இந்த வெற்றிக்குப் பிறகு 1845 டிசம்பர் 31ல் பெரேஸஷ (Feroze Shah) என்ற இடத்தில் நடந்த போதிலும் ஆங்கிலேயர்களே வெற்றியடைந்தனர். ஆனால் நடைபெற்ற இந்த இரண்டு போர்களி லும் இரண்டு பக்கங்களிலுமே அதிக ஆள்சேதம் ஏற்பட்டது. சீக்கியர்களுக்குள் காணப்பட்ட ஒற்றுமையின்மையால்தான் ஆங்கிலேயர் வெற்றியடைந்தனர்.

இதன்பிறகு நடந்த அலிவால் (Aliwal) போரிலும், சப்ரான் (Sabraon) போரிலும் சீக்கியப்படை தோற்கடிக்கப்பட்டது. சப்ரானில் ஆங்கிலேயர் வெற்றி மிக முடிவுள்ளதாக இருந்தது. 1846 பிப்ரவரி 20ல் லாகூர் கைப்பற்றப்பட்டது. இவ்வாறு முதல் ஆங்கில-சீக்கியப் போர் ஆங்கிலேயர்களுக்குச் சாதகமாக முடிவடைந்தது. இப்போர் லாகூர் உடன்படிக்கைப்படி முடிவடைந்தது.

**லாகூர் உடன்படிக்கை : 1806**

இந்த உடன்படிக்கைப்படி,

a) சட்லஜ் நதிக்கு இடப்பக்கத்தில் இருக்கும் பிரதேசங்களையும், சட்லஜ் நதிக்கும், பியாஸ் நதிக்கும் இடையிலுள்ள ஜலந்தர் தோ ஆப் (Jallandur Doab) என்ற பகுதியையும் சீக்கியர்கள் ஆங்கிலேயர்களுக்கு விட்டுக்கொடுக்க வேண்டும்.

b) சீக்கியப் படையின் அளவு குறைக்கப்பட்டது. 215 பட்டாலியன் களையுடைய காலாட்படை 12,000 வீரர்களைக்கொண்ட குதிரைப்படை , 36 பீரங்கிகள் ஆகியவைகளை மட்டுமே சீக்கியப்படை கொண்டிருக்க வேண்டும் .

C) ஐரோப்பியர்கள், அமெரிக்கர் யாரையும் ஆகிலேயரின் அனுமதியின்றி வேலையில் வைத்துக்கொள்ளக்கூடாது. ஆங்கிலேயரின் அனுமதியின்றி நாட்டின் எல்லைகளை மாற்றக்கூடாது.

d) ஆங்கிலேயர்களுக்கு போர் இழப்பீட்டுத் தொகையாக ஒன்றரைக் கோடி ரூபாய் சீக்கிய அரசு கொடுக்க வேண்டும். ஒரளவுக்கு பணமும் , பியாஸ் சிந்து நதிகளுக்கிடையே உள்ள காஷ்மீர், ஹஜார் உட்பட்ட எல்லா எல்லை மாவட்டங்களை ஆங்கிலேயர்களுக்க கொடுக்கலாம் .

e) சிறுவனான தலிப்சிங் மகாராஜாவாகவும் , ஜிண்டான் ராணியை அரசரின் பாதுகாவலராகவும், லாசிங் என்பவரை முதலமைச்சராகவும் ஆங்கிலேயர் ஒப்புக் கொண்டனர். லாகூர் அரசாங்க உள்நாட்டு விவகாரங் களில் ஆங்கில அரசு தலையிடாது.

f) லாகூரில் ஆங்கிலப்படை ஒன்று மகாராஜாவின் பாதுகாப்பிற்காக வைக்கப்படவேண்டும். லாகூரில் ஆங்கிலத் தூதுவர் ஒருவர் நியமிக்கப்படவேண்டும். ஆங்கிலத்தூதரின் உத்தரவுக்கு இணங்கிச் செயல்படக் கூடிய சீக்கிய சர்தார்கள் எட்டு பேர் கொண்ட பிரதி நிதி குழு ஒன்று அமைக்கப்பட்டது. ஆனால் ஆட்சி அதிகாரம் ஆங்கிலப்பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட ஹென்றி லாரன்ஸ் என்பவரிடமே இருந்தது. இதனால் பஞ்சாபின் உண்மையான ஆட்சி ஆங்கிலேயருக்கே மாறியது என்று கூறலாம்.

**இரண்டாவது ஆங்கில சீக்கியப் போர் (1848-49)**

**காரணங்கள்:**

குறிப்புகள்

1) முதல் ஆங்கில சீக்கியப் போரின் இறுதியில் ஹார்டிஞ்ச் பிரபு சீக்கியர்களுடன் செய்து கொண்ட ஏற்பாடுகள் நீடித்து நிலைப்பதற்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது. சீக்கிய மக்களின் தேசிய உணர்ச்சி அழிக்கப்படவில்லை. சீக்கிய வீரர்கள் தங்கள் தோல்வியும் அவமானமும் தங்கள் தலைவர்களின் துரோகத்தினால்தான் ஏற்பட்டது என்று திட்டவட்டமாக நம்பினர். எனவே பஞ்சாபில் ஆங்கிலேயர் ஆதிக்கம் ஏற்ட்டதை வெறுத்தனர். ஆங்கிலேயர்களுக்கு எதிராக கலகம் செய்யத்தக்க சந்தர்ப்பத்தை எதிர் நோக்கியிருந்தனர்.

2) ஆங்கிலேயருக்கெதிரான சதியில் ஈடுபட்டாள் என்பதற்காக அரசரின் தாயாரான ஜிண்டான்ராணியை லாகாலி தாயாரான ஜண்டானராணியை லாகூரிலிருந்து ஆங்கிலேயா வெளியேற்றினர். இது சீக்கிய மக்களின் அதிர்ப்தியை அதிகப்படுத்தியது தேசிய எழுச்சி என்ற உருவில் மக்கள் உணர்ச்சி பீறிட்டு எழும் நிலை ஏற்பட்டது.

3) அதிர்ப்தியடைந்த சீக்கியத்தலைவர்கள் ஆங்கிலேயருக்கெதிரான நடவடிக்கையில் இறங்க சந்தர்ப்பம் வந்தது. மூல்தான் நகரத்தின் கவர்னரான மூல்ராஜ் (Diwan Mulraj) என்பவர் கடுமையான நிதி நெருக் கடியால் துன்புற்றார் . ஆங்கிலேயரின் நெருக்கடியின் விளைவாக அவர் தனது பதவியை ராஜினாமா செய்தார். எனவே வரிவசூல் கணக்கை சரிபார்க்க வந்த வான்ஸ் அக்னியூ, ஆண்டர்சன் (Vans Agnew, Anderson) என்ற இரண்டு ஆங்கிலேயர்களை மூல்தானில் கொலை செய்தார் மூல் ராஜ். அத்துடன் மூல்தானில் ஆங்கிலேயருக்கெதிரான ஒரு கிளர்ச்சியையும் ஏற்படுத்தினார். ஆனால் இந்த கலகத்தை உடனடியாக அடக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை கவர்னர் ஜெனரல் டல்ஹௌசி. இந்த காலதாமதத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஷெர்சிங் என்பவரின் தலைமையின்கீழ் சீக்கியர்கள் ஆங்கிலேயருக்கு எதிராக மூல்தானுடன் சேர்ந்து கொண்டனர். இவ்விதம் மூல்தானில் ஏற்பட்ட கலகம் சீக்கிரத்திலேயே சீக்கியர்களின் சுதந்திரப் போராட்டமாக மாறியது. பேஷாவரை ஆப்கானியர்களுக்குக் கொடுப்பதாகக் கூறி அவர்களையும் சீக்கியர்கள் தங்களுடன் சேர்த்துக் கொண்டார்கள். இதனால் இரண்டாம் ஆங்கில சீக்கிய போர் ஆரம்பமானது.

**போரின் போக்கு:**

சில்லியன் வாலா (Chillian walla) என்ற இடத்தில் உறுதியான அரண் அமைத்து சீக்கியர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொண்டார்கள். அந்த இடத்தில் 1849 ஜனவரி 13ல் ஒரு கடுமையான போர் நடைபெற்றது. எல்லா ஆயுதங்களையும் கொண்ட சீக்கியர்கள் மிக்க வீரத்துடன் போரிட்டு ஏராளமான ஆங்கிலேயர்களைக் கொன்றனர். உறுதியான வீரத்துடன் போரிட்டாலும் ஆற்றலுடைய தலைமை இல்லாததால் கடைசியில் தோல்வியடைந்தனர். மூல்தான் ஆங்கிலேயர் வசம் வீழ்ந்தது. மூல்ராஜ் ராணுவ நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டு இறக்கும் வரை சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு நாடுகடத்தப்பட்டார்.

ஹ.்.ப் பிரபுவின் தலைமையில் போரிட்ட ஆங்கிலப்படைகளுக்கும் அதிகமான இழப்பு ஏற்பட்டது. சிலியன்வாலா வெற்றிக்குப்பின்னர் 1849-பிப்ரவரி 21ல் சீனாப் நதிக்கு அருகிலுள்ள குஜரத்து என்ற நகருக்கு வந்த சீக்கியப் படைகளையும் ஆப்கானியர்களையும் தோற்கடித்தார். இந்த குஜரத்து போரிலும் ஆற்றல் இல்லாத தலைமை இல்லாததால் தான் சீக்கியர்கள் தோல்வியடைந்தனர். இதன் விளைவாக மார்ச் 12ல் ஷெர்சிங்

சாட்டர்சிங் உட்பட எல்லா சீக்கியத் தலைவர்களும் வீரர் ஆங்கிலேயர்களிடம் சரணடைந்தனர். ஆப்கானியர்கள் கைபர் கணவாய்,

காபூல் வரையிலும் சர்வால்டர்கில்பர்ட் (Sir walter Gilbert) என்ற தளபதியால் விரட்டியடிக்கப்பட்டார்கள். இவ்வாறு சீக்கியர்கள் தோல்யடைந்தனர். பஞ்சாப் ஆங்கில அரசுடன் இணைத்துக் கொள்ளப்பட்டது.

**போரின் விளைவுகள்:**

1) 1849 மார்ச் 30ல் டல்ஹௌசிபிரபு வெளியிட்ட ஒரு பிரகடதின்படி பஞ்சாப் ஆங்கில அரசுடன் இணைக்கப்பட்டது. அதன் அரசர் தலிப்சிங்கிற்கு ஆண்டுக்கு ஐந்துலட்சம் ரூபாய் ஓய்வூதியமாகக் கொடுக்கப்பட்டது. மேலும் அவர் தனது தாயான ஜிண்டான் ராணியுடன் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டார்.

2) பஞ்சாபில் ஆட்சியைச் சீர்திருத்தம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சர்ஹென்றி லாரன்சைத் தலைவராகவும், ஜாண் லாரன்ஸ், சார்லஸ் மேன்சன் ஆகியோரை உறுப்பினர்களாகவம் கொண்டு ஒரு குழுவினால் ஆட்சி செய்யப்பட்டது. இந்தக்குழு ராணுவம், காவல்துறை , நீதி, நிலவரி , தொழில் வேளாண்மை முதலிய துறைகளில் பல சீர்திருத்தங்களைச் செய்தது.

3) 1853 - ல் இக்குழு கலைக்கப்பட்டு ஜான்லாரன்ஸ் என்பவர் பஞ்சாபுக்கு முதல் தலைமை ஆணையராக நியமிக்கப்பட்டார். இவர் பஞ்சாபில் பல சீர்திருத்தங்களை மேற்கொண்டார். ஒழுங்கான நிர்வாகத்தின் மூலம் பஞ்சாபில் அமைதியையும், வளத்தையும் ஏற்படுத்தினார். இதனால் சீக்கியர்கள் ஆங்கிலப் பேரரசுக்கு உறுதுணையாக நின்று நட்புடன் நடந்து கொண்டனர். இரண்டாம் ஆங்கிலப் பர்மியப் போரின் போதும் இந்தியப் பெரும் புரட்சியின் போதும் ஆங்கிலேயர்களுக்கு விசுவாசமாக நடந்து கொண்டனர்.

4) பஞ்சாப் ஆங்கிலேய ஆட்சிக்குள் கொண்டுவரப்பட்டதால் வடமேற்கில் ஆங்கில பேரரசின் எல்லை இந்தியாவின் இயற்கை எல்லையாகிய இமயமலைப் பிரதேசத்தை எட்டியது.

இவ்வாறு இரண்டு சீக்கியப் போர்களின் விளைவாக பஞ்சாப் முழுவதும் ஆங்கிலேயர் ஆட்சியின்கீழ் கொண்டுவரப்பட்டது.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

16. இரஞ்சித்சிங்கிற்குப் பின் பதவி ஏற்ற அவரது மகன் பெயர் என்ன?
17. முதலாம் சீக்கியப் போரின் போது கவர்னர் ஜெனரலாக இருந்தவர் யார்?
18. முதல் சீக்கியப்போர் எந்த உடன்படிக்கைப்படி முடிவடைந்தது?
19. இரண்டாம் சீக்கியப் போரின் முக்கியமான போர்களம் எது?
20. பஞ்சாப்பில் முதல் தலைமை ஆணையராக நியமிக்கப்பட்டவர் யார்?

## 6.5 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

31. வாட்கன் உடன்படிக்கை
32. வெல்லஸ்லி
33. எல்பின்ஸ்டன்
34. அமர்ஸ்ட் பிரபு
35. 1852

36. கரக்சிங்
37. ஹார்டிஞ்ச் பிரபு
38. லாகூர் உடன்படிக்கை
39. சிலியன் வாலா
40. ஜான் லாரன்ஸ்

## 6.6 சுருக்கவுரை

- 1761-ல் நடைபெற்ற மூன்றாம் பானிபட் போரில் மராட்டியர்கள் தோற்கடிக்கப்பட்டாலும் அவர்களது ஆற்றலும் ஆதிக்கமும் அழியவே யில்லை.
- 1798-ல் கவர்னர் ஜெனரலாகப் பொறுப்பேற்ற வெல்லஸ்லி கம்பனியின் நிலைமையைப் பாதுகாப்பதற்காக துணைப் படைத்திட்டத்தைப் பின்பற்றி வலுவற்ற இந்திய அரசுகளை கம்பனியின் கட்டுப்பாட்டில் வைக்க நடவடிக்கைகளை மேற்கொண்டார்.
- முதல் ஆங்கில சீக்கியப் போரின் இறுதியில் ஹார்டிஞ்ச் பிரபு சீக்கியர்களுடன் செய்து கொண்ட ஏற்பாடுகள் நீடித்து நிலைப்பதற்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது.
- 1849 மார்ச் 30ல் டல்ஹௌசிபிரபு வெளியிட்ட ஒரு பிரகடதின்படி பஞ்சாப் ஆங்கில அரசுடன் இணைக்கப்பட்டது. அதன் அரசர் தலிப்சிங்கிற்கு ஆண்டுக்கு ஐந்துலட்சம் ரூபாய் ஓய்வூதியமாகக் கொடுக்கப்பட்டது.

## 6.7 முக்கிய கருத்துப்படிமங்கள்

- மனுக்கள்: இது ஒரு முறையான எழுதப்பட்ட கோரிக்கையை குறிக்கிறது. பொதுவாக ஒரு கையொப்பமிட்ட பல மக்கள் ஒரு குறிப்பிட்ட காரணம் தொடர்பாக அதிகாரத்துக்கு முறையிடுகின்றனர்.
- பாதுகாப்பு-அடைப்பான்: இந்த சுழலில், அதிருப்தியுள்ள தனிநபர்கள் மற்ற உறுப்புகளுக்கு தங்கள் எதிர்ப்பைச் செயல்படுத்துவதற்கு அனுமதிக்கும் அமைப்புகளை இது குறைக்கிறது, எனெனில் அது நீராவி விட்டு விடுவது போல் இருந்தது.

## 6.8 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள

### குறு விடை வினாக்கள்

6. புனா உடன்படிக்கை பற்றி எழுதுக.
7. மராட்டியர்களின் தோல்விக்கான காரணங்களை எழுதுக.
8. லாகூர் உடன்படிக்கை பற்றி சுருக்கமாக எழுதுக.

### நெடு விடை வினாக்கள்

9. மராட்டிய போருக்கான காரணங்கள் மற்றும் விளைவுகளைப் பற்றி விளக்குக
10. சீக்கிய போருக்கான காரணங்கள் மற்றும் அதன் விளைவுகள் பற்றி விளக்கமாக தருக.

## 6.9 மேலும் படிக்க

சந்திரா, பிபின், 2009. நவீன இந்தியாவின் வரலாறு. ஹைத்தராபாத், ஓரியண்ட் பிளாக்வான்ஸ்.

டியூப்-பானர்ஜி, இஷிதா. நவீன இந்தியாவின் வரலாறு. கேம்பிரிட்ஜ், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக அச்சகம்

தாரிக், முகம்மது. 2007. நவீன இந்திய வரலாறு. புது தில்லி: டாடா மெக்ரா-ஹில் கல்வி.

பண்டியோபதியா, ெ'கரா. 2004. பிளாசி முதல் பார்ட்டி வரை: நவீன இந்திய வரலாறு. ஹைதராபாத்: ஓரியண்ட் பிளாக்வான்ஸ்.
சென், S.N. 2006. நவீன இந்திய வரலாறு. புது தில்லி: நியூ ஏஜ் இண்டர்நேஷனல்.

## அலகு – 7 ஆங்கில ஆப்கானிய போர்கள் மற்றும் 1857 ஆம் ஆண்டு பெருங்கிளர்ச்சி

7.0 அறிமுகம்

7.1 நோக்கங்கள்

7.2 ஆங்கில ஆப்கானிய போர்கள்

7.3 இந்தியப் பெருங் கிளர்ச்சி, 1857

7.4 புரட்சிகாண காரணங்களும் விளைவுகளுவும்

7.5 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

7.6 சுருக்கவுரை

7.7 முக்கிய வார்த்தைகள்

7.8 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்

7.9 மேலும் படிக்க

## 7.0 அறிமுகம்

19ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் நிகழ்ந்த தென்னிந்தியக் கிளர்ச்சியும் (1800-1801), வேலூர்க் கிளர்ச்சியும் (1806) ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான பெரிய போராட்டங்களாகும். அதன்பின் 1856 வரை இந்தியாவின் பல பகுதிகளிலும் ஆங்கிலேய ஆதிக்கத்துக்கு எதிராகக் குட்டிக் கிளர்ச்சிகள் நடைபெற்றன. ஆங்கிலக் கம்பெனி இக்கிளர்ச்சிகளையெல்லாம் தனது ராணுவ வலிமையால் எளிதில் அடக்கிவிட்டது. எனினும், ஆங்கிலேயரின் ஆதிக்கமும், அடக்குமுறையும், ஆக்கிரமிப்புக் கொள்கையும் இந்திய அரசர்களிடையேயும், பிராந்தியத் தலைவர்களிடேயேயும், மக்களிடையேயும் மனக்கசப்பை ஏற்படுத்தின. இம்மனக்கசப்பே வட இந்தியாவில் 1857 ஆம் ஆண்டு பெருங் கிளர்ச்சியாக (Great Rebellion) உருவெடுத்தது. இக்கிளர்ச்சி "கடைசியானதாகவும், மிகக்கடுமையானதாகவும் இருந்தது. இக்கலகம் ஆங்கிலப் பேரரசு என்னும் பிரமாண்டமான கட்டடத்தின் அடிப்பாகத்தையே ஆட்டிவிட்டது". 1857 பெருங்கிளர்ச்சி இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றின் முக்கிய திருப்புமுனையாகும்.

## 7.1 நோக்கங்கள்

இந்த அலகை நீங்கள் படித்து முடித்த பின்பு உங்களால்,

- ஆங்கில-ஆப்கானிய போர்கள் பற்றி விரிவாக விளக்க முடியும்
- 1857 ஆம் ஆண்டு பெருங்கிளர்ச்சி பற்றி விளக்க முடியும்
- பெருங்கிளர்ச்சியின் காரணங்களை பற்றியும் அதன் விளைவுகளை பற்றியும் விளக்க முடியும்.

## 7.2 ஆங்கில - ஆப்கானிய போர்கள்

1843-ல் சிந்து ஆங்கிலேயர் ஆட்சியில் இணைக்கப்பட்டது. 1849-ல் பஞ்சாபும் இணைக்கப்பட்ட பின் ஆங்கில இந்தியப் பேரரசின் வடமேற்கு எல்லை மேலும் விரிவாகியது. ஆனால் எல்லைப் புறங்கள் சரியாக வரையறுக்கப் படாமலேயே இருந்தன. எல்லைப்புறங்களுக்கு அருகில் ஆப்கானிஸ்தான் அமைத்திருந்தமையால் அது பல தாக்குதல்களுக்கு உள்ளளாயிற்று. சர் ஜான் ஷோர், வெல்வெஸ்லி ஆகியோர் காலத்தில் ஜாமன் ஷா தோற்கடிக்கப்பட்டுக் குருடாக்கப்பட்ட லூதியானாவில் வணிகக் குழுவில் கைதியாக இருந்தார். அத்தோடு ஆப்கானியர் பயம் நீங்கியது.

19ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நெப்போலியனின் படையெடுப்பும் பின்னர் மத்திய ஆசியாவில் பெருகி வந்த ரஷ்யாவின் வலிமையுமே ஆங்கிலேயர்களின் வடமேற்கு எல்லைப்புற உறவுகளை நிர்ணயித்து வந்தன. ஒரு இடைப்பட்ட நாடாக ஆப்கானிஸ்தானத்தை வைத்திருக்க விரும்பியதால் இந்தியத் தலைமை ஆளுநர்கள் ஆப்கானிஸ்தானத்துடன் நட்புறவு நிலையையே தொடர்ந்தனர். பாரசீகம் ரஷ்யா ஆதிக்கத்தின் கீழ் வந்தது. இதனால் இந்தியாவில் ரஷ்ய படையெடுப்பு ஏற்பட்டு விடுமோ என்று இங்கிலாந்து அஞ்சியது. ரஷ்யா இந்தியா மீது படையெடுக்காமல் தடுக்க வேண்டும் என்ற நோக்கமே ஆங்கிலேய ஆப்கானிய உறவு முறைகளைத் தீர்மானித்தது. ஆங்கிலேயர்களுக்கு இக்கொள்கையால் எந்தவித லாபமும் கிட்டவில்லை.

**ஆங்கிலேயர் - ஆப்கானிய முதல் போர் (1839 - 42)**
**போருக்கான காரணங்கள்**
**ஆப்கானிய பேரரசின் இயல்பு:**

அகமதுஷா அப்தாலி துரானியால் துவங்கப்பட்ட ஆப்கானியப் பேரரசு நாளடைவில் திறமையிழந்தது. அப்தாலியின் திறமையற்ற மகன் தைமூர்ஷா(1773-1793) ஆட்சி புரிந்தார். அவருக்குப்பின் வந்த ஜாமன்ஷா (1793-1800) ஓரளவு திறமை உடையவராக விளங்கினார். அவர் ஆட்சியின் போது ஆப்கானிஸ்தான் பலம் பொருந்திய நாடக விளங்கியது. இந்தியாவின் மீது படையெடுத்து வெற்றி காண வேண்டும் என்று பெரும் முயற்சிகள் எடுத்துக் கொண்டார். ஆனால் பாரசீகப் படைகளால் தோற்கடிக்கப்பட்டு குருடாக்கப்பட்டார். இறுதியில் பஞ்சாபிலுள்ள லூதியானாவிற்கு ஓடிவந்து ஆங்கிலேயரிடம் உதவித் தொகை பெற்று வாழ்ந்து இறந்தார். பின்னர் அரியணை ஏறிய மாமூத்ஷா (1800-1803) ஷாஷஜா (1803-1809) முதலானவர்கள் திறமை குறைவானவர்கள்.தாங்கள் நினைத்தது போல ஆளத்தலைப்பட்ட உயர் குடியினரின் எடுப்பார் கைப்பிள்ளைகளாக விளங்கினர். நாட்டில் சட்டமும் ஒழுங்கும் கெட்டன. சதிகளும் பூசலும் பொறாமையுடன் ஓங்கி நின்றன.

1809-ல் 'ா'ஜாவுடன் ஓர் ஒப்பந்தத்தை எல்பின்ஸ்டன் மேற்கொண்டார். உடன்பாடு கண்டு பெ'ாவருக்குத் திரும்பும் முன்னர் இவரது சகோதரர் முகாது'ா ஆட்சியைக் கைப்பற்றினார். ஓர் உள்நாட்டுப் போர் ஏற்பட்டது. நீண்ட போருக்குப் பிறகு ஆட்சிக்குவந்த பரக்'ாயிகளில் தோஸ்து முகம்மது திறமைமிக்கவர் ஆவார்.

**தோஸ்து முகம்மது (1836 - 1863):**

1836 ல் ஆக்லண்ட் தலைமை ஆளுநராகப் பதவியேற்றார். தோஸ்து முகம்மது ஆங்கிலேயருடன் நட்புறவு கொள்ள வேண்டி ஆக்லண்டைப் பாராட்டிக் கடிதம் எழுதினார். சீக்கியருக்கு எதிராகத் தோஸ்து முகம்மது பெ'ாவரை மீட்க உதவும்படி அதில் எழுதியிருந்தார். ஆங்கிலேய அரசு நடுநிலைக் கொள்கையை அப்போது கடைப்பிடித்து வந்தது. எனவே ஆக்லண்டு பிரபு உள்நாட்டு அரசுகளின் விவகாரங்களில் தலையிடுவதாக இல்லை என்று கூறிவிட்டார் எனினும் இவ்விரு நாடுகளிடையே உள்ள பிரச்சனைகளைத் தீர்க்க அலெக்சாண்டர் பர்னஸ் தலைமையில் நல்லெண்ணக் குழுவை அனுப்பினார்.

**நல்லெண்ணக்குழு:**

1837 ல் ஆக்லண்டு, அலெக்சாண்டர் பர்னஸ் என்பவரை காபூலுக்கு அனுப்பினார். தோஸ்து முகம்மது ஆங்கிலேயருடைய கருத்துகளை இரண்டு நிபந்தனைகளின் பேரில் ஏற்றுக் கொண்டார்.

ஒன்று ரஞ்சித்சிங் ஆப்கானியரிடமிருந்து கைப்பற்றிய பெ'ாவரை ஆங்கிலேயா தமக்கு மீட்டுத் தர வேண்டும்.

இரண்டாவது, ஹீரத்தை முற்றுகையிட்டுள்ள பாரசீகரை விரட்ட ஆங்கிலேயர் உதவி புரிய வேண்டும். இவ்விரு வேண்டுகோளும் ஆங்கிலேயருக்கு ஏற்புடையதாக இல்லை ரஞ்சித்சிங்கை பகைத்துக் கொள்வதும் பாரசீகத்தைப் பகைத்துக் கொள்வதும் தீங்கானவை என்பதனால் இங்வேண்டுகோள்களை ஆக்லண்ட் புறக்கணித்தார். விக்டேவிட் ரஷ்ய தூதுக்குழுவின் தலைலர் ஆப்கானிஸ்தானம் வந்து தோஸ்த் முகம்மது உடன் ஓர் உடன் படிக்கையைச் செய்து கொண்டார். இதனைக் கண்ட ஆங்கிலேயர் ரஷ்ய அபாயத்திற்கு அஞ்சினர்

**ரஷ்யப் படையெடுப்பு பற்றி அச்சம்:**

ஆப்கானியரும் ரஷ்யரும் இணைந்த செயல் இந்தியாவிற்கு ஆபத்து என்று ஆங்கிலேயருக்குப் புரிந்தது. பாரசீகர்கள் ஹிரத்தை பிடித்து

விட்டால், அங்கிருந்து டெல்லியை அடைவது மிக எளிது என்பதும் விளங்கியது. பாரசீகத்திலிருந்து ஆங்கிலத் தூதுவர் காஸ்பியன் கடலோரமாக ரஷ்யப்படைகள் நகர்வதையும், ஆப்கானிஸ்தானத்தில் ஆங்கிலேயர் தலையிடுவதற்கான வேளை வந்து விட்டது என்றும் எழுதி இருந்தார். அப்போது, இயக்குநர்களின் குழு ஆபத்தை உணர்ந்து விழித்துக் கொண்டது.

**பாரசீகம் ஹீரத்தை முற்றுகையிடும்:**

பாரசீகம் இரஷ்யா ர்களின் தூண்டுதலின் பேரில் ஹீரத்தை முற்றுகையிட்டது. பாரசீகம் ஹீரத்தைக் கைப்பற்றியதும், ஆப்கானிஸ்தானத்தைக் கைப்பற்ற வேண்டும் என்று தங்களது நெடுநாளையக் கனவை நனவாக்க முயல்வர் என ஆங்கிலேயர் கருதினர்.

**முக்கூட்டு உடன்படிக்கை:**

ஆக்லண்ட் 1838ல் மக்நாட்டன் என்னும் தமது அரசாங்கச் செயலாளரை லாகூருக்கு அனுப்பி ரஞ்சித்சிங், ஷா ஆகியோருடன் முக்கூட்டு உடன்படிக்கை ஒன்றினை செய்தார். இதன்படி ஆக்லண்ட் பிரபுவும் ரஞ்சித்சிங்கும் சேர்ந்து ஆப்கானிய அரியணையில் ஷாவை அமர்த்தி தோஸ்து முகம்மதுவை அப்புறப்படுத்த வேண்டும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஷா, ஆங்கிலேயருக்கு ஒவ்வொரு ஆண்டும் இரண்டு இலட்சம் ரூபாய்கள் தருவதாகவும், ஆப்கானிய அயல்நாட்டுக் கொள்கையினை ரஞ்சித்சிங்கையும், ஆங்கிலேயரையும் கலந்தாலோசித்தே முடிவு காணவேண்டும் என்று ஒப்புக் கொண்டார். மேலும் ஷா, சிந்து நதியின் வலது கரையில் உள்ள பகுதிகளின் மீதும் சிந்து மாநிலத்தின் அமீர்களின் மீதான தனது உரிமைகளை விட்டுக் கொடுப்பதாகவும் ஒப்புக் கொண்டார். 1838ல் ஆக்லண்டு சிம்லாவில் ஓர் அறிவிக்கையினைவெளியிட்டார். இதில் தோஸ்த் முகமது பல அநீதிகளைச் செய்வதாயும் ஷாவிற்குத் தாம் உதவ வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துக் கூறினார்.

**பாரசீகம், ரஷ்யா பின்வாங்கல்:**

பாரசீக வளைகுடாவிற்கு அனுப்பப்பட்ட ஆங்கிலப் படைகளைக் கண்டு அச்சம் கொண்ட பாரசீக மன்னர் ஹீரத் முற்றுகையைக் கைவிட்டார். இங்கிலாந்து ஐரோப்பிய அரசியலில் ஏற்பட்ட பீடிகைகளைக் கண்டு ரஷ்யாவும் தமது முகவர்களை ஆப்கானிஸ்தானத்திலிருந்து திரும்ப அழைத்துக் கொண்ட து. இவ்வாறு இந்தியாவைப் பயமுறுத்திய ரஷ்யா பாரசீக படையெடுப்பு தவிர்க்கப்பட்டது.

**போரின் தொடக்கம்:**

ஆப்கானிஸ்தானத்தின் மீது படையெடுப்பது முறையல்ல என்று வெல்லிங்டன் முதலானவர்கள் எடுத்துக்கூறியும் ஆக்லண்ட் அதற்கு செவிசாய்க்கா து ஆப்கானியப் போரை தொடங்கினார்.

ஆங்கிலேயப் படைகள் ஷாவுடன் ஆப்கானிஸ்தானினுள் நுழைந்து 1839ல் காந்தாரம், கஜினி, காபூல் ஆகியவற்றைக் கைப்பற்றின. 1840ல் தோஸ்த் முகமது கைது செய்யப்பட்டு கல்கத்தாவிற்கு அனுப்பப்பட்டார். ஆனால் ஆப்கானிஸ்தானத்தில் தேசியப் புரட்சி தோன்றியது 1841ல் பர்னஸ், மக்நாட்டன் ஆகியோர் கொலை செய்யப்பட்டனர். ஷாவின் ஆட்சியை ஆப்கானியர் வெறுத்தனர். தோஸ்த் முகமதுவால் திறமையாக அடக்கியாளப்பட்டு வந்த மலை இனத்தவர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். ஆங்கிலப்படை இக்கலகக்காரர்களை அடக்குவதற்கு எந்தவித ந நடவடிக்கையும் எடுக்காமல் தமக்குள்ளேயே பிளவுபட்டு நின்றது.

கட்டுக்கடங்காமல் கலகம் விரைவிலேயே தேசிய அளவிலான புரட்சியாக மாறியது. வேறு வழியின்றி தளபதி எல்பின்ஸ்டன் புரட்சியாளர்களின் தலைவரான தோஸ்து முகமதுவின் மகள் அக்பர் கானுடன் காபூல் உடன்படிக்கையினைச் செய்து கொண்டார்.

**காபூல் உடன்படிக்கை:**

1) ஆங்கிலேயப் படைகள் காபூலில் இருந்து உடனடியாக வெளியேறவேண்டும்

2) தோஸ்த் முகமது காபூலின் அமீராக வேண்டும்.

3) "ஜா ஓய்வு ஊதியம் பெற்றுக் காபூலில் தங்கலாம் அல்லது ஆங்கிலப் படையுடன் வெளியேறலாம்.

இந்தவுடன்படிக்கைப்படி உடனே ஆங்கிலேயர் வெளியேறி இருந்தால் இழப்பு அதிகம் ஏற்பட்டிருக்காது. ஆனால் அக்பர்கானுக்கு எதிராக சிவாலி கிசில்பாரீ ஆகியோருடன் சேர்ந்து சதி செய்தால் தளபதிகள் மக்நாட்டன் திரெவோர் கொலை செய்யப்பட்டனர். தளபதிகள் லாரன்சும் மெக்கன்ஸியும் கைதாயினர். ஆங்கிலேயப் படையினர் தம் துப்பாக்கிகள் பீரங்கிகள் முதலான போர் கருவிகள் எல்லாவற்றையும் எதிரிகளிடம் ஒப்படைத்துவிட்டு 1824-ல் இந்தியாவிற்கு புறப்பட்டனர். திரும்பும் வழியில் எண்ணிறந்த வீரர்கள் பனியிலும் உணவின்றியும், இயற்கை இடையூறுகளினாலும் உயிர் துறந்தனர். மீதமிருந்தோர் கைதிகளாயினர். டாக்டர் பிரைடன் ஒருவர் மட்டுமே உயிர் தப்பினார். அவர் ஒருவரே ஜலாலாபாத்திற்குத் தப்பி இச்சோக கதையைக் கூறினார். முடிவில் காந்தாரம் தளபதி நாடு என்பவரிடம், ஜலாலாபாத் தளபதி ராபர்ட் என்பவரிடமும், ஆப்கானிஸ்தானம் அக்பர்கானிடமும் இருந்தன.

**ஆங்கிலேயரின் தோல்விக்கான காரணங்கள்:**

1) ஆப்கானியர்களின் எதிர்ப்புகளுக்கிடையே ஆட்சிப் பொறுப்பில் 'ா"ஜாவை வைத்திருப்பதென்பது மிகவும் கடினமான ஒன்றாக இருந்தது. 2) ஆப்கானிஸ்தானின் இயற்கையமைப்பும் ஒரு காரணமாகும். 3) தோஸ்து முகமதின் வி'யத்தில் ஆக்லண்ட் அநீதி இழைத்தார். 4) போர் முடிந்தபின் ஆங்கிலப் படைகளை காபூலில் தக்க பாதுகாப்பு இல்லாமல் தங்கச் செய்திருக்கக்கூடாது. அல்லது ஏற்ற தளபதிகளை அமர்த்தி இருக்கவேண்டும். 5) மலைச்சாதியினரின் உதவித் தொகையைநிறுத்தியது பெரும் குற்றம். 6) தளபதி எல்பின் படைகளின் கோழைத் தனமும் ஒரு காரணம். 7) சாதாரண கிளர்ச்சியை தேசிய அளவில் வளரவிட்டு விட்டமையாலும் முதல் ஆப்கானியப்போர் ஆங்கிலேயருக்கு பெரும் தோல்வியாக முடிந்தது.

'ா"ஜாவும் 1842-ல் கொலை செய்யப்பட்டார். ஆக்லண்ட் பதவி துறந்தபின் 1842 பிப்ரவரி திங்களில் எல்லன்பரோ பதவியேற்றார். ஆங்கிலேயரின் கௌரவத்தை மீண்டும் நிலைநாட்ட எண்ணி எல்லன்பரோ ஆங்கிலேயப் படையை ஆப்கானிஸ்தானத்திற்கு அனுப்பிக் காபூலைக் கைப்பற்றினார். காபூலின் பெரும்பகுதி கொளுத்தப்பட்டது. இதன்பின் ஆங்கிலேயப் படைகள் இந்தியா திரும்பின.

எல்லன்பரோ ஆங்கிலேயருடன் நட்புறவு கொள்ளும் எந்தவித அரசையும் ஆப்கானிஸ்தானில் தாம் ஒப்புக் கொள்வதாக அறிவித்தார். காபூல் மக்களின் விருப்பம் போல் தோஸ்த் முகமது ஆப்கானிஸ்தானின் அமீராக்கப்பட்டார். இவர் 1868 வரை ஆட்சி செலுத்தினார்.

இவ்வாறாக முதல் ஆப்கானியப் போர் மடமை முன்னறிவின்மை பிடிவாதம் இவற்றின் கவலையாக இருந்தது

**ஆங்கிலேயர் - ஆப்கானியர் இரண்டாம் போர் (1879)**

இங்கிலாந்து முடியாட்சியின் கீழ் இந்தியா 1858 ல் வந்ததும் அதுவரையில் இந்தியாவில் ஆதிக்கம் செலுத்திய வணிகக் குழுவின் ஆட்சி முடிவற்கு வந்தது. முடியாட்சியின் கீழ் வந்ததும் பெரிதும் தலையிடாக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்த இங்கிலாந்து அரசு 1879 ஆம் ஆண்டு ஆப்கானியர்களுடன் போர் செய்ய நேரிட்டது. இப்போர் இரண்டாவது போராகும்.

**சர் ஜான் லாரன்ஸ்:**

சர் ஜான் லாரன்ஸ் ஆப்கானியரை பகைத்துக் கொள்ளாமல் கூடியவரை நெருங்கிய நண்பர்களாகவே ஏற்றுக் கொண்டால் இந்தியாவில் பாதுகாப்புப் பலமடையும் என்று கருதினார். அவர் பின்பற்றிய கொள்கை"திறமையான செயலின்மை கொள்கை என்பதாகும்.

திறமையான செயலின்மைக் கொள்கை என்பது தற்சார்ந்த தனக்கே உரித்தான கட்டுப்பாடுகளுடன், வலிந்து சென்று தாக்காது தற்காத்துக் கொண்டு எதிரியை எப்பொழுதேனும் தாக்க வேண்டிய நிலை ஏற்படுமாயின் எப்படி மிகப் பலமாக தாக்க முடியும் என்று பொறுத்திருந்து எதிர்பார்ப்பது என்று சுமித் கூறியுள்ளார்.

முதன்மைக் கூறுகள்

1. ஆப்கானிஸ்தானின் மேற்கு எல்லைகளுக்கு அப்பால் படையெடுத்தல் கூடாது.
2. ஆப்கானிஸ்தானத்துடன் நேச உடன்படிக்கை வைத்துக் கொள்ளுதல் இவ்வுடன்படிக்கை பாதுகாப்பு மற்றும் ஆக்கிரமிப்பு வகையில் இருத்தல் கூடாது.
3. மத்திய ஆசியாவில் ரஷ்யா ர்கள் பல இடங்களைப் பிடித்துக் கொண்டாலும் அந்த நிலையிலும் ர்'யர்களின் இந்திய படையெடுப்பு என்பது பிரெஞ்சுக்கார்களின் இங்கிலாந்து படையெடுப்பு போன்றது.

இந்திய வடக்கு எல்லைகள் பற்றி இங்கிலாந்துப் ர்'யாவுடன் நட்பு முறையில் பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டும் .

ருஷ்யர்கள் இந்தியாவைத் தாக்கினால் ஆப்கானிஸ்தானத்தில் அவர்களைச் சந்திப்பதில்லை . மாறாக ஆப்கானியர்களுக்கு ர்'யர்களை எதிர்க்க பொருள்கள், தளவாடங்கள் தந்து உதவுதல் ஞ எக்காரணத்திற்காகவும் இராணுவத்தை அனுப்பு வதில்லை .

ர்'யப்பபடையெடுப்பு என்று வந்துவிட்டாலும் இந்திய எல்லைக் குள்ளேயே அவற்றைச் சந்திக்கவேண்டும்.

**வாரன்ஸ் பிரபுவும் ஷெர் அலியும் (1883-79):**

1863 - ல் தோஸ்த் முகமது இறந்தார் . தனக்குப்பின் தமது 16 புதல்வர்களில் ெர் அலிதான் அமீராக வேண்டுமென தோஸ்த்முகமது கருதினார். எனினும் அவர் இறந்தபின் வாரிசுரிமைப்போர் தொடங்கியது . லாரன்ஸ் பிரபுவை உதவிட ெர் அலி வேண்டினார். ஆனால் லாரன்ஸ் ெர் அலியை ஆப்கானிஸ்தானத்தின் அமீராக ஏற்றுக் கொண்ட போதிலும் அப்கானிஸ்தானத்தின் உள் நாட்டுப் பிரச்சினைகளில் தலையிட விரும்பவில்லை. உள் நாட்டுப்போர் முடிந்து ெர் அலியே வெற்றியுடன் அமீரானார். இவரைப் பாராட்டி லாரன்ஸ் உதவிகள் பல செய்தாலும் ஆப்கானிய நாட்டு உள்விவகாரங்களில் தலையிடவில்லை . அப்ஸல்கான, அஸிம்கான் ஆகிய இருவர் அமீராக விரும்பி லாரன்ஸின் உதவியை நாடினர் . எனினும் தமது கொள்கைக்கு மாறாக அவர்களுக்கு உதவ மறுத்துவிட்டார்.

1868ல் முதலில் பதவியிழந்த ஷெர் அலி மீண்டும் அமீரானார். லாரன்ஸ் முன்னிலும் அதிகமாக அமீரை ஆதரித்து துப்பாக்கிகள், வெடி

மருந்துகள் மேலும் 6 இலட்சம் ரூபாய் இவற்றை வழங்கினார் . எனினும் ஆப்கானிஸ்தானத்துடன் பாதுகாப்பு அல்லது ஆக்கிரமிப்புக் கொள்கையைப் பின்பற்றவில்லை .

**மேயோவும ஷெர் அலியும் (1665-72):**

லாரன்சிற்கு பின் வந்த மேயோ திறமையான செயலின்மை கொள்கையையே பின்பற்றினார். 1869 - மார்ச் திங்களில் மேயோவும் ெ'ர் அலியும் அம்பாலாவில் சந்தித்து ஆங்கில-ஆப்கானிய உறவை வலுடுத்திக் கொண்டார். ஷெர் அலி ஆங்கிலேயருடன் உறுதியான ஓர் அம்பாலா வலுப்படுத்திக் கெ உடன்படிக்கையை செய்து கொள்ள முயன்றார் அரசியல் தந்திரியான மேயோ இதற்கு உடன்படவில்லை.

**நார்த் புருக்கும் ஷெர் அலியும் (1873-76):**

1803-ல் துருக்கிஸ்தானில், தங்கள் ஆட்சியை ஏற்படுத்திய ர'யர்கள் ஆப்கானிஸ்தானை நோக்கி நெருங்கியதைக் கண்டு மிரண்ட ெ'ர் அலி தலைமை ஆளுநராயிருந்த நார்த் புரூக்கிடம் நட்புக் கொள்ளவும் உதவி பெறவும் முயன்றார். நார்த் புரூக் இதற்கு உடன்படவில்லை. 1874 மார்ச் திங்களில் இங்கிலாந்தின் முதலமைச்சர் டிஸ்ரேலி ஆப்கானிஸ்தானத்தில் ஓர் ஆங்கிலப் படையை வைக்குமாறு நார்த் புரூக்கை வற்புறுத்தவே இதை விரும்பாத நார்த்புரூக் தமது பதவியைத் துறந்து இங்கிலாந்து சென்றார்.

லிட்டன் பிரபுவும் (1876- 80) புதிய கொள்கையும்:

பெஞ்சமின் டிஸ்ரேலியின் காலத்தில் தலையிடாக் கொள்கை மாற்றப்பட்டு ஏகாதிபத்தியக் கொள்கை பின்பற்றப்பட்டது. லிட்டன், லாரன்ஸின் கொள்கையை மாற்றி ஆப்கானிஸ்தானத்துடன் இந்தியா கொண்டிருந்த தொடர்பு முறைகளில் முன்னேற்றக் கொள்கையைப் பின்பற்றினார்.

இதற்குக் காரணம் ஐரோப்பாவின் வடக்கிலும் கிழக்கிலும் ர'யாவின் விரிவாக்கத்தைத் தடுப்பதே ஆகும்.

இரண்டாம் ஆப்கானியப் போருக்கான காரணங்கள்:

1. இங்கிலாந்தின் டிஸ்ரேலி அரசினால், அரசப் பிரதிநிதி லிட்டன் முன்னேற்றக் கொள்கையைப் பின்பற்றும்படியும், உறுதியான உடன்படிக்கையை ஆப்கானிஸ்தானத்துடன் முடிக்கும்படியும் திட்டவட்டமாக அறிவுறுத்தப்பட்டார்.
2. ஷெர் அலியை ஆப்கானிஸ்தான் முழுமைக்கும் மன்னராகவும் அவரது இளைய மகன் அப்துல்லா ஜான் என்பவரை யாகூப் கானுக்குப் பதில் அரசராக்கவும் தமக்குப் பின் தமது வாரிசே ஆப்கானிய அரசிற்கு வாரிசாக இருக்கவும் தமக்கும் தம் சந்ததிக்கும் ஒரு குறிப்பிட்ட நிலையான ஆண்டு உதவித் தொகை கொடுக்க வேண்டும் என்று ஷெர் அலி முன்னைய அரசப் பிரதிநிதிகளைக் கேட்டு வந்தார். இவை யாவற்றையும் ஏற்பதாகவும், பதிலாக ஷெர் அலி காபூலில் ஆங்கில தல அதிகாரி ஒருவரை அனுமதிக்க வேண்டும் என்றும் வற்புறுத்தினர்.
3. ரஷ்யாவிற்கும் இங்கிலாந்திற்கும் இடையே வளர்ந்து வந்த பகையின் காரணமாக இவ்விரு நாடுகளும் தத்தம் தூதுக் குழுக்களை ஷெர் அலியிடம் அனுப்பித் தமது கொள்கைகளை நிறைவேற்றி கொள்ள முற்பட்டன.
4. தம் மகன் அப்துல்கான் மரணமடைந்ததால் சோகத்தில் மூழ்கி இருந்த ெ'ர் அலி, லிட்டன் அனுப்பிய தூதுக்குழுவைத் திருப்பி அனுப்பினார். மேலும் 1873 - ல் சிம்லா மாநாட்டில் தாம் தெரிவிக்க வேண்டியவற்றைத் தெரிவித்துவிட்டதாகவும் ஆங்கிலத் தூதுக்குழுவை ஏற்றுக் கொண்டால், அதே மாதிரியான ர'யத் தூதுக்குழுவையும் ஏற்க வேண்டிவரும் என்று கூறிவிட்டார்.

5. லிட்டன் இதை இங்கிலாந்திற்கு ஏற்பட்ட அவமரியாதையாக எண்ணி ஆப்கானிஸ்தானத்துடனான உறவுகளை முறியடிக்க முடிவெடுத்தார்.
6. பேஷாவரில் ஆங்கிலத் தூதுக்குழுவின் தலைவரும் ெ'ர் அலியின் அமைச்சரும் கலந்தாலோசித்து இப்பிரச்சினை குறித்துத் தீர்வு காண எடுத்துக்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை.
7. நட்பு உடன்படிக்கைக்கான பேச்சு வார்த்தைகள் தொடங்கும் முன்னரே அடுத்து நிகழவிருந்த போருக்கான ஆயத்தங்களைச் செய்தார். பலுசிஸ்தானில் கேலட்டின் கானுடன் ஆங்கிலேயர் உடன் படிக்கையைச் செய்து கொண்டு 1876ல் குவெட்டாவைக் கைப் பற்றினார். காஷ்மீர் அரசருடன் இரகசிய உடன்படிக்கை செய்து கொண்டு ஆங்கிலேயர் புறக்காவல் தளம் ஒன்றை அமைத்தனர்.
8. 1876-78ல் ஐரோப்பாவில் நடைபெற்ற போரின் இறுதியில் ர'யா சான்ஸ்டிபனோ உடன்படிக்கை மூலம் கடும் நிபந்தனைகளைத் துருக்கியின் மீது சுமத்தியது. இது சர்வதேச அளவில் ர'யாவிற்கும் பிரிட்டனுக்குமிடையே இருந்த தொடர்பு முறைகளில் முறிவை ஏற்படுத்தியது. மற்ற ஐரோப்பிய நாடுகளுடனும் போர் ஏற்பட்டுவிடும் என்ற நிலையில் ர'யா, சான் ஸ்டிபனோ உடன்படிக்கையின் நிபந்தனைகளை வல்லரசு நாடுகளின் பெர்லின் மாநாட்டில் (1878) சமர்ப்பிப்பதாக ஒப்புக் கொண்டது.
9. பன்னாட்டு அரங்கில் தனக்கு ஏற்பட்ட நிலைக்கு இங்கிலாந்தைப் பழிவாங்கும் பொருட்டு ஆப்கானிஸ்தானத்திற்கு ர'யா ஒரு தூதுக்குழுவை அனுப்பி வைத்தது. இக்குழு ஆப்கானியர் மறுத்தும் கேளாமல் 1878 ஜூலைத் திங்களில் காபூலினுள் புகுந்தது. தூதுக் குழுவை அனுமதிக்காவிடில், தாஸ்கண்டில் தஞ்சம் புகுந்திருக்க ெ'ர் அலியின் உறவினர் அப்துல் ரஹ்மானுக்கு ெ'ர் அலியை எதிர்த்து உதவி செய்யப் போவதாக அறிவித்தது . ஆனால் பெர்லின் மாநாட்டில் இங்கிலாந்தின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவே ர'யா இவ்வாறு செய்தது. அம்மாநாடு முடிந்ததும் தனது தூதுக்குழுவைத் திரும்ப அழைத்துக் கொண்டது.
10. போரில் ஈடுபடக் காத்துக் கொண்டிருந்த லிட்டன் ர'யாவுக்கு எதிராக சர் நெவில் சேம்பர்லேனுடைய தலைமையில் காபூல் தூதுக்குழுவையும், அதற்கு முன்னதாக ஒரு காவல் படை அனுப்பினார்.

அலிமஸ்ஜிட்டில் இப்படை ஆப்கானிய அதிகாரி ஒருவரால் தடுத்து நிறுத்தப்பட்டது. எனவே காவற்படையும் தூதுக்குழுவும் பின் வாங்கி பெ'ாவரை அடைந்தன. லிட்டன் பிரபு கொதிப்படைந்தார். தான் காபூலுக்குள் நுழையவிடாமல் தடுத்ததற்கு மன்னிப்புக் கேட்கவேண்டும் காபூலில் நிலையாக ஆங்கிலத்தூதுக்குழு ஒன்றை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தி ெ'ர் அலிக்கு இறுதி எச்சரிக்கை ஒன்றை அனுப்பினார். குறிப்பிட்ட காலவரையறைக்குள் ெ'ர் அலி தம் பதிலை அனுப்பாததால் 1878 ல் லிட்டன் ஆப்கானிஸ்தானத்தின் மீது படையெடுத்தார்.

**போர் (1878):**

ஆப்கானிஸ்தானத்தின் மீது லிட்டன் ஒரு முக்கோணத்தாக்குதலை மேற்கொண்டார். போலன், கைபர், குர்ரம் ஆகிய கணவாய்களின் வழியாக ஆங்கிலப் படைகள் புகுந்தன. கடுமையான எதிர்த்தாக்குதல்கள் இல்லாததால் காபூலுக்கும் காந்தருக்கும் இடையிலுள்ள இடங்களை ஆங்கிலேயர் கைப்பற்றினர். ெ'ர் அலி காபூலிலிருந்து ஓடிவிட்டார். 1879-ல் ர'யாவின் துருக்கிஸ்தானத்தில் இறந்தார்.

**கண்டமக் உடன்படிக்கை:**

ஆங்கிலேயருக்கும் ஷெர் அலியின் மகன் யாகூப்கானுக்கும்

இடையே 1879ல் உடன்படிக்கையொன்று கையெழுத்தாயிற்று. a) அது கண்டமக் உடன்படிக்கை எனப்படுகிறது. உடன்படிக்கையின்படி போர் முடிவுற்றது. b) காபூலில் ஓர் ஆங்கில தல அலுவலரை ஏற்றுக் கொள்ளவும் வெளியுறவுக் கொள்கையில் ஆங்கிலேயருக்கு கட்டுப்பட்டு நடக்கவும் புதிய அமீர் ஒப்புக்கொண்டார். c) குர்ரம் முதலான முக்கியமான கணவாய்கள் ஆங்கிலேயருக்குத் தரப்பட்டன. d) ஆங்கிலேயர் வருடம் தோறும் 6 இலட்சம் ரூபாய் உதவித் தொகை தருவதாகவும் ஆபத்திலிருந்து ஆப்கானிஸ்தானத்தைக் காப்பதாகவும் ஒப்புக் கொண்டனர். ஆனால் விரைவில் கண்டமக் உடன்படிக்கை வெறும் தற்காலிகப் போர் நிறுத்தமாக மாறியது. காபூலிலிருந்த ஆங்கில தல அதிகாரி சார் லூயி கானவக்னரி 1879ல் கொல்லப்பட்டார். விரைவில் பகைமை வெளித்தோன்றின. ஆங்கிலேயர் ஆப்கானிஸ்தானத்துள் புகுந்து 1879ல் சராசியாபில் கிளர்ச்சியை அடக்கிக் காபூலைக் கைப்பற்றினர். யாகூப்கான் கைது செய்யப்பட்டு இந்தியாவிற்கு அனுப்பப்பட்டார். டேராடூனில் இவர்1883ல் இறந்தார்.

ஆப்கானிஸ்தான் முழுவதும் ஆங்கிலேயருக்கு எதிராக எழுந்து. இதன் விளைவாக முதல் ஆப்கானியப்போரின் துயரநிலை மீண்டும் தோன்றியது. 1880 - ல் லிட்டன் திரும்ப அழைத்துக் கொள்ளப்பட்டார். இரண்டாம் ஆப்கானியப் போரைப் பொறுத்தவரை ஆங்கிலேயர் வெற்றியடைந்தாலும் அரசியல் தந்திரத்தை பொறுத்தவரை தோல்வியே அடைந்தனர்.

மூன்றாம் ஆப்கானியப் போர் (1919-1929):

**ரிப்பனும் ஆப்கானியப் பிரச்சனையும்:**

ரிப்பன் பிற நாட்டவருடன் நட்புறவு கொள்வதில்லை என்னும் நிபந்தையின் பேரில் அப்துல் ரஹ்மானை அமீராக ஏற்றுக் கொண்டார். 1881ல் காந்தாரைக் கைப்பற்றி அப்துல் ரஹ்மானிற்குக்கொடுத்தார . ஹீரட் பகுதியை ஆண்டு வந்த ෆ்ர் அலியின் மகன் அயூப்கான், அப்துல் ரஹ்மானை வீழ்த்தப் பல முயற்சிகள் செய்து வந்தார். செப்டம்பர் 1881-ல் ஆங்கிலேயர் அவரைத் தோற்கடித்து ஹீரட்டையும் அப்துல்ரஹ்மானுக்கு கொடுத்தனர். தோற்ற அயூப்கான் பராசீகம் புகுந்து தஞ்சமடைந்தார். 1883-ல் ரிப்பன் அப்துல்ரஹ்மானுக்குக் கொடுக்க வேண்டிய உதவித்தொகையை இரட்டிப்பாக்கி ரூ. 2 இலட்சமாகக் கொடுத்து வந்தார். ஆங்கிலேயரின் நட்பால் அப்துல் ரஹ்மான் காபூல், காந்தகார், ஹீரட் நாடுகளுக்கு அரசராகி ஆப்கானிஸ்தானின் ஒரே அமீராகப் போற்றப்பட்டார்.

**ரிப்பனும் ஆப்கானிஸ்தானமும்:**

பெர்லின் உடன்படிக்கைக்குப் பிறகு ர'யர்கள் ஜெர்மனியுடன் இரகசிய உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொண்டனர். இங்கிலாந்து சூடானில் ஈடுபட்டிருந்தபோது 1884 - ல் ஆப்கானிய எல்லையிலிருந்து 150 மைல்களே உள்ள மெர்வ் என்ற இடத்தை ஏற்கெனவே மேற்கொண்ட ஒப்பந்தத்தை மீறிக் கைப்பற்றினார். இப்பகுதியின் எல்லைகள் சரியாக வரையறுக்கப்படாததால் ஒரு குழு நியமிக்கப்பட்டு இங்கிலாந்தின் தரப்பிலும் ர'யாவின் தரப்பிலும் இக்குழுவிற்கு உறுப்பினர்கள் அனுப்பப்பட்டனர் எனினும் ர'யா சிறிது சிறிதாக நிலப்பகுதிகளைக் கைப்பற்றி வந்தது.

**பாஞ்ச்டே நிகழ்ச்சி 1885:**

1885-ல் பாஞ்ச்டே என்ற பாலைவனச் சோலையை ர'யத் தளபதி கைப்பற்றினார். உடனே எல்லைக்குழு பின்வாங்கியது. ஆங்கிலேய

படைகளைத் தயார் நிலையில் வைத்துவிட்டு ட.ஃப்ரின் அமீரைச் சந்தித்து பாஞ்ச்டேயைக் கைவிடும் படியும் அதற்குப் பதில் சுல்பிகாரை அவருக்குக் கொடுத்து ரஷ்யாவிடம் அவர் கொண்டிருந்த நட்பை முறித்தார். இதன் பின் ஏற்பட்ட உடன்படிக்கையால் பேரரசு பணிப்படையாக் ஆப்கானிய எல்லைகள் வரையறுக்கப்பட்டன.

லாண்ட்ஸ்டவுன் தலைமையாளுநரானதும் ஆங்கிலேயரின் எகதிபத்தியம் கொள்கையைக் கையாளத் தொடங்கினார். ஆப்கானில் தானத்திற்கும் சிந்திற்க்கும் இடைப்பட்ட பகுதியில் வாழ்ந்து வந்த பழங்குடி மக்கள் பட்டாணியர், வாசிகர்கள், ஆப்டிகள் ஆகியவர்கள் ஆங்கிலேய எல்லைக்குள் புகுந்து கொள்ளைகாளை நடத்தி வந்தனர். இரண்டாம் ஆப்கானியப் போருக்குப் பிறகு ஆங்கிலேயர் இதற்கு ஒரு முடிக்கு காண முற்பட்டனர். 1893ல் லாண்ட்ஸ்டவுன் காலத்தில் சர் மார்டிமர் துராண்டு இவ்வெல்லைத்தாவாவனை ஆராய்ந்து முடிவெடுக்க அனுப்பப்பட்டார். இந்தப் பகுதிகளில் பெரும்பான்மையான இடங்களை ஆங்கிலேயப் பதவிகளுடன் இணைத்து துராண்டு உடன்படிக்கை 1893ல் கையெழுத்தாகியது. இதன்படி அமீரின் உதவித்தொகை 18 இலட்சமாகியது இதன்படி ஆக்கிலேய ஆப்கானிய உறவு நல்ல முறையில் இருந்தது.

துராண்டு உடன்பாட்டின் மூலம் சிட்ரல் என்னும் சிறிய நாடு ஆங்கிலேயர் வசம் வந்தது. எல்ஜின்பிரபு காலத்தில் அங்கு பெரும் கலகம் ஒன்று தோன்றியது. இப்பெரும் கலகத்தின் பொழுது அப்துல் ரஹ்மான் ஆங்கிலேயருடன் நட்புறவு கொண்டிருந்தார். 1901 ல் அப்துல் ரஹ்மான் இறந்தார். இவருக்குப்பின் ஹபிபுல்லா அமீரானார்.

**போரின் தோற்றம்**

அப்துல் ரஹ்மான் உயிருடன் இருந்தவரை எல்லை புற பகுதி மக்களின் முரட்டுப்போக்கை கட்டுபாட்டிற்குள் வைத்திருந்தார். 1901ல் ஹபிபுல்லா ஆட்சிக்கு வந்ததும் கருத்து வேறுபாடுகளும், பூசல்களும் ஏற்படலாயின சிறுசிறு உரிமைகளை அமீருக்கு வழங்கி ஆங்கிலேயர் பூசல்களைத் தீர்த்து வந்தனர்.

1919ல் ஹபிபுல்லா கொல்லப்பட்டார் இவரது மூன்றாவது மகன் அமானுள்ளா (1919-29) 1919ல் ஆட்சிக்கு வந்தார் ஆங்கிலேயருடன் நட்பு முறையான தொடர்புகளையே விரும்பிய இவரை சிலர் தூண்டி விட்டபடியாள் 1919ல் பகை மூண்டது. ஆங்கிலேய தமது புதுமையான போர் கருவிகளைக் கொண்டு ஆப்கானிஸ்தானை தாக்கினர். காபூல், ஜலாலாபாத் இவற்றின் மீது குண்டுகள் வீசப்பட்டன. அமானுல்லா போர் நிறுத்தத்தை வேண்டிணார் ராவல் பிண்டி உடன்படிக்கையின் மூலம் போர் நிறுத்தப்பட்டது.

இவ்டைன்படிக்கையின்படி ய) இந்திய அரசு அமிருக்கு வழங்கி வந்த உதவிதொகை நிறுத்தப்பட்டது. டி) இந்தியா மூலமாகப் போர் கருவிகள் இறக்குமதி செய்தல் மேற்கொள்ளப்பட்டது. ஊ) ஆப்கானிஸ்தானத்தின் இறைமை ஏற்றுக் கொள்ளப்பட்டது. ன) 1922ல் இருநாடுகளும் தூதுவர்களை நியமித்தன. இதன்பின் இருநாடுகளுக்கிடையேயும் நட்புறவு நிலவியது.

அமானுல்லாவின் முற்போக்கான கொள்கையை மக்கள் விரும்ப வில்லை எனவே 1929 ல் இவர் பதவியை துறந்தார். உடனே உள்நாட்டுப் போர் தொடங்கியது அரசப்பிரதிநிதி இர்வின் ஆப்கானியப் பிரச்சனையில் தலையிடவில்லை. ஹபிபுல்லா என்னும் கொள்ளையர்களின் தலைவன் அட்சியைக் கைப்பற்றினான். நாதிர்கான் என்ற அமனுல்லாவின் உறவினர்

அவனைத் தோற்கடித்து விரட்டித் தாமே அமீரானார். நாதிர்கான் இந்தியாவுடன் நல்லுறவு கொண்டிருந்தார். 1933ல் இவரும் கொலை செய்யப்பட்டார். ஸாகீர்'ா ஆட்சிக்கு வந்தார். இவருக்குப்பின் இவரது உறவினர் ஜெனரல் முகமது தாண்ட் 1973ல் பதவிக்கு வந்தார். இவர் ஆப்கானிஸ்தானை ஒரு குடியரசு என்று அறிவித்தார்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

1. எந்த ஆண்டு சிந்து ஆங்கிலேயர் ஆட்சியில் இணைக்கப்பட்டது?
2. யாரால் ஆப்கானிய பேரரசு துவங்கப்பட்டது?
3. பாரசீக படைகளால் தோற்கடிக்கப்பட்டு குருடக்கப்பட்ட ஆப்கானிய மன்னர் யார்?
4. எந்த ஆண்டு ஆக்லண்ட் தலைமை ஆளுநராக பதவியேற்றார்?
5. 1837ல் ஆக்லண்டு யாரை காபூலுக்கு அனுப்பினார்?

## 7.3 இந்தியப் பெருங் கிளர்ச்சி, 1857

### கிளர்ச்சிக்கான காரணங்கள்

### அரசியல் காரணங்கள்

1857 பெருங் கிளர்ச்சிக்கான காரணங்களைக் கண்டறிய வரலாற்று ஆய்வாளர்கள் மாபெரும் முயற்சிகளை மேற்கொண்டனர். இம்முயற்சிகள் ஆய்வாளர்களைத் திக்குமுக்காடச் செய்துவிட்டன. எனினும் இக் கிளர்ச்சிக்கான காரணங்களை வகைப்படுத்துவது கடினமல்ல. இப்பெருங் கிளர்ச்சிக்கான அரசியல் காரணங்களில் முதன்மையானது தலைமை ஆளுநர் டல்ஹௌசி பின்பற்றிய பிரிட்டிஷ் ஏகாதிபத்திய விரிவாக்கக் கொள்கையேயாகும். குறிப்பாக, அவரது இணைப்புக் கொள்கை (Policy of Annexations) யாலும், நாடிழக்கும் அல்லது அவகாசியிலிக் கொள்கை (Doctrine of Lapse) யாலும் பெரும் பாதிப்புக்குள்ளான பிராந்திய மன்னர்களும், அவர்களது ஆட்சியின் கீழிருந்த மக்களும் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். சுருங்கக்கூறின், டல்ஹௌசி பின்பற்றிய பழிபாவங்களுக்கு அஞ்சா ஏகாதிபத்தியக் கொள்கையே இக்கிளர்ச்சிக்கான அடிப்படைக் காரணமாகும். டல்ஹௌசியின் கொள்கை பரம்பரையாக ஆட்சி செய்து வந்த இந்து அரசர்கள், முகலாய மன்னர்கள் ஆகியோரின் மனதில் சந்தேகத்தையும் அமைதியின்மையையும் ஏற்படுத்தி கிளர்ச்சி செய்யக் காரணமாக இருந்தது.

### முகலாயப் பேரரசர் அவமதிக்கப்படல்

அக்பரின் வழிவந்த இரண்டாம் பகதூர் ஷா (1837-1857) பெயரளவுக்கு முகலாயப் பேரரசராக இருந்த போதிலும் பொதுமக்களால், குறிப்பாக முஸ்லீம்களால், பெரிதும் மதிக்கப்பட்டார். அவருக்கு வயதாகிவிட்டது என்ற காரணத்தைக்காட்டி ஆங்கிலேய அரசு அவரது வாரிசாக பக்ருதீனை நியமித்தது முகலாயப் பேரரசுகளையும், பொதுமக்களையும் பேரதிர்ச்சிக்குள்ளாக்கியது. அதுமட்டுமல்ல. பதவி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் முகலாயப் பேரரசர் பல்வேறு தன்மானக் குறைவான நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டார்.

### அந்நிய ஆட்சி

இந்திய மக்கள் அந்நிய ஆட்சிக்குப் பழக்கப் பட்டிருந்த போதிலும் ஆங்கிலேயருக்கு முன் ஆட்சி செய்தோர் அனைவரும் இந்தியாவை வெற்றி கொண்டு, இந்தியாவில் நிலையாகத் தங்கி, இந்தியரோடு இணைந்து வாழ்ந்தார்கள். ஆனால் ஆங்கிலேயர் வர்த்தகர்களாக இந்தியாவுக்கு வந்து,

ஆட்சியாளர்களாகி, இங்கிலாந்தின் வளர்ச்சிக்காக இந்தியாவைச் சுரண்டி தாமரை இலைத் தண்ணீராக ஒட்டியும் ஒட்டாமலும் வாழ்ந்தனர். லண்டனைத் தலைமைப் பீடமாகக் கொண்டு இந்தியாவை ஆட்சி செய்தார். ஆங்கிலேயர் இந்தியாவில் இறுதி வரை அந்நியர்களாகவே இருந்தனர். இந்த அந்நிய ஆட்சி பெருங்கிளர்ச்சிக்கு ஒரு முக்கிய அரசியல் காரணமாகும்.

**ஆருடச் செய்தி**

அரசியல் காரணங்களுக்காக வெறுப்புற்றிருந்த ஆட்சியாளர்களும், மக்களும், சிப்பாய்களும் ஆங்கிலேய ஆதிக்க எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்கான தக்க தருணத்தை எதிர்பார்த்திருந்தனர். வாய்ப்புகள் ஏற்பட்ட போதெல்லாம் குட்டிக் கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர். எனவே, பிளாசிப் போருக்குப் பின் (1757) நூற்றாண்டு கால முடிவில் (1857) ஆங்கிலேயரது ஆட்சி வீழ்ச்சி அடையும் என்ற ஆருடச் செய்தி கிளர்ச்சியாளர்களிடையே புதிய நம்பிக்கையையும், புத்துணர்ச்சியையும் கொடுத்தது. அவர்கள் பெருங்கிளர்ச்சியில் உற்சாகத்துடன் பங்கேற்றனர்.

## 7.4 புரட்சிக்கான காரணங்களும் விளைவுகளும்

**பொருளாதாரக் காரணங்கள்:**

**வேலையின்மை**

அரசியல் காரணங்களைவிடப் பொருளாதாரக் காரணங்கள் அரசர்கள் மற்றும் மக்களின் வாழ்வாதாரங்களைப் பெரிதும் பாதித்தன. கம்பெனியின் பொருளாதாரக் கொள்கைகளும், திட்டங்களும், நடவடிக்கைகளும் மக்களிடையே வேலையின்மையை என்றுமில்லாத அளவுக்கு அதிகரித்து விட்டது. ஆங்கிலேயர் பின்பற்றிய ஒருதலைப் பட்சமான தடையற்ற வாணிபக் கொள்கையால் கிராமக் குடிசைத் தொழில்கள் நசிந்தன. அதன் விளைவாகப் பல்லாயிரக்கணக்கானோர் வேலை இழந்தனர். அதேபோன்று கம்பெனியின் விவசாயக் கொள்கையால் நிலச் சொந்தக்காரர்கள் நிலமற்ற ஏழைகளாயினர். இணைக்கப்பட்ட நாடுகளின் படைகள் கலைக்கப்பட்டதால் வேலையிழந்த படைவீரர்களும் வேலையில்லாதோர் பட்டாளத்தில் சேர்ந்தனர் ! வேலையற்றோர் அனைவரும் கிளர்ச்சியில் கலந்து கொண்டனர். வேலையின்மைக் கொடுமையின் விளைவாக ஆங்கிலேயரிடம் பல ஆண்டுகளாக விசுவாசமாக இருந்தோரும் ஆங்கிலேயர்களுக்கு எதிரான சதியில் ஈடுபட வைத்தன.

**நிலவரித் திட்டம்**

கம்பெனி பின்பற்றிய நிலையான நில வருவாய்த் திட்டம் மக்களுக்கு சொல்லொணாத் துன்பங்களைத் தந்த தற்காலிய சுயநலத் திட்டமாகத் தரம் தாழ்ந்து விட்டது. நிலத்தின் மதிப்பு ஒருதலைப் பட்சமாகத் தீர்மானிக்கப்பட்டதாலும், நிலத்தீர்வை கடுமையாக நிர்ணயிக்கப்படமையாலும், நிலவரி கொடுமையாக வசூலிக்கப்பட்டதாலும் விவசாயிகள் விரக்தியடைந்தனர். விளைச்சலுக்கும் நிலவரித் தீர்வைக்கும் தொடர்பில்லாமல் இருந்தது. விவசாயிகளின் துயர் துடைப்பு நடவடிக்கைகள் அவர்களின் துன்பத்தை அதிகரிக்கவே செய்தன. பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் நிலவரி செலுத்த முடியாமல் நிலைகுலைந்து போயினர். நிலமதிப்பீடு, நிலத்தீர்வை, நிலவரி வசூல் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டோர் பெருங்கிளர்ச்சியில் பங்கேற்றனர்.

**சுமக்க முடியா வரிச்சுமை .**

பொதுமக்கள் வரிச்சுமையால் அவதியுற்றனர். ஆங்கிலேயர் இந்தியாவில் மேற்கொண்ட போர்களுக்கான செலவு முழுவதையும் இந்திய

அரசர்களும், மக்களுமே ஏற்கவேண்டியதாயிருந்தது கம்பெனியின் நிர்வாகச் செலவும் அவர்கள் மீதே சுமத்தப்பட்டது. அதுமட்டுமல்ல. இந்தியாவில் வசூலிக்கப்பட்ட வரித்தொகையில் 10ழு இங்கிலாந்தில் செலவிடப்பட்டது! ஆங்கிலேயரின் நில ஆதிக்கக் கொள்கை அரசாங்கத்தின் பணப்பளுவை அதிகரித்தது. அந்த பளுவையும் மக்களுக்கே மாற்றப்பட்டது. சுருங்கக்கூறின் வேலையில்லாத் திண்டாட்டம், சுரண்டல் நில வருவாய்த் திட்டம், பொறுக்க முடியாத வரிச்சுமை ஆகியவை பெருங்கிளர்ச்சிக்கான பொருளாதாரக் காரணங்களாகும்.

**நிர்வாகக் காரணங்கள்**

**நிர்வாக இடைவெளி**

ஆங்கிலேயரது ஆட்சிக்காலத்தில் நிர்வாகிகளுக்கும் மக்களுக்குமிடையே நீண்ட இடைவெளி இருந்தது. அவர்கள் தங்களது இனப் பெருமையாலும், உயர்வு மனப்பான்மையாலும், நடை உடை பழக்க வழக்கங்களாலும் மக்களிடமிருந்து முற்றிலும் மாறுபட்டிருந்தனர். பொதுமக்கள் நிர்வாகிகளை எளிதில் நெருங்க முடியாத நிலை இருந்தது. அதன் காரணமாக ஆங்கில நிர்வாகிகளால் மக்களின் வாழ்வாதாரப் பிரச்சனைகளும் புரிந்து கொள்ள முடியவில்லை. நிலப்பரிவர்த்தனைகளில் அதிகாரிகளின் குறுக்கீடுகள் ஆத்திரமூட்டக்கூடிய அளவுக்கு அதிகமாக இருந்தன. அவர்கள் ஆங்கிலேயரது நலனைப் பற்றிக் கவலைப்பட்டார்களேயன்றி மக்கள் குறைகளைக் கண்டறிந்து போக்குவது பற்றி அக்கறை காட்டவில்லை. மக்கள் நிர்வாகிகளை நம்பவில்லை. ஆங்கிலேயரது நிர்வாகம் ஒருவழிப் பாதையாக இருந்தமையால் நிர்வாகிகளும் மக்களுக்கும் இடையேயான தூரம் இணைக்க முடியாத அளவுக்கு அதிகமாக இருந்தது. இந்த நிர்வாக இடைவெளியால் ஏற்பட்ட அவநம்பிக்கை கிளர்ச்சிக்கு உரமாயிற்று. அதுமட்டுமல்ல. ஆங்கிலேயர் மக்கள் குறைதீர்ப்பு முறை எதையும் உருவாக்கவில்லை. சுருங்கக்கூறின், ஆங்கிலேயரின் இனச் செருக்கு , நிர்வாகத்துக்கும் மக்களுக்குமிடையே இருந்த இடைவெளி, மக்களின் குறைதீர்க்கும் அமைப்பின்மை ஆகியவை 1857 கிளர்ச்சிக்கு வழி வகுத்தன.

**நிதியற்ற நிர்வாகம்**

ஆங்கிலேயரது ஆட்சியின்கீழ் மக்கள் உயிர், உடைமை, உரிமை பற்றிய பாதுகாப்பின்றி இருந்தனர். காவல் துறை மக்களை அச்சுறுத்தி அடக்கியாளும் கருவியாகவே பயன்படுத்தப்பட்டது. காலதாமதத்தால் நீதி நிர்வாகம் சாதாரண மக்களுக்குப் பயனற்றுப் போயிற்று. சமுதாயத்தில் சட்டத்தின் ஆட்சி செல்வந்தர்களுக்கும், செல்வாக்குமிக்கவர்களுக்கு மட்டுமே சாதகமாக இருந்தது. உதாரணமாக, அரசாங்கத்தால் பாதிக்கப்பட்ட விவசாயி தனது எஜமானருக்கு எதிராக வழக்கு தொடுப்பதென்பது நினைத்துக் கூடப் பார்க்க முடியாத ஒன்றாகும். பாமரர்களுக்கு நீதிமன்றம் எட்டாக்கனி. நீதி கிடைக்காத மக்கள் அந்நிய ஆட்சியை அகற்றுவதில் ஆர்வம் காட்டினர். கிளர்ச்சிக்காரர்களை ஆதரித்தனர்.

**சமுதாயக் காரணங்கள்**

**மேலை மயமாக்கல்**

ஆங்கிலேயர் இந்தியாவை மேலைமயமாக்க முயன்றனர். ஆனால் இந்தியப் பழமைவாதிகள் இம்முயற்சியை சந்தேகக் கண் கொண்டு பார்த்தனர். ஆங்கிலேயர் அறிமுகப்படுத்திய உடன்கட்டை ஏறும் வழக்கத் தடைச் சட்டம் (1829), சதி தடுப்பு நிலைச் சட்டம் (1850), விதவை மறுமணச் சட்டம் (1856) போன்ற முக்கிய சமூகச் சீர்திருத்தச் சட்டங்கள்

கடும் கண்டனத்துக்குள்ளாயின. அதேபோன்று ஆங்கிலேயர் மேற்கொண்ட உள்கட்டமைப்பு வசதிப் பெருக்கத் திட்டங்களும் சந்தேகக்கண் கொண்டு பார்க்கப்பட்டன. விரைவாகக் கொண்டு வரப்படும் முன்னேற்றத் திட்டங்கள் மக்களிடையே நிலையற்ற உணர்வைத் தோற்றுவிக்கின்றன. அவைகளை அறிந்து உள்வாங்கிக்கொள்ளும் மனப்பக்குவம் அவர்களுக்கு இருப்பதில்லை. எனவே, ஆங்கிலயரின் மேலைமயமாக்கல் கொள்கையும், திட்டங்களும் மக்களிடையே எதிர் விளைவுகளைத் தந்தன. அவர்கள் விரைந்து விரிவடையும் ஆங்கிலேயரது ஆட்சி விரைந்து வீழ்ந்து விடும் என்று நம்பி கிளர்ச்சிக்காரர்கள் பக்கம் சாய்ந்தனர்.

**சமயக் காரணங்கள்.**

**கிறித்துவமயமாக்கல்**

இந்தியாவுக்கு வந்த நூற்றுக்கணக்கான கிறித்துவ சமயப் பிரச்சாரகர்களும், ஊழியர்களும் கிறித்துவ மதத்தின் உயர்வைக் கூறுவதற்காக இந்திய சமயங்களைத் தாழ்த்திப் பேசினர். இந்திய சமயச் சம்பிரதாயங்களும், சடங்குகளும் கேலி செய்யப்பட்டன. அரசாங்க ஆதரவுடன் செயல்பட்ட கிறித்துவ சமயப் பரப்பூழியர்கள் மத மாற்றத்திலும் ஈடுபட்டனர். பல்லாயிரக்கணக்கான இந்தியர் கிறித்துவ சமயத்துக்கு மாறினர். இச்சூழ்நிலையில் நல்நோக்கத்தோடு கொண்டுவரப்பட்ட சமூகச் சீர்திருத்தச் சட்டங்களும் எதிர்ப்புக்குள்ளாயின. எடுத்துக்காட்டாக, விதவை மறுமணச் சட்டம் (1856) மதமாற்ற முயற்சியாக சித்தரிக்கப்பட்டது. டல்ஹௌசிக்குப்பின் இந்திய தலைமை ஆளுநரான கானிங் இந்தியாவைக் கிறித்துவ மயமாக்குவதற்காகவே நியமிக்கப்பட்டார் என்று கூறப்பட்டது. பாமரர்களும், படித்தவர்களும் ஆங்கிலேயரின் முற்போக்குச் சட்டங்களை சமயக் கண்ணோட்டத்துடனேயே பார்த்தனர்.

**பிரச்சாரப் பணி**

1813 பட்டயச் சட்டம் கிறித்துவ மதப் பிரச்சாரகர்கள் இந்தியாவில் தடையின்றிப் பிரச்சாரம் செய்ய அனுமதித்தது. பல சமயங்களில் இப்பிரச்சாரக் கூட்டங்கள் மாவட்ட ஆட்சியர்களின் ஆதரவுடன் நடைபெற்றன. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், மருத்துவ விடுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட கிறித்துவ சமய போதனை மதமாற்றத்தை உள்நோக்கமாகக் கொண்டது என்று ஊகிக்கப்பட்டது. மத தடுப்பு நிலைச் சட்டம் (1856) இந்த ஊகத்தை உறுதி செய்வதாக இருந்தது. இந்தியா முழுவதற்கும் ஒரே ரயில்வே, ஒரே கம்பியில்லாத் தந்தி, சட்டமுறை, நிர்வாக அமைப்புதான் உள்ளன் அதேபோன்று ஒரே மதம்தான் இருக்க வேண்டும் அதுவே கிறித்துவ மதம் என்ற அடிப்படையில் வெளியான எட்மண்டின் கடிதங்கள் (நுனஅழனெ“ள டுநவவநசள) கிறித்துவ எதிர்ப்பாளர்களைக் கிளர்ச்சிக்காரர்களாக்கி விட்டன.

**ராணுவக் காரணங்கள**

1856 ஆண்டுச் சட்டம் (Act of 1856) பிரிட்டிஷ் இந்திய ராணுவத்திலிருந்த உயர்சாதி சிப்பாய்களின் மகன்கள் பரம்பரைப் போர்த்தொழிலையும், சாதி உணர்வுகளையும் விட்டுவிட்டால்தான் வங்காள ராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்ற நிபந்தனையை விதித்தது. இது சிப்பாய்களிடையே அதிர்ச்சி அலைகளை எழுப்பியது. இச்சட்டம் நடைமுறைப் படுத்தப்படுவதற்கு முன்பே சிப்பாய்கள் குறைந்த ஊதியம், அதிக வேலை, பதவி உயர்வு வாய்ப்பின்மை, சிறப்புச் சலுகைகளின்மை, கடல் தாண்டிச் செல்லக் கட்டாயப் படுத்தப்படல், திறமைக்குறைவாகச் செயல்படுவதாகக் கூறி ஓய்வூதியத்தை நிறுத்தல் போன்ற பல்வேறு காரணங்களால் அதிருப்தி அடைந்திருந்தனர்.

ஆங்கிலப்படைக்கு ஆப்கானியப் போரில் (1841-42) ஏற்பட்ட இழப்பு, கிருமியப் போரில் (1854-55) அடைந்த தோல்வி ஆகியவை இந்திய சிப்பாய்களிடையே பிரிட்டிஷ் படையின் மீதிருந்த அச்சத்தை அகற்றியது. மேலும், பிரிட்டி' ராணுவத்தில் ஐரோப்பியரையும் இந்திய சிப்பாய்களை அதிக எண்ணிக்கையில் இருந்தனர். குறிப்பாக டெல்லி, கான்பூர், அலகாபாத் ராணுவப் பிரிவுகள் சிப்பாய்களின் முழுக் கட்டுப்பாட்டிலேயே இருந்தன. இவையாவும் சிப்பாய்கள் ஆங்கிலேயரது ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்வதற்கான துணிச்சலைத் தந்தன.

### உடனடிக் காரணம்

1856 இல் இந்திய இராணுவத்தில் புதிய என்பீல்டு துப்பாக்கிகள் (Enfield Rifles) அறிமுகப்படுத்தப்பட்டன. டம்டம், அம்பாலா , சியால் கோட் ஆகிய இடங்களில் இத்துப்பாக்கிளைப் பயன்படுத்துவதற்கான பயிற்சி அளிக்கப்பட்டது. அப்போது என்பீல்டு துப்பாக்கியில் செலுத்தப்படும் தோட்டாக்கள், பசு, பன்றி கொழுப்புக் கலவையால் பூசப்பட்டன என்ற வதந்தி வங்காள ராணுவத்திலிருந்த சிப்பாய்களிடையே காட்டுத்தீ போல் பரவிற்று (1857). துப்பாக்கிக்குள் தோட்டாக்களை நுழைக்குமுன் அவற்றின் நுனி பகுதியை வாயால் கடிக்க வேண்டியிருந்ததால் இந்து சிப்பாய்களும், முஸ்லீம் சிப்பாய்களும் வெறுத்தனர். இவ்வெறுப்பு வெடிமருந்துக் கிடங்கில் தீப்பொறி விழுந்தது போலாயிற்று. கிடங்கு வெடித்தது , கிளர்ச்சி துவங்கியது.

### கிளர்ச்சியின் போக்கு

### பாரக்பூர் கிளர்ச்சி

பெருங் கிளர்ச்சியின் முதல் அத்தியாயம் கல்கத்தாவுக்கு அருகேயுள்ள பாரக்பூரில் (Barrackpore) எழுதப்பட்டது. 1857 ஜனவரி மாதம் கொழுப்பு தடவப்பட்ட தோட்டாக்களைப் பற்றிய வதந்தி பரவியது. அதன்பின் மங்கல் பாண்டே (Mangal Pandy) என்ற பிராமண சிப்பாய் அவரது அதிகாரியை கொன்றுவிட்டார் (மார்ச்) ! இக்கொலை எழுப்பிய கிளர்ச்சித் தீ பிற பகுதிகளுக்கும் பரவியது.

### மீரட் கிளர்ச்சி

பாரக்பூரிலிருந்து பெர்ஹாம்பூரு (Berhampore) க்குப் பரவிய சிப்பாய்க் கலகம் மீரட் (Meerut) டில் நிலை கொண்டது (ஏப்ரல் 24). அங்கிருந்த 90 சிப்பாய்களில் 5 பேர் மட்டுமே புதிய தோட்டாக்களைப் பெற்றுக் கொண்டனர்! எஞ்சியோர் அவற்றைத் தொடக்கூட மறுத்துவிட்டனர். கீழ்ப்பணியாமைக்காக அவர்களுக்குப் பத்தாண்டுகால சிறை தண்டனை அளிக்கப்பட்டு, அவர்களது சீருடைகளும் பறிக்கப்பட்டன. அதன்பின் அங்கிருந்த மூன்று சிப்பாய்ப் படைப் பிரிவினர் கிளர்ச்சி செய்து, அதிகாரிகளைக் கொன்று, சிறைப்பட்டிருந்த சிப்பாய்களை விடுவித்தனர் (மே 10). அதிகாரிகளின் வீடுகள் கொளுத்தப்பட்டன, தந்திக் கம்பிகள் அறுக்கப்பட்டன. தளபதி ஹெவிட் (புநநெசயட ர்நறவைவ) டால் அக்கிளர்ச்சியை அடக்க முடியவில்லை

### டெல்லிக் கிளர்ச்சி

மீரட் கிளர்ச்சிக்காரக்கள் டெல்லிக்கு விரைந்தனர் (மே 11). டெல்லியைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வந்த அவர்கள் ஆங்கில அதிகாரிகள் அதிகாரமற்றவர்கள் என்ற பாகுபாடின்றிக் கொன்றனர். அவர்களுடைய வீடுகளும் அழிக்கப்பட்டு, தந்தி நிலையத்தைச் சேதப்படுத்தினர். மருத்துக்கிடங்கின் பொறுப்பாளராக இருந்த துணைத்

தளபதி வில்லோபி (Lieutenant Willoughby) கிளர்ச்சிக்காரர்களை எதிர்கொள்ள முடியாமல் கிடங்கை வெடி வைத்து தகர்த்துவிட்டார் கலகக்காரர்கள் அரண்மனையைக் கைப்பற்றி இரண்டாம் பகதூர் ‘ஷா (Bahadur Shah Il) வைப் பேரரசராகப் பிரகடனப்படுத்தினர். ஆங்கிலேயர் டெல்லியை இழந்தனர். இருப்பினும் சர் ஜான் லாரன்ஸ் கிளர்ச்சி பஞ்சாபில் பரவாமல் பார்த்துக் கொண்டார்.

**கிளர்ச்சிக் கிளைகள்**

டெல்லி கிளர்ச்சியை அடுத்து மேல் கங்கை மாகாணங்கள் மத்திய இந்தியாவின் சில பகுதிகள் ராஜபுதனத்தில் நசிராபாத், ரோஹில் கந்தில் பரேலி, அயோத்தியில் லக்னோ, வாரணாசி, பீஹாரில் சில பகுதிகள் ஆகிய இடங்களில் கிளர்ச்சிக் கிளைகள் முளைத்தன. ஆனால் இக்கிளைகள் ஒடிக்கப்பட்டன. அவசர ராணுவச் சட்டம் (Martial Law) பிறப்பிக்கப்பட்டது. சந்தேகிக்கப்பட்ட கலகக்காரர்கள் கொல்லப்பட்டனர். காப்டன் பிரேசியர் (Captain Brazer) என்பவரது தலைமையில் வந்த சீக்கியப் படை அலகாபாத் கோட்டைக்கு வந்து கிளர்ச்சிக்காரர்களை அடக்க உதவி செய்தது (ஜுன் 11). கிளர்ச்சி நர்மதை நதிக்குக்குத் தெற்கே பரவாமல் தடுக்கப்பட்டது. இக்கிளர்ச்சியின் போது பம்பாய் எல்பின்ஸ்டனால் பாதுகாக்கப்பட்டது. ஜார்ஜ் லாரன்ஸ் ராஜபுதனத்தில் கிளர்ச்சி பரவாமல் பார்த்துக் கொண்டார். பஞ்சாப், கா‘மீர், ஜமீன்தார்கள், இந்திய அதிகாரிகள் ஆங்கிலேயருக்கு ஆதரவாக இருந்தனர். குறிப்பாக, சிந்தியா, ஐதராபாத் நவாப் , போப்பால் பீகம்கள், நேப்பாள் மன்னர் ஆகியோர் ஆங்கிலேயர் கிளர்ச்சியை அடக்க ஒத்துழைத்தனர்

**கான்பூர் கிளர்ச்சி**

நானா சாகிப் (யேயெ ளுயாடை) கான்பூர் கிளர்ச்சிக்காரர்களுக்குத் தலைமை தாங்கினார். சர் ஹக் வீலர் (ளுசை ா்ரபா றூநடநச) வசமிருந்த கோட்டையை அரும்பாடுபட்டு காப்பாற்ற வேண்டியிருந்தது. போலியாகக் கொடுத்த வாக்குறுதியை நம்பி (ஜுன் 27) ஆங்கிலேயர் சரணடைந்தனர்! சரணடைந்த ஆங்கிலேயரைக் கிளர்ச்சிக்காரர்கள் ஆண், பெண், குழந்தை என்ற வேறுபாடின்றிக் கொன்று குவித்தனர். கான்பூர் படுகொலை ஆங்கிலேய அதிகாரிகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அவர்கள் பழிக்குப் பழி வாங்கத் துடித்தனர். கிளர்ச்சி அடக்கப்படல்

மத்திய இந்தியாவில் மையம் கொண்டிருந்த கிளர்ச்சியை அடக்கும் பொறுப்பு சர் ஹக் ரோசிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் ஜான்சி லட்சுமிபாய், தாந்தியா தோப்பே, குன்வார்சிங் ஆகியோரது எதிர்ப்பை எதிர்கொண்டார். ரோஸ் ஜான்சியைக் கைப்பற்றிய போது (1858 ஏப்ரல் 3) ராணி லட்சுமி பாய் கோட்டையை விட்டு வெளியேறி தாந்தியா தோப்பேயுடன் சேர்ந்து கொண்டார். இவர்களது கூட்டுப்படையினர் குவாலியரைக் கைப்பற்றி நானாசாகிப்பைப் பே‘வாவாகப் பிரகடனப்படுத்தினர். நானாவும் அவரது ஆதரவாளர்களும் பதவிப் பிரமாணக் கொண்டாட்டத்தில் திளைத்திருந்த போது ஆங்கிலேயப் படைகள் குவாலியரைச் சூழந்து கொண்டது . ராணி லட்சுமிபாய் மட்டும் ஆணுடை அணிந்து கிளர்ச்சிக்காரர்களுடன் சேர்ந்து ஆங்கிலப் படைக்கு எதிராகத் தீரத்துடன் போராடினார். அவரது குதிரை கால் இடறியதால் கீழே விழுந்த அந்த வீராங்கனையை ஒரு அடையாளம் தெரியாத போர் வீரன் வெட்டிக் கொன்று விட்டான் (1758 ஜுன் 17). குவாலியர் மீண்டும் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டது. கானிங் 1858 ஜுலை மாதம் வரலாற்றுச் சிறப்புமிக்க அமைதி பிரகடனத்தை வெளியிட்டார். இக்கிளர்ச்சிக்கு மக்களிடையே ஆதரவு இருந்தபோதிலும், கிளர்ச்சிக்காரர்களின் எண்ணிக்கை பிரிட்டிஷ் படையினரைவிட அதிகமாக இருந்தபோதிலும்

ஒற்றுமையும், திறமையான தலைவர்களும் இல்லாமையால் தோல்வியடைந்தது.

**கிளர்ச்சியின் வீழ்ச்சி**

டெல்லியை இழந்ததும், கான்பூர் படுகொலையும், கிளர்ச்சி பரவிய வேகமும் ஆங்கிலேயரை அதிர்ச்சியடையச் செய்தன. இவற்றால் ஆத்திரமடைந்தனர். நன்கு திட்டமிட்டு இக்கிளர்ச்சியை முறியடிக்கத் தீர்மானித்தனர். சீனா நோக்கிச் சென்று கொண்டிருந்த மீட்புப் படை கல்கத்தாவுக்கு திரும்ப அழைக்கப்பட்டது. பஞ்சாபிலிருந்த முதன்மைக் கமி'னர் ஜான் லாரன்ஸ் சீக்கிய மற்றும் ஐரோப்பியப் படையினரை டெல்லிக்கு அனுப்பினார். இலங்கை ஆளுநரும் போர் வீரர்களைக் கொடுத்து, உதவினார். மீரட்டிலிருந்தும், சிம்லாவிலிருந்தும் ஆங்கிலப் படைப் பிரிவுகள் வந்து சேர்ந்தன.

ஆங்கிலேயரின் கூட்டுப்படை டெல்லியை முற்றுகையிட்டு (செப்டம்பர் 1-21)க் கைப்பற்றியது. டெல்லி கொள்ளையடிக்கப்பட்டது. ஏராளமானோர் கொல்லப்பட்டனர். விரைவில் பகதூர் ஷா கைது செய்யப்பட்டார். அவரது மகன்கள் இருவரும், ஒரு பேரனும் பிரிட்டி' அதிகாரி வில்லியம் ஹட்சனால் (றுடைடயைஅ ர்ரனளழஉ) சுட்டுக் கொல்லப்பட்டனர். டெல்லி ஆங்கிலேயர் வசமாயிற்று.

1857 மே மாத இறுதியில் சென்னையிலிருந்து கர்னல் ஜேம்ஸ் நீல் தலைமையில் வந்த படை பனாரசையும், அலகாபாத்தையும் கிளர்ச்சிக்காரர்களிடமிருந்து மீட்டனர். தளபதி ஹென்றி ஹாவ்லாக் நானாசாகிபைப் பல இடங்களில் புறங்கண்டார். கான்பூருக்குள் நுழைந்து பேரழிவை ஏற்படுத்தினார். கர்னல் கேம்பல் நேப்பாளத்தின் உதவியோடு அயோத்தியின் உறுதியான எதிர்ப்பை முறியடித்தார். தாந்தியா தோப்பே தோற்கடிக்கப்பட்டு கான்பூர் கைப்பற்றப்பட்டது (நவம்பர் 18). பின்னர் சம்பல் பள்ளத்தாக்குக்குத் தப்பிச் சென்ற தாந்தியா தோப்பே மான்சிங் என்பவரால் காட்டிக் கொடுக்கப்பட்டு கைது செய்யப்பட்டு, தூக்கிலிடப்பட்டார். நானாசாகிப் தனது குடும்பத்துடன் நேபாளத்துக்குச் சென்று விட்டார் தலைவர்கள் இல்லாத பெருங்கிளர்ச்சி வீழ்ச்சியடைந்தது. முகலாயப் பேரரசர் பகதூர் 'ஷா அரசத்துரோகக் குற்றம் சாட்டப்பட்டு, விசாரணைக்குப்பின் ரங்கூனுக்கு நாடு கடத்தப்பட்டார். அவர் அங்கு இறந்ததோடு (1862) முகலாய அரச பரம்பரை முடிவுக்கு வந்தது. முகலாயப் பேரரசரின் வாரிசுப் பிள்ளைகளும் பிரிட்டி' படைவீரர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர்

**வீழ்ச்சிக்கான காரணங்கள்**

நன்கு துவக்கப்பட்ட பெருங்கிளர்ச்சி மோசமாக முடிவடைந்ததற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன : 1) கிளர்ச்சிக்காரர்களுக்கிடையே பொதுவான குறிக்கோளோ, பொதுத் திட்டமோ எதுவுமில்லை. கிளர்ச்சித் தலைவர்களின் நோக்கங்கள் பலதரப்பட்டதாகவும், முரண்பட்டதாகவும் இருந்தன. 2) கிளர்ச்சிக்காரர்களுக்குத் திறமையான தொலைநோக்குடைய தலைமைப் பஞ்சம் இருந்தது. நானா சாகிப், தாந்தியா தோப்பே, குன்வார்சிங், ராணி லட்சுமிபாய், மௌல்வி அப்துல்லா போன்றோர் தங்களது சொந்த நலன்களைக் காத்துக் கொள்வதற்காகப் போராடினார்களேயன்றி, பொதுவான குறிக்கோளை நிறைவேற்றக் கிளர்ச்சியில் பங்கேற்கவில்லை. அவர்களுக்குள் ஒற்றுமையும் காணப்படவில்லை. 4) தான்தோன்றித்தனமாகத் துவக்கப்பட்ட இக்கிளர்ச்சி, பல பகுதிகளில் கிளைகள் விட்டாலும் அவை ஒருங்கிணைக்கப்படவில்லை. 5) இக்கிளர்ச்சி வட இந்தியாவோடு நின்றுவிட்டது. தென்னிந்தியக் கிளர்ச்சிக்கும், வேலூர்க் கிளர்ச்சிக்கும் நிலைக்களனாக இருந்த

தென்னிந்தியா இக்கிளர்ச்சியின் தாக்கத்தால் பாதிக்கப்படவில்லை. இக்கிளர்ச்சியில் பங்கேற்கவுமில்லை

6) குவாலியர், பஞ்சாப், ஆப்கானிஸ்தான், நேப்பாளம், ஐதராபாத் மன்னர்களும், ஜமீன்தார்களும், நிலச்சுவான்தாரர்களும் ஆங்கிலேயரின் ஆதரவாளர்களாக இருந்தனர்.7) கிளர்ச்சிக்காரர்களின் போர்த்தளவாடங்கள் பழங்காலத்தவை. ஆங்கிலேயரது படைக்கலன்கள் நவீனகாலத்தவை. 8) ஆங்கிலேயர் ரயில் போக்குவரத்து, செய்தி தொடர்பு, அஞ்சல் துறை ஆகியவற்றை நன்கு பயன்படுத்தினர். 9) கல்கத்தா, பம்பாய், சென்னை ராணுவப் படைப் பிரிவுகள் நன்கு ஒருங்கிணைக்கப்பட்டு பயன்படுத்திக் கொள்ளப்பட்டன. 10) யாவற்றுக்கும் மேலாக, ஹாவ்லக், லாரன்ஸ், அவுட்ரம், நிக்கல்சன், நீல், எட்வார்ட்ஸ் போன்ற அறிவும், ஆற்றலும், போர்த்தந்திரத் திறமையுடைய தலைவர்கள் இருந்தனர்.

**கிளர்ச்சியின் தன்மை**

தென்னிந்தியக் கிளர்ச்சியும் (1800-1801), வேலூர்க்கிளர்ச்சியும் (1806) இந்தியாவில் ஆங்கிலேயர் ஆதிக்கத்துக்கு எதிராகத் துவக்கப்பட்ட முதல் பெரிய கிளர்ச்சி முயற்சிகளாகும். வேலூர்க் கிளர்ச்சிக்குப்பின் 50 ஆண்டுகளுக்குப் பிறகு துவக்கப்பட்ட கிளர்ச்சி மத்திய இந்தியா உள்ளிட்ட வட இந்தியாவை உள்ளடக்கியதால் பெருங்கிளர்ச்சி (புசநயவ சுநடிநடடழைெ) எனப்பட்டது. இந்நிகழ்வை வட இந்தியப் பெருங்கிளர்ச்சி என்று கூறுவதே பொருத்தமாக இருக்கும். ஏனெனில், இக்கிளர்ச்சி விந்தியமலைக்குத் தெற்கே விரிவடையவில்லை .

1857 பெருங்கிளர்ச்சி சிப்பாய்க் கலகமா? மக்கள் கிளர்ச்சியா? சுதந்திரப் போரா? என்பது பற்றி வரலாற்றாளர்கள் விவாதித்து வருகின்றனர்! வரலாற்று முக்கியமிக்க இந்நிகழ்ச்சி சிப்பாய் கலகம், விடுதலைப் போர், முதல் விடுதலைப் போர், இந்தியக் கிளர்ச்சி, முகமதியர் கிளர்ச்சி என்று பல்வேறாக வர்ணிக்கப்படுகிறது.

இக்கிளர்ச்சியின் சமகால ஆதாரங்களாகக் கொண்டு ஆராய்ச்சி செய்தவர்கள் இதை ஒரு சிப்பாய்க் கலகமே என்ற முடிவுக்கு வருகின்றனர். இந்நிகழ்வு பெருமைப்படுத்தப்பட்ட வேலூர்க் கலகம்“ என்று வர்ணிக்கப்பட்டது. எடின்பரோ ரெவ்யூ என்ற பத்திரிகை துவக்கத்திலிருந்து இறுதிவரை இது ஒரு சிப்பாய்க் கலகமே என்று எழுதியது. இதே கருத்தை சர் ஜான் லாரன்ஸ், சீலி போன்ற சமகால ஆங்கில எழுத்தாளர்களும் கூறியுள்ளனர்.

இக்கருத்துக்கு மாறாக 1857-58 எழுச்சி மக்கள் கிளர்ச்சியே என்று வாதிடுவோரும் உண்டு. இவர்கள் கூஜார்கள், ரங்கார்கள், ஜட்மக்கள், ஆகியோர் கிளர்ச்சியில் பங்கேற்றதைக் கூறி தங்களது வாதத்தை நியாயப்படுத்துகின்றனர். வங்காளத்தில் சிப்பாய்களால் துவங்கப்பட்ட இக்கலகம் பின்னர் மக்கள் கிளர்ச்சியாக மலர்ந்தது என்று கூறப்படுகிறது.

வி.டி. சவார்க்கர் 1857 கிளர்ச்சியை இந்திய சுதந்திரப் போர் என்ற தலைப்பில் ஒரு நூலை வெளியிட்டார். எட்வர்டு தாம்சன், பி.இ. ராபர்ட்ஸ், எஸ்.சி. சாட்டர்ஜி, அசோக மேத்தா, எஸ்.என். சென் போன்றோர் இத்தகைய கருத்தைக் கூறியுள்ளனர். கிளர்ச்சிக்காரர்கள் டெல்லியைக் கைப்பற்றிய உடனேயே பகதூர் ஷாவைப் பேரரசர் என்று பிரகடனப்படுத்தியதால் இது இந்திய சுதந்திரப் போர்தான் என்று வாதிடுவர். ஆனால் ஆர்.சி. மஜூம்தார் போன்றோர் இக்கலகத்தில் தேசிய உணர்வோ, இந்திய விடுதலை நோக்கமோ இன்மையால் இதை விடுதலைப் போர் என்று கூறுவதை ஏற்க இயலாது எனக் கூறியுள்ளார். ஆங்கில அரசின் கொள்கைகளால் பாதிக்கப்பட்ட அரசர்கள், நிலச்சுவான்தாரர்கள்,

தாலுக்தார்கள் தங்களது சுயநலன்களைப் பாதுகாத்துக் கொள்ளவே இக்கலகத்தில் கலந்து கொண்டனர். அவ்வளவே. மேலும் இக்கலகம் இந்தியா முழுவதுக்கும் பரவவில்லை. பொதுமக்களும் ஒருங்கிணைந்து போராடவில்லை. இக்கலகத்துக்குத் தெளிவான குறிக்கோளோ, திட்டமோ , அமைப்போ இல்லாததால் இதை விடுதலைப் போராட்டம் என்று கூறுவது பொருத்தமாகாது.

அதேபோன்று 1857 கலவரத்தை பழைய நிலமானிய முறைக்கும், புதிய முன்னேற்ற முறைக்குமிடையே ஏற்பட்ட மோதல் கிறித்தவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முயற்சி ˙ வெள்ளையருக்கும் கருப்பர்களுக்குமிடையே நடைபெற்ற இனக்கலவரம் நாகரிகத்துக்கும் அநாகரிகத்துக்குமிடையே ஏற்பட்ட மோதல் பொருளாதாரச் சுரண்டலை எதிர்த்து விவசாயிகள் மேற்கொண்ட வர்க்கப் போராட்டம் என்றெல்லாம் வாதிப்பது வலிந்து கூறப்படும் விளக்கங்களாகும்.

1857 வட இந்தியக் கிளர்ச்சி வெறும் சிப்பாய்க் கலகம் மட்டுமன்று அது இந்திய விடுதலைப் போராட்டமுமன்று ஆங்கிலேயரது ஆதிக்க ஆட்சியால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட பல்வேறு பகுதியினரும் அந்நிய ஆதிக்கத்துக்கு எதிராக மேற்கொண்ட போராட்டமாகும். இந்தியாவை ஆட்சி செய்த முகமதிய சந்ததியாரும், ஆட்சியை இழந்த இந்து அரசர்களும், நிலத்தைப் பறிகொடுத்த நிலச்சுவான்தார்களும் இக்கிளர்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டனர். இக்கிளர்ச்சியில் இந்துக்களைவிட முஸ்லிம்கள் அதிக அளவில் பங்கேற்றனர்.

1857 கிளர்ச்சி பின்னர் துவக்கப்பட்ட இந்திய விடுதலைப் போராட்டத்துக்கு உந்துசக்தியாக இருந்தது. பிரிட்டிஷ் ஆட்சி சவால் அதற்கு இந்தியாவின் எதிர் செயல் என்ற வகையில் 1857 நிகழ்வுகள் நவீன கால இந்திய வரலாற்றில் முக்கிய கால கட்டமாகும். 1857 நிகழ்ச்சிகளால் உருவாக்கப்பட்ட உணர்வு அவற்றோடு அழிந்து விட வில்லை இந்த உணர்வுக்கு இறப்பில்லை ˙ எப்போதெல்லாம் நாட்டில் நெருக்கடி ஏற்படுகிறதோ, மனத்தளர்வு உண்டாகிறதோ அப்போதெல்லாம் இந்த உணர்வு நமக்கு ஊக்கமளிக்கிறது . இக்கிளர்ச்சி குழப்பமான புரட்சி (Confused Revolu tion) என்று வர்ணிக்கப்பட்டாலும், இந்திய விடுதலைப் போராட்டத்துக்கு ஒத்திகையாக இருந்தது என்பதில் ஐயமில்லை.

**கிளர்ச்சியின் விளைவுகள்**

1857 பெருங்கிளர்ச்சி இந்திய வரலாற்றில் முக்கிய காலகட்டமாகும். கிளர்ச்சியைவிட அதன் பின் விளைவுகள் வரலாற்றுச் சிறப்புடையவை: 1) இக்கிளர்ச்சி கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தது. 2) 1858 ஆகஸ்டு 2 ஆம் தேதி பிரிட்டி‘ பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டம் இந்தியாவில் மேலான ஆட்சி ஏற்படுத்தப்படும் என்று கூறி விக்டோரியா மகாராணியைப் பிரிட்டி‘ இந்தியாவின் இறையாண்மைத் தலைவராக (Sovereignof British India) அறிவித்தது. 3) 1858 நவம்பர் மாதம் விக்டோரியா பேரரசி வெளியிட்ட பிரகடனத்தில் ‘இந்திய மக்களின் வாழ்க்கை வளமே எங்களுடைய பலமாகும் அவர்களுடைய மனநிறைவே எங்களுடைய பாதுகாப்பாகும் அவர்களது நன்றியே எங்களுக்குச் சிறந்த அன்பளிப்பாகும்’என்று அறிவித்தார்.

4) அக்பரின் கடைசி சந்ததி வாரிசான முகலாயப் பேரரசர் இரண்டாவது பகதூர்‘ா கைது செய்யப்பட்டு, விசாரணைக்குப்பின் குற்றம் சாட்டப்பட்டு, முதலில் கல்கத்தாவுக்கும், பிறகு ரங்கூனுக்கும் நாடு கடத்தப்பட்டார். 5) கம்பெனி கலைக்கப்பட்டதால் இந்திய அரசியலைக் கவனிக்க இந்தியச் செயலர் (அமைச்சர்) ஒருவரும், அவருக்கு உதவி

செய்ய இந்திய அவை என்ற அமைப்பும் உருவாக்கப்பட்டன. 1858 முதல் 1947 வரை இந்திய அரசாங்கத்தை பிரிட்டிஷாரே நேரடியாகக் கவனித்துக் கொண்டனர். 6) தலைமை ஆளுநராயிருந்த கானிங் இந்திய அரசப் பிரதிநிதி (Viceroy) என்ற பெயரோடு 1862 வரை பதவி வகித்தார். இவரே கடைசி தலைமை ஆளுநரும் முதல் வைசிராயுமாவார். இத்துடன் இந்திய வரலாற்றில் ஒரு சகாப்தம் முடிந்து மற்றொரு சகாப்தம் துவங்கியது.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

6. இந்திய பெருங்கிளர்ச்சி எந்த ஆண்டு நடந்தது?
7. டல்ஹௌசி எக்கொள்கையை கொண்டு வந்தார்?
8. எச்சட்டம் கிறித்துவ மதப் பிரச்சாரகர்கள் இந்தியாவில் தடையின்றி பிரச்சாரம் செய்ய அனுமதித்தது?
9. 1857 கிளர்ச்சியை இந்திய சுதந்திரப் போர் என்ற தலைப்பில் நூலை வெளியிட்டவர்?
10. விக்டோரி யா பேரரசி வெளியிட்ட பிரகடனத்தில் குறிப்பிட்ட வார்த்தைகள் யாவை?

## 7.5 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

1. 1843
2. அகமது'ா அப்தாலி
3. ஜாமன்'ா
4. 1836
5. அலெக்சாண்டர் பர்னஸ்
6. 1857
7. நாடிழக்கும் கொள்கை (அ) அவகாசியிலிக் கொள்கை
8. 1813 ஆண்டு பட்டயச் அட்டம்
9. வ.டி.சவார்க்கர்
10. இந்திய மக்களின் வாழ்க்கை வளமே எங்களுடைய பலமாகும்

## 7.6 சுருக்கவுரை

- 1843-ல் சிந்து ஆங்கிலேயர் ஆட்சியில் இணைக்கப்பட்டது. 1849-ல் பஞ்சாபும் இணைக்கப்பட்ட பின் ஆங்கில இந்தியப் பேரரசின் வடமேற்கு எல்லை மேலும் விரிவாகியது.
- ஜாமன்ஷா ஆட்சியின் போது ஆப்கானிஸ்தான் பலம் பொருந்திய நாடக விளங்கியது. இந்தியாவின் மீது படையெடுத்து வெற்றி காண வேண்டும் என்று பெரும் முயற்சிகள் எடுத்துக் கொண்டார்.
- பெருங் கிளர்ச்சிக்கான அரசியல் காரணங்களில் முதன்மையானது தலைமை ஆளுநர் டல்ஹௌசி பின்பற்றிய பிரிட்டிஷ் ஏகாதிபத்திய விரிவாக்கக் கொள்கையேயாகும்.
- 1857 பெருங்கிளர்ச்சி இந்திய வரலாற்றில் முக்கிய காலகட்டமாகும். இக்கிளர்ச்சி கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

## 7.7 முக்கிய வார்த்தைகள்

- நிலவழி அடிமை: தனது இறைவனது தோட்டத்தில் வேலை செய்துக் கொண்டிருந்த நிலப்பிரபுத்துவ முறையால் கட்டுண்டுள்ள விவசாய தொழிலாளி என்று குறிப்பிடுகின்றது.

- தேசியம்: அது ஒரு குறிபிட்ட தேசத்தின் நலன்களை ஊக்குவிப்பதன் மூலம் ஒரு அரசியல், சமூக, பொருளாதார சித்தாந்தமுமு இயக்கமும் ஆகும்.

## 7.8 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்

**குறு விடை வினாக்கள்**

1. தோஸ்து முகமது பற்றி சிறுகுறிப்பெழுதுக.
2. முக்கூட்டு உடன்படிக்கை என்றால் என்ன?
3. முதல் ஆப்கானிய போரில் ஆங்கிலேயரின் தோல்விகான காரணங்களை கூறுக.

**நெடு விடை வினாக்கள்**

4. ஆப்கானிய போரின் காரணங்கள் மற்றும் விளைவுகளை தெளிவாக எழுதுக.
5. 1857 ஆம் வருட பெருங்கிளர்ச்சியின் காரணங்கள் மற்றும் விளைவுகளை தெளிவாக எழுதுக.

## 7.9 மேலும் படிக்க

சந்திரா, பிபின், 2009. நவீன இந்தியாவின் வரலாறு. ஹைத்தராபாத், ஓரியண்ட் பிளாக்வான்ஸ்.

டியூப்-பானர்ஜி, இஷிதா. நவீன இந்தியாவின் வரலாறு. கேம்பிரிட்ஜ், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக அச்சகம்

தாரிக், முகம்மது. 2007. நவீன இந்திய வரலாறு. புது தில்லி: டாடா மெக்ரா-ஹில் கல்வி.

பண்டியோபதியா, ெ'கரா. 2004. பிளாசி முதல் பார்ட்டி வரை: நவீன இந்திய வரலாறு. ஹைதராபாத்: ஓரியண்ட் பிளாக்வான்ஸ்.

சென், S.N. 2006. நவீன இந்திய வரலாறு. புது தில்லி: நியூ ஏஜ் இண்டர்நேஷனல்.

# அலகு – 8 மகாராணியாரின் பேரறிவிப்பு மற்றும் வைசிராய்களின் காலம்

8.0 அறிமுகம்

8.1 நோக்கங்கள்

8.2 மகாராணியாரின் பேரறிவிப்பு, 1858

8.3 வைசிராய்களின் காலம்

8.4 கானிங் பிரபு

8.5 லிட்டன் பிரபு

8.6 ரிப்பன் பிரபு
8.7 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்
8.8 சுருக்கவுரை
8.9 முக்கிய வார்த்தைகள்
8.10 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்
8.11 மேலும் படிக்க

## 8.0 அறிமுகம்

1857 - ம் வருட சிப்பாய் கலகத்திற்குப் பிறகு கம்பெனியின் ஆட்சியை நீக்கிவிட்டு இந்தியாவை இங்கிலாந்து ஆட்சியின் கீழ் நேரடியாகக் கொண்டுவர முடிவு செய்யப்பட்டது. இதற்காக 1858-ம் வருடம் ஆகஸ்டு மாதம் இரண்டாம் தேதி ஒரு சட்டம் இங்கிலாந்து பாராளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இது இந்தியாவில் மிகச்சிறந்த அரசை உண்டாக்குவதற்கான சட்டம்'' (Act for the better government of India) என வழங்கப்பட்டது. அரசியாலும், அரசியார் பெயரிலும், நாட்டின் முக்கிய காரியதரிசிகளுள் ஒருவர் மூலம் பதினைந்து உறுப்பினர்களைக் கொண்ட ஒரு ஆலோசனை சபை உதவியுடன் இந்தியா ஆட்சி செய்யப்படும்''என்று அந்த சட்டம் கூறியது..

## 8.1 நோக்கங்கள்

இந்த அலகை நீங்கள் படித்து முடித்த பின்பு உங்களால்,

- விக்டோரியா மகாரணியின் பேரறிப்பு பற்றி விளக்க முடியும்
- கானிங் பிரபு மற்றும் அவர்களின் கொள்கையை விளக்க முடியும்
- லிட்டன் பிரபு அவர்களின் கொள்கையை விளக்க முடியும்
- ரிப்பன் பிரபு அவர்களின் கொள்கையை விளக்க முடியும்

## 8.2 மகாராணியாரின் பேரறிவிப்பு, 1858

இந்திய அரசாங்கத்தை கம்பெனியிடமிருந்து இங்கிலாந்து தனது நேரடி ஆட்சியின் கீழ் ஏற்றுக் கொண்டதை இந்திய மக்களுக்கு முறைப்படி அறிவிக்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி அப்போது இங்கிலாந்தை ஆண்டு வந்த பேரரசி விக்டோரியாவின் பெயரால் அலகாபாத் நகரில் நடைபெற்ற ஒரு பிரமாண்டமான தர்பாரில் வைசிராய் கானிங்பிரபு ஒரு பிரகடனத்தின் மூலம் 1858 நவம்பர் 1-ம் தேதி இந்தியாவிலுள்ள பத்து கோடி மக்களுக்கு அறிவித்தார். அதுவே மகாராணியாரின் பேரறிவிப்பு எனப்படுகிறது. இந்திய மக்களின் மகாசாசனம்" என்று அது புகழப் படுகிறது.

**மகாராணியாரின் பேரறிவிப்பின் முக்கிய அம்சங்கள்:**

மகாராணியாரின் பேரறிக்கை டெர்பி பிரபு என்பவரால் தயாரிக்கப் பட்டு விக்டோரியா மகாராணியால் அங்கீகாரம் செய்யப்பட்டது. இந்த பேரறிவிப்பு பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கொள்கைகளையும் இந்தியா எதிர் காலத்தில் எவ்விதமாக ஆளப்படும் என்ற உறுதி மொழியையும் கொண்டிருந்தது. அதில் காணப்பட்ட முக்கியமான சாராம்சங்கள் பின்வருமாறு :

1. இதுவரை ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியால் ஆளப்பட்டு வந்த இந்தியா இனி பிரிட்டிஷ் பேரரசியால் நேரடியாக ஆட்சி

செய்யப்படும்.

2. இந்திய சுதேச அரசர்களுடன் கம்பெனி செய்து கொண்ட உடன் படிக்கைகளையும், ஒப்பந்தங்களையும் பிரிட்டி' அரசு அப்படியே ஏற்றுக் கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளும்.
3. கானிங் பிரபு பிரிட்டி' நேரடி ஆட்சியின் கீழ் முதல் இந்திய வைசிராயாகவும் கவர்னர் ஜெனரலாகவும் நியமனம் செய்யப்படுவார்.
4. இந்திய சுதேச அரசர்களின் உரிமைகள், மதிப்பு, அந்தஸ்து ஆகியவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து மதித்து நடக்கப்படும்.
5. இந்தியாவின் பழமையான உரிமைகள், வழக்கங்கள், வழக்காறுகள், நம்பிக்கைகள் ஆகியவைகளுக்கு உரிய மதிப்பும் மரியாதையும் கொடுக்கப்படும்.
6. கிறிஸ்தவ மதக் கொள்கைகளின் மீது நம்பிக்கை கொண்டிருக்கும் பிரிட்டி' அரசு கிறிஸ்தவ மதக் கொள்கைகளையும், நம்பிக்கைகளையும் இந்திய மக்கள் மீது திணிக்காது. எனவே மதத்தின் பெயரால் எந்த இந்தியருக்கும் சலுகை வழங்காது. யாருக்கும் இடையூறோ , அமைதியின்மையையோ ஏற்படுத்தாது. சட்டப்படி எல்லோருக்கும் பாரபட்சமற்ற பாதுகாப்பு கொடுக்கப்படும்.
7. இந்திய மக்களின் மத வழிபாட்டிலும், மத நம்பிக்கையிலும் பிரிட்டி' அரசு தலையிடாது முழுமையான மத வழிபாட்டுரிமை வழங்கப்படும்.
8. இப்பொழுது இருக்கக்கூடிய பிரிட்டி' இந்தியப் பகுதிகளை மேலும் விரிவுபடுத்தும் ஆசை பிரிட்டி' அரசுக்கு கிடையாது. அதாவது நாடு பிடிக்கும் ஆசையில் நாட்டம் இல்லை.
9. இந்திய மக்களின் நல்வாழ்வே பிரிட்டி' அரசின் நோக்கமாகும். மக்களின் நன்மைக்காகவே ஆட்சி நடத்தப்படும். கடவுளின் ஆசீர்வாதத்துடன் உள்நாட்டு அமைதி ஏற்படுத்தப்படும். நாட்டில் அமைதியான சூழ்நிலையை உருவாக்குவதே எங்கள் தணியாத ஆசை பொது நன்மைக்கான வளர்ச்சிப் பணிகளுக்கான பணிகள் மேற்கொள்ளப் படும்.
10. இனம், மொழி, மதம் ஆகிய வேறுபாடுகள் இல்லாமல் கல்வித் தகுதி, திறமை ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியர்களுக்கு அரசு 1858 பதவிகள் கொடுக்கப்படும். மேலும் கடமையாற்றுவதில் திறமை, நேர்மை ஆகியவற்றின் அடிப்படையில் பதிவியிலமர்த்தும் கொள்கை கடை பிடிக்கப்படும்.
11. ஆங்கில குடிமக்களின் கொலைகளில் நேரடியாகச் சம்பந்தப் பட்டவர்கள் தவிர, 1857-58 - ம் வருட புரட்சியில் பங்குகொண்ட எல்லா மக்களுக்கும் பொது மன்னிப்பு (பநெசயட யஅநௌவல) அளிக்கப்படும்.
12. மகாராணியாரின் பேரறிவிப்பில் கடைசிக்கு முந்தின வரி மிகவும் புகழ் பெற்ற வரிகளாகும். அவர்களின் (இந்திய மக்கள் ) வளம், அபிவிருத்தி முன்னேற்றத்திலேயே எங்கள் வலிமை, அவர்களின் மனத் திருப்தியே எங்கள் பாதுகாப்பு, அவர்களது நன்றி உணர்வே எங்களுக்கு கிடைக்கும் சன்மானம் ஆகும். (in their prosperity will be our strength, in their contentment our security, and in their gratitude our best reward).

**மகாராணியாரின் பேரறிவிப்பு பற்றிய மதிப்பீடு :**

மகாராணியாரின் பேரறிவிப்பு இந்திய மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதாக அமைந்தது. பிரிட்டி' அரசின் பெருந்தன்மை (பயால் மக்கள் பூரித்துப் போய் விட்டனர். வைசிராய் கானிங் பிரபுவை கருணைமிக்க கானிங் என்று போற்றி கொண்டாடினர். வானமே பூமிக்கு வந்து விட்டதை போன்று பெருமகிழ்ச்சியடைந்தனர்.

ஆனால் உண்மையில் மகாராணியாரின் பேரறிவிப்பு வெற்று வார்த்தைகளின் பத்திரம் என்றுதான் கூறவேண்டும். பெருந்தன்மையான வார்த்தைகளைக் கொண்டது. ஆனால் கருமித்தனமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. (பநநெசழரளடல றழசனநன டிரவ ௌைபநசனடைல ைஇடநஅநவெநன) என்று குறை கூறப்பட்டது.

நாட்டின் உயர் பதவிகளில் நிறம், இனம், மொழி வேறுபாடில் லாமல் தகுதி பெற்றவர்களே நியமனம் செய்யப்படுவர் என்பது வெறும் ஏட்டளவில் தான் இருந்தது. நடைமுறைக்கு வரவேயில்லை. உயர்பதவி களில் ஆங்கிலேயர்களே நியமிக்கப்பட்டனர். இந்தியர்கள் எடுபிடி வேலை களுக்கும், தண்ணீர் இறைப்பதற்குமே தகுதியானவர்கள் என்று ஆங்கிலேயர் கருதினர். முதல் உலகப் போர் வரை படையிலும் இந்தியர் களுக்கு உயர் பதவி கொடுக்கப்படவில்லை .

நாடு பிடிக்கும் ஆசையில் நாட்டம் இல்லை என்று கூறப் பட்டாலும், சுதேச அரசர்களின் உரிமை, அந்தஸ்து ஆகியவை காக்கப்படும் என்று உறுதிமொழி அளித்தாலும் நடைமுறையில் சுதேச அரசர்கள் பிரிட்டி' அரசின் மேலாண்மையின் கீழ் செல்வாக்கிழந்தே காணப்பட்டார்கள். பிரிட்டி' அரசின் கைகளில் உள்ள பொம்மைகள் போன்றே விளங்கினர். தங்கள் மதிப்பு கௌரவம் ஆகியவற்றை இழந்து விட்டனர்.

1858-ம் வருடத்திற்குப் பிறகு உள்ள இந்திய வரலாற்றைப் படித்தால் பேரரசியாரின் பேரறிக்கையில் காணப்படும் எந்தக் கொள்கை சயல்படுத்தப்படவில்லை என்பது நன்கு புலப்படும்.

## 8.3 வைசிராய்களின் காலம்

## 8.4 கானிங் பிரபு (Lord Canning)

சார்லஸ் ஜான் கானிங் 1856-ம் ஆண்டு டல்ஹௌசிப் பிரபுக்குப் பிறகு கவர்னர் ஜெனரலாகப் பதவி ஏற்றார். இவர் 1827-ல் இங்கிலாந்தின் புகழ்பெற்ற பிரதமராக இருந்த ஜார்ஜ் கானிங் பிரபுவின் புதல்வராவார். 1812 - ம் ஆண்டு பிறந்த கானிங் பிரபு திறமையும், ஊக்கமும் மிக்கவர். தன்னலம் அற்றவர். இவர் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படித்து பட்டம் பெற்றார். 1852- ம் ஆண்டு முதல் இங்கிலாந்தின் அஞ்சல் துறைத் தலைவராகப் பணியாற்றினார். அதன்பிறகு இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். 1856- பிப்ரவரி மாதம் கல்கத்தா வந்து சேர்ந்தார். இந்தியாவின் கடைசி கவர்னர் ஜெனரலாகவும் (1856 - 58), முதல் வைசிராயாகவும் (1858-62) பணியாற்றினார் கானிங்பிரபு.

**கானிங்பிரபு காலத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகள் :**

### 1) பாரசீகப் போர்: 1856.

1856-ல் பாரசீகம் ஹீரட்டைத் தாக்கியது. இதை எதிர்த்து கானிங்பிரபு பாரசீக வளைகுடாவிற்கு ஒரு கப்பற்படையை அட்மிரல் ஜேம்ஸ் அவுட்ராம் (James outram) என்பவர் தலைமையில் அனுப்பினார். அப்படை பாரசீகத்தைத் தோற்கடித்தது. 1857- மே மாதம் பாரசீகத்துடன் ஒரு உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. அதன்படி பாரசீகர்கள்ஹீரட்டை விட்டு வெளியேற வேண்டும். அத்துடன் ஆப்கானிஸ்தான் விவகாரத்திலும் தலையிடாமல் இருக்க பாரசீகம் ஒப்புக் கொண்டது. ஆப்கானிய அரசர் தோஸ்த் முகமதுவுடன் கானிங்பிரபு ஒரு நட்பு உடன்படிக்கையை செய்து கொண்டார்.

### 2) 1856-ம் வருட பொதுச் சேவைச் சட்டம் : (General Service enlistment Act.)

படைக்கு ஆள் சேர்ப்பது குறித்து 1856-ஜுலை 25-ம் தேதி கானிங்பிரபு ஒரு சட்டம் இயற்றினார். அதன்படி இந்தியாவில் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் போய் பணியாற்ற விருப்பம் உள்ளவர்கள் மட்டுமே படையில் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்று அறிவிக்கப்பட்டது. இதனால் வைதீகக் கொள்கையைப் பின்பற்றிய பல இந்துக்கள் கடல் கடந்து செல்ல விரும்பவில்லை. எனவே அவர்கள் படையில் சேர முடியாமல் போனது.

1856-ஜுலை 26-ல் மற்றொரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி இந்து விதவைகள் மறுமணம் செய்து கொள்வது அனுமதிக்கப்பட்டது. அத்துடன் அதன்படி பிறக்கும் குழந்தைகளுக்கு முறைப்படி குடும்பச் சொத்தில் எல்லா உரிமைகளும் உண்டு என்று கூறப்பட்டது.

மேற்கண்ட இரண்டு சட்டங்களையும் வைதீக இந்துக்கள் மனத்தைப் புண்படுத்தியது. அவர்கள் எரிச்சலடைந்தனர். இந்த சட்டங்கள் மூலம் இந்து சமய பழக்க வழக்கங்களையும், சமயக் கொள்கைகளையும் ஆங்கிலேயர் அழிக்க முற்படுகின்றனர் என்று எண்ணினர். கிறிஸ்தவ மதத்தைப் பரப்பவே கானிங் பிரபு இந்தியா வந்திருப்பதாக எண்ணினர்.

**3) சிப்பாய்க் கலகம்: 1857**

டல்ஹௌசி பிரபுவின் நாடு சேர்க்கும் கொள்கையால் மனம் வருந்திய இந்திய மக்களின் எரிச்சல் கானிங்பிரபு காலத்தில் புரட்சியாக வெடித்தது. 1855-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இவர் ஆற்றிய சொற்பொழிவு ஒன்றில் இந்தியாவைப் பற்றி குறிப்பிட்டது குறிப்பிடத்தக்கது ஆகும்.

நிகழ்ச்சிகள் எவ்வளவு அமைதியாகத் தோன்றினாலும் இந்தியாவில் எச்சமயத்திலும் எதுவும் நிகழக்கூடும். ஒரு மனிதனின் கையைவிடப் பெரிதாக இல்லாத ஒரு சிறிய மேகம் தோன்றி வர வரப் பெரிதாகி இறுதியில் வெடித்து நமக்கு அழிவை உண்டாக்கக் கூடும் என்பதை நாம் மறக்கக் கூடாது என்றார் கானிங்.

இந்தக் குறிப்பு இந்திய சிப்பாய் கலகத்தைப் பற்றிய முன்னறி குறிகளை அவர் ஓரளவு உணர்ந்திருந்தார் என்று காட்டுகிறது. ஆனால் ஏற்பட்ட கலகத்தை மிகத் திறமையாகவும் தந்திரமாகவும் அடக்கி புகழ் பெற்றார் கானிங். புரட்சியில் பங்கு கொண்ட இந்தியர்களிடம் வெகு

இரக்கமாகவும், நியாயமாகவும் நடந்து கொண்டார். இதனால் தான் இவருக்கு காருண்ய கானிங் என்ற (ஊயடநைஅநெஉல வாந உடநஅநஉெல) துணைப் பெயர் வழங்கப்பட்டது.

**4) வெள்ளையர் படைக்கலகம்:1859, The white Mutiny.**

1858-ம் வருட சட்டப்படி கம்பெனியின் நிர்வாகத்தை இங்கிலாந்து அரசு நேரடியாக ஏற்றுக் கொண்டது. கம்பனியின் பணியாளர் எல்லோரும் இங்கிலாந்து ராணியின் பணியாளர் ஆயினர். கம்பெனியின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த ஐரோப்பியப் படையினர் தங்கள் இசைவைப் பெறாமலேயே இந்திய ஆட்சிப் பொறுப்பை பேரரசியார் ஏற்றுக் கொண்டதால் கோபமடைந்து அரசுக்கு எதிராக 1859 - மே மாதம் சுமார் 16,000 வீரர்கள் கலகம் செய்தனர். இதற்கு வெள்ளையர் படைக் கலகம்“ என்று பெயர். ஆனால் இக்கலகம் எளிதில் அடக்கப்பட்டு விட்டது. சுமார் பத்தாயிரம் வீரர்கள் பணியிலிருந்து வெளியேறினர். அடுத்த ஆண்டில் கம்பனியாரின் படை பேரரசியாரின் படையுடன் இணைக்கப்பட்டது.

**5) புதிய சட்டங்கள் இயற்றப்படல் : 1861**

கானிங் பிரபு காலத்தில் 1861 - ம் வருடத்தில் இந்திய கவுன்சில் சட்டமும், இந்திய அரசு பணிச்சட்டமும், இந்திய உயர்நீதி மன்றங்களின் சட்டமும் இயற்றப்பட்டது. 1861 - ம் வருட இந்தியக்கவுன்சில் சட்டம் இந்த நூலின் மற்றொரு பகுதியில் விளக்கப்பட்டுள்ளது. இந்திய அரசுப் பணி சட்டப்படி பல நியமனங்கள் சிவில் பணியாளர்களுக்கு ஒதுக்கி வைக்கப்பட்டது. உயர் நீதி மன்றங்களின் சட்டப்படி தலைமை நீதி மன்றமும் சடர் நீதிமன்றங்களும் இணைக்கப்பட்டன. மேலும் கல்கத்தா, சென்னை , பம்பாய் ஆகிய இடங்களில் 15 நீதிபதிகளும், ஒரு தலைமை நீதிபதியும் கொண்ட உயர்நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டன. 1866-ல் அலகாபாத்தில் ஒரு உயர்நீதி மன்றம் அமைக்கப்பட்டது.

### 6) வங்காளக் குத்தகைச் சட்டம் : (The Bengal Tenancy Act; 1859)

1859-ல் வங்காளக் குத்தகைச் சட்டம் இயற்றப்பட்டது. இதன்படி 12 ஆண்டுகளாக ஒரு நிலத்தை தொடர்ந்து விவசாயம் செய்து வரும் குடியானவரிடமிருந்து நீதிமன்ற உத்தரவில்லாமல் அதிகவரியைப் பெறக் கூடாது. 12 ஆண்டுகள் முடிந்தவுடன் எவ்விதத் தடையுமில்லாமல் அந்த நிலத்தின் உரிமையை அக்குடியானவரே அனுபவிக்கலாம்.

அஸ்ஸாம் மற்றும் நீலகிரி மலைப்பகுதியில் காப்பி, தேயிலை பயிரிடும் ஐரோப்பியர்களுக்கு பல சலுகைகள் வழங்கப்பட்டது. வங்காளக் குடியானவர்கள் எவ்வாறு ஐரோப்பிய சாயச் செடி சாகுபடியாளர்களால் (ஐனெபைழ ீடயவெநசள) கொடுமைப்படுத்தப்படுகிறார்கள் என்பதை விளக்கும் "நீல்தர்பான்'' (வேை னுயசியெ) என்ற நாடகத்தை னு. டீ. மித்ரா (ஆவைசய) என்பவர் எழுதினார்.

### 7) நிதிச் சீர்திருத்தங்கள் : Financial reforms:

இந்தியப் பெருங்கலகத்தாலும், சமூக நிர்வாக புனரமைப் பினாலும் 1857 முதல் 1861-ம் வருடத்திற்குள் அரசுக்கு 36 கோடி ரூபாய் பற்றாக் குறை ஏற்பட்டிருந்தது. இந்த நிலையை சீர்படுத்த அரசு செலவு குறைக்கப்பட்டது. தேவையற்ற பல பதவிகள் ஒழிக்கப்பட்டன. வரி அதிகரிக்கப்பட்டது. இந்த சீர்திருத்தங்கள் 1859-ல் இந்தியா வந்த ஜேம்ஸ் வில்சன் என்பவரின் ஆலோசனையின் பேரில் செயல்படுத்தப் பட்டது. முதன் முதலாக வருமான வரி விதிக்கப்பட்டது. தொழில் வரியும், வியாபாரம் செய்ய லைசென்ஸ் எடுக்கும் முறையும் அறிமுகப்படுத்தப் பட்டது. ராணுவச் செலவுகள் குறைக்கப்பட்டது. உப்புவரி உயர்த்தப் பட்டது. காகித நாணயம் வெளியிடப்பட்டது. இதன்மூலம் 1862- க்குள் பற்றாக்குறை சரி செய்யப்பட்டது.

### 8) நீதித்துறை சீர்திருத்தம் : Judicial reforms

கானிங்பிரபு காலத்தில் சட்டங்கள் ஒழுங்கு படுத்தப்பட்டன. 1837-ல் மெக்காலே தொகுத்த இந்திய தண்டனை விதித் தொகுப்பு சில மாறுதல்களுடன் 1860-ல் அமுல்படுத்தப்பட்டது. 1861-ல் கிரிமினல் நடைமுறைத் தொகுதியும், 1859-ல் சிவில் நடைமுறைத் தொகுதியும் நடைமுறைக்கு வந்தது.

### 9) கல்விச் சீர்திருத்தம் : Educational reforms

1854-ல் சமர்பிக்கப்பட்ட வுட்ஸ் என்பவரின் அறிக்கையின்படி 1857-ல் சென்னை , பம்பாய், கல்கத்தா, ஆகிய இடங்களில் பல்கலைக்கழகங்கள் அமைக்கப்பட்டன. 1858-ல் இந்தியாவில் மொத்தம் 13 பல்கலைக்கழகங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அவைகளில் சுமார் 40,000 மாணவர் பயின்று வந்தனர்.

**10) நிர்வாகச் சீர்திருத்தங்கள்:**

புரட்சியின் காரணமாக இந்தியாவில் மக்களாட்சி முறைக்கு அடிகோலியவர் கானிங்பிரபு என்றே சொல்ல வேண்டும். 1861 - ம் வருடச் சட்டப்படி அறிமுகப்படுத்தப்பட்ட இலாக்காக்கள் பிரித்துக் கொடுக்கும் முறையை (ீழசவகழடழை ளலளவநஅ) நடைமுறைப்படுத்தினார். மத்திய சட்டம் இயற்றும் சபையில் இந்தியர்கள் உறுப்பினர்களாகும் வாய்ப்பை உண்டு பண்ணினார்.

**11) பஞ்ச நிவாரணம்:**

புரட்சியின் காரணமாகவும், மழை இல்லாததாலும் கானிங் பிரபு காலத்தில் 1861-ல் ஆக்ரா, இரஜபுதனம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் கடுமையான பஞ்சம் ஏற்பட்டது. ஏராளமான பணம் செலவிட்டு மக்களின் துயரைகளைவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்தது. பஞ்சத்திற்கான காரணங்கள் பற்றி அறிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. அந்த விசாரணையை மேற்கொண்ட கர்னல் பயர்ட் ஸ்மித் என்பவர் நிலையான நிலவரித் திட்டம் ஒன்றை இந்தியா முழுமைக்கும் அறிமுகப்படுத்த வேண்டும் என்று அரசுக்கு ஆலோசனை கூறினார்.

**மதிப்பீடு :**

இந்திய வரலாற்றில் மிக முக்கியமான கட்டத்தில் ஆட்சியின் மிக உயர்ந்த பதவியிலிருந்த பெருமை கானிங் பிரபுவையே சாரும். இரக்கத்திற்கும், பெரும் வீரத்திற்கும் பெயர் பெற்றவர் கானிங். படையினரின் பெரும் புரட்சியின் போது உணர்ச்சி வசப்படாமலும், கோபப்படாமலும், வீரத்துடனும் வியத்தகு முறையில் நடந்து கொண்டார் கானிங். ஆங்கிலேயரில் பலர் கலக்காரர்கள் மீது பழி தீர்த்துக் கொள்ள விரும்பினர். ஆனால் கானிங் கருணையுடனும் முறைப்படியும் நடந்து கொண்டு இந்தியர்களின் மதிப்பைப் பெற்றார். படைக் கலகத்தின் போது ஆங்கிலேயர்களுக்கு உதவி செய்த அனைவருக்கும் விருதுகளும், உயர்பதவிகளும், நன்கொடைகளும் அளித்து கௌரவித்தார்.

கானிங் பிரபு உயர்ந்த உள்ளம் கொண்டவர். நன்கு சீர்தூக்கிப் பாராமல் எந்த முடிவும் எடுப்பதில்லை . எப்போதும் நடுநிலை தவறியதில்லை. அவருக்கு சுயநலமோ, பேராசையோ கிடையாது. வெளிப்பகட்டை இவர்மனம் நாடவில்லை. ஓயாது உழைத்ததால் உடல் நலம் கெட்டு ஆயுள் காலம் குறைந்தது. 1862-ல் மார்ச் மாதம் இங்கிலாந்து திரும்பிய கானிங் ஜூன் மாதம் மரணமடைந்தார்.

**கானிங்பிரபுக்கு பின்வந்த வைசிராய்கள்:**

எல்ஜின் பிரபு (1862-63)

லாரன்ஸ் பிரபு (1864 - 69)

மேயோபிரபு (1869-72)

நார்த்புரூக் பிரபு(1872-76)

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

1. இந்தியாவை இங்கிலாந்தின் நேரடி ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்ட ஆண்டு?
2. விக்டோரிய மகாராணியின் பிரகடனத்தை இந்தியாவில் அறிவித்த வைசிராய்?
3. விக்டோரிய மகாராணியின் பேறிக்கையை தயாரித்தவர் யார்?
4. 1856-ல் பாரசீகம் யாரை தாக்கியது?

5. வங்காள குத்தகை சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு?

## 8.5 லிட்டன் பிரபு - (Lord Lytton 1876-80)

நார்த்புரூக் பிரபுவுக்குப் பின்னர் இந்தியாவின் வைசிராயாக நியமிக்கப்பட்டவர் லிட்டன் பிரபு ஆவார். இவர் வைசிராயாக நியமிக்கப்படுவதற்கு முன்பே இந்திய வெளிநாட்டுக் கொள்கையை நன்கு அறிந்து வைத்திருந்தார். 1852-ம் ஆண்டு முதல் இங்கிலாந்து அரசின் அயல்நாட்டுத்துறையில் பணியாற்றினார். சிறந்த ராஜதந்திரி ஆட்சித்திறன் மிக்கவர். மத்திய ஆசியாவில் ரஷ்யர்கள் தங்கள் செல்வாக்கை பரப்பி வந்த சமயத்தில்லிட்டனைப் போல திறமைமிக்க ஒருவர் இந்திய அரசாங்கத்தின் தலைவராக இருக்க வேண்டும் என்று உணர்ந்து இங்கிலாந்து பிரதமர் டிசரலியால் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார்லிட்டன். 1896 ஏப்ரல் மாதம் கல்கத்தா வந்து சேர்ந்தார். இவர் தனது காலத்தில் பல சீர்திருத்தங்களை மேற்கொண்டார். அவை பிரிட்டி' பேரரசின் ஆதிக்கத்திற்கு அனுகூலமாகவும் இந்தியர்களுக்கு பாதகமாகவும் இருந்தன. இந்திய மக்களின் வெறுப்புக்குள்ளானார் லிட்டன். லிட்டன் பிரபு ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற மிக முக்கியமான நிகழ்ச்சி இரண்டாம் ஆப்கானியப் போராகும்.

**1) லிட்டனும் தடை இல்லா வாணிபமும்:**

இங்கிலாந்தில் தீவிரமாக வளர்ச்சி பெற்று வந்த தொழில் முன்னேற்றத்தைக் கருதி தடையில்லா வாணிபத்தை ஆதரித்து வந்தது பிரிட்டிஷ் அரசு. பம்பாயில் இருந்த பருத்தி ஆலைகள் லங்காஷயரிலிருந்த தொழிலதிபர்களின் பொறாமைக்குள்ளானது. அவர்கள் இங்கிலாந்தி லிருந்து இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட பருத்தி ஆடைகள் மீது விதிக்கப்பட்ட இறக்குமதி வரியை நீக்கக் கோரினர். லங்காஷயர் மக்களின் ஆதரவை பெற விரும்பிய கன்சர் வேட்டிவ் கட்சியினர் அதை ஆதரித்து வைசிராயிக்கு கட்டளை இட்டனர். இந்தியாவில் நிலவிய மோசமான நிலையையும், பஞ்சத்தையும் பொருட்படுத்தாது இறக்குமதி வரி அகற்றப்பட்டது. இந்திய ஆலோசனைக் குழுவினரில் பாதிப்பேர் எதிர்த்த போதிலும் தடையில்லா வாணிப முறை இந்தியாவில் அமுல்படுத்தப் பட்டது.

**2) நிதி சீர்திருத்தங்கள்:**

மாநிலங்கள் சம்பந்தப்பட்ட நிலவரி, முத்திரை, நீதி, சட்டம், பொது நிர்வாகம் முதலிய இலாக்காக்களின் வரவு செலவு முழுவதையுமே மாநிலங்களே கண்காணிக்கும் உரிமை கொடுக்கப்பட்டது. புதிதாக மாற்றப்பட்ட துறைகளுக்கென பொதுநிதியிலிருந்து அதிகமான தொகை செலுத்தப்படவில்லை. ஆனால் லாபமோ ந'டமோ ஏற்பட்டால் மத்திய அரசும் மாநில அரசும் அதைச் சமமாகப் பங்கிட்டுக் கொள்ள வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. இதனால் மாநிலங்கள் தங்கள் வருமானத்தை அதிகரித்து லாபமடைய முன் வரும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

வைசிராயின் சபையிலிருந்த நிதி உறுப்பினரான சர்ஜான் ஸ்ட்ராச்சி என்பவர் தந்திரமாக இந்திய அரசர்களுடன் தொடர்பு கொண்டு உப்பு உற்பத்தியின் உரிமையைப் பெற்றார். இதனால், மாநிலங்களுக்கிடையே உப்புக் கடத்தல் நின்றதுடன் உப்பு வரி அரசுக்கு ஒரு சிறந்த வருமானமாக ஆனது.

**3) லிட்டனின் பஞ்ச நிவாரணத் திட்டங்கள்:**

லிட்டன் பிரபு காலத்தில் இந்தியாவில் பல பகுதிகளிலும் கொடிய பஞ்சம் 1876-78 வருடங்களில் நிலவியது. பஞ்சத்துடன் வாந்தி, பேதி,

காய்ச்சல் போன்ற கொடிய நோய்களும் சேர்ந்து மக்களைத் துன்புறுத்தின. சென்னை , மைசூர், ஹைதராபாத், பம்பாய் முதலிய மாநிலங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. ஐம்பது லட்சத்துக்கும் மேலான மக்கள் மடிந்தனர். இது மிகக் கொடிய பஞ்சமாகும். பஞ்ச நிவாரணக் கொள்கைகளும், முறைகளும் தெளிவாக இல்லாததால், லிட்டனின் பஞ்ச நிவாரண நடவடிக்கைகள் சரியான பலனைத் தரவில்லை .

எனவே பஞ்ச நிவாரணம் பற்றிய ஒரு பொதுக் கொள்கை ஒன்றை ஏற்படுத்த விரும்பிய லிட்டன் 1878-ல் சர் ரிச்சர்ட் ஸ்ட்ராச்சி என்பவரின் தலைமையில், முதலாவது பஞ்ச நிவாரண ஆய்வுக் குழு ஒன்றை அமைத்தார். 1880ல் அக்குழு தனது பரிந்துரைகளை அரசிடம் சமர்ப்பித்தது. அதன்படி,

a) உடல் வலிமையுடைய ஏழைகளுக்கு வேலையும் கூலியும் கொடுக்கப்பட வேண்டும்.
b) வேலை செய்ய முடியாதவர்களுக்கு உதவித் தொகை கொடுக்க வேண்டும்.
c) பஞ்சத்திற்கு இலக்காகும் பகுதிகளில் புகைவண்டிப் பாதை அமைத்தல், கால்வாய் வெட்டுதல், பாதுகாப்பு வேலைகள் செய்தல் ஆகியவற்றுக்காக ஆண்டுதோறும் வரவு செலவு திட்டத்தில் ஒன்றரைக் கோடி ரூபாய் ஒதுக்கப்படுதல் வேண்டும்.

இந்த பரிந்துரைகளை அரசு ஏற்றுக் கொண்டது. இவ்வாறு பயனுள்ள முறையில் பஞ்ச நிவாரண ஏற்பாடுகள் உருவாயின. சுருங்கக் கூறினால் இன்றைய இந்திய அரசின் பஞ்ச நிவாரணக் கொள்கையைத் தொடங்கி வைத்தவர் லிட்டன் என்று கூறலாம்.

**4) அரசுரிமைப் பட்டயச் சட்டம் (1876):**

இங்கிலாந்து பாராளுமன்றம் 1876-ல் அரசுரிமைப் பட்டய சட்டம் ஒன்றை இயற்றி அதன்படி விக்டோரியா மகாராணிக்கு இந்தியாவின் பேரரசி (Queen Empress of India) என்று பொருள்படியான ர்யஉைநச-ர்ைனெ என்ற பட்டத்தைச் சூட்டியது. இந்திய மக்களுக்கும், அரசர்களுக்கும் தெரிவிப்பதற்காக 1877 ஜனவரி 11-ம் தேதி தர்பார் ஒன்று டில்லியில் சிறப்பாக நடைபெற்றது. லட்சக்கணக்கான மக்கள் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் போது லிட்டனால் ஆடம்பரமாக இந்த விழா நடத்தப்பட்டதைக் கண்டு தலைவர்கள் கண்டித்தனர். இந்தியாவின் பரிதாப நிலையை மக்களில் ஒரு சிலர் உணர்ந்து தங்கள் தேசிய உணர்வு மட்டுப்படுத்தப்படுவதைக் கண்டனர். இது ரோமாபுரி எரிந்து கொண்டிருந்த போது நீரோ வீணை வாசித்துக் கொண்டிருந்ததைப் போன்றிருந்தது.இந்திய சுதேச அரசர்களைக் கப்பம் கட்டுகிறவர்களாகவும், இந்திய மக்களை பிரிட்டி' குடிகளாகவும் மாறச் செய்த வைபவம்" என்று தர்பாரைப் பற்றிக் கூறினார் லாலா லஜபதிராய். கல்வியறிவு படைத்த இந்திய மக்களிடம் கிளர்ச்சி மனப்பான்மையை ஏற்படுத்தியது. லிட்டனின் இச் செயல்கள் இந்திய தேசிய இயக்கம் ஏற்படக் காரணமாயின. இந்தியா இந்தியருக்கே என்ற கோ'த்தை எழுப்பினார் லஜபதிராய். இந்தியர் உரிமைகளைப் பாதுகாக்கும் சங்கங்களை அமைக்க முன்வந்தார் சுரேந்திரநாத் பானர்ஜி

**5) இந்திய மொழி அச்சகச் சட்டம்: 1878**

பஞ்சத்தினால் மாண்ட மக்களைப் பற்றி ஒரு சிறிதேனும், கவலைப்படாத ஆங்கில அரசின் கொள்கைகளை வெறுத்த இந்தியப் பத்திரிக்கைகள் அரசைக் குறை கூற ஆரம்பித்தன. இதனைக்கண்டு அதிர்ச்சியடைந்த லிட்டன் அப்பத்திரிக்கைகளை தணிக்கை செய்து கட்டுப்படுத்த நினைத்தார். எல்லா அச்சகத்தினரும், பத்திரிக்கையாளரும் அரசாங்கத்தைப் பழித்துக் கூறுவதும் மதம், நிறம், ஜாதி அடிப்படையில்

செய்திகளை அச்சடிப்பதும் இல்லை வெளியிடுவதும் இல்லை என ஒப்பந்தம் செய்து கொள்ளும் சட்டம் ஒன்றை 1878-ல் பிறப்பித்தார்லிட்டன். உறுதிக் காப்பீட்டுத் தொகையும் கட்ட வேண்டும் என்று கூறப்பட்டது: தாங்கள் அச்சிடும் எல்லா செய்திகளின் அச்சக நகலையும் அரசு தணிக்கைக்கு அனுப்பும் அச்சகங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டது. எனவே இந்தச் சட்டம் கழுத்தை இறுக்கும் சட்டம் (வுாந பயபபைெ யுஉவ) என பழித்துக் கூறப்பட்டது. இச்சட்டம் பத்திரிக்கைகளைக் கட்டுப்படுத்திய போதிலும் மக்களிடையே ஆங்கிலேயரைப் பற்றிய வெறுப்பை வளர்த்தது.

**6) ஆயுதக் கட்டுப்பாட்டு சட்டம்: 1878**

அரசாங்கத்தின் அதிகாரம் பெறாமல் ஆயுதங்களை வைத்திருப்பதும், பிரயாணத்தின் போது கொண்டு செல்வதும் சட்ட விரோதம் என்றும், சட்டங்களை மீறுகிறவர்கள் மூன்று மாதம் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டுமென்றும் 1878-ல் மற்றொரு சட்டம் பிறப்பிக்கப்பட்டது. ஆனால் இச்சட்டத்திலிருந்து ஆங்கிலேயர்களுக்கும், ஆங்கிலோ இந்தியர்களுக்கு, உயர் அரசு அலுவலர்களுக்கும் விதிவிலக்கு அளிக்கப்பட்டது. இதனால் மக்களிடையே வெறுப்பு ஏற்பட்டது. இந்தியர்களைப் பற்றிய பயமும், அவர்கள் மீது ஆங்கிலேயர்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதும் இத்திட்டத்தின் மூலம் தெளிவானது.

**7) நிரந்தர நிர்வாக அலுவலர் சட்டம்:**

1833 - ம் வருடம் பிறப்பிக்கப்பட்ட பட்டயச் சட்டத்தின்படி நிறம், மொழி, மதம் அடிப்படையில் இல்லாமல் திறமை என்ற அடிப்படையில் எல்லாப் பதவிகளும் கொடுக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. ஆனால் அது முறையாகச் செயல்படுத்தப்படவில்லை . 1853-ம் வருடப் பட்டயச் சட்டத்தின்படி லண்டனில் நடைபெற்ற போட்டித் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கே உயர் பதவிகள் கொடுக்கப்பட வேண்டும் என்றாயிற்று. அதன்படி அந்தத் தேர்வில் முதன் முதல் 1864-ல் வெற்றி பெற்றவர் சக்தியேந்திரநாத்தாகூர் என்பவர் ஆவார். 1870-ல் ஐந்தில் ஒரு பகுதி அலுவல்கள் இந்தியர்களுக்கென ஒதுக்கப்பட்டது.

ஆனால் இந்திய சிவில் நிர்வாக வேலைகளுக்கு இந்தியர்களின் வாய்ப்பு குறைக்கப்பட வேண்டும் என்றும் ஐஊளு தேர்வுகளுக்கு அவர்கள் அருகதையற்றவர்கள் என்றும் கருதினார் லிட்டன். ஏற்கனவே பதவி வசித்து வந்த இந்தியர்களுக்கு கூட ந்'ட ஈடு கொடுத்து பதவி விலக செய்தார். இந்தியர்களுக்கு - உயர்ந்த அலுவல்கட்கான வாய்ப்பு கொடுக்காமல் திட்டமிட்டே செயலாற்றினார் லிட்டன். மாநில அரசின் பரிந்துறையின் பேரில் தான் இந்தியக் காரியதாரிசி இந்தியர்களைப் பதவியிலமர்த்தலாம் என்றார் லிட்டன். இந்திய மக்களின் வாய்ப்பைக் குறைப்பதற்காக உயர்ந்த அலுவலர்களின் தேர்வுக்கான வயது வரம்பை 19 ஆகக்குறைத்தார்லிட்டன். இந்திய சிவில் சர்வீஸ்துறைக்கு இந்தியர்களை நுழையவிடாமல் தடுப்பதற்கு லிட்டன் பிரபு செய்த ஒரு வெளிப்படையான முயற்சியே இது“ என்று கண்டித்தார் சுரேந்திரநாத் பானர்ஜி.

**லிட்டனின் இதர சீர்திருத்தங்கள்:**

**a) அலிகார் கல்லூரி:**

இஸ்லாமிய ஆங்கிலேய கலைகளை வளர்ப்பதற்காக அலிகார் என்னுமிடத்தில் ஒர்கல்லூரியை ஆரம்பித்தார் லிட்டன். அதற்கு காரணமாக இருந்தவர் சர் சையது அகமது கான் என்பவராவார். அதுவே தற்போது

அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகமாக வளர்ச்சியடைந்துள்ளது.

**b) பொன்திட்டம்:**

இந்தியாவில் வெள்ளி நாணய மதிப்பீட்டிற்குப் பதிலாக தங்க நாணய அடிப்படை மதிப்பீட்டைக் கொண்டு வந்தவர் லிட்டன் பிரபுவே ஆவார்.

**c) நீதித்துறை சீர்திருத்தம்:**

நிதித்துறையில் இந்தியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்ட லிட்டன் பிரபு இந்தியர்கள் அநியாயமாகத் தண்டிக்கப்படுவதைத் தடுத்தார். ஆங்கிலேயரும் இந்தியரும் ஒரே நீதி மன்றத்தில் விசாரிக்கப்பட ஏற்பாடு செய்தார்.

**d) ஸ்தல ஆட்சி முறை:**

முதன் முதலில் ஆங்கில ஆட்சிக்கு உட்பட்ட பகுதியில் ஸ்தல சுயாட்சி முறையை அமைத்து அதில் இந்தியர்களை ஈடுபடும்படி செய்தவர் லிட்டன் பிரபுவே ஆவார். அதனைத் தொடர்ந்து ரிப்பன் பிரபு ஸ்தல சுயாட்சி முறையை வளர்த்து இந்திய மக்களை அதில் பழக்குவித்தார்.

**e) இரண்டாம் ஆப்கானியப்போர்:**

வடமேற்கு எல்லைப் பகுதியில் ஒரு காவல் துறையை அமைத்து அதைப் பாதுகாக்கப் போவதாகச் சொல்லி இரண்டாம் ஆப்கானியப் போருக்குக் காரணமானார் லிட்டன். (இரண்டாம் ஆப்கானியப் போர் தனியாக விரிவாக தரப்பட்டுள்ளது) அப்போர் கேவலமான தோல்வியில் முடிவடைந்து நாட்டின் கருவூலத்தையே காலிபண்ணியது.

**மதிப்பீடு:**

லிட்டன் மதிநுட்பம் மிகுந்தவர். சிறந்த அறிவும் திறமையும் பெற்றவர். எதையும் ஆராய்ந்து செயலாற்றும் தன்மை கொண்டவர். தங்கு தடையின்றி விரைந்து பேசும் பேச்சாற்றல் கொண்டவர். மத்திய அரசின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் வடமேற்குப் பகுதியில் ஒரு மாநிலத்தை அமைத்தால் நாடு பாதுகாப்புடன் விளங்குமென்று கருதினார் லிட்டன். இவருடைய திட்டமே கர்சான் பிரபு காலத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஆங்கில பெருமக்களுக்கு அளிக்கப்படுவதைப் போன்ற பட்டங்கள் இந்தியர்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்றும் அரச பிரதி நிதிக்கு ஆலோசனை கூற இந்திய சிற்றரசர்களைக் கொண்ட குழு ஒன்று (Chamber of Princes) அமைக்கப்பட வேண்டும் என்ற இவரது திட்டம் 1921 - ல் நடைமுறைக்கு வந்தது. என்றாலும் வைசிராயாக லிட்டன் சிறப்பு பெறவில்லை . மக்களிடம் மதிப்பிழந்தார்.

இந்தியாவில் அதிகாரம் வகித்து இந்தியர்களுக்குத் தீங்கிழைத்து இந்தியாவிலிருந்த பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு அவமானத்தையும் வாங்கிக் கொடுத்தவர்லிட்டனும், ஹர்சான் பிரபுவுமே என்று சகாரியா என்பவர் கூறுகிறார்.

லிட்டன் பிரபு ஒரு இந்திய அரச பிரதிநிதி எப்படி இருக்க வேண்டுமோ அதற்கு மாறுபட்ட தன்மையுடன் இருந்தார். அவரது ஒப்புக் கொள்ளப்படாத பிற்போக்கான திட்டங்கள் மக்கள் மனதில் வெறுப்பை உண்டு பண்ணின" என்று ஹாரிங்டன் பிரபு கூறுகிறார்.

எவ்வாறாயினும் லிட்டனின் செயல்கள் இந்திய மக்களின் தேசிய உணர்ச்சியைத் தூண்டி பல சங்கங்கள் அமைக்க உதவின. அவரை அறியாமலேயே அவரது திட்டங்கள் மக்களின் சுதந்திர வேட்கையை

வளர்த்தன. இதனால் லிட்டன் பிரபுவின் காலம் இந்திய வரலாற்றில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்திய நற்காலம் ஒன்றே சொல்லப்படல் வேண்டும். இந்தியர்களை அடக்கி ஒடுக்கி ஆங்கில ஆதிக்கத்தை நிலைநாட்ட அவர் போட்ட திட்டங்கள் இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு அடிப்படையாக அமைந்தன.

**ஆங்கிலேயரின் வடமேற்கு எல்லைக் கொள்கை. அல்லது ஆங்கிலேயே - ஆப்கானிய உறவு**

பிரிட்டிஷ் இந்திய வரலாற்றில் 1858-1905ம் வருடம் வரையுள்ள காலத்தை ஏகாதிபத்தியத்தின் காலம் என்று கூறலாம். 1858-ம் வருடத்திலிருந்து இந்தியாவின் அயல் நாட்டுக் கொள்கை ஐரோப்பாவில் நிலவிய சூழ்நிலைகளைக் கொண்டு உருவாக்கப்பட்டது என்றும், லண்டனிலிருந்த அரசாங்க மாளிகையிலிருந்து ஆட்சி புரிந்த பிரிட்டி‘ அரசாங்கத்தின் அயல் நாட்டுக் கொள்கையின் ஒரு பகுதியாக இருந்தது என்று கூறினால் அது மிகையாகாது.

வடமேற்கு எல்லைப்புரத்தின் கொள்கை நெடுங்காலமாகவே இங்கிலாந்துக்கும் ரஷ்யாவுக்கும் இடையே நிலவிய உறவைப் பொறுத்திருந்தது. “England's Afghan Policy was motivated by the fear of the possibility of Russian supremacy in Afghanistan”. 1844- ம் ஆண்டில் ர‘யப் பேரரசர் முதலாம் சார் நிக்கோலசும் விக்டோரியாப் பேரரசியும் சந்தித்து அமைதி உடன்பாடு செய்தனர். ஆனால் அந்த நட்புறவு கிருமிப் போரினால் (1856-58) மிகவும் பாதிக்கப்பட்டது. தென்கிழக்கில் ஐரோப்பாவில் முன்னேற முடியாதபடி தடுக்கப்பட்ட ரஷ்யா, மத்திய ஆசியாவில் முன்னேறும் கொள்கை யைக் கடைப்பிடித்தது.

ஆப்கானிஸ்தானத்தின் எல்லையை நோக்கி ர‘யா முன்னேறி வந்ததைக் கண்டு பிரிட்டி‘ அரசு மிக்க கவலையும் அதிர்ச்சியும் அடைந்தது. ஏனெனில் பஞ்சாபையும், சிந்துவையும் ஏற்கனவே கைப்பற்றி இணைத்திருந்ததால் பிரிட்டி‘ எல்லை ஆப்கானிஸ்தான் மலைகள் வரை பரவியிருந்தது. ர‘ய எல்லைப்புற நிலையங்களுக்கும் இந்தியாவிலிருந்த பிரிட்டி‘ பேரரசுக்குமிடையே ஆப்கானிஸ்தான் நாடு மட்டும் தான் இருந்தது.

**முதல் ஆப்கானியப் போருக்கு பிறகு ஆங்கில - ஆப்கானிய உறவு :**

முதல் ஆப்கானியப் போர் முடிந்ததும் சமாதானம் நிலவியது. 1855-ல் டல்ஹௌசிகாபூலின் அமீரான தோஸ்த் முகமதுவுடன் ஓர் நட்புறவு உடன்படிக்கை செய்து கொண்டார். 1856-ல் பாரசீகர்கள் ஹீரட்டைத் தாக்கிய போது, ஆங்கிலேயர் அமீருக்குப் படை, பணஉதவி செய்தனர். எனவே பாரசீக அபாயம் நீங்கியது. 1862-ல் தோஸ்த் முகமது திடீரென ஹீரட்டைத் தாக்கிக் கைப்பற்றினார். இதனால் ஆங்கிலேயர்களுக்கும் ஆப்கானியர்களுக்குமிடையே நட்புணர்வு முதல் முறையாகப் பாதிக்கப்பட்டது.

1863-ல் தோஸ்த் முகமது தனது 80வது வயதில் மரணடைந்தார். எனவே அவருடைய 16 பிள்ளைகளிடையே வாரிசுரிமைப் போட்டி ஏற்பட்டது. போட்டியின் இறுதியில் காலம் சென்ற அமிரின் மூன்றாம் குமாரனும், அவரால் வாரிசாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வருமான ெ‘ர்அலி1868-ல் ஆப்கானிஸ்தானின் அமீராகப் பதவி ஏற்றார்.

**ஜான் லாரன்சின் ஆப்கானியக் கொள்கை: 1864-69. “திறமையான செயலின்மைக் கொள்கை”:**

ஆப்கானிஸ்தானத்தில் வாரிசுரிமைப் போட்டி நடந்து கொண்டிருந்த போது உறுதியான நடுநிலைக் கொள்கையைப் பின்பற்றினார் ஜான்

லாரன்ஸ். போட்டியில் வெற்றி பெறும் இளவரசரையே ஆதரிக்கப்போவதாக வெளிப்படையாக அறிவித்தார். இதனால் வாரிசுரிமைப் போரில் ஈடுபட்ட சகோதரர்கள் கேட்ட உதவியை அளிக்கவில்லை. போட்டியின் முடிவில் வெற்றி பெற்ற ஹெர் அலியை அங்கீகரித்து அவருக்கு பணமும், ஆயுதங்களும் அனுப்பினார் லாரன்ஸ். ஆனால் அவருடன் நெருங்கிய உறவை ஏற்படுத்த மறுத்தார். 1868-ல் ஆப்கானிஸ்தானத்தில் முன்னேறும் கொள்கையைப் பின்பற்ற சர்ஹென்றி ராபின்சன் என்பவர் செய்த பரிந்துரையைப் புறக்கணித்தார்.

ர'யப் படையெடுப்பிலிருந்து இந்தியாவைக் காப்பாற்ற எல்லையைத் தாண்டி ஆப்கானிஸ்தானத்தை வசப்படுத்த வேண்டிய அவசியமில்லை என்பது லாரன்சின் கருத்தாகும். சிறந்த இந்தியப்படை, வலிமை வாய்ந்த பொருளாதார அமைப்பு, இந்திய சிற்றரசர்களின் ஒத்துழைப்பு, இந்திய மக்களின் மனமார்ந்த உதவி ஆகியவைகளே'' போதுமானது என்றார். லாரன்ஸ் தான் பின் பற்றிய இக்கொள்கையை "திறமையான செயலின்மை'' என்று கூறினார். லாரன்ஸ் பின்பற்றிய இக்கொள்கையால் நன்மைதான் விளைந்தது. மேயோபிரபு, நார்த் புரூக் பிரபு ஆகியோரும் இதனையே பின்பற்றினர்.

வாரிசுரிமைப் போட்டியாளர்களில் ஒருவரை மட்டும் ஆதரித்தால் மற்றவர் நிச்சயமாக ர'யா அல்லது பாரசீகத்தின் உதவியைப் பெற முயல்வர் என்ற அச்சத்தினால் தான் இக்கொள்கையைப் பின்பற்றினார் லாரன்ஸ். இதன்படி ஆப்கானிஸ்தானில் பல நாடுகள் தலையிட்டு குழுப்பம் ஏற்படுவதைத் தடுத்தார். ஆனால் லாரன்சின் கொள்கை பிரிட்டி' அரசுக்கு அனுசரணையாக இல்லை என்பது தெளிவு. ஏனெனில் ஒரு சிறிது காலத்திற்கு ஆற்றலுடன் இருப்பவர்களைப் பார்த்து ஆங்கிலேயர் தங்களுடைய நண்பர்களாகக் கருதுகிறார்கள்" என்று வெறுப்புடன் கூறினார் ஹெர் அலி .

**ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு:**

இவ்விதம் ஆப்கானிஸ்தானில் குழுப்பமும் ஸ்திரமற்ற அரசியல் நிலையும் நிலவிய காலத்தில் தான் ர'யர்கள் தங்கள் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை மத்திய ஆசியாவில் தொடங்கினார்கள். 1866-ல் புகாரார'ய ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. தா'கண்ட்டை தலைநகராகக் கொண்ட ர'ய துருக்கிஸ்தானம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. 1868ல் சாமர்கண்ட் இணைக்கப்பட்டது. 1872-ல் இவையாவும் ர'ய பிரதேச மாகியது. இந்த ர'ய விரிவாக்கம் ஆப்கானிஸ்தானத்திற்கு அச்சுருத்துதலாக காணப்பட்டது. எனவே ஆங்கிலேயரின் உதவியைப் பெற விரும்பினார் அமீர்.

**மேயோபிரபுவின் ஆப்கானியக் கொள்கை : 1869-72**

மேயோ லாரன்ஸின் கொள்கையையே பின்பற்றினார். இவர் மதிநுட்பத்துடன் செயல்பட்டிருந்தால் அமீரை ஆங்கிலேயர் பக்கம் இழுத்திருக்க முடியும். ஆனால் ஆங்கிலேயரின் ராஜதந்திரம் தோல்வியடைந்தது. 1869-ல் மேயோபிரபுவும் அமீர் ஹெர்அலியும் அம்பாலா (யுஅடியடய) என்ற இடத்தில் சந்தித்துப் பேசினர். ர'யாவுக்கு எதிராக தன்னை ஆதரித்தால் ஆங்கிலேயரின் எல்லாக் கோரிக்கைகளையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்தார் ஷெர்அலி. ஆனால் உறுதிமொழி எதுவும் கொடுக்காமல் "உம்மைப் பதவியிலிருந்து நீக்குவதற்காக உமது பகைவர்கள் செய்யும் எந்த முயற்சியையும் மிக்க வெறுப்புடன் இந்திய அரசு நோக்கும் என்று மேயோ கூறினார். இதனால் ஷெர் அலி திருப்தியடையவில்லை.

**நார்த் புரூக்கின் ஆப்கானியக் கொள்கை: 1872-76**

லாரன்சும் மேயோவும் பின்பற்றிய ஆப்கானியக் கொள்கையையே நார்த்புரூக்கும் தொடர்ந்து பின்பற்றினார். 1872 - ல் கிவா ஆக்கிரமிப்புக்குப் பிறகு ெ'ர் அலி பயந்து தனது பிரதிநிதியை 1873-ல் நார்த் புரூக்கிடம் அனுப்பினார். அமீரின் நாட்டை ர'யாதாக்கினால் பிரிட்டி' அரசு படை, பணஉதவி அளிப்பதாக வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். ஆனால் நார்த் புரூக் இதனை ஏற்றுக் கொள்ள மறுத்தார். ஏனெனில் இங்கிலாந்தில் கிளாட்சனின் மந்திரிசபை ர'யாவை விரோதிக்க விரும்பவில்லை. இதனால் அமீர் ஆங்கிலேயர் மீது வெறுப்படைய ஆரம்பித்தார்.

மேலும், பாரசீகம், ஆப்கானிஸ்தான் நாடுகளின் செயிஸ்தான் எல்லை சம்பந்தப்பட்ட விவகாரத்தில் பிரிட்டி' அரசு ஆப்கானியருக்கு விரோதமாக நடந்து கொண்டது. மற்றும் தனது மகன் அப்துல்லா ஜான் வாரிசாகும் உரிமையை ஆங்கிலேயர் ஏற்றுக் கொள்ள மறுத்தது ஆகிய செயல்கள் ஷெர்அலி ஆங்கிலேயர்களை எதிர்க்க காரணமாக அமைந்தது. அதே சமயம் ஆங்கிலேயரின் மனப்பான்மையைக் கண்டு வெறுப்படைந்த அமீர் ரஷ்யருடன் நட்புறவு கொள்ள முற்பட்டார். இந்த சந்தர்ப்த்தை ர'யர்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டனர்.

**ஆங்கில வெளிஉறவுக் கொள்கையால் மாற்றம்:**

1874-ல் கிளாட்சனுக்குப் பிறகு டிசரலி (Disraeli) இங்கிலாந்தின் தலைமை அமைச்சரானார். இவர் வெளி உறவுத்துறைக் கொள்கையில் புதிய அணுகுமுறையைப் பின்பற்றினார். ஆப்கானிஸ்தானத்தில் ரஷ்யாவின் செல்வாக்கைத் தடுப்பதற்கு, அங்கு ஆங்கில தூதுவர் நிலையம் (British Residency) ஒன்றை அமைக்க ஏற்பாடு செய்யுமாறு நார்க்புரூக்கிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. ஆனால் நார்க்புரூக்கும் அவரது ஆலோசனை சபையும் அமீருடன் நெருங்கிய உறவு ஏற்படுத்திக் கொள்ள மறுத்துவிட்டது.

**லிட்டன் பிரபுவும், இரண்டாவது ஆப்கானியப் போரும் (1876-80)**

1876-ல் அரசபிரதிநிதியாக பதவியேற்றலிட்டன் ஆட்சிக்காலத்தில் இரண்டாவது ஆப்கானியப் போர் நடைபெற்றது. ஆப்கானிய விவகாரங்களில் ஏகாதிபத்தியக் கொள்கையைப் பின்பற்றுமாறு லிட்டனுக்கு இங்கிலாந்து அரசாங்கம் கட்டளையிட்டிருந்தது. பேச்சு வார்த்தையின் மூலம் ஆங்கில ஆதிக்கத்தை நிறைவேற்ற முடியாததை போரின் மூலம் நிறைவேற்ற லிட்டன் பிரபு நினைத்ததின் விளைவே இரண்டாம் ஆப்கானியப் போராகும்.

**போருக்கான காரணங்கள் :**

**1) ஹீரட்டில் ஆங்கில தூதுவரை வைத்துக் கொள்ள அமீர் மீது நிர்பந்தம் :**

லிட்டன் பிரபு படிப்படியாக ஆப்கானிஸ்தானத்தைப் பலவீனப்படுத்தி அதனை ஆங்கில ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர நினைத்தார் இதற்காக ஹீரட்டில் ஒரு ஆங்கில தூதுவரை வைக்க விரும்பினார். இதற்கு ெ'ர்அலி இணங்கினால் அவருடைய பழைய ஏற்பாடுகளையும், கோரிக்கைகளையும் ஏற்றுக் கொள்வதாகக் கூறினார். இதற்காக ஒரு தூதுக் குழுவை அனுப்பவும் முடிவு செய்தார்.

**2) ஷெர்அலி ஆங்கில தூதுக்குழுவை ஏற்க மறுத்தல் :**

ஆனால் ஷெர்அலி பிரிட்டிஷ் தூதுவர்யாரையும் ஏற்றுக் கொள்ள விருப்பமில்லை என்று கூறினார். அத்துடன் ஆப்கானிஸ்தான் வரும்

ஆங்கிலத் தூதுக் குழுவின் பாதுகாப்பிற்கு தான் பொறுப்பேற்க முடியாது என்றார். அப்படியே அதற்கு இணங்கினால் ர'யர்களுக்கும் இதே உரிமை கொடுக்க நேரிடும் என்று கூறி ஆங்கில தூதுக் குழுவை ஏற்க மறுத்து விட்டார்லிட்டன்.

**3) காலட் நாட்டு தலைவருடன் ஆங்கிலேயரின் உடன்படிக்கை**

இதற்கிடையில் மேஜர் சேண்ட மான் (ஆயதழச ஞயனெநஅயபெ) காலட் (முயடயவ) நாட்டுத் தலைவருடன் உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்டார். அதன்படி குவட்டா (ஞரநவவய) 1876 நவம்பரில் ஆங்கிலேயர்களால் கைப்பற்றப்பட்டது. போலன் கால்வாய் மீது ஆதிக்கம் கொள்ள இந்த ஆக்கிரமிப்பு பயன்பட்டது. மேலும் இது காந்த காரை ஆக்கிரமிப்பதற்கு வழிவகுக்கும் என்ற பயந்தார் ெ'ர்அலி.

**4) பெஷாவர் மாநாட்டின் தோல்வியும், காபூலுடன் உறவு முறிவும் :**

1877 - ஜனவரி முதல் மார்ச் வரை ஆங்கிலேயர்களுக்கும், ஆப்கானிய பிரதிநிதிகளுக்கு மிடையே மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. அதில் ஆப்கானியர் பிரிட்டி' தூதுவர் ஒருவரை ஆப்கானிஸ்தானத்தில் ஏற்றுக் கொள்வதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். ஆப்கானிய பிரதிநிதி சையது நூர் முகமது வெளிப்படையாகவே இதனை எதிர்த்து பேசினார். ஒரு வெளிநாட்டுத் தூதுவர் தங்கள் விவகாரங்கள் மீது ஆதிக்கம் கொள்வதை ஆப்கானிய மக்கள் விரும்பமாட்டார்கள் என்பதை லிட்டன் உணரவில்லை. மாநாடு முடிந்துவிட்டதாக அறிவித்து காபூலுடன் எல்லா தொடர்பையும் துண்டித்துக் கொண்டார்லிட்டன்.

**5) ஆப்கானிய எல்லைப்பகுதியில் ஆங்கில ஆக்கிரமிப்பு:**

லிட்டன் வடகிழக்கு எல்லைப் பகுதியிலிருந்த பழங்குடியினருடன் தொடர்பு கொண்டு, அவர்கள் பகுதி வழியாக சென்று ஆப்கானிய எல்லைக்கருகில் உள்ள கில்ஜிட்டில் (Gilgit) ஒரு வெளிப்பாதுகாப்பு நிலையத்தை அமைத்தார்.

**6) காபூலில் ரஷ்ய தூதுக்குழு :**

இதற்கிடையே 1877-ல் நடைபெற்ற ர'ய துருக்கியப் போரால் ரஷ்யாவுக்கும் இங்கிலாந்திற்குமிடையே பகைமை ஏற்பட்டு போர் அபாயம் காணப்பட்டது. 1878-ல் நடைபெற்ற பெர்லின் மாநாட்டின்படி பால்கன் பகுதியில் ர'யாவின் ஆதிக்கம் நீக்கப்பட்டது. எனவே ரஷ்யா ஆப்கானிஸ்தான் பக்கம் தனது கவனத்தை திருப்பியது. 1878-ஜுன் மாதம் கா.்.ப்மேன் (Kauf mann) என்பவர் அமீர் ஷெர் அலியுடன் உடன்படிக்கை செய்து கொள்ள முற்பட்டார். அமீர் அதற்கு மறுக்கவே 1878-ஜுன் 13-ம் தேதி ரஷ்ய தளபதி ஸ்டோலிடோப் (Stoletoff) என்பவரின் தலைமையில் ஒரு பெரிய படை காபூல் நோக்கி புறப்பட்டது. ஷேர் அலி தங்கள் கோரிக்கையை ஏற்று உடன்படிக்கையில் கையெழுத்திடாவிட்டால் ஷெர் அலியின் எதிரியான அப்தூர்ரகுமான் என்பவரை அமீர் ஆக்குவோம் என்று மிரட்டினர். ர'யா வேறு வழியில்லாமல் ஷெர் அலிர'யத்தாது குழுவை ஏற்றுக் கொண்டு, ஒரு உடன்படிக்கை செய்து அதன்படி காபூலில் ஒரு ரஷ்ய பிரதிநிதி நிரந்தரமாக தங்க வைக்கப்பட்டார்.

**7) லிட்டனின் எதிர் நடவடிக்கைகள்:**

ர'ய தூதுக் குழு ஒன்று ஆப்கானிஸ்தானத்தை சென்றடைந்ததை தெரிந்து கொண்ட லிட்டன் கடுங்கோபம் அடைந்தார். அதே போல இங்கிலாந்து தூதுக்குழு ஒன்று நெவிலி சேம்பர்லின் (Neville Chamberlain) தலைமையில் அனுப்பப்படும். அதனை ஏற்றுக் கொண்டு அதனுடன்

பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்“ என்று அமீருக்கு கடிதம் எழுதினார். அதன்படி 1878- ஆகஸ்ட் 30- ல் அந்த தூதுக்குழு பெ'ாவரிலிருந்து காபூலுக்கு புறப்பட்டது. ஆனால் வழியில் அது தடுத்து நிறுத்தப்பட்டதால் பெ'ாவருக்கு மீண்டும் திரும்பிவிட்டது. எனவே ஆப்கானிஸ்தான் மீது போர் தடுக்க இங்கிலாந்து அரசிடம் அனுமதி கேட்டார் லிட்டன்.

**போரின் போக்கு :**

பிரிட்டி' தூதுக்குழு பெ'ாவரிலிருந்து புறப்பட்டவுடனேயே ரஷ்யா தனது தூதுக்குழுவை வாபஸ் பெற்றுக் கொண்டது. அமீரை கைவிட்டது. எனவே ஷெர்அலி பிரிட்டிஷ் தூதுக் குழுவை ஏற்றுக் கொள்வதாகக் கூறி 1878 நம் - 30 - ல் கடிதம் ஒன்றை எழுதினார். ஆனால் சேம்பர்லின் தூதுக்குழுவை திருப்பி அனுப்பியதற்கு வருத்தம் தெரிவிக்கவில்லை என்று காரணம் கூறி ஆப்கானிஸ்தான் மீது போர் தொடுத்தார்லிட்டன்.

1878 பிரிட்டிஷ் படை ஒன்று தளபதி ராபர்ட் தலைமையில் குர்ரம் கணவாயைத் தாண்டி காபூலை நோக்கி சென்றது. தளபதி ஸ்டுவர்ட் போலன் கணவாய் வழியாகவும், தளபதி சாமுவேல் பிரவுன் கைபர் கணவாய் வழியாகவும் படை நடத்தி சென்றனர். ருஷ்யாவிடமிருந்து உதவி ஏதும் கிடைக்காததால் ஷெர்அலி நாட்டை விட்டு ஓடிவிட்டார். சில நாட்களில் இறந்தும் விட்டார். அவரது மகன் யாகூப்கான் அமீராகப் பதவியேற்றார். அவர் ஆங்கிலேயரின் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு 1879 மே மாதம் காண்டமக் என்ற இடத்தில் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார்.

**காண்ட மக் உடன்ப டிக்கை :26, 1879.**

**காண்டமக் உடன்படிக்கையின் படி,**

a) அமீர் யாகூப்பான் இனி அயல்நாட்டு விவகாரங்களில் ஆங்கிலேயர் சொற்படியே நடக்க வேண்டும்.
b) பிரிட்டி' பிரதிநிதி ஒருவரைகாபூலில் தங்க வைக்க அனுமதிக்க வேண்டும்.
c) குர்ரம் கணவாயுடன், குர்ரம், பிஷின், சிபி ஆகிய மாவட்டங்களை ஆங்கிலேயருக்கு கொடுக்க வேண்டும்
d) இதற்காக ஆங்கிலேயர்கள் ஆப்கானிஸ்தானத்தை அந்நியப் படையெடுப்பிலிருந்து பாதுகாக்க வேண்டும்.
e) தவிர அமிருக்கு ஆண்டுக்கு ஆறு லட்ச ரூபாய் உதவித்தொகை கொடுக்க வேண்டும்.
f) காந்தகார் தவிர பிற இடங்களில் இருந்து ஆங்கிலப்படைகள் வாபஸ் பெறப்பட வேண்டும்.

**போருக்கு பின்னர் நடைபெற்ற நிகழ்ச்சிகள் :**

இவ்வாறு லிட்டன் பிரபுவின் ஆப்கானியக் கொள்கை வெற்றியடைந்தது. ஆங்கிலேயர் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர். ஆனால் வெகுசீக்கிரமே நிலமை மாறியது. காபூலில் ஆங்கில தூதுவராக நியமிக்கப்பட்ட லூயி கவக்நரி (ளுசை டுழரளை உயஎயபயெசை) என்பவர் 1879ஜூலை 24- ல் வந்து சேர்ந்தார். ஆங்கிலேயரின் ஆலோசனையின்படி தாங்கள் ஆட்சி செய்யப்படுவதை விரும்பாது கலகம் செய்து 1879 செப். 3-ம் தேதி கவக்நரியும் அவரது அலுவலர்களும் படுகொலை செய்யப்பட்டனர். லிட்டன் அதிர்ச்சியடைந்தார்.

**ஆங்கிலேயரின் கொள்கை மாற்றமும், புதிய உடன்படிக்கையும் :**

எனவே கலகம் செய்தவர்களை தண்டிக்கும் படியாக ராபர்ட்ஸ்

என்பவர் தலைமையில் 1879 - அக்டோபர் மாதம் படை ஒன்றை அனுப்பினார் லிட்டன். ராபர்ட்ஸ் காபூலை மீண்டும் கைப்பற்றினார். அமீர்யாகூப்கான் கைது செய்யப்பட்டு இந்தியா கொண்டு வரப்பட்டார். பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஆப்கானிஸ்தானில் ஆளே இல்லை. அப்போது ஷெர்அலியின் மருமகனான அப்துர்ரகுமான் ர்'யாவின் பாதுகாப்புடன் காபூல் வந்து சேர்ந்தார். அவருடன் உடனடியாகப் பேச்சு வார்த்தையைத் துவக்கினார் லிட்டன். உடன்படிக்கை ஏற்படும் முன்பு 1880-ல் லிட்டன் பதவி விலகி இங்கிலாந்து திரும்பினார்.

1880 - ஏப்ரல் மாதம் இங்கிலாந்தில் நடந்த பொதுத் தேர்தலில் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சி தோல்வியடைந்தது லிபரல் கட்சியைச் சேர்ந்த கிளாட்சன் பிரதமரானார். அவர் லிட்டனின் ஆப்கானியக் கொள்கையைக் கண்டித்தார். எனவே லிட்டனின் ஆப்கானிய கொள்கை மாற்றியமைக்கப்பட்டது. லிட்டனுக்குப் பிறகு பதவி ஏற்ற ரிப்பன் பிரபு அப்துர் ரகுமானுடன் புதிய உடன்படிக்கை செய்து கொண்டார். அதன்படி பிஷின், சிபி மாவட்டங்களை மட்டும் பிரிட்டி' வைத்துக்கொள்ள வேண்டும். அமீர் தனது வெளிநாட்டுக் கொள்கையில் ஆங்கிலேயரின் ஆலோசனையின் படியே செயல்படவேண்டும். இந்த புதிய உடன்படிக்கையின் முக்கிய அம்சம் என்னவென்றால் ஆங்கில பிரதிநிதிகள் ஆப்கானிஸ்தானத்தின் எந்தப் பகுதியிலும் வைக்கப்படவில்லை என்பதேயாகும். இவ்வாறு இரண்டாம் ஆப்கானியப் போரின் சோக சம்பவங்கள் முடிவடைந்தன.

## 8.6 ரிப்பன் பிரபு (Lord Rippon, 1880-84)

இந்தியாவுக்கு வந்து ஆட்சி புரிந்த அரசபிரதிநிதிகளில் தலைசிறந்தவராகக் கருதப்படுபவர்ரிப்பன் பிரபு ஆவார். இவர்மிகப்பரந்த நோக்கமும் மக்களாட்சி முறையில் பற்றுதலும் கொண்டவர். இந்தியர்களின் மீது உண்மையான அன்பும் இரக்கமும் கொண்டவர். இந்தியர்களின் உணர்ச்சிக்கும் அவர்களின் தேவைக்கும் இங்கிலாந்து மதிப்புக் கொடுக்க வேண்டும் என்ற கருத்துக் கொண்ட முற்போக்குவாதி ஆவார். இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் இருந்த ஜனநாயக முற்போக்குவாதிகளில் முதன்மையானவர்.

ரிப்பனின் இயற்பெயர் ஜார்ஜ் பிரடரிக் சாமுவேல் ஆகும். இவர் 1862 - ல் இங்கிலாந்து பாராளுமன்றத்தின் உறுப்பினரானார். இந்திய விவகாரங்களில் முக்கிய ஆர்வம் கொண்டிருந்தார். 1866-68ம் ஆண்டுவரை இந்தியா அமைச்சராகப் பணியாற்றினார். ரோமன்கத்தோலிக்கரான இவர் 1880 -ல் அரசபிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். அதே சமயத்தில் ஐரோப்பாவில் விடுதலையை விரும்பிய லிபரல் கட்சியின் தலைவர் கிளாட்சன் இங்கிலாந்தின் பிரதமரானார். இந்தியாவின் மீது ஆதிக்கம் செலுத்துவது இந்தியர்களுக்கு லாபமானதாகவும் அவர்களே அதனை அறிந்து கொள்ளக் கூடிய முறையிலும் அமைந்ததாக இருக்க வேண்டும்" என்றார் கிளாட்சன். ரிப்பன் பிரபுவை வைசிராயாக நியமித்தவர் இவரே

ஆவார்.

கல்கத்தா வந்து சேர்ந்த ரிப்பன் தான் நிகழ்த்திய முதல் உரையில் "என்னுடைய வார்த்தைகளின்படி அல்ல் என்னுடைய செய்கைகளின் படியே என்னைப் பற்றி தீர்ப்புக் கூறுங்கள்"" என்றார். (Judge me by my acts; not by my words).

**ரிப்பன் பிரபு செய்த சீர்திருத்தங்கள் :**

ரிப்பன் பிரபு பரந்த நோக்கமும் உண்மையும் கொண்டவர். இவர் கல்வி அறிவு அற்ற இந்தியர்களுக்கு அரசு நிர்வாகத்தில் படிப்படியாக பயிற்சி அளித்து அவர்களை உயர்ந்த பதவிகள் வகிக்க தகுதி

உள்ளவர்களாக்க வேண்டுமென்று விரும்பினார். உத்யோக நியமனங்களில் இனவேற்றுமை ஒரு தடையாக இருக்கக் கூடாது என்பது அவர் கருத்து. இந்த அடிப்படையில் மக்களுக்கு நன்மை பயக்கும் பல சீர்திருத்தங்களைச் செய்தார்.

**1) இந்திய மொழி, பத்திரிகைக் சட்டம் நிராகரிக்கப்படல் :**

லிட்டன் பிரபு இயற்றிய பத்திரிகைச் சட்டத்தை இவர் 1882-ல் நிராகரித்து சட்டம் ஒன்றை பிறப்பித்தார். அதன்படி இதர மொழி பத்திரிகைகளுக்கு கொடுக்கப்பட்ட உரிமைகள் இந்திய மொழிப் பத்திரிகைகளுக்கும் கொடுக்கப்பட்டது. இது மக்களுக்கு மனநிம்மதியைக் கொடுத்தது.

**2) முதல் தொழிற்சாலைச்சட்டம் :**

தொழிற்சாலைகளில் பணியாற்றிய தொழிலாளர்களின் நலனுக்காக 1881-ல் முதன் முதலாக தொழிற்சாலை சட்டம் ஒன்றை இயற்றினார் ரிப்பன். தொழிற்சாலையின் சூழ்நிலையையும் தொழிலாளிகளின் நலனையும் கவனித்து ஆவன செய்வதே இச்சட்டத்தின் நோக்கமாகும். இச்சட்டத்தின்படி,

a) தொழிலாளர்களின் வேலை நேரம் வரையறுக்கப்பட்டது.
b) ஏழுவயதுக்குட்பட்ட சிறுவர்களை எந்த தொழிற் சாலைகளிலும் வேலைக்கு வைத்துக் கொள்ளக் கூடாது.
c) ஏழு வயதுக்கும் பன்னிரெண்டு வயதுக்கும் இடைப் பட்டவர்களிடம் ஒரு நாளைக்கு ஒன்பது மணி நேரத்துக்கு மேல் வேலை வாங்கக்கூடாது.
d) அபாயகரமான இயந்திரங்களைச் சுற்றிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும்.
e) தொழிற்சாலை ஆய்வாளர்கள் (ஐளெிநஉவழச ழக குயஉவழசநைள) நியமிக்கப்பட்டு இச்சட்டம் முறையாக செயல்படுகிறதா என்று கவனிக்க வேண்டும்.

**3) மாகாணங்களின் நிதிப் பொறுப்பு அதிகரிக்கப்படல் :**

மேயோபிரபு, லிட்டன் பிரபு ஆகியோர்களின் கொள்கைகளைப் பின்பற்றி மாநிலங்களின் நிதிப்பொறுப்பை அதிகரித்தார் ரிப்பன். வருமானங்கள் பேரரசுக்கானவை, மாநிலங்களுக்கானவை, இரண்டுக்குமானவை என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டன.

a) ஏற்றுமதி வரி, தபால் தந்தி, இருப்புப்பாதை, அபின், உப்பு நாணயம் அச்சிடல், படை, நிலம், ஆகியவற்றிலிருந்து வரும் வருமானம் பேரரசைச் சார்ந்தவை. இவற்றுக்கான தொகை முழுவதையும் பேரரசே கொடுக்க வேண்டும்.
b) சிறை , வைத்தியம், சாலைகள், பொது நிர்வாகம் முதலியவற்றின் மூலமாக வரும் வருமானம் மாநில அரசைச்சாரும். இவ்வகை வருமானம் குறைவாக இருந்ததால் பேரரசின் நிலவரியிலிருந்து ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் மாநிலங்களுக்கு கொடுத்து உதவியது.
c) போதைப் பொருட்களில் விதிக்கப்படும் வரியும், முத்திரை, காடுகள், பத்திரப்பதிவு முதலியவற்றின் மூலம் கிடைக்கும் வருமானத்தை பேரரசும் மாநில அரசும் சமமாகப் பங்கிட்டுக் கொண்டன. இத்துறையில் ஏற்பட்ட செலவும் சமமாகப் பங்கிடப்பட்டது.

இதனால் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட பகுதிகளின் துறைகளிலிருந்து வரும் வருமானத்தைப் பெருக்க மாநிலங்கள் முயன்றன. மத்திய மாநிலங்களுக்கிடையே நல்லுறவு ஏற்பட்டது. இந்த முறை இடை

இடையே சிறிது மாற்றப்பட்ட போதிலும் 1919-ம் ஆண்டுவரை பூரணமாக செயல்பட்டது.

**4) நிலவருமான சீர்திருத்தம் :**

காரன்வாலிஸ் பிரபுவால் வங்காளத்தில் ஏற்படுத்தப்பட்டிருந்த நிலவரித்திட்டத்தை மாற்றியமைத்து குடியானவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கத் திட்டமிட்டார் ரிப்பன். விளைநிலங்களை அளந்து தீர்வை நிர்ணயிக்கப்பட்ட மாவட்டங்களில், தீர்வையை விலைவாசி உயர்ந்தால் தவிர உயர்த்தக் கூடாது என்ற திட்டம் ஒன்றை செயல்படுத்த நினைத்தார். ஆனால் லண்டனிலிருந்த இந்தியா மந்திரி ஏற்க மறுத்ததால் இத்திட்டம் கைவிடப்பட்டது.

**5) ஸ்தல சுயாட்சி முறை :**

ரிப்பன் செய்த சேவைகளில் மிகச் சிறந்தது அவரது தலசுயாட்சி முறையே ஆகும். பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் முதன் முதலாக ஸ்தல சுயாட்சித் திட்டத்தை வகுத்து அதை நடைமுறைக்குக் கொண்டு வந்தவர் ரிப்பன் பிரபுவே ஆவார். இதனால் இவர் ஸ்தல சுயாட்சி முறையின் தந்தை என்று அழைக்கப்படுகிறார். இன்றுள்ள ஸ்தல ஆட்சி முறைக்கு அடிகோலியவர்ரிப்பன் பிரபுவே ஆவார்.

**ரிப்பனின் நோக்கம்:**

ரிப்பன் இந்திய மக்களின் நல்வாழ்வில் அக்கரை கொண்டவர் ஆவார். அவர்களுக்கு ஸ்தல ஆட்சியில் நல்ல முறையில் பயிற்சி அளித்து தமது தேவைகளை தாமே பூர்த்தி செய்து கொள்ள வேண்டுமென்று விரும்பினார் ரிப்பன்.

**ரிப்பன் காலத்திற்கு முன்பிருந்த நிலை :**

ரிப்பன்காலத்திற்கு முன்பே நகரங்களில் முனிசிபாலிட்டிகள் என்ற நகராண்மைக் கழகங்கள் இருந்தன. ஆனால் அவற்றின் உறுப்பினர்கள் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவர்கள் ஆவார்கள். அதன் தலைவரும் ஒரு அரசாங்க அலுவலர் ஆவார். கிராமப் பகுதியில் மக்களுக்குத் தேவையான அலுவல்களை அரசாங்க அதிகாரத்திற்கு உட்பட்ட கமிட்டிகள் கவனித்து வந்தன. தவிர அவைகள் நிர்வாகத்திற்கு விடப்பட்ட பகுதிகளும் மிகப் பரவலாக இருந்தன. அதனால் ஆங்காங்குள்ள கிராம மக்களின் தேவைகளை நன்கு கவனித்து பணிபுரிய முடியவில்லை. இக்குறைகளை நீக்குவதற்கு ரிப்பன் பிரபு 1882-ம் ஆண்டு ஸ்தல சுயாட்சித் சட்டத்தைப் பிறப்பித்தார். நகராட்சி மன்றங்களையும், தாலுகா ஆட்சி மன்றங்களையும் அமைத்து அவை சிறந்த முறையில் பணியாற்றி வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். இந்த மன்றங்கள் சுயாட்சி முறையில் மக்களைப் பயிற்றுவிக்கும் நிர்வாகத்துறைகளாக இயங்கின.

**ஸ்தல சுயாட்சி சட்டத்தின் அம்சங்கள்:**

**ஸ்தல சுயாட்சி சட்டத்தின்படி,**

a) இங்கிலாந்தில் இருந்ததைப் போன்று மாவட்ட வாரியங்கள், வட்டார வாரியங்கள் (District Boards, Taluk Boards) நிறுவப்பட்டன.

b) சுகாதாரம் கழிவு நீர் அகற்றல், குடிதண்ணீர் அளித்தல், ஆரம்பக்கல்வி முதலான மக்களின் பொதுவாழ் நலங்களைப் பற்றிய பொறுப்பு முழுவதும் இந்த வட்டார ஆட்சிக்கழகங்களிடம் விடப்பட்டது.

c) மாவட்ட ஆட்சிக் கழகங்களே தங்கள் எல்லைக்குட்பட்ட சாலைகளை அமைத்தல் அவற்றை நல்ல முறையில்

வைத்திருத்தல், சுகாதாரத்தைப் பேணுதல், கல்வியைப் பரப்புதல், பஞ்ச நிவாரணப்பணி ஆகியவற்றிற்குப் பொறுப்பாயின.

d) நகரங்களிலுள்ள நகராண்மைக் கழகங்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்பட்டது. அங்கத்தினர்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகமாகவும், நியமனம் பெற்றவர்களின் எண்ணிக்கை குறைவாகவும் நிர்ணயிக்கப்பட்டது.

ஆனால் இந்த ஸ்தல ஸ்தாபனங்கள் மீது அரசாங்கத்தின் கட்டுப்பாடு இருந்தது. சில செய்திகளில் அரசாங்கத்தின் அனுமதியின்றி எதுவும் செய்ய முடியாது. இவைகள் தங்கள் பணிகளை சரிவரநிறைவேற்றி விட்டால் அரசாங்கம் தலையிட்டு அப்போதைக்கு இந்த நிறுவனங்களை நிறுத்தி வைக்கவும் அவைகளின் பணிகளை வேறு அரசு அதிகாரிகளின் மூலம் ஆற்றிக் கொள்ளவும் அரசுக்கு அதிகாரம் உண்டு.

ரிப்பன் தன்னுடைய ஸ்தல சுயாட்சித் திட்டம் மக்களுக்கு அரசியல் பொதுக்கல்வியாக இருக்க வேண்டும் என்று விரும்பினார். ஆட்சித் திறமை இதனால் குறைந்து விடும் என்று சிலர் குறை கூறினார். மக்களின் சுயாட்சி வளரவேண்டுமானால் இத்தகைய குறை ஏற்பட்டாலும் கவலை இல்லை என்று கருதினார் ரிப்பன். காலப் போக்கில் ஸ்தல ஸ்தாபனங்கள் மக்களின் அரசியல் அனுபவத்தால் திறமையாகப் பணி ஆற்றும் என்று திட்டமாக நம்பினார். இவ்வித சீர்திருத்தங்களினால் ரிப்பன் பிரபு “ஸ்தல சுயாட்சி முறையின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்.

**6) கல்வி சீர்திருத்தங்கள்:**

1854-ல்வுட்ஸ் என்பவர் சமர்பித்த அறிக்கையின்படி கல்வி வளர்ச்சி பெற்று வந்தது. இந்த கல்வித் திட்டத்தின் பலனை ஆராயவும், இந்தியர்களின் கல்வி நிலையை ஆராய்ந்து முன்னேற்றத்திற்குரிய வழிவகைகளைக் கூறவும் வில்லியம் ஹன்டர் என்பவர் தலைமையில் 1882-ல் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழு கீழ்க்கண்ட ஆலோசனைகளைக் கூறியது.

a) ஆரம்பக் கல்வி புறக்கணிக்கப்பட்டிருப்பதைக் கண்டறிந்து அரசுக்கு உணர்த்தியது. ஆரம்பக்கல்வி முனிசிபாலிட்டிகள் மாவட்டக் கழகங்கள் ஆகியவற்றின் கண்காணிப்பில் இருக்க வேண்டுமென்று கூறியது. ஆரம்பக்கல்விக்கு ஊக்கமளிப்பதும் அதன் செலவிற்கான பொறுப்பு முழுவதும் அரசாங்கத்தின் கடமை என்று வற்புறுத்தியது.

b) உயர்பாட சாலைகளில் வேலைவாய்ப்புகளுக்கான கல்வியும் பல்கலைப் படிப்புக்கான கல்வியுமாக இரு பிரிவாக பாடங்கள் கற்பிக்கப்பட வேண்டும்.

c) உயர் நிலைப்பள்ளிப் படிப்பினை பொறுத்தவரையில் தனியார் பள்ளிகளுக்கு உதவித் தொகை அரசு அளிக்க வேண்டும். உயர்தர பல்கலைக்கழகங்களுக்கும் மானியம் வழங்கும் திட்டத்தை ஏற்படுத்த வேண்டும்.

d) ஒவ்வொரு ஜில்லாவிலும் அரசாங்கம் ஒரு மாதிரிப் பள்ளிக் கூடத்தை ஏற்படுத்த வேண்டும்.

e) பெண்கல்வி வளர்ச்சிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

f) அரசு உயர்தர கல்வி சாலைகளநடைத்துவது நல்லது அல்ல.

இந்த அறிக்கையின் அடிப்படையிலேயே கல்விச் சாலைகள் நிர்மாணிக்கப்பட்டன. ஏராளமான இந்தியக் கொடைவள்ளல்கள் கல்விச் சாலைகளை ஏற்படுத்தி கல்வி வளர்ச்சிக்கு உதவினர்.

**7) இல்பர்ட் மசோதா பிரச்சனை :**

ஆங்கிலேயர் காலத்தில் இந்தியாவில் பணியாற்றிய ஆங்கில

நீதிபதிகளுக்கும் இந்திய நீதிபதிகளுக்கும் ஏற்றத் தாழ்வு இருந்து வந்தது. மாவட்டங்களில் இருந்த ஐரோப்பியர் தங்கள் இனத்தைச் சார்ந்த நீதிபதிகளால் மட்டுமே விசாரிக்கப்பட்டு வந்தார்கள். இந்திய நீதிபதிகள் ஐரோப்பியர்களை வழக்குகளில் விசாரிக்க முடியாததாக இருந்தது. இது இந்திய நீதிபதிகளின் மதிப்பிற்கும், உரிமைகளுக்கும் பங்கம் ஏற்படுத்தியது.

இந்த ஏற்றத் தாழ்வை நீக்க வைசிராயின் ஆலோசனை சபையின் சட்ட உறுப்பினராக இருந்த இல்பர்ட் என்பவர் 1883 பிப். 2-ம் தேதி ஒரு மசோதாவை தாக்கல் செய்தார். ஆனால் இந்த மசோதாவை எதிர்த்து அப்போதிருந்த ஐரோப்பியர் ஒரு போராட்டம் நடத்தினர். பாதுகாப்பு சங்கம் ஒன்று அமைத்து அதன் பல கிளைகளை அமைத்தனர். ஆங்கிலப் பத்திரிக்கைகளும். இம்மசோதாவைக் கண்டித்தன. கடைசியாக இந்த மசோதாவைத் திருத்த அரசாங்கம் ஒத்துக் கொண்டது.

அதன்படி, மாவட்ட நீதிபதிகள் ஐரோப்பியர் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிக்கும் போது ஐரோப்பியக் குற்றவாளிகள் குறைந்தது ஏழு ஐரோப்பியர்களைக் கொண்ட பன்னிரெண்டு நீதிபதிகள் முன்னிலையில் தான் விசாரிக்கப்பட வேண்டும் என்ற உரிமை பெற்றனர். எனவே எந்த குறிக்கோளுடன் மசோதா உருவானதோ அந்த குறிக்கோள் நிறைவேறவில்லை என்றே கூற வேண்டும். மசோதாவுக்கு எதிராக போராட ஐரோப்பியர்கள் சங்கம் ஒன்று அமைத்து இயக்கம் ஒன்றை ஆரம்பித்தனர். இதனால் அதற்கு எதிரான ஒரு இயக்கத்தை ஆரம்பிக்கும்படி இந்தியர்களை அது தூண்டியது. இல்பர்ட் மசோதாவுக்கு எதிராக நடைபெற்ற கிளர்ச்சியின் வெற்றியினால் படித்த இந்தியர்களின் மனத்தில் கோபத்தையும் உயர்வு மனப்பான்மையும் ஏற்படுத்தியது. ஒன்று சேர்ந்து போராடுவதால் ஏற்படும் நன்மையை எடுத்துக்காட்டியது. மேலும் இனப்பாகுபாடு வளரலானது. அத்துடன் ரிப்பன் பிரபு இந்தியர்களின் மதிப்பிற்குள்ளனார்.

**8) மைசூர் மாநிலத்தைத் திருப்பிக் கொடுத்தல் :**

1831 - ல் நல்லாட்சி அற்ற நாடென்று சொல்லி மைசூர் பெண்டிங் பிரபுவால் இணைக்கப்பட்டது. அதனைத் திரும்பப் பெறுவதற்கு உடையார் வம்சத்தினர் முயற்சி எடுத்தனர். ஆனால் முடியவில்லை . 1881-ல் மைசூர் மாநிலத்தை பழைய உடையார் வம்சத்தைச் சேர்ந்த அரசர்களுக்கு நிரந்தரமாகக் கொடுத்து உத்தரவு பிறப்பித்தார் ரிப்பன். இவ்வாறு ரிப்பன் பிரபு இந்திய சுதேச அரசர்களுடன் பிரிட்டன் கொண்டிருந்த ஏகாதிபத்திய உறவு முறையை மாற்றியமைத்தார். அதன் பிறகு மைசூர் ஆங்கிலேயர்களின் கீழ் ஒரு சிற்றரசாக விளங்கியது.

**9) எகிப்தியப் போரும் ரிப்பன் பிரபுவும் :**

எகிப்தைக் கைப்பற்றும்படி 1882- ல் பிரிட்டி' பிரதமர் கிளாட்சன் தமது நாட்டுப் படைகளுக்கு உத்தரவு பிறப்பித்தார். இந்தியப் படையின் ஒரு பகுதியும் அங்கு சென்று வெற்றிக்காகப் போரிட்டது. அப்போரினால் ஏற்பட்ட செலவில் ஒரு பகுதியை இந்திய அரசே ஏற்றுக் கொள்ள வேண்டுமென பிரிட்ஷ் அரசு கட்டளை பிறப்பித்தது. அதை ஒப்புக் கொள்ள மறுத்த ரிப்பன் அத்திட்டம் இந்திய மக்களுக்கு இழைக்கப்படும் பெரிய அநீதியாகும் என்று வாதிட்டார். ரிப்பனின் ஆலோசனை ஏற்றுக் கொள்ளப்படாததால் தாம் இந்தியாவிற்கு வந்த நோக்கம் நிறைவேறுவது கடினம் என்று எண்ணியரிப்பன் பிரபு தாமாகவே பதவி விலகி இங்கிலாந்து சென்றார்.

**மதிப்பீடு :**

ரிப்பன் பிரபு மிக நல்லவர்பண்பு உள்ளவர். அவர் இந்தியர்களிடம் காட்டிய அனுதாபத்தினாலும் அவர்கள் முன்னேற்றத்தில் கொண்ட ஈடுபட்டாலும் இந்தியர்களின் அன்பைகவர்ந்து விட்டார். 1909-ல் லாகூரில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் பேசிய பண்டித மதன் மோகன் மாளவியாரிப்பன் பிரபுவைப்பற்றி பின்வருமாறு கூறுகிறார்.

இந்தியாவிற்கு வந்த அரச பிரதி நிதிகளிலெல்லாம் மிக மிகப் பெரியவரும் மக்களால் அதிகம் நேசிக்கப்பட்டவராகவும் விளங்கினார் ரிப்பன். இந்திய தேசியக் காங்கிரசின் தந்தையாகிய ஆலன் ஆக்டேவியன் ஹியூம் என்பவரும் அவருக்கு உதவிய வில்லியம் வெட்டர்பன் என்பவரும் தவிற வேறு எந்த ஆங்கிலேயனும் ரிப்பன் பிரபுவைப் போன்று அவ்வளவு அதிகமாக இந்தியர்களால் நேசிக்கப்படவில்லை

ரிப்பன் தெய்வ பயம் மிகுந்தவர். உண்மையும், நேர்மையும், நீதியும் நாட்டின் உயர்வுக்கும் விடுதலையின் வெற்றிக்கும் உதவும் என்று நம்பினார். உண்மையாகவே இந்திய மக்களை விடுதலையளிக்க விரும்பிய ரிப்பன் தனது மரணம் வரையிலும் பிரபுக்கள் சபையில் அதற்காக வாதாடினார்.

ரிப்பன் பிரபு இந்தியர்களால் இன்றும் மதிக்கப்படுவதற்குக் காரணம் அவர் அநேக நன்மைகளை செய்து முடித்தார் என்பதற்காக அல்ல. அவரது புனித நோக்கங்களுக்காகவும் உயர்ந்த தத்துவங்களுக்காகவும், நீதி நிறைந்த கொள்கைகளுக்காகவும், நிற அடிப்படையில் இந்தியர்களை வெறுக்காததற்குமேயாகும்,““ என்று சுரேந்திரநாத் பானர்ஜி கூறினார்.

ரிப்பன் பிரபுவின் செயல்கள் வெற்றி பெறாவிட்டாலும் இந்திய மக்களுக்குள் உயர்ந்த விருப்பங்களையும் சிறந்த நல்ல குணங்களையும் உண்டு பண்ணின. இந்திய அரசியல் வாழ்க்கையில் புதிய திருப்பங்களை ஏற்படுத்தின. 1885-ல் இந்திய தேசிய காங்கிரஸ் தோன்றியது ரிப்பன் கடைப்பிடித்த கொள்கையின் முதற்பயனே என்று கூறலாம்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

6. நார்த்புருக் பிரபுவுக்கு பிறகு பி வைசிராயக நியமிக்கப்பட்டவர் யார்?
7. யாருடைய தலைமையில் முதலாவது பஞ்ச குழு அமைக்கப்பட்டது?
8. இங்கிலாந்து பாரளுமன்றத்தில் எந்த ஆண்டு அரசுரிமைப் பட்டய சட்டம் இயேற்றப்பட்டது?
9. அரசாங்க அனுமதி இல்லாமல் ஆயுதங்களை வத்திருக்க கூட்டது என இயேற்றப்பட்ட சட்டத்தின் பெயர்?
10. அலிகார் கல்லூரி யாருடையக காலத்தில் தொடங்கப்பட்டது?

## 8.7 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

1. 1858
2. கானிங் பிரபு
3. டெர்பி பிரபு
4. ஹீரட்
5. 1859
6. லிட்டன் பிரபு
7. சர் ரிச்சர்ட் ஸ்ட்ராச்சி
8. 1876
9. ஆயுத கட்டுப்பாட்டு சட்டம், 1878
10. லிட்டன் பிரபு.

## 8.8 சுருக்கவுரை

- 1857 - ம் வருட சிப்பாய் கலகத்திற்குப் பிறகு கம்பெனியின் ஆட்சியை நீக்கிவிட்டு இந்தியாவை இங்கிலாந்து ஆட்சியின் கீழ் நேரடியாகக் கொண்டுவந்தது.
- நிதித்துறையில் இந்தியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்ட லிட்டன் பிரபு இந்தியர்கள் அநியாயமாகத் தண்டிக்கப்படுவதைத் தடுத்தார்.
- பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் முதன் முதலாக ஸ்தல சுயாட்சித் திட்டத்தை வகுத்து அதை நடைமுறைக்குக் கொண்டு வந்தவர் ரிப்பன் பிரபுவே ஆவார்.

## 8.9 முக்கிய வார்த்தைகள்

- மனுக்கள்: இது ஒரு முறையான எழுதப்பட்ட கோரிக்கையை குறைக்கிறது, பொதுவாக ஒரு கையொப்பமிட்ட பல மக்கள், ஒரு குறிபிட்ட காரணம் தொடர்பாக அதிகாரத்துக்கு முறையிடுகின்றனர்.
- பாதுகாப்பு அடைப்பான்: இந்த சூழலில், அதிருப்தியுள்ள தனிநபர்கள் மற்ற உறுப்புகளுக்கு தங்கள் எதிர்பைச் செயல்படுவதற்கு அனுமதிக்கும் அமைப்புகளை இது குறிக்கிறது, எனெனில் அது நீராவி விட்டு விடுவது போல் இருந்தது.

## 8.10 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்

**குறு விடை வினாக்கள்**

1. விக்டோரிய மாகராணியின் பேரறிவிப்பு பற்றி குறிப்பு வரைக.
2. கானிங் பிரபு காலத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகளை எழுதுக.
3. ரிப்பன் பிரபுவின் கல்வி சீர்திருத்தங்கள் பற்றி குறிப்பு எழுதுக.

**நெடு விடை வினாக்கள்**

4. கானிங் பிரபுவின் சீர்திருத்தங்களை பற்றி விரிவாக எழுதுக.
5. ரிப்பன் பிரபுவின் சாதனைகளை தொளிவாக எழுதுக.

## 8.11 மேலும் படிக்க


சந்திரா, பிபின், 2009. நவீன இந்தியாவின் வரலாறு. ஹைத்தராபாத், ஓரியண்ட் பிளாக்வான்ஸ்.

டியூப்-பானர்ஜி, இஷிதா. நவீன இந்தியாவின் வரலாறு. கேம்பிரிட்ஜ், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக அச்சகம்

தாரிக், முகம்மது. 2007. நவீன இந்திய வரலாறு. புது தில்லி: டாடா மெக்ரா-ஹில் கல்வி.

பண்டியோபதியா, செ்கரா. 2004. பிளாசி முதல் பார்ட்டி வரை: நவீன இந்திய வரலாறு. ஹைதராபாத்: ஓரியண்ட் பிளாக்வான்ஸ்.

சென், S.N. 2006. நவீன இந்திய வரலாறு. புது தில்லி: நியூ ஏஜ் இண்டர்நேஷனல்.


# அலகு – 9 வைசிராய்கள் மற்றும் இந்திய கவுன்சில் சட்டங்கள்

9.0 அறிமுகம்

9.1 நோக்கங்கள்

9.2 கர்சான் பிரபு

9.3 இர்வின் பிரபு

9.4 மவுன்பேட்டன்

9.5 இந்திய கவுன்சில் சட்டம்

9.5.1 1861வருட இந்திய கவுன்சில் சட்டம்

9.5.2 1892 வருட இந்திய கவுன்சில் சட்டம்

9.5.3 1909 வருட இந்திய கவுன்சில் சட்டம்

9.5.4 1919 வருட இந்திய கவுன்சில் சட்டம்.

9.5.5 1935 வருட இந்திய அரசு சட்டம்

9.6 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

9.7 சுருக்கவுரை

9.8 முக்கிய வார்த்தைகள்

9.9 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்

9.10 மேலும் படிக்க

## 9.0 அறிமுகம்

ஒவ்வொரு செயலுக்கும் துறை சார்ந்த ஒவ்வொரு துறையிலும், பிரிட்டிஷாரின் செயல்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு மண்டலங்களையும் மறைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டவை. இவற்றுள், கல்வி, நிலவரி போன்றவை நெறிப்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்ட முக்கிய செயல்களும் குறிப்பிடத்தக்கவை இந்த அலகில் கர்சன் பிரபு, இர்வின் பிரபு மற்றும் மவுன்பேட்டன் பிரபுவின் வாழ்க்கை குறிப்புகளையும் அவர்களின் காலத்தில் இந்தியாவில் நடந்த நிகழ்வுகளையும் காணலாம். மேலும் இந்திய அரசு சட்டங்கள் தோன்றியதற்கான காரணங்களையும் அதன் விளைவுகளையும் இந்த அலகில் காணலாம்.

## 9.1 நோக்கங்கள்

இந்த அலகை நீங்கள் படித்து முடித்த பின்பு உங்களால்,

- கர்சன் பிரபுவின் கொள்கைகளை பற்றி ஆரய முடியும்
- இர்வின் பிரபுவின் சீர்திருத்தங்களை பற்றி அறிந்துகொள்ள முடியும்
- இந்திய கவுன்சில் சட்டங்கள் பற்றி அறிந்து கொள்ள முடியும்
- மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களை பற்றி ஆராய முடியும்.

## 9.2 கர்சான் பிரபு 1899-1905

தன்னுடைய தனித்த அனுபவம் மற்றும் ஆட்சித்துறை அறிவாற்றல் காரணமாக கர்சான் இந்திய அரசப் பிரதிநிதிகளுள் திறமை மிக்கவராகச் செயல்பட்டார். இந்தியாவில் துணைச் செயலராகச் செயல்பட்டதால் இந்தியா பற்றிய அறிவு அவருக்கு மிக இருந்தது. தம்முடைய பயணங்கள் காரணமாக அவர் மூன்று புத்தகங்கள் எழுதினார். தமது 40-வது வயதில் இந்தியாவின் அரசப் பிரதிநிதியானார். தனது ஆற்றலால் தானும் தன்னுடைய பணியாளர்களையும் சிறப்பாகச் செயல்படச் செய்தார்.

அயலுறவு:

**எல்லைப்புறக் கொள்கை:**

1. முன்னேற்றக் கோட்பாட்டின் ஆதரவாளரா இருந்தார். ஆனால் நடைமுறையில் நடுநிலைக் கோட்பாட்டையே பின்பற்றினார்.
2. வடமேற்கு எல்லையைப் பொறுத்தவரை எல்லைப்புற இனப் பிரிவினர் துன்பமளித்துக் கொண்டிருந்தனர். எனவே, சித்ரால், குவெட்டா போன்ற பகுதிகளிலிருந்து ஆங்கிலப் படைகளைத் திரும்பப் பெறுதலை விரும்பவில்லை
3. (அ) 1901-ல் அவர் வட மேற்க்கு எல்லை மாநிலத்தை உருவாக்கினார். (ஆ) அதன் பல பகுதிகளும் சாலைகளாளும்,

இருப்பு பதைகளாளும் இணைக்கப்படன, (இ) மலை ஜாதியினர் படைகளங்கள் வெடிமருந்துகள் ஆகியவற்றைப் பொறுதளையும் தடை செய்தார் (ஈ) சிறப்புக் காவல் படையினர் உருவாக்கப்பட்டு காவல் வலுபடுத்தப்பட்டது. (உ)மலை வாழ் பிரிவினரும் பொதுப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அதன் மூலம் அவர்களது வருவாய் பெருக்கப்பட்டதால் அப்பிரிவினர் தமது தவறான செயல்கயைாக் கைவிடலாளார்கள் (ஊ) கன்டோன்மெண்ட்கள் என்ற படை பிரதேசங்கள் உருவாக்கப்பட்டு அங்கு படைகள் நிரந்தரமாக இருக்குமாறு செய்யப்பட்டன. இவ்வாறு நெருக்கடியான ஆபத்தான காலாட்டங்கள் திறமையுடன் சமாரிக்கப்பட்டன. ஐ) புதிதாக உருவாக்கப்பட்ட வடமேற்கு எல்லை மாநிலத்தை கண்காணிக்க புதிய தலைமை ஆணையர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

தன்னுடைய வடமேற்க்கு எல்லை கோட்பாடு மூலம் தாமதம் மற்றும் வெறுப்பு ஆகியவற்றைத் தவிர்த்தார். ஆனையர் ஆங்கில அரசுக்கு நோடியாகக் கட்டுப்பட்டவராய் இருந்ததால் செயல்கள் சிறப்பாக இயங்கின. அப்பகுதி மலைவாழ் மக்கள் பண்பாடு மற்றும் நாகரிக நிலைகளுக்கு மாற்றப்பட்டனர். மேலும் இரு எதிரிடையான பிரிவினருக்கிடையில் இணக்கம் தன்மை உருவாக்கப்பட்டது.

**ஆப்கானிஸ்தான்:**

(1) அப்துல் ரகுமான் காபூலின் அமீர் ஆனபோது பல சிக்கல்கள் உருவாக்கப்பட்டன. (2) தமக்குத் தொல்லைகளை அளிப்பதாக ஆங்கிலேயர்கள் அவர்கள் மீது குற்றம் சாட்டினார்கள். அதே நேரத்தில் ப்பானியரும் அவருடைய வரவேற்ற கோட்பாட்டினை ஏற்க மறுத்தார்கள். (3) 1901-ல் அவருடைய பணத்திற்கு பின் அமீரான அவருடைய மகன் ஹபீபுல்லாவும் ஆங்கிலேயருடன் நல்லுறவு கொண்டிருக்கவில்லை. (4) 1904-ல் கர்சான் இந்தியாவில் இல்லாதபோது சர். லூயி டேன் என்பவர் காபூலுக்கு அனுப்பப்பட்டார். அவள் மூலம் அமீருடன் நட்புறவு உருவாக்கப் பட்டது. அமீர் கொண்டிருந்த பட்டங்களை ஆங்கிலேயர் அங்கீகரித்தனர்.

**பாரசீக வளைகுடா**

பாரசீகத்தைப் பொறுத்தவரை கர்சன் பிரபு விழிப்புணர்வு கொள்கையைக் கடைப் பிடித்தார். 1898-ல் ஓமன் சுல்தான் மஸ்காட்டை பிரெஞ்சு காரர்களுக்கு வழங்கியபோது சிக்கல்கள் உருவாயின. பாரசீகத்தில் அயல்நாட்டவர் படைத்தளம் உருவாக்கப்பட்டால் அது ஆங்கிலேயருக்கு ஆபத்தாய் முடியதென்பதை நன்கறிந்திருந்தார். எனவே கர்சன் அங்கு ஒரு கப்பற்படை அனுப்பியபோது சுல்தான், பிரெஞ்சு காரர்களுக்கு நல்கிய சலுகைகளை நிறுத்திவிட்டார். 1899-ல் ஆங்கிலேயர் குவெய்த்தின் ஆட்சியாளருடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார். அதன் விளைவாக சுல்தான் ஆங்கிலேயர் அல்லாத பிற ஐரோப்பியர்களுக்கு எவ்விதமான சலுகைகளையும் தருவதன்றும் தவிர்க்கப்பட்டார். இதன் முயப் கர்சான் அண்டை நாடு ஒன்று மூலம் இந்தியாவுக்கு ஏற்பட கூடிய அபயாத்தை கூடுப்படுத்தினார்.

**திபேத்**

ஆங்கிய அரசுக்கும் திபேத்துக்குமிடையியான உறவில் பல ஏற்ற இறக்கங்கள் காணப்பட்டன. கர்சான் வருகையின் போது திபெத்தியர் சீனாவின் கட்டுப்பாடு இல்லாமல் சுதந்திரமாக வாழ விரும்பினர்,
தலாய்லாம ர்'யாவின் உதவியை டார்ஜியப் மூலம் பெற்ற போது கர்சன் வியப்பும் ஆத்திரமும் அடைந்தார். லாசாவில் ர்'யாவின் ஆதிக்கம் நிலை பெறுவதை கர்சான் விரும்பவில்லை எனவே குழப்பமா சூழலில் யங்ஹஸ்பெண்ட் என்பவர் தலைமையில் ஒரு தூதுக்குழுவை கர்சான் லசாவுக்கு அனுப்பினார். அதன் விளைவாக 1904-ல் ஏற்பட்டது. அதன்படி,

1) திபத் ஆங்கிலேயருக்கு போர் இழப்பீடாக 75 இலட்ச்சம் ரூபாய்களை 75 தவனைகளில் தரவேண்டும் என்ப்பட்டது. 2) யாடுங், கியாண்ட்ஸி, குர்டாக்ஸ் போன்றவை ஆங்கில வாணிப தளங்களாக ஏற்கப்பட்டன. 3) கியாண்ட்ஸியில் ஆங்கில வர்தக முகவர் ஒருவர் நியமிக்கப்பட்டார். 4) திபத்தின் வெளியுறவு கொள்கை அங்கிலக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. 5) திபத் பிற நாடுகளுக்கு எவ்விதமான நில உடமையோ அல்லது வர்தக சலுகைகளையோ வழங்க மறுத்து விட்டது. ஆனால் இழப்பீட்டுத் தொகை 25 இலட்ச ரூபாயக குறைக்கப்பட்டன. ஆங்கில அலுவலர் லாசாவுக்குச் செல்ல வேண்டாமென ஆனியிடப்பட்டார். இவ்வாறு கர்சன் பின்பற்றிய வலிமை மிக்க கொள்கையானது அவருக்கு பாதி வெற்றியைத் தேடித் தந்தது.

**உன்நாட்டுப் பணிகள்:**

இந்தியாவில் கர்சான் பல சிறப்பான சாதனைகளை செய்து முடித்தார். இந்தியர்களை விரும்பாத கர்சான் திறமைக்கு முக்கியத்துவம் அளித்தார். நாட்டின் நிர்வாகமும் ஆட்சித்துறையும் சீராக இயங்குமாறு செய்யப்பட்டன. அவரால் கீழே தரப்பட்டுள்ள பல செயல்கள் மேற்கொள்ளப்பட்டன.

**நிதி:**

பரவல் கோட்பாட்டைப் பின்பற்றினார். 1898-ல் பௌலர் குழுவின் பரிந்துரைகளின் பேரில் நிதி நிலைமையை சீராக்கப்பல வழிகள் மேற்கொள்ளப்பட்டன. 1904-ல் ஐந்தாண்டுக்கு ஒரு முறை வரியைதீர்மானிக்கும் முறை நீக்கப்பட்டது. உப்பு வரியானது வாரியானது 2 ½ ரூபாயிலிருந்து 1ரூபாயக குறைக்கப்பட்டது.

**விவசாயம்:**

விவசாயிகளின் குறைகளைக் களைந்து விவசாயத்தியாத்தின் மீது பது கவனம் செலுத்தினார். 1900-ஆம் ஆண்டில் பஞ்சாப் நில விடுப்பு சட்டம் ஆனல் விவச்சயிகள் பணம் தரும் ஈட்டிக்காரர்களின் கொடுமைகளில் இருந்து காப்பாற்றபட்டார்கள். 1902-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் ஒன்றின் மூலம் காலம் மற்றும் தேவைகள் அடிப்படையில் நிலவரி தீர்மானிக்கப்பட வேண்டும் எனப்பட்டது. விவசாயிகளின் நிலங்களை நிலயுடமைகள் இல்லாதவர்கள் பிற பயனிகளுக்கு பயன்படுவது தடை செய்யப்பட்டது. விவசாயம் மற்றும் விவசாயகள் மேம்பாட்டிற்காக 1904-ஆம் கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்கள் சட்டம் இயற்றப்பட்டது. (பஞ்சம் மற்றும் இயற்கைச் சிக்கல்கள் எழும்போது வரிவிதிப்பை குறைக்க 1905ல் விதிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தியர்களை நம்பாமல் இந்தியர்களுக்கு பதவி தராமையால் அவரது செயல்களுக்கு மதிப்பிருக்கவில்லை. இந்தியர்களின் நலனை பாராட்டமையால் அவர்களது வெறுப்புக்கு ஆளாயினார். திறமையான ஆட்சியாளரான அவர் திறமைக்கு மட்டுமே மதிப்பளித்தார் எதை செய்ய விரும்மவில்லையோ அதனை செய்தார் எதைச் செய்ய வேண்டுமோ அதனை செய்யவில்லை

## 9.3 இர்வின் பிரபு 1926-1931

இர்வின் பிரபு 1926 முதல் 1931 வரை இந்தியாவின் வைசிராயாக பணியாற்றினார். மன்னர் ஐந்தாம ஜார்ஜ் பரிந்துரையின்படி நியமிக்கப்பட்டு ஏப்ரல் 1, 1926ஆம் ஆண்டு மும்பை வந்திறங்கினார்.

அவரது பதவிக்காலத்தில் பெருத்த அரசியல் மாற்றங்கள்

நிகழ்ந்தன. இந்தியா தன்னாட்சிக்குத் தயாரானநிலையில் உள்ளதா என ஆராய அமைக்கப்பட்ட சைமன் குழுவில் இந்தியர் எவரும் இடம் பெறாததை கண்டித்து நாடெங்கும் போராட்டங்கள் நடந்தன. இவற்றைக் கட்டுப்படுத்த இர்வின் வழங்கிய சலுகைகளை அரைமனதானதொன்றாக இந்தியர்கள் கருத இலண்டனில் கூடுதலானவையாக கருதப்பட்டன. இக்காலத்தில் நிகழ்ந்த குறிப்பிடத்தக்க நிகழ்வுகள்: சைமன் குழு அறிக்கைக்கு எதிரான போராட்டங்கள்ளூ நேரு அறிக்கைளூ அனைத்துக் கட்சி மாநாடுளூமுஸ்லிம் லீக்கின் தலைவர் முகமது அலி ஜின்னா பதினான்கு அம்சக் கோரிக்கைளூ மகாத்மா காந்தியின் தலைமையில் இந்திய தேசிய காங்கிரஸ் நடத்திய குடிகளின் ஒத்துழையாமை இயக்கம் மற்றும் இந்திய வட்ட மேசை மாநாடுகள் ஆகும்.

இர்வின் அனைத்து காங்கிரசுத் தலைவர்களையும் சிறையில் அடைத்து காந்தியுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். இலண்டனிலிருந்து விடுதலை வழங்குவது குறித்த எந்தவொரு ஆதரவான நிலையும் கிடைக்காதநிலையில் இர்வினின் முயற்சிகள் தோல்வியடைந்தன. நாட்டில் பிரித்தானிய குடிமைப்படுத்தலுக்கு எதிராக போராட்டங்கள் தீவிரமடைந்தன. தன்னால் எந்தவொரு வாக்குறுதியும் வழங்கவியலா நிலையில் இர்வின் அடக்குமுறையால் இந்தப் போராட்டங்களை எதிர்கொண்டார். காந்தியை கைது செய்து, பொதுக்கூட்டங்களை தடை செய்து கட்டுப்பாடுகளை விதித்தார். இந்தப் போராட்டங்களின்போது காவல்துறையின் தடியடியால் தலைவர் லாலா லஜபதிராய் உயிரிழக்க நிலைமை மோசமானது. இதனை நேரில் கண்டபகத்சிங் லாலாவின் மறைவிற்கு பழிவாங்கவே தனது தாக்குதலை நிகழ்த்தியதாகத் தெரிவித்தார். காந்தியின் கைது மேலும் போராட்டத்தை வலுவடையச் செய்ய சனவரி 1931இல் தில்லி உடன்பாடு'தில்லி உடன்பாட்டிற்கு வழி வகுத்தார்ளூ இதன்படி அனைத்துத் தரப்பினரும் பங்குகொள்ளும் வட்ட மேசை மாநாடு ஒன்றுக்கு ஏற்பாடு செய்ய ஒப்புக்கொண்டதை அடுத்து ஒத்துழையாமை இயக்கமும் வெளிநாட்டுப் பொருட்களை புறக்கணிக்கும் போராட்டமும் விலக்கிக் கொள்ளப்பட்டது. இரு வாரங்கள் நடந்த இந்த மாநாட்டின் முடிவில் காந்தி-இர்வின் உடன்பாடு ஏற்பட்டது. மார்ச் 5,1931 அன்று கையெழுத்தான இந்த உடன்பாட்டின்படி

- காங்கிரசு தனது ஒத்துழையாமை இயக்கத்தை விலக்கிக் கொண்டது.
- வட்ட மேசை மாநாடுகளில் பங்கேற்க காங்கிரசு உடன்பட்டது.
- காங்கிரசின் செயல்பாட்டைக் கட்டுப்படுத்த அரசு வெளியிட்ட அனைத்து அவசரச் சட்டங்களையும் திரும்பப் பெறும்.
- வன்முறை தவிர்த்த அனைத்து வழக்குகளையும் அரசு விலக்கிக் கொள்ளும்.
- ஒத்துழையாமை இயக்கத்திற்காக கைதாகி தண்டனை பெற்ற அனைத்து காங்கிரசுத் தொண்டர்களையும் விடுவிக்க அரசு உடன்பட்டது.

மேலும் இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் காங்கிரசின் ஒரே சார்பாளராக காந்தி கலந்து கொள்ளவும் உடன்பாடு ஏற்பட்டது. மார்ச் 20, 1931 அன்று இர்வின் பிரபு ஆட்சியிலிருந்த இளவரசிக்காக கொடுக்கப்பட்ட ஓர் விருந்தில் காந்தியின் நேர்மை, தூய்மை மற்றும் நாடுப்பற்றை பாராட்டிப் பேசினார். இதற்கு பின்னர் ஒரு மாத காலத்தில் பணி ஓய்வு பெற்று நாடு திரும்பினார். இர்வின் திரும்பிய பின்னர் அமைதி நிலவினாலும் ஓராண்டுக்குள்ளேயே மாநாடு தோல்வியடைந்து காந்தி மீண்டும் கைது செய்யப்பட்டார்.

இர்வினின் வைசிராய் பதவிக்காலம் இருதரப்பினருக்கும் நடுநிலையில் இருந்ததுளூ கண்டிப்புடனும் தனித்தன்மையுடனும் செயல்பட்டார். எனவே நாடு திரும்பிய பின்னர் மிகுந்த மதிப்புடன் அரசியலில் மீண்டும் ஈடுபட முடிந்தது.

## 9.4 மவுண்ட்பேட்டன், 1947-1948

பாட்டன்பர்க் லூயி என்ற மவுண்ட்பேட்டன் 1900 ஜூன் 25 ஆம் தேதி இங்கிலாந்தில் வின்ஸ்டார் என்ற இடத்தில் பிறந்தார். மவுண்ட்பேட்டன் என்பது குடும்பப் பெயர். இவரது தந்தை லூயி இளவரசர் ஆஸ்திரியாவில் பிறந்தமையால் முதல் உலகப் போருக்குப்பின் இவரது குடும்பம் பாட்டன்பர்க் என்பதற்குப் பதிலாக மவுண்ட்பேட்டன் என்று பெயர் மாற்றம் செய்து கொண்டது. மவுண்ட்பேட்டன் பிரிட்டி‘ பேரரசி விக்டோரியாவின் கொள்ளுப் பேரன். இவர் ஆஸ்போர்ன் மற்றும் டார்ட்மவுத் ராயல் கடற்படை கல்லூரியில் பயின்ற பின் (1913-16) பிரிட்டி‘ ராயல் கடற்படையில் சேர்ந்து முதல் உலகப்போரில் பங்கேற்றார். இரண்டாவது உலகப் போரின் போது மவுண்ட்பேட்டன் கெல்லி என்ற போர்கப்பலின் தலைவராக இருந்தார்.

வின்ஸ்டன் சர்ச்சில் பிரிட்டிஷ் பிரதமராக இருந்தபோது மவுண்ட்பாட்டனின் அறிவாற்றலையும், ஆளுமைத் திறனையும், தலைமைப் பண்புகளையும் கண்டறிந்து அரசுக்குக் கடற்படையில் பல பதவிகளையும், பதவி உயர்வுகளையும் கொடுத்து ஊக்குவித்தார். மவுண்பேட்டன் இந்திய வைசிராயாக நியமிக்கப்பட்ட போது (1945) அவர் தென்கிழக்காசியாவில் 14 வது பிரிட்டி‘ இம்பீரியல் ராணுவத்தில் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். பழமைவாத கட்சியின் பிரதமராக இருந்த சர்ச்சிலால் ஊக்குவிக்கப்பட்ட மவுண்ட்பேட்டன் அவருக்குப் பின் தொழிற்கட்சி பிரதமரான கிளமன்ட் அட்லி பயன்படுத்திக் கொண்டார். மவுன்பேட்டன் 1947 மார்ச் 22லிருந்து ஆகஸ்டு 14 வரை இந்திய வைசராயாகவும், 1947 ஆகஸ்டு 15லிருந்து 1948 ஜீன் 21 வரை தலைமை ஆளுநராகவும் பணியாற்றினார்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

1. கர்சன் பிரபு எந்த வயதில் அரச பிரதிநியானார்?
2. எந்த ஆண்டு கர்சன் பிரபு வட மேற்கு எல்லை மாநிலத்தை உருவாக்கினார்?
3. 1898ல் ஓமன் சுல்தான் பிரெஞ்சுகாரர்களுக்கு எப்பகுதியை வழங்கினார்?
4. இர்வின் பிரபு எம்மன்னரின் பரிந்துரையின்படி இந்தியாவின் வைசிராயாக பணியாற்றினார்?
5. மவுன்பேட்டன் எங்கு பிறந்தார்?

## 9.5 இந்திய கவுன்சில்கள் சட்டகள்

### 9.5.1 இந்திய கவுன்சில்கள் சட்டம்-1861

வைசிராயின் அரசுக்கும் சென்னை அரசுக்கும் இடையில் வருமானவரிச் சட்டம் பற்றி கருத்து வேற்றுமை ஏற்பட்டது. சட்டக் கவுன்சில்கள் இல்லாதவையாக சில முறைப்படுத்தப்படா மாநிலங்கள் இருந்தன. அவையும் சில விதிகளை வகுத்து அவற்றை சட்டமென்றனளூ இந்தியா அமைச்சருக்கும் வைசிராய்க்கும் இடையிலான கடிதங்களின் நகல்கள் அல்லது தகவல்கள் தமக்கும் தரப்படவேண்டும் என்று சில மாநிலச் சட்டக் கவுன்சில்கள் கோரின. இப்படிப்பட்ட காரணங்களினால் இந்திய கவுன்சில்கள் சட்டம் தேவைப்பட்டது. இச்சட்டம் கொண்டு வரபடுவதில் கோவெல், சர் சார்லஸ் உட் ஆகிய இருவரும் பெரும் பங்காற்றினர். பின்வரே அதனை அரசின் சார்பில் காமன்ஸ் சபையில்

பிரேரேபித்தவர்.

**ஷரத்துகள்**:

1. வைசிராயின் நிர்வாகக் கவுன்சிலில் ஐந்தாவது உறுப்பினர் ஒருவர் சேர்த்துக்கொள்ளப்பட்டார். சட்ட அறிவு உள்ளவராக அவர் இருத்தல் வேண்டும்.
2. சில முக்கியமான இலாகாக்களை மட்டும் தன் கையில் வைத்துக்கொண்டு, எஞ்சியவற்றை தன் நிர்வாகக் கவுன்சில் உறுப்பினர்களிடையில் வைசிராய் விநியோகிக்கலாம்.
3. கவர்னர்-ஜெனரலின் சட்டக் கவுன்சிலில் கூடுதலாக 6 முதல் 12 உறுப்பினர்களை அவர் நியமித்துக் கொள்ளலாம். அவர்களில் அதிகபட்சம் பாதிப் பேராவது அதிகாரிகள் அல்லாத பிறராக இருத்தல் வேண்டும். இவர்கள் ஈராண்டு காலம் பதவி வகிப்பர். சட்ட கவுன்சில் இந்தியர், ஐரோப்பியர் பிற அந்நியர், சமஸ்தானங்களில் பணிபுரியும் பிரிட்டி' அரசரின் ஊழியர் ஆகிய அனைவருக்கும் பொருந்தும் சட்டங்களை இயற்றலாம். ஆயினும் அரசின் கடன்கள், வருவாய், ராணுவ வி'யங்கள், குடிகளின் சமய நம்பிக்கைகள், சமஸ்தானம் தொடர்பான கொள்கை போன்ற சில வி'யங்களில் அது கவர்னர்-ஜெனரலின் முன் அனுமதி பெற்றே சட்டம் இயற்ற முடியும். பிரிட்டனின் அரசு பாராளுமன்றம், அமைச்சர்கள் பற்றி எதையும் அது பரிசினை செய்தல் தடை செய்யப்பட்டது. கவுன்சிலின் மசோதா எதையும் நிராகரிக்கும் வெட்டு அதிகாரம் அவர்களுக்கு உண்டு. நெருக்கடிகளை சமாளிக்க அவசர ஆணைகளைப் பிறப்பிக்கும் அதிகாரம் அவருக்கு உண்டுளூ அவை ஆறு மாத காலம் செல்லும்ளூ அவற்றுக்கான அவசரத்தை மட்டும் அவர் இந்திய மந்திரிக்கு விளக்கினால் போதும். மற்றபடி கவுன்சில் இயற்றும் ஒவ்வொரு சட்டமும் அவரது ஒப்பத்தை பெறுதல் வேண்டும். தேவை நேரின் சில சட்டங்களை அரசியாரே கூட நிராக்கலாம்.
4. அரசின் கடன், நிதி, நாணயம், தந்தி தபால் துறை, சமயம், காப்பிரைப் மற்றும் பேடண்ட்கள் ஆகியவை பற்றி மையச் சட்டக் கவுன்சில்கள் மட்டுமே சட்டமியற்ற முடியும்ளூ மாநிலக் கவுன்சில்கள் இதைச் செய்ய முடியாது.
5. இதேபோல் தமது சட்டக் கவுன்சில்களில் பம்பாய், சென்னை ஆளுநர்களும் 4-க்குக் குறையாத, 8-க்கு மேற்படாத புதிய உறுப்பினர்களை நியகிக்கலாம். ஒரு அட்வகேட்-ஜெனரலையும் அவர்கள் நியமித்துக் கொள்ளலாம். புதிய உறுப்பினர்களின் பதவிக்காலம் ஈராண்டு. மாநில சட்டக் கவுன்சில்களின் மசோதாக்கள், அல்லது திருத்தங்கள், கவர்னர்-ஜெனரலின் ஒப்பம் பெற்ற பின்னரே அமுலாகும்.
6. புதிய மாநிலங்களை உருவாக்கும் அதிகாரமும் அதற்கு துணை ஆளுநர்களை நியமிக்கும் அதிகாரமும் கவர்னர்-ஜெனரலுக்கு வழங்கப்பட்டன. மாநிலங்களின் எல்லைகளை மாற்றி அமைத்தலும் வரையறை செய்தலும் கூட அவருக்கு அனுமதிக்கப்பட்டன.

**விமர்சனம்**

மேலே சொல்லிய ஷரத்துக்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை. கவர்னர்-ஜெனரல் மற்றும் கவர்னர்களின் சட்டக் கவுன்சில்களை பெரிதுபடுத்தியது, அவற்றின் சட்டமியற்றும் அதிகாரங்களை வரை முறைபடுத்தியது, அதிகாரிகள் இல்லாத சிலரையும் நியமித்தது, புதிய மாநிலங்களை உருவாக்கவும் மாநில எல்லைகளை வகுக்கவும் கவர்னர்-ஜெனரலுக்கு அதிகாரம் அளித்தது. இவையெல்லாம் இச்சட்டத்தின்

முக்கியத்தைக் கோடிட்டுக் காட்டும் சட்ட கவுன்சில்களைப் பற்றியே இதன் பெரும்பான்மை ‘ரத்துகள் இருப்பினும், வேறுசில கவர்னர்-ஜெனரலின் அதிகாரங்களை கூட்டின.

மக்களால் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படுவதை இது அனுமதிக்கவில்லை. வைசிராய் யார் யாரை அதிகாரிகள் இல்லாத பிரிவில் நியமிப்பவர் என்பது தெரிந்ததே. ஜமீந்தார்கள், ஓய்வுபெற்ற உயர் அதிகாரிகள் போன்றவர்களே அவர்கள். இவ்வகை உறுப்பினர்கள் வெறும் தலையாட்டி பொம்மைகளாக இருக்க முடியும். எனவே, மக்கள் பிரதிநித்துவத்தில் இது முதற்படி என்று சிலர் கூறுவது தவறானது. இவர்கள் மக்களின் பிரச்சினைகளை அறிந்தவர்கள், ஆகவே அவற்றை சட்ட கவுன்சிலின் முன்வைத்து குறைகளை களைய முயல்வர் என்று சிலர் எழுதுவது விநோதம். இந்திய எழுத்தாளர்களில் சிலரும் கூடத் தமது இந்திய அரசியலமைப்பு வரலாற்றில் இப்படி எழுதுவது பேதமைளூ வெள்ளையர் எழுவதில்லை வேடிக்கை ஒன்றுமில்லை. அது அவர் தம் பார்வைளூ தமது ஆட்சியாளர்களை கைவிட அவர் விரும்பார். பாராளுமன்றமே வாயடைத்துப் போன பின் இவர்கள் மட்டும் வேறு என்ன சொல்வர்

### 9.5.2 இந்திய கவுன்சில்கள் சட்டம், 1892

முந்திய பெயரிலேயே மற்றொரு சட்டமும் 31 ஆண்டுகள் கழிந்து பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டது. இப்படி ஒரு ஊசி மருந்தை அப்பொதைக்கபோது ஏற்றவேண்டாமா? ஏதாவது மருத்துவம் செய்வதாகக் காட்டிக் கொள்ள, மக்களுக்கு மேலும் அதிகாரங்கள் அல்லது உரிமைகள் வழங்குவதாக வே‘ம் போட வேண்டாமா? புதிய தமா‘ ஏதாவது முப்பது வரு‘ம் கழிந்து பின்பாவது செய்து காட்ட வேண்டாமா? சில சீர்திருத்தங்கள் செய்யுங்கள்ளூ மகாராணியாரின் பிரகடனத்தை நம்பிய மூட மக்கள் முற்றிலுமாக ஏமாந்து விடப்போகிறார்கள் என்று வைசிராய் டபரின் பிரபு எழுதினார். இந்தியா மந்திரி கிராஸ் பிரபு என்பவன் ஏமாற்றத்துக்காக ஏதோ கிறுக்கினான். அந்தக் குரங்கு படம் தான் இராண்டாவது இந்தியக் கவுன்சில்கள் மசோதாவாயிற்று. நம்மவரில் சில கூலிகள் அதை வாய்விடுப் பாராட்டினர்.

**ஷரத்துகள்**

1. சட்டக் கவின்சில்களின் உரிமையைக் கொஞ்சம் இது அதிகரித்ததாம். அதாவது, நிதி விவகாரங்களைப் பற்றிக் கூட, சில நிபந்தனை, கட்டுப்பாட்டோடு அவை ஏதாவது பேசலாம் என்றது முக்கிய ‘ரத்து. அதாவது, கவுன்சில் உறுப்பினர்களுக்குச் சில கேள்விகளைக் கேட்கும் உரிமை வழங்கப்பட்டது. ஆனால் ஏன் என்று காரணங்கூறாமலேயே அக்கேள்விகளை நிராகரிக்க வைசிராய்க்கு முழு உரிமை உண்டு!
2. கவர்னர்-ஜெனரலின் புதிய உறுப்பினர்களை 10-லிருந்து 16 வரையும் சென்னை, பம்பாய் கவுன்சில்களில் 8 முதல் 20 பேர் வரையும் கூட்டிக்கொள்ளஅனுமதிக்கப்பட்டது. ஆயினும் வங்காளத்தில் கவுன்சிலின் தொகை 20க்கு மேல் போகக் கூடாது. வடமேற்கு, அவத் மாநிலங்களில் அது 15 ஆக இருக்கலாம். புதிய உறுப்பினர்களில் ஐந்தில் இருவர் மட்டுமே அதிகாரி இல்லாதோராயிருந்தல் வேண்டும்.
3. காங்கிரஸ் இயக்கம் உருவாகிவிட்டிருந்தது. தேர்தல் மூலமே புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும் என்றது அது. எனவே வெள்ளையரான ஹ்யூம், வெட்டன்பர்க் போன்றோருக்கு மதிப்பளித்து அரசு சரி என்று கூறி, தேர்தல் நடத்தினாலும், கவர்னர்-ஜெனரல்

அல்லது கவர்னர் நியமனம் ஆணை ச்ட்டப்படி வழங்கிய பின்னரே அவர்கள் பதவி ஏற்க முடியும் என்றது.

**மதிப்பீடு**

இச்சட்டம் எவ்வளவுபெரிய மாறுதலைச் செய்தது, எவ்வளவு அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த்து என்பதை மேலேயுள்ள மூன்று பத்திகளைப் படித்தவர்கட்குப் புரியும். அது ஒரு காற்றடைத்தபை அல்லது பொய்.

சட்டக் கவுன்சிலுக்கான தேர்தலும் ஒரு மாயைளு அதிக உறுப்பினர், அதிக அதிகாரம் என்பதும் இன்னொரு மாயை. ஒரு அங்குலம் கூட அதன் உரிமையில் முன்னேற்றம் ஏற்படவில்லை. எல்லாமே ஒரு ஜோக்ளு வேடிக்கை. ஆனால் சிரிப்பை மூட்டாமல் எரிச்சல் மூட்டும் ஜோக் சான்றாக ஒன்றை எடுத்துக் கொண்டால், புதிய உறுப்பினர் பதவி ஆறில் வெள்ளை வணிகருக்கு மட்டும் இரண்டு போயிற்று, காரணம், அவர்கள் இந்தியக் குடிகளின் உண்மையான பிரதிகளல்லவா! கவர்னர்-ஜெனரலின் கவுன்சிலின் மொத்த உறுப்பினர் தொகையான 24ல், 14 பேர் அதிகாரிகள், 4 பேர் தேர்தெடுக்கப்பட்ட அதிகாரியல்லாதோர், மேலும் 4 பேர் நியமிக்கப்பட்ட அதிகாரியல்லாதோர்.

கோபலகிருஷ்ண கோகலே சொன்னார்: பம்பாய் ராஜதானிக்கு8 இடங்கள் ஒதுக்கினார்கள். பம்பாய் நகராட்சிக்கும் பல்கலைக் கழகத்துக்கும் 2 போயிற்று, ஐரோப்பிய வணிகருக்கு 2 போயிற்று, தக்காணத்து சர்தார்களுக்கும் சிந்து ஜமீந்தார்களுக்கும் ஒவ்வொன்று போனது, 2 மட்டுமே பொது சீட்டுகள். எப்படி சீட்டுகள் பிரிக்கப்பட்டன என்பதற்கு இது ஒரு உதாரணம். ஆக இச்சட்டம், ஓட்டைப் பானை என்றார் பிரிட்டி' ஆட்சியின் விசுவாசியான அறிஞர், தொண்டர் கோகலே அவர்கள். அதே போன்ற தேசியவாதியான சர் பேரோஸ்'ா மேத்தாவின் மதீப்பீடும் அதுவே.

லாகூர் நகரில் அதே ஆண்டில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் முமுபெரும் தலைவர்களான தாதாபாய் நவுரோஜி, பானர்ஜி, பண்டித மதன்மோகன் மளவியா போன்றோர்விழித்து வரும் இந்தியாவின் ஏமாற்றத்தை நன்கு பலப்படுத்தினர்.

### 9.5.3 மிண்டோ-மார்லி சீர்திருத்தச் சட்டம் - 1909

**அரசு பிரதிநிதியின் நிருவாக சபை:**

இச்சட்டபடி அரசப் பிரதிநிதியின் நிருவாகக் குழுவில் நடைமுறையில் இந்திய உறுப்பினருக்காக ஓர் இடம் ஒதுக்கப்பட்டது. அவ்வாறு முதல் இந்திய உறுப்பினராக ஆக்கப்பட்ட பெருமை சத்தியெந்திர பிரசன்ன சின்ஹா என்பவருக்கு கிடைத்தது. சென்னை, பம்பாய் ஆளுநர்களின் நிருவாகக் குழுக்களின் உறுப்பினர் எண்ணிக்கையும் நான்காக உயர்த்தப்பட்டது. நிருவாக குழுக்களில் இந்தியர்களை நியமிக்க வேண்டுமென்று, 1909ஆம் ஆண்டின் சட்டம் குறிப்பாக தெரிவிக்காவிட்டால் செயலில் இந்தியர்களை நியமிக்கும் முறை உண்டாயிற்று.

**மத்திய சட்டசபை**

சட்ட சபைகளின் அமைப்பிலும் உரிமைகளிலும் முக்கிய மாறுதல்களை 1909 ம் ஆண்டுச் சட்டம் செய்தது. மத்திய சட்ட சபையில் அதிகமாக நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை பதினாறிலிருந்து அதிகபட்சமாக அறுபது வரையில் அதிகரிக்கப்பட்டது. அவர்களுள் இருபத்தென்மருக்கு மேற்படாத உறுப்பினர்கள். அதிகாரிகளாய் இருப்பார். அதனுடன் குறிப்பிட்ட சில சமூகங்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிப்பதற்காக அதிகாரிகள் அல்லாத மூவரை நியமிக்க அரசுப்

பிரதிநிதிமகு உரிமையும் அளிக்கப்பட்டது. அவசியமிருந்தால் மேலும் இரண்டு இடங்களுக்கு கூட உரிப்பினரை நியமிக்கும் உரிமை அவரிடமிருந்து மீதி இருக்கும் இருபத்தேழு இடங்களில், அதிகாரிகள் அல்லாத தேர்ந்தெடுத்த உறுப்பினர்கள் நிரப்பப்படுவர். ஏழு மாநிலங்களில் நிலக்கிழார்கள் ஐந்து மாநிலங்கள் முகமதியர்கள், கல்கத்தாவிலும் பம்பாயிலும் இருந்து வாணிபக்குழுக்கள் போன்ற பிரித்தேயகமான தொகுதிகள் மூலம் அவர்களுள் சிலர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களுள் 13 பேர்களை 9 மாநில சட்ட சபையில் இருக்கும் அதிகாரிகள் அல்லத உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவ்விடம் மந்திய சட்ட சபையில் அதிகாரிகளின் எண்ணிக்கையை தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை விட சற்று அதிகமாய் இருக்கும் படி அமைக்கப்பட்டது. மத்திய சட்ட சபையின் சட்டமியற்றுலும், நிருவாகச் செயலும், இங்கிலாந்துப் பாராளுமன்றத்தை பதிக்காத வகையில் செயல்பட வேண்டுமென அழுத்தம் திருத்தமாக கூறப்பட்டது.

**மாநிலச் சட்டசபை:**

சென்னை, பம்பாய் போன்ற மாநிலங்களில் சட்ட சபைகளில் அதிகபடியாய் இருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை உச்ச வரம்பு 50 ஆக உயர்த்தப்பட்டது அதிகாரிகளையும் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் அல்லாத உறுப்பினர்களையும் சேர்த்தால், அவர்களது எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைவிட சிறிது அதிகமாக இருக்கும்படி அமைக்கப்பட்டது. முகமதியர்களுக்கு தனி தொகுதி அளிக்கப்பட்டது. 1909 ஆம் ஆண்டு இந்தியச் சட்டச்சபை சட்டம் வகுப்புவாரிப் பிரதிநித்திவக் கொள்கையை அங்கீகரித்ததுடன், அதன் அடிப்படியிலே பிரதிநிதித்துவம் அமைக்க வழிவகுத்தது.

1892-ஆம் ஆண்டு இந்தியர் சட்டத்தை விட சில அதிகமான சலுகைகளை 1909 ஆண்டு சட்டம் சட்ட சபைக்கு வழங்கியது. நிதிநிலை அறிக்கை பற்றி பொதுவாக விவாதிக்கும் உரிமை அதற்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் விவாதத்தில் முடிவை அரசு ஏற்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. முடிவான தீர்ப்பு அரசுப் பிரதிநிதியாலேயே எடுக்கப்படும். சட்டசபையில் தீர்மானங்களை கொண்டு வந்து விவாதிக்கலாமே தவிர அவைகளை தள்ளவோ ஒப்புக் கொள்ளவோ தலைமை ஆளுநருக்கு தான் உரிமை உண்டு. மேலும், இராணுவம் அயல்நாட்டுக் கொள்கை, இந்திய சமஸ்தானங்கள் போன்றவைகளைப் பற்றி விவாதிக்கலாம் தீர்மானங்கள் கொண்டு வரவும் சட்ட சபைக்கு அதிகாரம் இல்லை.

இவ்வாறே மாநிலங்களின் சட்டசபைச் செயல்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரமும் ஆளுநருக்கு வழங்கப்பட்டது. இதனால் சட்டசபையின் அதிகாரம் ஏட்டளவில் மிகுதியாக்கப்பட்டதேயன்றி உண்மையாகவே சட்டசபைக்கு வழங்கப்படவில்லை என்றே கூறவேண்டும்

இச்சட்டம் பிற்போக்குத்தன்மை உடையது ஆகும். முஸ்லிம்களுக்கும், நிலச்சுவான்தார்களுக்கும் அளிக்கப்பட்ட பிரத்தியேக சலுகைகள் வகுப்புவாத சக்திகளை ஊக்குவித்து நாட்டின் ஒற்றுமைக்கு ஊறுவிளைவிப்பது ஆகும். தேர்தல் முறை நேரடியாக இல்லாமையால் மக்களுக்கு தன்னாட்சி முறைக்கான பயிற்சி கிட்டவில்லை. மேலும் தேர்தலில் ஓட்டுரிமை பெற்றவர்களின் எண்ணிக்கையும் மிகக் குறைவானதேயாகும்.

ஓட்டுரிமை பெற தேவையான அடிப்படை வருமானம் மாநிலத்திற்கு மாநிலம் மாறுபட்டது. பெண்களுக்கு ஓட்டுரிமை இல்லை. தவிர தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை நியமிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை விடக் குறைவாக இருந்தமையாலும், அரசால் நியமிக்கப்பட்டவர்கள் அரசு ஆதாவாளர்களாக விளங்கியதாலும், ஆளுநரின்

தானி அதிகாரங்களாலும், சட்ட மன்றங்கள் வளர்ச்சி பணியில் ஈடுபட முடியாமல் செயலிழந்து இருந்தன.

எனவேதான், எஸ்.பான். பானர்ஜி இந்த சட்டத்தை வெறும் நிலா வெளிச்சம் என்றுவிமர்சித்தார். ஜவஹர்லால் நேரு முஸ்லீம்களுக்கு அளிக்கப்பட்ட வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் இந்திய ஒருமைப்பாட்டை குலைத்தது என்ற குறிப்பிட்டார். எனவே மிண்டோ-மார்லி சீர்திருத்தங்கள் இந்திய மக்களுக்கு ஏமாற்றமாகவே அமைந்தது.

### 9.5.4 மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்த சட்டம் - 1919

மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள், 1919ல் பிரிட்டி' இந்தியாவின் தலைமை ஆளுநராக இருந்த செம்ஸ்போர்டு பிரபு மற்றும் பிரிட்டி' இந்திய அரசின் செயலளர் எட்வின் சாமுவேல் மாண்டேகுவும் இணைந்து, பிரிட்டி' இந்திய மாகாண நிர்வாகங்களில் இந்தியர்களுக்கு சுயாட்சி வழங்க, 1919ல் ஒரு அறிக்கையை தயாரித்து பிரிட்டி' பேரரசுக்கு அனுப்பினர். இதனடிப்படையில் இந்திய அரசுச் சட்டம், 1919 நிறைவேற்றப்பட்டது. இச்சட்டப்படி சென்னை மாகாணம், வங்காள மாகாணம், பம்பாய் மாகாணம், மத்திய மாகாணம் மற்றும் பஞ்சாப் மாகாணங்களில் வரையறுக்கப்பட்ட அதிகாரங்களுடன், மக்கள் பிரதிநிதிகள் கொண்ட சட்டமன்றங்கள் நிறுவப்பட்டது.

**சீர்திருத்தங்கள்:**

பிரிட்டிஷ் இந்திய அரசின் தலைமைச் செயலாளர் எட்வின் சாமுவேல் மாண்டேகு, இந்தியர்களுக்கு வரையறுக்கப்பட்ட அரசியல் சுயாட்சி வழங்குவதற்கு வைஸ்ராய் செம்ஸ்போர்டு பிரபு மற்றும் விடுதலை இயக்கத் தலைவர்களுடன் கலந்து பேசினார்.

பின்னர் புபேந்திரநாத் போஸ், ரிச்சர்டு ஹேலி-ஹட்சின்சன், வில்லியம் டியூக் மற்றும் சார்லஸ் வென்றி ராபர்ட் ஆகியோருடன் கலந்துரையாடி மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் எனும் பெயரில் அறிக்கை 1917ம் ஆண்டின் இறுதியில் தயாரிக்கப்பட்டது.

மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்த அறிக்கை, ஐக்கிய இராஜ்ஜியத்தின் நாடாளுமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, இந்தியர்களுக்கு அரசியல் சுயாட்சி வழங்கும் இந்திய அரசுச் சட்டம், 1919 நிறைவேற்றப்பட்டது. இச்சட்டப்படி 1921ல் சென்னை மாகாணம், வங்காள மாகாணம், பம்பாய் மாகாணம், மத்திய மாகாணம் மற்றும் பஞ்சாப் மாகாணங்களில் இந்திய மக்களின் பிரதிநிதிகள் கொண்ட சட்டமன்றங்கள் நிறுவப்பட்டது.

பின்னர் 1932ல் மத்தியப் பிரதேசம், பிகார், ஒரிசா மற்றும் அசாம் மற்றும் வடமேற்கு எல்லைப்புற மாகாணங்களுக்கும் இந்திய மக்களின் பிரதிநிதிகள் கொண்ட சட்டமன்றங்கள் அமைக்கப்பட்டது.

மேலும் பிரிட்டிஷ் இந்தியாவின் மத்திய அரசு மற்றும் இந்திய மாகாண அரசுகளின் அதிகாரங்கள்,கடமைகள், பொறுப்புகள் வரையறுக்க்கப்பட்டது. இதன் படி, பிரிட்டி' இந்தியாவின் மைய அரசிற்கு இராணுவம், வெளியுறவுத் துறை, தொலைதொடர்புத் துறை, அஞ்சல் துறை, வெளிநாட்டு வாணிகம், இரயில்வே முதலிய முக்கியத் துறைகளும்ஃ இந்திய மாகாண அரசுகளுக்கு மருத்துவம், சுகாதாரம், கல்வி, பொதுத்துறை, நீர்பாசானம், காவல் துறை, சிறைத்துறை, நீதித்துறை, உள்ளாட்சித் துறை முதலிய துறைகள் ஒதுக்கப்பட்டது. மாகாண அரசுக்கு ஒதுக்கப்படாத துறைகளை மைய அரசே கவணிக்கும்.

மாகாண அரசுகள் எடுக்கும் தீர்மானங்களுக்கு மாகாண ஆளுநரின் ஒப்புதல் பெற வேண்டும். இல்லை எனில் மாகாண அரசுகள் எடுக்கும் முடிவுகள் நடைமுறைக்கு வராது. 1920ல் உள்ளாட்சி நிர்வாகத்தை மேற்கொள்ள உள்ளூர் இந்திய மக்களின் பிரதிநிதிகள் நிர்வகிக்கும் நகராட்சி, மாநகராட்சி மன்றங்கள் அமைக்க மாண்டேகு-செம்ஸ்போர்டு குழு அறிக்கையாக தயாரித்தது பிரிட்டி' அரசுக்கு பரிந்துரைத்து. 1921ல் கிராமப்புற மக்களின் மேம்பாட்டிற்காக பஞ்சாயத்துக் குழுக்கள் அமைக்கப்பட்டது.

**மாண்டேகு-செம்ஸ்போர்டு குழுவின் இதர சீர்திருத்தங்கள்:**

1. பிரிட்டிஷ் இந்திய அரசின் நிர்வாகத்தை இந்தியச் செயளர் நடத்த வேண்டும்.
2. இந்திய நாடாளுமன்றம் மேலவை மற்றும் கீழளவை என இரண்டு அவைகள் கொண்டிருக்க வேண்டும்.
3. இந்திய நாடாளுமன்றம் இயற்றும் சட்டங்கள் இந்தியா முழுமைக்கும் செல்லுபடியாகும்.
4. இந்தியத் தலைமை ஆளுநருக்கு மாகாண சட்டமன்றங்களை கலைக்கும் அதிகாரம் மற்றும் மாகாணங்களில் அவரசர நிலை பிரகடனம் செய்யும் அதிகாரம்.
5. இந்தியத் தலைமை ஆளுநரின் நிர்வாகக் குழுவின் எட்டு உறுப்பினர்களில் மூவர் இந்தியர்களாக இருக்க வேண்டும்.
6. மாகாண சட்டமன்றங்கள் மேலளவை மற்றும் கீழளவை என இரண்டு அவைகள் கொண்டதாக இருக்க வேண்டும்.

**இந்தியாவில் எதிர்ப்பு:**

மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் இந்தியாவில் பிரிட்டி' அரசிற்கெதிராக கடும் எதிர்ப்பு கிளம்பியது. மகாத்மா காந்தி பிரித்தானிய அரசிற்கு எதிராக ஒத்துழையாமை இயக்கம் எனும் போராட்டத்தை துவக்கினார். பிரித்தானிய அரசின் எதிர்ப்பாளர்களை அடக்க ரௌலட் சட்டத்தின் படி, விசாரணை இன்றி சிறையில் அடைத்தனர்.ரௌலட் சட்டத்திற்கு எதிராக, ஏப்ரல், 1919ல் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள அமிர்தசரஸ் நகரத்தின் ஜாலியன்வாலா பாக் தோட்டத்தில் கூடிய ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்களின் மீது முன்னறிவிப்பு ஏதும் இன்றி பிரித்தானியா இராணுவத்தினர் சுட்டதில் 376 பேர் படுகொலை செய்யப்பட்டனர். ஜாலியன்வாலா பாக் படுகொலை காரணாமான ஜெனரல் டையர் மீது ஹண்டர் விசாரணைக்குழு அமைக்கப்பட்டது.

ஜாலியன்வாலா பாக் படுகொலையால், இந்தியா முழுவதும் பிரிட்டி' அரசிற்கெதிரான போரட்டங்கள் வலுப்பெற்றது. 1920ல் இந்திய தேசிய காங்கிரசு கூட்டத்தில் முழுமையான சுயாட்சி கோரிக்கை வலியுறுத்தப்பட்டது.

**மதிப்பீடு:**

மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களை மறு ஆய்வு செய்ய சைமன் குழு அமைக்கப்பட்டது. இந்தியர்களின் முழு சுயாட்சி கோரிக்கைக் குறித்து பரிசீலனை செய்ய லண்டனில் 1930, 1931, 1932 ஆகிய மூன்று வட்டமேசை மாநாடுகள் நடைபெற்றது. மகாத்மா காந்தி 1931ல் நடைபெற்ற வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொண்டார். வட்ட மேஜை மாநாட்டின் முடிவுகளின் படி, இந்திய அரசுச் சட்டம், 1935 நிறைவேற்றப்பட்டது. இதன் படி மாகாணங்களில் இரட்டை ஆட்சி முறை ஒழிக்கப்பட்டது.

### 9.5.5 இந்திய அரசுச் சட்டம், 1935

இந்திய அரசுச் சட்டம், 1935 என்பது பிரிட்டி' இந்தியாவில் அரசியல் சீர்திருத்தங்களை கொண்டு வருவதற்காக ஐக்கிய நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட ஒரு சட்டம். இதன் மூலம் இரட்டை ஆட்சி முறை ஒழிக்கப்பட்டு இந்தியர்களுக்கு மேலதிக தன்னாட்சி உரிமைகள் வழங்கப்பட்டன.

இந்திய அரசுச் சட்டம், 1919 இன் படி பிரிட்டிஷ் இந்தியாவில் இரட்டை ஆட்சி முறை ஏற்படுத்தப்பட்டது. ஆட்சிப் பொறுப்பில் சில துறைகள் இந்தியர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. பத்து ஆண்டுகள் கழித்து இவ்வாட்சி முறையினை ஆய்வு செய்த சைமன் குழு இந்தியர்களுக்கு மேலும் பல ஆட்சி உரிமைகளை அளிக்கப் பரிந்துரை செய்தது. 1931-32ல் இது குறித்து பிரிட்டி' அரசுக்கும் இந்தியர்களுக்கும் இடையே வட்ட மேசை மாநாடுகள் நடைபெற்றன. இம்மாநாடுகளில் எவ்வித உடன்பாடும் ஏற்படவில்லையென்றாலும், பிரிட்டிஷ் அரசு, அடுத்த கட்ட சீர்திருத்தங்களை ஏற்படுத்தும் முயற்சியில் இறங்கியது. இதன் பலனாக 1935 அரசுச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் முக்கியக் கூறுகள்:

இரட்டை ஆட்சி முறை ஒழிக்கப்பட்டு, மாகாண சுயாட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டதுளூ இந்தியர்களின் தன்னாட்சி உரிமைகள் அதிகரிக்கப்பட்டன. ஆனால் மேலாட்சி அங்கீகாரம் தரப்படவில்லை. பிரிட்டிஷ் இந்தியாவும், மன்னர் அரசுகள் (சம்ஸ்தானங்கள்) ஆகியவை இணைந்து ஒரு “இந்தியக் கூட்டாட்சி”யினை உருவாக்க வழிவகை செய்யப்பட்டது. தேர்தல்களில் வாக்குரிமை பெறுவதற்கான சொத்துடமைத் தகுதிகள் தளர்த்தப்பட்டன. வாக்காளர்களின் எண்ணிக்கை இதனால் அதிகமானது

இந்தியாவின் மாகாணங்கள் புனரமைக்கப்பட்டன. பர்மா மற்றும் ஏடன் இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்டன. சிந்து பம்பாய் மாகாணத்திலிருந்து பிரிக்கபபட்டது. பீகார் மற்றும் ஒரிசா புதிய மாகாணங்களாக உருவாக்கப்பட்டன. மாநில சட்டமன்றங்கள் விரிவுபடுத்தப்பட்டு அவற்றில் இந்திய உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. ஆட்சிப் பொறுப்பில் மேலும் பல துறைகள் இந்தியர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. ஆனால் மாநில ஆளுனருக்கும், வைசுராயுக்கும் தடுப்பாணை அதிகாரம் வழங்கப்பட்டது. தேசிய அளவில் நீதிமன்றம் ஒன்று உருவாக்கப்பட்டது.

இப்புதிய சட்டத்தின் அடிப்படையில் 1937ல் தேர்தல்கள் நடத்தப்பட்டு அரசுகள் அமைந்தன. ஆனால் மன்னர் அரசுகளின் எதிர்ப்பாலும், இந்திய தேசிய காங்கிரசு-முசுலிம் லீக் வேறுபாடுகளாலும் இந்தியக் கூட்டாட்சி அமைப்பு உருவாக்கம் நிறைவேறவில்லை.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

6. எந்த வைசிராய் காலத்தில் 1861ம் வருட கவுன்சில் சட்டம் இயேற்றப்பட்டது?
7. மிண்டோமார்லி சீர்திருத்த சட்டம் இயேற்றப்பட்ட ஆண்டு எது?
8. வகுப்பு வாரி பிரதிநித்துவ முறையை அறிமுகப்படுத்திய சட்டம் எது?
9. 1935ம் வருட சட்டபடி இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்ட நாடு எது?
10. 1935ம் வருட சட்டபடி சட்ட மன்றங்களுக்கான தேர்தல் எந்த ஆண்டு நடைபெற்றது?

## 9.6 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

1. 40 வது வயதில்

2. 1901
3. மஸ்கட்
4. ஐந்தாம் ஜார்ஜ்
5. வின்ஸ்டார், இங்கிலாந்து
6. கானிங் பிரபு
7. 1909
8. 1862ம் வருட கவுன்சில் சட்டம்
9. பர்மா
10. 1937

## 9.7 சுருக்கவுரை

- 1904-ல் ஐந்தாண்டுக்கு ஒரு முறை வரியைதீர்மானிக்கும் முறை நீக்கப்பட்டது. உப்பு வரியானது வாரியானது 2 ½ ரூபாயிலிருந்து 1ரூபாயக குறைக்கப்பட்டது.
- இர்வின் பிரபு 1926 முதல் 1931 வரை இந்தியாவின் வைசிராயாக பணியாற்றினார். மன்னர் ஐந்தாம ஜார்ஜ் பரிந்துரையின்படி நியமிக்கப்பட்டு ஏப்ரல் 1, 1926ஆம் ஆண்டு மும்பை வந்திறங்கினார்.
- வின்ஸ்டன் சர்ச்சில் பிரிட்டிஷ் பிரதமராக இருந்தபோது மவுண்ட்பாட்டனின் அறிவாற்றலையும், ஆளுமைத் திறனையும், தலைமைப் பண்புகளையும் கண்டறிந்து அரசுக்குக் கடற்படையில் பல பதவிகளையும், பதவி உயர்வுகளையும் கொடுத்து ஊக்குவித்தார்.
- மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களை மறு ஆய்வு செய்ய சைமன் குழு அமைக்கப்பட்டது. இந்தியர்களின் முழு சுயாட்சி கோரிக்கைக் குறித்து பரிசீலனை செய்ய லண்டனில் 1930, 1931, 1932 ஆகிய மூன்று வட்டமேசை மாநாடுகள் நடைபெற்றது.

## 9.8 முக்கிய வார்த்தைகள்

- திவால் நிலை: கடன்களை திருப்பி செலுத்த முடியாமல் இருப்பது இதன் பொருளாகும்.
- மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள்: இவை இந்தியாவில் தன்னாட்சி நிறுவனங்கள் படிப்படியாக அறிமுகப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் ஆகும்.

## 9.9 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்

**குறு விடை வினாக்கள்**

1. மவுன்பேட்டன் வாழ்கை குறிப்பெழுதுக.
2. 1861, இந்திய கவுன்சில் சட்டத்தின் ‘ரத்துகளை எழுதுக
3. மிண்டோ மார்லி சீர்திருத்த சட்டத்தை பற்றி எழுதுக.

**நெடு விடை வினாக்கள்**

4. கர்சன் பிரபு மற்றும் இர்வின் பிரபு இவர்களின் கொள்கைளை விரிவாக எழுதுக.
5. 1919 இந்திய அரசு சட்டத்தின் அம்சங்களைஆராயவும். அச்சட்டத்தின் முக்கியத்துவங்கள் எவை? அதன் குறைபாடுகள் எவை?

## 9.10 மேலும் படிக்க

சந்திரா, பிபின், 2009. நவீன இந்தியாவின் வரலாறு. ஹைத்தராபாத், ஓரியண்ட் பிளாக்வான்ஸ்.

டியூப்-பானர்ஜி, இஷிதா. நவீன இந்தியாவின் வரலாறு. கேம்பிரிட்ஜ், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக அச்சகம்

தாரிக், முகம்மது. 2007. நவீன இந்திய வரலாறு. புது தில்லி: டாடா மெக்ரா-ஹில் கல்வி.

பண்டியோபதியா, ெ‘கரா. 2004. பிளாசி முதல் பார்ட்டி வரை: நவீன இந்திய வரலாறு. ஹைதராபாத்: ஓரியண்ட் பிளாக்வான்ஸ்.

சென், S.N. 2006. நவீன இந்திய வரலாறு. புது தில்லி: நியூ ஏஜ் இண்டர்நேஷனல்.

## அலகு – 10 இந்திய தேசியத்தின் எழுச்சி

10.0 அறிமுகம்
10.1 நோக்கங்கள்
10.2 1800-1801-தென்னிந்திய புரட்சி
10.3 வேலூர் கலகம்
10.4 இந்திய தேசியத்தின் எழுச்சி
10.5 இந்திய தேசிய காங்கிரஸ் உருவாக்கம்
10.6 காங்கிரஸ் மிதவாதிகள் மற்றும் தீவிரவாதிகள்
10.7 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்
10.8 சுருக்கவுரை

10.9 முக்கிய வார்த்தைகள்

10.10 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்

10.11 மேலும் படிக்க

## 10.0 அறிமுகம்

தென்னகத்தில் பிரிட்டிஷ் ஆட்சி துவங்கியதிலிருந்து அதற்கு எதிர்ப்பு இருந்தது. தென்னிந்திய கலகம், வேலூர் கலகம், இன்னும் பல நிகழ்ச்சிகளின் வாயிலாக இதை அறியலாம். 19ம் நூற்றாண்டின் நடுவில், தெற்கில் தேசியம் வளர்ந்ததற்கு முக்கியச் சான்று சென்னை சங்கம், சென்னை இந்து விவாதிப்பு கழகம் போன்றவைகளால் புலப்படுகிறது. இவற்றின் முக்கிய நோக்கங்கள் அரசியல், அரசாட்சி சீர்திருத்தங்களைக் கொண்டு வரப்பாடுபடுவதாகவும்.

## 10.1 நோக்கங்கள்

இந்த அலகை நீங்கள் படித்து முடித்த பின்பு உங்களால்,

- இந்திய தேசியத்தின் எழுச்சியை பற்றி விளக்க முடியும்
- வேலூர் கலகத்தை பற்றியும் அதன் விளைவுகளை பற்றியும் கூற முடியும்
- இந்திய தேசிய காங்கிரஸ் உருவாக்கத்தை பற்றி விளக்கலாம்
- மிதாவதிகள் மற்றும் தீவிரவாதிகளை பற்றி விளக்க முடியும்.

## 10.2 1800-1801-தென்னிந்திய புரட்சி

852 இல் இந்திய மக்களின் குறைகளை கவனிக்க ஒத் ராயல் கமி'ன் அமைக்கவும், நோடியான ஆங்கில அரசின் ஆட்சி புகுத்தவும், கம்பெனியின் ஊழல் ஆட்சியை நீக்கவும் பிரிட்டி' பாராளுமன்றத்துக்கு கோரிக்கை அனுப்பப்பட்டது. இதைப்போல் கோரிக்கைகள் 1885 லும் அனுப்பப்பட்டன. மக்களுக்குப் பொறுப்பான சட்டரீதியான அரசு தேவை என்றும் இந்திய மக்கள் படித்து முன்னேறி அரசாங்கத்தில் பங்கு பெறத் தகுதி படைத்தவர்கள் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

1857 ஆம் ஆண்டு சிப்பாய் கலகத்தின் போது தென்னிந்தியர் பதிக்கப்படவில்லை பிரிட்டிஷ் அரசுக்கு, இந்த கலகத்தை அடக்க உதவி செய்தனர். கலகத்திற்குப்பின், ஆங்கில அரசின் நேரடி ஆட்சி ஏற்பட்டபோது, தென்னிந்தியாவில் பெரும் உற்சாகம் ஏற்பட்டது. தெற்கில், நன்கு படித்தவர்கள் பொறுப்புள்ள அரசு தேவை என்று நம்பினர்.
1884 இல் சென்னை மகாஜனசபை என்ற நிறுவனத்தைத் துவக்கினர். இந்திய தேசிய காங்கிரஸ் அமைக்கப்பட்ட பின், சட்ட ரீதியான அரசியலமைப்புக்குட்பட்ட அரசு வேண்டும் என்று போராட்டம் நடத்தினர். தென்னிந்தியப் பத்திரிகைகள் அரசின் வரிக் கொள்கையைக் குறைகூறி மக்களிடையே தேசியவாதிகளின் கோரிக்கைகளைப் பரப்பின. அவை இந்திய தொழில்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும் என்று ஆங்கிலப் பொருட்களின் மீது வரிவிதிப்பையும் கல்விக்கு அதிக செலவு செய்தல் வேண்டும் என்றும் வற்புறுத்தின.

காங்கிரஸ் மூன்றாவது கூட்டம் சென்னையில் 1887 ல் நடைபெற்றது. இது தேசிய போராட்டத்திற்குப் பெரும் வலிமை சேர்த்தது. மாவட்ட மாநாடுகளும் காங்கிரசை இன்னும் மக்கள் பரவலாக தெரிந்து கொள்ள உதவின. மக்களிடையே விழிப்புணர்ச்சியை தூண்டின.

தென்னிந்தியாவில், வங்காளப் பிரிவினையின் எதிரொலியான தீவிர இயக்கம் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தியது இந்தியா இந்தியர்களுக்கே

என்று வாசகம் வங்காளத்திலிருந்து இங்கு பரவியது. 1907ல் பிபின்சந்திரபால் சென்னைக்கு வந்த நிகழ்ச்சியின் மூலம் தெற்கில் தேசியம் எந்த அளவுக்கு வெற்றி பெற்றது. என்பதை புரிந்து கொள்ளலாம். தென்னிந்தியாவின் மிக முக்கியமான தேசியவாதிகளில் ஒருவரான வ.உ.சிதம்பரம் பிள்ளை சுதேசி கப்பல் நிறுனம் ஒன்றை துவக்கினார்.

தெற்கிலும், பயங்கரவாத புட்சியாளர்களின் பாதிப்பு இருந்தது. பிரிட்டிஷ் அரசின் அடக்கு முறையால் சுதேசி கப்பல் நிறுவனம் ஒடுக்கப்பட்டது. இதன் விளைவாகத் தென்னிந்தியாவில் பயங்கரவாதிகளின் நடவடிக்கை அதிகரித்தது. இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்களில் முக்கியமானவர், வாத்சிநாதன், நீலகண்ட பிரம்மச்சாரி போன்றோ திருநெல்வேலியின் கலெக்டராய் இருந்த ஆஷ்துரையைக் சுட்டுக் கொன்ற நிகழ்ச்சி பயங்கரவாதிகளின்ஆதிக்கம் குறைய ஆரம்பித்தது.
இதற்குப்பின், விடுதலை இயக்கம், பிராமணர் அல்லாதோர் இயக்கத்தின் மூலம்பாதிக்கப்பட்டது. காங்கிரஸ், பிராணர்களின் இயக்கம் என்று குறை கூறப்பட்டது. ஹோம் ரூல் இயக்கம் அந்தணர்களையும் காங்கிரசையுமே ஈடுபடுத்தியது. 1916இல் பிராமணர் அல்லாதோர் இயக்கத்தின் விளைவாக தென்னிந்திய மக்கள் தேசிய போராட்டத்தில் ஈடுபடுவது குறைந்து போயிற்று.

பிராமணர் அல்லாதோர் இயக்கம் வலுப்பெற்றதன் விளைவாக மக்களின் கவனம் விடுதலை இயக்கத்திலிருந்து சிதறி, அது பின்னுக்குத் தள்ளப்பட்டது. விடுதலை இயக்கம் அதன் முக்கியத்துவத்தை இழக்க ஆரப்பித்தது.

## 10.3 வேலூர் கலகம்

இந்தியாவில் கிழக்கிந்திய வணிகக் குழுவின் ஆட்சி விரிவடைந்த போது உள்நாட்டு அரசர்களும் அவர்களை அண்டியிருந்தவர்களும் துன்பத்திற்கு உள்ளானார்கள். ஒன்று அவர்கள் அடங்கிப் போனார்கள் அல்லது கிளர்ந்து எழுந்தார்கள். இத்தகைய கிளர்ச்சிகள் தொலைநோக்குப் பார்வையுடனோ கொள்கையுடனோ நடத்தப்படவில்லை. மாறாக, உள்நாட்டு அரசர்கள் தாங்கள் இழந்த பகுதியை மீட்கவும், பழைய நிலமானிய அமைப்பை மீண்டும் கொண்டு வருவதையே நோக்கமாகக் கொண்டிருந்தனர். பூலித்தேவர், கான் சாகிப், கட்டபொம்மன், மருது சகோதரர்கள் போன்ற தனிநபர்களின் வீரத்திற்கும் தியாகத்திற்கும் ஈடு இணை கிடையாது, ஆனால், இந்த தலைவர்கள் ஒன்றுபட்ட காரணத்துக்காக அல்லது கொள்கைக்காக சாமானிய மக்களை ஒன்று திரட்டத் தவறினார்கள். தேசியம், அரசியல் விழிப்புணர்வு ஒன்றுபட்ட போராட்டம் என்ற இந்த கருத்துக்கள் பிந்தைய நாட்களிலேதான் தென்பட்டன.

1806ல் வேலூரிலிருந்த இந்திய சிப்பாய்கள் கலகத்தில் ஈடுபட்டனர். இந்த நிகழ்ச்சி இதற்கு முன்பு நடந்த கிளர்ச்சியிலிருந்து தன்மை ரீதியாக வேறுபடுகிறது. வேலூர்க் கலகம் சிப்பாய்களால் நடத்தப்பட்டது. முந்தைய கிளர்ச்சிகள் அந்தந்த பகுதியின் நலனுக்காக நடைபெற்றன. ஆட்சியாளர்கள் தங்களது பதவியைத் தக்க வைத்துக்கொள்ள கிளர்ந்தெழுந்தனர். ஆனால், வேலூர்க்கலகம் வணிக்குழுவின்கீழ் பணியாற்றிய சிப்பாய்களிடமிருந்து இயற்கையாய் வெளிவந்த உணர்வுகளின் வெளிப்பாடாகும். இது வணிகக்குழுவிற்கு எதிராக சிப்பாய்கள் எழுப்பிய கண்டனக் குரலாகும். இந்த எதிர்ப்பு வருங்காலத்தில் எழவிருந்த கலகத்திற்கு கட்டியம் கூறுவதாக அமைந்தது.

**காரணங்கள்**

குறிப்புகள்

வேலூர் கலகத்திற்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன. வணிகக் குழுவின் ராணுவத்தில் பணியாற்றிய சிப்பாய்கள் பல்வேறு சிரமங்களை சந்திக்க வேண்டியிருந்தது.

சுதேச அரசர்கள் அரசியல் களத்திலிருந்து மறையத் தொடங்கியதால் சிப்பாய்கள் வணிகக்குழுவிடம் பணியாற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. கண்டிப்பான ஒழுக்கம், நடைமுறை, புதிய வகை ஆயுதங்கள், புதிய வழிமுறைகள், சீருடை போன்றவை சிப்பாய்களுக்கு புதியதாக தோன்றின. நீண்டகாலமாக பழைய பழக்கங்களில் ஊறித்திளைத்தவர்களுக்கு புதியன புகுதல் என்பது சற்று கடினமாகவும் தவறாகவும் புலப்படும் என்பது இயற்கையே.

அப்போது சென்னை ஆளுநராக இருந்த வில்லியம் பெண்டிங் பிரபுவின் அனுமதியோடு, படைத்தளபதி சர் ஜான் கிரடாக் தலைப்பாகையுடன் கூடிய புதிய சீருடையை அறிமுகப்படுத்தினார். இந்த தலைப்பாகை ஐரோப்பிய தொப்பியைப் போலவே இருந்தது. காதணிகளை அணிவதும், சமய சின்னங்களை இட்டுக்கொள்வதும் தடை செய்யப்பட்டன.

மேலும் சிப்பாய்கள் தங்களது முகத்தை நன்றாக மழித்து மீசைகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளவேண்டும் என்று விதிக்கப்பட்டனர். ஆனால், இந்த நடவடிக்கைகளை தங்களது சமய மற்றும் சமூகப்பழக்க வழக்கங்களுக்கு இழைக்கப்பட்ட அவமதிப்பாக சிப்பாய்கள் கருதினார்கள். மேலும், அவர்கள் அனைவரையும் கிறித்துவ சமயத்திற்கு மாற்றும் முயற்சிக்கு இது முன்னோடி என்ற பரவலான கருத்தும் நிலவியது.

ஆங்கிலேயர்கள் இந்திய சிப்பாய்களை தாழ்ந்தவர்களாக நடத்தினர். இனப்பாகுபாடும் காணப்பட்டது. வணிகக்குழுவின் ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற சிப்பாய்களின் கிளர்ச்சிகளுக்கு இது மன ரீதியான காரணமாக இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

முன்னர் சிப்பாய்கள் தங்களது மண்ணின் மைந்தர்களான இந்து அல்லது முஸ்லிம் ஆட்சியாளர்களிடம் பணிபுரிந்தனர். தற்போது அந்நியருக்கு பணியாற்றினாலும் முதன்மையான நாட்டுப்பற்றை அவர்கள் மறந்துவிடவில்லை.

வேலூர் கலகம் வெடிக்கும் முன்பே இந்திய சிப்பாய்கள் தங்களது எதிர்ப்புகளை அவ்வப்போது வெளிப்படுத்தி வந்தனர். 1806 மே திங்களில் வேலூர்ப் படையின் ஒரு பிரிவினர் புதிய விதியை எதிர்த்தனர். ஆனால், அவர்களது கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. அந்த சிப்பாய்களும் தண்டிக்கப்பட்டனர். 500 முதல் 900 கசையடிகள் அவர்களுக்கு அளிக்கப்பட்ட தண்டனையாகும்.

ஜூன் 1-ம் தேதி 1806ம் ஆண்டு முதல் படைப் பிரிவைச் சேர்ந்த இராணுவசிப்பாய் முஸ்தபா பெக் தன்னுடைய உயர் அதிகாரியான கர்னல் போர்ப்ஸிடம் இரகசியமாக ஐரோப்பிய இராணுவ அதிகாரிகளையும் துருப்புகளையும் பூண்டோடு அழிப்பதற்கான திட்டம் தீட்டப்பட்டுள்ளது என்பதை தெரிவித்தார் ஆனால் இச்செய்திக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை.

வேலூர் கலகம் உருவாகுவதற்கு முன் திப்புவினுடைய மூத்த மகன் பதே ஹைதர் ஆங்கிலேயருக்கு எதிராக ஒரு கூட்டணியை மராத்திய, பிரெஞ்சு உதவியுடன் அமைக்க முற்பட்டார்.

மேலும் பதே ஹைதர் இரகசிய தகவல்களை முகமது மாலிக் என்பவர் வாயிலாக பெற்றார். குறிப்பாக வேலூர் இராணுவப் புரட்சிக்கு பதே ஹைதர் மற்றும் மொய்சுதீன் இருவரும் இணைந்து திட்டம் தீட்டினர். வேலூர் கலகம், முறையாக திட்டமிடப்படாவிட்டாலும் அப்பகுதியில் மீண்டும் முஸ்லிம் ஆட்சியை ஏற்படுத்தவேண்டும் என்ற விருப்பம் இருந்தது. பூலித்தேவர், கான்சாகிப், சுட்டபொம்மன், மருது சகோதரர்கள், திப்பு சுல்தான் போன்றோருக்கு ஏற்பட்ட கதியை சிப்பாய்கள் நன்கு அறிந்திருந்தனர். ஆகவே, பிரிட்டி'ாரைப்பற்றிய ஒரு கசப்புணர்வு அவர்களுக்கு இருந்தது. இத்தகைய காரணங்களால், வேலூர்க்கலகம் மூண்டது.

**கலகத்தின்போக்கு**

ஜூலை 10ம் நாள் விடியற்காலை முதல் மற்றும் 23ம் படைப்பிரிவை சேர்ந்த இந்திய சிப்பாய்கள் கலகத்தை தோற்றுவித்தனர். இப்படைப் பிரிவுகளின் இராணுவ அதிகாரி கர்னல் பான்கோர்ட் இக்கலகத்திற்கு முதல் பலியானார். 23வது படைப்பிரிவின் இராணுவ அதிகாரியான கர்னல் மி கேரஸ் அணிவகுப்பு மைதானத்தில் சுட்டு வீழ்த்தப்பட்டார். இக்கலகத்தின் போது அடுத்ததாக கொல்லப்பட்ட இராணுவ அதிகாரி மேஜர் ஆம்ஸ்ட்ராங் ஆவார். ஏறத்தாழ 12க்கும் மேற்பட்ட இராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்டனர்.

வேலூர் கோட்டைக்கு வெளியே இருந்த மேஜர் கூட்ஸ் 14 மைல்களுக்கு அப்பாலுள்ள இராணிப்பேட்டைக்கு விரைந்து சென்று அங்கிருந்த இராணுவத்தளபதி கர்னல் ஜில்லஸ்பியிடம் காலை மணியளவில் வேலூர் புரட்சியைப் பற்றி தெரிவித்தார். சுமார் காலை 9 மணியளவில் ஜில்லஸ்சி இராணுவ படையுடன் வேலூர் கோட்டையை அடைந்தார்.

கிளர்ச்சியாளர்கள் திப்பு சுல்தானின் மூத்த மகன் பதே ஹைதர் என்பவரை புதிய சுல்தானாக அறிவித்தனர். திப்பு சுல்தானின் புலிக்கொடியையும் பறக்கவிட்டனர். ஆனால் இக்கிளர்ச்சி கர்னல் ஜில்லெஸ்பியினால் உடனடியாக அடக்கப்பட்டது. கோட்டைக்குள் மட்டும் 800 இந்திய சிப்பாய்கள் இறந்து கிடந்தனர். திருச்சியிலும் வேலூரிலும் 600 சிப்பாய்கள் சிறைப்படுத்தப்பட்டனர். சிலர் தூக்கிலிடப்பட்டனர். சிலர் சுட்டுக்கொல்லப்பட்டனர். இக்கலகம் ரத்தக்களரியில் முடிவடைந்தது. திப்புவின் மகன் கல்கத்தாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டார். படைத்தளபதியும் சென்னை ஆளுநரும் திருப்பியழைக்கப்பட்டனர்.

வேலூர்க்கலகம் தோல்வியடைந்தது. ஆனால், பிரிட்டி' ஆட்சியில் தோன்றிய சிப்பாய்களின் எதிர்ப்புகளுக்கு இது ஒரு தொடக்கமாக அமைந்தது. 18ஆம் நூற்றாண்டு குறுகிய ஆட்சியாளர்களின் எதிர்ப்புக்கு பெயர் பெற்றது. 19ஆம் நூற்றாண்டின் முதல் அறுபது ஆண்டுகள் சிப்பாய்களின் எதிர்ப்பை பிரிட்டி'ார் சந்தித்தனர்.

வேலூர்க்கலகம் 1857 ஆம் ஆண்டு சிப்பாய் கலகத்துக்கு வழிவகுத்தது என்ற கூற்றை கே.கே. பிள்ளை என்ற வரலாற்று ஆசிரியர் மறுக்கிறார். 1857 ஆம் ஆண்டு முதல் இந்திய சுதந்திரப் போருக்கு வேலூர் கலகம் முன்னோடி என்று சவார்க்கர் கருதுகின்றார். இந்திய விடுதலைக்கு தமிழர்களே முன்னோடிகளாகத் திகழ்ந்தனர் என்று என். சஞ்சீவி கூறியுள்ளார். காலனியாதிக்கத்தை எதிர்த்து மருது சகோதரர்கள் நடத்திய போராட்டத்தின் தொடர்ச்சியே வேலூர்க் கலகம் என்று கே. ராசய்யன் என்ற வரலாற்று அறிஞர் கூறுகிறார்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

1. காங்கிரசின் மூன்றாவது கூட்டம் சென்னையில் எந்த ஆண்டு நடை பெற்றது
2. 1806ல் நடைபெற்ற கலகத்தின் பெயர் என்ன?
3. தலைபாகையுடன் புதிய சீருடையை அறிமுகப்படுத்திய படை தளபதி யார்?
4. வேலூர் கலகம் எக்கலகத்திற்க்கு வழிவகுத்தது?
5. வேலூர் கலகம் இந்திய தேசிய விடுதலைக்கு முன்னோடி என கருதுபவர் யார்?

## 10.4 இந்திய தேசியத்தின் எழுச்சி

தேசிய உணர்வு, தேசியம் என்றால் என்ன? பொதுப்படையான பாரம்பரிய உணர்வு, அனைவரையும் ஆட்கொள்ளுகின்ற பொதுவான பிரச்சனைகள் ஒருமைப்பாட்டுடன் இணைந்து செயலாற்றுவதே முன்னேற்றம் காணும் ஒரே வழி. பல்வேறு பட்ட மொழி, இனம், சமயம் ஆகிய வேறுபாடுகள் இருப்பினும் அனைவரும் ஒரே சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், ஒரே நாட்டில் உறுப்பு என்ற உணர்வு ஆகிய இத்தகைய இயல்புகளைக் கொண்டதே நாடு. இவ்வாறு ஒருமைப்பாட்டுணர்வினால், உந்தப்பட்டு நாட்டின் மொத்த வளர்ச்சிக்கும் பெருமைக்கும் உரிமைக்கும், விடுதலைக்கும் இணைந்து பாடுபடுகிறன்ற நிலையினையே தேசிய உணர்வு என்று குறிப்பர்.

அத்தகு தேசிய உணர்வு பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவில் உருவாகியது. இதற்கு காரணம் ஆங்கிலேய ஆட்சியாகும். ஆங்கிலேய ஆட்சியினை எதிர்த்து ஏற்பட்ட பல்வேறு எதிர்புகள், இயக்கங்கள், முயற்சிகள் எழுச்சிகள் ஆக அத்தனைத் தன்மைகளின் கூட்டு முயற்சியே இந்திய தேசிய எழுச்சியின் அடிப்படைக் காரணங்களாகின்றன.

ஆங்கில அரசின் மேலாண்மையும் அதிகாரமும் அரசியல் பொருளாதார சமுதாய மாற்றங்களை உருவாக்கின. மேலை நாட்டு இயல்புகள் பழமையில் மூழ்கிக்கிடந்த இந்திய சமுதாயத்தில் நுழைந்தன. இந்தப் புதிய தொடர்பு பல புதிய பண்பாட்டு, பொருளாதாரப் பிரச்னைகளைத் தோற்றுவித்தன. அப்புதிய பிரச்னைகள் ஆங்கில எதிர்ப்பு சக்தியை தூண்டிவிட்ட தோடு, இந்திய மக்களை இணைக்கும் சக்தியாகவும் பயன்பட்டன. இந்த முரண்பட்ட இரு தன்மைகளும் தேசிய உணர்வுக்கு வித்திட்டன. வாணிபத்திற்கென வந்த ஆங்கிலேய வணிகக் குழுவினர் அரசியலிலும் நுழைந்தனர். எண்பது ஆண்டுகளுக்குள் இந்தியா முழுமையையும் ஆட்கொண்டார். பல தவறான நடைமுறைகளினால் இந்திய வளத்தினைச் சுரண்டினர். இதன்பின் கிழக்கிந்திய வணிகக் குழுவின் நடவடிக்கைகளை இங்கிலாந்து அரசு மேற்பார்வையிட்டதெனில் இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் எட்மண்ட்பர்க், ெ'ரிடன், பாக்ஸ் முதலானவர்கள் கண்டித்தனர். நாளடைவில் இங்கிலாந்து அரசு தன் கட்டுப்பாட்டுச் சுருக்கை இறுக்கிய போதிலும் இந்திய மக்களின் சீரழிவு நிலைமை மேலும் தொடர்ந்து.

இந்தியப் பொருளியல் கருவிகளை இங்கிலாந்தின் வளர்ச்சிக்குப் படுத்தும் செயல்கள் தொடங்கின. இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சிக்குத் தொழில் புரட்சிக்கு இந்தியாவின் கனிவளங்களை, மூலப் பொருட்களை பயன்படுத்தினர். கிழக்கிந்திய வணிகக்குழுவின் இந்திய வாணிப முன்னுரிமை நீக்கப்பெற்று இங்கிலாந்தின் அனைத்து வாணிப நிலையங்களும் வாணிபத்தில் ஈடுபடும் உரிமை பெற்றது. வணிகத்தின்

போது மாறுப்பட்ட வரிக் கொள்கைகளை ஆங்கில அரசு கையாண்டது. இங்கிலாந்தில் இறக்குமதியாகும் இந்தியப் பொருள்கள் மீது கடுமையான வரிவிதிக்கப் பெற்றது. அதே நேரத்தில் இந்தியாவில் இறக்குமதியான பொருள்கள் மீது எவ்வித வரியும் இல்லை. இந்திய சந்தையில் அந்நியப் பொருள்கள் குவிந்தன. பருத்திபட்டு தொழிலை இங்கிலாந்து நசுக்கியது. இந்திய-இங்கிலாந்து வாணிபம் இங்கிலாந்தில் கப்பல்கள் வாயிலாக நடைபெற வேண்டுமென விதித்தனர். இதனால் கப்பல் கட்டும் தொழிலும் வாணிபமும் பாதிப்புக்குள்ளாயின. அதே போல் காகித உருவாக்கத் தொழிலும் பாதிக்கப்பட்டது. எழில் மிகு இந்திய வேலைப் பொருள்கள் வாங்குவாரின்றிச் சிதைந்தன. இந்திய பொருள்கள் கை தொழில்கள் ஆகிய அனைத்தும் இங்கிலாந்து நாட்டுப் பொருள்களுடன் போட்டியிட இயலாமல் அழிந்தன. இத்தகு பொருளாதார கொள்கையால் வலம் பொருந்திய இந்திய பொருளாதாரம் சிதைந்தது.

**பண்ணைகள் சிறிய அரசுகள் ஒழிப்பு:**

ஆங்கிலேயரின் நிவைரிக் கொள்கை பெரும் நிலக்கிழார்களுக்கு எதிராய் அமைத்தது. டல்ஹவுசி பிரபுவின் கொள்கை முஸ்லிம் அரசுகளையும், ஜாகிர்தாரிகளையும் பாதித்தது. உரிமை இழந்த அரசர்களின் பட்டங்களையும் ஓய்வூதியங்களையும் நிறுத்தினர்.

**வெள்ளையர் இன உயர்வு:**

ஆங்கிலேயர்கள் வெள்ளை இனமே உலகில் சிறந்தது என்னும் உயர்வு மனப்பான்மை கொண்டு இந்தியர் நிறத்தினையும், பண்புகளையும் எள்ளி நகையாடினர். இந்தியாவில் இந்தியர்களை மதிக்காதப் போக்கு காணப்பட்டது.

**வேலையின்மை:**

படித்த இந்தியர்க்கு இந்தியாவில் வேலைவாய்ப்புகள் அளிக்கவில்லை. உயர் பதவிகளை ஐரோப்பியர்க்கே ஒதுக்கினர். தேர்வுகளில் இந்தியர்கள் இங்கிலாந்து சென்று எழுதி ஆங்கிலேயர்க்கு சமமாக வெற்றி பெற இயலவில்லை. மிகச் சிலரே அவ்வாறு வெற்றி பெற்றனர். எழுத்தாளர்கள், எடுபிடிகள், காவலர்கள் முதலிய இரண்டாம் நிலைப் பதவிகளுக்கே இந்தியர்கள் தகுதியானவர்கள் என இழிவு செய்தனர்.

**சிப்பாய்க் கலகம்:**

இந்திய மக்களிடையே 1857 ஆம் ஆண்டு தோன்றிய சிப்பாய்க் கலகம் இந்திய விடுதலைப் போரின் முதறப்படியாகும். இந்தியர்களின் இந்த முதல் முயற்சி தோற்றது. ஆயினும் இந்தியாவில் கிழகிந்திய வணிகக் குழுவின் ஆட்சி முடிவுற்றது. அவர்கள் விரும்பியபடி தங்கள் புகழையும், பண்டைப் பெருமையையும் நிலைநாட்ட முடியவில்லை. ஆங்கிலேய அரசின் ஆட்சி தன்மையும் போக்கும் இந்தியர் அனைவரும் ஒரு நாட்டு மக்கள் என்னும் உணர்வும், தேசிய உணர்வும் தோன்றக் காரணமாயிற்று. ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில்தான் இந்தியா முழுவதும் ஆள்கின்ற மைய அரசு உருவாகியது. ஆங்கிலேயர்கள் சட்டதுறை, நீதித்துறை அமைப்பு, வரிகள், காசு ஆகிய அனைத்தும் ஒரு ஆட்சியின் கீழ் வந்ததும் ஆங்கிலேயர் காலத்தில் தான். போக்குவரத்து வசதிகள் இந்தியா மக்களுக்கு பல்வேறு பகுதிகளுக்குப் பயணம் செய்யும் வாய்ப்பினை அளித்தது. போக்குவரத்து வசதி பெருக்கம் இந்தியரிடையே உணவு, உடை, பண்பாடு ஆகியவற்றில் மாறுதல் ஏற்படுத்தியது. பண்டைய சமுதாயக் கட்டுப்பாடுகளைத் தளர செய்தது.

**மேலை நாட்டுக் கல்வி முறை:**

இந்தியக் கல்வி அமைப்புகள் மேலை நாட்டு முறையில் உருவாயின. மேலை கல்வி முறையின் சிறப்பை இந்தியர் அனைவரும் பாராட்டினர். இந்திய தேசியம் தோன்றுவதற்கு காரணமாயிருந்த தலைவர்கள் அனைவரும் மேலை நாட்டு கல்வி கற்றவர்களே. ஆங்கில மொழி இந்தியாவின் பலபகுதிகளிலும் இருந்து வந்த இந்தியர்களை தேசிய பிரச்சனைகளை விவாதிக்க இணைப்புச் சக்தியாகியது. அங்கில மொழி கற்றவர்கள் அம்மொழி வாயிலாக தனி மனித உரிமை, மக்களாட்சி ஆகியவற்றை உணர்ந்தனர். மேலையர் கல்வி இந்தியர்களை பிற நாடுகளுடன் தங்கள் நிலைமையை ஒப்பிட்டுக் காணச் செய்தது. அரசுக்கு எதிரான புரட்சி மட்டுமின்றி சமுதாயத்தில் ஊறிவிட்ட தேவையற்றிக் கட்டுப்பாடுகள் சமுதாய அநீதிகள் ஆகியவற்றிற்கு எதிராக கிளர்ந்து எழ வைத்தது. அடிமை நிலைமையினை தெளிவாக உணர்த்தி விடுதலைக்காகப் போராட வைத்தது.

சமுதாய, சமய இயக்கங்களான பிரம்ம சமாஜம், பிரார்த்தனை சமாஜன், ஆரிய சமாஜம். தியாசபிகள் சங்கம் ஆகியன இந்தியச் சமுதாயத்தின் பிணியென கருதப்பட்ட சாதி முறையை சாடின. இந்தியரிடையே தன்னம்பிக்கை, ஒருமைப்பாட்டு உணர்வு ஆகியவற்றை வளர்த்தன.

**முஸ்லிம் சமுதாயத்தினர்**

முஸ்லிம்கள் ஆங்கிலேயர் போல் கல்வி பயில வேண்டும். அப்போதே இந்துக்களைப் போல இசுலாமியரும் உயர முடியுமென சையது அகமது கான் எண்ணினார். அலிகார் கல்லூரி ஒன்று தொடங்கினார்.

**இந்தியப் பத்திரிக்கை**

பத்திரிகைகள், செய்தித்தாள்கள் பொதுமக்களின் கருத்தினை தெளிவாக்கி தேசிய பாணியை உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருந்தன. இந்தியாவில் முதன் முதலாக வந்த செய்தித்தாள் வங்காள கெஜட் என்பதாகும், அதனைப் பின்பற்றிக் கல்கத்தா கெஜட், இந்தியன் ஓர்ல்ட் முதலிய பத்திரிகைகள் இந்தியரை ஈர் த்தன. சென்னையில் தி ஹிந்து அலகாபாத்தில் தி லீடர் என்ற செய்தித்தாளும் தோன்றின. இப்பத்திரிகைகள் மக்களிடையே அரசியல், சமுதாயம் நிலைகளை உணர்த்தி தேசிய உணர்வினை வளர்த்தன.

**ஆங்கிலப் பேரரசின் இயல்பு**

ஆங்கிலேய அரசு வட்டார மொழிப் பத்திரிக்கையைக் கட்டுப்படுத்தியது. இந்தியர் ஆயுதம் ஏந்துவது தடை செய்தன. மக்கள் பட்டினியால் வாடுகையில் ஆடம்பரமாக பட்டமேற்பு விழாவைக் கொண்டாடியது இந்தியரிடையே புரட்சி மனப்பான்மையை ஏற்படுத்தியது. கில்பர்ட் சட்ட முன் வரைவு இந்திய நீதிபதிகள் ஐரோப்பியரை விசாரிக்க இசைவளித்தது. ஆனால் கில்பர்ட் சட்ட வரைவினை ஆங்கிலேயர்கள் கொண்டு வந்தது. ஆங்கிலேயர் இந்தியர் உறவில் கசப்பான நிலையை உருவாக்கியது.

**தேசிய இயக்கம்**

மேலே குறிப்பிட்ட அத்தனை காரணங்களும் அனைத்திந்திய அமைப்பு ஒன்று உருவாக வழிகாட்டின. 1843 இல் ஆங்கிலேயர் இந்தியர் சங்கம் ஏற்பட்டது. 1853 ஆம் ஆண்டில் ஆங்கிலேய இந்தியர் கழகமும் அதே ஆண்டில் கிழக்கிந்தியக் கழகமும் தொடங்கினர்.
சென்னையில் மகா ஜன சபை என்பதை சென்னையில் வாங்க மக்கள் ஏற்படுத்தினர். ஆலன் ஆக்டேவியன் ஹியூம் என்பவர் டட்ரின் பிரபுவின்

தூண்டுதலின் பேரில் மக்களின் கருத்துக்களை திரட்டினார். 1884 ஆம் ஆண்டு இந்திய தேசிய ஐக்கியம் என்னும் அமைப்பு உருவாயிற்று. 1885 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மாநாடு நடத்த முடிவு செய்தனர். பம்பாயில் 1885 இல் இந்திய தேசியக் காங்கிரசின் முதல் மாநாடு டபிள் யூ.சி. பானர்ஜி தலைமையில் கூடியது. இந்தியத் தேசியக் காங்கிரசின் தோற்றம் தேசிய உணர்வினை மட்டுமின்றி இந்திய அரசியல் விழிப்புணர்ச்சி மக்கள் உரிமைக்கு வழிகாட்டுதல் ஆகிய நோக்கங்களைக் கொண்டிருந்தது.

### 10.5 இந்திய தேசியக் காங்கிரசின் தோற்றம்

1885 ம் ஆண்டு இறுதியில் இந்திய தேசியக் காங்கிரசின் தோற்றம் இந்திய தேசிய விடுதலை இயக்கத்தின் ஆரம்பமாக அமைந்தது. பல ஆண்டுகள் இந்திய அரசாங்கத்தின் பணிபுரிந்து ஓய்வு பெற்றவரும், இந்தியாவின் நலனில் அக்கரையும், பரிவும் கொண்டவரான ஆலன் ஆக்டேவியன் ஹியூம் (A.0.Huma) என்பவர் இந்தியர்களின் சமூக, அரசியல் நலன்களுக்காக ஒரு சங்கம் அமைக்க வேண்டும் என்ற எண்ணத்தை ஒரு பகிரங்க கடிதம் மூலம் வெளிப்படுத்தினார். சங்கத்திற்கு அரசாங்க ஆதரவையும் இவர் கோரினார். இதற்கு வைசிராயாக இருந்த டப்ரின் பிரபு விடமிருந்து சாதகமான பதிலும் கிடைத்தது. நாட்டின் அரசியல் நிலைகளைக் கண்டறியத்தக்க வகையிலும், மக்களின் உண்மையான விருப்பங்களை அறியவும் ஒரு நிறுவனம் இருந்தால் மிகவும் நல்லது என்ற தனது சாதகமான பதிலை தெரிவித்தார். இதனால் ஊக்கமடைந்தஹியும் சில முக்கியமான இந்திய அறிஞர்களின் ஆதரவுடன் இந்திய தேசிய காங்கிரஸ் என்ற அமைப்பை நிறுவினார்.

இந்திய தேசிய காங்கிரஸின் முதல் கூட்டம் 1885 டிசம்பர் 28-ம் தேதி முதல் 31-ம் தேதி வரை பம்பாயில் “கோகல்தாஸ் தேஜ்பால் உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் சுமார் 72 தலைவர்கள் வந்திருந்தனர். புகழ் பெற்ற வழக்கறிஞர் WC பானர்ஜி காங்கிரசின் முதல் தலைவராகவும் யு.0 ஹியும் செயலராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பிரோ‘ா மேத்தா, தாதாபாய் நௌரோஜி, ரானடே, மு.னு. திலாங், பு.சுப்பிரமணிய அய்யர் போன்ற பெருந்தலைவர்கள் கலந்து கொண்டனர். அப்போதைய காங்கிரசின் லட்சியங்கள்.

பின்வருமாறு:

1. நாட்டின் நலனுக்காக பாடுபடும் பொதுநலத் தொண்டர்களிடையே நெருக்கத்தையும் நட்புறவையும் வளர்த்தல்.
2. இனம், மதம், மாகாண வேறுபாடுகளை நேரடி நட்புறவுகள் மூலம் நீக்கி நாட்டினரிடையே தேசிய உணர்வுகள், ஒருங்கிணைப்பு முயற்சிகளை வளர்த்தல், சிதறுண்டு கிடக்கும் இந்தியர்களை ஒரு தேசிய அமைப்பில் கொண்டு வருதல்.
3. சமூகம், அரசியல், அறிவியல் ஆகிய அனைத்து துறைகளிலும் நாட்டை மறு சீரமைத்தல்.
4. சமுதாயத்தில் முக்கியப் பிரச்சனைகளில் கற்றறிந்த இந்தியர்களின் தெளிவான கருத்துக்களை கண்டறிந்து பதிவு செய்தல்.
5. இந்தியாவிற்கும், இங்கிலாந்திற்குமிடையே ஓர் இணைப்புப் பாலமாக செயல்படுதல்.

இந்த முதற்கூட்டத்தைத் தொடர்ந்து நாட்டின் முக்கிய நகரங்களில் ஆண்டுக்கு ஒருமுறை மாநாடுகள் கூட்டப்பட்டது. அம்மாநாடுகளில் ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள், டாக்டர்கள், வணிகர்கள், நிலக்கிழார்கள் போன்ற பல வகை மக்களும் கலந்து கொண்டார்கள். சமூக, அரசியல், பொருளாதாரச் சிக்கல்களுக்குத் நீர்வு காணும் தீர்மானங்கள்

நிறைவேற்றப்பட்டன. ஆங்கில, இந்திய அரசு அதிகாரிகளும் இக்கூட்டங்களில் கலந்து கொண்டனர்.

1866-ல் இரண்டாம் மாநாடு கல்கத்தாவில் நடை பெற்றது. அக்கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு வைசிராய் டப்ரின் விருந்து கொடுத்தார். மூன்றாம் மாநாடு 1887ல் சென்னையில் பத்ருத்தின் தியாப்ஜி தலைமையில் கூடியது இதில் 600 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். நான்காவது மாநாடு அலகாபாத்தில் 1888-ல் நடைபெற்றது. இதில் 1248 பிரதிநிதகள் கலந்து கொண்டனர். இதன் பிறகு தான் ஆங்கில அரசின் எண்ணம் மாறலானது. ஹியுமின் பேச்சுக்களும் நடவடிக்கைகள்இந்தியரைத் தட்டி எழுப்பின. இதனை உணர்ந்த அவரை அரசு 1888 ல் நாடு கடத்தியது. 1889-ல் பம்பாயில், 1890-ல் கல்கத்தாவிலும், 1891ல் நாகபுரியிலும் மாநாடுகள் நடைபெற்றன. இதற்கிடையே 1889-ல் இங்கிலாந்தில் இந்திய தேசியக் காங்கிரசின் கிளை தொடங்கப்பட்டது. 1890-ல் இந்தியன் என்ற பத்திரிக்கை லண்டனிலிருந்த வெளியிடப்பட்டது.

இவ்வாறு இந்திய தேசிய காங்கிரகம் அதன் தலைவர்களும் 1885 முதல் 1905 வரை ஆண்டுதோறும் ஒரு இடத்தில் கூடி பல பிரச்சனைகளைப் பற்றி விவரித்து, பல தீர்மானங்களை இயற்றி, மக்களின் குறைகளைப் போக்குவதற்கு ஆட்சியாளர்களிடம் முறையாக விண்ணிப்பித்து உரிமைகளை வேண்டினர். இவ்வாறு அரசாங்கத்தின் கொள்கையைக் கண்டிப்பதும், சீர்திருத்தங்களை வற்புறுத்துவது மே ஆரம்பத்தில் காங்கிரஸின் கொள்கையாக இருந்து வந்தது.

## 10.6 மிதவாதிகளும், திவிரவாதிகளும்

இவ்வாறு ஆங்கிலேயர்களை அளவுக்கு மீறிப் புகழ்தல், விண்ணப்பங்கள் வேண்டுகோள்கள் மூலமாக ஆட்சியாளர்களிடம் சலுகைகளை எதிர்பார்த்தல் போன்ற முறைகளையே காங்கிரஸ் கையாண்டு வந்தது. உரிமையைத் தட்டிக் கேட்காமல் விடுதலையை வேண்டிப்பெறாமல் பணிவாக. பயந்து பயந்து சில சலுகைகளைப் பெற முயற்சி நடைபெற்றது. குறையாகவே கேட்டனர். கேட்டவற்றிலும் நாட்டிற்குக் கிடைத்தது மிகக் குறைவேயாகும். கோரிக்கைகள் பல ஆட்சியாளர்களால் புறக்கணிக்கப்பட்டன. நிறைவேறியவற்றிலும் பல முழுமையாகவோ, மனநிறைவுதரும் வண்ணமோ அமையவில்லை.

இச்சூழ்நிலையில் 1896-ல் இந்தியாவில் மிகக் கொடுமையான பஞ்சம் ஒன்று நிலவியது. நிலைமையினை அரசு சரியாகச் சமாளிக்காததால் ஆயிரக்கணக்கானோர் நாடெங்கிலும் மடிந்தனர். எனவே பஞ்சத்தால் வடும் மக்கள் வரி செலுத்தும் நிலையில் இல்லை என்று கூறி பாலகங்காதர திலகர் வரி கொடா இயக்கம் ஒன்றை நடத்தினார். அதையொட்டி புனாவில் இரண்டு ஆங்கில அதிகாரிகள் கொல்லப்பட்டதால் அரசின்நடவடிக்கைகள் கடினமாயின. தனது பேச்சாலும், எழுத்தாலும் இந்தியர்களிடையே வன்முறையைத் தூண்டினார் என்ற சொல்லி திலகர் கைது செய்யப்பட்டார். இதனால் நாட்டுமக்களுக்கும் அரசுக்குமிடையே பகை உணர்வு வளரலானது.

இதன் பின்னர் தான் காங்கிரஸ் ஊழியர்களுக்கிடையே தீவிரமான கருத்துடையவர்கள், மிதவாதக் கருத்துடையவர்கள் என்ற இரு பிரிவு ஏற்பட்டது. கோபால கிரு'ண கோகலே, சுரேந்திர நாத்பானர்ஜி பெரோ'ாமேத்தா போன்றார் சட்டப்பூர்வமான வழிமுறையிலேயே அரசிடமிருந்து சலுகைகள் பெறவேண்டும் என்றனர். அரசியல் சீர்திருத்தங்கள் செய்வதிலும் ஆக்கப்பூர்வமான வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென்றனர். தன்னாட்சி அதிகாரம் வேண்டும் என்றுதான்

வலியுறுத்தினர். இவர்கள் மிதவாதிகள்.

இக்கொள்கைகளை பிச்சைக்காரர் கொள்கையென்றனர் சில காங்கிரஸ் தலைவர்கள். ஆண்டுதோறும் அரசுக்கு மனுக்கள் அறுப்புவதையும் அவற்றை உடனடியாக அரசு நிராகரிப்பதையும் எள்ளி நகையாடினர் இவர்கள். வெறும் பேச்சினால் எதுவும் கிடைக்காது, செயலில் இறங்க வேண்டும் என்றார்கள். நாட்டை ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து விடுவிக்க வேண்டும். அதற்கு வெறும் சட்டப்பூர்வ எதிர்ப்புகள் போதாது என்று கூறினர். இவர்கள் தீவரவாதிகள் இவர்களுக்கு தலைமை தாங்கியவர் மராட்டியத் தலைவர் திலகர் அவர். இவர் கேசரி" என்ற பத்திரிகையை ஆரம்பித்து தனது தீவிர கொள்கைகளை மக்களிடம் பாரப்பினார். இந்த பிரிவில் லாலாலஜபதிராய், பெபின்சத்திரபால் போன்றோரும் இருந்தனர். இவர்கள் அரசை எதிர்த்து தீவிரமாக செயல்பட்டனர். திலகர் சுதந்திர உணர்ச்சியைத் தூண்டும் வகையில் பேசும் வல்லமை பெற்றவர். சிறந்த எழுத்தாளர். ""சுயராஜ்யம் எனது பிறப்புரிமைளூ அதை அடைந்தே நீருவேன்" என்று முழக்கமிட்டார் அரசோடும், அதிகாரிகளோடும் சண்டையிட்டு முடிந்தால் உயிரையயும் தியாகம் செய்து சுதந்திரம் பெற வேண்டும் என்ற னர் தீவிரவாதிகள். மேற்கண்ட இரு பிரிவினரைத் தவிர காங்கிரஸ் அமைப்புக்கு வெளியே இருந்து பயங்கரவாதிகள் (வுநசசழசளைவள) என்ற பிரிவினர் செயல்பட்டனர். வன்முறைகள் கொலைகள் போன்ற பயங்கர நடவடிக்கைகள் மூலம் சுதந்திரம் பெற முயன்றனர்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

6. இந்திய தேசிய ஐக்கியம் எந்த ஆண்டு உருவானது?
7. இந்திய தேசிய காங்கிரசின் முதல் மாநாடு யார் தலைமையில் கூடியது?
8. இந்திய தேசிய காங்கிரசு எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?
9. இந்தியாவில் எந்த் ஆண்டு மிகக் கொடுமையான பஞ்சம் ஏற்பட்டது?
10. வரிகொடா இயக்கத்தினை நடத்தியவர் யார்?

## 10.7 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

41. 1887
42. வேலூர் கலகம்
43. சர் ஜான் கிராட்
44. சிப்பாய் கலகம்
45. சவார்கார்
46. 1884
47. யூ.சி.பானர்ஜி
48. 1885
49. 1896
50. பாலகங்காதர திலகர்

## 10.8 சுருக்கவுரை

- 19ம் நூற்றாண்டின் நடுவில், தெற்கில் தேசியம் வளர்ந்ததற்கு முக்கியச் சான்று சென்னை சங்கம், சென்னை இந்து விவாதிப்பு கழகம் போன்றவைகளால் புலப்படுகிறது.
- தென்னிந்தியாவில், வங்காளப் பிரிவினையின் எதிரொலியான தீவிர இயக்கம் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தியது இந்தியா இந்தியர்களுக்கே என்று வாசகம் வங்காளத்திலிருந்து பரவியது.
- தென்னிந்தியாவில், வங்காளப் பிரிவினையின் எதிரொலியான தீவிர இயக்கம் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தியது இந்தியா

இந்தியர்களுக்கே என்று வாசகம் வங்காளத்திலிருந்து இங்கு பரவியது.

- முஸ்லிம்கள் ஆங்கிலேயர் போல் கல்வி பயில வேண்டும். அப்போதே இந்துக்களைப் போல இசுலாமியரும் உயர முடியுமென சையது அகமது கான் எண்ணினார். அலிகார் கல்லூரி ஒன்று தொடங்கினார்.

## 10.9 முக்கிய வார்த்தைகள்

- தன்னாட்சி: அது சுதந்திரமாகச் செயல்படுவதைக் குறிக்கிறது.
- சூழ்ச்சித் திட்டம்: ஒரு குறிப்பிட்ட இலக்கை அடைவதற்க்கு ஏதுவாக செயல்படுவது.
- நாணயம்: போர்ச்சுகல் நாட்டை சார்ந்த தங்க நாணயம்

## 10.10 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்

**குறு விடை வினாக்கள்**

11.வேலூர் கலகம் பற்றி எழுதுக

12.மிதவாதிகள் பற்றி சிறு குறிப்பு வரைக

13.தீவிரவாதிகள் பற்றி சிறு குறிப்பு வரைக

**நெடு விடை வினாக்கள்**

14. தென்னகத்தில் ஏற்பட்ட விடுதலை இயக்கம் பற்றி விளக்கம் தருக
15. இந்திய தேசிய காங்கிரஸ் பற்றி கட்டுரை வரைக.

## 10.11 மேலும் படிக்க

சந்திரா, பிபின், 2009. நவீன இந்தியாவின் வரலாறு. ஹைத்தராபாத், ஓரியண்ட் பிளாக்வான்ஸ்.

டியூப்-பானர்ஜி, இஷிதா. நவீன இந்தியாவின் வரலாறு. கேம்பிரிட்ஜ், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக அச்சகம்

தாரிக், முகம்மது. 2007. நவீன இந்திய வரலாறு. புது தில்லி: டாடா மெக்ரா-ஹில் கல்வி.

பண்டியோபதியா, ெ'கரா. 2004. பிளாசி முதல் பார்ட்டி வரை: நவீன இந்திய வரலாறு. ஹைதராபாத்: ஓரியண்ட் பிளாக்வான்ஸ்.

சென், S.N. 2006. நவீன இந்திய வரலாறு. புது தில்லி: நியூ ஏஜ் இண்டர்நேஷ்னல்.

# அலகு – 11 இந்திய விடுதலை போராட்டம்

11.0 அறிமுகம்

11.1 நோக்கங்கள்

11.2 முஸ்லீம் லீக்

11.3 தன்னாட்சி இயக்கம்

11.4 ரௌலட் சத்தியாக்கிரகம், 1919

11.5 ஜாலியன் வாலாபாக் படுகொலை

11.6 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

11.7 சுருக்கவுரை

11.8 முக்கிய வார்த்தைகள்
11.9 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்
11.10 மேலும் படிக்க

## 11.0 அறிமுகம்

இந்த அலகில் முஸ்லீம் லீக் மற்றும் இந்திய தேசிய இயக்கங்களை பற்றி விவாதிப்போம். முஸ்லீம்கள் இந்திய மண்ணின் மைந்தர்கள். சமயத்தால் மாறுபட்டாலும் தேசியத்தால் அவர்களும் இந்தியர்கள் தாம். ஏனென்றால் இந்திய முஸ்லீம்களில் பெரும்பாலோர் இஸ்லாமின் சிறப்புக் கொள்கைகளால் சமயமாற்றம் பெற்ற இந்தியர்களேயாவர். அரேபியாவிலிருந்தோ துருக்கியிலிருந்தோ இறக்குமதி செய்யப் பட்டவர்களல்லர். இஸ்லாமிய அரசியல் ஆதிக்கம் இந்தியாவில் நிலை நாட்டப்பட்டபோது வெளிநாட்டிலிருந்து பலர் இந்தியாவில் குடியேறியது உண்மைதான. ஆனால் அவர்கள் இந்தியாவையே தங்கள் தாயகமாகக் கொண்டு இங்கேயே நிரந்தரமாகத் தங்கிவிட்டனர்.

## 11.1 நோக்கங்கள்

இந்த அலகை நீங்கள் படித்து முடித்த பின்பு உங்களால்,

- ஒழுங்கு முறைச் சட்டத்தின் விதிகளையும் முக்கிய அம்சங்களையும் விவரிக்க முடியும்
- பிட் இந்தியச் சட்ட முன் வரைவு பற்றி ஆராய முடியும்
- பட்டய சட்டத்தின் விதிமுறைகளைப் பற்றி ஆராய முடியும்.

## 11.2 முஸ்லீம் லீக்

**முஸ்லீம் வகுப்புவாதத்தின் தோற்றமும் வளர்ச்சியும் (1858-1916)**

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கில ஏகாதிபத்தியம் இந்தியாவில் தனது அரசியல் ஆதிக்கத்தை நிலைநாட்டியபோது அவர்கள் முஸ்லீம் அரசு, இந்து அரசு என்று பாகுபாடு காட்டாது அனைத்து அரசுகளையும் ஆக்கிரமித்தனர். அவர்களுக்கு மராத்திய பேஃவாவும் எதிரிதான், வங்காள நவாபும் எதிரிதான். நண்பர்களாக இருந்த அயோத்தி நவாபும், ஜான்சிராணியும் கூட அவர்கள் ஆக்கிரமிப்புக் கணைகளிலிருந்து தப்பவில்லை. எனவே இந்துக்களும் முஸ்லீம்களும் ஆங்கில ஏகாதிபத்தியம் தங்கள் அரசியல் ஆதிக்க உரிமைகளின் பொது எதிரி என்று சற்று தாமதமாகக் கண்டுணர்ந்தனர். அவர்களது அரசியல் சமூக சீர்திருத்தங்கள் தங்கள் சமயப் பண்பாடுகளுக்கு எதிரானது என்றும் புரிந்து கொண்டனர். ஆகவேதான் 1857ல் இந்துக்களும் முஸ்லீம்களும் ஒருங்கிணைந்து ஆங்கில ஏகாதி பத்தியத்தை எதிர்த்து கிளர்ந்தெழுந்தனர். இப்புரட்சிக்கு காரணமே முஸ்லீம்கள்தான் என்று அவுட்ராம் போன்ற ஆங்கிலத் தளபதிகள் கருத்து தெரிவித்தனர். எனவே அப்புரட்சியினால் கடுமையாகப் பாதிக்கப் பட்டவர்களும் முஸ்லீம்கள் தாம்.

**அலிகார் இயக்கமும் சர் சையத் அஹமத்கானும் (1817 - 1898):**

ஆங்கிலேயர் மற்றும் மேற்கத்தியப் பண்பாடுமீது கொண்ட வெறுப்பு காரணமாக ஆங்கிலக் கல்வியைப் புறக்கணித்ததால் முஸ்லீம்கள் மிகவும் பின்தங்கிவிட்டார்கள் என்பதை உணர்ந்த முதல் முஸ்லீம் தலைவர் சர் சையத் அஹமத்கான் ஆவார். எனவே முஸ்லீம்களுக்கு மேற்கத்திய கல்வியறிவை ஊட்டுவதற்கு அலிகாரில் 1883ல் முகமதிய ஆங்கில ஓரியண்டல் கல்லூரி (Muhammadian Anglo Oriental College) நிறுவ முழு ஒத்துழைப்பளித்தார். முஸ்லீம்களை பிரிட்டிஃ அரசின் பயனுள்ள குடிமக்களாக மாற்று வதற்கும், நல்லதொரு அரசின் நற்பயன்களை அனுபவித்ததனால் அவ்வரசின் மீது உண்மையான

பற்றுறுதி கொள்வதற்கும் அக்கல்லூரி நிறுவப் பட்டிருப்பதாகக் கூறினார். அக்கல்லூரியின் முதல்வரான தியோடர்பெக் மற்றும் வடமேற்கு மாநில ஆளுநர் ஆக்லண்ட் கால்வின் ஆகியோர் செல்வாக்கு காரணமாக அகமதுகான் ஆங்கில அரசின் தீவிர ஆதரவாளராக மாறினார். அவரது கொள்கைகள் தெளிவானவை . அவை:

1. முஸ்லீம்கள் ஆங்கிலக் கல்வி அறிவு பெற்று அரசுப் பதவிகளுக்கு தகுதியுள்ளவர்களாக மாற வேண்டும்.
2. பிரிட்டிஷ் அரசிற்கு விசுவாசமுள்ள குடிமக்களாக அவர்கள் வாழ வேண்டும்.
3. காங்கிரசிலும் பிற தேசிய இயக்கங்களிலும் முஸ்லீம்கள் பங்கு பெறக் கூடாது. காங்கிரஸ் ஒரு இந்து நிறுவனம் என்று விளக்கமளிக்கப் பட்டது.
4. மக்களாட்சி முறைமைகளை எக்காரணத்தைக் கொண்டும் இந்தியாவில் செயல்படுத்தக்கூடாது. ஏனென்றால் ஜனநாயகம், தேர்தல் ஆகியவை பெரும்பான்மையினரான இந்துக்களின் ஆதிக்கத்தையே வலுப்படுத்தும.

எனவே அலிகார் கல்வி நிறுவனம் உருவாக்கிய முஸ்லீம் இளைஞர்கள் ஆங்கில அரசின் தீவிர ஆதரவாளர்களாகவும் தேசியத்தின் தீவிர எதிரிகளாகவும் மாறினர். எந்த அளவிற்கு காங்கிரசை கண்மூடித்தனமாக எதிர்த்தனரென்றால் ஐ.சி.எஸ். தேர்வினை ஏககாலத்தில் இந்தியாவிலும் நடத்தவேண்டும் என்ற தீர்மானத்தைக் கூட எதிர்த்தனர் .

தமது கொள்கையைப் பரப்ப சையத் அகமதுகான் பல தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

1. விசுவாசமுள்ள முகமதியர்கள் (Loyal Mohemmadans) என்ற செய்தித்தாளை வெளியிட்டு முஸ்லீம் - இந்தியர்களை அன்னிய ஏற்றுக்கொண்டு அதற்கு விசுவாசமாக இருக்குமாறு கூறினார்.
2. முஸ்லீம் கல்வி மாநாடு என்ற கூட்டத்தை 1886 முதல் ஆண்டு தோறும் காங்கிரஸ் மாநாடு நடைபெறும் நகரில் அதே தேதியில் நடத்தி, அதன்மூலம் முஸ்லீம் இளைஞர்கள் காங்கிரஸ் கூட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்பைத் தடுத்தார்
3. 1888ல் காங்கிரசிற்குப் போட்டியாக நாட்டுப்பற்றுக்கழகம் (Patriotic Association) என்ற ஒரு அமைப்பை உருவாக்கனார்.
4. முகம்மதிய ஆங்கில ஓரியண்டல் பாதுகாப்புக் கழகத்தை நிறுவி (Mohammadean Angilo oriental Defense Association) அதன்மூலம் கிறிஸ்துவத்திற்கும் மேற்கத்திய பண்பாட்டிற்கும் எதிரான கருத்துக்களை மட்டுப்படுத்தி, அவற்றை முஸ்லீம்கள் சற்று அனுசரித்துச் செல்லவேண்டும் என்று அறிவுறுத்தினார்.

**வங்கப் பிரிவினையின் விளைவுகள்:**

கர்சன் பிரபு தமது வங்கப் பிரிவினைக்கு ஆதரவாக 1904 பிப்ரவரி 18ல் டாக்காவில் பேசும்போது டாக்காவை தலைநகராகக் கொண்ட முஸ்லீம்களை பெரும்பான்மையினராகக் கொண்ட ஒரு புதிய மாநிலம் (கிழக்கு வங்காளம்) உருவாவதன்மூலம் இங்கு வாழும் மக்களின் நலன்கள் பாதுகாக்கப்படும் என்று குறிப்பிட்டார். மேலும் கிழக்கு வங்காள முஸ்லீம்கள் மிகவும் பின்தங்கிய நிலையிலிருப்பதால் புதிய மாநிலப் பிரிவினைமூலம் அவர்கள் நிலையை உயர்த்த முடியும் என்றும் அறிவித்தார். இதன்மூலம் கர்சன் தமது பிரிவினைத் திட்டத்திற்கு முஸ்லீம் வகுப்புவாதத்தின் ஆதரவைப் பகிரங்கமாகக் கோரினார். அப்பகுதி முஸ்லிம் தலைவரான டாக்கா நவாபின்

பணப்பிரச்சனையைத் தீர்க்க அரசு குறைந்த வட்டியில் ஒரு லட்சம் ரூபாய் கடனாகக் கொடுத்துதவியது. எனவே அரசு நமது தரப்பில் இருக்கிறது என்ற எண்ணத்தில் உற்சாகமடைந்த முஸ்லீம்கள் ‘‘சிகப்புத் துண்டுப்பிரசுரம்’’ வெளியிட்டனர். அதில் இந்துக்கடைகளை சூறையாடினால் தண்டனை கிடையாது என்று குறிப்பிட்டிருந்தனர். இதன் விளைவாக முதன் முறையாக அரசு ஆதரவுடன் இந்து - முஸ்லீம் கலவரம் நடைபெற்றது.

இது தவிர வேறு சில நிகழ்ச்சிகளும் முஸ்லீம் வகுப்புவாதத்தை ஊக்குவித்தன. தேசியத் தலைவர்களின் சில நடவடிக்கைகள் இந்து சமயத்தை சிறப்பிப்பதாக அமைந்தன. சான்றாக திலகர் 1893ல் தொடங்கிய கணபதி விழாவும், 1895ல் தொடங்கிய சிவாஜி வழிபாடும் தேசியத்தின் பெயரால் இந்து மறுமலர்ச்சிக்கு வழி வகுப்பதாக முஸ்லீம்கள் கருதினர். மொகரம் ஊர்வலத்தில் இந்துக்கள் கலந்து கொள்ளக்கூடாது என்று அவர் கூறியதும், தங்கள் சமயத்தைப் புறக்கணிப்பது போன்றது என்று பொருள் கொண்டனர். அப்சல்கானை சிவாஜி கொன்றது சரியான செயல் எனப்பாராட்டியது முஸ்லிம்களை பழிப்பது போலிருந்தது. அதே போல் வங்கப் பிரிவினையின்போது தேசியவான்கள் கங்கையில் நீராடியது, ரக்ஷபந்தன் கட்டியது. காளி கோவிலில் உறுதிமொழி எடுத்தது ஆகியவை இந்து சமயச் சடங்குகள் என்று முஸ்லீம்கள் புறக்கணித்தனர்.

**முஸ்லீம் தூதுக்குழுவும் மின்டோவும் (1906)**

இச்சமயத்தில் புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தம் வருவதற்கான அறிகுறிகள் தோன்றின. வங்கப் பிரிவினையால் பெரியதொரு அரசியல் சலுகையை அரசிடமிருந்து பெற்றுவிட்டோம் என்று உயர்மட்ட முஸ்லீம் சமூகம் பெருமிதம் கொண்டிருந்தது . எனவே வரவிருக்கும் புதிய அரசியலமைப்பிலும் மேலும் பல சலுகைகள் பெற ஆர்வத் தோடிருந்தது. அதை உணர்ந்து கொண்ட அரசு தனது ஏகாதிபத்திய ராஜ தந்திர கலையான ”பிரித்தாளும் சூழ்ச்சிக்கு” (Divide and Rule) புதியதொரு வாய்ப்பு கிடைத்திருப்பதாகக் கண்டது. இந்து-முஸ்லீம் சமூகத்தினரிடையே ஏற்பட்டிருக்கும் பிளவை நிரந்தரமாக்கி முஸ்லீம்களை இந்துக்களோடு எந்த அரசியல் கட்சியிலும் சேரவொட்டாது தடுத்து குறிப்பாக காங்கிரசின் தேசிய நீரோட்டத்தோடு இணையாது பிரித்து காங்கிரசிற்கு இந்தியாவிலேயே ஒரு சுதேச எதிர்ப்பு ஏற்படுத்தத் திட்டமிட்டனர் . தங்கள் நோக்கத்தை எப்படி செயல்படுத்துவது என்று திகைத்துக் கொண்டிருந்த முஸ்லீம் தலைவர்களுக்கு அரசிடமிருந்தே முதல் தூண்டுதல் வந்தது. அரசப் பிரதிநிதி மின்டோவின் செயலாளரான ஸ்மித் என்பார் அலிகார் கல்லூரி முதல்வர் ஆர்ச்பால்டுவிற்கு ஒரு செய்தி அனுப்பினார். அதில் அரசப்பிரதிநிதி, முஸ்லீம் சமூகப் பிரதிநிதிகள் அடங்கிய குழுவை வரவேற்கத் தயாராயிருப்பதாகவும், முஸ்லீம் சமூகத்தின் நியாயமான கோரிக்கைகளை அனுதாபத்துடன் பரிசீலிக்க முயலுவார் என்றும் குறிப்பிட்டிருந்தது. உடனே கல்லூரி செயலாளர் முசீநுல் முல்க் தீவிரமாகச் செயல்பட்டார். இஸ்மெய்லி முஸ்லீம் பிரிவின் தலைவரான ஆகாகான் தலைமையில் 35 பேர் கொண்ட முஸ்லீம் பிரதிநிதி குழு ஒன்று தயாரானது. அரசப்பிரதிநிதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கோரிக்கை விண்ணப்பமும் தயாரானது.

1906 அக்டோபர் முதல் தேதி அக்குழு அரசப்பிரதிநிதி மின்டோவை சிம்லாவில் சந்தித்தது. அக்குழுவினரை ‘‘வெற்றித் திறனும் ஆட்சித் திறனும் கொண்ட இனத்தின் பரம்பரையினரே’’ என்று கூறி மின்டோ வரவேற்றார். ‘‘இந்திய-முஸ்லீம் சமூகத்தின் அறிவாற்றல் பெற்றோரின் விருப்பங்களை’’ தூதுக்குழு வாயிலாக தெரிவிக்க முன்வந்ததைப் பாராட்டினார். தூதுக்குழுவின் கோரிக்கைகளாவன.

1. சிவில், ராணுவம் , நீதிமன்றம் ஆகிய அரசுப்பணிகளில் முஸ்லீம் களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் போட்டித் தேர்வின்றி அளிக்கப்படல்.
2. நகராட்சி, மாவட்டக்கழகம், பல்கலைக்கழகப் பேரவை, ஆட்சிக்குழு ஆகியவற்றில் ஒரு குறிப்பிட்ட அளவு இட ஒதுக்கீடு.
3. மாநில சட்டமன்றங்களுக்கு வகுப்புவாரியப் பிரதிநிதித்துவ முறையில் தேர்தல். அதாவது முஸ்லீம் பிரதிநிதிகளை முஸ்லீம் வாக்காளர்கள் மட்டுமே தேர்ந்தெடுத்தல். அவர்களின் எண்ணிக்கை மக்கள் தொகை விகிதாச்சாரப்படியில்லாது அவர்களது அரசியல் முக்கியத்துவத்தைப் பொறுத்து அமைதல்.
4. அதே போல மத்திய சட்ட மன்றத்திற்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் . அங்கும் வலுவற்ற சிறுவான்மையினராகக் குறைந்து விடாதபடி பாதுகாத்தல்.
5. முஸ்லீம் சமய, அறிவியல் வளர்ச்சிக்குதவ பல்கலைக்கழகம் நிறுவுதல்.

இக்கோரிக்கைகளைப் பொதுவாக வரவேற்ற அரசப் பிரதிநிதி, முஸ்லீம்களின் அரசியல் உரிமைகளும் நலன்களும் பாதுகாக்கப்படும் என்று உறுதியளித்தார். இவ்வாறு வகுப்புவாத பிரிவினை இயக்கத்திற்கு பச்சைக்கொடி” காட்டப்பட்டது . மின்டோ பிரபு ஒரே கல்லில் 62 மில்லியன் முஸ்லீம்களை தேசிய நீரோட்டத்துடன் சேராது தடுத்து சாதனை புரிந்து மகிழ்ந்தார்.

**முஸ்லீம் லீக் தோற்றம்:**

மின்டோவுடனான சந்திப்பு வெற்றி பெற்றதைக் கண்ட தூதுக்குழுவின் தலைவரான ஆகாகான் “பிரிட்டீஷ் அரசிடமிருந்து நாம் ஒரு நாட்டுக்குள் நாடாக தனியொரு அரசியல் அங்கீகாரம் பெற முயற்சிக்க வேண்டும்” என்று குறிப்பிட்டார். அதுபற்றி பரிசீலிக்க 1906 டிசம்பரில் முகமதிய கல்வி மாநாட்டின்போது, அம்மாநாட்டுப் பிரதிநிதிகளை நவாப் சலிமுல்லா டாக்கா வருமாறு அழைப்பு விடுத்தார். அதன்படி டாக்காவில் விக்கருல் முல்க் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நவாப் சலிமுல்லா முஸ்லீம்களுக்கென தனியொரு அரசியல் கட்சி அமைக்கவேண்டும் என்று முன்மொழிந்தார். அதனை ஹக்கிம் அஜ்மல்கான் ஆதரித்தார். இவ்விதமாக முஸ்லீம் லீக் தோற்றுவிக்கப்பட்டது. அதன் நோக்கங்களாவன:

1. பிரிட்டிஷ் அரசின் மீதான பற்றுறுதியைப் போற்றி வளர்த்தல்
2. இந்திய முஸ்லீம்களின் அரசியல் உரிமைகளை வளர்த்து பாதுகாத்தல்.
3. பிற சமூகத்தின் பகைமை கொள்வதைத் தவிர்த்தல்.

**மிண்டோ - மார்லி சீர்திருத்தம் 1909**

1909 ல் வெளியான மின்டோ மார்லி சீர்திருத்தத்தில் முஸ்லிம் களுக்கு தனித்தொகுதி வழங்கப்பட்டது. இது தவிர வேறுசில சிறப்புச் சலுகைகளும் வழங்கப்பட்டன. முஸ்லிம் தனித்தொகுதிகள் நேரடித் தேர்தல் நடைபெற்றபோது, பிற தொகுதிகளில் மறைமுகத் தேர்தல்தான் நடைபெற்றன. ஆண்டிற்கு மூவாயிரம் ரூபாய் ஆண்டு வருமானத்திற்கு வரி செலுத்தும் முஸ்லீமிற்கு வாக்குரிமை அளிக்கப் பட்டபோது, பிற சமூகத்தை பொருத்தமட்டில் ஆண்டிற்கு மூன்று லட்சம் ஆண்டு வருமானத்திற்கு வரி செலுத்துபவர்களுக்குத்தான் வாக்குரிமை அளிக்கப்பட்டது. பட்டம் பெற்று ஐந்தாண்டு காலம் ஆன முஸ்லிமிற்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. பிற சமூகத்தினருக்கு அது முப்பது ஆண்டாக உயர்த்தப்பட்டது. மின்டோவை சந்தித்த தூதுக்குழுவினர் கேட்டுக் கொண்டதுபோல் முஸ்லிம்களுக்கு மக்கள் தொகை விகிதாச்சாரத்திற்கு அதிக அளவில் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது.

இவ்விதமாக முஸ்லீம்கள் பிரிட்டீஷ் ஏகாதிபத்தியத்தின் செல்லப் பிள்ளைகளாகத் தட்டிக் கொடுக்கப்பட்டனர். நாட்டுப் பிரிவினைக்கு அரசியலமைப்பு ரீதியில் அடிப்படை போடப்பட்டது.

## 11.3 தன்னாட்சி இயக்கம்

முதல் உலகப் போர் நடந்து கொண்டிருக்கும்போதே இந்தியவில் அன்னிபெசன்ட் அம்மையார் தலைமையில் "தன்னாட்சி இயக்கம் உருவெடுத்தது. 1892லேயே இந்தியா வந்த அன்னிபெசன்ட் அம்மையார் ஆன்மீக வளர்ச்சிக்கு தனது சக்தி முழுவதையும் செலவு செய்தார். 1913-ல் ஆன்மீக துறையிலிருந்து அரசியல் துறையில் குதித்தார். 1916-ல் அன்னி பெசன்ட் அம்மையாரும், திலகர் சேர்ந்து இந்த இயக்கத்தை பம்பாயில் முறைப்படி துவக்கி வைத்தார்கள். ஒரு சில நாள்களிலேயே தன்னாட்சிக் கழகங்கள் கான்பூர், அலகாபாத், அகமதாபாத், சென்னை, கள்ளிக்கோட்டை போன்ற நகரங்களில் அதன் கிளைகள் தோன்றின. காமன்வீல், நியு இந்தியா ஆகிய பத்திரிகைகள் மூலம் தன்னாட்சி இயக்கம் வேகமாக வளர்ந்தது. காமன்வீல் பத்திரிக்கை 1914 - ஜனவரி 2-ல் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தியர்களின் அடிமைத் தூக்க நிலையிலிருந்து விழிப்புறச்செய்திடவே இந்த இயக்கம்" என்று அன்னிபெசன்ட் கூறினார். தீவிரவாதிகள் பயங்கரவாதிகளுடன் சேர்ந்து விடாமல் தடுத்து, மிதவாதிகளுடன் இணையச் செய்து ஒன்றுபட்ட இணைந்த காங்கிரசின் மூலம் பேரரசுக்குட்பட்ட தன்னாட்சிக்கு வழிவகுக்க முயன்றார் அன்னிபெசண்ட். கிராம பஞ்சாயத்து முதல் தேசிய நாடாளுமன்றம் வரை தன்னாட்சி அமைய வேண்டும் என்றும், இங்கிலாந்து பாராளுமன்றத்திற்கு நேரடியாக இந்தியர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றும் கூறினார். தன்னாட்சி உரிமை பெறுவது என்பது இந்தியர்களின் பிறப்புரிமை என்றும், இங்கிலாந்து போர் நடவடிக்கைகளுக்கு இந்தியர்கள் துணை பரிந்ததாலோ அல்லது இங்கிலாந்து மன்னருக்கு விசுவாசமுள்ள மக்களாக விளங்குவதாலோ அளிக்கப்பட வேண்டிய ஊதியம் அல்ல என்பதைத் தெளிவுபடுத்தினார்.

தன்னாட்சிக் கருத்துக்கள் குறுகிய காலத்தில் காட்டுத் தீ போல நாட்டு மக்களிடையே பரவியது. 1917-ல் தன்னாட்சி இயக்கம் உச்ச கட்டத்தை அடைந்தது. அதைக்கண்டு அரண்டு போன அரசாங்கம் அடக்கு முறைகளை அள்ளி வீசியது. அன்னிபெசன்டின் நடமாட்டங்களுக்கு தடை விதிக்கவும், அவரது ஏடுகளின் குரல் வளையை, நெறிக்கவும் முயன்றது. அரசு அன்னிபெசன்ட் கைது செய்யப்பட்டார். ஆனாலும் அந்த இயக்கம் தங்கு தடையின்றி வளர்ந்தது. அதன் தலைவர்கள் மக்களிடையே பேராதரவைப் பெற்றனர். தன்னாட்சி இயக்கம் இந்திய தேசிய விடுதலை இந்த இயக்கத்தில் முக்கிய இடத்தைப் பெறுகிறது இதன் விளைவுகள் ஏராளம். இந்த இயக்கத்தினாலே மிதவாத அமைப்பாக மாறி மக்களிடையே சிறிது சிறிதாக செல்வாக்கினை இழந்து செயலற்ற நிலைக்கு வந்து கொண்டிருந்த காங்கிரஸ், தன்னாட்சிக் கொள்கையை ஏற்று, தீவிரவாதிகளின் ஒத்துழப்பையும் பெற்று மீண்டும் மக்கள் மதிக்கும் அமைப்பாக மாறியது.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

1. ஆங்கில ஓரியண்டல் கல்லூரியை நிறுவியவர் யார்?
2. காங்கிரசுக்கு போட்டியாக நாட்டுப்பற்றுகழகம் எந்த ஆண்டு உருவாக்கப்பட்டது?
3. வங்க பிரிவினைக்கு காரணமான ஆங்கில பிரதிநிதி யார்?
4. யாருடைய தலைமையில் தன்னாட்சி உருவெடுத்தது?
5. இந்தியர்களின் அடிமைத் தூக்க நிலையிலிருந்து விழிப்புறச்செய்திடவே இந்த இயக்கம் என்று கூறியவர்?

## 11.4 ரௌலட் சத்தியாக்கிரகம், 1919

### ரௌலட் சட்டம்

முதல் உலகப்போர் முடிந்தவுடனேயே இந்தியத் தீவிரவாதிகளையும், பயங்கரப் புரட்சிக்காரர்களையும் அடக்கும் நோக்கத்துடன் முடியவிருந்த இந்தியப் பாதுகாப்புச் சட்டத்துக்கு பதில் புதிய சட்டத்தை கொண்டுவர இந்திய அரசு முயன்றது. சிட்னி ரௌலட் (Sidney Rowlatt) என்ற ஆங்கிலேய நீதிபதியைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவை அமைத்து இந்தியாவில் அரச விரோத நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்பிக்குமாறு கேட்டுகொள்ளப்பட்டது. அக்குழு சமர்பித்த அறிக்கை (1918 ஏப்ரல் 15ல் கூறப்பட்ட சிபாரிககளின் அடிப்படையில் இரு மசோதாக்கள் தயாரிக்கப்பட்டன. அவை ரௌலட் மசோதாக்கள் (Rowlatt) என்றழைக்கப்பட்டன அம்மசோதாக்களின் படி

1. அரசாங்கம் சோதனை ஆணை ஏதுவுமின்றி எவரையும் கைது செய்யலாம்.
2. அபாயகரமான ஆட்கள் என்ற காரணத்தைக்கூறி எவ்வித விசாரணையுமின்றிக் காலவரையின்றி காவலில் வைக்கலாம்:
3. அரச விரோதக் குற்றங்களில் ஈடுபட்டார்கள் எனகருதப்படுவோரைக் குறிப்பட்ட இடங்களில் காவலில் இருக்குமாறு கட்டாயப் படுத்தலாம்ளூ
4. நடுவர்களின் (Juries) துணையின்றியே மூன்று உயர் நீதிமன்ற நீதி பதிகள் அரசுத் துரோக வழக்குகளை விசாரிக்கலாம் அவர்களுடைய தீர்ப்பே இறுதியானது.

இந்தக் கருப்பு மசோதாக்கள் (Black Bills) இந்தியத் தலைவர்கள் கடுமையாகக் கண்டித்தனர். அம்மசோதாக்கள் மத்திய சட்டமன்றத்தில் விவாதிக்கப்பட்ட போது அரசாங்கச் சார்பற்ற உறுப்பினர்களான எஸ். என். பானர்ஜி, வி.எஸ். சீனிவாச சாஸ்திரி, டெஜ் பகநூர் சாப்ரூ, வி.ஜே.பட்டேல், ராமசுவாமி அய்யங்கார் ஆகியோர் ரௌலட் மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டால் நாட்டில் வேண்டாத விளைவுகள் ஏற்படும் என்று அரசாங்கத்தை எச்சரித்தார்கள். பல ஊர்களில் கண்டனக் கூட்டங்கள் நடத்தப்படும் அந்த மசோதாக்களுக்கெதிராகப் பலரும் சீற்றங் கொண்டனர். புதிதாக உருவான அச்சீற்றம் புதிய தலைவரைத் தந்தது என்கிறார். பெர்சிவெல் ஸ்பியர் என்ற வரலாற்று அறிஞர். அப்புதிய தலைவரான காந்தி ரௌலட் மசோதாக்கள் விலக்கி கொள்ளப்படாவிடில் சத்தியாகிரகத்தை துவக்குவதைத் தவிர தனக்கு வேறு வழியில்லையென்று அராசாங்கத்துக்கு இறுதி எச்சரிக்கை விடுத்தார். அந்த எச்சரிக்கையையும் மீறி அரசாங்கம் குழப்பவாத புரட்சிக் குற்றச் சட்டத்தை நிறைவேற்றியது. அதுவே ரௌலட் சட்டம் என்று பெயர் பெற்றது.

### சாத்வீகப் போராட்டம்

ரௌலட் சட்டம் மனித உரிமைக்கும் நீதிக்கும் உலைவைக்கும் சட்டம் எனக்கருதினர் காந்தி அச்சட்டம் சவுக்கை கொண்டு அரசாங்கத்துக்கு ஆகாத எவரையும் எப்படியும் அடிக்கலாம் என்பதை நன்குணர்ந்த காந்தி அந்த சாத்தான் சட்டத்தை முழு மூச்சுடன் எதிர்க்கத் தீர்மானித்தார். 1919 மார்ச் மாதம் பம்பாயில் சத்தியாகிரக சபை தோற்றுவிக்கப்பட்டது. சத்தியாகிரசபதம் எடுத்துக் கொள்ளப்பட்டது. சத்தியாகிரசபையின் கிளைகள் நாட்டின் பல பகுதிகளிலும் துவக்கப்பட்டன. 1919 மார்ச் 30ஆம் தேதி சத்தியாகிரக நாளாக நாடெங்கும் அனுசரிக்கப்பட வேண்டும் என்று காந்தி மக்களை கேட்டுக் கொண்டார். ஆனால் அவர் சென்னை சென்றபோது மார்ச் 17 சி. கோபாலாச்சாரியார், எஸ், கஸ்தூரிரங்க அய்யங்கார் சி.விஜயராகவாச்சாரியார் ஆகியோரது ஆலோசனையின்படி சத்தியாகிரக நாளை ஏப்ரல் 6 க்குத் தள்ளி வைத்து விட்டார் காந்தி.

சத்தியாகிரக தினம் தள்ளி வைக்கப்பட்ட செய்தி அறியாத டில்லி மக்கள் 1919 மார்ச் 30 அன்று பூரிண அர்த்தால் அனுசரித்தனர். டெல்லி பொதுவாழ்க்கை அன்று நின்று போயிற்று. ஆனால் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் போலீசாருக்குமிடையே ஏற்பட்ட மோதலில் பலர் இறந்தனர். மேலும் பலர் காயமுற்றனர். 1919 ஏப்ரல் 6 ஆம் தேதி காந்தியின் குரலுக்குச் செவிமடுத்த நாடு அமைதியாக அகிம்சை வழிநின்று சத்தியாகிரக நாளை பக்தி சிரத்தையோடு கொண்டாடியது. ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், கடையடைப்பு உண்ணாவிரதம் பொதுக்கூட்டங்கள், பிரார்த்தனைகள் ஆகிய அனைத்தும் எவ்வித அசம்பாவிதமுமின்றி நடைபெற்றது.

ஆனால் அரசாங்கத்தின் விவேகமற்ற போக்கால் வன்முறை வெடித்தது. சுவாமி சித்தாநந்தரின் அவசர அழைப்பின்பேரில் காந்தி டெல்லிக்கு புறப்பட்டு சென்றார் (1919 ஏப்ரல் 7), இவர் மதுராவை அடைந்தபோது மேற்கொண்டு செல்லக்கூடாது எனதடுக்கப்பட்டார். தடையை மீறிப் பயணம் செய்த காந்தியை பஞ்சாபின் எல்லையிலிருந்த பால்வால் என்ற சிற்றூரின் புகைவண்டி நிலையத்தில் கைது செய்து பம்பாய்க்கு கொண்டு சென்று விட்டனர். அகமதாபாத், பம்பாய், டெல்லி, அமிர்தசரஸ் ஆகிய இடங்களில் வன்முறை கேந்திரங்களாயின. ஆங்கிலேயர்களும் அரசாங்க அதிகாரிகளும் தாக்கப்பட்டார்கள், கொல்லப்பட்டார்கள் பொதுச் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. போலீஸ் உத்தரவுகளும் தடைகளும் மீறப்பட்டன. துப்பாக்கிச் சூடுகள் நடந்தன. இராணுவச் சட்டம் பிறபிக்கப்பட்டது அகிம்சை ஆயுதத்தை சரியாக பயன்படுத்தக் கூடிய பயிற்ச்சியையும் பக்குவத்தையும் மக்கள் இன்னும் சரியாக பெறவில்லை என்பதை அறிந்தார் காந்தி இமாலயத் தவறு செய்துவிட்டதாகக் கருதினார் காந்தி ரௌலட் சத்தியாகிரகத்தை தொடங்கினார் காந்தி, காங்கிரஸ் அல்ல, அவரே நிறுதினார்.

## 11.5 ஜாலியன் வாலாபாக் படுகொலை, 1919

### தலைவர்கள் கைது

மக்களின் பொறுமையும், அவர்களது கட்டுப்பாடான செயலாற்றலையும், தவறாகக் கணித்தமையால் காந்தி ரௌலட் சத்தியாகிரகத்தை நிறுத்த வேண்டியதாயிற்று. காந்தி அறப்போராட்டத்தை நிறுத்தினாலும் அரசாங்கம் அடக்குமுறையை நிறுத்தவில்லை! டாக்டர் சைபுதீன் கிட்சுலுவும் டாக்டர் சத்யபாலும் அமிர்தரசில் கைது செய்யப்பட்டது பஞ்சாபியரிடையே மனக் கொதிப்பை ஏற்படுத்தியது. மக்களிடையே மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்த வழக்குரைஞர் கிட்சுலுவையும், மருத்துவர் சத்தியபாலையும் பஞ்சாப் துணை கமி'னர் தனது பங்களாவுக்கு வரச்சொல்லி, கைதுசெய்து, தரம்சாலா என்ற மலைநகருக்கு அனுப்பிவிட்டார்! பஞ்சாபின் லெப்டிணட் கர்னலாயிருந்த மைக்கேல் ஒட்வியர் இவ்விரு தலைவர்களையும் நாடுகடத்த உத்தரவிட்டார்.

### அமிர்தரஸ் ஆர்ப்பாட்டம்

முன்னமேயே ரௌலட் சட்டத்தாலும், காந்தி கைது செய்யப்பட்டதாலும் சினம் கொண்டிருந்த சீக்கியர் சீறி எழுந்தனர். துணைக் கமி'னர் பங்களாவை நோக்கிப் புறப்பட்டனர். அவர்கள் ஒரு புகைவண்டிப் பாலத்தருகே தடுத்து நிறுத்தப்பட்ட போது வன்முறை வெடித்தது. 25 ஆர்ப்பாட்டக்காரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். மின்சார கம்பிகளும், தந்திகம்பிகளும் துண்டிக்கப்பட்டன. புகைவண்டிப் பாலம் தகர்க்கப்பட்டது. செல்வி மெர்சல்தா ெ'ர்வுட் என்ற சமயப் பரப்பாளர் மோசாமாகத் தாக்கப்பட்டார். பல பொது கட்டிடங்கள் கொளுத்தப்பட்டன. அமிர்தரஸ் ஆர்ப்பாட்டம் களமாயிற்று.

**இரங்கல் கூட்டம்**

அமிர்தசரஸ் அடக்குமுறைக்குப் பலியானோருக்கு இரங்கல் கூட்டம் போடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. 1919 ஏப்ரல் 13 ஆம் தேதி ஜாலியன்வாலா தோட்டத்தில் இரங்கல் கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. கூட்டம் நடைபெற்ற நாள் சீக்கியர்களுக்கு புனிதமான பைசாகி தினம் ஆகையால் பக்தர்கள் கூட்டம் அலைமோதியது. நெடிய சுவர்கள் சூழப்பட்டு, ஒரு குறுகிய நுழைவாயிலை கொண்ட அத்தோட்டத்தில் 20,000 பேருக்கு மேல் கூடியிருந்தனர்.

**துப்பாக்கி சூடு**

அறிவித்தபடி இரங்கல் கூட்டம் மாலை 4.30 மணிக்குத் துவங்கியது. அங்கு கூடியிருந்தோருக்கு பிரிகேடியர் ஜெனரல் ரெஜினால்டு டயர் பிறப்பித்திருந்த தடை உத்தரவு பற்றி ஏதும் தெரியாது! தனது ஆணையை மீறிக் கூடிவிட்டனரே என்று ஆத்திரமடைந்த டயர் படைவீரர்களுடன் ஜாலியன்வாலாபாக் சென்று முன்னறிவிப்பு ஏதுமின்றி தோட்டாக்கள் தீரும் வரை கூட்டத்தின் மீது துப்பாக்கி சூடு நடத்தினார்! ஆயிரத்து 1650 சுற்று சுட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் மாண்டனர். காயம்பட்ட மேலும் பலர் கவனிக்கப்படாமையால் இறந்தனர். படுகாயமுற்றோர் பலர். இரங்கல் கூட்டத்துக்குச் சென்றோர் இறந்துவிட்ட கோரக் காட்சி.

**ராணுவ சட்ட நடவடிக்கைகள்**

ஜாலியன் வாலாபாக் படுகொலையை அடுத்து அமிர்தசரசிலும், லாகூரிலும் இராணுவ சட்டம் பிறப்பிக்கப்பட்டது. ஆங்கிலேய அதிகாரிகளுக்கு கைகூப்பி வணக்கம் செய்யாதோருக்குக் கசையடி கொடுக்கப்பட்டது. புகைவண்டியில் பயணம் செய்ய அனுமதி மறுக்கப்பட்டது. மாணவர்கள் யூனியன் ஜாக் கொடிக்கு வணக்கம் செய்யுமாறு வற்புறுத்தப்பட்டனர். செல்வி ெர்வுட் தாக்கப்பட்ட தெருவில் செல்வோர் அனைவரும் தரையில் ஊர்ந்து செல்லுமாறு உத்தரவிடப்பட்டது. அந்த வீதியில் சவுக்கடி சதுக்கம் குற்றவாளிகளுக்கு கசையடி கொடுக்கப்பட்டது. லாகூர், கசூர், குஜ்ரன்வாலா, ஹேகுபூரா ஆகிய இடங்களில் ராணுவச் சட்டத்தின் துணை கொண்டு மக்களை மாக்களாக நடத்தியது!

**விசாரணைக் குழுக்கள்**

**காங்கிரஸ் குழு**

ஜாலியன் வாலாபாக் படுகொலையும், இராணுவச் சட்ட அத்துமீறல்களும் நாட்டில் பதட்டத்தை ஏற்படுத்தியது. இவற்றைப் பற்றிய வதந்திகள் புயல் போல் பரவின. பஞ்சாப் பயங்கரம் பற்றி உண்மை நிலை தெரியவில்லை. மதன் மோகன் மாளவியா போன்றோர் மத்திய சட்டமன்றத்தில் இது பற்றி கேள்விகளை கேட்டார். காந்தி படுகொலை நடந்த இடத்தை பார்வையிட அனுமதி மறுக்கப்பட்டது. அந்த சூழ்நிலையில் காங்கிரஸ் காரிய கமிட்டி மோதிலால் நேரு, சி.ஆர். தாஸ், பஸ்லூல் ஹக், அப்பாஸ் தியாப்ஜி, காந்தி, கே.சந்தனம் ஆகியோர் கொண்ட ஒரு விசாரணைக் குழுவை நியமித்தது. அக்குழு ஜாலியன் வாலாபாக் படுகொலை பற்றிய திடுக்கிடும் தகவல்களை திரட்டி தந்தது. அதுமட்டுமல்ல. காங்கிரஸ் குழு ரௌலட் சட்டம் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும்ளூ படுகொலைக்கு காரணமாக இருந்த கைக்கேல் ஓட்வியர், தளபதி டயர் ஆகியோர் பதவி விலக வேண்டும்ளூ ராணுவ சட்டத்தை செயல்படுத்தி தல அதிகாரிகள் விசாரிக்கப்பட வேண்டும் போன்ற பரிந்துரைகளையும் செய்தது. மிருகத்தனமான படுகொலைக்கு மறுக்க

முடியாத ஆதாரங்கள் உள்ளதாக கூறியது காங்கிரஸ் குழு.

**ஹண்டர் குழு**

பஞ்சாப் படுகொலையால் இந்தியா முழுவதும் எழுந்த எதிர்ப்பைக் கண்ட செம்ஸ்போர்ட் அரசாங்கம் ஒரு ஒழுங்கின்மை விசாரணைக் குழுவை நியமித்தது. நீதிபதி ஹண்டரை தலைவராக கொண்ட அக்குழு ராணுவ சட்டத்தின் கீழ் பஞ்சாப் அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி விசாரித்து 1920 மே மாதம் அதன் அறிக்கையை சமர்ப்பித்தது. ஹண்டர் விசாரணைக் குழுவிலிருந்த ஆங்கிலேயருக்கும் இந்தியருக்கும் இடையே இருந்த கருத்து வேறுபாடுகள் காரணமாக பெரும்பான்மையினர் அறிக்கை, சிறுபான்மையினர் அறிக்கை என்று இருபகுதிகளாக அறிக்கை தயாரிக்கப்பட்டது.

மாறுபட்ட முடிவுகளை கொண்ட ஹண்டர் குழுவின் அறிக்கையைப் பரிசீலித்து செம்ஸ்போர்டு அரசாங்கம் பஞ்சாபில் நடைபெற்ற பல நிகழ்வுகள் தவிர்க்கப்பட்டிருக்கலாம் என்று கருதியது. எனினும் பிரிட்டி' பாராளுமன்றம் இந்தியாவை காப்பாற்றியதற்காக தளபதி டயரைப் பாராட்டியது! இந்திய விவகாரச் செயலரின் கண்டனத்துக்களான டயர் பதவி விலகினார் எனினும் தளபதி டயர் பஞ்சாபில் சட்டம், ஒழுங்கு, அமைதியை நிலைநாட்டி இந்தியாவை புரட்சியிலிருந்து காப்பாற்றியதாகக் கருதினர் அவர்! ஆனால் உண்மையில் அவர் பழைய ஏகாதிபத்திய ஆதிக்க ஆட்சிக்கு முடிவுரை எழுதினர். பஞ்சாப் படுகொலை காந்தி ரௌலட் சத்தியாகிரகத்தை விட பெரிய போராட்டத்தை நடத்த காரணமாக இருந்தது. அவரது இந்திய பரிசோதனை தொடங்கியது. அமிர்தசரஸ் காங்கிரஸ் மாநாட்டுக்கு பிறகு காந்தி ஒத்துழையாமை இயக்கத்தை துவங்கினார்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

6. சத்தியகிரக சபை எங்கு எப்போது தோற்றுவிக்கப்பட்டது?
7. ஜாலியன் வாலாபக் படுகொலை நடைப்பெற்ற நாள்?
8. ஜாலியன் வாலாபாக் படுகொலைக்கு உத்தரவிட்ட ஆங்கில ஜெனரல் யார்?
9. ஜாலியன் வாலாபக் படுகொலையை அடுத்து இராணுவச் சட்டம் பிறபிக்கப்பட்ட இடங்கள்?
10. ஜாலியன் வாலாபாக் படுகொலை மற்றும் இராணுவ அத்துமீறல்களை விசாரணை செய்யபட்ட குழு?

## 11.6 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

1. சர் சையத் அஹமத்கான்
2. 1888
3. கர்சன் பிரபு
4. அன்னிபெசண்ட் அம்மையார்
5. அன்னிபெசண்ட் அம்மையார்
6. பம்பாயில் 1919ல் தோற்றுவிக்கப்பட்டது.
7. 1919 ஏப்ரல் 13
8. ஜெனரல் ரெஜினல் டயர்
9. லாகூர் மற்றும் அமிர்தரஸ்
10. ஹண்டர் குழு

## 11.7 சுருக்கவுரை

- ஆங்கிலக் கல்வியைப் புறக்கணித்ததால் முஸ்லீம்கள் மிகவும் பின்தங்கிவிட்டார்கள் என்பதை உணர்ந்த முதல் முஸ்லீம் தலைவர் சர் சையத் அஹமத்கான் ஆவார்.
- கிழக்கு வங்காள முஸ்லீம்கள் மிகவும் பின்தங்கிய நிலையிலிருப்பதால் புதிய மாநிலப் பிரிவினைமூலம் அவர்கள் நிலையை உயர்த்த முடியும் என்றும் அறிவித்தார்
- முதல் உலகப் போர் நடந்து கொண்டிருக்கும்போதே இந்தியவில் அன்னிபெசன்ட் அம்மையார் தலைமையில் "தன்னாட்சி இயக்கம் உருவெடுத்தது.
- ரௌலட் சட்டம் மனித உரிமைக்கும் நீதிக்கும் உலைவைக்கும் சட்டம் எனக்கருதினர்.

**11.8 முக்கிய வார்த்தைகள்**

- வகுப்பு வாதம்: அது பரந்த சமூகத்தை விட ஒரு சொந்த இனக்குழுவுக்குக் கடமைபட்டு இருக்க வேண்டும் என்பதாகும்
- கொடியது: இது வெளிப்படையான தீமை அல்லது சமயத்தில் ஈடுபாடு அற்றவர் என்பதாகும்.

**11.9 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்**

**குறு விடை வினாக்கள்**

16.அலிகார் இயக்கம் பற்றி சிறுகுறிப்பு வரைக.

17.வங்க பிரிவினையின் விளைவுகள் யாவை?

**18.**தன்னாட்சி இயக்கம் பற்றி எழுதுக.

**நெடு விடை வினாக்கள்**

19. முஸ்லீம் லீக் கட்சி தோன்றிய சூழ்நிலைகளை ஆராய்க.
20. ஜாலியன் வாலாபாக் நிகழ்ச்சிகளுக்கு இட்டுச் சென்ற சூழ்நிலையை விவரி? அதன் விளைவுகள்

**11.10.மேலும் படிக்க**

சந்திரா, பிபின், 2009. நவீன இந்தியாவின் வரலாறு. ஹைத்தராபாத், ஓரியண்ட் பிளாக்வான்ஸ்.

டியூப்-பானர்ஜி, இஷிதா. நவீன இந்தியாவின் வரலாறு. கேம்பிரிட்ஜ், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக அச்சகம்

தாரிக், முகம்மது. 2007. நவீன இந்திய வரலாறு. புது தில்லி: டாடா மெக்ரா-ஹில் கல்வி.

பண்டியோபதியா, ெ'கரா. 2004. பிளாசி முதல் பார்ட்டி வரை: நவீன இந்திய வரலாறு. ஹைதராபாத்: ஓரியண்ட் பிளாக்வான்ஸ்.

சென், S.N. 2006. நவீன இந்திய வரலாறு. புது தில்லி: நியூ ஏஜ் இண்டர்நேஷ்னல்.

## அலகு – 12 காந்திய சகாப்தம்

12.0 அறிமுகம்

12.1 நோக்கங்கள்

12.2 ஒத்துழையாமை இயக்கம்

12.3 சட்டமறுப்பு இயக்கம்

12.4 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

12.5 சுருக்கவுரை

12.6 முக்கிய வார்த்தைகள்

12.7 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்

12.8 மேலும் படிக்க

## 12.0 அறிமுகம்

இந்திய வரலாற்றில் 1919 ஆம் ஆண்டு குறிப்பிடத்தகுந்த ஆண்டாகும். முதலாம் உலகப்போர் முடிந்து அமைதி நிலவியது. ஆங்கிலப் பேரரசினை எதிர்த்து காந்தியடிகளின் தலைமையில் இந்திய மக்களின் புதிய முறையிலான போராட்டத்தினை தொடங்கினர். இதுவரை உலக மக்கள் அறிந்திராத ஆயுதங்களான, சத்தியம், அகிம்சை, ஒத்துழையாமை முதலியவற்றை பயன்படுத்தினர். இப்புதுமையான ஆயுதங்களை வழங்கி இந்தியர்களின் தியாக உணர்வினை வளர்த்து ஊக்கியவர் மோகன் தாஸ் கரம்சந்த் காந்தியாவார். தன் தியாகத்தினால், அன்பினால், தன்னலமற்ற உண்மை வழியினால் நேர்மையினால் தன்பால் ஈர்த்துத் தன்னுடைய சுட்டு விரல் அசைவில் இந்தியரை இயக்கி இங்கிலாந்து பேரரசினை பணியச் செய்தார். மகாத்மா, சுதந்திர இந்தியாவின் தந்தை எனவும் போற்றப்பட்டார்.

உலகப்போரின் முடிவில் இந்தியா தன்னாட்சி உரிமை பெறும் என்னும் நம்பிக்கை பொய்த்தது. 1919 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட மான்டேகு செம்ஸ்போர்ட் சீர்திருத்தங்கள் காந்தியின் நம்பிக்கையை தகர்த்தனர். இந்தியருக்கும் ஆங்கிலேய ஆட்சியாளர்களுக்குமிடையே உறவை பாதிக்கும் வகையில் அமைந்தது ஆங்கில அரசினால் வெளியிடப்பட்ட அடக்குமுறை சட்ட முன்வரைவான ரௌலட் சட்ட முன் வரைவு குறிப்பிடத்தக்கதாகும்.

## 12.1 நோக்கங்கள்

இந்த அலகை நீங்கள் படித்து முடித்த பின்பு உங்களால்,

- காந்தியின் தலைமையில் இந்திய சுதந்திரப் போராட்டத்தை விளக்க முடியும்
- ஒத்துழையாமை இக்கத்தின் தாக்கங்களை பற்றி அறிந்துக் கொள்ளமுடியும்
- காந்தி இர்வின் ஒப்பந்ததின் முக்கியத்ததுவத்தை அறிந்துக்கொள்ளமுடியும்
- சட்ட மறுப்பு இயக்கத்தில் காந்தியின் பங்கினை விளக்க முடியும்

## 12.2 ஒத்துழையாமை இயக்கம்

### காந்தியின் தலைமை

ஒத்துழையாமை இயக்கத்துக்கு காந்தி தலைமை தாங்கி நடத்தியதற்குப் பல காரணங்கள் இருந்தன. முதல் உலகப் போரின்போது இந்திய மக்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு காலத்தால் செய்த உதவியைப் பாராட்டிய காந்தி ஆங்கிலேய அரசாங்கம் விசுவாசியாக இருந்தார். ஆனால் செய்நன்றி கொன்ற பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் ரௌலட் சட்டத்தைக் கொண்டுவந்தபோது காந்தி அரசாங்க விரோதி ஆனார். பஞ்சாப் படுகொலையும், அதன்பின் பிறப்பிக்கப்பட்ட ராணுவச் சட்டமும் அதன் பிரயோகமும், ஹண்டர் குழுவின் ஒரு சார்பு அறிக்கையும், பிரிட்டிஷ் அரசாங்கம் துருக்கி சுல்தானுக்கு இழைத்த நம்பிக்கைத் துரோகமும் காந்தியை அதிர்ச்சி அடையச் செய்தன. அவர் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நீதி நியாய உணர்வின் மீது வைத்திருந்த நம்பிக்கை அவநம்பிக்கையாயிற்று. எனவே அண்ணிய அநீதிகளுக்கு நியாயம் காணும் பொருட்டு ஒத்துழையாமை இயக்கத்துக்குத் தலைமை தாங்கி நடத்தத் துணிந்தார் காந்தி.

**தீர்மானமும் திட்டமும்**

காந்தி தீர்மானித்த ஒத்துழையாமை இயக்கத்துக்கான திட்டத்தை 1920 மார்ச் 10 ஆம் தேதி நாகபுரியில் கூடிய காங்கிரஸ் மாநாடு ஏற்றுக்கொண்டது. காந்தியின் ஒத்துழையாமை திட்டம் இரண்டு கூறுகளைக் கொண்டது 1) எதிர்மறை திட்டம். இத்திட்டத்தில் சட்டமன்ற, நீதிமன்ற, போலீஸ், இராணுவ, கல்வி நிலைய, விதேசிப் பொருள், வரிப் புறக்கணிப்பு ஆகியவை அடங்கும். 2) உடன்பாட்டுத் திட்டம். இதில் சுதேசி, கதர், தீண்டாமை ஒழிப்பு, ஆதாரக்கல்வி, சமுதாய சமத்துவம், இந்து-முஸ்லிம் ஒற்றுமை போன்ற ஆக்கப்பூர்வமான நிர்மாணத் திட்டங்கள் அடங்கும்.

**புறக்கணிப்புப் போராட்டம்**

காந்தியின் ஒத்துழையாமைத் திட்டத்தின்படி 1920 நவம்பரில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தல் புறக்கணிக்கப்பட்டது. அதேபோன்று ஆயிரக்கணக்கான வழக்குரைஞர்கள் தங்களது தொழிலை துறந்து நீதிமன்றங்களை புறக்கணித்தனர். பல வழக்குகள் பஞ்சாயத்து நீதிமன்றங்களில் தீர்த்துக் கொள்ளப்பட்டன. மாணவர்கள் பள்ளிகளையும், கல்லூரிகளையும் புறக்கணித்தனர். இந்தியாவின் பல பகுதிகளில் தேசியப் பள்ளிகளும், கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் திறக்கப்பட்டன. வெளிநாட்டுத் துணிகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. கதர் நூற்பும், நெய்தலும் ஊக்குவிக்கப்பட்டன. புறக்கணிப்புப் போராட்டத்தில் மிகவும் தீவிரமானதாகக் கருதப்பட்டது காவல்துறை மற்றும் ராணுவப் பணிப்புறக்கணிப்பாகும். இந்தியாவிற்கு வருகை தந்த கன்னாட் கோமகன் கருப்புக்கொடி காட்டிப் புறக்கணிக்கப்பட்டார்.

**சுதேசித் திட்டம்**

இவற்றைச் செய்யக்கூடாது என்று கட்டளையிட்ட காந்தி இவற்றைச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தத் தவறவில்லை. ஒத்துழையாமை இயக்கத்தின் போது சுதேசி நிர்மாணத் திட்டம் இந்தியா முழுவதும் பின்பற்றப்பட்டது. வங்கப் பிரிவினையை எதிர்த்து துவக்கப்பட்ட சுதேசி இயக்கத்தை பின்பற்றி காந்தி நிர்மாணத் திட்டத்தை சமூக-பொருளாதார நலத் திட்டமாக மட்டும் கொள்ளாமல் சமயக் கடமையாகவும் கருதினார். நாடு முழுவதும் கதர் நூற்றலும், கதராடை நெய்தலும், கதர் ஆடை அணிவதும். ஊக்குவிக்கப்பட்டன. கதர் நூற்பதும், கதராடை அணிவதும் நாட்டுப்பற்று மிக்க ஆறப்போராட்ட போராட்ட வீரர்களின் சின்னங்களாயின. அரசியல் தொண்டர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், வியாபாரிகள், ஆதரவாளர்கள், அனுதாபிகள் ஆகியோர் அனைவரும் கதர் நூல் நூற்பதையும், கதராடை அணிவதையும் தேச தொண்டாகக் கருதிப் பெருமைப்பட்டனர். கிராமக் குடிசைத் தொழில்கள் வெகுவாக ஊக்குவிக்கப்பட்டன. சுதேசிக் கடைகள் திறக்கப்பட்டன. நிதி சேர்த்து கதர் இயக்கம் விரிவுபடுத்தப்பட்டது.

**வன்முறை நிகழ்ச்சிகள்**

அமைதியாக நடைபெற்ற ஒத்துழையாமை இயக்கத்தின் போது ஆங்காங்கே வன்முறை நிகழ்ச்சிகள் வெடித்தன. எடுத்துக்காட்டாக 1921 மார்ச் மாதம் பஞ்சாப் நான்கானா குருத்துவாராவில் 195 சீக்கிய யாத்திரிகள் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இது நான்கானா படுகொலை என்று அழைக்கப்படுகிறது. அசாமில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களிடையே அமைதியின்மை ஏற்பட்டு வன்முறையில் முடிந்தது. கல்கத்தாவில் போக்குவரத்து தொழிலாளர்கள் வன்முறை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சென்னையில் பக்கிங்காம் மில் தொழிலாளர்களிடையே வன்முறை நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. அதேபோன்று ஐக்கிய மாகாணத்தில்

கிசான் கிளர்ச்சிகள் துப்பாக்கிச்சூட்டில் முடிந்தன. தமிழ்நாட்டில் கள்ளுக்கடை மறியலின்போது வன்முறை நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. இத்தகைய வன்முறை நிகழ்ச்சிகளுக்கெல்லாம் சிகரம் போலிருந்தது மலபார் மாப்பிள்ளைகள் கிளர்ச்சி காந்தி தலைமையில் மேற்கொள்ளப்பட்ட அகில இந்திய ஒத்துழையாமை இயக்கத்தில் குறிப்பிடத்தக்க சமுதாய அமைப்புகளும், பிராந்திய அமைப்புகளும் அவர்களின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகப் பங்கேற்றன. இவற்றையும் கணக்கில் எடுத்துக் கொண்டதால்தான் ஒத்துழையாமை எழுச்சியை சரியாக புரிந்துகொள்ள முடியும்.

**மாப்பிள்ளை கிளர்ச்சி**

**கிளர்ச்சிக்கான காரணம்**

மலபார் மாப்பிள்ளைகள் 19 ஆம் நூற்றாண்டில் தங்கள் விவசாய வாழ்வாதாரத்தை கெடுத்த வெளிநாட்டினர் மற்றும் கேரள உயர்வகுப்பைச் சேர்ந்த நம்பூதிரிகள் மற்றும் நாயக்கர்களுக்கு எதிராக வன்முறைக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இப்பரஸ்பர விரோத குரோத எரிமலை 1921 இல் நடைபெற்ற ஒத்துழையாமை இயக்கத்தின் போது வெடித்து சிதறியது. கிலாபத் இயக்கத்தின் போது எழுச்சி பெற்ற மலபார் மாப்பிள்ளை முஸ்லீம்கள் 1921 பிப்ரவரி 16 ஆம் தேதி அவர்களது தலைவர்கள் கைது செய்யப்பட்ட போது கிளர்ந்தெழுந்து ஆர்ப்பாட்டம் செய்தனர். பாதுகாவல் படையினர் மசூதியை உடைத்து உள்ளே சென்று ஆயுதங்கள் பதுக்கி வைக்கப் பட்டுள்ளனவா என்று பார்வையிட்டு மூன்றுபேரைக் கைது செய்தது எரிகின்ற நெருப்பில் எண்ணெயை ஊற்றியது போன்றாயிற்று.

**வன்முறை நிகழ்ச்சிகள்**

மாப்பிள்ளைகள் கிளர்ச்சி பல வன்முறை நிகழ்ச்சிகளில் முடிந்தது. அரசாங்க கருவூலங்கள் உடைக்கப்பட்டன. ஆவணங்கள் கொளுத்தப்பட்டன. கட்டடங்கள் தீக்கிரையாயின. காவல் நிலையங்கள் உடைக்கப்பட்டன. பல ஐரோப்பிய கொல்லப்பட்டனர். கிலாபத் ராஜ்ஜியம் ஏற்படுத்தப்பட்டதாகவும், அலிமுஸ்லிமியர் அதன் அரசர் என்றும் பிரகடனப்படுத்தப்பட்டது. எரநாடும், வள்ளுவநாடும் அரசர்களாக அறிவிக்கப்பட்டன. கிலாபத் கொடி பறக்கவிடப்பட்டது. நாணயமும் வெளியிடப்பட்டது.

ஒத்துழையாமை ஒரு பகுதியாக செயல்பட்ட கிலாபத் இயக்கம் மலபார் மாப்பிள்ளைகள் கிளர்ச்சியாக உருமாற்றம் அடைந்தது. அதுமட்டுமல்ல. அரசாங்கத்துக்கு எதிராக துவங்கப்பட்ட அக்கிளர்ச்சி இந்துக்களுக்கு எதிராக திரும்பியது! நாட்டுப் பற்றைவிட சமயவெறியே மலபார் முஸ்லீம்களை ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்க செய்தது என்பது தெளிவாயிற்று. இந்து முஸ்லீம்களிடையே பரஸ்பர வெறுப்பும், அவநம்பிக்கையும், காழ்புணர்வும் வளர்ந்தது தென்னிந்தியாவில் ஒத்துழையாமை இயக்கம் பலமிழக்கக் காரணமாயிற்று. காந்தி கட்டிய இந்து-முஸ்லீம் ஒற்றுமையை கனவுக் கப்பல் மலபார் மாப்பிள்ளைகள் கிளர்ச்சி என்ற பாறை மீது மோதி நொறுங்கியது.

கிலாபத் ராஜ்யம் அமைக்கப்பட்டதிலிருந்து இந்துக்களும் முஸ்லீம்களுக்குமிடையேயான இடைவெளி அதிகரித்தது. கிளர்ச்சிக்கார மாப்பிள்ளைகள் இந்துக்களை கட்டாய மதமாற்றம் செய்தனர்ளூ பலர் கொலை செய்யப்பட்டனர். கோயில்கள் இடிக்கப்பட்டன. இந்து பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். சொத்துக்கள் சூறையாடப்பட்டன. அரசாங்கம் ராணுவத்தின் துணைகொண்டு மலபார் மாப்பிள்ளைகள் கிளர்ச்சியை முற்றிலுமாக முறியடித்தது. கிளர்ச்சி முறியடிக்கப்பட்டாலும் அது ஒத்துழையாமை இயக்கத்திற்கு ஏற்படுத்திய களங்கம் கரையவில்லை.

கிலாபத் இயக்கத்திற்குக் கொடுத்த ஆதரவு விவேகமானதா என்பதை சந்தேகித்தார் ராஜாஜி. மாப்பிள்ளைகள் கிளர்ச்சி ஒத்துழையாமை இயக்கத்துக்கு பின்னடைவை ஏற்படுத்தியதோடன்றி இந்து முஸ்லீம் ஒற்றுமையின் மீது சந்தேகத்தை ஏற்படுத்தியதாகக் குறிப்பிட்டுள்ளார் காந்தி.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

1. எந்த ஆண்டு ஆங்கில பேரசினை எதிர்த்து காந்தியடிகள் போரட்டத்தினை தொடங்கினார்?
2. காந்தியடிகள் இந்தியா தன்னாட்சி பெறும் என்னும் நம்பிக்கையை தகர்த்த அறிக்கை என்ன?
3. 1920ல் காங்கிரஸ் மாநாடு காந்தியின் எத்திட்டத்தை ஏற்றுக்கொண்டது.
4. 1921 ல் நடைபெற்ற ஒத்துழையாமை இயக்கத்தின் போது ஏற்பட்ட கிளர்ச்சியின் பெயர் என்ன?

## 12.3 சட்ட மறுப்பு இயக்கம், 1929

1928 ஆம் ஆண்டு கல்கத்தா காங்கிரஸ் மாநட்டில் டொமியன் அந்தஸ்து பெற்ற தன்னாட்சியே காங்கிரஸின் குறிகோள் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 1919 ஆம் ஆண்டு இறுதிக்குள் இந்தியாவிற்கு டொமினியன் அந்தஸ்தை ஆங்கில அரசாங்கம் அளிக்க தவறினால் முழு சுதந்திரப் போராட்டத்தை தாமே தலைமை தாங்கி நடத்துவதாக காந்தி உறுதியளித்தார். ஆனால் பொறுமை இழந்த சிலரின் செயல்களால் பல இடங்களில் கிளர்ச்சிகள் தோன்றின. இச்சூழ்நிலையில் 1929 அக்டோபர் மாதம் இந்தியாவிற்கு டொமினியன் அந்தஸ்து வழங்குவதே ஆட்சியாளர்களின் கொள்கையென இர்வின் பிரபு அறிவித்தார். ஆனால் நேரு போன்ற இளந்தலைவர்கள் சிலர் நிபந்தனைகளின் பேரிலே அதை ஏற்க விரும்பினர்.

இத்தகைய நெருக்கடியான சூழ்நிலையில் ஜவகர்லால் நேருவின் தலைமையில் காங்கிரஸ் மாநாடு லாகூரில் கூடியது. மாநாட்டின் முடிவில் முழு சுதந்திரம் அடைவதே இந்தியரின் குறிக்கோள் என்று அறிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நாடு முழுவதிலுமோ அல்லது சில இடங்களிலோ வரிகொடா போராட்டம் உள்ளிட்ட சட்ட மறுப்பு திட்டத்தை தகுந்த பாதுகாப்புடன் மேற்கொள்வதற்கு அகில இந்திய காங்கிரஸ் சபைக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. 1930 ஜனவரி 26-ஆம் தேதியை விடுதலை நாளாக கொண்டாட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

1930 ஜனவரி 26 ம் தேதி நாடு முழுவதிலும், நகரங்களிலும் கிராமங்களிலும் பூரண சுதந்திர நாள் கொண்டாடப்பட்டது. பூரண சுதந்திர தீர்மானம் சிலருக்கு மன நிறைவு தரவில்லையென்றாலும் பொதுவாக நாட்டு மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியது. விடுதலை பெறுவதற்கு மக்களிடம் மறைந்து கிடந்த ஆர்வத்தை அந்த தீர்மானம் வெளிப்படுத்தியது. அதே சமயத்தில் காந்தியடிகள் பதினொரு செயற்கூறுகளை இர்வின் பிரபுவிடம் வைத்தார். மதுவிலக்கு, உப்புவரி நீக்கம், நிலவரி குறைப்பு, படைச் செலவு குறைப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை, ஆயுதங்கள் வைத்திருப்பதற்கு அனுமதி சீட்டு அளித்தல் போன்ற கோரிக்கைகள் அவற்றில் அடங்கின. ஆனால் அவருக்கு அரசாங்கம் அளித்த பதில் தீவிர அடக்குமுறை தான். எனவே கோபமும் அத்திரமும் நிறைந்த சூழ்நிலையில் சபர்மதியில் கூடிய காங்கிரஸ் தலைவர்கள் சட்ட மறுப்பு இயக்கத்தை கூடிய விரைவில் தொடர்வது என்று தீர்மானித்தனர். முழு விடுதலை கிடைக்கும் வரை அமைதி வழியில் நம்பிக்கை உள்ளவர்கள் சட்ட மறுப்பு வரை போராட்டத்தில் ஈடுபட வேண்டும் என்றும், காந்தியடிகள் தலைமையில்

அதனைத் தொடங்குவது என்றும் தீர்மானம் செய்யப்பட்டது.

**சத்தியாகிரகம்: (தண்டி யாத்திரை:1930)**

சட்ட மறுப்பு இயக்கத்தில் முதலாவதாக உப்புச்சட்டத்தை மீறுவது என்று காந்தியடிகள் முடிவு செய்தார். உப்புச் சத்தியாகிரகம் என்று அழைக்கப்படும் இந்த உப்பு சட்ட மறுப்பை அவர் தேர்ந்தெடுத்தற்குக் காரணம் உப்பின் மீதான வரி ஏழைமக்களை அதிகமாக பாதித்தது. உப்பு வரியை நீக்குவதற்குப் போராட்டம் என்றால் அது பாமரருக்கு எளிதில் புரியும். எனவே அவர்கள் அதிகமாகப் போராட்டத்தில் பங்கு கொள்வர். தனது திட்டத்தைப் பற்றி இர்வின் பிரபுவுக்கு அறிவித்த காந்தியடிகள் தங்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை என்றால் போராட்டம் தொடங்கும் என்று எச்சரித்தார். ஆனால் ஆட்சியாளர்களிடமிருந்து ஆணவமான பதிலே வந்தது. உப்பு சட்டத்தை மீறுவது தண்டிக்கப்படக்கூடிய குற்றம் என்று பதில் எழுதினார். இர்வின் பிரபு. எது வந்தாலும் உப்புச் சட்டம் மறியல் செய்வது உறுதி என்று காந்தி அறிவித்தார்.

தனது சபர்மதி ஆசிரமத்திலிருந்து தண்டி என்ற கடற்கரை ஊருக்கு தனது சகாக்களுடன் நடந்தே வந்து சட்டத்தை மீறி உப்பு எடுக்க யாத்திரை ஆரம்பித்தார். 1930 மார்ச் 30-ம் தேதி வரலாற்றுச் சிறப்பு மிக்க "தண்டி யாத்திரை ஆரம்பமானது. போகும் வழியெல்லாம் மக்களின் பேராதரவு அளித்தனர். இந்த யாத்திரை பற்றிய செய்தி நாடெங்கிலும் பரவியது. 24 நாட்களுக்குப் பிறகு ஏப்ரல் 6ம் தேதி தண்டி யில் சட்டத்தை மீறி உப்பு எடுத்தனர். அதை தொடர்ந்து நாட்டின் பல பகுதிகளிலும் உப்புச் சட்டத்தை மக்கள் பெருமளவில் மீறத் தொடங்கினர். இதைக்கண்ட ஆங்கில அரசு அடக்கு முறையை கட்டவிழ்த்து விட்டது. காந்தி கைது செய்யப்பட்டு புகழ்பெற்ற ஏரவாடா சிறையில் வைக்கப்பட்டார். காந்தியின் வேண்டுகோளுக்கிணங்க சட்ட மறுப்பு போராட்டம் தீவிரமாக நடைபெற்றது.

திருமதி சரோஜினி நாயுடுவின் தலைமையில் தர்சனா" என்ற இடத்தில் உப்புக் கிடங்கை சூறையாடும் போராட்டம் நடந்தது. அப்போராட்டத்தை நேரில் கண்ட வெப் மில்லர் (wah Milier) என்ற அமெரிக்க பத்திரிக்கையாளர் விவரிக்கும் செய்தி நம் இரத்தத்தை உறைய வைத்துவிடும். இக்காட்சியை காந்தி திரைப்படத்தில் நாம் காணலாம் ஆயுதம் இன்றி அணி அணியாக சென்ற ஆயிரக்கணக்கான தொண்டர்களை, ராணுவ வீரர் அடித்து நொறுக்கினார்கள். தாக்கும் போது தொண்டர்கள் தடுக்க கூட இல்லை. இந்த கொடூரமான காட்சியை தாம் வேறெங்கும் கண்ட தில்லை என்று மில்லர் கூறுகிறார். தர்சன்னாவைப்போல் பல தர்சனாக்கள் அடக்க, அடக்க, சட்ட மறுப்பு இயக்கம் வீறுகொண்டெழுந்தது. பெண்கள் வீறு கொண்டெழுத்தனர். ஜவகர்லால் நெரு கைது செய்யப்பட்டார். அடக்குமுறையை அவிழ்த்து விட்டு ஆட்சியாளர்கள் அக்கிரமங்கள் புரிந்து அதே சமயத்தில் அமைதியான சட்ட மறுப்பு போராட்டத்துடன் மக்கள் பல வன்முறை செயல்களிலும் ஈடுபட்டனர். நாடே கொந்தளிப்பில் மூழ்கியது. இதற்கிடையில் சமரசத்திற்கான முயற்சிகளும் நடைபெற்றன.

**காந்தி இர்வின் ஒப்பந்தம்**

1930 நவம்பர் 12-ம் தேதி சைமன் குழுவின் அறிக்கை பற்றி விவாதிப்பதற்கு முதல் வட்டமேஜை மாநாடு கூட்டப்பட்டது. ஆனால் காங்கிரஸ் சட்ட மறுப்பு இயக்கத்தின் முழுமூச்சுடன் ஈடுபட்டிருந்தாலும் காங்கிரஸ் தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்ததாலும் முதல் வட்டமேசை மாநாட்டில் காங்கிரஸ் பிரதிநிதிகள் யாரும் கலந்து கொள்ளவில்லை. எனவே மாநாட்டில் எந்த இறுதியான முடிவும்

எடுக்கப்படவில்லை இதற்கிடையில் காங்கிரசுக்கும் அரசாங்கத்திற்குமிடையே சமரசம் ஏற்படுத்தும் முயற்சி தீவிரமடைந்தது. எரவாடா சிறையில் இருந்த காந்தி மூன்று நிபந்தனைகளின் அடிப்படையில் சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்தி விட தயார் என்று அறிவித்தார்.

சுதந்திர அடிப்படையில் அரசியலமைப்பை உருவாக்கும் முயற்ச்சியில் முதல் வட்டமேஜை மாநாடு ஈடுபட வேண்டும். உப்புக்சட்டங்களை விலக்க வேண்டும்ளூ போராட்டம் தொடர்பாக சிறையில் வைக்கப்பட்டவர்களை விடுதலை செய்ய வேண்டும் ஆகியவையே அந்த நிபந்தனைகள். இதன் அடிப்படையில் சமரச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. முயற்சிகள் வெற்றியடைந்தன. காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர்களை அரசாங்கம் விடுதலை செய்தது. இந்நிலையில் காந்தியும், அரச பிரதிநிதி இர்வின் பிரபுவும் டில்லியில் கூடிப்பேச முன்வந்தனர். நீண்ட பேச்சுவார்த்தைக்குப் பின் சிறப்பு வாய்ந்த காந்தி இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் முக்கிய கூறுகள் பின்வருமாறு:

அ) அரசியல் அமைப்பு பற்றிய பிரச்சனையில் பிரட்டிஷ் அரசின் கொள்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆ) வட்ட மேஜை மாநாட்டில் காங்கிரஸ் கலந்து கொள்வதற்கான வழிகளை மேற்கொள்ள வேண்டும். இ) சட்ட மறுப்பு போராட்டம் நிறுத்தப்பட வேண்டும். ஈ) அன்னியத் துணிகளை ஒதுக்கலாம் என்றாலும் அது ஒரு அரசியல் கருவியாகப் பயன்படுத்தக்கூடாது. உ) மதுக்கடை மறியலில் பலாத்காரம் நிர்பந்தமோ கூடாது. ஊ) சட்ட மறுப்பு போராட்டம் ஒடுக்குவது சம்பந்தமாக பிறப்பித்த ஆணைகளை அரசாங்கம் விலக்கிக் கொள்ளும் எ) சட்ட மறுப்பு சம்பந்தமாக தொடரப்பட்ட வழக்குகளையும் அரசாங்கம் கைவிடும். சட்ட மறுப்பு போராட்டத்தின் போது கைதானவர் விடுதலை பெறுவர் அரசாங்கம் கைப்பற்றிய சொத்துக்களை திரும்ப கொடுக்கும். உப்புச் சட்டங்கள் தொடர்ந்து நடைமுறையில் இருக்குமென்ற போதிலும், சொந்த உபயோகத்திற்காக மக்கள் உப்பு எடுக்கலாம்.

இந்த காந்தி இர்வின் ஒப்பந்தம் விடுதலைப் போராட்டத்தில் ஒரு முக்கிய கட்டமாக அமைந்தது. ஓராண்டுகால தீவிர, இடைவிடாத போராட்டத்திற்குப் பிறகு இந்த ஒப்பந்தம் ஒரு விதமான அமைதிக்கு வழிவகுத்தது. இந்த ஒப்பந்தத்தை தொடர்ந்து சட்ட மறுப்பு இயக்கம் நிறுத்தி வைக்கப்பட்டது. காங்கிரசின் மீதும் மற்ற அமைப்புகள் மீதும் இருந்து தடையை அரசாங்கம் நீக்கியது. நாடு முழுவதும் அமைதி நிலவியது. இவ்வாறு பெருமளவில் ஆரம்பிக்கப்பட்ட சட்டமறுப்பு போராட்டம் தனது குறிக்கோளான முழு விடுதலையை அடையாமலேயே ஒய்ந்து என்றாலும், நாட்டு மக்களிடையே அரசியல் உணர்வை வளர்த்து, அதுவரையில் கனவிலும் காணமுடியாத அளவுக்கு நாட்டு விடுதலைக்காக போராடும் ஆர்வத்தையும் திறமையையும் அது வளர்த்தது

**இரண்டாவது வட்டமேசை மாநாடு. சட்ட மறுப்பு இயக்கம்:**

1931-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7-ம் தேதி இரண்டாம் வட்ட மேஜை மாநாடு லண்டனில் கூட்டப்பட்டது. அதில் காந்தி கலந்து கொண்டார். இந்த மாநாட்டில் இந்தியாவின் ஒரே பிரதிநிதியாக இருக்கும் காங்கரசின் கோரிக்கைகளை ஏற்க வேண்டும் என்று காந்தி வலியுறுத்தினார். மத்தியிலும், மாநிலத்திலும் முழுப்பொறுப்பாட்சி வேண்டுமென்றும் நிதி பாதுகாப்பு வெளிதாட்டுறவு போன்றவற்றிலும் கூட்டாட்சி அரசாங்கத்திற்கு முழு உரிமை வேண்டுமென்றும் கோரினார். ஆனால் இந்த மாதாட்டில் வகுப்பு வாதப் பிராச்சனைதான் பெரிதும் விவாதிக்கப்பட்டது. இந்தியாவின் அடிப்படை பிரச்சனையான அரசியல் முன்னேற்றத்தினைப் பொறுத்த ஆசியாவின் எந்த முக்கியமான முடிவும் எடுக்கப்படவில்லை. இந்த மாநாட்டிலிருந்து காந்தி எமாற்றத்துடனே

திரும்பினார். இரண்டாவது வட்ட மேஜை மாநாடு அதிகமாக எதுவும் சாதிக்க முடியாமல் போனதற்கு முக்கியக் காரணம். இந்தியாவிலிருந்து சென்ற பிரதிநிதிகளிடையே இணக்கம் இல்லாததேயாகும். மேலும் உண்மையான அதிகாரத்தை இந்தியரிடம் விட்டுக்கொடுக்க பிரிட்டி' பிற்போக்குவாதிகள் தயக்கம் காட்டியது மற்றொரு காரணமாகும்.

**சட்டமறுப்பு இயக்கம் மீண்டும் ஆரம்பம் (1932)**

காந்தி வட்ட மேஜை மாநாடு முடிந்து இந்தியாவிற்கு வந்ததும் நிகழ்ச்சிகள் வேகமாக நடைபெற துவங்கின. அரசாங்கம் சூரத் உத்திரபிரதேசம், வங்காளம், வடமேற்கு எல்லைப் பகுதிகளில் நடைபெற்ற கிளர்ச்சிகளை கடுமையாக அடக்கியது. ஜவஹர்லால் நேருவும் புருஷோத்தம் தாஸ் தாண்டனும் சிறை வைக்கப்பட்டனர். அப்போது தலைமை ஆளுநராக இருந்த வெல்லிங்டன் பிரபுவின் நோக்கம், "இப்படி கெடுபிடியாக நடந்து கொண்டால் காங்கிரஸ் சட்ட மறுப்பு இயக்கத்தை தொடரும். அதை வைத்து அடக்கு முறையால் விடுதலை இயக்கத்தை அழித்துவிடலாம் என்பதாகும். அரசாங்கம் நேர்மையற்ற கொடுமையான அடக்க முறையைப் பின்பற்றினால் வன்முறையற்ற சட்ட மறுப்பு போராட்டம் தொடரும் என்று காந்தி எச்சரித்தார். அந்த போராட்டத்தை ஒடுக்குவதற்கு அரசாங்கமும் அவசரகால அதிகார மேலாணை, சட்டவிரோத தூண்டுதல் மேலாணை, சட்டவிரோத கூட்ட மேலாணை போன்றவைகளை பிரகடனப்படுத்தியது.

எனவே 1932 ஜனவரி 4-ம் தேதி சட்ட மறுப்பு போராட்டம் காந்தியின் தலைமையில் தொடரப்படும் என்ற அறிவிக்கப்பட்டது அன்னிய துணி கடைகள், மதுக்கடைகள், பிரிட்டி' பொருள் விற்பனை நிலையங்கள் ஆகியவை முன் மறியல் செய்வதே போராட்டத்தின் பொதுக்கூறாக இருந்தது. சில இடங்களில் வரி கொடா போராட்டம் சௌக்கிதார், வரி மறுப்பு, வனச்சட்டங்களை மீறதல் போன்றவையும் மேற்கொள்ளப்பட்டன. அனுமதியற்ற செய்தி ஏடுகள், துண்டு அறிக்கைகள் ரகசியமாக மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன ஓரிரு வன்முறைச் செயல்களில் கிளர்ச்சியாளர் ஈடுபட்டனர் என்றாலும் பொதுவாக போராட்டம் அமைதி வழியிலேயே நடந்தது.

ஆனாலும் இந்த சட்ட மறுப்பு போராட்டத்தை ஒடுக்குவதற்கு அரசாங்கம் கேவலமான, மிருகத்தனமான அடக்கு முறைகளை பின் பற்றியது. காந்தி உட்பட பல தலைவர்களும், தொண்டர்களும் சிறையிலடைக்கப்பட்டனர். அரசியல் கைதிகளை கொடுமைப்படுத்துதல், மறியல் செய்யும் தொண்டர்களை தடி கொண்டு அடித்தல், கிராமங்களில் இராணுவவீரர்களைத் தங்கச் செய்து மக்களை அச்சுறுத்துதல் ஆகிய கொடுஞ் செயல்களை செய்தனர் ஆட்சியாளர்.

**சட்ட மறுப்பு இயக்கத்தின் முடிவு:**

இவ்வாறு கொடிய அடக்கு முறைகளுக்கிடையே சட்ட மறுப்பு போராட்டம் நடைபெற்று வந்த அதே நேரத்தில் சிறை வைக்கப்பட்டிருந்த காந்தி சிறையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அறிவித்தார். இதற்கு காரணம் தீண்டத்தகாதவர்கள் என்று கருதப்பட்ட வகுப்பாருக்கு தனி வாக்குகிமை வழங்கும் பிரச்சனையாகும். தாழ்த்தப்பட்ட வகுப்பினரை இந்துக்களிடமிருந்து பிரிக்கும் கொள்கையை எதிர்த்தார். ஆனாலும் வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் பற்றிய அரசாங்கத்தின் முடிவை வகுப்பு வாரி தீர்வு (Communal Award) என்ற பெயரில் ராம்சே மாக்டொனால்ட் 1932 ஆகஸ்ட் 16ல் வெளியிட்டார். இதனைக் கண்டு மனம் நொந்த காந்தி இத்தகைய தீர்ப்பு மாறும் வரையில் உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அறிவித்தார். எனவே அரசாங்கம் தனது முடிவை மாற்றி

தாழ்த்தப்பட்டவர்கள் மற்ற இந்துக்களுடன் பொதுத் தொகுதியில் போட்டியிடலாம் என்று அறிவித்தது. இதனால் ஐந்தாவது நாளிலே தனது உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார்.

இவ்வாறு காந்தியடிகள் அரசியல் பிரச்சினையை ஒதுக்கி விட்டு தாழ்த்தப்பட்டோரின் நலனில் முழு கவனம் செலுத்திய போதிலும் சட்ட மறுப்பு இயக்கத்தை காங்கிரஸ் தொடர்ந்து நடத்தி வந்தது. ஆனால் சிறையிலிருந்து விடுதலையடைந்த காந்தி சட்ட மறுப்பு போராட்டத்தை நிறுத்திக் கொள்ளுமாறு காங்கிரஸ் தலைவரான ஆனேவுக்கு அறிக்கை மூலம் வேண்டுகோள் விடுத்தார். சட்டமறுப்பு இயக்கத்தில் தான் நம்பிக்கை இழந்துவிட்டதாலும், அரசின் அடக்குமுறை காரணமாக சட்டமறுப்பாளர் வேறு பல ரகசிய வன்முறை வழிகளை பின்பற்ற தொடங்கிவிட்டனர் என்பதாலும், சத்தியாகிரகத்தை யாரும் புரிந்து கொள்ளவில்லையாதாலாதரம், அரிஜன முன்னேற்றத்தில் முழுக்கவனம் செலுத்த சட்ட மறுப்பு இயக்கம் தடையாக இருந்தால் அதனை நிறுத்தி விடுவதாக காந்தி அறிவித்தார்.

இவ்வாறு பெரும் போராட்டமாக ஆரம்பித்த சட்ட மறுப்பு இயக்கம் தனது குறிக்கோளை அடையாமலேயே முடிவடைந்தது. தண்டியாத்திரை தொடர்ந்த போது கடைசி சட்ட மறுப்பாளர் உள்ளவரை இப்போராட்டம் தொடரும் என்று அறிவித்த காந்தியே அதனை கைவிடுமாறு அறிவித்தார். சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்தியதற்கு விட்டல் பாய் படேல், சுபா‘ சந்திரபோஸ் போன்ற தலைவர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். போராட்டம் உச்சகட்டத்தை அடைந்த போது நிறுத்தப்பட்டதால், தொண்டர்களிடையேயும், மக்களிடையேயும் ஒருவித ஏமாற்ற உணர்ச்சியும், மந்த நிலையும் ஏற்பட்டது.

ஆனால் 1930-33 வருடங்களில் நடைபெற்ற சட்ட மறுப்பு போராட்டத்தால் ஆட்சியாளரின் உண்மை உருவம் உலகிற்குத் தெரியவந்தது. அதுமட்டுமல்ல நாட்டு விடுதலைக்காக இந்திய மக்கள் துன்பங்களை ஏற்கவும், தியாகங்களை செய்யவும் தயங்கமாட்டார்கள் என்பதையும் இது தெளிவாக எடுத்துக் காட்டியது. இந்த போராட்டத்தில் நேரடியாக பயன் ஏற்படாமல் போனாலும், இதன் விளைவாக அரசாங்கம் அரசியல் முன்னேற்றத்திற்கான சில சலுகைகளை வழங்க முன்வந்தது குறிப்பிடத்தக்கது.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

5. காங்கிரஸ் மாநாட்டில் எந்த குறிக்கோளை தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது?
6. பூரண சுதந்திர நாள் என கொண்டாடப்பட்ட நாள் எது?
7. தண்டி யாத்திரை எந்த ஆண்டு காந்தியடிகள் மேற்கொண்டார்?
8. முதல் வட்ட மேஜை மாநாட்டில் எக்குழுவின் அறிக்கையை விவாதிப்பதற்கு கூட்டப்பட்டது?
9. இரண்டாவது வட்ட மேஜை மாநாடு எங்கு நடத்தப்பட்டது?
10. சட்ட மறுப்பு மீண்டும் தொடங்கப்பட்ட ஆண்டு?

## 12.4 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

1. 1931
2. 1931 செப்டம்பர் 7
3. ஒத்துழையாமை இயக்க திட்டம்
4. மாப்பிள்ளை கிளர்ச்சி

5. டொமியன் அந்தஸ்து பெற்ற தன்னாட்சி
6. 1930 ஜனவரி 26
7. 1930 மார்ச் 30
8. சைமன் குழுவின் அறிக்கை
9. இலண்டன்
10. 1932

## 12.5 சுருக்கவுரை

- ஆங்கிலப் பேரரசினை எதிர்த்து காந்தியடிகளின் தலைமையில் இந்திய மக்களின் புதிய முறையிலான போராட்டத்தினை தொடங்கினர். இதுவரை உலக மக்கள் அறிந்திராத ஆயுதங்களான, சத்தியம், அகிம்சை, ஒத்துழையாமை முதலியவற்றை பயன்படுத்தினர்.
- காந்தி தீர்மானித்த ஒத்துழையாமை இயக்கத்துக்கான திட்டத்தை 1920 மார்ச் 10 ஆம் தேதி நாகபுரியில் கூடிய காங்கிரஸ் மாநாடு ஏற்றுக்கொண்டது.
- 1921 மார்ச் மாதம் பஞ்சாப் நான்கானா குருத்துவாராவில் 195 சீக்கிய யாத்திரிகள் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இது நான்கானா படுகொலை என்று அழைக்கப்படுகிறது.

## 12.6 முக்கிய வார்த்தைகள்

- சட்ட மறுப்பு: நியாமற்றது என்று கருதப்படும் சில சட்டங்களுக்கு இணங்க மறுப்பதே ஒரு அமைதியான அரசியல் எதிர்ப்பு வடிவம் என்று பொருள்படும்.
- தீவிரவாதம்: இது அரசியல் அல்லது சமூக மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு தீவிர பிரச்சாரத்தை பயன்படுத்தும் கொள்கை அல்லது நடவடிக்கையை குறிக்கிறது.

## 12.7 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்

### குறு விடை வினாக்கள்

1. மாப்பிள்ளை கிளர்ச்சிக்கான காரணங்களை எழுதுக.
2. தண்டி யாத்திரை பற்றி சிறுகுறிப்பெழுதுக.
3. சட்ட மறுப்பு இயக்கத்தின் முடிவை பற்றி ஆராய்க.

### நெடு விடை வினாக்கள்

4. ஒத்துழையாமை இயக்கம் தோன்றுவதற்கான காரணங்கள் மற்றும் விளைவுகளை தெளிவாக எழுதுக.
5. சட்ட மறுப்பு இயக்கம் தோன்றுவதற்கான காரணங்கள் மற்றும் விளைவுகளை பற்றி கட்டுரை வரைக.

## 12.8 மேலும் படிக்க


சந்திரா, பிபின், 2009. நவீன இந்தியாவின் வரலாறு. ஹைத்தராபாத், ஓரியண்ட் பிளாக்வான்ஸ்.

டியூப்-பானர்ஜி, இஷிதா. நவீன இந்தியாவின் வரலாறு. கேம்பிரிட்ஜ், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக அச்சகம்

தாரிக், முகம்மது. 2007. நவீன இந்திய வரலாறு. புது தில்லி: டாடா மெக்ரா-ஹில் கல்வி.

பண்டியோபதியா, ெ'கரா. 2004. பிளாசி முதல் பார்ட்டி வரை: நவீன இந்திய வரலாறு. ஹைதராபாத்: ஓரியண்ட் பிளாக்வான்ஸ்.

சென், S.N. 2006. நவீன இந்திய வரலாறு. புது தில்லி: நியூ ஏஜ் இண்டர்நேஷ்னல்.

குறிப்புகள்

**அலகு – 13 வட்ட மேஜை மாநாடுகளும், வெள்ளையனே வெளியேறு இயக்கமும்**


13.0 அறிமுகம்

13.1 நோக்கங்கள்

13.2 வட்ட மேஜை மாநாடுகள்

13.3 தனிநபர் சத்தியாக்கிரகம்

13.4 வெள்ளையனே வெளியேறு இயக்கம்

13.5 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

13.6 சுருக்கவுரை

13.7 முக்கிய வார்த்தைகள்

13.8 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்

13.9 மேலும் படிக்க

## 13.0 அறிமுகம்

இந்தியா விடுதலையை நோக்கி பல போராட்டங்களில் ஈடுப்பட்டது. அதன் காரணமாக ஆங்கிலேயர்கள் மக்களுக்குள் அமைதியை நிலை நாட்டும் வகையில் வெவ்வேறு காரணங்களால் மூன்று வட்ட மேஜை மாநாடுகள் கூட்டப்பட்டது. ஆனால் இந்த வட்ட மேஜை மாநாடுகளால் இந்திய மக்களுக் எந்த ஒரு நன்மையும் ஏற்படுத்தாமல் முடிவுற்றது. இந்த அலகில் வட்ட மேஜை மாநாடுகள் மற்றும் தனிநபர் சத்தியாகிரகம், வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் தோற்றம் அதனால் ஏற்பட்ட தாக்கம் மற்றும் இவ்வியக்கம் தோல்வியடைந்ததற்கான காரணங்கள் பற்றி விளக்கமாக காணலாம்.

## 13.1 நோக்கங்கள்

இந்த அலகை நீங்கள் படித்து முடித்த பின்பு உங்களால்,

- வட்ட மேஜை மாநாடுகள் பற்றி அறிந்துக்கொள்ள முடியும்
- தனிநபர் சத்தியாகிரத்தை பற்றி உங்களால் விளக்கி கூற முடியும்
- வெள்ளையனே வெளியேறு இயக்கத்தினை பற்றி விளக்க முடியும்.

## 13.2 வட்ட மேசை மாநாடுகள்

### முதல் வட்ட மேசை மாநாடு (1930)

1930, நவம்பர் 12 ல் சைமன் குழு அறிக்கைக்குப் பின் சீர்திருத்தங்கள் குறித்து விவாதிக்கும் பொருட்டு இலண்டனில் இராம்சே மாக்டொனால்டு தலைமையில் முதல் வட்டமேஜை மாநாடு கூடியது. இந்திய சுதேசி அரசுகளிலிருந்து 16 பிரதிநிதிகளும், இங்கிலாந்து அரசியல் கட்சியிலிருந்து 16 பிரதிநிதிகளும் இந்தியாவில் இருந்து பல கட்சிகளைச் சார்ந்த 57 பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். காங்கிரஸ் கலந்து கொள்ளவில்லை. அகில இந்திய கூட்டாட்சி என்பது அரசு மையச் சட்டமன்றத்திற்குப் பொறுப்புள்ளதாக விளங்குவது. மாநிலங்களில் இரட்டையாட்சி ஒழிக்கப்படுவது ஆகிய மூன்று அடிப்படைக் கொள்கைகளை இங்கிலாந்து அரசு ஏற்றது. காங்கிரஸ் சட்டமறுப்பு இயக்கத்தில் கலந்து கொண்டதால் இதில் பங்கேற்கவில்லை . 1931 ஜனவரி 21 ல் அலகாபாத்தில் கூடிய காங்கிரஸ் செயற்குழு இம்மாநாட்டின் முடிவை ஏற்க வில்லை.

### காந்தி - இர்வின் உடன்பாடு (1931)

வட்டமேசை மாநாட்டில் பங்கேற்று இந்தியா திரும்பியவர்கள், காங்கிரசை தன் முடிவை மறுபரிசீலனை செய்யும்படியும், அரசப்பிரதிநிதி இர்வின் பிரபுவைச் சந்திக்கும்படியும் வேண்டினர். இர்வின் பிரபு காந்தியடிகளுக்கு கடிதம் எழுதவே இருவரும் பிப்ரவரி 17 இல் சந்தித்தனர். மார்ச் 5, 1931 இல் காந்தி - இர்வின் உடன்பாடு ஏற்பட்டது. இவ்வுடன்பாட்டின்படி இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ளகாங்கிரசு முடிவு செய்தது.

### இரண்டாவது வட்டமேசை மாநாடு (1931)

இரண்டாவது மாநாடு கூட்டப்பெறுகையில் கன்சர்வேடிவ் கட்சியின் தேசிய அரசு இராம்சே மாக்டொனால்டுவைத் தலைவராக கொண்டு உருவாயிற்று. இரண்டாவது மாநாடு 1931 செப்டம்பர் 7 இல் தொடங்கியது. காங்கிரசின் ஒரே பிரதிநிதி செப்டம்பர் 12-ல் இலண்டன் வந்து சேர்ந்தார். இந்தியாவிற்கு விடுதலை அளிக்க வேண்டும் என்றும் மத்தியிலும் மாநிலத்திலும் முழுப் பொறுப்பாட்சி வேண்டுமென்றும், நிதி பாதுகாப்பு முழு

உரிமை வேண்டும் என்று வலியுறுத்தினார். அரசப் பிரதிநிதிக்குச் சில குறிப்பிட்ட நலன்களைப் பாதுகாக்க சிறப்பதிகாரம் இல்லை என்றார். பிரிட்டிஷ் காமன் வெல்த்திலிருந்து பிரிந்து செல்லும் உரிமை இந்தியாவிற்கு வேண்டுமெனவேண்டினார்

இந்த மாநாட்டில் வகுப்புவாதம் பிரச்சனை தான் பெரிதும் விவாதிக்கப்பட்டது. எனினும், அனைத்து வகுப்பினரும் ஏற்றுக்கொள்ள கூடிய திட்டம் ஒன்றை உருவாக்க இயலவில்லை. சிறுபான்மையோர் பிரச்சனைக்குத் தீர்வு காண ஜின்னாவின் விடாப்பிடியான கொள்கையும், இந்தியச் செயலாளர் சாமுவேல் ஹோர் முதலானோர் நடவடிக்கைகளும் தடையாயிருந்தன. இந்தியாவில் அரசியல் முன்னேற்றம் தான் அடிப்படைப்பிரச்னை, அனால் அப்பிரச்னையைப் பொருத்தமட்டில் முதல் வட்ட மேஜை நாடு முடிந்தபோது என்ன நிலைமை இருந்ததோ அதே நிலைமை நீடித்தது. இம்மாநாடு பயனில்லா வகையில் இந்தியப் பிரதிநிதிகளிடையே கருத்தொற்றுமை இன்மையால் முடிந்தது.

**முன்றாவது மாநாடு (1932)**

மூன்றாவது வட்ட மேஜை மாநாடு 1932 நவம்பர் 17 இல் கூடியபோது காங்கிரஸ் இதில் பங்கேற்க்கவில்லை. லோதியன், பெர்சி, டேவிட் முதலான குழுக்களின் அடிப்படையில் மைய நிறுவனம் பற்றி ஆய்ந்திட இந்த மாநாடுகூட்டப் பெற்றது. இம்மூன்று குழுக்களின் ஆய்வுப் பொருள்கள் வாக்குரிமை, கூட்டாட்சி நிதி, மாநிலங்கள் குறித்த ஆய்வினை மேற்கொள்ளுதல் ஆகும். கூட்டாட்சி மேலவைக்குத் தேர்தல், மாநில சட்டமன்றங்கள், வாயிலாக நடத்துதல் முதலானவை முடிவு செய்யப் பெற்றன. இம்மாநாடு 1932 டிசம்பர் 24ல் இந்தியர்களுக்கு எந்த நம்பிக்கையும் ஊட்டாமல் முடிவுற்றது.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

1. முதல் வட்ட மேஜை மாநாடு யருடைய தலைமையில் கூடப்பட்டது?
2. காந்தி - இர்வின் உடன்பாடு எந்த ஆண்டு நடைப்பெற்றது?
3. இரண்டாவது வட்ட மேஜை மாநாடு கூட்டப்பட்ட ஆண்டு?
4. இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டில் பெரிதும் விவாதிக்கப்பட்ட பிரச்சனை எது?
5. மூன்றாவது வட்ட மேஜை மாநாடு எப்போது கூடப்பட்டது?

## 13.3 தனிநபர் சத்தியாகிரகம்

அடக்குமுறை தீவிரமாகவே நாட்டில் இயக்கம் ஒருவாறு மந்தமடைந்தது. இதைப் பார்த்து தனிப்பட்ட சட்ட மறுப்புக்கு காந்தியடிகள் அனுமதி வழங்கினார். ஒவ்வொருவரும் கைதாகும் வரை சளைக்காது சேவைசெய்து கொண்டே இருக்கவேண்டும் என்று அவர் தனிப்பட்ட சட்டமறுப்பின் பெருமையை எடுத்துக் கூறினார். பின்னால் காந்தியடிகளும் சட்ட மறுப்பு செய்து தண்டிக்கப்பட்டார். தமிழகத்தைச் சேர்ந்த அனைத்து மாவட்டங்களிலும் பல பெண்கள் பங்கு கொண்டு சிறை சென்றனர். 1940 நவம்பர் திங்கள் 21ஆம் நாள் ருக்மணி லட்சுமிபதி சத்தியாக்கிரகம் நடத்தியமையால் ஓராண்டு காலம் சிறைத்தண்டனை பெற்றார். மதுரையில் கே.பி.சானகிஅம்மாள் இரண்டாம் உலகப் போருக்கெதிராகப் பிரச்சாரம் செய்தபோது கைதானார். மேலும்ளூ மதுரையைச் சேர்ந்த சொர்ணம்மாள் மற்றும் செல்லம்மாள் பொதுக் கூட்டங்களில் சொற்பொழிவாற்றியமைக்காகக் கைது செய்யப்பட்டுச் சிறை வைக்கப்பட்டனர். அவர்களைப் பின்பற்றி மதுரையில் அகிலாண்டத்தம்மாள், லட்சுமிகாந்தன்பாரதி, திருமதி. சௌந்தரம் ராமசந்திரன், திருமதி. கிருஷ்ணசாமி, திருமதி. ராமசாமி ஆகியோர் சிறை சென்றனர்.

குமாரமங்கலத்து சமீந்தாரினி இராதாபாய் சுப்பராயன் உலகப்போருக்கெதிராக எட்டு பக்கங்களில் தட்டச்சு செய்யப்பட்ட

பிரசுரங்களை மக்களிடையே விநியோகித்துக்கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்டார்.

தூத்துக்குடியைச் சேர்ந்த சி.ஆர். சாரதாம்பாள் அம்மாள் மற்றும் கரூரைச் சேர்ந்த பியாரி பீபி, ஆகியோர் இச் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டதற்காகக் கைது செய்யப்பட்டுச் சிறை வைக்கப்பட்டனர். சரஸ்வதி பாண்டுரங்கம் ஆறு மாத சிறைத்தண்டனை அடைந்து வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். அதனால் அவருடைய இரண்டு வயது மகளையும் ஆறு மாத மகனையும் இழந்தார்

## 13.4 வெள்ளையனே வெளியேறு இயக்கம்: 1942

### இரண்டாம் உலகப்போரும் விடுதலைப் போராட்டமும்:

1939-ல் இரண்டாவது உலகப் போர் ஏற்பட்டது. இப்போரில் ஜெர்மனிக்கு எதிராக இங்கிலாந்து இறக்கியது. இந்தியாவின் வைசிராய் நாட்டு மக்களுக்கு விடுவித்த செய்தியில் நீதி, ஒழுக்கநெறி விடுதலை ஆகியவற்றின் சார்பாக நின்று இங்கிலாந்து போரிட முற்பட்டுள்ளது என்றும், எனவே இந்தியா தன்னால் இயன்றது அனைத்தையும் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இவ்வாறு இங்கிலாந்துடன் இந்தியாவும் போரில் இழுக்கப்பட்டது. இந்திய மாகாணங்களில் ஆட்சி செய்துவந்த காங்கிரஸ் அமைச்சரவைகளையும் இந்திய மக்களையும் கலக்காமல் இந்தியாவைப் போரில் ஈடுபடுத்தியது காங்கிரஸ் தலைவர்கட்குப் பிடிக்கவில்லை. இதனைக் கண்டித்து ஏழு மாகாணங்களில் செயல்பட்டு வந்த காங்கிரஸ் அமைச்சரவைகள் பதவி விலகின. அதன்பின் “காங்கிரஸ் மகாசபை“ ஆங்கில ஏகாதிபத்தியத்தை ஒழிப்பது என்றும், அதுவரையிலும் தற்காலிக தேசிய அரசை இந்தியாவில்ஏற்படுத்த உறுதியளித்தால் தாங்கள் பிரிட்டி‘ அரசுக்கு ஒத்துழைப்பு அளிப்பதாகக் கூறியது.

இதற்கு வைசிராய் லின்லித்கோ பிரபு 1910 ஆகஸ்ட் 8ம் தேதி இந்தியர்களை தமது நிர்வாக சபையில் அனுமதிக்க உரிமையும், யுத்ததிர்க்குப்பின் ஒரு அரசியலமைப்பை ஏற்படுத்த தற்போதை ஏற்பாடுகள் செய்வதாகவும், யுத்தத்திற்காக ஏற்படுத்தப்படும் ஆலோசனைக் குழுவில் இந்தியர்களை அனுமதிப்பதாகவும் உறுதியளித்தார். அதுவே ஆகஸ்ட் திட்டம் எனப்படுகிறது. இந்த உறுதி மொழிகள் காங்கிரஸ் மகாசபையைத் திருப்திப்படுத்த முடியவில்லை எனவே காந்தியின் தலைமையில் மீண்டும் சட்டமறுப்பு இயக்கத்தை 1940-ல் அக்டோபரில் காங்கிரஸ் ஆரம்பித்தது. இதற்கு எதிராக லின்லித்கோ பிரபு தீவிரமான அடங்கு முறையை மேற்கொண்டார். வினோபா பாவே. நேரு உட்பட 20,000-க்கும் மேற்பட்டவர்கள் தண்டனையடைந்தனர்.

### கிரிப்ஸ் தூதுக்குழு :

இந்தகைய சூழ்நிலையில் உலகப் போரில் ஆங்கிலேயர்களுக்கு எதிராக ஜப்பான் மேலும், மேலும் வெற்றிகளை அடைந்த பர்மாவைக் கைப்பற்றி இந்திய எல்லையோரம் வரை அவர்கள் படை நெருங்கி விட்டன. இவ்வாறு போர் நெருக்கடி தீவிரமானதாலும், நட்பு நாடுகளின் வற்புறுத்தலின் விளைவாகவும், இந்தியர்களின் ஒத்துழைப்பை பெறுவதற்காக ஸ்டாபோர்டு கிரிப்ஸ் (Satford Grippa) என்பவரை பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் அனுப்பிவைத்தார். 1940 மார்ச் 23-ம் தேதி கிரிப்ஸ் தூதுக்குழு இந்தியா வந்தது. 1942-ல் லின்லித்கோ பிரபு வெளியிட்ட ஆகஸ்ட் திட்டம் உறுதிமொழிகளை மீண்டும் வலியுறுத்தியது கிரிப்ஸ் தாதுக்குழு. அத்துடன் யுத்த முடிவில் இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்து தருவது உறுதியளிப்பது. அதாவது உடனடியாக எந்த மாறுதல்களையும் ஏற்படுத்த ஆங்கில அரசினர் ஆயத்தமாக இல்லை. எனவே கிரிப்ஸ் தூதுக்குழுவின் முயற்சிகள் தோற்றன.

ஆங்கில அரசின் எதிர்காலத் திட்டங்களையும் அதன் உறுதி மொழிகளையும் நம்புவதற்கு மக்கள் தயாராக இல்லை என்பதையே இது காட்டியது. போரில் இங்கிலாந்து தோற்று விட்டால் .... என்ற கேள்வியும் எழுந்தது. எனவே மக்களின் மனநிலையைப் பிரதிபலிக்கும் விதமாக காந்திஜி கிரிப்ஸ் திட்டம் பற்றி கூறினார். ”மூழ்ச் கொண்டிருக்கும் வங்கியின் மீது பிந்திய தேதியிட்டு எழுதப்பட்ட காசோலை கிரிப்ஸ் திட்டம் என்றார்.

**வெள்ளையனே வெளியேறு தீர்மானம்:**

1942 ஆகஸ்ட் 8-ம் தேதி பம்பாயில் காங்கிரஸ் மகாசபை கூட்டப்பட்டது. அதில் ஆங்கில ஆட்சிக்கு எதிராக மக்கள் போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டும் என்ற தீர்மானமும், “வெள்ளையர்கள் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டும்’ என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டன. ஆனால் அரசாங்கம் சும்மா இருக்கவில்லை. அந்நியப் படையெடுப்பின் ஆபத்து இருந்துபோது, உள்நாட்டிலும் புரட்சி எற்பட்டால் தங்களுக்குப் பாதகமாகப் போய் விடும் என்று கருதி கடுமையான நடவடிக்கைகளை எடுக்க ஆரம்பித்தது. தீர்மானம் நிறைவேறிய அன்று இரவே காந்திஜி, செயற்குழு உறுப்பினர்கள் உட்பட தேசியத் தலைவர்களைக் கைது செய்தது. காங்கிரஸ் கட்சி சட்டவிரோதமென அறிவிக்கப்பட்டது.

தலைவர்கள் கைது செய்யப்பட்ட செய்தி நாடெங்கிலும் காட்டுத் தீ போல பரவியது. மக்கள் கட்டுங்கடங்காத பெருங்கூட்டமாகக்கூடிகதவடைப்பு, மறியல்களில் ஈடுபட்டனர். வேலை நிறுத்தங்கள், ஊர்வலங்கள் நடத்தப்பட்டது. பல இடங்களில் கலவரங்களும், நாசவேலைகளும் நடந்தன. ரயில் நிலையங்கள், அஞ்சலகங்கள், காவல் நிலையங்கள் தீக்கிரையான. இவ்வாறு வெள்ளையனே வெளியேறு இயக்கம் நாடு முழுவதும் பயங்கர கொந்ததளிப்பை ஏற்படுத்தியது. இவைகளுக்கு எதிராக அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுத்தது. 1000 பேர் கொல்லப்பட்டனர். 1800 பேர் விசாரனையின்றி தண்டிக்கப்பட்டனர். மொத்தம் 60000 பேர் சிறையிலடைக்கப்பட்டார். இந்த நிகழ்ச்சிகள் 1945-ம் ஆண்டு வரை நீடித்தாலும் இப்புரட்சி அடக்கப்பட்டுவிட்டது.

தோல்வி : இந்த வெள்ளையனே வெளியேறு இயக்கம் தோல்வி அடைந்ததற்கு பல காரணங்களை கூறலாம்.

1. காந்தியும் பிற எல்லாத் தலைவர்களும் உடனடியாக கைது செய்யப்பட்டதால் தலைமை ஏற்று நடத்த தலைவர்கள் இல்லாமல் போய்விட்டனர்.
2. தலைவர்கள் கைது செய்யப்பட்டு விட்டால் அதற்கான மாற்றுத்திட்டமும் தயார் செய்யப்படவில்லை.
3. ஆங்கிலேயர்கள் தங்கள் சக்தி முழுவதையும் பயன்படுத்தி போராட்டத்தை நசுக்க முயலுவார்கள் என்று சிந்திக்காமல் இந்த இறுதிப் போராட்டத்தை மக்கள் மீது திணித்தது தவறு.
4. ஆயுத பலமும் பொருள் வசதியும் போராட்டக்காரர்களிடம் இல்லை. ஒருங்கிணைந்து செயல்பட இயலாமல் போய்விட்டது.
5. மாணவர்கள் குடியானவர்கள், நடுத்தர வகுப்பினரே புரட்சியில் ஈடுபட்டனர். அறிவாளிகளும், உயர் மட்டத்தில் இருந்தவர்களும் கம்யூனிசப் பிடியிலிருந்த தொழிலாளர்களும் இதில் கலந்து கொள்ளவில்லை.
6. பெருவாரியான முஸ்லீம்கள் இதில் கலந்து கொள்ளாதது மட்டுமல்ல, போராட்டத்திற்கு எதிராகவும் அவர்கள் செயல்கள் அமைத்தன.

7. போராட்டத்தின் போது சமூக விரோதிகள் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு வன்முறைகளில் ஈடுபட்டு தங்கள் சுயநலத்தைப் பெருக்கிக் கொண்டார்கள். எனவே வன்முறை இயக்கமாகவே மாறிவிட்டது.

செய் அல்லது செத்துமடி என்ற அடிப்படையில் போராட்டத்தை ஆரம்பித்தார்கள். செய்யவும் இல்லை செத்து மடியவும் இல்லை“ என்று குறை கூறுகிறார் சு.ஊ. மஜூம்தார். ஆனாலும் 1942 ம் வருட போராட்டம் முழுத்தோல்வி என்பதை நாம் பெற்றுக் கொள்ள முடியாது. பலவகையான அடக்கு முறைகளுக்கு நடுவே தனித்தும், கூட்டமாகவும் பல தீர்ச்செயல்கள் செய்யப்பட்டதும், தாய் நாட்டின் விடுதலைக்காக ரத்தம் சிந்தவும், உயிரைத் தியாகம் செய்ய தயாராக இருந்தும், இமயம் முதல் குமரி வரை காங்கிரஸின் அறைகூவலை ஏற்று அணி அணியாக மக்கள் போராட்டத்தில் குதித்த விதமும், ஆங்கில ஆதிக்கத்திலிருந்து விடுபட இந்தியா வீறு கொண்டு எழுந்து விட்டது என்பதையே வெளிப்படுத்தின.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

6. தனிநபர் சத்தியாகிரத்தால் ஓராண்டு சிறைதண்டனை பெற்றவர் யார்?
7. வெள்ளையனே வெளியேறு இயக்கம் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?
8. இந்தியர்களின் ஒத்துழைப்பை பெறுவதற்கு பிதமர் வின்ஸ்டன் சர்ச்சில் அனுப்பி வைத்தவர் யார்?
9. கிரிப்ஸ் தூது குழு எப்போது இந்தியா வந்தது?
10. 1942ல் காங்கிரஸ் மகாசபை எங்கு கூட்டப்பட்டது?

## 13.5 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

1. இரான்சே மாக்டொனால்டு
2. 1931
3. 1931
4. வகுப்புவாதம்
5. 1932 நவம்பர் 17
6. ருக்மணி லட்சுமிபதி
7. 1942
8. ஸ்டாபோர்டு கிர்ப்ஸ்
9. 1940 மார்ச் 23ம் தேதி
10. பம்பாய்

## 13.6 சுருக்கவுரை

- 1930, நவம்பர் 12 ல் சைமன் குழு அறிக்கைக்குப் பின் சீர்திருத்தங்கள் குறித்து விவாதிக்கும் பொருட்டு இலண்டனில் இராம்சே மாக்டொனால்டு தலைமையில் முதல் வட்டமேஜை மாநாடு கூடியது.
- வட்டமேசை மாநாட்டில் பங்கேற்று இந்தியா திரும்பியவர்கள், காங்கிரசை தன் முடிவை மறுபரிசீலனை செய்யும்படியும், அரசப்பிரதிநிதி இர்வின் பிரபுவைச் சந்திக்கும்படியும் வேண்டினர்.
- 1940 நவம்பர் திங்கள் 21ஆம் நாள் ருக்மணி லட்சுமிபதி சத்தியாக்கிரகம் நடத்தியமையால் ஓராண்டு காலம் சிறைத்தண்டனை பெற்றார்.
- 1942 ஆகஸ்ட் 8-ம் தேதி பம்பாயில் காங்கிரஸ் மகாசபை கூட்டப்பட்டது. அதில் ஆங்கில ஆட்சிக்கு எதிராக மக்கள் போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டும் என்ற தீர்மானமும், “வெள்ளையர்கள் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டும்’ என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டன.

**13.7 முக்கிய வார்த்தைகள்**

தீர்மானம்: இது ஒரு சட்டமியற்றும் அமைப்பு, குழு அல்லது பிற முறையான கூட்டம் ஆகியவற்றின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்து.
கமி'ன்: ஒரு குறிபிட்ட செயல்பாட்டை கொண்டு அதிகாரபூர்வமாக வசூலிக்கப்படும் ஒரு குழுவையே இது குறிக்கிறது.
தன்னாட்சி: அது சுதந்திரமாகச் செயல்படுவதைக் குறிக்கிறது.

**13.8 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்**

**குறு விடை வினாக்கள்**

1. முதல் வட்ட மேஜை மாநாடு பற்றி குறிப்பு எழுதுக
2. காந்தி இர்வின் உடன்படிக்கை பற்றி குறிப்பு எழுதுக.
3. தனி நபர் சத்தியாகிரகத்தை பற்றி விளக்குக.

**நெடு விடை வினாக்கள்**

4. மூன்று வட்ட மேஜை மாநாடுகள் பற்றி தெளிவாக விளக்குக
5. வெள்ளையனே வெளியே இயக்கம் மற்றும் அதன் விளைவுகளை பற்றி விளக்கமாக எழுதுக.

**13.9 மேலும் படிக்க**

சந்திரா, பிபின், 2009. நவீன இந்தியாவின் வரலாறு. ஹைத்தராபாத், ஓரியண்ட் பிளாக்வான்ஸ்.

டியூப்-பானர்ஜி, இஷிதா. நவீன இந்தியாவின் வரலாறு. கேம்பிரிட்ஜ், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக அச்சகம்

தாரிக், முகம்மது. 2007. நவீன இந்திய வரலாறு. புது தில்லி: டாடா மெக்ரா-ஹில் கல்வி.

பண்டியோபதியா, ெ'கரா. 2004. பிளாசி முதல் பார்ட்டி வரை: நவீன இந்திய வரலாறு. ஹைதராபாத்: ஓரியண்ட் பிளாக்வான்ஸ்.

சென், S.N. 2006. நவீன இந்திய வரலாறு. புது தில்லி: நியூ ஏஜ் இண்டர்நேஷ்னல்.

## அலகு – 14 இந்திய விடுதலையும் பிரிவினையும்

14.0 அறிமுகம்
14.1 நோக்கங்கள்
14.2 நேதாஜி சுபாஷ் சந்திரபோசும் இந்திய தேசிய இராணுவமும்
14.3 முகமது அலி ஜின்னா
14.4 நேரடி நடவடிக்கை நாளி
14.5 விடுதலையும் பிரிவினையும்
14.6 1947 ஆம் ஆண்டு இந்திய விடுதலைச் சட்டம்
14.7 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்
14.8 சுருக்கவுரை
14.9 முக்கிய கருத்துப்படிமங்கள்
14.10 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்
14.11 மேலும் படிக்க

## 14.0 அறிமுகம்

பிரிட்டன் நேச நாடுகளின் ஒரு பகுதி என்பதால், பிரிட்டிஷ் இந்தியா இரண்டாம் உலகப் போரின்போது (1939-1945) இரண்டு மில்லியனுக்கும் அதிகமான தன்னார்வ வீரர்களை அனுப்பியது, கூடுதலாக, பல சுதேச அரசுகள் உடன்படிக்கை அதிகாரத்தை எதிர்த்து நேசநாடுகளின் பிரச்சாரத்திற்கு ஆதரவாக பெரிய நன்கொடைகளை வழங்கின. உலகின் அனைத்து மூலைகளிலும் இந்தியர்கள் போராடினார்கள் ஜெர்மனி மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளில் ரோம்மலுக்கு எதிராகவும் மற்றும் ஆசிய பிராந்தியத்தில் ஜப்பானியர்களுக்கு எதிராகவும் இந்தியாவை ஜப்பானியர்களுக்கு எதிராக பாதுகாத்து, ஆகஸ்ட் 1945ல் ஜப்பானியர்கள் சரணடைந்த போது சிங்கப்பூர் மற்றும் ஹாங்காங் போன்ற பிரிட்டி‘ குடியேற்றத்தை விடுவித்தது. பிரிட்டி‘ போர் முயற்சிகளுக்கு முஸ்லிம் கழகம் ஆதரவளித்த போதிலும், பிரிட்டனுக்கு உதவ வேண்டும் என்ற ஒப்புக் கொள்வதற்கு முன்பே சுதந்திரத்திற்காக காங்கிரசிலிருந்து அதிகரித்து வரும் கோரிக்கை இருந்தது. கிரீடம் மறுக்கப்பட்டது. ஆகஸ்ட் 1942 அன்று இந்திய அரசியல் கட்சி வெள்ளையனே வெளியேறு இயக்கம் அறிவித்தபோது, கட்சித் தலைவர்கள் சிறையிலடைக்கப்பட்டனர். இந்திய புரட்சியாளர்களின் உதவியோடு இந்திய தேசிய ராணுவம் என்று அழைக்கப்பட்ட இந்திய சிறைக் கைதிகள் படையை ஜப்பான் அமைத்தது.

1947 ஆகஸ்ட் 15 அன்று இந்தியா சுதந்திரம் பெற்றது என்றால், நாடு இரண்டாக பிரிக்கப்பட்டு, ஒரு புதிய நாடு பாகிஸ்தான் நடைமுறைக்கு வந்தது. பிரிவினைக்கு அடிப்படைக் காரணம் முற்றிலும் அரசியல் சாரந்தது. முந்தைய பிரிவில் வகுப்பு வாதம் எழுந்ததற்கான காரணங்களை நாம் ஆராய்கிறோம். ஆனால் 1857 கிளர்ச்சி இந்து-முஸ்லிம் பிரிவினைக் குறித்தது என்று பொதுவாகக் கருதப்படுகிறது.

படிப்படியாக, இரு சமூகத்தினரும் தங்கள் தனித்துவமான மத அடையாளங்களை நன்கு அறிந்துள்ளனர் மற்றும் அதன் இறுதி முடிவு பிரிவினையாகும். இத்த அலகில் தேசியவாத ஆர்வலர் ஒரு தனித்துவமான திருப்பத்தை எடுத்துக் கொண்டதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள். இந்திய அரசியல் கட்சியுடன் பொது மக்களும் ஆங்கிலேயர்கள் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டும் என்று விரும்பினார்கள். இறுதியாக சுதந்திரம் அடைந்த பிறகு இந்தியா பிளவுபட்டு பாகிஸ்தான் உருவானது.

## 14.1 நோக்கங்கள்

இந்த அலகை நீங்கள் படித்து முடித்த பின்பு உங்களால்,

- நேதாஜி சுபா‘ சந்திர போஸ் பற்றியும் இந்திய தேசிய இராணுவம் பற்றியும் அறிந்துக்கொள்ள முடியும்
- முகமது அலி ஜின்னவை பற்றி அறிந்துக்கொள்ள முடியும்
- இந்திய விடுதலையும் பிரிவினை பற்றி விவாதிக்க முடியும்
- 1947 ஆம் ஆண்டு இந்திய சுதந்திர சட்டத்தினை பற்றி விளக்க முடியும்.

## 14.2 நேதாஜி சுபாஷ் சந்திர போசும் இந்திய தேசிய இராணுவமும்

### சுபாஷ் சந்திர போஸின் எழுச்சி:

### பணித் துறப்பு

சுபாஷ் சந்திர போஸ் 1897 ஜனவரி 28ஆம் நாள் ஒரிசாவிலுள்ள கட்டாக்கில் பிறந்தார். இவரது தந்தை ஜானகிநாத் போஸ் பிரபல வழக்குரைஞராக இருந்தார். சுபாஷ்போசுக்கு சுவாமி விவேகானந்தர்

ஆன்மீக முன்னுதாரணமாகவும், தேசபந்து சித்தரஞ்சன் தாஸ் அரசியல் முன்மாதிரியாகவும் திகழ்ந்தனர். இந்திய அரசு பணிக்கான (ஐ.சி.எஸ்) தேர்வில் வெற்றி பெற்று அரசாங்க வேலையில் சேர்ந்தார் (1920). அரசாங்க வேலையில் இருந்துகொண்டு பிரிட்டி' ஏகாதிபத்தியத்திற்கு ஒத்துழைப்பதைவிட அந்நிய ஆதிக்கத்தை இதை எதிர்த்து இந்திய விடுதலைக்காகப் போராடுவதே சாலச்சிறந்தது என்று முடிவுசெய்த போஸ் அரசாங்க வேலையை துறந்தார்.

அரசாங்க வேலையை துறந்தார் போராட்டத்தில் பங்கேற்பு அரசாங்கத்திலிருந்து விலகி சுபாஷ்சந்திரபோஸ் காந்தியின் தலைமையின் கீழ் துவக்கப்பட்ட ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்தார் 1921 வங்காளத்தில் சிஆர் தான் முன்னின்று தீவிரமாக நடத்திய அழுத்தத்தால் அன்னியத் துணி மற்றும் அரசாங்க கல்வி நிலைய புறக்கணிப்பு போராட்டத்தில் ஆர்வத்துடன் பங்கேற்றார் சந்திரபோஸ் தாஸ் நடத்திவந்த பிரச்சார இதழின் பத்திரிகை ஆசிரியராகவும் சுதேசிய தேசிய கல்லூரி முதல்வராகவும் பணியாற்றினார் கல்கத்தாவுக்கு வருகை தந்து வேல்ஸ் இளவரசருக்கு எதிராக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் நடத்தியதற்காக கைது செய்யப்பட்டு 6 மாத கால சிறைத்தண்டனை பெற்றார் காந்தி ஒத்துழையாமை இயக்கத்தை தன்னிச்சையாக விலக்கி விலக்கி கொண்டபோது 1905 பிப்ரவரி 12 செயலை கடுமையாக கண்டித்தார் அப்போது அவருக்கு வயது 25

ஜீரக கட்சியில் போஸ் சிறையிலிருந்து விடுதலையான போஸ்ட் சி ஆர் தாஸ் மோதிலால் நேரு துவக்கிய சேராத கட்சியில் சேர்ந்து செயல்பட்டார் வடக்கு வங்காளத்தில் வெள்ள நிவாரண பணி செய்தார் ஸ்ரீராஜ கட்சியின் நாளேடான பார்வேர்டு பத்திரிக்கையின் ஆசிரியராக இருந்தார் தாஸ் கல்கத்தா மாநகராட்சி மன்ற தலைவராக பொறுப்பேற்ற போது அவரது தலைமை செயல் அதிகாரியாக பணியாற்றினார் அகில இந்திய தொழிற்சங்க நடவடிக்கைகளில் பங்கேற்றார்

சி ஆர் தாஸ் தீவிர அரசியலுக்கு அடிமைப்படுத்தப்பட்ட சுபாஷ்சந்திரபோஸ் தனது புரட்சி கருத்துக்களை வசீகரமாக பேசி வந்தார் 1924 அக்டோபர் 24 நாளில் தீவிரவாதிகளை அடக்குவதற்காக அரசாங்கம் பிறப்பித்த அவசர சட்டத்தின் கீழ் சுபாஷ்சந்திரபோஸ் கைது செய்யப்பட்டார் பர்மாவில் உள்ள மண்டல சிறையில் அடைக்கப்பட்டார் சிறையிலிருந்து விடுதலையான போஸ் வங்காள காங்கிரஸ் தலைவராக பொறுப்பேற்றார் சைமன் கமி'ன் புறக்கணிப்பு போராட்டத்தை முன்னின்று நடத்தினார் இந்தியாவுக்கு முழு சுதந்திரம் வழங்கப்படவேண்டும் என்ற காங்கிரஸ் தீர்மானத்தை தீவிரமாக ஆதரித்தார் ஆனால் இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்தை பரிந்துரைத்த நேரு அறிக்கையை கடுமையாக கண்டித்தார் 1928இல் சுபாஷ்போஸ் ஜவர்கலால் நேரு உடன் சேர்ந்து இந்திய சுதந்திர லீக் தோற்றுவித்தார் தீவிர சோசலிச கருத்துக்களால் பெரிதும் கவரப்பட்ட பேசும் நேரத்தை வெகுஜன இயக்கமாக மாற்ற வேண்டும் என்ற முனைப்புடன் செயல்பட்டனர்

**காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி**

1929ஆம் ஆண்டு பகத்சிங்கின் நெருங்கிய நண்பரான ரவிந்திரநாத் சிறையில் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்தார் அவரது உடல் கல்கத்தாவுக்கு கொண்டு வரப்பட்டு பிரம்மாண்ட பேரணி நடத்தப்பட்டது பேரணியில் கலந்துகொண்டு பேசியபோது ஆங்கிலேய ஆட்சியின் அடக்கு முறையை எதிராக வீர உரையாற்றினார் அதற்காக அவருக்கு ஆறு மாதகால சிறைத்தண்டனை அளிக்கப்பட்டது தீவிர நடவடிக்கை எடுக்க போஸ் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டார் 1931ல் விடுதலை ஆனவுடன் அவர் மதுராவில் நடைபெற்ற இளைஞர் மாநாட்டில் கலந்துகொண்டு பிரிட்டிஷாரின் கபட நாடகத்தை கண்டித்து பேசினார் சிறை சென்றார்

கபட நாடகத்தை கண்டித்து பேசினார் சிறை சென்றார். 1932 ஆம்

ஆண்டு சுபாஷ்போஸ் மருத்துவ சிகிச்சைக்காக வியானா அவருக்கு இதழ் பாய் பட்டியலுடன் தொடர்பு ஏற்பட்டது இவரும் சேர்ந்து காங்கிரசை ஒரு தீவிரமான அழைப்பாக மாற்ற வேண்டும் என்ற அறிக்கையை வெளியிட்டனர் ஆயிரத்து தொள்ளாயிரத்தி மூன்றுமே வெளிநாட்டு உதவியுடன் இந்திய விடுதலையை விரைவில் பெற வேண்டும் என்று வலியுறுத்தினார் ஐரோப்பாவிலிருந்து திரும்பிய சுபாஷ்போஸ் 1934 தீவிர முற்போக்கு மனப்பான்மை உடைய காங்கிரஸ்காரர்கள் உடன் சேர்ந்து காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியில் துவக்கினார்

1934 ஆம் ஆண்டு பம்பாயில் துவங்கப்பட்ட காங்கிரஸ் சோ‘லிஸ்ட் கட்சியில் ஜெயப்பிரகா‘ நாராயணன் ஆச்சரிய நரேந்திர தேவ் மீண்டும் ஆசினி நேரு சுபாஷ்சந்திர போஸ் பிரதான பங்கேற்றனர் கட்சியின் கொள்கையில் நான்கு அதில் ஒன்று இந்திய விடுதலைப் போராட்டத்தை தேசிய உணர்வு மிக்க வெகுஜன இயக்கமாக தீவிரப்படுத்த வேண்டும் 2 சோ‘லிஸ்டுகள் காங்கிரஸ் குளிர்ந்து செயல்படவேண்டும் மூணு தேசிய இயக்கம் சோசலிசப் பாதையில் செல்லவேண்டும் 4 பொருளாதாரத் தேவைகளை மையப்படுத்தி விவசாயிகளையும் தொழிலாளர்களையும் ஒன்று திரட்டி ஏற்படுத்தப்படும் அமைப்பு விடுதலைப் போராட்டத்தின் அடித்தளமாக இருக்க வேண்டும் இந்த நோக்கங்களை மனதில் கொண்டு காங்கிரஸ் சோசலிஸ்ட் காங்கிரஸ் தலைமையில் மாற்றம் கொண்டுவர அடைந்தனர். இந்த நோக்கங்களை மனதில் கொண்டு காங்கிரஸ் சோசலிஸ்ட் காங்கிரஸ் தலைமையில் மாற்றம் கொண்டுவர முனைந்தனர்

**பார்வர்டு பிளாக் கட்சி**

**காங்கிரஸ் தலைவர்**

சுபாஷ்சந்திர போஸ் காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியின் குறிக்கோளை அடையும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டார் அவர் 1935 ஆம் ஆண்டு சட்டம் இந்தியாவின் மீது திணிக்கப்பட்டது இச்சட்டத்தின்படி காங்கிரஸ் மாநில அரசாங்கங்களில் பதவி ஏற்பதை எதிர்த்தார் எனினும் 1938ஆம் ஆண்டு காங்கிரஸ் தலைவராக ஒரு மனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார் காங்கிரஸ் தலைவர் பொறுப்பேற்ற போது தனது தீவிரவாத கொள்கைகளையும் கோரிக்கைகளையும் திட்டங்களையும் படிப்படியாக செயல்படுத்த துவங்கினார் இந்தியாவின் திட்டமிட்ட சோசலிச வளர்ச்சிக்காக தேசிய திட்டக் குழு ஒன்று ஏற்படுத்தினார் இடதுசாரி கட்சி நோக்கம் போக்கு காந்தி அவரது வலதுசாரி ஆதரவாளர்களுக்கும் ஏற்படவில்லை

**பதவி விலகல்:**

காங்கிரஸ் வலதுசாரிகளின் எதிர்ப்பையும் மீறி சுபாஷ் சந்திரபோஸ் 1939 ஆம் ஆண்டு நடைபெற்ற காங்கிரஸ் தலைவர் பதவிக்கு பட்டாபி சீதாராமையாவுக்கு எதிராக போட்டியிட்டு 203 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார் பட்டாபியின் தோல்வி தனது தோல்வியை என்று அறிவித்தார் காந்தி 1939 மார்ச் மாதம் நடைபெற்ற திருவிழா காங்கிரஸ் கூட்டத்திற்கு தலைமை தாங்கி போஸ் பிரிட்டி‘ அரசாங்கம் அடுத்த 6 மாதங்களுக்குள் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டும் என்றும் இல்லையா காங்கிரஸ் வெகுஜன இயக்கத்தை துவங்க வேண்டும் என்றும் வலியுறுத்தி பேசினார் மூத்த காங்கிரஸ் தலைவர்கள் காங்கிரஸின் கொள்கைக்கு எதிராக செயல்படுகிறார் என்று குற்றம் சாட்டினார் போஸ் காங்கிரஸ் தலைமை பொறுப்பில் இருந்து விலகிக் கொண்டார். கொள்கைக்கு எதிராக செயல்படுகிறார் என்று குற்றம்சாட்டினார் போஸ் காங்கிரஸ் தலைமை பொறுப்பில் இருந்து விலகிக் கொண்டார்

**பார்வர்டு பிளாக் கட்சி:**

சுபாஷ்போஸ் காங்கிரஸ் தலைவர் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டு ஏறினார். காங்கிரஸை விட்டு விலகவில்லை அவரும் அவரது

ஆதரவாளர்களும் காங்கிரசுக்குள்ளேயே பார்வர்டு பிளாக் என்ற கட்சியை துவங்கினார் 1939 மே இந்த அமைப்பு காங்கிரசுக்குள் இருந்து செயல்படும் தீவிரவாத முன்னேற்றக் கட்சி என்று அறிவித்தார் விவசாயிகளும் தொழிலாளர்களும் இளைஞர்களும் தீவிரவாதிகளும் இவரது அமைப்பில் சேர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார் ராணுவ கட்டுப்பாட்டோடு செயல்பட்டு வெள்ளையரை இந்தியாவை விட்டு வெளியேற வேண்டும் என்று அறைகூவல் விடுத்தார் காந்தியின் இலட்சியவாதமும் நேருவின் உணர்ச்சியை கட்டுப் படுத்த வில்லை காங்கிரஸ் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தது வேண்டும் என்று அறைகூவல் விடுத்தார் காந்தியின் இலட்சியவாதமும் நேருவின் உணர்ச்சியை கட்டுப் படுத்த வில்லை காங்கிரஸ் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தது

**கட்சியின் வளர்ச்சி:**

காங்கிரசை விட்டு விலகி சுபாஷ்போஸ் பார்வர்ட் பிளாக் கட்சியை வளர்ப்பதில் கவனம் செலுத்தினார் 1925இல் சிஆர் தாஸ் இறந்தபின் காங்கிரசின் தலைமைக்கு பெரிய சவாலாக இருந்தது பார்வர்டு கிளாக் தான் என்று குறிப்பிடப் குறிப்பிட்டுள்ளார் சுபாஷ்சந்திரபோஸின் இந்திய தேசிய இயக்கமும் என்ற நூலில் ஆசிரியர் ஹரிஹர தாஸ் பார்வர்டு பிளாக் கட்சி ஆயுதமாகக் கொண்டு பிரிட்டி' ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தை துவக்கினார் போஸ் இரண்டாம் உலகப் போர் ஆரம்பித்த உடன் பிரிட்டி' ஆட்சிக்கு எதிராக போர் இந்தியா முழுவதும் சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொண்டார் பிரிட்டனின் போது முயற்சிக்கு உதவ வேண்டுமென மக்களை கேட்டுக் கொண்டார் பிரிட்டனில் உள்ள நாடுகளில் துணைக்கொண்டு தீவிர தேசிய இயக்கத்தின் மூலம் இந்தியாவில் இந்திய விரைவில் விடுதலை பெற முடியும் என பேசி வந்தார் போஸ் அவருக்கு மக்கள் ஆதரவு அளித்தது

**அரசாங்க அடக்கு முறை**

1940 ஜனவரி 31ஆம் நாள் சுபாஷ் சந்திரபோஸ் அரசாங்கத்தின் தடை ஆணையையும் மீறி கல்கத்தா சிறந்த பூங்காவில் பொதுக்கூட்டம் நடத்தினார் பின்னர் டாக்கா நகரில் பார்வர்டு பிளாக்கின் காலமாக சிறப்பு மாநாட்டை கூட்டினார் 1940 மே 25 அம்மாநாட்டில் 1040 ஜூலை 3ஆம் நாளில் ராசி தொழிலார் தினமாக கொண்டாடுவது என இருட்டறை சாவு நினைவாக கட்டப்பட்ட போல்வது நினைவு சின்னத்தை இடிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது கைது செய்யப்பட்டு டிசம்பர் 5 ஆம் நாள் விடுதலை செய்யப்பட்டு அவரது வீட்டில் காவலில் வைக்கப்பட்டார் 1141 ஜனவரி 26-ஆம் நாள் சுபாஷ்போஸ் மாறுவேடத்தில் வீட்டுக்காவலில் இருந்து வெளியேறி பெ'ாவர் வழியாக ஜெர்மனியின் தலைநகர் பெர்லின் சென்றடைந்தார் 1041 மார்ச் 28

**ஜெர்மனியில் போஸ்**

சுபாஷ்சந்திர போஸுக்கு ஜெர்மனியில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது ஹிட்லரின் வழக்கமாக திகழ்ந்த வெளியுறவுத் துறை அமைச்சராக சிரியா போன்ற சந்தித்துப் பேசினார் ஜெர்மனியில் சுதந்திர இந்திய மையம் அமைத்து செயல்பட அனுமதிக்க பட்டார் அதுமட்டுமல்ல அவர் அசாசின் வானொலி மூலம் நாள்தோறும் தன் திட்டங்களை தொடர்ந்து இந்தியாவுக்கு ஒளிபரப்பினர் 1941 மே 29 நாள் ஜெர்மனியில் அதிபரை சந்தித்து பேசினார் அப்போது அவர் ஜெர்மனியில் இருந்துகொண்டு இந்திய ராணுவ அமைப்பு ஜெர்மன் ராணுவத்துடன் சேர்ந்து மத்திய ஆசியா சென்று வடமேற்கு எல்லையில் இருந்து பிரிட்டி' படையுடன் போரிட வேண்டும் என்றும் அச்சு நாடுகள் இந்திய சுதந்திர பிரகடனத்தை வெளியிட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார் ஹிட்லர் அவரது கோரிக்கைகளை ஏற்று கொள்ளவில்லை இருப்பினும் மேற்கு ஆப்பிரிக்காவில் ஜெர்மனி ராணுவத்தால் பிடிக்கப்பட்ட இந்திய போர்க் கைதிகளை 12 இராணுவ பிரிவுகளை அமைத்து கொள்ள அனுமதிக்கப்

பட்டார் போஸ் 1942 ஜனவரி

சுபாஷ்போஸ் இந்தியா போர் கைதிகளை கொண்ட ஆசாத்தின் பௌல்ஸ் அல்லது இந்தியப் படையினர் தெளிவை ஏற்படுத்தினார் 12 போர் கைதிகளை கொண்டு சிறிதாக துவக்கப்பட்ட அப்படையில் பிரிவு விரைவில் 3 போர் படை பிரிவுகளாக விரிவடைந்து போஸ் முறையான ராணுவ பயிற்சி அசின் தளபதியாக பொறுப்பேற்றார் போஸின் முயற்சியில் வெறுமனே ஜெர்மனியர் பாராட்டி வரவேற்று இன்போஸ்ட் எதிர்பார்த்த அளவுக்கு இட்லரின் ஆதரவு கிடைக்கவில்லை

**இந்திய தேசிய ராணுவம்:**

**ஜப்பானில் போஸ்**

இரண்டாம் உலகப்போரில் ஜப்பான் தூரத்தில் நேச நாட்டு படைகளை தோற்கடித்து உலகை வியப்பில் ஆழ்த்தியது சிங்கப்பூர் ஜப்பான் வசம் வந்தது. 1942 பிப்ரவரி 15 சிங்கப்பூர் விழுந்தது உலகம் என்று இந்திய வரலாற்றில் புதிய சகாப்தத்தை தோற்றுவித்தது என்றும் வர்ணித்தார் போஸ் அவர்கள் ஜெர்மனியில் இருந்து வெளியேறி ஜப்பான் செல்ல தீர்மானித்தாள் ஜப்பானின் துணை கொண்டு இந்தியாவை பிரிட்டனின் பிடியிலிருந்து விடுவித்து விடலாம் என்று நம்பினார் அப்போது ஜப்பானில் வாழ்ந்து வந்த இந்திய புரட்சி தீவிரவாதி ரா' பிஹாரி போஸ் அழைப்பின் பேரில் தூக்கிச்சென்று சுபாஷ்1043 ஜனவரி 13

**ராஷ் பிகாரி போஸ்:**

ராஷ் பிகாரி போஸ் இந்திய தேசிய ராணுவம் தோன்றுவதற்குக் காரணம் காரணகர்த்தாவாக இருந்தார் இவர்கள் வாழ்ந்த இந்தியர்கள் ஒன்றுகூட்டி இந்திய சுதந்திர கழகத்தை துவக்கினார் இவரது தலைமையில் நடைபெற்ற இந்திய சுதந்திர கழகத்தின் காங் காங் மாநாட்டில் மோகன் சிங்கை தளபதியாக கொண்டு இந்திய தேசிய ராணுவத்தை உருவாக்குவது என்று தீர்மானிக்கப்பட்டது காப்டன் மோகன் சிங் பிரிட்டி' ராணுவத்தில் அதிகாரியாக இருந்த ஜப்பானிடமிருந்து மாநாட்டுத் தீர்மானத்தின் படி ஜப்பான் வசம் இருந்த 40 ஆயிரம் இந்திய போர்க் கைதிகளை கொண்டு இந்திய தேசிய ராணுவத்தை சிங்கப்பூர் பூங்காவில் அமைத்தார்.

1943 துவக்கத்தில் டோக்கியோ வந்த சுபாஷ்சந்திரபோஸ் ரா'பிகாரி போஸ் மோகன் சிங் ஆகியோரை சந்தித்து நிலையை நன்கு அறிந்து கொண்டார் பின்னர் சிங்கப்பூர் சென்று போஸ்ட்ஸ் 1,143 ஜூலை 2 ஆரவாரமான வரவேற்பு அளிக்கப்பட்டது அங்குதான் ராஜ்கபூரின் கோஸ்ட் சந்திரபோஸ் இந்திய சுதந்திர கழகத்தின் தலைமை பொறுப்பை கொடுத்து அவருக்கு ஆலோசகராக இருந்தார் பின்னர் போஸின் இந்திய தேசிய ராணுவத்தின் தளபதி பொறுப்பேற்றார் ஆகஸ்ட் 25-ல் இருந்து சுபாஷ்சந்திரபோஸ் நேதாஜி அல்லது தன்னிகரற்ற தளபதி என்று அழைக்கப்பட்டார் நேதாஜி சிங்கப்பூரில் இருந்த படியே டெல்லி நோக்கி போகும் என்று முழக்கமிட்டார் ஒற்றுமை நம்பிக்கை தியாகம் ஆகிய குறிக்கோள்களை முன்வைத்து இந்திய சுதந்திரத்தை மறுசீரமைக்க அதேபோன்று ராணுவ ஒழுங்குடன் கட்டுப்பாட்டுடனும் இந்திய தேசிய ராணுவத்தை மூன்றாக பிரித்து அவருக்கு காந்தி படையணி மகளீர் படையணி பகுதி நேர பயணம் பகுதி என்று பெயரிட்டார் சிங்கப்பூர் வாழ் இந்திய தேசியவாதிகள் பண உதவியும் பொருளுதவி செய்த இந்திய விடுதலை வீரர்களை வெகுவாக ஊக்குவித்தனர்

**சுதந்திர இந்தியாவின் தற்கால தற்காலிக அரசாங்கம்:**

1943 அக்டோபர் 21ல் சிங்கப்பூரில் கேட்ட மண்டபத்தில் சுதந்திர இந்தியாவின் தற்கால அரசாங்கம் அமைக்கப்பட்டது நேதாஜி இந்த அரசாங்கத்தின் பிரதமராக பொறுப்பேற்றார் அமைச்சரவை ஏசிசி

நீதித்துறைக்கும் விளம்பரத்துறை லட்சுமி சுவாமிநாதன் பெண்கள் அமைப்பு முறைக்கும் பொறுப்பேற்றார் ரவீந்திரநாத் தாகூர் எழுதிய தேசிய கீதம் இசைக்கப்பட்டது தற்காலிக அரசாங்கத்தின் செயல்திட்டங்கள் ஆனா ஒன்னு பிரிட்டி'ார் இந்தியாவில் இருந்து வெளியேற்றுவது 2 மக்களின் ஒத்துழைப்போடு இந்தியாவில் அரசின் தேசிய அரசாங்கத்தை அமைப்பது மூன்று அதுவரை தற்காலிக அரசாங்கம் இந்த விவகாரங்களை கவனித்து கொள்வது இந்த இடைக்கால அரசாங்கத்தின் ஜப்பான் ஜெர்மனி இத்தாலி தாய்லாந்து பர்மா சீனா மலேசியா பிலிப்பைன்ஸ் ஆகிய ஒன்பது நாடுகளில் ஆதரித்தனர் ஜப்பான் பிரதமர் டோஜோ ஆதரவை நேதாஜி இருந்தார்

பிரிட்டனுக்கு எதிராக போர்: 1943 அக்டோபர் 23ம் நாள் நேதாஜியின் கீழ் செயல்பட்ட தற்காலி அரசாங்கம் பிரிட்டனுக்கு எதிராக போர் பிரகடணம் செய்தது அதன்பின் நேதாஜி சிங்கப்பூரில் இருந்து டோக்கியோ சென்றார் அக்டோபர் 28 ஜப்பான் பிரதமர் மாநாட்டில் கலந்துகொண்டனர் நவம்பர் 6 அந்த மாநாட்டில்தான் ஜப்பான் பிரதமர் அந்தமான் நிகோபார் தீவுகளில் நேதாஜியிடம் ஒப்படைத்தார் அதன்பின் அந்த மானுக்கு சென்ற நேதாஜி அந்தமானுக்கு சாகிப் என்ற பெயரை நிக்கோபார் என்ற பெயரை சூட்டினார் இடைக்கால அரசாங்கத்தின் தலைமை வகித்த சிங்கப்பூரிலிருந்து ரங்கோலி மாற்றினார்.

இந்திய படையெடுப்பு: 1944 பிப்ரவரி 4ஆம் நாள் நேதாஜி தனது வரலாற்று சிறப்புமிக்க இந்திய படையெடுப்பு ரங்கூனில் இருந்து துவங்கினார் இந்திய தேசிய ராணுவம் இந்தியா பர்மா எல்லையில் பிரிட்டி' படையில் எதிர்ப்பை முறியடித்து இந்தியாவுக்குள் நுழைந்தது மார்ச் 21 இந்திய வீரர்கள் தங்கள் விடுவிக்க நினைத்த தாய்நாட்டு புனித மண்ணில் விழுந்து புரண்டு முத்தமிட்டனர் என்று குறிப்பிட்டுள்ளார் நேதாஜி சுபாஷ்சந்திர போஸ் என்ற நூலின் ஆசிரியர் ரஜாசீதா இந்திய தேசியக்கொடி ஏற்பட்டது தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக

1. சுபாஷ் சந்திர போஸ் பிறந்த ஆண்டு என்ன?
2. சுபாஷ் சந்திர போஸ் எங்கு பிறந்தார்?
3. 1929 ஆம் ஆண்டு சிறையில் உண்ணாவிரதம் இருந்து உயீர் நீத்தவர் யார்?
4. சுபாஷ் சந்திர போஸ் தொடங்கிய கட்சியின் பெயர் என்ன?
5. இந்திய தேசிய இராணுவம் தோன்றுவதற்கு காரணகர்தாவாக இருந்தவர் யார்?

## 14.3 முகமது அலி ஜின்னா

இந்திய தேசியவாதியாகவும், சமயசார்பற்ற தேசிய கொள்கையில் நம்பிக்கை கொண்டிருந்தவருமான முகமது அலி ஜின்னா காங்கிரசின் நோக்கிலும் போக்கிலும் ஏற்பட்ட மாறுபாடுகளைக் கண்டு மனம்மாறி முஸ்லிம் லீக்கை கருவியாகக் கொண்டு முஸ்லீம் தேசியவாத இயக்கத்திற்குத் தலைமை தாங்கி முஸ்லீம்களின் விடுதலைக்காகப் போராடினார். சைமன் கமி'ன் இந்தியாவுக்கு வந்தபோது (1927) ஜின்னா காங்கிரசுடன் ஒத்துழைக்கவில்லை. மோதிலால் நேரு அறிக்கைக்கு மாறாக 14 அம்சத் திட்டத்தை வெளியிட்டார் ஜின்னா (1929). மூன்று வட்டமேஜை மாநாடுகளிலும் (1930-32) இந்து வகுப்புவாதிகளும், முஸ்லீம் வகுப்புவாதிகளும் போட்டி போட்டுக்கொண்டு தங்களது வகுப்புத் தீர்வு (1932) முஸ்லீம் தேசியத்துக்கு ஊக்க மருந்தாகப் பயன்பட்டது. 1937 ஆம் ஆண்டு நடைபெற்றப் பொதுத் தேர்தல் ஜனநாயகத் தேர்தலில் முஸ்லிம் லீக் வெற்றிபெறுவதற்கான வாய்ப்பேயில்லை என்பதை எடுத்துக்காட்டியது.

இத்தேர்தலுக்குப் பின் காங்கிரசுடன் இருந்த தொடர்பை முற்றிலுமாக முறித்துக் கொண்டார். லக்னோ சமரசப் பேச்சு (1937) வெற்றிபெறவில்லை. முஸ்லீம் லீக் காங்கிரஸ் அமைத்த அமைச்சரவைகளில் சேர மறுத்துவிட்டது. காங்கிரஸ் அமைச்சரவைகள் பதவி விலகியது. 1939 டிசம்பர் 22ஆம் தேதியை மீட்பு நாளாகக் கொண்டாட வேண்டும்மென்று இந்திய முஸ்லீம்களுக்குக் கட்டளையிட்டார் ஜின்னா. முஸ்லிம் தேசியவாத எழுச்சிக்கான அழைப்புதான் ஜின்னாவின் கட்டளை.

**தனி தேசத் தீர்மானம்**

1939 ஆம் ஆண்டு இறுதியில் ஜின்னா அகில இந்திய முஸ்லீம்களின் ஒரே பிரதிநிதியாகத் தன்னை உயர்த்திக் கொண்டார். 1940 மார்ச் மாதம் லாகூரில் நடைபெற்ற முஸ்லிம் லீக் மாநாட்டில் இந்திய முஸ்லிம்கள் தனிதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானம் சிறுபான்மையினராயிருந்த இருந்த முஸ்லீம்களைத் தனிதேச குடிமக்களாக்கிவிட்டது. காங்கிரஸ் பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்கு எதிராக அகில இந்திய தேசிய பேரியக்கத்தை நடத்திக் கொண்டிருந்த நேரத்தில் ஜின்னா மாற்றுப் பிரிவினை முஸ்லீம் தேசிய இயக்கத்திற்குத் தலைமை தாங்கினார்.

**பாகிஸ்தான் பிரிவினை**

1940க்கும் 1947க்கும் இடையே நடைபெற்ற நிகழ்வுகள் யாவும் - கிரிப்ஸ் தூதுக்குழு (1942) வெள்ளையனே வெளியேறு இயக்கம் (1942) அமைச்சரவைத் தூதுக்குழு (1946) இடைக்கால அரசாங்கம் (1946) நேரடி நடவடிக்கை நாள் (1946) ஆகிய அனைத்தும் முஸ்லீம் தேசிய இயக்கம் பாகிஸ்தானைப் பெறப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டன. 1947 ஆகஸ்ட் 15 ஆம் நாள் இந்தியாவும் பாகிஸ்தானும் பிரிவினையோடு சுதந்திரம் பெற்றன.

## 14.4 நேரடி நடவடிக்கை நாள்

இடைக்கால அரசாங்கத்தில் சேர மறுத்த ஜின்னா 1946 ஆகஸ்ட் 16 ஆம் தேதியை நேரடி நடவடிக்கை நாளாக (Direct Action Day) அனுசரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அந்நாளை துக்கதின (Black Day) மாகக் கருதப்பட வேண்டும் மென வேண்டுகோள் விடுத்தார். ஆங்கிலேய ஆட்சிக்கெதிராக நேரடி நடவடிக்கை எதையும் மேற்கொள்ளவில்லை. மாறாக இந்துக்கள் மீது புனிதப்போர் (துநாயன) தொடுக்க பட்டது கல்கத்தாவில் பிரம்மாண்டமான ஊர்வலத்தை நடத்தியது முஸ்லிம் லீக். ஏதுமறியா இந்து ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் கொல்லப்பட்டனர். அவர்களுடைய சொத்துக்கள் சூறையாடப்பட்டன. வீடுகள் கொளுத்தப்பட்டன. பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். அரசாங்கம் பாதுகாப்புத் தராமால் இந்துக்கள் திருப்பித் தாக்கினர். கல்கத்தா ரத்தக் களறியாயிற்று. இது கலகமல்லஞ பேயாட்டம் என்று எழுதினார் ஒரு பத்திரிக்கை நிருபர். கல்கத்தா இனக் கலவரத்தில் 10,000 பேர் மாண்டனர். 15,000 பேர் காயமுற்றனர்ஞ 1,00,000 பேர் வீடிழந்தனர். கலவரம் நவகாளி, திப்பேரா போன்ற கிழக்கு வங்காள நகரங்களுக்கும் பரவியது. அங்கிருந்த சிறுபான்மை இந்துக்கள் சொல்லொணாத் துன்பங்களுக்குள்ளாயினர். ஆயிரக்கணக்கான இந்து அகதிகள் பீகாருக்குச் சென்றனர். பீகாரில் இருந்த முஸ்லிம் சிறுபான்மையினர் இந்துக்கள் பழிக்குப் பழி வாங்கினர். இனக் கலவரத்தின் எதிரொலி ஐக்கிய மாகாணத்திலும் பம்பாயிலும் அகமதாபாத்திலும் கூட கேட்டது. நேரடி நடவடிக்கை நாள் மோசமான இனக்கலவர நாளாக முடிந்தது. பீகார் நிகழ்ச்சிகளைக் காரணம்காட்டி ஜின்னா தனது பாகிஸ்தான் கோரிக்கையை உரக்க எழுப்பினார்.

**இடைக்கால அரசாங்கம்**

1946 செப்டம்பர் 2 ஆம் நாள் இடைக்கால அரசாங்கம் (Interim Government) ஜவஹர்லால் நேருவின் தலைமையில் அமைக்கப்பட்டது.

முன் முஸ்லிம்கள் உட்பட 12 பேர் இடைக்கால அரசில் இடம் பெற்றனர். நேரு, வல்லபாய் படேல், ராஜகோபாலாச்சாரி, ஆசப் அலி, ராஜேந்திர பிரசாத், சரத்சந்திர போஸ், ஜான் மத்தாய், சர்தார் பல்தேவ் சிங், ஜெகஜீவன் ராம் அகமத்கான், சையத் அலி ஜாகிர், சி.எச்.பாபா ஆகியோர் அப்பன்னிருவர் ஆவர். இந்த இடைக்கால அரசைத் தற்காலிக தேசிய அரசாங்கம் என்றழைத்தார். பட்டாபி சீதாராமைய்யா. இவ்விடைக்கால அரசாங்க அமைப்பு முஸ்லிம் லீக் மீதும் முஸ்லிம் இந்தியாவின் மீதும் விழுந்த இடி என்றார் ஜின்னா, நேருவும், வேவலும் ஜின்னாவோடு பேச்சுவார்த்தை நடத்தி இடைக்கால அரசோடு ஒத்துழைக்க வேண்டும் கேட்டுக் கொண்டவர். முஸ்லிம் லீக் இடைக்கால அரசில் இடம்பெற ஜின்னா சம்மதம் தெரிவித்தார் (அக். 15) லியாகத் அலிகான், ஐ.ஐ. சுந்திரிகர், அப்துர்ராப் நி'டார், கஸ்பர் அலிகான், ஜோன் மெண்டல் ஆகிய ஐவரும் இடைக்கால அரசில் இடம் பெற முஸ்லிம் லீகால் நியமிக்கப் பட்டனர். இவர்கள் சேர்ந்த இடைக்கால அரசு திருத்தி அமைக்கப்பட்டது (அக்.26) ஒரு வழியாக காங்கிரசும் லீகும் சேர்ந்த இடைக்கால அரசை அமைத்தது.

இடைக்கால அரசு அமைக்கப்பட்டதுஜ ஆனால் அது ஒழுங்காக செயல்பட முடியவில்லை. இலாக்காக்களைப் பிரிப்பதிலேயே காங்கிரசுக்கும் லிகுக்கும் உரசல்கள் தோன்றலாயின. உதாரணமாக உள்விவகாரத்துறை வேண்டும் என்று பிக் கேட்டது. வல்லபாய் படேல் அதற்கு விட்டுக்கொடுக்க மறுத்துவிட்டார். இறுதியில் நிதி, செய்தி, வர்த்தகம், சுகாதாரம், சட்டம் ஆகிய துறைகள் லீகுக்குக் கொடுக்கப்பட்டன. லீக் உறுப்பினர்கள் அக்டோபர் 26.ஆம் தேதி பதவி ஏற்றனர். அவர்கள் பதவி ஏற்ற நாளிலிருந்து இடைக்கால அரசு ஒரு அணியாகச் (Team) செயல்பட முடியவில்லை. கூட்டுப் பொறுப்பு (Collective Responsibility) என்பது கானல் நீராகி விட்டது. அரசு முஸ்லீம் பிரிவு (Muslim Block) காங்கிரஸ் பிரிவு (Congress Block) என இருகூறுகளாகப் பிரிந்து தனித்தனித் தலைமையின்கீழ் செயல்பட்டதாகக் கூறியுள்ளார் வி.பி.மேனன். லியாகத் அலிகான் முஸ்லிம் உறுப்பினர்களை மட்டும் வைத்துக்கொண்டு தனியே விவாதித்து வந்தார். நிதித்துறையைக் கையாண்ட அவர் இந்து வர்த்தக சமூகத்தின் முதுகெலும்பை முறிக்க கூடிய வகையில் வரவு செலவுத் திட்டத்தை ஒரு சார்பாகத் தயாரித்தனர் என்று அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டு. ஒரு ஏவலரைக்கூட நிதி இலாக்காவின் அனுமதியின்றி வேலையில் அமர்த்த முடியாதென்று எழுதியுள்ளார் அபுல் கலாம் ஆசாத். முஸ்லிம் லிகுடன் அரசாங்கத்தை நடத்துவதென்பது கசங்கிராக்கு கழுத்தில் கருங்கல்லைக் கட்டி கொண்டு கடலை நீந்துவதற்கொப்பான செயல் தோன்றியது, முஸ்லிம் லீக் ஒரு பக்கம் இடைக்கால அரசியல் அங்கம் வகித்துக்கொண்டு மறுபக்கம் இனக் கலவரங்களை தூண்டி விட்டுக் கொண்டு இருந்தது.

**மதிப்பீடு**

1946 ல் இந்தியாவுக்கு தேசிய அரசாங்கம் அமைப்பது பற்றிய காலம் கனித்திருந்தது. பிரிட்டி' ஏகாதிபத்தியத்துக்கும் இந்தியா தேசியத்துக்கும் இடையேயான அரசியலமைப்புச் சட்ட சிக்கலை தீர்க்க பிரிட்டன், காங்கிரசும், முஸ்லிம் லீக் இறுதி முயற்சி மேற்கொண்டன. பிரிட்டன் ஐக்கிய இந்தியாவை உருவாக்கிக் கொடுப்பதில் குறியாக இருந்தது. காங்கிரஸ் அரசியலமைப்பு சட்டத்தின்மூலம் சுதந்திர இந்தியாவை அடைய விரும்பியது. முஸ்லிம் லீக்கோ முஸ்லீம்கள் பெரும்பான்மையினராக உள்ள மாநிலங்களை ஒன்று சேர்த்து சுதந்திர பாகிஸ்தானைக் காண விழைந்தது. இடைக்கால அரசாங்கம் இம்மும் முனை முயற்சிக்கிடையே அமைக்கப்பட்டது. இந்தியாவில் உள்நாட்டுப் போரைத் தவிற்பதற்காக வைசிராய் வேவல் பிரபு முஸ்லிம் லீக் இடைக்கால அரசாங்கத்தின் சேர சம்மதிக்க வைத்தார் (1946 அக்டோபர் 26). ஆனால் முஸ்லிம் லீக் இடைக்கால அரசாங்கத்தில் சேர்ந்து அதை

அரசியல் ரீதியான உள்நாட்டுப் போருக்கான களமாக பயன்படுத்தியது. இடைக்கால அரசாங்கம் கூட்டணி ஆட்சி எவ்வாறு செயல்படக்கூடாது என்பதற்கான முன்னுதாரணமாக இருந்தது. நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பர் செய்யாமையால் ஏற்பட்ட விளைவே இடைக்கால அரசாங்கத்தின் தோல்வி ஆகும்.

**அரசியல் அமைப்புச் சட்டமன்றம்**

இடைக்கால அரசில் சேர்ந்த முஸ்லீம் லீக் அரசியல் அமைப்புச் சட்டமன்றத்தில் சேர மருத்தது அதன் நடவடிக்கைகளைப் புறக்கணித்தது. லீகின் ஒத்துழைப்பின்றி இந்தியா முழுவதுக்குமான அரசியல் அமைப்புச் சட்டமன்றத்தில் கலந்து கொள்ளாத முஸ்லீம் லீகுக்கு இடைக்கால அரசியல் தொடர்ந்திருக்கத் தகுதியில்லை என்று வாதிட்டது காங்கிரஸ். லீக் உறுப்பினர்கள் இடைக்கால அரசிலிருந்து பதவி விலகாவிடில் காங்கிரஸ் விலகிக் கொள்ளப் போவதாக அறிவித்தது. திரும்பவும் அரசியல் தேக்கநிலை உண்டாயிற்று. பிரிட்டி' அரசாங்கத்தால் இந்திய அரசியல் பிரச்னைக்கு நிரந்தரத்தீர்வு காணமுடியவில்லை. கார்டியன் முடிச்சை (புழசனயைெ மழெவ ) வெட்டி தேக்கநிலை விடுகதைக்கு விடை காண்பதற்காகத் தற்கால மகாஅலேக்சாண்டருக்காக (யுடநஒயனெநச வாந புசநயவ) இந்தியா காத்திருக்க வேண்டியதாயிற்று.

## 14.5 பிரிவினையோடு விடுதலை

பிரிவினையோடு விடுதலை (குசநநனழஅ றவைா ீயசவவைழைெ) என்பதே மவுண்ட்பேட்டன் திட்டத்தின் சாரமாகும். இத்திட்டம் முடிந்த முடிவாக மாற்ற முடியாத தீர்ப்பாக கருதப்பட்டது. மவுன்ட்பேட்டன் திட்டம் 1947 ஜீன் 3 ஆம் தேதி வானொலி மூலம் ஒலிபரப்பட்டது. நேரு, பட்டேல், ஜின்னா பல்தேவ் சிங் ஆகியோர் உடனடியாக இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தனர். 1946-47ல் தனிமைப்படுத்தப்பட்டு வங்காள நவகாளியிலும் பீகார் பாட்னாவிலும் அகிம்சைப் பாதையில் நடை போட்டுக் கொண்டிருந்த காந்தி வாழ்நாள் முழுவதும் பிரிவினையை எதிர்க்கப் போவதாக் கூறிக் கொண்டிருந்தார். பிரிவினைத் திட்டம் அறிவிக்கப்பட்ட ஒரு வாரத்தில் முஸ்லீம் லீக் முறைப்படி அத்திட்டத்தை ஏற்றுக் கொண்டது (ஜுன் 9) காங்கிரஸ் செயற்குழுவும் (ஜுன் 12), அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் (ஜுன் 14-15) இத்திட்டத்துக்கு ஒப்புதல் அளித்தன. சீக்கியர்களும் தாழ்த்தப்பட்டோரும் மவுண்ட்பேட்டன் திட்டத்துக்கு ஆதரவளித்தனர்.

**முடிந்த முடிவு**

மவுண்ட்பேட்டன் திட்டம் எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. காங்கிரஸ் சோ'லிஸ்டுகள் பிரிவினையைக் கடுமையாக எதிர்த்தவர். புருஷோத்தம தாஸ் போன்ற காங்கிரஸ் தலைவர்கள் காங்கிரஸ் தன்னம்பிக்கையை இழந்துவிட்டதற்கான அறிகுறி, பலவீனத்தின் வெளிப்பாடு என்று குறை கூறினர். அபுல்கலாம் ஆசாத்தும் பிற காங்கிரஸ் தேசிய முஸ்லீம் தலைவர்கள் துவக்கத்திலிருந்தே பிரிவினைத் திட்டத்தை எதிர்த்து வந்தனர். இந்து மகா சபையினர் மவுன்ட்பேட்டன் திட்டத்தை வெறுப்புடன் நிராகரித்தார். காந்தி இப்பிரிவினைத் திட்டத்துக்கு எதிராகக் கிளர்ந்து எழாத நிலையில், பலமிக்க கட்சிகள் பிரிவினையை ஏற்றுக் கொண்டதால் மவுண்ட்பேட்டன் திட்டம் மாற்ற முடியாத முடிவாகிவிட்டது. இந்தியப் பிரிவினை நிறைவேற்ற பட்ட உண்மையாயிற்று.இதிட்டம் மவுண்ட்பேட்டனின் வேகப்போக்கு உத்திகளுக்குக் கிடைத்த வெற்றியாகும்.

**நினைப்பும் நடைமுறையும்**

ஐக்கிய இந்தியாவுக்கு விடுதலை வழங்குவதுதான் பிரிட்டி' பிரதமர் அட்லியின் நினைப்பாக இருந்தது. அனால் இந்தியாவின் அரசியல் நடைமுறை முற்றிலும் மாறாக இருந்தது. இந்தியத் தலைவர்கள் மாறுபட்டிருந்தமையால் தான் பிரிட்டன் இவர்களுக்கிடையே நடுவராக

இருந்து நெருக்கடியைத் தீர்க்க வேண்டியதாயிற்று. பூனைகள் அப்பத்துக்குச் சண்டை போட்டுக்கு கொண்டு குரங்கிடம் மத்தியஸ்த்துக்குச் சென்ற கதைதான்.

ஐக்கிய இந்தியாவுக்கு விடுதலை வழங்குவது என்று பிரிட்டன் முடிவு செய்தால் இனக் கலவரத்தை அடக்கும் பொறுப்பை வைசிராய் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு பிரிட்டன் தயாராக இல்லை. அது மட்டுமல்ல. ஐக்கிய இந்தியாவை விரும்பும் காங்கிரசுடன் கைகோர்த்துக்கொண்டு முஸ்லிம் லீகை விரோதித்துக் கொள்ள வேண்டும். அதையும் பிரிட்டன் ஆதரிக்கவில்லை. அதற்கு பதில் இந்தியாவைப் பிரித்து இரண்டு டொமினியன்களாக இரண்டையும் காமன்வெல்த் கூட்டமைப்பில் வைத்துக் கொள்வது பிரிட்டனுக்கு பல வகையிலும் நல்லது.

பிரிட்டன் இந்தியாவை விட்டு வெளியேறினாலும் இந்தியாவும், பாகிஸ்தானும் பிரிட்டன் நட்பு நாடுகளாக இருக்கும். எனவே, இந்தியாவின் சில பகுதியைப் பிரித்து பாகிஸ்தானை உருவாக்கினால் எஞ்சிய பெரும் பகுதி காங்கிரஸ் வசம் இருக்கும். அதேபோன்று சிறு பகுதியாயினும் தனி நாடாக இருப்பதால் முஸ்லிம் லீக் திருப்தியடையும். இரு நாடுகளின் நட்பை இழக்காமல் பிரிட்டன் வெளியேறுவதற்கு பிரிவினையோடு விடுதலை சிறந்த வழியாகப்பட்டது. இதனால் நினைப்புக்கும் நடைமுறைக்கும் இடையே இருந்த இடைவெளி நிரப்பப்பட்டது.

## 14.6 1947 ஆம் ஆண்டு இந்திய விடுதலைச் சட்டம்

அமைச்சரவை தூதுக்குழுவின் திட்டப்படி 1946 ஜுலையில் அரசியலமைப்பு அவைக்கான தேர்தல் நடைபெற்ற போது தேர்தலில் காங்கிரசு பெரும்பான்மை பெற்றது. 1946 இல் இடைக்கால அரசு நேரு தலைமையில் ஏற்பட்ட போது அந்த அரசியல் பங்கேற்பு முஸ்லிம்லீக் மறுத்துவிட்டது 1946ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் நாளை நேரடி நடவடிக்கை நாள் என முஸ்லிம் லீக்கை அறிவித்தன வாயிலாக நாடெங்கும் கலவரம் மூண்டது அரச பிரதிநிதியின் தலையீட்டினால் முஸ்லிம் லீக் அமைச்சரவையில் பங்கேற்றபோது கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டன மவுண்ட்பேட்டன் அரச பிரதிநிதியாக பதவி ஏற்றதும் இந்தியா பாகிஸ்தான் என இரு பிரிவுகள் ஏற்பட்டன 1947 ஜுலை 18 இல் இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் சட்டத்தை நிறைவேற்றியது

**நோக்கம்:**

மாண்புடன் சேட்டனின் திட்டத்துக்கு செயல் வடிவம் அளித்த கட்டமாகவும் இந்திய மக்களுக்கு இதுவரையில் அளித்த வாக்குறுதிகளை சட்ட வடிவில் செயல்படுத்துவதற்கான வழிகளை மேற்கொள்வதற்காக

**விதிகள்:**

1. 1947 ஆகஸ்ட் 15ஆம் நாளில் இந்திய-பாகிஸ்தான் இரு நாடுகளும் தங்களுக்கு வேண்டிய சட்டங்களை ஏற்றுக் கொள்ள உரிமை பெறும்.
2. இரு நாடுகளின் அரசியல் அமைப்பு சபைகளும் தங்களுக்கான அரசியல் சட்டத்தை உருவாக்கி கொள்ளும் வரை தங்கள் பகுதிகளுக்கான சட்டங்களை இயற்றிக் கொள்ளலாம்
3. இங்கிலாந்தின் ஆதிக்கம் விடுதலைக்குப்பின் இந்தியாவின் எப்பகுதியிலும் தீராது
4. இச்சட்டத்தின்படி அப்போது இருந்த அரசியலமைப்புச் சபை நீடிக்கும் புதிதாக உருவாக்கப்படும் சட்டமன்றம் முன்பு மைய சட்டமன்றம் பெற்றிருந்த உரிமைகளை பெற்றிருக்கும் அவைகள் புதிய அரசியல் அமைப்பினை உருவாக்கி உரிமை பெறும்.
5. இரு நாடுகளிலும் அரசியலமைப்பினை உருவாக்கும் 1935 ஆம் ஆண்டு சட்டத்தின் அடிப்படையில் வேண்டிய மாற்றம் செய்து

ஆட்சியை தொடரலாம் ஏதேனும் மாற்றம் செய்ய வேண்டுமெனில் அவைகள் செய்துகொள்ளலாம

6. 1955 ஆம் ஆண்டு சட்டத்தினை தலைமை ஆளுனர் 1948 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் வரை மாற்றி அமைக்கும் உரிமை வளர்ந்து வழங்கப்பெற்றது அதன்பின் அரசியலமைப்பை இதனை பெரும.
7. சட்டங்களை ஏற்று செய்யும் அரசரின் உரிமைகள் முடிவுக்கு வரும்.
8. தலைமை ஆளுநர் மேற்கண்ட பொறுப்பினை ஏற்பார்.
9. இந்தியப் பேரரசர் பொறுப்பிலிருந்து இங்கிலாந்து அரசர் விலகுவார் தலைமை ஆளுநர்கள் விடுதலை பெற்ற நாடுகளின் தலைமை நிர்வாகிகள் இயங்குவார்.
10. விடுதலைச் சட்டத்தின்படி சுதேச அரசுகள் மீதான மணிமுடியும் அதிகார விளக்கம்.
11. வடமேற்கு எல்லைப்புற மக்களுடன் உடன்பாடு செய்து கொள்ள வழிவகை மேற்கொள்ளப்பட்டது.
12. இந்திய அரசு செயலாளர் பதவி நீக்கம் பெறுகிறது பொதுவாக நல அரசு பள்ளிகளுக்கான அரசு செயலாளர் அலுவலகம் தொடங்கியது.
13. இந்திய பேரரசர் என அழைத்துக்கொள்ளும் அரசரின் பட்டங்கள் விலக்கி விலக்கிக் கொள்ள பெறுகின்றன.
14. இந்தியாவின் மீதான ஆங்கிலேய அதிகார விலக்கிக் கொள்ளப்படுகிறது இரண்டு சூரியன்கள் உருவாகி அவைகள் இரண்டும் தங்களுக்கான அரசியல் அமைப்பினை உருவாக்கும் தன்மை பெற்றன.
15. இந்திய சுதேச அரசுகள் இந்திய அல்ல பாகிஸ்தானுடன் இணைய சுதந்திர நாடுகளாக தனித்தனியாகவோ உரிமை உண்டு இந்தியாவில் 300 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்த 160 ஆண்டுகளுக்கு மேலாக ஆண்ட ஆங்கிலேயரின் ஆட்சியில் இச்சட்டம் முடிவுக்கு கொண்டுவந்தது இந்திய நாடு உருவாகிய அதேவேளையில் இஸ்லாமியரின் பதிவாகியது இந்திய வரலாற்றில் ஒரு பிள்ளைகளாக இச்சட்டம் விளங்கியது விளங்கியது.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

6. முஸ்லீம் லீக்கை கருவியாக கொண்டு முஸ்லீம் தேசியவாத இயக்கியத்திற்குத் தலைமை தாங்கியவர்?
7. மோதிலால் நேரு அறிக்கைக்கு மாறாக எத்தனை அம்சத் திட்டத்தை வெளியிட்டார் ஜின்னா?
8. தனிதேசத் தீர்மானத்தை எந்த ஆண்டு எங்கு நிறைவேற்றப்பட்டது.
9. நேரடி நடவடிக்கை நாள் எப்போது?
10. இந்திய விடுதலை சட்டம் எப்போது நிறைவேற்றப்பட்டது?

## 14.7 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

51. 1897 ஜனவரி 28 ஆம் நாள் பிறந்தார்
52. ஒரிசாவிலுள்ள கட்டாக்
53. ரவிந்திரநாத்
54. பார்வர்டு பிளாக் கட்சி
55. ராஷ் பிகாரி போஸ்
56. முகமது அலி ஜின்னா
57. 14 அம்ச திட்டத்தை வெளியிட்டார்
58. 1940 மார்ச் மாதம் லாகூரில் நிறைவேற்றப்பட்டது.
59. 1946 ஆகஸ்ட் 16 ஆம் நாள்
60. 1947 ஜீலை 18 ஆம் நாள்

## 14.8 சுருக்கவுரை

- 1947 ஆகஸ்ட் 15 அன்று இந்தியா சுதந்திரம் பெற்றது என்றால், நாடு இரண்டாக பிரிக்கப்பட்டு, ஒரு புதிய நாடு பாகிஸ்தான் நடைமுறைக்கு வந்தது.
- இரண்டாம் உலகப்போரில் ஜப்பான் தூரத்தில் நேச நாட்டு படைகளை தோற்கடித்து உலகை வியப்பில் ஆழ்த்தியது சிங்கப்பூர் ஜப்பான் வசம் வந்தது.
- அபுல்கலாம் ஆசாத்தும் பிற காங்கிரஸ் தேசிய முஸ்லீம் தலைவர்கள் துவக்கத்திலிருந்தே பிரிவினைத் திட்டத்தை எதிர்த்து வந்தனர்.

## 14.9 முக்கிய கருத்துப்படிமங்கள்

- தீர்மானம்: இது ஒரு சட்டமியற்றும் அமைப்பு, குழு அல்லது பிற முறையான கூட்டம் ஆகியவற்றின் மூலம் ஏற்றுக் கிள்ளப்பட்ட கருத்து அல்லது நோக்கத்தின் முறையான வெளிப்பாடு ஆகும்.
- ஏகாதிபத்தியம்: இது ஒரு நாட்டின் அதிகாரத்தையும் செல்வாக்கையும் இராஜதந்திர அல்லது இராணுவ வலிமை மூலம் விரிவுபடுத்தும் கொள்கையாகும்.
- கமிஷன்: ஒரு குறிப்பிட்ட செயல்பாட்டைக் கொண்டு அதிகாரபூர்வமாக வசூலிக்கப்படும் ஒரு குழுவையே இது குறிக்கிறது.

## 14.10 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்

**குறு விடை வினாக்கள்**

21.முகமது அலி ஜின்னா பற்றி சிறு குறிப்பு வரைக

22.நேரடி நடவடிக்கை நாள் பற்றி குறிப்பு வரைக

23.பார்வர்டு பிளாக் கட்சியினை பற்றி எழுதுக.

**நெடு விடை வினாக்கள்**

24. இந்திய விடுதலைப் போராட்டத்தில் நேதாஜி சுபா‘ சந்திர போஸின் பங்கினை விவரி.
25. 1947 ஆம் ஆண்டு இந்திய விடுதலை சட்டத்தினை விரிவாக எழுதுக.

## 14.11 மேலும் படிக்க


சந்திரா, பிபின், 2009. நவீன இந்தியாவின் வரலாறு. ஹைத்தராபாத், ஓரியண்ட் பிளாக்வான்ஸ்.

டியூப்-பானர்ஜி, இஷிதா. நவீன இந்தியாவின் வரலாறு. கேம்பிரிட்ஜ், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக அச்சகம்

தாரிக், முகம்மது. 2007. நவீன இந்திய வரலாறு. புது தில்லி: டாடா மெக்ரா-ஹில் கல்வி.

பண்டியோபதியா, ெ‘கரா. 2004. பிளாசி முதல் பார்ட்டி வரை: நவீன இந்திய வரலாறு. ஹைதராபாத்: ஓரியண்ட் பிளாக்வான்ஸ்.

சென், S.N. 2006. நவீன இந்திய வரலாறு. புது தில்லி: நியூ ஏஜ் இண்டர்நேஷ்னல்.

**DISTANCE EDUCATION – CBCS-(2019-20 Academic year on wards)**

Question Paper Pattern (ESE) – Theory

UG

Time: 3 Hours Maximum: 75 Marks

Part-A (10x2=20)

Answer all Questions

1. இந்தியாவில் போர்ச்சுகீசிய வீழ்ச்சிகாண காரணங்களை விவாதி
2. மூன்றாவது கர்நாடக யுத்தம் எப்பொழுது ஆரம்பமாகியது?
3. பொது சேவைகளில் காரன்வாலிஸின் சீர்திருத்தங்களை பற்றி சிறு குறிப்பு வரைக.
4. இராபர் கிளைவ் பற்றி சிறு குறிப்பு வரைக.
5. வாரிசு இழப்பு கொள்கை பற்றி சிறு குறிப்பு வரைக.
6. 1857 புரட்சியின் தன்மை பற்றி விவாதிக்க
7. தீவிரவாதிகளின் நோக்கங்கள் பற்றி சிறு குறிப்பு வரைக
8. தன்னாட்சி பற்றி குறிப்பெழுதுக.

9. ஜாலியன் வாலாபாக் படுகொலைக்கு வழிவகுத்த காரணங்கள் எவை?
10. காந்தி-இர்வின் ஒப்பந்தத்தின் விதிமுறைகள் யாவை?

Part-B (5x5=25)

Answer all Questions Choosing either (a) or (b)

11. a. ஆங்கில -பிரெஞ்சு போட்டியின் காரணங்களை விவரி

    (or)

    b. பக்ஸார் போர், அதன் அரசியல் தாக்கங்களை விரிவாக தருக.
12. a. வாரன்ஹேஸ்டிங்ஸ் மேற்கொண்ட பல்வேறு சீர்திருத்தங்களை ஆராய்க

    (or)

    b. ஒழுங்குமுறை சட்டத்தின் இயல்புகள் மற்றும் குறைபாடுகளை விளக்குக.
13. a. டல்ஹுசியால் அறிமுகப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்களை ஆராய்க

    (or)

    b. 1857 பெருங்கலகத்திற்கான காரணங்கள் மற்றும் விளைவுகளை பற்றி ஆராய்க
14. a. இந்திய தேசிய இயக்கத்தின் எழுச்சியுடன் தொடர்புடைய காரணங்களை விவரி.

    (or)

    b. இந்திய தேசிய காங்கிரசின் உருவாக்கம் குறித்து விரிவாக எழுதவும்.
15. a.வங்காளப் பிரிவினையில் இஸ்லாமியர்களின் எதிர்வினை மற்றும் அதன் பங்கை பற்றி விவாதிக்கவும்

    (or)

    b. ஒத்துழையாமை இயக்கம் பற்றி விரிவாக விவரிக்கவும்.

Part-B (3x10=30)

(Answer any 3 out of 5 questions)

16. ஆங்கிலேயர்-மைசூர் போர்கள் பற்றி கட்டுரை வரைக.
17. இந்திய தலைமை ஆளுநர்கள்களின் கொள்கைகள் மற்றும் அவர்களின் சீர்திருத்தங்கள் பற்றி எழுதுக.
18. இந்திய தேசிய உணர்வு தோன்றிட காரணங்கள் யாவை என்பதனை விரிவாக எழுதுக.
19. இந்திய தேசிய இயக்கங்கள் பற்றி கட்டுரை வரைக.
20. நேதாஜி சுபர்' சந்திர போர்' மற்றும் இந்திய தேசிய இராணுவம் பற்றி தெளிவான கட்டுரை எழுதுக.